தொல்லியல் நோக்கில் தமிழகம்



கு. தாமோதரன்
பதிப்பாசிரியர்

தொல்லியல் நோக்கில் தமிழகம்

பதிப்பாசிரியர்

கு. தாமோதரன், எம்.ஏ.,

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை.

உதவிப் பதிப்பாசிரியர்கள் :

சு. இராசகோபால்

பொ. இராசேந்திரன்

சொ. சாந்தலிங்கம்

வெளியீடு :

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத் துறை,

சென்னை - 600 113.

1999

தொ.பொ.ஆ.துறை வெளியீட்டு எண் : 144
தொல்லியல் நோக்கில் தமிழகம் 1999.

விலை

முன் அட்டை :- அர்ச்சுனன், செப்புத்திருமேனி, திருவேட்களம், கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

பின் அட்டை :- எழுத்துப் பொறித்த சுடுமண் ஏடு, பேரூர்.

அச்சிட்டோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சகத்தொழில் கூட்டுறவு சங்கம், சென்னை - 14.

58/3

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 15.10.1999
தி.பி. 2030/புரட்டாசி 28.

அணிந்துரை

தமிழ் நாட்டிற்கென ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டு கால எழுதப்பட்ட வரலாறு உண்டு. அதன் நீண்ட வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய மூலச் சான்றுகளைக் கண்டறிந்து அவற்றின் உண்மைப் பொருளுணர்ந்து வரலாற்றை எழுதும் பணியில் பல அறிஞர் பெருமக்கள் உழைத்துள்ளனர். ஆயினும் நமது தமிழக வரலாற்றில் இன்னும் நிரப்பப்பட வேண்டிய இடைவெளிகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்த இடைவெளிகளை நிரப்பித் தமிழக வரலாற்றை முழுமையாக எழுதுவது என்பது ஒரு தொடர்பணி. அரசின் சார்பில் அமைக்கப்பட்ட வரலாற்றுக்குழு 'தொல் பழங்காலம்' தொடங்கி, 'பிற்காலப் பாண்டியர் வரலாறு' வரை பல தொகுப்புகளை வழங்கியுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையும் கடந்த முப்பது ஆண்டுகாலமாக வரலாற்று மூலங்களைத் தரும் பணியினைத் தொய்வின்றிச் செய்து வருகிறது. காவிரிப்பூம்பட்டினம், கரூர், அழகன்குளம், மதுரை, கங்கைகொண்டசோழபுரம், பழையாறை, திருத்தங்கல், சேந்தமங்கலம், படைவீடு எனப் பலவிடங்களில் அகழாய்வு செய்து வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டியுள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள அரிய கல்வெட்டுகளைக் கண்டறிந்து அவற்றைப் பதிப்பித்து நூல்களாக வெளியிட்டு வருகிறது.

தொல்லியல் ஆய்வுகளின்பால் மக்களை ஈர்ப்பதும், புதிய ஆர்வலர்களை இப்பணியில் ஈடுபடுத்தித் தரவுகளைத் திரட்டுவதும், பாதுகாப்பதும் தொல்லியல் துறையின் பணியாக இருந்து வருகிறது. இப்பணியின் ஓர் அங்கமாக அவ்வப்போது மாநில அளவில் கருத்தரங்குகளை நிகழ்த்தித் தமிழகத்திலுள்ள அனைத்து வகைத் தொல்லியல் வல்லுநர்களையும் ஓரிடத்தில் கூட்டிக் கருத்துப் பறிமாற்றத்துக்கு வகை செய்கிறது. அந்த வகையில் 1999ஆம் ஆண்டு அக்டோபர் 20-22 நாட்களில் சென்னையில் மாநில அளவில் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இத்துறையில் பணிபுரியும் ஆய்வாளர்கள் மட்டுமின்றிப் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் வரலாற்று அறிஞர்கள், ஆர்வலர்களிடம் ஆய்வுக் கட்டுரைகளைக் கோரிப் பெற்றுள்ளது. அவை யாவற்றையும் தொகுத்து ஒரு நன்முயற்சியாகக் கருத்தரங்க நாளிலேயே நூல் வடிவிலும் கொண்டு

வருகிறது. தமிழிலும், ஆங்கிலத்திலுமான எண்பது கட்டுரைகள் இரண்டு தனித்தனித் தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இக்கட்டுரைகள் தொல்லெழுத்தியல், கல்வெட்டியல், தொல்லியல், கலையியல், சமயம், பொதுவியல் எனும் தலைப்புகளில் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் தமிழ் மக்களின் வரலாறு பண்பாடு, பல்துறைப் புலமை ஆகியவை விளக்கம் பெறுகின்றன. அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்ட பல அரிய தொல்லியல் சான்றுகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கட்டுரைகள் ஆய்வாளர்களுக்கும், மாணவர்கட்கும், மக்களுக்கும் பெரும் பயனைத் தரத்தக்கன.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை என ஒரு தனித் துறையையும், அதற்கென ஒரு தனி அமைச்சகத்தையும் அமைத்துத் தமிழர் நலம் நாடும் இன்றைய தமிழக அரசு தொல்லியல் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. இது போன்ற ஆய்வுப் பணிகளைச் செய்துவரும் இத்துறை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தொடரவுள்ள புதிய ஆய்வு முடிவுகள் இத்தகைய நூல்களாக வடிவம் பெறவும் அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இவ்வகை நூல்களைத் தமிழ் மக்கள் வரவேற்றுப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

அன்புடன்,

(மு. தமிழ்க்குடிமகன்)

கு. தாமோதரன்
இயக்குநர்

தொல்பொருள் ஆய்வுத் துறை
சென்னை - 113.

நாள் : 15.10.99

பதிப்புரை

உலகின் தொன்மையான வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் தமிழர் வரலாறும் பண்பாடும் மிக உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளன. தமிழக வரலாற்றை எழுதுவதற்கு அடிப்படைச் சான்றுகளாக அமைவன தொல்பொருட்கள், இலக்கியங்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காசுகள் ஆகியவையாகும். இந்த மூலச் சான்றுகளைச் சேகரித்து ஆய்வு செய்து நூல்களாக வெளியிட்டு, வரலாற்று ஆர்வலர்கட்கும் வரலாற்றை எழுதும் அறிஞர்களுக்கும் வழங்குகின்ற அரிய பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை செய்து வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இப்பணிகளில் ஈடுபட்டு வரும் அறிஞர்களுடனும் பேராசிரியர்களுடனும் நேரடித் தொடர்பு கொள்வதற்காக அவ்வப்போது மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் வரலாற்றுக் கருத்தரங்குகளை நிகழ்த்துகிறது.

அந்த அடிப்படையில் 'தொல்லியல் நோக்கில் தமிழகம்' என்னும் பொதுத் தலைப்பை மையமாகக் கொண்ட ஒரு மாநிலக் கருத்தரங்கை சென்னையில் இவ்வாண்டு (1999) அக்டோபர் 20,21,22 தேதிகளில் இத்துறை நடத்துகிறது. இக்கருத்தரங்கில் படிக்கப்படவிருக்கும் எண்பது கட்டுரைகளை முன் கூட்டியே பெற்றுத் தமிழ், ஆங்கிலம் என இரண்டு தொகுதிகளாக வெளியிடுகிறது. இத்தமிழ்த் தொகுதியில் 59 ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் தொல்லியல், கல்வெட்டியல், கலையியல், சமயவியல், பொதுவியல் என்ற உட்பகுப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தின் தொல்லியல் சான்றுகளை வரிசைப்படுத்தும் ஒரு பறவைப் பார்வையோடு நூல் தொடங்குகிறது. தொல்லெழுத்தியலில் முந்து தமிழி எழுத்துக்களின் தோற்றம், காலம், கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைக்கும் அரிய மோதிரங்கள், கொங்கு நாட்டில் மண்ணில் புதையுண்ட நகரங்கள் உட்பட பல ஆய்வுரைகள் இடம் பெறுகின்றன.

அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆய்வுரைகளாகச் சுடுமண் ஏடுகளில் பொறிக்கப்பட்ட பண்டைத்தமிழ் எழுத்துக்கள், காசுகள், ஊர் ஆய்வுகள், கோயில் ஆய்வுகள் ஆகியவை அடுத்த இயலாக அமைந்துள்ளன.

கலையியல் என்னும் பகுப்பில் கங்கையின் உருவமைப்பு, சிந்தாதேவியின் உருவமைப்பு, தமிழகத்தில் பலவிடங்களில் காணப்படும் அரிய கலைச்சிற்பங்கள், இசுலாமியர்களின் கலைச் சின்னங்கள், ஓவியங்கள் ஆகியவை அடங்கியுள்ளன.

அகழாய்வுகளில் வெளிப்பட்ட கட்டிட அமைப்புகள், சுடுமண் உருவங்கள், கூரைஓடுகள், நீர்ப்பாசனக் குழாய்கள், பானை ஓட்டுப்

பொறிப்புகள் ஆகியவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தொல்லியல் பகுப்பில் இடம் பெறுகின்றன.

சமயம் என்னும் தலைப்பில் சங்ககாலச் சிவவழிபாடு, சமணம் பெற்ற செல்வாக்கு, இந்திரவிழா, கன்னி வழிபாடு, ஐயனார் போன்ற தெய்வங்கள் பெறும் இடம், ஆடவல்லானுக்குத் தனிக்கோயில், போன்ற செய்திகளை உள்ளடக்கிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவியல் கட்டுரைகளாக, ஊர்ப்பெயர்ஆய்வுகள், வாணிகம், சமூகக் கட்டமைப்பு எனப் பலவிதமான ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. இத்தனைச் சிறப்புகளும் கொண்ட இந்நூல் வரலாற்று ஆர்வலர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும்

இக்கருத்தரங்கினை நிகழ்த்தவும் நூல்வெளிக்கொணரவும் தமிழ்நாடு அரசு உடனடி நிதி ஒதுக்கீடு செய்து ஊக்கமளித்துள்ளமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை பணிவுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ் ஆட்சிமொழி தமிழப் பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க் குடிமகன் அவர்கள் இக்கருத்தரங்கு நூல்வெளிவருவதில் தனிக்கவனம் செலுத்தினார்கள், பொருத்தமான அணிந்துரையையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவருக்கும் எனது பணிவுகலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பணிக்கு முழுஒத்துழைப்பு நல்கிய தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் செயலர் திருமிகு சு. இராமகிருட்டிணன். இ.ஆ.ப. அவரகளுக்கு எனது நன்றி.

கட்டுரைகளை முன்னதாகவே அனுப்பி அவற்றை நூல்வடிவம் பெற ஒத்துழைத்த பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், ஆய்வறிஞர்கள், ஆர்வலர்கள், எம்துறை தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது நன்றி.

நூல்வெளியீடு தொடர்பான நிர்வாகப் பணிகளில் முழுமையாக ஒத்துழைத்த எம்துறை நிர்வாகப் பிரிவின் அலுவலர்கள், ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எனது நன்றி உரியது. ஆய்வுக் கட்டுரைகளைச் செப்பம் செய்து பதிப்புப்பணியில் எனக்குப் பெரிதும் உதவி செய்த துணை இயக்குநர் பொறுப்பு திரு. அ. அப்துல் மஜீத் அவர்களுக்கும் எம்துறை தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்கள் திரு. சு. இராசகோபால், திரு பொ. இராசேந்திரன், திரு. சொ. சாந்தலிங்கம் ஆகியோருக்கும் நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலைக் குறுகிய காலத்தில் நேர்த்தியான முறையில் ஒளி அச்சுக்கோவை செய்து கொடுத்த பிராம்ப்ட் கிரியேடிவ்ஸ் நிறுவனத்தாற்கும், குறித்தகாலத்தில் பல வண்ண அட்டையுடன் அச்சிட்டுக் கொடுத்த இராயப்பேட்டை எழுது பொருள் மற்றும் அச்சகத்தொழில் கூட்டுறவு சங்கத்திற்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்

சென்னை.
15.10.99

கு.தாமோதரன்
இயக்குநர்.

58/3

பொருளடக்கம்

கலையியல்

சமயவியல்

பொதுவியல்

1. தொல்லியல் நோக்கில் தமிழகம்

கு. தாமோதரன், சென்னை.

புவியியல் ஆய்வாளர்களும், வரலாற்று அறிஞர்களும் தென்னகத்தில்தான் மனித இனம் முதன்முதலில் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். சிந்து சமவெளியில் மனித இனம் வாழத் தொடங்கிய காலத்திற்கு முன்னமேயே தமிழகத்தின் ஆற்றங்கரையினில் மனித இனம் தோன்றியிருக்கின்றது என்பது உண்மை. அத்திரப்பாக்கம் கோற்றலையார் ஆற்றுப்பகுதியில் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பேயே கற்கால மனிதன் வாழ்ந்துள்ளான் என்பது தெரிகிறது.

சர் ஜான் மார்ஷல் அவர்கள் சிந்துவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகத்திற்கு இணையான திராவிட நாகரிகத்தைக் கொண்டிருந்தது என்று குறிக்கின்றார். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் முதன்முதலில் 1863ஆம் ஆண்டு சென்னையை அடுத்த பல்லாவரத்தில் சர் ராபர்ட் புரூஸ்புட் என்பவர் பழைய கற்கால கருவிகளைக் கண்டுபிடித்தார். பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்காலக் கருவிகள் பூண்டிக்கு அருகே கோற்றலையாற்றுப் படுகையில், அத்திரம்பாக்கம் என்ற ஊரிலிருந்து மிகுந்த அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. வடமதுரையி லிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குடியம் என்ற பகுதியில் கற்கால மனிதன் வாழ்ந்த 16 குகைப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதியில் மனிதனின் கால் எலும்பின் புதை வடிவம் ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மலையடிவாரம், பையம்பள்ளி ஆகிய இடங்களிலிருந்தும் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதிய கற்காலக் கருவிகள் விழுப்புரம் மாவட்டம் ஜம்பை, சேலம், தருமபுரி மாவட்டம் சேர்வராயன் மலைத்தொடரிலும், வடாற்காடு மாவட்டம் சவ்வாது, ஏலக்காய் மலைத் தொடர்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. புதிய கற்கால மனிதர்கள் வரைந்த ஓவியங்கள் பல அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கீழ்வாலை, ஆலங்காயம், நாயனூர், செத்தவரை ஊர்களில் சிவப்பு மற்றும் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பெற்ற ஓவியங்கள் அக்கால வரலாற்றுக்குக் கிடைத்த சிறப்புச் சான்றுகள் ஆகும்.

இதனைத் தொடர்ந்து இலக்கிய ஆசிரியர்களால் சங்க காலம் எனவும், தொல்லியல் ஆய்வாளர்களால் பெருங்கற்காலம் எனவும்

குறிக்கப்பெறும் கால கட்டத்தினைச் சேர்ந்தனவாகிய கல்வெட்டுகள் பலவும் கண்டு அறியப்பட்டுள்ளன.

கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகள் மிகப் பழமையானவையாகும். தமிழ்க் கல்வெட்டுகள், இயற்கையான மலைக் குகைத் தளங்களில் பாறையினை வழவழப்பாக்கியும், இல்லாமலும் எழுதப் பெற்றுள்ளன. பெரும்பாலும் சமண முனிவர்கள் வாழ்ந்த அக்குகைகளில், அவர்கட்குப் படுக்கை அமைத்துக் கொடுத்ததை அவை குறிக்கின்றன. பாண்டியர் தலைநகரான மதுரையைச் சுற்றியும்,சேரர் தலைநகரான கரூர் அருகிலும், சமணர்கள் வாழ்ந்த தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளிலுமாக சுமார் 40 இடங்களில் இக்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ, குறுநிலத் தலைவர்களில் அதியமான் நெடுமானஞ்சி ஆகியோரும், பெரும்பாலும் அறுவை, பொன் வணிகர்கள், காவிதிகள் போன்றோரும் இக்கொடை கொடுத்தவர்களின் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைத்துள்ள இக்கல்வெட்டுகள் இந்தியா முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட எழுத்தான பிராமி வகையினவே. இருப்பினும் தமிழுக்கேயுரிய சிறப்பு எழுத்துகளான ற, ழ, ள,ன ஆகிய நான்கும் இதில் தனியாக இடம் பெற்றுள்ளன. எனவே இதனைத் தமிழ்-பிராம்மி அல்லது தமிழி என வேறுபடுத்திக் குறிக்கிறோம். இவை அனைத்தும் சங்ககாலத்திற்குச் சமகாலத்தவை ஆகும். சங்க கால மன்னர்களும், சங்க காலப் பெயர்களும் குறிக்கப் படுவதும், அசோகன் கல்வெட்டில் குறிக்கப் பெறும் 'சதியபுதோ' என்ற சொல்லையே குறிக்கப்படுவதும் இவற்றைச் சங்க காலத்தைச் சார்ந்தவையென அறுதியிட்டுக் கூற வழி செய்கின்றன.

தமிழக மக்கள் தெற்காசிய நாடுகளுடனும், மேற்காசிய நாடுகளுடனும் வணிகத் தொடர்பினையும், பண்பாட்டுத் தொடர்பினையும் கொண்டிருந்தனர் என்பதை அறிகிறோம். இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் அரிக்கமேடு, வசவசமுத்திரம், அழகன்குளம், கரூர், கொடுமணல் ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள உரோமானிய மதுக் குடங்களின் பகுதிகளும், ரோமானிய அரிட்டைன் பானை ஓடுகளும் மற்றும் உரோமானியக் காசுகளும் அமைந்துள்ளன.

குறிப்பாக அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள மதுக்குடங்களில் சில வகை பிரான்சு நாட்டைச் சார்ந்தது என அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள பானை ஓடு ஒன்றில் பண்டைய தமிழ் எழுத்தில் 'சமுதஹ' என்று பொறிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் குகைக் கல்வெட்டுக்களிலும்

'சமுதஹ' என்ற சொல் காணப்படுகிறது. இக்கண்டுபிடிப்பின் வாயிலாக இலங்கைக்கும், தமிழகத்திற்கும் உள்ள நெடுங்காலத் தொடர்பினை அறிய முடிகிறது.

அழகன்குளம் அகழாய்வில் கிரேக்க கலைப் பாணியை ஒத்துள்ள ஒரு பெண் தன் குழந்தையை இடுப்பில் தாங்கி உள்ளதைப் போன்று, கடுமண் பொம்மை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க கலையின் தாக்கமும் தொடர்பும், இக்கண்டுபிடிப்பின் வாயிலாகத் தெரிய வருகிறது. வேறொரு பானை ஒட்டில் மூன்று பெண்கள் விசிறியை தம் கைகளில் கொண்டும், ஒரு கை மதுக்குடத்தைத் தாங்கியும் காணப்படுகின்றனர். இவ்வுருவங்கள் எகிப்து பிரமீடுகளில் உள்ள வண்ண உருவங்களை ஒத்துள்ளன.

அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு ரௌலட்டட் இனப் பானை ஓட்டில், கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலின் உருவம் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த உரோமானிய மொசைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள உருவத்தினை மிகவும் ஒத்துள்ளது. மேலும் கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செலுத்திய ரோமானிய மன்னர்களின் காசுகள் அழகன்குள அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொற்கை அகழாய்வில் கிடைத்த கரித்துண்டு ஆய்வின் மூலம் கி.மு. 785ஆம் ஆண்டிலேயே அங்கு மக்கள் வாழத் தொடங்கி விட்டனர் என்பது கண்டறியப்பட்டது. சற்றேறக்குறைய கி.மு. 4ஆம் நூற்றாண்டு அளவில் கங்கைச் சமவெளி மக்களுடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்புக்குக் கொற்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மௌரியப் பானை ஓடுகள் சான்று பகர்கின்றன. இக்காலத்தைச் சேர்ந்த மௌரியப் பானை அழகன் குளம் அகழாய்விலும் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கரூர் அகழாய்வில் நூற்றுக்கும் அதிகமான அளவில் கீறல் குறிகளும் மற்றும் பத்துக்கும் அதிகமான பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. பிராமி பொறிப்புகளில் குறிப்பிடும்படியானது இடுகுழியில், தாழி ஒட்டில் பொறிக்கப்பட்ட எழுத்து ஓடாகும். இவ்வெழுத்துக்கள் குகைக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து அளவினில் (Z) பொறிக்கப்பட்டுள்ளன. பெரிய தாழி ஒட்டினில் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பூம்புகாரில் மணிக்கிராமம், கீழையூர், வாணகிரி, மேலையூர், மாந்தங்காடு ஆகிய பகுதிகளில் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டு ரௌலட்டட் பானையோடுகள், சோழர் காலத்தைச் சார்ந்த சுடுமண் பொம்மைகள், காசுகள் ஆகியவை கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்திய அரசு தொல் பொருளாய்வுத்துறை படகுத்துறை ஒன்றினையும், புத்த பள்ளியினையும், புத்த பாதம் ஆகியவற்றையும் அகழாய்வு மூலம் வெளிக்கொணர்ந்துள்ளது. அண்மையில் இத்துறை நடத்திய அகழாய்விலும் கிழார் வெளி என்னும் இடத்திலிருந்து படகுத்துறை ஒன்று இத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் பயன்படுத்தப் பட்டுள்ள செங்கற்கள் மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் கிடைத்துள்ள பனைமரத் தூண் ஒன்று ‘சி-14’ ஆய்வின் மூலம் காலத்தைக் கணிப்பதற்காக அலகாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவையன்றி இக்கால கட்டத்தைச் சேர்ந்த மோதிரங்கள், காசுகள், முத்திரைகள் ஆகியன கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் அண்மைக் காலத்தில் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. தமிழ் எழுத்துக்களுடனும், கவின்மிகு கலையழகுடனும் இவை விளங்குகின்றன. கொல்லிப் பொறை, மாக்கோதை ஆகிய சங்கச்சேர மன்னர்கள் பெயர் பொறித்த காசுகளும் இதில் அடங்கும். குதிரை பூட்டிய தேர், அழகிய ஆண் பெண்ணுருவங்கள் போன்றவை கார்னீலியன் வகைக் கல்லிலேயே செதுக்கப் பெற்று, அவை மோதிரங்களாக விளங்குகின்றன. காசுகளை வார்க்கப் பயன்படுத்தும் அச்சுகளும், கரூர், காஞ்சிபுரம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. அழகன்குளம், கரூர், பூம்புகார் ஆகிய அகழாய்வுகளில் உரோமானியரின் காசுகளும் கிடைத்துள்ளன. முன்னரே ஆண்டிப்பட்டியில் கிடைத்த சங்க காலக் காசுகள் மற்றும் சாதவாகனர், உரோமானியர், சீனர் காசுகளோடு இவையும் வரலாற்றுக்குப் பெருந்துணை புரிவனவாய் அமைகின்றன.

மேலும் பூம்புகாரின் தொன்மையினை ஆராயும் நோக்கில் ஆழ்கடலாய்வினையும் தமிழ்நாடரசு தொல்பொருளாய்வுத் துறை மேற்கொண்டது. அதன்மூலம் கடற்கரையிலிருந்து சுமார் 4.5 கி.மீ. தொலைவில் பண்டைக் காலக் கட்டடப் பகுதிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடப் பகுதி தூங்காணை மாட வடிவில் அமைந்துள்ளது. அது 2 மீட்டர் அகலமும், 5 மீட்டர் உயரமும், 20 மீட்டர் நீளமும் உடையதாக உள்ளது. இதிலிருந்து பண்டைக் காலப்பூம்புகாரின் ஒரு பகுதி கடற்கோளால் அழிந்திருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று ஊகிக்கலாம்.

வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படும் களப்பிரர் காலத்தது என்று கூறத்தக்க-குறிப்பாகப் பல்லவ-பாண்டியர் காலத்துக்கு முந்தியதான கல்வெட்டு ஒன்றினைப் புதுக்கோட்டை வட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடித்ததன் மூலம் அக்கால வரலாற்றுக்கு ஒரு புதிய ஒளி கிடைத்திருக்கிறது. சேந்தன் கூற்றன் என்ற களப்பிர (?) மன்னனின் இக்கல்வெட்டில் மதுரையிலும், பிற இடங்களிலும் உள்ள தேவகுலங்கள் (கோயில்கள்), பிரம்ம தாயங்கள் குறிக்கப்படுவதோடு, அக்காலத்தே பணிபுரிந்த அரசியல் அலுவலர்கள், பதவிகள் போன்றவையும் குறிக்கப்படுகின்றன.

கிட்டத்தட்ட அதே சமகாலத்தில் ஈரோட்டுக்கருகில் உள்ள அறச்சலூரில் இசைக்கல்வெட்டு ஒன்றும் (தாளகதிகள் எழுத்துக்களாக எழுதப் பெற்றவை) அதனை புணர்த்தவன் பெயரும் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளன.

இவற்றைத் தொடர்ந்து தமிழகத்தின் வட பகுதியில் பல்லவர் கோயில் கல்வெட்டுகளும், தென்பகுதியில் பாண்டியர் கல்வெட்டுகளும் அதிக அளவில் கிடைக்கின்றன. அன்றி தருமபுரி, வடார்க்காடு பகுதிகளில் மிகப் பழைய பல்லவர்கள், பல்வேறு சிற்றரசர்கள் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் கிடைத்துள்ளன. பல்லவர்-பாண்டியர் கல்வெட்டுகள் மூலம், சமயம், கட்டடக்கலை, இசை ஆகிய பல் துறைச் செய்திகளை நாம் அறிய முடிகிறது. இவையன்றிப் பல்லவர்களும் பாண்டியர்களும் வெளியிட்டுள்ள செப்பேடுகளும் மிக அதிக அளவில் கிடைத்துள்ளன. திருத்தணிக்கருகேயுள்ள வேலஞ்சேரியில் இத்துறை கண்டறிந்த மன்னன் அபராசிதனின் செப்பேட்டின் மூலம், பல்லவர் அரசபரம்பரையின் இறுதிக்கட்ட வரலாற்றில் இருந்த சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டன. இக்காலம் தொடங்கி தமிழக அரசியல் வரலாற்றில் இடையீடு இன்றிச் செய்திகள் கிடைக்கின்றன.

நடுகற் கல்வெட்டுகளைப் பெருமளவில் இத்துறை கண்டுபிடித்ததன் மூலம் தமிழர்தம் வீரச்சிறப்பினையும், சங்க இலக்கியங்கள் பல்வேறு புறத்திணை மரபுகளையும் வாழ்வியலோடு பொருத்தி அறிந்து கொண்டதோடு, பிற எந்தக் கல்வெட்டும் குறிக்காத முதலாம் மகேந்திரவர்மனின் 39-ஆம் ஆட்சி ஆண்டும் தெரிய வந்தது. அதுவரை மகேந்திரன் 33 ஆண்டுகளே ஆண்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறித்திருந்த நிலையில், அவன் மேலும் ஆறு ஆண்டுகள் ஆண்டது அறி வந்ததைத் தொடர்ந்து அவனுக்குப்பின் ஆண்ட மன்னர்களின் காலமும், அப்பர் காலமும் தெளிவு பெற்றது.

தமிழகச் சிற்பக்கலைக்கு வளம் சேர்க்கும் வகையில், பல்வேறு தனித்தனிச் சிற்பங்கள் கிடைத்து வருகின்றன. பொன்னூர் தத்தாத்ரேயர், திருவாமாத்தூர் திரிமூர்த்தி, சிங்கவரம், வலயத்தூர், துர்க்கைகள், அயன்புரம், ஆனாங்கூர் முருகன் மேலப்பெரும்பள்ளம், குண்டூர், ஆலக்கிராமம் ஐயனார் சிற்பங்கள், மேல ஒலக்கூர், செம்மார், சேட்டை சிற்பங்கள், திருவல்லிக்கேணி பௌத்த சிற்பத்தொகுதி, வடுகப்பட்டி, ஈராளச்சேரி மகாவீரர் சிற்பங்கள், ஒட்டியம்பாக்கம் சின்னமேடு, புத்தர் சிற்பங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன. பெரும்பாலான இச்சிற்பங்கள் தனிக் கோயில்களில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் பல புதிய கல்வெட்டுகளும், தொல்பொருட்களும் கிடைத்த வண்ணம் உள்ளன. அவற்றின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் கலை, கட்டிடம், கல்வி, அரசியல் போன்ற பல்வேறு துறைகள் புத்தொளி பெற்று வருகின்றன. ஆண்டுதோறும் பல புதிய கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படிப்பதன் மூலம் நாளுக்குநாள் தமிழக வரலாறு மெருகேறி வருகின்றது.

2. தொல்பழங்காலத்தில் கொற்கைப் பகுதி

முனைவர். அ. பாஸ்கரபால்பாண்டியன்,
திருச்செந்தூர்.

சங்க காலத்தில் தலைசிறந்த துறைமுகமாகவும் பாண்டியரின் இரண்டாம் தலை நகரமாகவும் விளங்கிய இடம் கொற்கை. கொற்கை தென் இந்திய நாகரீகத்தின் தொட்டிலாக விளங்கிய இடம் என்பார் கால்டுவெல். இப்படிப்பட்ட சிறப்பான கொற்கையிலும் அதைச் சார்ந்த பகுதிகளிலும் தொல்பழங் காலத்திய வாழ்வியல் சின்னங்கள் பல காணப்படுகின்றன. இதை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

கொற்கைப் பகுதியில் பழைய கற்காலச் சின்னங்கள் கிடைக்கவில்லை. இராபர்ட்டு புரூசு புட் அறிஞர் பேட்டு ஆகியோரின் பழைய கற்காலச் சின்னங்கள் பற்றிய பட்டியலில் இப்பகுதி இடம் பெறவில்லை. ஆனால் இடைக் கற்காலம், புதிய கற்காலம், இரும்புக் காலம் ஆகியவற்றின் சின்னங்கள் பல இங்கு காணப்படுகின்றன.

இடைக் கற்காலக் கருவிகள் பல கொற்கை அருகிலுள்ள சாயர்புரத்தில் செம்மண் நிலப் பரப்பில் மிகுதியாகக் காணப்படுகின்றன. செம்மண் நிலப்பரப்பைத் தேரி என்று அழைக்கின்றனர். இங்கு கிடைத்த கற்கருவிகள் செம்மண்ணின் நிறத்தைப் பெற்றுச் சிவப்பு நிறத்துடன் காட்சி தருகின்றன. அறிஞர்கள் அய்யப்பன், சூனர் போன்றோர் இக்கருவிகள் பற்றி ஆய்வு நடத்தியுள்ளனர். செம்மைப்படுத்தப்படாத கூர்மைக் குறைவான கற்கருவிகளாக இவை அமைந்துள்ளன. இங்கு அம்புமுனை, பேனாக்கத்தி, வட்டுக்கருவி, இருபக்கமும் முனையுள்ள கருவி போன்றவை பெரும்பாலும் கிடைத்துள்ளன. இக்கருவிகளை மரப்பிடிகளோடு இணைத்து வில், கத்தி, ஈட்டி, அரிவாள் போன்ற ஆயுதங்களாக இக்காலத்திய மக்கள் பயன்படுத்தி யுள்ளனர். இக்கருவிகளைப் பார்க்கும் பொழுது வேட்டை யாடும் தொழில் பெரும்பாலும் இவர்களது தொழிலாக இருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

செம்மண் பரப்புகளில் மிகுதியாகக் காணப்படும் இக்கற்கருவிகள் கொற்கையில் குறைந்த அளவில் காணப்படுகின்றன. செம்மண் நிலப்பரப்பில் மிகுதியாகக் காணப்படுவதற்குக் காரணம் கற்கருவிகள் இங்கு தயாரிக்கப்பட்டுள்ளமையும் மக்கள் இம்மேட்டுப் பகுதிகளில் மிகுதியாக வாழ்ந்துள்ளமையுமாகும். கடற்கரை ஓரங்களை விடச் சற்றுத் தள்ளியிருக்கும் சாயர்புரம், புதுக்கோட்டை, கூட்டாம்புளி, நாசரேத், சாத்தான்குளம், குதிரைமொழி, மெஞ்ஞானபுரம் ஆகிய பகுதிகளில்

இக்கருவிகள் மிகுதியாகக் கிடைப்பது சிந்தனைக்குரியது. இங்கு வாழ்ந்த இடைக்கற்கால மக்கள் கடற்கரையோரங்களைவிடச் செம்மண் பரப்புக்களில்தான் விரும்பி வசித்துள்ளனர் என்று தெளிவாகிறது. விலங்குகளை வேட்டையாடுவதற்கு ஏற்ற இடமாகவும் காடுகள் நிறைந்த பகுதியாகவும் இவை அமைந்து இடைக்கற்கால மக்கள் வாழ்வதற்கு வசதியாக இருந்திருக்க வேண்டும்.

தமிழகத்தின் தென்கோடியில் சங்க காலங்களில் ஏற்பட்ட கடற்கோள்களைப் போன்று வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் இப்பகுதிகளில் கடற்கோள்கள் ஏற்பட்டி ருக்கலாம். கடற்கோளுக்கு அஞ்சிய மக்கள் மேட்டுப் பகுதி களிலேயே வசித்து வந்திருக்கலாம் என்று ஊகிக்க இடம் உண்டு. தேரிகளில் உருவாக்கப்பட்ட கற்கருவிகள் கொற்கைக் கடற்கரையில் மீனுக்கு விற்கப்பட்டுள்ளன. முதல் வாணிக வாழ்வைத் தொடங்கிய மக்கள் கொற்கைத் தேரிப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் எனலாம். மீனைவேட்டையாடவும், மீனை வெட்டவும் கொற்கை மக்கள் இக்கருவிகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

அறிஞர் கிளாரன்சு கொற்கையில் கற்கோடரி ஒன்றைக் கண்டுபிடித்தார். அறிஞர் புரூசுபுட்டு கல்திரிகை, கல் உளி ஆகியவற்றைக் கண்டெடுத்தார். பழைய கற்காலத்தில் வேட்டையாடும் தொழிலைக் கொண்டிருந்த கொற்கை மக்கள் புதிய கற்காலத்தில் வேளாண்மைத் தொழில் செய்யும் நிலைக்கு உயர்ந்தனர் என்பது தெரிகிறது. கற்கோடரி நிலத்தைத் தோண்டுவதற்கும் கல்திரிகை தானியங்களைத் திரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டவைத் தேவைகள் பெருகப் பெருகக் கருவிகளும் புதிதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

அறிஞர் ஆல்சின் இக்காலத்திய மக்கள் படகு செய்யக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பார். பிற்காலத்திய கொற்கையின் கடல் வாணிகத்திற்குப் புதிய கற்கால மக்கள் அடித்தளமாக அமைந்தனர் எனலாம். எருசலேம் தேவாலயத்தைக் கட்டியவர் சாலமோன் மன்னர். அவர் காலத்தில் தமிழகத்திலிருந்து தேக்கு, அகில், சந்தனம், மயில் தோகை போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. உவரித் துறைமுகம் வழியாக இப்பொருட்கள் கப்பலேறின என்பார்கள். உவரி ''ஓபீர்'' (Ophir) என்ற பழைய வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை சிந்தித்தற்குரியது. உவரி கொற்கையிலிருந்து சிறிது தொலைவில் அமைந்துள்ள ஊர் என்பதும் எண்ணத்தக்கது. கொற்கை அக்காலத்தில் உவரி வரை அமைந்திருந்த ஊர் என்பாரும் உளர். பழங்காலத்திலேயே இம்மக்கள் கடலோடிகளாகவும் விளங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

கற்காலத்திற்குப் பின்னர் செம்புக்காலம், வெண்கலக்காலம் தோன்றி அதன் பின்னர் இரும்புக்காலம் பிற இடங்களில் தோன்றியது. ஆனால் இந்தியாவில் கற்காலத்திற்குப் பின்னர் நேரடியாக

இரும்புக்காலம் தோன்றியது என்பார்கள். இக்கூற்று கொற்கைப் பகுதிக்கும் மிகவும் பொருந்தும். கற்காலத்திற்குப் பிறகு இரும்புக் காலம் தோன்றியதற்கான சின்னங்கள் பல கிடைத்துள்ளன. இரும்புக்காலத் தாழிகள் கொற்கையில் கிடைத்துள்ளமையை அறிஞர் பேட்டு, அறிஞர் கால்டுவெல் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். கால்டுவெல் கொற்கை அகழாய்வின் போது மூன்று தாழிகளைக் கண்டுபிடித்தார். ஒன்று பெரியது. 11 அடி விட்டம் உடையது. இதற்குள் முழு மனிதக் கூடு இருந்தது. மற்ற இரண்டு தாழிகட்குள் எலும்புக்கூடு தென்படவில்லை. சாம்பல் மட்டுமே தென்பட்டது. தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்திய அகழாய்வில் இரண்டு தாழிகள் கிடைத்தன. ஒன்று சிதைந்த நிலையிலும் மற்றொன்று நல்ல நிலையிலும் கிடைத்தன. கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட தாழிகள் முதுமக்கள் தாழிகள், முது மக்கட் சாடிகள் என்று அழைக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் இது பற்றிய குறிப்புக்கள் பல உண்டு. தாழியில் வைத்துப் புதைக்கும் வழக்கம் கொற்கைப் பகுதியில் பெருவழக்கில் இருந்தது என்பது தெரிய வருகிறது.

ஆதிச்ச நல்லூரும் கொற்கையும்

கி.பி. 1876இல் செர்மன் நாட்டு பெர்லின் நகரைச் சேர்ந்த சாகோர் ஆதிச்ச நல்லூரில் ஆய்வு நடத்தி அரிய பொருட்களைக் கண்டுபிடித்தார். இப்பொருட்கள் பெர்லின் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டன. 1903 - 1904ஆம் ஆண்டுகளில் பிரான்சு நாட்டுப் பாரிசு நகரைச் சேர்ந்த உலூயிசு இலாப்பிக்யூ ஆய்வுகளை மேற்கொண்டு பழஞ்சின்னங்களைப் பாரிசுக்குக் கொண்டு சென்றார். கி.பி. 1899 - 1905ஆம் ஆண்டுகளில் அலெக்சாண்டர் ரீ ஆய்வுகளை மேற்கொண்டு அரிய பொருட்களைக் கண்டுபிடித்தார். இவை சென்னை அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

தாழிகட்குள் கிடைத்த பொற்பட்டங்கள் குறிப்பிடத் தக்கவை. முட்டை வடிவத்தில் கலை நுணுக்கத்துடன் செய்யப்பட்டுள்ளன. பொற்பட்டங்கள் இறந்தவர்கட்குச் செய்யும் சடங்கின்போது கட்டப்படுபவை என்பார்கள். சுமேரியாவிலும் எகிப்திலும் பொற்பட்டங்கள் கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. எகிப்திலும் பொற்பட்டம் கட்டும் வழக்கம் இருந்தது என்பார் கில்பர்ட் சிலேட்டர். சிந்து வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பம் ஒன்றில் பொற்பட்டம் கட்டியிருப்பது போன்ற தோற்றம் காணப்படுகிறது. சிந்துவெளியிலும் பொற்பட்டம் கட்டும் வழக்கம் இருந்துள்ளமை இதனால் தெரிய வருகிறது. உலோகங்களுள் முதலில் அறியப்பட்டது பொன் என்பார்கள். இரும்பு பயன்படுத்தப்படுவதற்கு முன்பே பயன்படுத்தப்பட்ட பொன் ஆதிச்சநல்லூரில் கிடைத்திருப்பது இப்பகுதியின் பழமையான பண்பாட்டுச் சிறப்பை அறிவுறுத்துகிறது.

ஆதிச்சநல்லூரில் தாழிகட்குள் கிடைத்த இரும்புக் கருவிகள் குறிப்பிடத்தக்கவை. 391 வகையான இரும்புக் கருவிகள் அலெக்சாண்டர் ரீ அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. எறிவேல், ஈட்டி, அம்புமுனை, வேல், கைக்கோடரி, வாள், கோடரி, சூலாயுதம், குத்துவாள், பட்டாக்கத்தி போன்ற ஆயுதங்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. போரில் பயன்படுத்தும் ஆயுதங்களாக இவையுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதிச்சநல்லூருக்கு அருகில் பேரரசு ஒன்று இயங்கி வந்திருக்க வேண்டும். போர்க்கலையில் அப்பேரரசு சிறப்புப் பெற்றிருக்க வேண்டும். கொற்கைப் பாண்டியர்களின் முன்னோராக அவர்கள் இருந்திருக்கலாம் என்று எண்ண இடம் உண்டு. கொற்கைக் கடலின் கழிமுகத்தில் இருந்து கப்பல்கள் பொருநையாறு வழியாக ஆதிச்சநல்லூர் வரை சென்று வந்தன என்ற அறிஞர்கள் கூற்று சிந்தித்தற்குரியது. இரும்புக் காலத்தில் கொற்கையில் இருந்த அரசின் ஆட்சியில் ஆதிச்சநல்லூர் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. கடல்கோள் ஏற்படப்போவதைக் கொற்கை மன்னனுக்கு மீன் ஒன்று முன்கூட்டியே தெரிவித்து அவனைப் படகில் வைத்து ஆற்று வழியாக ஆதித்தநல்லூர் வரை இழுத்துச் சென்று காப்பாற்றியது என்பது செவிவழிக்கதை. இது கதையாக இருந்தாலும் கூடக் கொற்கைக்கும் ஆதிச்ச நல்லூருக்கும் தொடர்பு இருந்தமையைத் தெளிவுபடுத்துகிறது.

இரும்புக் காலத் தாழிகள் ஆதிச்சநல்லூரைப் போல் வேறு எங்கும் மிகுதியாகக் கிடைக்கவில்லை. தாழிகட்குள் இருக்கும் மண்டையோடுகள் சில அடிப்பட்டிருப்பதைப்போல் தோன்றுவதால் போரில் அடிப்பட்டு இறந்து போனவர் களையும் இங்கு புதைத்திருக்கலாம். இரும்புக் காலத்தில் இப்பகுதியில் ஒரு பெரும்போர் நடைபெற்றிருக்க வேண்டும். இறந்து போனவர்களின் உடல்களுடன் அவர்களது போர்க் கருவிகளையும் உடன் வைத்துப் புதைத்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது. வில், முத்தலை வேல் (திரிசூலம்) போன்ற சக்தி வாய்ந்த போர்க்கருவிகள் தாழிகட்குள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குவளை, சாடி, சட்டிகள் போன்ற வெண்கலப் பொருட்களும் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன. சேவல், ஆடு போன்ற வெண்கல வார்ப்புக்கள் கிடைத்திருப்பது எண்ணத் தக்கது. வெண்கலத்தில் சேவல் உருவம் கிடைத்திருப்பது முருக வழிபாட்டை நினைவுபடுத்துகிறது. திருச்செந்தூர்த் திருமுருகன் கோவில் அருகில் உள்ளதால் முருக வழிபாடு இரும்புக் காலத்திலேயே இங்கு தோன்றியிருக்கலாம். திரிசூலம் சிவனுக்குரியது. இரும்புத் திரிசூலம் கிடைத்திருப்பதால் சிவவழிபாடும் இருந்திருக்க இடமுண்டு.

மட்பாண்டம் செய்யும் கைவினைஞர்கள் பலர் கொற்கைப்

பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும். கொற்கைத் தாழிகளும் ஆதித்தநல்லூர்த் தாழிகளும் நேர்த்தியாகச் செய்யப்பட்டவை. கிண்ணம், பானை, சட்டி, கலயம், குதிர், செம்பு, குவளை, வட்டில், வாணலி போன்ற சிறிய மட்பாண்டங்கள் தாழிகட்குள் ஆதித்தநல்லூரில் கிடைத்தன. மிகுதியான மட்கலங்கள் கிடைத்தாலும் 50 வகைகள் மட்டும் இன்னது என்று அறியப்பட்டுள்ளன. கொற்கையில் வழுவழுப்பான கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் கிடைத்தன. பொதுவாகத் தமிழகத்தில் கருப்பு சிவப்பு மட்கலங்களே உருவாக்கப்பட்டுள்ளன. கிரேக்க ரோமானியர்கள் பச்சை, நீலம் போன்ற நிறங்களிலும் மண்பாண்டங்கள் உருவாக்கியுள்ளனர். மட்கலங்கள் உணவை வேகவைக்கவும், உணவைச் சேமிக்கவும், தானியங்களைச் சேகரிக்கவும், உணவு உட்கொள்ளவும், நீர் அருந்தவும் பயன்பட்டன.

ஆதித்தநல்லூர், கொற்கை ஆகிய இடங்களில் கிடைத்த தாழிகள் எகிப்து, மொசபடோமியா, கிரீட் தீவு, சின்ன ஆசியா, அரப்பா ஆகிய இடங்களில் கிடைத்த தாழிகளுடன் ஒப்பிடக்கூடியவை. ஆதித்தநல்லூரில் கிடைத்த மண்டையோடுகளில் ஒன்று ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மண்டையோடு போன்றது என்பதும் இன்னொன்று மத்திய தரைக்கடல் பகுதி மக்களின் ஆதிமுன்னோர் மண்டையோடு போன்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகளில் சில சிந்துவெளியில் காணப்படும் குறியீடுகள் போல் தோற்றமளிக்கின்றன.

சிந்துவெளியில் 417 குறியீடுகள் இருப்பதாக ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளிக் குறியீடுகள் உணர்த்துவன யாவை என்பது பற்றி சி.ஜே.ஜாட், கே.என். தீட்சித், டிகெவசி, பிலிமோனியா, சர்பிரிண்டர்ஸ் பெட்ரி, சி.ஜே.பேப்ரி, ஜி.ஆர். ஹண்டர், ஆலன் எஸ்.சி. ராஸ், சுவாமி சங்கரானந்தா, ஹீராசு பாதிரியார், மார்ட்டிமர்வீலர், லிலோனார்ட்டு உல்லி, ஸ்டூவர்ட் பிக்கட், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், பி.பி. லால், சுதன் சுகுமார்ராய், எஸ்.கே. கோல கோங்கர், பங்கபிகாரி சக்கரவர்த்தி, எஸ்.ஆர்.ராவ், எஸ். இராமகிருஷ்ணன், ஐராவதம் மகாதேவன், க.த. திருநாவுக்கரசு ஆகிய அறிஞர்கள் பல்வேறு கருத்துரைகளைத் தந்துள்ளனர். இதன் அடிப்படையில் நோக்கும்பொழுது கொற்கைக் குறியீடுகள் உணர்த்துவன யாவை என்பதை ஆராயலாம்.

கொற்கைக் குறியீடுகள் பல்வேறு பொருட்களை உணர்த்தலாம். 1. அதிகாரிகள் பெயர்கள், குறிப்பாகக் கால்வாய், சாலைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் அதிகாரிகளின் பெயர்கள். 2. வாணிகக் குறிப்புகள், வாணிகக் கடிதங்கள். 3. அரசர் பெயர்கள் 4. தெய்வங்களின்

பெயர்கள் 5. குயவர்கள் போடும் அடையாளக் குறி 6. யாருக்குச் சொந்தம் என்பது காட்டும் உடைமைக்குறி 7. வானவியலைக் குறிக்கலாம் 8. மீன் சின்னத்திற்கு அருகில் நட்சத்திரத்குறி போடப்பட்டிருப்பது விண்மீனைக் குறிக்கலாம்.

இவையனைத்தும் அறிஞர்கள் கருத்துகளால் தெரியவருபவை. இவை தவிர வேறு பொருட்களையும் குறிக்கலாம். 1. வில் அம்புக்குறி அரசச் சின்னமாகவோ போரைக் குறிப்பதாகவோ இருக்கலாம் 2. மீன் குறியீடு பாண்டியரின் மீன் சின்னத்தைக் குறிக்கலாம் அல்லது மீனவர் குறியீடாக அமையலாம். 3. மட்கலத்தில் போடப்பட்ட பொருளின் அளவைக் குறிக்கலாம். 4. மட்கலம் கொள்ளும் கொள்ளளவாக இருக்கலாம். 5. எழுதுவதற்குப் பலகை போன்ற அமைப்பாகவும் மட்கலங்களைக் கொண்டிருக்கலாம்.

கொற்கைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தொல் பழங்காலத்திலிருந்து படிப்படியான நாகரீக வளர்ச்சியைப் பெற்றனர். வேட்டை நிலையில் இருந்து வேளாண்மை நிலைக்கு மாறிப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர். தேரிப்பகுதிகளில் செய்யப்பட்ட கற்கருவிகளை வாங்கிப் பயன்படுத்தினர். கொற்கைப் பகுதியில் ஆட்சி செலுத்திய அரசு ஆதித்தநல்லூரை உள்ளடக்கி ஆட்சி புரிந்தது. போர்க்கலையில் வல்லவர்களாக விளங்கியதால் பல்வேறு வகையான இரும்புப் படைக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள். கொற்கைப் பானை ஓடுகளில் பல்வேறு குறியீடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் சில சிந்துவெளிக் குறியீடுகளை ஒத்து விளங்குகின்றன. இக்குறியீடுகள் எதை உணர்த்துகின்றன என்று உறுதியாகக் கூற முடியவில்லை.

துணை நூற்கள்

1. ஆபிரகாம், ஐ.ஜோ., பழையகாயல் தலபுராணம், 1926.
2. ஆரோக்கியசாமி, மு., நாம் இருக்கும் நாடு, அமுத நிலையம், சென்னை, 1955.
3. இராகவன், அ., ஆதித்தநல்லூரும் பொருநை வெளி நாகரிகமும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1980, முதற்பதிப்பு.
4. இராமகிருஷ்ணன், எஸ்., இந்தியப் பண்பாடும் தமிழரும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1982, இரண்டாம் பதிப்பு.
5. இராஜு காளிதாஸ் முதலியோர், தமிழக வரலாறும் பண்பாடும், விஜய் பப்ளிகேஷன்ஸ், திண்டுக்கல், 1977.
6. செல்லம், வி.டி., தமிழக வரலாறும் பண்பாடும், 1976.
7. செந்தில் செல்வக்குமரன், மா., சந்திரவாணன், சொ., சிதம்பரனார் மாவட்டம் ஓர் ஆய்வு, மதுரை, 1986.
8. பிள்ளை, கே.கே., தென்னிந்திய வரலாறு, 1964.
9. பிள்ளை, கே.கே., தமிழக வரலாறும் பண்பாடும், 1972.
10. திருநாவுக்கரசு, க., 'சிந்துவெளி எழுத்து வடிவங்கள்' ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்

11. Allchin B. and F.R. *The Birth of Indus Civilization*, Benguin Books, Middlesex, 1968.

12. Aiyappan, A., "*The Megalithic Culture in South India*' Indian Science Congress Association XXXII, 1945.

13. Basham, A.L., *The wonder that was India*, London, 1954.

14. Caldwell, R., *A History of Tinnevelly*, Asian Educational Services, New Delhi, 1982.

15. Caldwell R., "*Explorations at Korkai and Kayal*', Indian Antiquary, 1877.

16. Iravatam Mahadevan, *Tamil Brahmi Inscriptions* State Dept. of Archaeology Tamil Nadu, 1970.

17. Nilakanta Sastri, K.N. *A History of South India*, Oxford University Press, 1976, Fourth Edition.

18. Pate, H.R. Tinnevelly District Gazetteer, Madras, 1917.

19. Robert Bruce Foote., *Indian Pre historic and Proto historic Antiquities* - Notes of their ages and Distribution, London, 1916.

20. Venkatraman, R., *Indian Archaeology*, 1993.

21. *The Hindu*, 28.3.1969, Archaeologists at work in Ancient Pandian Port.

22. *The Indian Express*, 26.3.1969, ""Archaeological Excavation at Korkai - A Pandian Port"

23. Damilica, Journal of the Tamil Nadu State Department of Archaeology, December, 1970.

3. மண்ணில் மறைந்த நகரங்கள் முட்டமும் பேரூரும்

புலவர் ஐ. இராமசாமி,
இக்கரைபோளுவாம்பட்டி.

முட்டமான பெருநகரம் :

இது வெள்ளியங்கிரியடி முட்டம் எனப்படும். சுமார் 6000 அடி உயரமுள்ள, வெள்ளியங்கிரியிலிருந்து வருவதே காஞ்சியாறு. ஆற்று நீரில் காக்கைப் பொன் என்ற அபிரகம் மிதந்து வரும். கல்லாறு, காஞ்சியாறு, பச்சையாறு, பொன்னாறு, வெள்ளையாறு என்ற ஐந்து நதிகளை உடையது. நாகனுக்குத் தலைகள் ஐந்து, உடம்பு ஒன்று. இந்தக்காஞ்சியாறு, ஐந்து ஆறுகளின் உறவால், பாம்பு போல வளைந்தும் நெளிந்தும் வரும். இந்த ஆற்றின் தலைப்பகுதி முட்டம் எனப்படும். நிலத்தின் பகுதி சென்று, மலையில் முட்டும் இடம். அதனால் முட்டமாயிற்று. இப்பகுதி தேவநாகனான, அமரபுயங்கன் தொழுத இடம். இதுவே நாகேசுவரம் என்பது.

இப்பகுதியை ஆதியில் ஆட்சி புரிந்த சேரர்கள் அமரபுயங்கன் பெயரை வைத்துக் கொண்டனர். ஊரும், அமர புயங்க நல்லூர் ஆயிற்று. இதன் பெயர் இங்குள்ள நாகேசுவரர் கோயில் கல்வெட்டுக்களில் உண்டு. சுமார் கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை எழுந்த கல்வெட்டுக்களில் அமரபுயங்க நல்லூரின் பெயர் உண்டு. சங்க காலத்திலும், அதற்கு முன்னும், இப்பகுதி எவ்வாறு இருந்தது என்பது தெரியவில்லை. பிற்காலத்தில், மேற்கே மகோதையை ஆண்ட பிற்காலச் சேரர்களில், குலசேகரன் மரபினர் ஆட்சியில், கோக்கண்டன்ரவி என்ற தாணுரவியின் (கி.பி. 844-885) காலத்தில் இங்குள்ள கோயில் கட்டப் பெற்றது. இவன் வளமான நன்செய் நிலப் பகுதிகளை பிராமணர்க்குத் தானம் செய்தான். அது, ‘இரவிவர்மச் சதுர்வேதி மங்கலம்’ எனப்பட்டது. கொங்குச் சோழர் காலத்தில், வீரராசேந்திரன் (கி.பி. 1207-1255) மீண்டும் இக்கோயிலைப் புதுப்பித்தான். கோயில் கல்வெட்டுக்களில் சுமார் ஏழு வணிகர்கள் பெயர்கள் வரும். இங்கே நடந்த வாணிகம் தொன்மையானது. ஒரு சமயம் தஞ்சைச் சோழமன்னன் முதலாம் இராசராசன், சேரநாட்டின் மேல் படையெடுத்த போது, முட்டத்தில் ஆட்சி புரிந்த சேரனுடன் போரிட்டு வென்று இம் முட்டத்திற்கு மும்முடிச் சோழநல்லூர் எனும் பெயர் சூட்டினான்: முன் காலம் ஆட்சிபுரிந்த சேரர் ஆட்சியில் இந்த முட்டம், நேர் மேற்கே உள்ள வள்ளுவ நாட்டுடன் சேர்ந்திருந்தது. அதனால் வள்ளுவநாட்டு முட்டம் எனப்பட்டது.

சேரநாட்டிலுள்ள திருநந்திக்கரைக் கல்வெட்டில் மேற்கண்ட செய்தி உள்ளது. சதய நாளில் திருநந்திக்கரை ஆண்டவர்க்கு வழிபாடு செய்ய சோழன் நீவந்தமும் அளித்தான். சிதைந்து போன இந்தக் கல்வெட்டில், இந்த இரண்டு செய்திகளும் உள்ளன. மற்றபடி, இங்கே உள்ள வள்ளுவநாட்டு முட்டத்தைத் திருநந்திக்கரை ஆண்டவர்க்குத் தானம் செய்யவில்லை.

இத்தலத்தில் உள்ள திருமுத்துவாணியம்மையார் சிலை, அழகின் சிகரம் ஆகும். மேகலையணியின் வகையில் ஒன்றான, கலாபம் (16 துவாரங்களுடன்) அம்மையாரின் இடையில் (சிற்பத்தில்) விடுவிக்கப்பட்டுள்ளது. பழங்கால அணிகள் பலவும் சிலையில் காணப்படும். அல்லாமல் அணிகள் பூட்டுதற்கும், மாட்டுதற்கும். ஏற்ற துவாரங்கள் ஆங்காங்கே உள்ளன. இப்படி இவ்வளவு அழகுடன் ஒரு சிலை வேறு எங்கும் இல்லை எனலாம். இது சேர மன்னரின் படைப்பாக இருத்தல் வேண்டும். இங்கு ஒரு மண் கோட்டையும் அகழியும் இருந்தது. இயந்திரங்கள் வந்த பின்பு, இது உழவர்களால் அழிக்கப்பட்டது. அப்போது புதிய கற்கால, 'உறைகல்' இங்குக் கிடைத்தது. இது கோவை காட்சிச் சாலையில் உள்ளது.முட்டம் மேடுகள் பழமையானவை. இவற்றில், புதிய கல்லாயுதங்கள், அவற்றைத் தேய்க்கும் உறைகல், புத்தர் தலை உருவங்களான மண் பொம்மைகள், முத்திரையிட்ட பழங்காசுகள், குழந்தைகள், அரசு மகளிர் உருவப் பொம்மைகள். இசக்கியின் வெண்கல உருவம், செம்பினால் ஆன காளை (எருது) உருவங்கள், புலி, வில், மீன் மற்றும் விளக்குத் தண்டு பொறிக்கப்பட்ட வட்டமான ஓடு ஒன்று, சுமார் 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறித்த ஓட்டுச் சில்லுகள், தட்டங்கள், மண் கலயங்கள் போன்றவை பல கிடைத்துள்ளன. கோவை தொல்லியல் அலுவலர் (தமிழ்நாடு தொல்லியத்துறை) இங்கு இரண்டு முறை அகழ்வு ஆய்வு மேற்கொண்டனர். இயக்குநர் முனைவர் ஆர். நாகசாமி அவர்கள் நேரில் பார்வையிட்டார். கோவை மாவட்டத்தின் பல வரலாறுகளை நூல் வடிவம் ஆக்கியவர் கோவை கிழார் அவர்கள். தமிழகத் தொல்லியல் துறை கோவையில் நிறுவப்பட்ட பின்பே தொல்லியல், கோவை மாவட்டத்தில் தழைத்தது. முட்டத்தில் கிடைத்த சில வரலாற்றுப் பொருள்கள் என்னால் சேகரிக்கப் பெற்றன. அவை கோவை தொல்லியல் காட்சியில் உள்ளன. கற்காலம் முதல் ஒய்சள வீர வல்லாளர் காலம் வரை முட்டத்தில் அமரபுயங்க நல்லூர் சிறந்து விளங்கியது. இந்நகரம் மண்ணுள் மறைந்து போன வரலாறு நமக்குத் தெரியவில்லை. இங்கு உள்ள கோயில்கள் வெகுகாலம் வரை மெல்லக் குறுகி வந்தன. பேரூர் ஆதினம், மற்றும் பழனி சாது சாமிகள் ஆதீனம், மற்றும் கொங்கு வேளாண்குடி மக்கள் துணை கொண்டு சென்ற ஆண்டு

கோயில்கள் குடமுழுக்குப் பெற்றன. வரலாற்றுச் சின்னங்களும், அழகிய சிலைகளும் காக்கப் பெற்றன.

பேரூர் மேடுகள்

பேரூர் தொன்று தொட்டு பெருநகரமாக இருந்தது என்பதை இப்போது அறிகின்றோம். சுற்று வட்டம் வெகு தூரம் வரை சாம்பல் மேடுகளே உள்ளன. இடைக்காலப் பாண்டியரில் ஒருவனான பராங்குச மாறவர்மன் மகன் நெடுஞ்சடையன் பராந்தகன் (765-790) புகழ்பெற்ற வீர வைணவன். பெரியாழ்வார் காலத்தவன். கொங்கு நாட்டை வென்றவன். வடக்கே இருந்த கங்க நாட்டின் எல்லைவரை கொங்கு நாட்டை வென்றான். ஆயிரம் வேலி அயிரூரிலும், புகழியூரிலும் அதியன் என்பானுடன் போரிட்டு வெற்றி கொண்டவன். அதியனுக்குத் துணையாக மேற்கேயிருந்து கேரளனும், கிழக்கேயிருந்து பல்லவனும், வந்தனர். பாண்டியன், அனைவரையும் வென்று அதியன் நாட்டைக் கைப்பற்றிய பின்பு, மேல் கொங்கில் (குட கொங்கு) இருந்த வலிமை பொருந்திய அடல் மன்னனை வென்று, அவன் களிற்றோடு அவனைக் கொண்டு சென்று மதுரை அரண்மனை வாயிலில் நிறுத்தினான். பின்னர் தன் வெற்றியைக் கங்க நாட்டு எல்லை வரை பறை சாற்றினான். காஞ்சி நதியின் கரையில் உள்ள, பேரூரில், திருமால் விரும்பிக் குடி கொள்ளுவதற்கு ஏற்றவாறு, குன்று போல் உயர்ந்த பெரிய கோயிலைக் கட்டினான் என்பதை நெடுஞ்சடையன் பராந்தகனுடைய சீவரமங்கலம் செப்பேடுகள் கூறுகின்றன.

காவிரி வடகரையில் உள்ள அயிரூர், புகழியூர்கள் வேறானவை. பாண்டியன், குடகொங்கத்து அடல்மன்னனை வென்றான் என்பதால் மேல் கொங்கில் வேறு ஒரு மன்னன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அவன் யார் என்று தெரியவில்லை. இந்த அடல் மன்னன் அதியனாக இருக்க இயலாது. மேல் கொங்கில் உள்ள பேரூர் நாட்டில் அரசு ஒன்று நிலைபெற்றிருந்த தென்று கூறலாம்.

மேலைக் கங்கரும், இரட்டியரும்

முன் ஒரு காலத்தில் இரட்டியரும், மேலைக் கங்கரும் கொங்கினை ஆண்ட செய்திகள், 'கொங்கு தேச இராசாக்கள்' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் கன்னட மொழியினர். தாயாதி மரபினர். இவர்கள் தலைநகரம் 'காந்தபுரம்' என்பது. இது கணவாய் மேலே பன்னிரண்டு கிராமங்களை அடுத்து இருந்தது என்ற விவரமும், கங்கரில் மூன்றாம் மன்னன் ஹரிவர்மன் தலைக்காட்டையும் தலைமையூர் ஆக்கினான் என்பதும், அதன் பின்பு காந்தபுரம் பகுதிகள் சேனாதிபதிகள் ஆட்சியில் இருந்தது என்ற விவரங்களும் மேல் கண்ட நூலிலேயே உள்ளன. காந்தபுரம் நீரில் இன்று மூழ்கிப் போன தணாயக்கன்

கோட்டைப் பகுதியே ஆகும். இப்பகுதி சார்ந்த மலைக் காடுகளில் 'கங்கமங்கலம்' என்ற ஒரு ஊர் அக்காலம் இருந்ததைச் சிகாரிகளின் நூல் குறிப்புக்களில் அறிகின்றோம். (Guide to Shikar on the Nilgiris-P.199-1924) மேட்டுப்பாளையம் வனபத்திரகாளியம்மன், ரெட்டியர் குலதெய்வமென்று தெரிகின்றது. கெஜாவ் அட்டிக் கணவாய் சார்ந்து கிழக்கும் மேற்கும் உள்ள மலையடிவாரங்களில் குறிப்பாகத் தெங்கு மராட்டா, சத்தியமங்கலம், குத்தியாலத்தூர் போன்ற இடங்களில் இன்று வரை காணல் காடுகளில் அரிய சிலைகள் சிற்பங்கள் இருப்பது கண்கூடு. தொல்லியல் ஆய்வுக்குரியவை இம்மலைப் பகுதிகள் எனல் மிகையன்று.

இரட்டியருக்குப் பின்னர் ஆட்சி புரிந்த கங்க மன்னரில், தடிகன், மாதவன் என்போர், பேரூரிலுள்ள தம் குல குருவான சிம்ம நந்தியைக் கண்டு வணங்கினர். அவர் பத்மாவதி என்ற தெய்வத்தின் அருளால் இவர்களுக்கு ஆசி கூறி ஆட்சியைத் தொடங்குமாறு அருள் புரிந்தார். கங்க மன்னர்களும் காந்த நகரைத் தலைநகராக்கி ஆட்சி புரிந்தனர். இவர்கள் சமயம் சமணம். சிம்மநந்தியும் சமணகுருவாவார். கங்கர்கள் அனைவர்க்கும், பேரூர் ஒரு வணங்கத்தக்க சமய மையமாக வெகு காலம் வரை இருந்து வந்தது எனல் தகும்.

'பேரூரில் கங்கர் ஆட்சியின் போது, ஒரு பெரிய சமணர் கோயில் இருந்தது; அது 'அருகத ஆயதனம்' என்பதாகும். ஒரு கங்க மன்னனின் ஆசை நாயகி ஒருத்தி இக்கோயிலுக்குச் சில கர்ஷா பணங்களை (வெள்ளி நாணயம்) கொடையாகக் கொடுத்தாள் என்ற செய்திகள் ஒரு செப்புப் பட்டயத்தில் இருப்பதாக, வரலாற்று ஆய்வாளரும், பிராமி எழுத்து ஆராய்ச்சியாளருமான ஐ.மகாதேவன் அவர்கள் கூறுகின்றார்கள்.

இதில் கூறப்பட்ட கர்ஷா பணம் என்பது முத்திரையிட்ட பழங்காசுகள் ஆகும். இவை கி.மு.400 முதல் கி.பி.250 வரை புழக்கத்தில் இருந்தவை. பேரூர் ஆற்றில் காசுகளும் கிடைத்துள்ளன. இந்த மேலைக் கங்கர்கள் காலம் சங்க காலத்தை அடுத்ததாகும். பேரூர் சமணக்கேந்திரமாக அக்காலம் இருந்தது எனலாம். கங்கர்களின் தொடர்பு பேரூருக்கு உண்டு. பிற்காலச் சேரர்கள் ஆட்சி புரிந்த போதும், வட கொங்கின் சில பகுதிகள் கங்கர் வசமாகச் சுமார் 10ஆம் நூற்றாண்டு வரை இருந்தது என்பதற்கு ஆதாரமாக அவர்கள் வெளியிட்ட காசுகளும் அப்பக்கம் கிடைத்துள்ளன என்பதாகும். பாண்டியன் நெடுஞ்சடைய பராந்தகன் கங்க மன்னர் புதல்வி பூசுந்தரி வயிற்றில் பிறந்தவன் என்பர். தனது தாய்ப்பாட்டன் வருக்கத்தாருக்குப் பேரூர் ஒரு சமயக் கோயில், குல குருவின் கோயில் என்று கருதி அந்த ஒரு பாசத்தின் காரணமாகவே இங்கு தன் வழிபடு கடவுளான திருமாலுக்குக் கோயில் கட்டினான் என்றும் கூறலாம்.

பேரூரில் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்

பேரூரின் வடக்குப் பக்கம் உள்ள தோட்டங்களில், பழம் பொருள்கள் வெகு காலமாகக் கிடைத்து வருகின்றன. 35 ஆண்டுகளாக நான் நாணயவியலில் ஆராய்ந்து சிலவற்றைக் கண்டறிந்து கட்டுரைகளாக இந்திய நாணயவியல் கழகத்தின் மூலம் வெளியிட்டுள்ளேன். மேடு கோடுகளில் உள்ள பற்பலரையும் சந்திப்பது உண்டு. பல குறியீடுகளையுடைய வட்டமான ஓடுகள், மண் பொம்மைகள், முனிவர்களைப் போலவும், கடவுளைப் போலவும் உள்ள மண், அல்லது மாக்கல் பொம்மைகள் போன்றவை அவ்வப்போது கிடைத்துள்ளன. கடந் இரண்டு ஆண்டுகளில் தான் எழுத்துடைய மண் பொம்மைகளும் பிராமி எழுத்து ஓடுகளும் கிடைத்தன. இங்குள்ள மேடுகள் பரந்து கிடக்கின்றன. வீடுகள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. வேளாண்மைவேலைகளும் நடைபெறு கின்றன. தூரமான இடங்களுக்குச் சென்று அலையவும் நம் போன்றவரால் இயலாது. தேடியும், பொறுக்கியும் வேறு உழவர்களிடம் வாங்கியும் சேகரிப்பதே நம் கடமை. இங்கு அவ்வப்போது கிடைக்கின்ற மண் பொம்மைகள், எழுத்தோடுகள் போன்றவை வேறு வேறு காலத்தைச் சேர்ந்தவை. ஒரு சில, பல தலைமுறைகளுக்கும் முற்பட்டவை. சுமார் 4500 ஆண்டுகளின் நாகரிகங்களை அறிய இவை துணை புரிகின்றன.

மண் பொம்மைகள்

இவை சிறிதும், பெரிதுமாக உள்ளன. தொல்லியல் துறை சேகரித்து உள்ள ஐந்து தலை நாகன் உருவம் பச்சை மாக்கல் உருவம். இந்தக்கல் நம் நாட்டினது அல்ல. பர்மாவில் இக்கல் வகை உள்ளது. ஜேடு கல் என்பர். சிற்பங்கள் செய்ய இதைப் பயன்படுத்துவர். இதில் 10 வரி பிராமி எழுத்து உள்ளது. பெரிய பொம்மைகள் சிலவும் துறையார் வசம் உள்ளன. என்னிடம் உள்ள சிறிய பொம்மைகள் சிலவற்றில் பிராமி எழுத்துக்கள் சில உள்ளன.படிக்க இயலவில்லை. இங்குக் கிடைத்துள்ள பொம்மைகள் பல்வேறு காலத்தியவை. ஒரு சிலகங்க வம்சத்துக் குலதெய்வங்களாகவும் இருக்கலாம். சமண சமயக் குரவர்கள் உருவங்கள் சிலவும் இவற்றில் அடங்கும். மேலை நாட்டு உருவங்களும் இருக்கலாம். தீவிரமான ஆராய்ச்சிகளின் பின் ஒருகாலம் விளக்கம் ஆகலாம்.

எழுத்து ஓடுகள்

இவை பல வடிவங்களில் உள்ளன. 50 முதல் 150 அல்லது மேலும் எழுத்துக்கள் உடையவை. இது செய்யப்பட்ட விதம் வேறு. மண்ணை நன்றாகக் கொழித்து வடி கட்டி, அதனுள் மூலிகைச் சாறுகளைப் பிழிந்து, பிசைந்து, சற்று உலர்ந்த பின்பு மேலே காக்கைப் பொன் என்ற அபிரகம் கலந்து, கற்களால் உறுதிப்படத் தேய்த்து,

விரும்பிய வடிவில் வெட்டி எடுத்து, ஒரு பதத்தில் தாம் விரும்பிய எழுத்துக்களைக் கீறி, பின்பு சுட்டு எடுத்து வைத்துக் கொண்டனர். தலைக்குத் தேய்க்கும் ஊஞ்சல் மர இலை (அரப்பு) மணம் கமழுகின்றது. வரிகள் நேராகவும், சுத்தமாகவும், ஓவியங்கள், அரண்மனைகள், உயர்ந்த மாடங்கள், கோயில்கள், நீர்நிலைகள், கப்பல்கள், ஓடங்கள், பாய்மரக் கப்பல்கள், புலங்கள், புலங்களின் படங்கள், மலைகள், ஆறுகள், மரங்கள், ஒரு வகையான கிறுக்கு எழுத்துக்கள், பாதைகள் போன்றவை அழகாகக் கீறப்பட்டுள்ளன. பட்டிப்ரோலு பிராமி வாசகம் போல வட்டமான வரி எழுத்துக்களும், நடுவில் சில எழுத்துக்களும் உள்ளன. எழுத்துக்கள் சிதறிப் போகவில்லை. எழுத்தோடுகள் பார்வைக்கு அழகாக உள்ளன. உண்கலம் போன்ற ஓடுகளில் உள்ளும் புறமும் எழுதி உள்ளனர். ஒரு சிறு மண் குடுவையில் எழுத்துக்கள் உண்டு (படம்-1). அதில் எருமி நாடு குமிழியூர் எனும் வாசகம் மேலே எழுதப்பட்டுள்ளது. ஓடுகளிலும் இப்பெயர்கள் உண்டு. காடகன் என்ற பெயரும் இடையிடையே வருகின்றது. எருமிநாடு, தமிழிர்ப் பெயர்கள், ஏகதேசம் ஓடுகளில் வருதலால், பேரூர் வட்டமே எருமி நாடாகவும், பேருரே குமிழியூராகவும் அக்காலம் இருந்தன எனலாம்.

எழுத்தமைதி

இந்த எழுத்துக்கள் தமிழ்ப்பிராமி எழுத்துக்களேயாம். தமிழக்குரிய சிறப்பெழுத்துக்கள் இவற்றில் உள்ளமையால் பேரூரில் கிடைத்த பிராமி எழுத்துக்கள் காலத்தால் முற்பட்டவை ஆகலாம். அசோகர் பிராமிக்கும் இது காலத்தால் முற்பட்டதென்று தெரிகின்றது. முற்றிலும் படிக்க இயலவில்லை என்பதை அனைவரும் அறிவர். காலம் தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

மேலைநாடுகளின் வாணிகத் தொடர்பு

1. சிவப்பு மாக்கல்லால் செய்யப்பட்ட மூன்று ஸ்பிங்ஸ்கள் (Sphinx) இங்கு கிடைத்துள்ளன. இவற்றின் கீழ் எழுத்துக்கள் உண்டு. அவை வேறு வகையின. (படம் 2) மற்றொன்றின் கீழ் பிராமி எழுத்து உண்டு. அவை ஓடுகளில் உள்ளவை போன்ற எழுத்துக்களே. எருமி நாடு, காடகன் பெயர்கள் படிக்கலாம். ஸ்பிங்ஸ் எகிப்து நாட்டுக்குரியதென்பதை அனைவரும் அறிவர். இங்கிருந்த எகிப்திய வணிகர்கள் இதை வணங்கியிருக்கலாம்.

2. இங்கு ஒரு செங்கல் கிடைத்தது. அதில் உள்ள (மார்பளவு உருவம்) பெண்மணி எகிப்து நாட்டுப் பெண்மணியாகலாம். அருகே ஒரு குதிரை வீரன் உள்ளான். இதன் அளவு (10 1/2 X 7 1/2 x 2 1/2) ஆகும். எகிப்து நாட்டு வணிகர்கள் பேரூரில் தங்கியிருந்தனர் எனலாம். எகிப்தின் மூன்றாம் கால அரசியாகிய

ஹாட்ஸ்ஹெப்சூட் (கி.மு.1501-1479) HATSHEPSUT - என்பவள் கீழை நாடுகளுடன் வாணிகம் மேற் கொண்டாள். இவள் உலகத்தில் முதல் பேரரசியாவாள்.

3. ஒரு சிறிய பதக்கம் ஈயத்தால் ஆனது. அதில் காணப்படும் தலை உருவம் எகிப்திய மன்னன் தூத்தங் காமன் (கி.மு.1358-1353) உருவம் போலத் தெரிகிறது. (படம். 3) இவை எகிப்து நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் உள்ள வாணிகத் தொடர்பினைக் காட்டுகிறது. எகிப்து நாட்டின் இரண்டு மூன்றாம் கால அரசுகளின் போது, அந்நாட்டு வணிகர்கள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருக்கலாம்.

4. கப்பல்கள், கலங்கரை விளக்கம் பொறித்த ஓடுகள் ஒன்றிரண்டு கிடைத்துள்ளன. கலங்கரை விளக்கம் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. பிராமி எழுத்து ஓடுகளில், சரக்கு ஏற்றிய கப்பல், அருகே கலங்கரை விளக்கம், அடுத்து பெரிய மாடத்தின் மேல் விளக்குகள் உள்ளமை காண்க.

5. கடல் பயணச் சீட்டு: ஒரு கல், 2 1/2 அங்குல சதுரம், ஒரு புறம் எழுத்துக்கள் படிக்க இயலாதவை. கப்பலில் செல்லு பவர்க்கு இது ஒரு பயணச் சீட்டு ஆகலாம். அறிய இயலாத மாக்கல் முத்திரை ஒன்றும் இதனுள் அடங்கும்- (படம். 4அ, ஆ, இ)

6. வெண்கலச் சில்லு: இதில் முன்புறம் பறவை முகம் அல்லது ஆட்டின் முகம் உள்ள, கழுத்தளவு உருவம் அ, ண், கீழே-ம- என்ற பிராமி எழுத்துக்கள், பின்புறம், 'காடகன் புறை' (புறை மங்கலாகத் தெரியும்) பொறையாகவும் இருக்கலாம். இங்கும் ஒரு மனிதன் தலை உருவம். அனைத்தும் புள்ளிகளால் ஆனவை (படம் 5). முன் உள்ளது பறவை (பருந்து) முகம் ஆனால் - ரா- என்ற சூரியக் கடவுளையும், ஆட்டின் முகம் ஆனால் -அமன்-ரா- என்ற சூரியக் கடவுளையும் குறிக்கும். அமனையும், 'ரா'-என்ற சூரியனையும் எகிப்தியர் வணங்கினர். அமன் கடவுள் எகிப்திய மன்னர் குல தெய்வமாகவும், அரசுக் கடவுளாகவும் இருந்த காலம் கி.மு. 2000 முதல் 800 வரை எனலாம். விவரங்கள், *Egyption Myth and Legend* - என்ற ஆங்கில நூலில் உள்ளன. சூரியனைப் போன்ற, மண்பொம்மை ஒன்றும் கிடைத்துள்ளது. (படம். 6)

7. சித்திர எழுத்துக்கள்: பாபிலோனியர் அல்லது எகிப்தியர் வரைந்த சித்திர எழுத்துக்கள் அடங்கிய ஓடு ஒன்றில் ஒரு புறம் பிராமி எழுத்தும், மறுபுறம் சித்திர எழுத்தும் உள்ளமை காண்க. எகிப்தியரே அல்லாமல் பாபிலோனியர், அசிரியர் மற்றும் மேலை நாட்டார் வணிக நிலையும் இங்கு இருந்திருக்கலாம். இந்தச் சித்திரங்கள் ஆராய்ச்சிக்குரியன.

முடிவுரை

மேலே கண்டவற்றால் பேரூர் நாட்டுக்கும் எகிப்து போன்ற மேலை நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு வெகு காலத்துக்கு முன்பே இருந்ததென்பது தெரிகின்றது. பிராமி எழுத்து ஓட்டில் கப்பல், பாய்மரக்கப்பல், கலங்கரை விளக்கம் போன்றவை கீறப்பட்டிருப்பது, இது வரை நமக்குக் கிடைக்காத தொல்லியல் சான்று என்பதையும் உறுதிப் படுத்துகின்றது. ''ஹிரோடடஸ்'' என்ற வரலாற்று அறிஞர் கூறியிருப்பதைப் போல மம்மிகளைப் (சவங்களை) பதப்படுத்துவதற்குத் தேவையான மூலிகை வகைகளும், லவங்கம், லவங்கப்பட்டை, வெள்ளைப் போளம், செவ்வகில் எண்ணெய் போன்றவை சேர நாடாகிய இப்பகுதியிலிருந்து சென்றிருக்கலாம்.

பேரூர் மேடுகளில் இருந்த நகரங்கள் கி.பி.முதல் நூற்றாண்டு வாக்கில் ஆட்சி செய்த மேலைக் கங்கர் காலம் வரை இருந்தன எனலாம். ஒன்றிரண்டு பிராகிருத மொழி ஓடுகளும் (சிறியவை) இருப்பதாலும், கங்கர் காலத்திய உருவங்கள் போல சில மண் பொம்மைகள் இருப்பதாலும், கங்கருக்கு இப்பகுதி தொடர்புடையது என்பதை உறுதிப்படுத்தலாம். முன் ஒரு காலம் பேரூரில் கிடைத்த , 'ஆட்டின்' மண் பொம்மையும் எகிப்தியர் அமன் கடவுளை நினைவூட்டுகின்றது. (படம். 7) பேரூர் மண்ணில் மறைந்திருந்த மாநகரம் எதுவோ? அறிஞர்கள் ஆராய வேண்டும்! பிராமி எழுத்து ஓடுகள் முற்றிலும் படித்தறிந்தால் மேலும் பல தகவல்கள் கிடைக்கலாம்.

வெள்ளலூரிலும் ஏராளமான மேடுகள் உள்ளன. சங்க காலத்திய பிராமி எழுத்து ஓடுகள் இங்கு கண்டுபிடிக்கப் படவில்லை. ரோமானிய நாணயங்கள் இந்த ஊரின் பண்டைய வாணிகச் சிறப்பை எடுத்துச் சொல்லும். இங்கு கிடைத்த 1 1/2 கிராம் அளவுள்ள பொன் துண்டில், மீனும் வில் அம்பும் உள்ளதை, நான், சேர மன்னர்கள், புலவர்க்கு அக்காலம் வழங்கிய 'காணம்'. வெள்ளலூர் வரலாறும் தனியாக ஆராய வேண்டியது. தமிழகத்தின் எதிர்காலத் தொல்லியல் வரலாறு, முனைப்புடன் செயலாற்றும் இளைஞர்களின் கையில் உள்ளது.

4. தொன்மை நீர்ப் பாசனம்

முனைவர் கொடுமுடி சண்முகன், சென்னை.

தமிழ்நாட்டின் கடந்த 3000 ஆண்டு காலப் பாசனப் புலமைக்குச் சான்று பகரக்கூடியதாகப் பல எச்சங்கள் உள்ளன. மாமழை தருவது நீர். அந்நீரைச் சேமித்துப் பயிர்களின் தேவைக்கேற்ப வயலுக்கு எடுத்துச் செல்லும் புலமையே பாசனப் பொறியியல் ஆகும்.

தமிழ்நாட்டில் காவிரி தவிர பிற அனைத்து நதிகளும் காட்டாறுகளே. மழைக்காலம் தவிர பிற காலங்களில் நீர்வரத்து இல்லை. எனவே மழை நீரைக் கால்வாய் வழி எடுத்துச் சென்று ஏரிகளை நிரப்பிக் கொண்டனர். பயிர் விளையும் காலம் முழுவதும் ஏரியிலிருந்து தூம்பு வழியாக எடுத்துச் சென்று வயலில் பாய்ச்சிப் பயிர் விளைவித்தனர்.

தோட்டக்கால் பாசனத்தில் கிணறுகள் பெரும் பங்கு வகித்தன. ஆளேற்றம், கவலையேற்றம் மூலமாகக் கிணற்று நீரை எக்கி, தரை மட்டத்திற்குக் கொணர்ந்து வயலுக்குப் பாய்ச்சினர். ''பரப்பு நீர்ப் பொய்கை கரப்பு நீர்க்கேணி'' என்பது மணிமேகலைக் கூற்று.

தண்ணீர் கீழ்நோக்கித்தான் ஓடும்; புவியீர்ப்பு விசையின் காரணமாக வேகமாக ஓடினால் விசை மிகுந்து மண்ணை அரித்து விடும். நிலத்தில் உள்ள புழைகளின் வழியே நீர் புகுந்து விடும்; தேங்கியிருந்த நீர் காணாமல் போய்விடும். வெய்யிலும் நீரை ஆவியாக்கிக் கொண்டேயிருக்கும். இவை அனைத்தும் பாசனப் புலமையின் கூறுகள். இவற்றைத் தமிழர்கள் தொன்று தொட்டே நன்று அறிந்திருந்தனர்.

நீர்வட்டம்

கடல் நீர் ஆவியாகிக் காற்றால் நிலப்பகுதிக்குக் கடத்தப்பட்டு, மலைகளால் தடுக்கப்பட்டு மழையாகப் பொழிகிறது. பெய்த மழை ஓடைகள் வழியே ஓடி ஆறுகளில் கலந்து, கடலை அடைகிறது. இந்த உண்மையைப் பண்டே அறிந்திருந்தனர். சமகாலத்து ரோம் நாட்டு அறிஞர்களிடையே இத்தெளிவு இல்லை. கடல் நீர் நிலத்தடிப் புழைகளின் வழியே ஊடுருவிச் சென்று மலைகளின் முகட்டுப் பகுதியில் வெளிவந்து ஆவியாக மாறி, மேகமாகத் திரண்டு மழையாகப் பெய்து வந்ததாகக் கருதி வந்தனர்.

ஏரி, குளம்

பெய்யும் மழை ஆற்றின் வழியே ஓடிக் கடலில் கலந்து விடுகிறது. மழைக் காலங்களில் மட்டுமே நீர்வரத்து இருக்கும். பயிர்களின் விளைச்சல் காலமோ ஆறு திங்களுக்கு மேல் இருந்தது. பெய்யும்

மழையைப் பெரிய பாத்திரத்தில் பிடித்து வைத்து, தேவைப்படும் போது பயிருக்கும் பாய்ச்சும் ஏற்பாடுதான் ஏரிகளும் குளங்களும் ஆகும்.

கோடி, கரை

ஓரளவு நீர்வரத்துள்ள ஓடைகளின் குறுக்கே மண் கரையும், (கொண்டம்) கரையின் ஒரு முனையில் கலிங்கலும் அமைப்பதன் மூலம் குளம் அமைக்கப்படுகிறது. கலிங்கல் பெரும்பாலும் இயற்கைப் பாறையாக இருக்கும். கலிங்கலில் வழியும் நீர் பாறை வழியாக ஓடி, அதன் பழைய ஓடைக்கு வந்து விடும். கலிங்கல் கரை மட்டத்தை விடத் தாழ்வாக இருக்கும். கரையின் கடையில் இருப்பதால் 'கடை' (கடைகால்) எனவும் பெயர் பெற்றது. கரையின் ஒரு கோடியில் இருப்பதால் கோடி என்றும் பெயர் பெற்றது. கோடு என்னும் சொல்லும் முனையைக் குறிக்கும். கோடு பின்னர் கோடி என்றாகி விட்டது. கலிங்கு (கோடி) இல்லையாயின் தண்ணீர் தேங்கி, நீர்மட்டம் உயர்ந்து, மண் கரை மீது வழிந்து, கரையையே உடைத்து விடும். திருவள்ளுவர் இதனை நன்கு அறிந்துள்ளார்.

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று (523)

மடை, தூம்பு

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன். அவன் தலைநகரம் கிடங்கில். இது தற்கால திண்டிவனத்திற்கு அருகிலுள்ள சிற்றூர். அந்த ஊர் ஏரியிலிருந்த தூம்புக் கல்வெட்டு ஒரு தொழில்நுட்பச் செய்தியைக் கூறுகிறது. ''மடையும் அடைத்துத் தூம்பும் செய்வித்தான் பனைப்பூங் கிழார் தம்பி குமரன்'' தண்ணீரின் போக்கு அளவைக் கட்டுப்படுத்த இயலாத கட்டுமானம் மடை. 'ப' வடிவத்தில் கருங்கல்லைச் செதுக்கி, ஒன்றின் மீது இன்னொற்றைக் கவிழ்த்து வைப்பதன் மூலம் சதுர வடிவக் கால்வாய் அமைகின்றது. கரையின் உட்பகுதியிலிருந்து சரியான அளவு செதுக்கிய கட்டையை வைத்து அடைத்து அதைச் சுற்றிலும் நீர் கசியாமல் களிமண் வைத்து அடைத்து விட வேண்டும். அவ்வாறு நீரில் முழுகி அடைக்கும் போது பிடித்துக் கொள்வதற்காக இரண்டு தூணும், இடைக் கம்புகளும் கொண்ட கருங்கல் கட்டுமானம் இருந்தது. பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து கயத்தாறு செல்லும் வழியில் உள்ள ஓர் ஏரியில் கல்வெட்டுடன் கூடிய பிற்கால மடை ஒன்றுள்ளது. இதன் மூலம் பழைய தொழில்நுட்பத்தை அறிகிறோம்.

தமிழகத் தொல்லியல், துறை, ஈரெட்டி மலை அருகில் ஒரு மூடுகல்லைக் கண்டுபிடித்துள்ளது. அதில் ''துறகையுள்ளாறு கல்லு'' என்று கொத்தப்பட்டுள்ளது. அது மடையின் மூடுகல்லாக இருக்கலாம்.

ஓமலூர் வட்டம், கேத்தநாய்க்கன் புதூர், பெரிய சக்கிலிச்சி ஏரிக் கல்வெட்டு, மடையை ''ஓட்டை'' என்றுதான் கூறுகிறது.

தூம்பு என்பது நீரைத் தேவைக்கேற்றபடி அளந்து அனுப்பும் கட்டுமானம் கொண்டது. அதில் வட்டத்துளை ஒன்றோ, கூடுதல் எண்ணிக்கையிலோ இருக்கும். நான்கு துளையுள்ள தூம்பு ஒன்று விழுப்புரம் வட்டத்தில் உள்ளது. இதன் மூடி பம்பரம் போன்ற வடிவில் இருக்கும். அதிலுள்ள இரும்புக் கம்பி தூம்பின் மேல்பகுதியில் இருக்கும். நீரில் மூழ்காமல் மேலிருந்தே இயக்கலாம். கல்லின் துளைக்கும், மூடியின் வட்டத்திற்கும் இடையே ஏற்படும் மோதிரப் பரப்பில் தேவைக்கேற்ப தண்ணீரை அனுப்ப முடியும். தண்ணீரே புகாமல் கெட்டியாகவும் மூடமுடியும். வட்டத்துளை கல்லின் கிடைப்பரப்பில் இருக்கும். நிலப்பரப்பில் ஒரு சதுரத் துளை இருக்கும். இதனைச் சேத்தடித் துளை என்பர். எப்போதும் மூடியே வைக்கப்பட்டிருக்கும். தண்ணீர் மிகவும் குறைந்து விட்ட காலத்தில் இதன் வழியே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராஜசிங்க மங்கலம் ஏரியில் 48 மதகுகள் இருந்தன. இவை தூம்பேயாயினும் பழைய வழக்கத்தில் மடை எனப்படுகின்றன. நற்றிறம் கொண்ட ஒருவனை முன் மடையில் விட்டால் புறமடையால் வந்து விடுவான் என்பது நெல்லை வழக்கு.

வள்ளல்கள்

கரையும் கலிங்கலும் முதலில் அமைக்கப்படும். அதன்மூலம் நீர் தேங்கி நிலத்தடி நீர் ஊறும். செலவு குறைந்த மடை முதலில் பொறுத்தப்படுகிறது. பின்னர் வள்ளல்களின் உதவியால் மடை, தூம்பாக மாற்றிக் கட்டப்படுகிறது. மதகு கட்டுவதற்கு ஏராளமானோர் உதவியுள்ளனர்.

கற்சிறை

ஏரிகளின் கலிங்கல் கற்சிறை என்ற சொல்லாலும் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன.

வருசிறைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்

என்னும் தொல்காப்பிய வரிகள் (பொருள் 65-7) இதனை உணர்த்தும்.

ஏரிகளின் கோடியில் செலவில்லாமல், கருங்கல் பாறைகள் மீது அமைத்த அனுபவத்தில், முழுதும் கருங்கல் இல்லாத இடங்களில் கூடக் கட்டுமானக் கலிங்கல் கட்டப்பட்டன. இதே தொழில்நுட்பம் கொண்டு ஓடை அல்லது ஆற்றின் குறுக்கே அணை கட்டி, அதிலிருந்து கால்வாய் வெட்டி, அதன் வழியே நீரைக் கொணர்ந்து ஏரியை நிரப்பிக் கொண்டனர்.

பெருகி வரும் படையை, ஒரு வீரன் தடுத்து வேறு திசைக்கு அனுப்புவது போல இக்கற்சிறையும் பெருகி வரும் தண்ணீரின் திசையை மாற்றிக் கால்வாய் வழி அனுப்புவதாக மதுரைக் காஞ்சி கூறுகிறது.

''வருபுனல் கற்சிறை கடுப்ப, இடை அறுத்து,
ஒன்னார் ஒட்டிய செருப்புகல் மறவர் (725.6)


கல்லணை இத்தகையதே. கரிகாலன் 2000 ஆண்டுகட்கு முன்பு கட்டிய கல்லணை கால வெள்ளத்தைக் கடந்து நொடிக்கு சுமார் 3,00,000 கன அடி நீரைக் கையாளும் திறன் படைத்துள்ளது.

தேர்ந்த ஆய்வாளர்கள் கூடக் கல்லணை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்டதாகக் கருதுகின்றனர். பொறியியல் கட்டுமான வகைப்பாடு கருதினால் இதனை 2000 ஆண்டுகட்குப் பின்னதாகக் கொணர இயலாது. அறுதிப்பாட்டாண்டினைக் கடந்தும் சிறப்பாக இயங்கும் இவ்வணையைக் கனடா நாட்டுப் பொறியாளர்கள் வியந்து பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

காவிரிக்கரை

பெருந்தொகைப் பாட்டிலிருந்து கரிகாலன் அமைத்த காவிரிக் கரையின் அளவுகள் கிடைக்கின்றன.

உச்சம் கோல் எண்கோல் உயரம் பதினாறு கோல்
எச்சம் பிரிவா யிறுபது கோல் - தச்சளவு
மண்கொள்ளக் கொண்ட கோல் என்கொள்: வளவர்கோன்
கண்கொள்ளக் கண்ட கரை



ஒரு கோல் நீளம் 2' -9''என்று கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

கோயில் குளம்

கால்களைத் தூய்மைப் படுத்திக் கொண்டுதான் கோவில்களுக்குப் புக வேண்டுமென்பதால் கோயிலுக்கு அண்மையிலேயே குளமிருக்கும்.

''கோயில் குளம்''என்ற சொல் மரபு நினைக்கத்தக்கது.

''கழாஅக்காய் பள்ளியுள் வைத்தற்றால்'' என்ற குறளடியை எண்ணிப் பார்க்க. கோயில் குளங்கள் ஆண்டு முழுவதும் நீர் நிறைந்திருக்க வேண்டியவை. ஒரு சில ஆண்டுகள் தொடர்ச்சியாக மழை வரங்கூர்ந்தாலும், தாக்குப் பிடித்து, நீரை வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஓராண்டில் ஆவியாகும் நீர் சுமார் 70 அங்குலம். ஆனால் பெய்யும் மழையோ அதில் பாதிதான். எனவே குளப்பரப்பைப் போன்று நான்கு அல்லது ஐந்து பங்குப் பரப்பில் பெய்யும் மழை முழுதும் குளத்திற்கு வருமாறு வடிவமைக்க வேண்டும். திருவாரூரில் கோயில் பாதி, குளம் பாதி என்பர். ஆனால் பெரும்பாலான இடங்களில் குளப்பரப்பு கோயில் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒரு பங்கு இருக்கும். கோயிலைச் சுற்றிலும் ஒருசில தூய்மைப் பகுதிகள் ஏற்படுத்தி அந்த நீரும் குளத்திற்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

குளத்தில் படிப்படியாக வண்டல் படிந்திருக்கும். அதனால் கசிவின் வழியாக நீர் வீணாவது தடுக்கப்படுகிறது. குளங்களுக்குக் கலிங்கல் என்னும் மிகைப் போக்கி கிடையாது. வரத்துக்கான துளை குளத்தின் பெரும் நீர் மட்டத்தில் இருக்கும். குளம் நிறைந்ததும், நீர் உள்வரவு நின்று, வெளியேயே சென்றுவிடும். உள்வரவுத் துளை சிறிதாகவே இருக்கும். ஒன்றோ, இரண்டோதான் இருக்கும். ஆண்டுதோறும் துளைப் பகுதியை, ஒழுங்குபடுத்தி நீர் வரத்தை உறுதி செய்ய வேண்டும். சென்னையில் உள்ள கோயில் குளங்கள் பல வறண்டிருப்பதற்குக் காரணம் உள்வரத்தை ஒழுங்கு செய்யாததேயாகும்.

குமரிக்கண்டம்

பாசனப் பொறியியலைப் பொறுத்தவரை, தமிழ்நாடு நீண்ட நெடுங்காலமாகத் தொழில்நுட்பச் சிறப்புப் பெற்றது. தமிழ்நாடு நிலநடுக் கோட்டிற்கும், கடகரேகைக்கும் இடையேயுள்ளது. தென்கிழக்கு வடமேற்குப் பருவக்காற்றுகள் ஆண்டுதோறும் மழையினைத் தொடர்ந்து அளிக்கின்றன. மழையினை அடுத்துக் கோடை வெய்யிலும் தொடர்ந்து வருகின்றது. பயிர் விளைச்சலுக்கு இவை மிகவும் உகந்த கூறுகள். பட்டறிவுச் செய்திகள் தலைமுறைதோறும் திரண்டு, திரண்டு பேரறிவாக வளர்ந்துள்ளது.

இதற்குப் பெருந்துணையாக இருந்தவை, புள்ளியியல் கூறுகள். கண்டம் பெயர்ச்சிக் கொள்கையின்படி எல்லாக் கண்டங்களும் ஒன்றாக ஒட்டிக் கொண்டிருந்ததை பாஞ்சியா என்பர். அதன் ஒரு பகுதி கோண்டுவானா நிலம். கோண்டு வானாவின் ஒரு துண்டு தனியாகப் பிரிந்து ஆத்ரேலியாக் கண்டத்திலிருந்து பிரிந்து மெல்ல நகர்ந்து வந்து கொண்டேயிருந்தது. இப்பகுதியே விந்திய மலைக்குக் கீழுள்ள

தென்னிந்தியப் பகுதி. இந்து மாக்கடலில் தனியாக நகர்ந்து வந்து கொண்டிருந்த போதுதான் அதனைக் குமரிக்கண்டம் என்றனர். அதுவே மேலும் நகர்ந்து ஆசியப் பகுதியில் முட்டியது. இந்த முட்டலின் அழுத்தத்தாலேயே, இமயமலை தோன்றி படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்து பெரிய மலைத் தொடராகி விட்டது.

குஜராத் பகுதியில் டயனோசரஸ் கற்படிவங்களும், அதன் முட்டைகளின் கற்படிவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் திருவக்கரைப் பகுதியிலும், அரியலூர்ப் பகுதியிலும் கல்லாகிப் போன மரங்கள் கிடைத்துள்ளன. இவை பழமையின் அடையாளங்கள். இந்நிலத்தின் ஓரம் பாரத்தில் இருந்த மிகச் சிறிய பகுதிகள் அவ்வப்போது கடலுக்குள் சரிந்து விழுந்த போது அவ்வக்காலம் புலவர்களால் கடல்கோள் என விளக்கப்பட்டது.

'பறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'- சிலப்பதிகாரம்.

குமரிக்கண்டம் கடலுள் முழுகவில்லை. விந்திய மலை உள்ளிட்ட தீபகற்ப இந்தியா ஆசியாவோடு மோதுவதற்கு முன்னிருந்த தீவு நிலையே குமரிக்கண்டம் ஆகும்.

வெப்ப மண்டலமே உயிரினம் தோன்றத் தோதான இடம் என்பது அறிவியல் முடிவு. மாந்தன் தோன்றிய முதல் இடங்களுள் தென்னிந்தியாவும் ஒன்று. அவன் கூன் நிலை மாறி நேர் மனிதனாக மாறிய காலத்திலிருந்து, குறிஞ்சியில் குகையில் வாழ்த்து, முல்லையில் வேட்டையாடி வாழ்ந்தான். மருதநிலப் பண்பு தோன்றிய காலத்திலிருந்து அவனின் நீரான்மைப் புலமை வளரத் தொடங்கி விட்டது. தேங்கிய குட்டையில் முதலில் நீரெடுத்துப் பயிர் விளைத்தான். ஓடைகளில் குறம்பு அமைத்து நீர் எடுத்தான். பின்னர் ஏரி அமைத்தான். ஆற்றிலே அணை கட்டி, வாய்க்கால் எடுத்து ஏரியை நிரப்பிக் கொண்டான். மடையில் தொடங்கிய தொழில் நுட்பம் தூம்பாக மாறியது. ஆற்றின் கழிமுகப் பாசனத்தில் பெரும்புலமை பெற்றான். தான் பெற்ற அறிவினை உலகம் செழிக்கப் பயன்படுத்தினான். நைல் நதியின் பாசனத்திற்கு தொழில் நுட்ப உதவி வழங்கியவர், தென்னிந்திய மக்களே என்பதை அந்நாட்டு மக்களே அறிந்திருந்தனர். விரிவான விளக்கம் பெற முனைவர் கொடுமுடி சண்முகனாரின் ''பண்டைப் பாசன பொறியியல்'' நூல் காண்க.

முடிவுரை

தமிழகத்தின் பாசனப் பொறியியல் புலமை நீண்ட வரலாறு கொண்டது. படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. தமிழகத்தின் 33 ஆறுகளும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில்

சுமார் 30,000 ஏரிகள் உள்ளன. அவற்றில் 116 ஏரிகள் 3 மில்லியன் கனமீட்டர் கொள்ளளவுக்கு மேற்பட்டவை. பல பழைய பாசனக் கட்டுமானங்கள் பொதுப்பணித் துறையால் இன்றும் நல்ல நிலையில் பேணப்படுகின்றன. பல தொல்லியல் சான்றுகளாகவும் உள்ளன. பல கல்வெட்டுச் சான்றுகளோடு காலத்தை உறுதி செய்கின்றன. இலக்கியங்களிலும் ஏராளமான செய்திகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

சர் ஆர்தர் காட்டன், பென்னி குயிக், கர்னல் எல்லீஸ் போன்ற பல பொறியாளர்கள் தென்னகத்தைத் தம் தாய்நாடாகக் கருதி அரிய பல சாதனைகள் படைத்துள்ளனர். தமிழகத்தில் பாசனத் திட்டங்கள், கட்டுமானங்கள் பற்றிப் பாசனம் (IRRIGATION) என்ற தலைப்பில் எல்லீஸ் அவர்கள் எழுதிய நூல் பொறியியல் கல்லூரிகளில் பெரிதும் பயிலப்படுகின்றன. இங்கு மட்டுமன்று; உலகம் முழுதும் இப்போது எழுதுகின்ற பாசனப் பொறியியல் நூலாசிரியர்கள் அனைவரும் எல்லிசின் நூலை ஆதாரமாகப் படித்தவர்களே எனில் அது மிகையன்று.

5. அகழாய்வு மூலம் அறியப்படும் கட்டடக்கலை

தி.சுப்பிரமணியன், தஞ்சாவூர்.

தமிழகத்தில் சங்ககாலத்தில் (கி.மு.300-கி.பி.300) மாட மாளிகைகள் இருந்தன என்பது சங்க இலக்கியங்களின் வாயிலாகத் தெரியவருகின்றது. பூம்புகாரில் இருந்த வீடுகளைப் பற்றி கூறும்போது

''பீடிகை தெருவும் பெருங்குடி வணிகர் மாட மறுகும்
மறையோரிருக்கையும்'' என்றும்

''சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்'' என்றும் பேசுகின்றன. எனவே சங்க காலத்தில் செங்கற்களால் ஆன வீடுகளும், மாளிகைகளும் இருந்தன என்பது தெளிவாகின்றது. வரலாற்றுக் காலத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்த கட்டடங்களின் சில பகுதிகள் அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளன. காஞ்சிபுரம், பூம்புகார், அரிக்கமேடு, உறையூர், கரூர் போன்ற அகழ்வாய்வுகள் குறிப்பிடத் தக்கன. காவேரிப்பூம்பட்டினத்தில் பல இடங்களில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழ்வாய்வில் பல வகையான கட்டடங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் இரண்டு படகுத் துறைகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று கீழையூரிலும் மற்றொன்று கிழார் வெளியிலும் கிடைத்துள்ளன. இவை இரண்டும் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை. கீழையூரிலுள்ள படகுத்துறையின் காலம் கி.மு.4-ஆம் நூற்றாண்டு என்று C14 முறையின்படி காலம் கணிக்கப்பட்டுள்ளது[1].

வானகிரியில் கிடைத்துள்ள நீர்த்தேக்கத்தின் வாயிலும் செங்கற்களால் கட்டப்பட்டது. இக்கட்டடம் கி.பி.1,2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இங்குள்ள கட்டடங்களின் அடிப்பகுதியில் சிவப்பு சரளைக் கற்களுடன் கூடிய மண்ணைக் கொண்டு கெட்டிப் படுத்தியுள்ளனர். தரைப்பகுதியில் சிவப்பு மண்ணும் சரளைக் கற்களும் கலந்து காணப்படுகின்றது.

வரலாற்றுக் காலத்தின் தொடக்க நிலையில் அப்பகுதியில் கிடைத்த சரளைக் கற்களுடன் கூடிய மண் சிவப்பு (நுறம்பு) மண் ஆகியவற்றைக் கொண்டு கெட்டிப்படுத்திய தரைகள் கொடுமணல், உறையூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. சுண்ணாம்பு பூச்சும் அதன்மேல் காணப்படுகின்றது.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அகழ்வாய்விலும் பல கட்டடப் பகுதிகள் கிடைத்துள்ளன. பௌத்த விகாரம் என்று கருதப்படுகின்ற கட்டடத்தின் பகுதிகளும் கிடைத்துள்ளன. இங்கு இரண்டு அளவுகளைக்

கொண்ட செங்கற்கள் காணப்படுகின்றன. இதன் காலம் கி.மு.2ம் நூற்றாண்டு என்ற தெரிகின்றது[2].

அரிக்காமேட்டிலும் சில செங்கல் கட்டடங்கள் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்தவைகளும் உறையூரில் கிடைத்தவைகளும் நெசவுத் தொழிலுக்காகப் பயன்படுத்தப் பட்டவை. இதன்காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டாகும்[3].

திருக்காம்புலியூர் அகழ்வாய்வில் சேமிப்பு அறை என்று கருதப்படுகின்ற கட்டடம் ஒன்று வெளிப்பட்டுள்ளது. இதன் அடித்தளம் சரளைக் கற்களால் ஆனது. இதன்மேல் களிமண் பூச்சு காணப்படுகின்றது. இதன் காலம் கி.பி.4-ஆம் நூற்றாண்டு ஆகும்.

வரலாற்றுக் காலத்தின் இடைக்காலத்தைச் சார்ந்த கட்டடங்கள் கங்கைகொண்ட சோழபுரம், வல்லம், தாராசுரம், சேந்தமங்கலம் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்தில் மாளிகைமேட்டில் கிடைத்த செங்கல் கட்டடங்கள் சோழர்களின் அரண்மனைப் பகுதிகளாகும். இந்த அரண்மனையின் வடிவம் பற்றிய விபரம் தெரிந்துக் கொள்ள இயலவில்லை என்றாலும் சுவர் அமைப்பு முறைகளைப் பற்றி அறிய முடிகின்றது. இணையாகக் கட்டப்பட்ட இரண்டு சுவர்கள் உடைய இரட்டை சுவர் தொழில் நுட்பம் இங்கு காணப்படுகிறது. சுவர்களுக்கு இடையேயுள்ள இடைவெளியின் அகலம் 55 செ.மீ. களிமண் குழைத்து பூசப்பட்டுள்ளது. குருவாலப்பர் கோயில் பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வில் கோட்டையின் சுவர் கிடைத்துள்ளது. இச்சுவர் கருங்கற்கள் மற்றும் செம்பராங் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

சேந்தமங்கலம் அகழ்வாய்வில் 1 மீட்டர் ஆழத்தில் இரண்டு சுவர்களின் இடிபாடுகள் கிடைத்துள்ளன. இச்சுவர்கள் இரண்டும் வடக்கு தெற்காகக் கட்டப்பட்டுள்ளன. இச்சுவர்களுக்கு இடையே உள்ள இடைவெளி 1.45 மீட்டர் ஆகும். இரண்டு சுவர்களும் இணையாகக் கட்டப்பட்டுள்ளது. சுவற்றின் மேல் பகுதியிலிருந்த செங்கற்கள் பொதுமக்களால் வெட்டி எடுக்கப்பட்டுவிட்டன. சில இடங்களில் மட்டும் தரையின் கீழ்ப்பகுதியில் செங்கல் கட்டடங்கள் காணப்படுகின்றன.

இச்சுவற்றை கட்டுவதற்காகப் போடப்பட்ட கடைக்கால் அல்லது அடித்தளம் அகழ்வாய்வில் கிடைத்துள்ளது. அடித்தளம் போட எடுக்கப்பட்ட அடித்தள குழியின் ஆழம் 90 செ.மீ. இக்குழியின் மேல் பகுதி 1.45 மீட்டர் அகலத்திலும் கீழ்பகுதி 1.25 மீட்டர் அகலத்திலும் வெட்டப்பட்டுள்ளது. இந்த அடித்தள குழியில் மூன்று வகையான மண் அடுக்குகளைக் கொண்டு அடித்தளம் போடப்பட்டுள்ளது. குழியின் அடிப்பகுதியிலிருந்து 20செ.மீ. உயரத்திற்கு ஆற்றுமணல்

கொட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் பகுதி 30 செ.மீ. உயரத்திற்கு மணலும் கூழாங்கற்களும் கலந்து காணப்படுகின்றது. இந்த இரண்டு மணல் அடுக்குகளுக்கு மேல் செம்பறாங்கற்களும், மஞ்சள் நிற கற்கள் - caterite Stones) மணலும் காணப்படுகின்றன. கரடுமுரடான செம்பறாங்கற்களைப் பரப்பியுள்ளனர். சிறிய பெரிய கற்களுக்கு இடையில் மணல் கொட்டி சமதளமாக்கப் பட்டுள்ளது. அதாவது கற்கள் தெரியாமல் மணல் பரப்பியுள்ளனர். இத்தகைய மணல் பரப்பின் மீது செங்கல் கட்டடம் கட்டியுள்ளனர்.

செங்கல் சுவற்றின் முன்பக்கமும், பின்பக்கமும் முழுமையான செங்கற்களை வைத்து சுவர் கட்டப்பட்டுள்ளது. இடைப்பட்ட பகுதியில் உடைந்த செங்கல் துண்டுகள் பரப்பியுள்ளனர். செங்கற்களுக்கு இடையில் களிமண்ணும், செம்மண்ணும் கலந்த சாந்து பூசப்பட்டுள்ளது. கிடைத்துள்ள இரண்டு செங்கற் சுவர்களும் ஒரே மாதியான அடித்தளமும் அமைப்பும் கொண்டுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள் நன்றாக சுடப்பட்டவை.

இரண்டு சுவர்களுக்கு இடையே உள்ள இடைவெளி குறைவாக இருப்பதாலும், இரண்டு சுவர்களும் இணையாகச் செல்வதாலும், சுவர் 'A' விற்கும், 'B' விற்கும் இடைப்பட்ட இடைவெளியும் சுவர் 'A'வின் அகலமும் சமமாக இருப்பதாலும் இச்சுவர் சேந்தமங்கலம் நகரைச் சுற்றி எடுக்கப்பட்ட மதில் சுவராக இருக்க வாய்ப்பு உள்ளது. மதில் சுவரின் வெளிப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் ஒன்று சுவரோடு ஒட்டிக் காணப்படுகின்றது. இக்கால்வாயின் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் செங்கல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இருப்பிலும் 1.45 மீட்டர் இடைவெளியில் இரண்டு சுவர்கள் எதற்காக எடுக்கப்பட்டன என்பது ஆய்விற்குரியதாகும்.

சேந்தமங்கலம் காடவர்களின் தலைநகரமாகும். இந்த நகரை காடவகுல மன்னன் மணவாளப் பெருமாள் தன்னுடைய 5-ஆம் ஆட்சியாண்டில் கி.பி.1195-ல் தோற்றுவித்தான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இதையே அகழ்வாய்வும் உறுதிபடுத்துகின்றது. காடவமன்னர்கள் சோழர்களின் கீழ்ப்படிந்து ஆட்சி செய்து வந்த குறுநில மன்னர்கள் ஆவர். மேலும் சோழர்களின் தலைநகரங்களான தஞ்சை, கங்கை கொண்டசோழபுரம் ஆகிய இரண்டு நகரங்களும் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் சேந்தமங்கலம் கட்டப்பட்டுள்ளது. எனவே, சோழர்களின் கட்டடக்கலை நுணுக்கம் சேந்தமங் கலத்திலும் பின்பற்றப்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளன.

தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் கோயில்களில் இரட்டை சுவர் முறை இன்றும் காணப்படுகின்றது. கங்கைக்கொண்ட சோழபுரத்தில் செய்யப்பட்ட அகழாய்விலும் இரட்டை சுவர் இருப்பது

தெரியவந்துள்ளது. இரண்டு சுவர்களை குறைந்த இடைவெளியில் கட்டி, மேல் தளத்தில் இரண்டையும் ஒன்றாக இணைத்து எல்லா பளுவையும் ஒரே சுவரின் மேல் வைக்காமல் பகிர்ந்து இரண்டு சுவர்களின் மேல் வைத்திருக்கும் தொழில் நுட்பம் சோழர்களின் காலத்தில் காணப்படுகின்றது. இத்தகைய முறையைச் சேந்தமங்கலத்திலும் பின்பற்றப்பட்டிருக்கலாம். வலுவான மதில் சுவரை எடுக்க இரண்டு சுவர்களை இணையாகக் கட்டி, இரண்டு சுவர்களுக்கு இடைப்பட்ட பகுதியை மண்ணைக்கொண்டு நிரப்பி அகலமான உறுதியான மதில் சுவர் அமையும். எனவே, அதிகப் பளுவைத் தாங்க எடுக்கப்பட்ட இரட்டைச் சுவரைப் போன்று அதிக வலுவாக இருக்க இச்சுவர்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். தஞ்சைப் பெரிய கோயிலைச் சுற்றி உள்ள வெளிமதில் சுவரில் இத்தகைய முறை பின்பற்றப்பட்டுள்ளது தெரிகின்றது. இது நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. K.V. Soundara rajan, *Kaveripattinam Excauation*. 1963-73. Archaological Survey of India, New Delhi.1994.
2. K.V. Raman "Excauvation at Kanchipuram, "*Tamil Civilization* vol.5; I.A.R., 1962-63; 1969-70.
3. *I.A.R.*; 1964-65; 1965-66;1967-68.
4. T.V. Mahalingam, 11 *Report on the excavation in the lower Kaveri Valley*, University of Madras-1970.

6. தமிழக அகழ்வாய்வுகளில் கிடைத்த சுடுமண் கூரை ஓடுகள்

ச.செல்வராஜ், தருமபுரி

தமிழக அகழ்வாய்வுகள் பல அரிய தொல் பொருட்களை இவ்வரலாற்றுலகிற்கு எடுத்து வழங்கியுள்ளன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களில் சிறப்பானவை சுடுமண் கூரை ஓடுகள். தொல்லியல் அகழ்வாய்வுகளில் முதல் ஆதாரமே பானை ஓடுகள் தான். அவற்றைக் கொண்டுதான் மக்களின் பண்பாடு, வாழக்கை முறை, பொருளாதார அமைப்பு இவற்றை உணர முடிகின்றது. நாடோடியாகத் திரிந்த மனிதன் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டதும் அவன் தனக்கென ஓர் இருப்பிடத்தை ஏற்படுத்தி வீடுகட்டி வாழத் தலைப்படுகிறான்.

மண் சுவர்களைக் கொண்டு கட்டிய தனது இருப்பிடத்தை இலைகளையும் தழைகளையும் கொண்டு மேற்பகுதியை மூடி இயற்கையிடம் இருந்து பாதுகாப்பைத் தேடினான். இருப்பினும் இலை, தலைகளால் இயற்கையின் வேகத்தை எதிர்கொள்ள இயலவில்லை. களிமன் உபயோகம் தெரிந்த பின்னர் மண் சுவரின் மீது மரங்களைப் பொருத்தி அந்த மரச்சட்டங்களின் மேலே மண்ணால் செய்த கூரை ஓடுகளைப் பொருத்தினான். கூரையின் மேல் பகுதியை அலங்கரித்த அந்த சுடுமண்ணால் ஆன ஓடுகளைக் கூரை ஓடுகள் என்றே குறிக்கின்றோம். இந்தக் கூரை ஓடுகள் கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டு முதலே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. தமிழகத் தொல்லியல் துறை மேற்கொண்ட அழகன் குளம் அகழ்வாய்வில் அதிக அளவு கூரை ஓடுகள் சேகரிக்கப்பட்டன.

அழகன் குளம் அகழாய்வில் சுடுமண்ணால் செய்த கூரை ஓடுகளுடன் ரோமானிய ஓடுகளும் கலந்து காணப்படுகின்றன. ரோமானியர்கள் வந்து வாழ்ந்தமைக்கு அவர்கள் விட்டுச் சென்ற தொல் பொருட்களான மட்பாண்டங்களின் எச்சங்கள், கூரை ஓடுகளுடன் ஏராளமாக கலந்து கிடைத்துள்ளன. எனவே, ரோமாணியர்கள் வணிகத்திற்கெனத் தமிழகத்திலேயே நீண்ட நாட்கள் தங்கியிருந்திருக்க வேண்டும் என்பதையும் அறிய முடிகின்றது.

கூரை ஓடுகளின் அமைப்பு

நீள் செவ்வக வடிவில் அமைந்த இந்த ஓடுகள் பெரும்பாலும் 23 செ.மீ. நீளமும் 18 செ.மீ அகலமும் 1 செ.மீ தடிமனும் கொண்டவை. இவை சுத்தம் செய்யாத மண்ணால் செய்யப்பட்டு நன்கு சுடப்பட்டவை.

இவற்றின் மேல் பகுதி தடித்தும், கீழ்ப்பகுதி செல்லச் செல்லச் சற்றுப் பருமன் குறைந்து மெல்லியதாகவும் உள்ளது. முனைப்பகுதியில் இரண்டு துளைகள் இடப்பட்டுள்ளன. இவை மரச்சட்டங்களுடன் இணைப்பதற் காக அமைத்தவை போலும். அடுத்து ஓடுகளில் இரண்டு பக்கமும் பள்ளங்கள் (grooves)அமைத்துள்ளனர். இந்த பள்ளங்கள் இணையாக காணப்படுவதால் இணைப்பள்ள வரிகள் என்று குறிப்பர். இந்த வரிப்பள்ளங்கள் நீள்வடிவத்தின் இரண்டு பக்கமும் பக்கத்திற்கு இரண்டாக வைத்து அவை அரைவட்டவடிவ அமைப்பை நோக்கிச் செல்வதுபோல வளைந்துள்ளனர்.

இந்த அமைப்பு முறை அவர்களின் தொழில்நுட்பத் திறனை எடுத்துக் காட்டுவது ஆகும். இந்த வரிப்பள்ளங்களைக் கொண்ட கூரை ஓட்டினைப் பொறுத்தும் பொழுது முதலில் மரச்சட்டங்களில் பிணைத்துப் பின்னர் அடுத்த ஓட்டினை முதல் ஓட்டின் ஒரு வரிப்பள்ளத்தில் பொறுந்துவது போல அடுக்குவர். இவ்வாறு ஒன்றன் பக்கம் ஒன்றாக அடுக்கி இடைவெளி ஏற்படாமல் அமைப்பர். அடுத்து அரைவட்ட வடிவம் அமைந்த கீழ்ப்பகுதியில் அடுத்த வரிசையில் மரச் சட்டத்தின் மேல் பொறுத்துவர். இவ்வாறு தொடர்ச்சியாக இணைத்துக் கொண்டே செல்லும்போது ஓட்டின்மீது காணப்படும் வரிப்பள்ளமானது தொடர்ந்து கீழ்நோக்கி நேர்கோட்டில் அமையும். இவ்வாறு அமைவதால் மழைக்காலத்திலும், பிற இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் இன்னல்களில் இருந்து இந்த அமைப்பு முறை பாதுகாத்து உதவுகின்றது. வீட்டின் மேற் பகுதியில் விழும் நீர் சுவரைத் தள்ளி முன்னோக்கி அமைத்த கூரை ஓட்டின் வரிப் பள்ளத்தின் வழியாக சுவரைத் தள்ளிவிழும் நீர்தங்கவாய்ப்பு இல்லை. எனவே, இந்த வரிப்பள்ள அமைப்புடன் கூடிய கூரை ஓடுகளை அமைக்க எத்தனை கருத்துக்களையும், பாதுகாப்பு முறைகளையும் கருத்தில் கொண்டு அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இந்தக் கூரை ஓடுகள் பெரும்பாலும் கைகளால் செய்யப்பட்டவை. அளவீடுகள் அதிக அளவு வேறுபாடு இல்லை. மேலும், இவை அனைத்து அகழ்வுக் குழிகளிலும் ஆரம்பத்தில் இருந்து 0.65 மீ.மீ (AGM 7) 0.85 (AGM 8) 1.00 மீட்டர் உள்ளேயே காண முடிகின்றது. இந்தப் பகுதியில் மேல் மட்டத்திலேயே ரோமானியர் காலப்பண்பாட்டுப் பாளங்கள் அகழ்வாய்வில் காண முடிகின்றது. எனவே, இதற்கு முன்னர் உள்ள பண்பாட்டுப் பிரிவுகள் தொடர்ந்து செல்கின்றதே தவிர வேறு வரலாற்றுத் தடயங்கள் காணப்படவில்லை.

அழகன்குளம் அகழ்வாய்வில் வரிப்பள்ள முடைய ஓடுகள் அதிக அளவு மேற்பரப்பு ஆய்வுகளிலேயே காணமுடிகின்றது. இவை ரோமானியப்பானை ஓடுகள், ரோமானிய நாணயம், எழுத்துப் பொறித்த பானை ஓடுகள், கருப்பு சிவப்பு பானை ஓடுகள், குறியீடுகள் பொறித்த

பானை ஓடுகள், சங்கு வளையல் துண்டுகள், அறுத்த சங்குகள் போன்ற தொல் பொருட்களுடன் கிடைத்துள்ளன. எனவே, இவற்றின் காலத்தோடு ஒப்புநோக்கும் போது இதனைக் கி.பி.1-2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதையும் இங்கு மனதில் கொள்ளலாம். இவை பெரும்பாலும் மேற்புறத்தை அலங்கரிக்க மட்டுமே பயன்பட்டிருக்க வேண்டும். வேறுபயன் எதுவும் இல்லை.

சோழர் காலக் கூரை ஓடுகள்

கூரை ஓடுகள் என்ற அமைப்பில் நமக்கு அடுத்து அகழ்வாய்வில் அதிக அளவு கிடைத்து வருவது நீள் தட்டையான 'ட' வடிவ ஓடுகளே ஆகும். தமிழகத்தில் நடந்த வல்லம், பழையாறை, கங்கை கொண்ட சோழபுரம், திருக்கோயிலுார் ஆகிய இடங்களில் இத்தகைய கூரை ஓடுகள் அகழ்வாய்வுகளின் சேகரித்துள்ளனர். மேற்குறித்த இடங்கள் அனைத்தும் சோழர் ஆட்சிக்குட்பட்டவை. இங்கு இவற்றுடன் கிடைத்த தொல் பொருட்களைக் கொண்டு இவை சோழர் காலத்தியது எனக் கூறலாம்.

இந்தக் காலகட்டத்தைச் சார்ந்த கூரை ஓடுகள் சற்று சிறப்புத் தன்மையைப் பெற்றுள்ளன. இவை தூய்மை செய்யப்பட்ட களிமண் கொண்டு அமைந்தவை. இவற்றை வார்ப்பால் தயாரித்து அதன் மேல் பகுதியை சற்று வளைத்துக் கொக்கி போல நீட்டி ''ட'' வடிவத்திற்குக் கொண்டு வந்தனர். 'ட' வடிவ அமைப்பில் அமைந்த இந்த கூரை ஓடுகள் வீட்டின் மேல் பகுதியில் அமைத்த மரச் சட்டங்களின் மேலே கொக்கியில் மாட்டுவது போலே மாட்டி தொங்க விடுவர். இந்தக் கூரை ஓட்டினை வரிசையாக இடைவெளியின்றி அமைப்பர். கூரையின் விளிம்பில் அமைக்கப்படும் கூரை ஓடுகளைச் சுண்ணாம்புக் காரைப்பூச்சுகளைக் கொட்டி அதன் துளைகளை அடைத்து நன்கு பூசி விடுவர். எனவே மழைக்காலங்களில் தண்ணீர் இறங்க வழியின்றி கீழே வந்து விழுந்து விடும். காரைப் பூச்சுடன் கூடிய கூரை ஓடுகள் கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் அதிக அளவில் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இங்கு அடிப்பகுதியில் அலங்காரம் செய்யப்பட்ட ஓடுகளும் கிடைத்துள்ளன.

இந்தக் கூரை ஓடுகள் நீள் செவ்வக வடிவில் தட்டையாக ஒழுங்கான வடிவில் அமைக்கப்பட்டவை ஆகும். மேல்பகுதி 'ட' வடிவ வளைவைக் கைகளால் அமைத்துள்ளனர். இதன் கைப்பதிப்புகளை அந்தக் கூரை ஓட்டில் காண முடிகின்றது. கீழ்ப்பகுதி அரை வட்டவடிவம் முக்கோண வடிவம் என்று இரண்டு அமைப்புகளிலும் காணமுடிகின்றது.

அலங்கார அமைப்பு இந்த அடிப்பகுதி மற்றும் அறுகோன வடிவஅமைப்பிலும் உள்ள ஓடுகள் பெரும்பாலும் வீட்டின் நுழைவுப் பகுதிகளில் தொங்க விட்டிருத்தல் கூடும். இங்குக் கிடைத்த கூரை

ஓடுகள் சுமார் 16 செமீ நீளம் 5 செமீ அகலமும் 1 செமீ தடிப்பும் கொண்டவை. இவை இடத்திற்கு ஏற்ப அளவுகள் மாறுபாடுமே அன்றி அமைப்பிலும் செய்யப்பட்ட விதத்திலும் மாற்றம் இல்லை. இக்கூரை ஓடுகளை மரச்சட்டங்களின் மேல் ஆணியை அடித்து அதன்மீது மாட்டியுள்ளனர். கங்கை கொண்ட சோழபுரத்தில் கிடைத்த அளவிற்கு அதிகமான ஆணிகளே சான்றாகும்.

சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சிவகாமி அம்மன் கோட்டத்தில் விதானத்தில் வரையப்பட்ட ஓவிய ஓடுகள் மற்றும் நடராசர் கோயிலில் உள்ள சிற்றம்பலம், பேரம்பலத்தின் மேல் பகுதியில் வேயப்பட்ட தகட்டு ஓடுகள் ஆகியவை இந்த கூரை ஓடுகளை ஒத்தே உள்ளன. இந்த கூரை ஓடுகளே பின்னர் உலோகத்தில் அமைத்து தங்க மூலம் பூசப்பட்டு இன்றும் காட்சி தந்து கொண்டுள்ளன.

எனவே சோழர்காலத்தில் பெரும்பாலும் வீட்டின் கூரைப்பகுதியில் இவ்விதமான கூரை ஓட்டினையே பயன்படுத்தினார்கள் என்று கருதலாம். திருக்கோயிலூர், பழையாறை போன்ற இடங்களில் காணப்பட்ட கூரைஓடுகளும் சோழர் காலத்தைச் சார்ந்தவைகளே ஆகும். இவை 12 செமீ முதல் 16 செமீ நீளம் வரை கிடைத்துள்ளன. இவை எல்லாவித அளவுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் இடத்திற்கு ஏற்ப ஓட்டின் அளவை அமைத்து கூரைப்பகுதியை அழகு செய்து கொண்டதையும் உணர முடிகின்றது.

விசயநகர காலம்

இந்த காலகட்டத்தில் அளவில் மாற்றம் பெற்றதே அன்றி வடிவம் மாறுபடவில்லை. மிகச் சிறிய அளவினதும் இவர்கள் தயாரித்தனர். இவர்கள் காலத்திலும் இருப்பிடங்கள் அதிகரித்தன. எனவே கூரை ஓடுகளும் அதிகரித்தன. படை வீடு, சேந்த மங்கலம், ஆகிய பகுதிகளில் கிடைத்த கூரை ஓடுகள் 23 செமீ நீளம் 6 செமீ அகலமும் கொண்டவை.

இவை மிகவும் நீளமானதும் நன்கு சுடப்பட்டதும் ஆகும். படைவீட்டைச் சம்புவராயர்கள் ஆண்ட பகுதியாகக் கருதுவர். அங்கு அகழாய்வில் பல தொல் பொருட்கள் இந்தக் கூரை ஓடுகளுடன் கலந்து காணப்பட்டன. எனவே, இந்தக்கூரை ஓடுகள் கி.பி.14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனலாம்.

கி.பி.முதல் நூற்றாண்டு முதலே கூரை ஓடுகள் அறியப்பட்டு காலமாற்றத்துக்கு ஏற்ப வளர்ச்சியைப் பெற்றன. எளிதில் அதிக அளவு கூரை ஓடுகளைச் செய்ய அச்சு முறையும் ஏற்பட்டது. கூரை ஓடுகள் அலங்காரம் செய்தும் பல்வேறு வளர்ச்சியை அடைந்ததைச் காணமுடிகின் றது. இவை கி.பி.16-17 ஆம் நூற்றாண்டில் மராட்டியர் காலம் வரை தொடர்ந்து பயன்பாட்டில் இருந்திருக்கின்றன.

7. பூம்புகார் கடற்கோளும் அகழாய்வுகள் புலப்படுத்தும் உண்மைகளும்

வெ. இராமமூர்த்தி, சென்னை

தமிழகத்தில் பண்டைக் காலத்தல் இரு இடங்களில் கடல்கோளால் நாடு அழிந்தாக இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். புறநானூறு[1], சிலப்பதிகாரம்[2] மற்றும் கலித்தொகை[3] ஆகிய நூல்கள் குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டது பற்றி தெரிவிக்கின்றன.

கடலால் கொள்ளப்பட்ட மற்றொரு இடம் காவிரிப்பூம்பட்டினமாகும். இச்செய்தி மணிமேகலையில் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளது. முதலிடத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்படப் போகிறது என்ற எச்சரிக்கை பின்வரும் அடிகளால் காட்டப்பட்டுள்ளது.

''தீவகச் சாந்தி செய்யா நாளுள்
காவல் மாநகர் கடல் வயிறு புகூஉம்''

''காசில் மாநகர் கடல் வயிறு புகாமல்
வாசவன் விழாக்கோள் மறவேல் என்று''

ஆபுத்திர நாடு அடைந்த காதையில், உதயணன் தாயான இராசமாதேவி மணிமேகலையைச் சிறைவைத்துள்ளதையறிந்த சித்திராபதி, காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்படும் அபாயம் உள்ளது என்றும், இந்திர விழாக்கொண்டாடத் தவறினால் காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளால் அழிந்து விடும், விழிப்பாயிரு என்றும் சாரணன் ஒருவன் முன்பே கூறியுள்ளான் என்று இராசமாதேவியிடம் கூறுவதாகக் இப்பாடல் வரிகள் உள்ளன.

ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதையில், காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்ட காரணத்தைத் தீவதிலைகை,

''மன்னவன் மகனுக்குற்றது பொறாஅன்
நன்மணியிழந்த நாகம் போன்று
கானலும் கடலும் கரையும் நேர்வுழி
வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது
மணிமேகலா தெய்வம் மற்றது பொறா அன்
அணிநகர் தன்னை அலைகடல் கொள்கென
விட்டனள் சாபம் பட்டதிதுவால்
கடவுள் மாநகர் கடல்கொள''

என்று மேகலையிடம் கூறியதாகக் காணப்படுகிறது. இப்படிக் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்படும் என எச்சரித்ததற்கொப்ப பின்னர் கடல் கொண்டுள்ளது என்பதும் மணிமேகலை இலக்கியத்தால் புலனாகிறது.

அவ்வாறு கடலால் கொள்ளப்பட்ட காவிரிப்பூம் பட்டினம் நகரத்தின் முழுப்பகுதியும் கடலால் கொள்ளப் பட்டதா? அல்லது நிலப் பகுதியிலும் பண்டைப் பூம்புகாரின் பகுதிகள் மறைந்துள்ளனவா? என்பது புரியாத புதிராக இருந்து வந்தது. 1962 - 63ல் தொடங்கி 1973 முடிய இந்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்திய நில அகழாய்வு மூலம் கீழையூரில் படகுத்துறையும், பல்லவனீச்சரத்தில் புத்த விகாரையும், மணிக் கிராமத்தில் நீர்த்தேக்கமும் வெளிப்படுத்தப்பட்டன. இவையனைத்தும் பண்டையப் பூம்புகாரின் பகுதிகள் ஆகும். ஆனால் வெவ்வேறு காலங்களைச் சார்ந்தவை. படகுத்துறை கி.மு. 5-4 ஆம் நூற்றாண்டையும், புத்தவிகாரை கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டையும், நீர்த்தேக்கம் கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை என்று கணிக்கப்பட்டுள்ளன[4]. குறிப்பாக படகுத்துறையின் காலம் கார்பன் 14 கணக்கீட்டுப்படி கி.மு. 316 ± 103 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது[5].

பூம்புகார் சங்ககாலத்தில் பெரும் துறைமுகப்பட்டினமாக விளங்கியமைக்கு மேற்காணும் நில அகழ்வாய்வுச் சான்றுகள் போதுமானவையாக இருந்ததால், கடல் கோளால் அழிக்கப்பட்டதென்பதற்கு ஆதாரமாகச் சான்றுகள் கிடைக்குமா? என்று அறிய கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு மையத்தோடு இணைந்து தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1981ல் பூம்புகார்க் கடற்பகுதியில் ஜியோபிசிகல் சர்வேயை நடத்திற்று[6]. அவ்வாய்வில் பூம்புகாரையொட்டிய கடற்பகுதியில் சில இடங்களில் கடலில் கூம்புகள் போன்று சில மேடுகள் இருப்பது தெரியவந்தது. அப்பகுதிகளில், மூழ்குநர்களைக் கொண்டு தீவிர ஆய்வுகள் 1982 முதல் 1997 முடிய நான்கு காலக் கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன[7]. மேற்காணும் நான்கு கட்ட ஆய்வில் கீழ்க்காணும் முக்கியச் செய்திகள் அறியப் பட்டன.

1. பூம்புகாருக்கு வடக்கேயுள்ள கடைக்காடு கடற்கரையிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் கடலுக்கடியில் பண்டைய காவிரியாற்றுப் போக்கின் தடயம். (Palaeo river of Kaveri)
2. அவ்வாற்றின் வடகரையில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் 23 மீட்டர் அழத்தில் இலாட வடிவில் செம்புறாங் கல் கட்டடமும். அதற்கு முன்பாக இருதனிக் கட்டடங்களும்.
3. அவ்வாற்றின் தென்கரையில் வடபகுதி கட்டங்களுக்குத் தென்

கிழக்குத் திசையில் மேலும் இரு செம்புறாங் கல் கட்டடப்பகுதிகள்.

4. கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில், ஏழு அல்லது எட்டு மீட்டர் ஆழத்தில் சில கருங்கல் கட்டடப்பகுதிகள். இப்பகுதியில் கிடைத்துள்ள பானைஓடுகள்[8] கி.மு. 4-3 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படுகிறது.

5. கரையையொட்டிய அலைகள் மோதும் பகுதியில் செங்கற்கட்டடங்கள் அழிபாடுற்று மண்மேடிட்டுக் காணப்படுகின்றன. இவற்றின் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டு முடிய.

6. சின்னவானகிரிக்கு எதிர்த்திசையில் சுமார் 5 கி. மீட்டர் தொலைவில் கடலில் சுமார் 24 மீட்டர் ஆழத்தில் கடலில் மூழ்கிய கப்பல் ஒன்று. காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இக்கப்பலில் சுமார் 2 மீட்டர் நீளமுள்ள இரும்புப் பீரங்கி, இரண்டு வெடிமருந்துப் பெட்டிகள், கொடிக்கம்பம், கப்பலின் போக்கை நெறிப்படுத்தும் செப்புக்கருவி மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட ஈயக்கட்டிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஈயக் கட்டிகள் மூன்று வகையாகக் காணப்படுகின்றன[9].

7. பூம்புகாரையொட்டி தெற்குப் பக்கத்தில் சின்னமேடு என்னும் குப்பத்துக்கு எதிரே உள்ள கடற்பகுதியில் 36 அடி ஆழத்தில் தற்செயலாக மீனவர் வலையில் ஒரு புத்தர் சிலை கிடைத்துள்ளது.

பூம்புகார் கடலால் கொள்ளப்பட்டது உண்மைதான் என்பதும் பண்டையநாளில் மிகப் பெரிய நகரமாக அது விளங்கியது என்பதும் சுமார் ஐந்து கிலோமீட்டர் அளவுக்கு அதன் பகுதிகள் கடலால் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதும் உறுதியாகியுள்ளது. தரைப்பகுதியில் பூம்புகார் எவ்வளவு தூரம் வரை பரவியிருந்தது என்பதைக் கண்டறியவும் நீரகழாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருட்களின் காலத்தைக் கணித்து ஒப்பாய்வு செய்யவும், நில அகழாய்வும் மேற்கொள்ளப்பட்டது. 1995-96ல் தொடங்கி 1997-98 முடிய மூன்று ஆண்டுகளில் அகழாயவு பூம்புகாரின் பல்வேறு பகுதியில் நடைபெற்றது.

குறிப்பாக மணிக்கிராமத்தையடுத்த கீழவெளி, வானகிரி முதலிய இடங்களில், நிகழ்ந்த அகழாய்வுகளில் குறிப்பிடத்தக்க தொல்பொருள் சான்றுகள் தெரியவந்நதுள்ளன. கிழார் வெளியில் ஒரு படகுத்துறையும், வானகிரி அகழாய்வில் இதுவரை பூம்புகார்க் கள ஆய்விலோ அல்லது அகழாய்விலோ கிடைக்கப்பெறாத எழுத்துப்பொறித்த பானையோடும், அனைத்துப் பகுதிகளிலிருந்ததும் அரிய சுடுமண் பொம்மைகளும்

கிடைக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். கிழார் வெளியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படகுத்துறை முன்னர் இந்திய அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையால் வெளிப்படுத்தப்பட்டுள்ள படகுத் துறையின் மறுவடிவம் போன்றே காணப்படுவதாக நடன. காசிநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்[10].

வானகிரியில் கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த பானை யோட்டின் வாசகத்தைத் துறை கீழ்காணுமாறு படித்திருந்தது[11]. '(அ) ஹாபாகேதரோ'. இதன் பொருள் விளங்கவில்லை என்றும் தெரிவித்திருந்தது. இப்பானையோட்டின் காலம் கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று சு. இராசவேலு அண்மையில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்[12]. 'அபிமகததோ' என்று படித்து 'அபி' என்றால் இளவரசி என்று பொருள் என்றும் 'மகி' என்பது நட்சத்திரப் பெயர் என்றும் குறிப்பிட்டுள்ளார். 'தோ' என்பதற்குப் பொருள் கூறவில்லை. சுடுமண் பொம்மைகளில், அவலோகிதேசுவரர், புத்தபாதம், முற்காலச் சோழர் காலக் கலைப்பாணியில் உள்ள ஆண் உருவம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கள ஆய்வின்போது கிடைத்துள்ள சுடுமண் பொம்மைகளுள் புத்தர் அல்லது யக்ஷனின் தலை குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்டுள்ள நில அகழாய்வு மற்றும் நீரகழாய்வுச் சான்றுகளைக் கொண்டு காண்கையில் பூம்புகார் என்னும் மாநகரம் சுமார் 50சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பெரும் புகழோடு. இற்றைக்குச் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே விளங்கியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு, பாடல் 6,9
2. சிலம்பு - காடுகாண் காதை, 11, 18-22
3. கலித்தொகை, 104, முல்லைக்கலி
4. K.V. Soundararajan, *Kaveripattinam Excavations*, 1963 - 73 (Published 1994)
5. Dr. S.R. Rao. *JMA* - Vol. 2, (1991)
6. இரா. நாகசாமி, தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் முயற்சியால் நடைபெற்றது.
7. நடன. காசிநாதன், தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் முயற்சியால் நடைபெற்றது.
8. A.S. Gaur, "*ceramic Industries of Poompuhar, An Integrated approach of Marine Archaeology*, Ed. S.R. Rao. (1997), p. 128.
9. A.S. Gaur, Sundaresh, Manoj Sexena, Sila Tripati and P. Gudigar, *Preliminary Observations an 18th Century Ship Wreck at Poompuhar* (East coast of India), *IINA*, 1994. pp. 118-126.

10. Natana. Kasinathan, '*Ancient Seaports of Tamilnadu and their trade contact with other countries*', Endowment Lecture of Tamilnadu History Congress, 1997, pp. 14-16; கிழார் வெளிப் படகுத்துறை, திரு நடன காசிநாதன், முன்னாள் இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல்படியும் தொல்லியியல் துறை துணை இயக்குநர் திரு. அ. அப்துல் மஜீத் அவர்களின் மேற்பார்வையிலும் இக்கட்டுரை ஆசிரியர், மற்றும் பொ. இராசேந்திரன் ஆகியோரால் முதன் முதலில் கண்டறியப்பட்டது. இதனைப் பாதுகாத்திட நாகப்பட்டின மாவட்ட நல நிதியிலிருந்து நிதியினை ஒதுக்கி அன்றைய மாவட்ட அட்சியர் திரு. அருண்மொழி இ.ஆ.ப உதவினார்..

11. நடன. காசிநாதன், அர. வசந்தகல்யாணி, தொல்லியல், துறையின் அரிய கண்டுபிடிப்புகள் 1988-1998, பக்கம் 27.

12. சு. இராசவேல், 'பூம்புகாரில் சிங்கள பிராமி எழுத்துப் பொறித்த மட்கலத்துண்டு' ஆவணம், இதழ் 10, (1999) பக்கம் - 154.

8. சேந்தமங்கலம் சுடுமண் பொருட்கள்

மா. கலைவாணன், தருமபுரி.

சேந்தமங்கலம் என்ற சிற்றூர் சென்னையில் இருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் 185 வது கிலோ மீட்டரில் கெடிலம் நிதியின் தென் கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்ப் பேட்டை வட்டத்தைச் சேர்ந்த ஊராகும்.

இவ்வூரில் 1995 மற்றும் 1996 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையின் சார்பில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. 1995ம் ஆண்டில் ஏழு ஆகழாய்வுக் குழிகளும் 1996 ஆம் ஆண்டில் ஏழு அகழாய்வுக் குழிகளும் போடப்பட்டு அகழாய்வு செய்யப்பட்டது. இந்த அகழாய்வில் கிடைத்த பல்வேறு கலைப் பொருட்களில் சுடுமண் பொருட்கள் முக்கியமானவை. அவற்றை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித உருவ பொம்மைகள்

மனித உருவங்களின் சுடுமண் பொம்மைகள் சேந்தமங்கலம் அகழாய்வில் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. முதலாவது குழியில் 2.90மீ ஆழத்தில் கருப்பு நிறத்தில் மனித உடல் மட்டும் உள்ள சுடுமண் பொம்மை ஒன்று கிடைத்தது. இது உயரம் 7 செ.மீ அகலம் 5 செமீ உடையது கழுத்தில் அணிகலன் அணிந்த நிலையிலும் இடுப்பில் இரண்டு வரிகளைக் கொண்ட ஓர் அரைஞாண் கயிறு போன்ற ஆபரணமும் அணிந்து இவ்வுருவம் காணப்பட்டது. இதே அகழாய்வுக் குழியில் மனிதன் தலை மட்டும் உள்ள ஒரு சுடுமண் பொம்மை கிடைத்தது. இப்பொம்மைகள் தலை அழகுபடச் செய்யப்பட்டுள்ளன. இவ்விரு பொம்மைகளின் உருவ அமைதி மற்றும் அதனுடன் கிடைத்த மற்ற தொல் பொருட்களை ஒப்பிட்டு நோக்கின் அவை சோழர்காலக் கலைப்பாணியில் அமைந்தவை என அனுமானிக்க இயலும்.

இவையன்றி இரண்டாம் ஆண்டு அகழாய்வில் அகழாய்வுக் குழி ஒன்பதில் சுமார் 90 செமீ ஆழம் முதல் 1.25 மீ ஆழம் வரை பல்வேறு நிலைகளில் உடைந்த நிலையில் உள்ள தலைகளும் கை, கால், பகுதிகளும் உடல் பகுதிகளும் சுமார் இருபது எண்ணிக்கைகளில் கிடைத்தன. அவை கை, கால்களில் ஆபரணங்கள் கை காப்பு, கால் காப்பு மற்றும் கழுத்து ஆரங்கள் அணிந்த நிலையில் கிடைத்துள்ளன. சிலவற்றின் தலையின் கொண்டைப்பகுதி விரிந்த நிலையில் உள்ள விசிறி போல் அலங்கரிக்கப்பட்டுள்ளது சிலவற்றின் கொண்டைப் பகுதி ஆங்கில எழுத்தான "V" போன்ற வடிவில் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அகழாய்வுக்குழி பதிநான்கில் கிடைத்த மனித உருவத்தின் கொண்டை அழகினை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் சுமார் 8 செ.மீ உயரத்திற்கு தலைக்குமேலே ஐந்து அடுக்குகள் கொண்ட சுருள் போன்று கொண்டை அலங்கரிக்கப்பட்டுள்ளது. இப்பொம்மையின் நாசிகள் நீண்டு கூர்மையாகவும், விழிக்கோலங்கள் அகன்றும் காண்போரைக் கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் ஆண்டு அகழாய்வில் கிடைத்த மனித உருவ சுடுமண் பொம்மைகளை ஒப்பு நோக்கின் அவை கி.பி. 13ம் நூற்றாண்டு முதல் கி.பி.16 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவைகளாக உள்ளன.

தெய்வ உருவங்களும் பிறவும்

அகழாய்வுக் குழி ஒன்பதில் 90 செ.மீ. ஆழத்தில் இருந்து சதுர வடிவமான அம்மன் வார்ப்பு (Mould) ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இதன் தலைப் பகுதி உடைந்துள்ளது ஏனைய பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. அம்மன் பத்ம ஆசனத்தில் அமர்ந்துள்ளார். வலது கை அபய முத்திரையிலும் இடது கை வரத முத்திரையிலும் உள்ளன. அம்மனின் கால் பகுதியில் சட்டி ஒன்று உள்ளது. அது நேர்த்திக் கடன் செலுத்தும் தீச் சட்டியாக இருக்கலாம். அம்மன் உருவத்தினைச் சுற்றியுள்ள பகுதிகள் வளைந்த கோடுகளால் அழகு படுத்தப்பட்டுள்ளன.

இத்தெய்வ உருவத்தைத் தவிர அகழாய்வுக் குழி பத்தில் இருந்து சுமார் 20 சுடுமண் பொம்மைகள் ஒரே இடத்தில் குவியலாகக் கண்டெடுக்கப்பட்டன. இச் சுடுமண் உருவங்கள் அழகாக அமைந்த மனிதத் தலையுடனும் நெஞ்சுப் பகுதிக்குக் கீழே மிருகங்களின் உடல் போன்ற அமைப்புடனும் காணப்படுகின்றன. அவற்றுள் யாழி ஒன்றும் கிடைத்துள்ளது. இவை குவியலாகக் கிடைத்த இடம் பூசை அறையாகவும் இவ்வுருவங்கள் வேண்டுதலுக்காகச் சார்த்தப்பட்டதாகவும் கருத இட முண்டு.

சுடுமண் விளக்குள் :

சேந்தமங்கலம் அகழாய்வில் நமக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க பொருட்களில் சுடுமண் விளக்குகளும் அடங்கும் உடைந்த சுடுமண் விளக்குகள் மிகுந்த எண்ணிக்கையில் கிடைத்தன. அவை ஒரு முகம் முதல் ஏழு முகங்கள் கொண்டவைகளாகவும். சிறியன முதல் சுமார் 25 செ.மீ. விட்டம் உடைய பல அளவுகளில் கிடைத்துள்ளன. பெரிய விளக்குகளில் ஒரு முகத்திற்கும் அடுத்த முகத்திற்கும் இடையில் உள்ள பகுதிகள் வளைவான கோடுகளாலும் புள்ளியிட்டுக் கோலம் போன்ற அமைப்புகளாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

சுடு மண் குழாய்கள்

சேந்தமங்கலத்தின் பண்டைய மக்கள் நன்கு பாதுகாக்கப்பட்ட நீரைப் பயன் படுத்தினர் என்பதையும் அவர்களது வடி குழாய் அமைப்புகளையும் நாம் அறியும் வண்ணம் பல அளவுகளில் சுடுமண் குழாய்கள் வரிசையாகக் கிடைத்துள்ளன. அவற்றுள் சில 20 முதல் 25 செ.மீ வரை விட்டம் உள்ளனவாகக் காணப்படுகின்றன.

சிறிய சுடுமண் உருவங்கள் :

மேற் சொன்ன சுடுமண் பொருட்களேயன்றி சேந்த மங்கலம் அகழாய்வில் விளையாட்டிற்குப் பயன்படுத்தும் சொக்கட்டான் காய்களும், சுடுமண் தாயக் கட்டைகளும், சுடுமண் மணிகளும் கிடைத்துள்ளன. சுடுமண் புகைப் பான்களும் சிறுவர்கள் விளையாடும் வட்டச்சில்லுகளும், சிறுவர்களின் வண்டிச் சக்கரங்களும் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் கிடைத்தன.

சேந்த மங்கலம் அகழாய்வில் நீரூற்றுக் குழாய்கள் (Spouts) நூற்றுக் கணக்கில் கிடைத்துள்ளன. ஒரு மிருகத்தின் கொம்பு போன்ற பகுதியும் சுடுமண்ணால் ஆன கூரை ஓடுகளும் குறிப்பிடத் தக்க தொல் பொருட்களாகும். கருப்பு நிறத்தில் பல அளவுகளில் முன் பகுதி அழகுபடுத்தப்பட்ட காதணிகள் சேந்த மங்கலத்தில் கிடைத்துள்ளன. இங்கு 19.5 செ.மீ நீளமும் 5.4 செ.மீ அகலமும் உள்ள சுடுமண் கூரை ஓடுகள் ஒன்பது கிடைத்துள்ளன.

இவ்வாறு சேந்தமங்கலம் அகழாய்வில் கி.மு. முதல் இரண்டு நூற்றாண்டு முதல் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுவரை உள்ள கால கட்டங்களில் செய்யப்பட்ட பல்வேறு வகையான சுடுமண் பொருட்கள் கிடைத்துள்ளன. அவற்றைக் கொண்டு நம்மால் அக்காலமக்களின் பொருளாதார நிலை, வாழ்க்கை முறை சமய வழிபட்டு நெறிகள், கலை வளர்ச்சி முதலியவற்றை நன்கு உணர இயலும்.

9. தொன்மைச் சிறப்பில் மதுராந்தகம் வட்டம்

கோ. திருமூர்த்தி, சென்னை

'மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்ற ஊரே இன்று மதுராந்தகம் என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இதனைத் தலைமையிடமாகக் கொண்டு இன்றமைந்த மதுராந்தகம் வட்டம் இக்கட்டுரை ஆசிரியரால் ஊர்வாரியாகக் களஆய்வு செய்யப்பட்டது[1]. இப்பகுதி கற்காலம் தொட்டு அனைத்துப்பண்பாடுகளையும் பெற்று விளங்குவது ஆய்வில் அறியப்பட்டது.

பழங்கற்காலம்

இன்றைக்கு ஏறத்தாழ 5,00,000 - 50,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பிளைத்தோசீன் (Middle Pleistocene) காலத்தில் மனித நாகரீகத்தின் முன்னோடியான முதற்பழங்கற்காலத்திய பண்பாடு மலர்ந்தது. உணவுக்காக அங்கும், இங்கும் அலைந்து திரிந்து, நாடோடியாக வாழ்ந்த இக்காலத்திய மனிதன் விட்டுச் சென்ற கூழாங்கற்களினாலான (Quartzite) கைக் கோடரிகள், வெட்டுக்கத்திகள் இவ்வட்டத்தில் வள்ளுவபாக்கம், அச்சரபாக்கம் ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அச்சூலியன் தொழிற்கூடத்தைச் சேர்ந்த இக்கற்கருவிகள் சிறு ஓடைகளின் பக்கங்களிலும் கிடைத்துள்ளன என்பது அறியத்தக்கதது[2]. மனித அறிவு சற்றே வளர்ச்சியடைந்த இடைப்பழங்கற்காலத்திய (50,000 - 20,000 ஆண்டுகள்) கற்கருவிகள் செதில் கற்களிலிருந்து செய்யப்பட்டவை. வெட்டுக்கத்திகள், கிழிப்பான்கள், துளைப்பான் போன்ற இடைப்பழங்கற்காலத்திய கற்கருவிகள் குறிப்பாக வெள்ளப்புத்தூர், செங்காட்டூர், சூரை, நீலமங்கலம், சாஹுர், மங்கலம், குன்னத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள மலையடி வாரத்திலும், ஓடைப்படுகையிலும் காணப்படுகின்றன. பழங்கற்காலத்தின் முடிவான கடைப்பழங்கற்காலத்திய (20,000 - 10,000 ஆண்டுகள்) கற்கருவிகள் சிறியதாகவும், நேர்த்தியாகவும் செய்யப்பட்டன. இருபக்கமுனை கருவிகளே அதிகமாக விளங்கும் இக்காலத்திய கற்கருவிகள் பல்வேறு ஊர்களில் காணப்பட்டாலும் அச்சரபாக்கம், அவிரிமேடு, ஆனைக்குன்னம், ஒரத்தி, ஐ.எண்டத்தூர் போன்ற ஊர்களே குறிப்பிடத்தக்கனவாகும்.

இடைக்கற்காலம்

சீரான தட்பவெப்பம் போன்ற மனிதனுக்கு ஏற்ற சூழ்நிலைகள் முதன் முதலாக நிலவிய ஹாலோசீன் (Holocene) (8000 - 2000

ஆண்டுகள்) என்னும் புவியியல் காலத்தின் தொடக்கமான இடைக்கற்காலத்தில் மனித அறிவாற்றல் மிகவும் வளர்ச்சியடையந்திருந்தது. எனவே பெரிய கற்கருவிகள் நிலைமாறி மிகச்சிறிய கூர்மையான நுண்கற்கருவிகள் செய்யப்பட்டன. சுமார் 0.5 செ.மீ முதல் 2 செமீ நீளமுடையவை இவை. இருபக்க முனை கருவிகள், துளைப்பான், கூர்முனைக்கருவிகள் ஆகியன அச்சரபாக்கம், பள்ளிபேட்டை, மங்கலம், கீழ்வலம், சூரை, நல்லாமூர், ஆனைக்குன்னம் போன்ற ஊர்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கல்மரத்தினால் ஆன நுண்கற்கருவிகளும் கிடைத்துள்ளன. அச்சரபாக்கம் நுண்கற்கருவிகள் செய்யும் தொழிற்கூடமாகவும் விளங்கியுள்ளது.

புதியகற்காலம்

கி.மு. 2500 முதல் 800 வரையிலான புதியகற்காலம் மனித வரலாற்றில் மிகவும் புரட்சிகரமான தாகும். வீடுகட்டி ஓரிடத்தில் நிலையான வாழ்க்கை, உணவுக்காக அங்குமிங்கும் அலையாது பயிர்த்தொழில் செய்தல், ஆடு, மாடுகளை வளர்த்தல், மட்பாண்டங்கள் செய்தல் போன்றவை மனிதன் நிகழ்த்திய அரும்பெருஞ்சாதனை களாகும். நாகரீகம் முற்றிலும் வளர்ச்சியடைந்தாலும் கற்கருவிகளின் பயன்பாடு இக்காலத்திலும் தொடரப்பட்டது. மெருகேற்றப்பட்ட முக்கோண வடிவிலான கற்கோடரிகள், தேய்ப்பான் போன்றவைகளும், அதற்கும் சற்று முந்திய (Pre-Neolithic Stage) காலத்திய மெருகேற்றப்படாத கற்கோடரிகளும் ஒரத்தி, ஆனைக்குன்னம் ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப்பட்டுளளன. மேலும் கையால் செய்யப்பட்ட சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்த பானை ஓடுகளும் ஒரத்தியில் கிடைத்துள்ளன. எனவே ஒரத்தி புதிய கற்கால ஊரிருக்கையாகவும் விளங்கியிருத்தல் வேண்டும்.

இரும்புக்காலம்

கி.மு. 1000 முதல் கி.பி. 100 வரையிலான இக்காலத்தில் தான் இரும்பின் பயன் அறியப்பட்டது. எனினும் பெருங்கற்படை ஈமச்சின்னங்களே பிரதானமாக விளங்குவதால் பெருங்கற்படைக் காலம் என்றே பொதுவாக அழைக்கப் படுகிறது. இக்காலத்தில் கையாலும், சக்கரத்தாலும் செய்யப்பட்ட கறுப்பு சிவப்பு மட்கலன்கள் முக்கியமானவை. பளபளப்புடன் விளங்கும் இத்தகைய மட்கலன்கள் வடக்கத்திய கறுப்பு மட்கலன்களோடு (B) பெரிதும் ஒத்துள்ளவை. இது தவிர கறுப்பு மட்கலன்களும், சிவப்பு மட்கலன்களும். இரும்பினால் ஆன கத்தி, அரிவாள், விளக்கு, கொக்கி போன்றவைகளும் காணப்படுகின்றன. மட்பாண்டங்களில் சடங்கு சம்மந்தமான மிகச்சிறிய மட்கலன்களே சிறப்பானதாகும்.

பெருங்கற்படை ஈமச்சின்னங்களுக்குப் பெயர் பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வட்டத்திலும் கல்வட்டம், கல்பதுக்கை, கற்கிடை, தாழிபுதைப்பு, குத்துக்கல் போன்ற வகைகளைச் சேர்ந்த ஈமச்சின்னங்கள் பரவலாக காணப்படுகின்றன. குறிப்பாக அச்சரப்பாக்கம், சீத்தாபுரம், கடமலைபுத்தூர், பெரும்பேர், பள்ளிபேட்டை, ஆனைக் குன்னம், கருங்குழி, வையாவூர், கழனிபாக்கம், தண்டலம், மூசிவாக்கம், மலைவையாவூர், மாம்பட்டு, பள்ளியகரம், சானூர், கூடலூர், வள்ளுவபாக்கம், மோகல்வாடி, நீலமங்கலம், பெருவழி, சிலாவட்டம், வேடந்தாங்கல், ஐ. எண்டத்தூர், குன்னத்தூர், முன்னகுளம், சேனையநேரி, அரசர் கோயில், மெய்யூர் ஆகிய ஊர்களில் ஈமச்சின்னங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. கூடலூரில் 0.80 மீ விட்டமுடைய மிகச்சிறிய கல்வட்டம் அறியப்பட்டுள்ளது. இங்குள்ள கற்பதுக்கைகளில் மூடிக்கற்கள் (Cap Stone) மிகப்பெரியதாக காணப்படுகின்றன. மாம்பட்டு என்னும் ஊரில் உள்ள கற்பதுக்கையின் மூடிக்கல் சுமார் 8.00 மீ விட்டமுள்ளது. பெருவழி, கொளத்தூர் ஆகிய ஊர்களில் குத்துக்கல் வகை ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த ஈமச்சின்னங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் இரும்புக்கசடுகளும் பரவிக் கிடக்கின்றன. இந்த ஈமச்சின்னங்களெல்லாம் ஏரி போன்ற நீர்நிலைகளுக்கு அருகிலேயே காணப்படுவது நோக்கத்தக்கதாகும்.

ஈமச்சின்னங்கள் எண்ணற்ற ஊர்களில் காணப்பட்டாலும் இரும்புக்கால ஊரிருக்கைகள் மட்டும் ஐ. எண்டத்தூர், குன்னத்தூர், முன்னகுளம், சேனையநேரி ஆகிய ஊர்களில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முன்னகுளம் என்னும் ஊர் இரும்பை உருக்கும் இடமாக இருந்திருக்க வேண்டும். கழனிபாக்ம், ஆனைக்குன்னம் ஐ. எண்டத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள ஈமச்சின்னங்கள் மட்டுமே எவ்வித சிதைவுகளில்லாமல் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான ஊர்களில் உள்ள ஈமச்சின்னங்கள் பாதியாகவோ அல்லது முற்றிலுமாகவோ பல்வேறு காரணங்களுக்காக அழிக்கப்பட்டுள்ளன. பெரும்பேர், கடமலைபுத்தூர், சானூர் ஆகிய ஊர்களில் உள்ள ஈமச்சின்னங்கள் அகழாய்வு செய்யப்பட்டு பெருங்கற்படை ஈமச்சின்னங்கள் பண்பாடு பற்றிய போதிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஐ. எண்டத்தூரில் உள்ள கற்பதுக்கை ஒன்று வழிபாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுத் தொடக்க காலம்

பொதுவாக சங்க காலம் என்றும் அழைக்கப் பெறும் கி.மு. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வரையிலான இக்காலத்தில்

மக்கள் தொகை பெருகியது. ஊர்களும், நகரங்களும் பெருகின. கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியினால் சமூக வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. செங்கற்களால் கட்டப்பட்ட வீடு, உறைகிணறு, கொள்கலன்கள், பல வண்ணங்கள் மற்றும் பல வகைகளை யுடைய மட்பாண்டங்கள், சங்கு, தந்தம், எலும்பு, சுடுமண்ணஅ செம்பு போன்றவற்றினாலான அணிகலன்கள் சுடுமண் பொம்மைகள், ஆகியன கள ஆய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவ்வட்டத்தில் திருமுக்காடு, நெடுங்கால், விளாங்காடு, கிணியாநகர், மெய்யூர், சம்பாதிநல்லூர், புலிப்பரக்கோயில், ஈசூர் போன்ற ஊர்களில் காணப்படும் வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சேர்ந்த ஊர்ருக்கைகள் சில 25 அடி உயரமுடைய மண்மேடுகளாகவும் உள்ளன.

இடைக்காலம்

கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரையிலான இக்காலத்தில் மட்பாண்ட ஒடுகளும், தொல் பொருட்களும் பெரும்பாலான ஊர்களில் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது நவாபு காலத்திய பளபளப்பாக்கப்பட்ட, பலவித வண்ணங்களைவுயுடைய கண்ணாடி போலத் திகழும் (Glazed ware) மட்பாண்டங்களாகும். சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு வண்ணங்களை யுடைய மட்பாண்டங்கள் காட்டுக் கூடலூர், காட்டுக்கரணை, நேமம், கிளியாநகர், மாத்தூர், கூடபாக்கம், மதுரை ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மட்பாண்டங்களை சுடப்பயன்படுத்தப்பட்ட அடுப்பு ஒன்று கூடபாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரப்பேடு என்னும் ஊரில் முகலாய மன்னர் ஔரங்கசீபின் செப்புக் காசு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

வரலாற்றுச் சின்னங்கள்

கோயில்களே இங்கு காணப்படும் பிரதான வரலாற்றுச் சின்னங்களாகும். சோழர் காலத்தில் எண்ணற்ற கோயில்கள் கட்டப்பட்டன என்றாலும் கற்றளியாக மாற்றப்பட்ட பல்லவர் காலத்திய கோயில்களும் அவற்றுள் அடங்கும் குறிப்பாக அச்சரப்பாக்கம், மதுராந்தகம், குமாரவாடி, அனந்தமங்கலம், கடப்பேரி, பெரும்பேர், புக்கத்துறை, ஒரத்தி, புலிப்பரக் கோயில், அரசர்கோயில், செய்யூர், பரமேஸ்வரமங்கலம், பாதிரி, திருமுக்காடு, பட்டூர், கீழ்வலம், முருங்கை ஆகிய ஊர்களில் உள்ள சிவன் மற்றும் விஷ்ணு கோயில்கள் கட்டடக்கலை, சிற்பக்கலை, கல்வெட்டு ஆகியவற்றோடு வரலாற்றை எடுத்துக்கூறும் காலக்கண்ணாடிகளாகத் திகழ்கின்றன. புலிப்பரக்கோயில், பழையனூர், பட்டூர், மாமண்டூர் ஆகிய ஊர்களில் உள்ள தூங்கானை வடிவ கோயில்கள் பழமை அறிகுறிகளின்றிப் புதுப்பிக்கப்பட்டிருந்தா லும், அவை பல்லவர் காலத்தியவை என்பதை

நினை வூட்டுகின்றன. ஒரத்தியில் சமணர் கற்படுக்கைகளும், அனந்தமங்கலத்தில் சமண தீர்த்தங்கரர் புடைப்புச்சிறப்ங்களும் காணப்படுகின்றன. நவாபு காலத்திய கருங்குழி மற்றும் ஆலம்பாறை கோட்டைகள் பிற்காலத்தில் அழிக்கப்பட்டுள்ளன.

பராமரிப்பின்றி சிதைவுற்று பாழாகிப் போன கோயில்களைச் சேர்ந்த எண்ணற்ற சிற்பங்கள் குறிப்பாக சிவலிங்கம், நந்தி, துர்க்கை, கணேசர், விஷ்ணு மற்றும் தீப்பாஞ்சம்மன், சமண தீர்த்தங்கரர் சிற்பங்கள், சூலக்கற்கள், நடுகற்கள் ஆகியன ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தண்டரை, ஒரத்தூர், சின்னவெளிக்காடு, குமாரவாடி, கடமலைப்புத்தூர், சித்தாமூர், சிறுவன்குன்றம் ஆகிய ஊர்களில் உள்ள துர்க்கை புடைப்புச் சிற்பங்களும், அனந்தமங்கலம் மற்றும் ஐ.எண்டத்தூரில் உள்ள சமண தீர்த்தங்கரர் சிற்பங்களும் முக்கியமானவை. சித்தாமூர், பொற்பனன்கரனை ஊர்களில் நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தளூரில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோழிக்கான நடுகல்லும் வரலாற்றுக்கு முக்கியமானதாகும்[3].

கல்வெட்டுகள்

மொத்தம் 175 கல்வெட்டுகள் இவ்வட்டத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் குமாரவாடி, புக்கத்துறை, பாதிரி, கீழ்வலம் ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் அடங்கும். இக்கல்வெட்டுகளில் பாதிக்கும் மேற்பட்டவை வெளியிடப்படாதவையாகும். பல்லவர், ராஷ்டிரகூடர், பிற்காலப்பல்லவர், பாண்டியர், சம்புவராயர், விஜயநகர மன்னர்கள் காலங்களைச் சேர்ந்த இக்கல்வெட்டுகள் யாவும் இப்பகுதி தொடர்ச்சியாக அம்மன்னர்களது ஆளுகைக்குட் பட்டிருந்தது என்பதை உணர்த்துகின்றன. கன்னடத்திலும், தமிழிலும் பொறிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இருமொழிக்கல்வெட்டு ஒரத்தியில் காணப்படுகிறது. சோழர் காலத்தில் கோயில் நகரங்கள் உன்னத நிலையில் இருந்தன என்பதை மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம், பரமேஸ்வரமங்கலம் ஆகிய ஊர்களுக்குத் தனியூர் என்ற சிறப்பு அளிக்கப்பட்டதிலிருந்து அறியலாம். சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கடப்பேரியில் திருவெண்காடு மகாதேவர் திருக்கற்றளி எடுப்பித்தல், அச்சிறுபாக்கம் ஆட்சி கொண்டருளிய மகாதேவர் கோயிலுக்கு இரண்டாம் குலோத்துங்க சோழன் வருகை புரிந்து குலோத்துங்க சோழிசுரமுடையார் என்னும் இறைவனை நிறுவுதல், செய்யூர் புற்றிடங்கொண்டருளிய மகாதேவர் கோயிலுக்கு 90 உப்பு பாத்திகளிலிருந்து பிடி உப்பு தானமாக அளித்தல், புக்கத்துறையில் உள்ள விச்சாதிர விண்ணகராழ்வார் கோயிலுக்கு

பல்லவர் காலத்தில் தானமாக அளிக்கப்பட்ட 48 வேலி நிலம் மன்னர் படையினருக்கு ஜீவிதமாக மாற்றியதையும் அதனால் கோயிலின் அன்றாட பூசைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதையும், அந்நிலத்தை மீண்டும் கோயிலுக்கே 350 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின்னர் சோழர் காலத்தில் திருப்பி அளிக்கப்பட்டது போன்ற செய்திகளெல்லாம் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. கோழிச் சண்டையில் மாண்டு போன சேவலுக்கும் நடுகல் எழுப்பியுள்ள 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தளூர் கல்வெட்டு போன்ற அரிய செய்திகளைத் தரும் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

இவ்வாறாக மதுராந்தக வட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வு பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம், வரலாற்றுத் தொடக்க காலம், இடைக்காலம் ஆகியவற்றை தொடர்ச்சியாகக் கொண்ட வரலாற்றுச் சிறப்பினை உடைய வட்டம் என்பதனைத் தொல்பொருள் சான்றுகள் அடிப்படையில் அறிய உதவி புரிகிறது. எண்ணற்ற பெருங்கற்படை ஈமச்சின்னங்கள் மற்றும் பழமைவாய்ந்த கோயில்கள் அழிந்துள்ளமை போன்றவைகளெல்லாம் கள ஆய்வில் புலனாகின்றன. ஒரத்தியில் உள்ள புதிய கற்கால ஊரிருக்கை, புலிப்பரக்கோயில், ஈசூர், மெய்யூர் அகிய ஊர்களில் உள்ள வரலாற்றுத் தொடக்க கால மண்மேடுகள் போன்றவற்றை அகழாய்வு செய்து இவ்வட்டத்தின் தெளிவான மற்றம் விரிவான வரலாறு அறிவதற்கு இத்தகைய கள ஆய்வு துணைபுரியும்.

அடிக்குறிப்புகள்

1. இந்தியத் தொல்லியல் துறையின் ஊர்தோறும் கள ஆய்வுப் (Village to village survey work for antiquarian remains) பணியின் கீழ் மதுராந்தக வட்டம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
2. S. Nagaraju "" pre-history of South India", South Indian Studies (H.M. Nayak, B.R. Gopal ed) Mysore 1990.
3. தாமரைக்கண்ணன், 'நடுகல் கண்ட கீழ்ச்சேரிக் கோழி' தமிழ்நாடு வரலாற்றுக் கருத்தரங்கு, சென்னை 1979.

10. வடஇலங்கையில் சங்ககால நாணயங்கள் மீள் பரிசீலனை

ப. புஸ்பரட்ணம், தஞ்சாவூர்.

பண்டுதொட்டு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இருந்து வருகின்றன. இத்தொடர்புகளே தமிழகத்தில் இருந்து மக்கள் புலப்பெயர்ச்சி, அரசியல் படையெடுப்பு, வர்த்தகம், பண்பாடு என்பன இலங்கையில் ஏற்படக் காரணமாகியது. இதில் வட இலங்கையின் அமைவிடம் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களைவிடத் தமிழகத்திற்கு மிக அண்மையில் அமைந்திருப் பதால் தமிழகத்தின் செல்வாக்கை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் படிக்கல்லாக இது திகழ்ந்தது. இச்செல்வாக்கு சங்ககாலத்தில் மிகச்சிறப்பாக இருந்ததை அண்மையில் கட்டுரை ஆசிரியர் பூநகரி வட்டாரத்தில் கண்டுபிடித்த முதுமக்கள் தாழிகள், தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், நாணயங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன (புஸ்பரட்ணம் 1993). இவற்றுள் சங்ககால நாணயங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

பாண்டியர் கால நாணயங்கள்

இலங்கையில் சிறப்பாக வடஇலங்கையில் இதுவரை கிடைத்த பெரும்பாலான சங்ககால நாணயங்கள் பாண்டிய வம்சத்திற்குரிய தாகும். இதற்கு வடஇலங்கை பாண்டி நாட்டுக்கு மிக அருகில் அமைந்திருப்பது ஒரு காரணமாகும். 1917இல் போல் பீரிஸ் என்பவர் கந்தரோடையில் சில பாண்டிய நாணயங்களைக் கண்டெடுத்தார். அப்போது அறிஞர் பலர் அதைப் பாண்டியர் கால நாயணங்களாகக் கொள்ளவில்லை. அண்மையில் இரா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய நூலில் கந்தரோடையில் கிடைத்த நாணயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது (Krishnamurthy 1997 : 36). இவை தமிழகத்தில் கிடைத்த நாணயங்களோடு ஒப்பிட்டுப் பெருவழுதி நாணயங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அண்மையில் பூநகரியில் நான்கு வகையான நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் மன்னன் பெயரோ, எழுத்துகளோ காணப்படவில்லை. ஆனால் நாணயங்களில் இடம்பெற்றுள்ள சின்னங்கள் அப்படியே கந்தரோடையிலும், தமிழகத்திலும் கிடைத்த நாணயங்களை ஒத்துள்ளன. இவ்வொற்றுமையை அடிப்படையாகக் கொண்டு இங்கு கிடைத்த நான்கு வகை நாணயங்களும் பாண்டியர் வெளியிட்ட நாணயமாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாணயம் : 1 (படம் 1)

இடம் : ஈழவூர், செப்பு நாணயம், நீளம் 2.3 செ.மீ. அகலம் 2.1 செ.மீ., எடை 7.7 கிராம்.

முன்புறம் : மேல் வரிசையில் இடப்புறமாக மூன்று வளைவுள்ள முகடு, நடுப் பகுதியில் கவிழ்ந்த பிறைவடிவுள்ள கூரைக்கோயில், கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன. வலப்புறமாக மூன்று மலை, அதன் மேல் வேலியிடப்பட்ட மரம். கீழ்வரிசையில் இடப்புறமாகக் கொடிமரம், நடுப்பகுதியில் வலப்புறம் நோக்கிய யானை, வலப்புறம் வேலியிடப்பட்ட மரத்தின் தொட்டி.

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்.

நாணயம் : 2 (படம் 2)

இடம் : கல்முனை, செப்பு நாணயம், நீளம் 1.2 செ.மீ. அகலம் 0.9 செ.மீ. எடை 1.7 கிராம்.

முன்புறம் : இடப்புறம் நோக்கிய யானை

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்.

நாணயம் : 3 (படம் 3)

இடம் : மண்ணித்தலை, செப்பு நாணயம், நீளம் 1.2 செ.மீ. அகலம் 0.9 செ.மீ. எடை 1.4 கிராம்

முன்புறம் : இடப்பக்கம் நோக்கிய யானை

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்

நாணயம் : 4 (படம் 4)

இடம் : மண்ணித்தலை, செப்பு நாணயம், நீளம் 2.4 செ.மீ. அகலம் 2.0 செ.மீ. எடை 7.9 கிராம்.

முன்புறம் : யானை, மேற்பகுதியில் கும்பம், சக்கரம் ஆகிய எண்மங்கலப் பொருட்களின் உருவம், யானையின் முன்பாக அங்குசம்.

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்

நாணயங்களின் பின்புறத்தில் மீன் குறியீட்டுச் சின்னம் இருப்பதைக் கொண்டு இவை சங்ககாலப் பாண்டியர் வெளியிட்டவை யென நிச்சயிக்க முடிகிறது. நாணயங்களின் முன்புறத்தில் உள்ள யானை, கூரைக்கோயில், அங்குசம், சக்கரம், முகடு, மலை, கும்பம் என்பன இந்திய நாணயங்களில் காணப்படுகின்ற பொதுச் சின்னமாக இருப்பினும்

சங்ககால நாணயங்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவை அக்காலச் சமய வாழ்வு, பொருளாதாரம், படையமைப்பு, கலையுணர்வு என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவ்வகை நாணயங்கள் சங்ககாலத்தில் கி.மு. 3ஆம், 2ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பட்டிருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை வட இலங்கையில் சமகாலத்தில் அல்லது சில ஆண்டுகள் கழித்துப் புழக்கத்தில் இருந்திருக்கலாம்.

சோழர் நாணயங்கள்

தமிழகத்திற்கு வெளியே தாய்லாந்தில் சோழ நாணயம் கிடைத்துள்ளது. (Shanmugam 1994 - 95 : 100). இதையடுத்து அண்மையில் வட இலங்கையில் பூநகரி வட்டாரத்தில் இரு நாணயங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்றில் இடம் பெற்றுள்ள புலியுருவம் சோழ நாணயங்களில் வழக்கமாக இடம்பெறும் இடப்பக்கம் நோக்கி நிற்கும் நிலைக்கு மாறாக வலப்பக்கம் திரும்பியுள்ளது. மற்றைய நாணயம் தமிழ்நாட்டில் கிடைத்துவரும் அதே வடிவத்தை ஒத்துள்ளது. அதன் விபரம் வருமாறு :

இடம்	:	பள்ளிக்குடா
உலோகம்	:	செப்பு
அளவு	:	1.1 x 1.7 செ.மீ.
எடை	:	1.9 கிராம்
முன்புறம்	:	யானை, தேரின் சக்கரம்
பின்புறம்	:	இடப்புறம் திரும்பி நிற்கும் புலி வாயைப் பிளந்த நிலையில் வாலை உயர்த்தி நிற்கிறது.

மேற்கூறப்பட்ட பாண்டிய, சோழ நாணயங்களில் இருந்து சங்ககாலத்தில் வட இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான தொடர்பு புலனாகிறது. ஒரு நாட்டில் வெளியிடப்பட்ட நாணயம் இன்னொரு நாட்டில் புழக்கத்தில் இருப்பதற்கு வர்த்தகம் ஒரு முக்கிய காரணமாக இருப்பினும் இலங்கையில் சங்ககால நாணயங்கள் புழக்கத்தில் இருந்தமைக்கு வர்த்தகத்தோடு அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளும் காரணமாக இருந்துள்ளன. இத்தொடர்புகள் பெரும்பாலும் வட இலங்கையூடாக நடந்ததற்கே சான்றுகள் உண்டு. இதில் மாதோட்டம் முக்கிய வர்த்தகத் துறைமுகமாகத் திகழ்ந்தது. ஆனால் இதுவரை இங்கு கிடைக்கப்பெறாத சங்ககால நாணயங்கள் மாதோட்டத்தின் வட எல்லையில் உள்ள பூநகரி வட்டாரத்தில் கிடைத்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இலங்கை மன்னர் வெளியிட்ட நாணயங்கள்

சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த மேலும் சில நாணயங்கள் பூநகரிப் பிராந்தியத்தில் கிடைத்துள்ளன. இவற்றுள் சில தமிழ்நாட்டின் முக்கிய வர்த்தக மையமான கரூரில் அரிதாகவும், இலங்கையில் பரவலாகவும் கிடைத்துள்ளன. இவற்றுள் நான்கு வகை நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. இவ்வகை நாணயங்கள் இதுவரை தமிழகத்தில் கிடைத்ததற்கு ஆதாரம் இல்லை[1]. இவற்றில் இடம் பெற்றுள்ள சின்னங்களை மேலோட்டமாகப் பார்த்தால் அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை வருமாறு :

நாணயம் : 5 (படம் 5)

இடம் : பள்ளிகுடா, செப்பு நாணயம், நீளம் 1.5 செ.மீ. அகலம் 1.3 செ.மீ. எடை 2.3 கிராம்.

முன்புறம் : கவிழ்ந்த பிறைவடிவுள்ள ஐந்து தூண்கள் தாங்கி நிற்கும் கூரைக்கோயில்.

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்.

நாணயம் : 6 (படம் 6)

இடம் : வீரபாண்டியன் முனை, செப்பு நாணயம், நீளம் 1.6 செ.மீ. அகலம் 1.4 செ.மீ. எடை 2.0 கிராம்.

முன்புறம் : ஸ்ரீவத்ஸம்

பின்புறம் : மீன் குறியீட்டுச் சின்னம்.

நாணயம் : 7 (படம் 7)

இடம் : ஈழவூர், செப்பு வட்ட நாணயம் குறுக்களவு 7.9 செ.மீ. எடை 2.6 கிராம்.

முன்புறம் : குதிரை வலப்புறம் நோக்கி நின்று கொண்டிருக்கிறது. குதிரையின் மேல் அரைவட்டம். குதிரையின் முகத்திற்கு நேரே தூண் ஒன்றும், அதன்மேல் தொட்டி போன்ற உருவமும் உள்ளது. குதிரையின் வால் பகுதிக்கு சமாந்தரமாக மரக்கிளை ஒன்று.

பின்புறம் : யானை வலப்புறம் நோக்கி நின்று கொண்டிருக்கிறது. யானையின் வால்பகுதியில் இருந்து தும்பிக்கை வரை இரட்டைக்கோடு செல்கிறது.

நாணயம் : 8 (படம் 8)

இடம் : வீரபாண்டியன் முனை. செப்பு நாணயம், நீளம் 1.6 செ.மீ. அகலம் 1.3 செ.மீ. எடை 2.3 கிராம்.

முன்புறம் : இடப்புறம் நோக்கிய காளை, முகத்திற்குக் கீழே கும்பம்

பின்புறம் : நான்கு புள்ளிகள் அதைச்சுற்றி வட்டம், வட்டத்திற்கு வெளியே இரு சதுரக் கோடுகள், அவற்றின் நடுவே புள்ளிகள்.

5, 6ஆம் நாணயங்களின் பின்புறத்தில் உள்ள மீன் குறியீட்டுச் சின்னம் பாண்டியவம்சத் தொடர்பைக் காட்டுகிறது. ஆனால் முன்புறத்தில் உள்ள கூரைக்கோயில், ஸ்ரீவத்ஸம் என்பன சங்க கால நாணயங்களில் பிற சின்னங்களுடன் இணைந்தே வருகின்றன. எந்த ஒரு நாணயத்திலும் இவை தனியொரு சின்னமாக இடம் பெற்றதற்குத் தமிழ்நாட்டில் ஆதாரம் காணப்படவில்லை[2]. இதில் இடம்பெற்றுள்ள தாய்த் தெய்வ வழிப்பாட்டின் பழைய வடிவமான ஸ்ரீவத்ஸம் தமிழ்நாட்டில் பெருங்கற்காலப் பண்பாட்டில் கல்லில் செதுக்கப்பட்ட உருவமாகவும் (சுப்பிரமணியன் 1996 : 109 - 112), இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் குறியீட்டுச் சின்னமாகவும் பெறப்பட்டுள்ளது (Paranavitana 1970 : No. 268). இதன் இன்னொரு வடிவம் தான் இலங்கையில் வெளியிடப்பட்ட லட்சுமி நாணயம் எனக் கொள்ளலாம். 7வது நாணயத்தின் முன்புறத்தில் குதிரையும், பின்புறத்தில் யானையும் முக்கியச் சின்னங்களாக இடம் பெற்றுள்ளன. இங்கு குதிரையும், வால்பகுதிக்கு சமாந்தரமாகச் செல்லும் மரக்கிளையும் குதிரையின் முகத்திற்கு முன்னால் உள்ள தொட்டியும், தூணும் மலையமான் மன்னர் வெளியிட்ட நாணயங்களில் அப்படியே வருகின்றன (Krishnamurthy 1997). ஆனால் பின்புறத்தில் யானைக்குப் பதிலாக அவர்களின் குலக்குறியான ஆற்றுச் சின்னம் இடம் பெற்றுள்ளது. இந்த வேறுபாடு பூநகரியில் கிடைத்த நாணயம் தனித்துவம் வாய்ந்ததாகக் கருத இடமளிக்கிறது.

எட்டாவது நாணயத்தின் முன்பக்கத்தில் காளை உருவம் முக்கியச் சின்னமாக இடம் பெற்றுள்ளது. சங்ககால முத்திரை நாணயங்களிலும், சோழர், பாண்டியர் கால வார்ப்பு நாணயங்களிலும் இவ்வுருவம் பிற சின்னங்களுடன் சேர்ந்து காணப்படுகிறது. அண்மையில் அழகன்குள அகழ்வாய்விற் கிடைத்த சதுரமான செப்பு நாணயத்தில் பூநகரியில் கிடைத்த நாணயத்தைப்போல் காளையுருவம் முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது (காசிநாதன் 1995 : 21). ஆனால் பின்பக்கத்தில் பாண்டியரின் மீன் குறியீட்டுச் சின்னம் இடம் பெற்றுள்ளது. இந்த அம்சம்

பூநகரியில் கிடைத்த நாணயத்தில் இருந்து வேறுபடுகிறது. இலங்கையில் காளையுருவம் பொறித்த சதுர நாணயம் வேறுசில இடங்களிலும் கிடைத்துள்ளன. இவற்றில் உள்ள காளையுருவம் பல்லவ நாணயங்களிலும் காணப்படுவ தால் பல்லவத் தொடர்பால் இலங்கை வந்திருக்கலாம் என்ற கருத்துண்டு (சிற்றம்பலம் 1993 : 501). இக்கருத்து பொருத்தமாகத் தெரியவில்லை. இதுவரை தமிழகத்தில் கிடைத்த பெரும்பாலான பல்லவ நாணயங்கள் வட்டவடிவில் உள்ளன. சதுரவடிவில் நாணயங்களில் வெளியிட்ட மரபு சங்க காலத்திற்கு உரியது. பல்லவமன்னர் வெளியிட்ட நாணயத்தின் முன்புறத்தில் காளை உருவத்தோடு பகாபிடுகு, ஸ்ரீநிதி, வபு, ஸ்ரீபரமே, சங்கீத, பூழி, ஸிகோச போன்ற மன்னர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. நாணயத்தின் பின்புறத்தில் சங்கு, சக்கரம், கூட்டல்குறி, நண்டு, கப்பல், மீன், விளக்கு சைத்தியம் போன்ற உருவங்கள் இடம் பெற்றுள்ளன (காசிநாதன் 1995 : 52-8). ஆனால் பூநகரியில் கிடைத்த 8வது நாணயத்தின் பின்புறத்தில் நான்கு புள்ளிகளைச் சுற்றி ஒரு வட்டமும், வட்டத்திற்கு வெளியே இரு நேர்கோடுகளாலான சதுரமும் காணப்படு கின்றன. இவ்வகை நாணயம் தமிழகத்தில் இதுவரை கிடைக்க வில்லை. ஆனால் இலங்கையில் சிங்க உருவம் பொறித்த நாணயத்தின் பின்பக்கத்தில் இச்சின்னங்கள் காணப்படுகின்றன (Codrington 1924 : 24). இவற்றை நோக்கும் போது நாணயத்தின் பின்பக்கத்தில் இடம் பெற்றுள்ள நான்கு புள்ளிகளும், அதைச் சுற்றிய வட்டமும், வட்டத்திற்கு வெளியே வரும் சதுரமும் இலங்கைக்கே உரிய மரபெனக் கூறலாம்.

சங்க காலத்தில் இலங்கைத் தமிழ் மன்னர் வெளியிட்ட நாணயங்கள் :

பூநகரியில் கிடைத்த நான்கு நாணயங்களும் மூவேந்தரும், குறுநில மன்னரும் வெளியிட்ட நாணயங்களில் இருந்து வேறுபட்டாலும், அவை சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வகை நாணயங்கள் தமிழகத்திலும் இந்தியாவின் பிற பாகங்களிலும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை இலங்கையில் வெளியிடப்பட்டவை எனக் கூற இடமுண்டு. இலங்கை இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும் பண்பாட்டில் சுதேச அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அவை நாணயங் களிலும் இருந்துள்ளன. இலங்கையில் பயன்படுத்தப்பட்ட காலத்தால் முற்பட்ட நாணயங்கள் பாளி இலக்கியங்களில் ''ஹக பாணஸ்'' எனவும் (M.V. XXI : 11.3). பிராமிக் கல்வெட்டுக் களில் ''ஹகவண்'' எனவும் கூறப்பட்டுள்ளன. (Paranavitana 1970 : No. 791). இவ்வகை நாணயங்கள் இலங்கையில் புராதன நகரங்கள், வர்த்தக மையங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. இந்நாணயங்களில் இடம் பெற்றுள்ள பௌத்தமதம், சிங்கள அரசவம்சம் தொடர்பான சின்னங்களைக் கொண்டு சில நாணயங்களைக் கி.பி. 2ஆம்

நூற்றாண்டில் வசபன், கி.பி. 4ஆம் நூற்றாண்டில் மகாசேனன் போன்ற மன்னர் வெளியிட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. சில நாணயங்கள் அடையாளம் காணப்படவில்லை. வேறு சில நாணயங்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சங்ககாலத்தில் தமிழகம் மூவேந்தராலும் குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டபோது இலங்கையில் தமிழ் சிங்கள மன்னர்களும், சிற்றரசர்களும் ஆட்சி புரிந்தனர். இதில் இலங்கையின் பலமான மைய அரசான அநுராதபுரத்தில் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது முதல் 250 ஆண்டு காலத்தை 22 மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்களுள் 10 தமிழ் மன்னர் 80 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்தனர். அதில் சேனன், குத்திகன், எல்லாளன் ஆகிய தமிழ் மன்னர் மட்டும் 60 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்தனர். பௌத்த சிங்கள வரலாற்றை மட்டும் முதன்மைப்படுத்தும் பாளி இலக்கியங்களில் தமிழ் மன்னர்களின் வரலாற்றுச் சாதனை பற்றி எதுவுமே கூறப்பட வில்லை. இந்நூல்கள் தமிழருக்கு எதிரான இன, மத உணர்வோடு வரலாற்றைக் கூறிச் செல்வதால் அவற்றில் தமிழ் மன்னர் வரலாற்றுப் பணிகள் இடம் பெற்றிருக்க வேண்டும் என எதிர்ப்பார்க்கவும் முடியாது. ஆனால் இவர்கள் ஆட்சியில் வெளிநாட்டு வர்த்தகமும் நாணயங்களின் பயன்பாடும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் முதல் தமிழ் மன்னர்களான சேனன், குத்திகன் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட சந்ததியைச் சேர்ந்தவர்கள் என மகாவம்சம் கூறுகிறது. (M.V.XXI : 10 - 3) அநுராதபுரத்தில் கிடைத்த கி.மு. 3, 2ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டு ஒன்று சுள கணேய (சோழ) என்பவன் வர்த்தகத்தை மேற்பார்வை செய்பவன் எனக் கூறுகிறது (Paranavitana 1970 : No. 1128). எல்லாளன் பௌத்த சைத்தியத்திற்கு தன்னால் ஏற்பட்ட பழுதை நிவர்த்தி செய்ய 15,000 நாணயங்களை (ஹகபாணஸ்) கொடுத்தான் என மகாவம்சம் கூறுகிறது (M.V. XXI. 11 - 3) இவை அனைத்தும் தமிழ் மன்னர் ஆட்சியில் வெளிநாட்டு வர்த்தகமும், நாணயத்தின் பயன்பாடும் இருந்ததற்குச் சான்றாகும். இப்பின்னணியில் பூநகரியிற் கிடைத்த நாணயங்களை இலங்கைத் தமிழ் மன்னர்கள் வெளியிட்டதாகக் கருத சில காரணங்கள் உண்டு.

5, 6ஆம் நாணயங்களில் காணப்படும் மீன் குறியீட்டுச் சின்னம் பாண்டிய வம்சத் தொடர்புடையது. சங்க காலத்தில் பாண்டிய வம்சம் இலங்கை மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றியதற்கு நேரடியான சான்றுகள் காணப்படவில்லை. ஆனால் சங்க காலத்திற்கு முன்பிருந்தே பாண்டிய நாட்டுடன் இலங்கைக்கு நெருக்கமான தொடர்பிருந்தது. இலங்கையின் முதல் மன்னனான விஜயன் கி.மு. 5ஆம் நூற்றாண்டில்

மன்னனாக முடி சூடிய போது அவனுக்குப் பாண்டிய மன்னன் தன் மகளையும் அவன் தோழர்களுக்கு பாண்டிய நாட்டுப் பெண்களையும், 18 தொழில் புரிந்த 1000 குடும்பங்களையும் அனுப்பி வைத்தான் என மகாவம்சம் கூறுகிறது (M.V.VIII). விஜயன் கதை ஒரு கட்டுக் கதையாக இருந்தாலும் மகாவம்சத்தின் இக்கூற்று பாண்டி நாட்டுடன் இலங்கைக்கு இருந்த தொடர்பைக் காட்டுகிறது. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சில மன்னர் பண்டுவாசுதேவன், பண்டுகாபயன் என்ற பெயர்களைப் பெற்றிருந்தனர் (M.V. VIII). அதில் வரும் பண்டு என்ற முன்னொட்டுச் சொல் பாண்டிய வம்சத்தைக் குறிக்கிறது.

முன்புறத்தில் குதிரையும் பின்புறத்தில் யானை உருவமும் உள்ள 7வது நாணயம் இலங்கைக்கேயுரிய சிறப்பம்சமாகும். இலங்கையில் குதிரை இறக்குமதிப் பொருளாகவும், யானை ஏற்றுமதிப் பொருளாகவும் இருந்துள்ளன. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் தமிழர் முக்கிய பங்கெடுத்ததற்கு போதிய சான்றுகள் இருப்பதனால் அவ்வர்த்தகத்தில் இறக்குமதிப் பொருட்களாக இருந்த குதிரையையும் ஏற்றுமதிப் பொருளாக இருந்த யானையையும் தமிழ் மன்னர் தாம் வெளியிட்ட நாணங்களிலும் பயன்படுத்தி இருக்கலாம்.

8ஆவது நாணயத்தில் இடம் பெற்றுள்ள காளை உருவம் இலங்கைத் தமிழர் வாழ்வோடு இரண்டறக் கலந்த சின்னமாகும். இச்சின்னம் பிற்காலத்தில் தோன்றிய தமிழரசின் கொடிகளிலும், நாணயங்களிலும் அரச சின்னமாக இடம் பெற்றுள்ளது. சோழர் ஆட்சி ஏற்படும் முன்னர் இலங்கையின் பௌத்த தலங்களில் வாசல்படியாக இருந்த சந்திர வட்டக் கல்லில் காளையுருவம் பிற சின்னங்களுடன் கலை வடிவமாக செதுக்கப்பட்டிருந்தது. சோழர் காளையைப் புனிதச் சின்னமாகக் கருதியதால் சந்திரவட்டக் கல்லில் இருந்து அதை நீக்கினர். சோழர் ஆட்சியின் பின்னர் சிங்கள மன்னரும் இம்முறையைப் பின்பற்றினர். நாணயத்தின் பின்புறத்தில் இடம் பெற்றுள்ள நான்கு புள்ளிகளைச் சுற்றிய வட்டம் இலங்கை மன்னர் வெளியிட்ட சிங்க உருவம் பொறித்த நாணயங்களில் காணப்படுகிறது. சிங்க உருவம் சிங்கள மன்னர்களின் முக்கிய சின்னமாக இருந்ததைப் பிற்காலச் சிங்கள மன்னர் வெளியிட்ட நாணயங்களிலும் காண முடிகிறது. ஏறத்தாழ ஒரே காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்களில் சிங்கமும், காளையும் வருவதைக் கொண்டு சிங்க உருவ நாணயங்களை சிங்கள மன்னரும், காளையுருவம் பொறித்த நாணயத்தைத் தமிழ் மன்னரும் வெளியிட்டனர் எனக் கூறலாம்.

முடிவுரை

மேற்கூறப்பட்ட நாணயங்களில் இருந்து இலங்கையில் சங்ககால மன்னர் வெளியிட்ட நாணயங்களும், இலங்கை மன்னர் வெளியிட்ட

நாணயங்களும் புழகத்தில் இருந்தன என்ற முடிவுக்கு வரலாம். இலங்கை மன்னர் நாணயங்களை வெளியிடுவதற்கு சங்ககால நாணய அச்சடிப்பு முறை முன்னோடியாக இருந்திருக்க வேண்டும். இலங்கையில் தமிழ் மன்னர் வெளியிட்ட நாணயங்களை தமிழ்நாட்டிலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ் மன்னர்கள் வெளியிட்டார்களா? அல்லது இலங்கைத் தமிழ் மன்னர்கள் வெளியிட்டார்களா? என்பதை மேலும் ஆராய இடமுண்டு. ஆனால் இவை இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் எனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகத் தெரிகிறது.

அடிக்குறிப்புகள்

1. சங்ககால நாணயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்துவரும் இரா. கிருஷ்ணமூர்த்தி, ஆ. சீதாராமன் ஆகியோர் உரையாடலின் போது கூறிய கருத்து.
2. மேற்கூறப்பட்ட இருவரும் கூறிய கருத்து.

REFERENCES

1. Codrington, H.W. *Ceylon Coins and Currency Memories of the Colombo Museum* (Colombo - 1924)
2. Geiger, W. Eng. Tr *Mahavamsa* (M.V.), London 1973.
3. Krishnamorthy, R. *Sangam Age Tamil Coins*, (Madras, 1997)
4. Mendis, G.C. "*A Comprehensive History of India*" Vol. II (Ed.) Nilakanta Sastri, K.A., (1957).
5. Paranavitana, S. "*Anuradhapura : Slab - inscription of Khuda - Parinda*" E.Z. Vol. IV P.P. 111 - 115.
6. Paranavitana, S. *Brahmi Inscriptions of Ceylon* (Colombo, 1970)
7. Shanmugam, P. "*Two Coins of the Tamil origin from Tailand*" Studies in South Indian Coins Vol. IV, (Ed.) Narasimhamurthy, 1999 : 95-100.
8. Sitrampalam, S.K. "*The Title Parumaka found in Sri Lankan Brahmi Inscriptions - A Reppraisal*"

   "*Sri Lankan Journal of South asian Studies*", Nol 1 (New Series) (Jaffna 1986 / 87), PP 13 - 25.
9. காசிநாதன், நடன. தமிழர் காசு இயல், சென்னை 1995.
10. சிற்றம்பலம், சி.க. யாழ்பாணம் தொன்மை வரலாறு, திருநெல்வேலி, 1993.
11. சீதாராமன், ஆறுமுக. தமிழகத் தொல்லியல் சான்றுகள் அண்மைக்காலக் கண்டு பிடிப்புகள், தொகுதி - 1 தஞ்சாவூர் 1996.
12. சுப்பிரமணியன் தி. ''தாய்த் தெய்வ வழிபாட்டில் ஸ்ரீவத்சம்'' ஆவணம், இதழ் 7. சூலை 1996, தஞ்சாவூர்.
13. புஷ்பரட்ணம், ப. பூநகரி - தொல்பொருளாய்வு, யாழ்பாணம், 1993.

11. தமிழகக் காசுகள்
(அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்)

ஆறுமுகசீதாராமன், தஞ்சாவூர்.

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் புறச் சான்றுகாளகவும், இலக்கியம் கருவி நூலாகவும் நமக்கு காட்சி அளிக்கின்றன. ஆய்வுத்துறையில் நாணயவியல் ஒரு முக்கிய பங்கைத் தழுவியுள்ளது. சில வரலாற்று ஆய்வுகளுக்குக் காசுகளின் பங்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைகின்றது.

'தமிழகக் காசுகள்' (அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்) என்ற இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள அனைத்து காசுகளும் என்னுடைய களப்பணியில் சேகரிக்கப்பட்டவையாகும். கிடைத்த காசுகளைப்பற்றிய அனைத்துக் கருத்துகளையும் கீழ்வரும் கட்டுரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

பல்லவர் காசு



முன்பக்கம் பின்பக்கம்

முற்காலப் பல்லவர் காசு ஒன்று திருக்கோயிலுரில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையும் பின்பக்கத்தில் சிவலிங்கம் ஒன்றும் உள்ளன உலோகம் கலப்பு உலோகம். நந்தி (காளை) இலச்சினை பொதுவாகப் பல்லவர் சைவ சமய சார்பு உடையவர் என்பதை நன்கு விளக்குகிறது.

முதலாம் மகேந்திரவர்மன் காசுகள்




முன்பக்கம பின்பக்கம

முற்காலப் பல்லவர் காசு ஒன்று கும்பகோணத்தில் கிடைத்துள்ளது. உலோகம்-கலப்புஉலோகம். காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை, காளையின் மேல் பகாபி(டு)கு' என்று கி.பி.7 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதப்பட்டு உள்ளது. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் பாத்திரம் (கெண்டி) ஒன்று உள்ளது. இந்த வகையான பாத்திரத்தை பல்லவர் காலத்து நடுகற்களில் காணலாம்.

இந்தக் காசு முதலாம் மகேந்திரவர்மனின் பகாபிடுகு என்னும் விருதுப் பெயருடன் வெளியிடப்பட்ட தமிழ்க் காசாகும். 'பகாபிடுகு' என்ற சொல்லுக்கு பகைவர் மேல் இடிபோலப் பாய்பவன் என்று பொருள் கொள்ளலாம்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்து தமிழ்க்காசு

முன்பக்கம் **பின்பக்கம்**

தஞ்சையில் கிடைத்த ஒரு தங்கக் காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி அமர்ந்திருக்கும் புலியும், அதன் இரு பக்கங்களில் குத்துவிளக்குகளும் உள்ளன. பின்பக்கத்தில் 'செதிகுல' என்று கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதப்பட்டுள்ளது. காசின் எடை 100 மி.கிராம். பிற்காலச் சோழர் காசுகளில் சிரந்தம், நாகரி மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தக் காசில் நான்கு எழுத்துக்களுமே தமிழில் உள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழனது (கி.பி. 1178 - 1218) ஆட்சிக் காலத்தில் சேதி நாட்டிலிருந்து அரசாண்ட சிற்றரசர்கள் சோழ அரச சின்னத்தைப் பொறித்து இந்தக் காசை சோழ நாட்டில் வெளியிட்டிருக்கலாம்.

மதுரைநாயக்கர் காசு




முன்பக்கம **பின்பக்கம்**

முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியில் வெளியிட்ட செப்புக் காசு ஒன்று கரூரில் கிடைத்துள்ளது. வடமொழி, தெலுங்குமொழிப்பற்றுள்ள நாயக்கர்களில் இவருக்கு தமிழ்ப்பற்றும் இருந்ததால் தன்னுடைய பெயரை 'கிட்டணப நாய(க்கர்) என்று மூன்று வரிகளில் அச்சிட்டு இந்தக்காசை வெளியிட்டுள்ளார். இந்தக் காசின் முன்பக்கத்தில் பாலகிருஷ்ணன் அமர்ந்த நிலையில் உள்ளான்.

பின்பக்கத்தில் 'கிட்டணபநாய' (க்கர்) என்று பெரிய எழுத்தில் பெயரும் காணப்படுகின்றது. எழுத்துகள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது. காசின் எடை 3.2 கிராம். இவர் மதுரையை ஆட்சி செய்த ஆண்டு கி.பி. 1564 லிருந்து 1572 வரை ஆகும்.

தஞ்சை ரகுநாத நாயக்கர் காசு



முன்பக்கம்



பின்பக்கம்

இரகுநாத நாயக்கரின் (1600 - 1634) செப்புக்காசு ஒன்று கும்பகோணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2.8 கிராம் எடையுள்ள இக்காசின் முன்பக்கத்தில் சிவலிங்கத்திற்குப் பால்பொழியும் பசுவின் உருவமும், பின்புறம் ராய ரகுனாதன் என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் உள்ளது. காசின் முன்பக்கத்தில் உள்ள உருவமைதியைச் செப்பேடுகளிலும், கோயில்களிலும் காணலாம்.

தஞ்சை அளகரி நாயக்கர் காசு



முன்பக்கம்



பின்பக்கம

அளகரி நாயக்கரின் (கி.பி.1674) செப்புக் காசு ஒன்று தஞ்சையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 3.6 கிராம் எடையுள்ள இக்காசின் முன்பக்கத்தில் பார்வதியும், சிவனும் அமர்ந்த நிலையிலும், காசின் பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'ஸ்ரீஅலகரி' என்று கன்னட-தெலுங்கு எழுத்தில் உள்ளது. தஞ்சையில் அளகிரி சுதந்திரமாக ஆட்சி செய்த ஓராண்டு காலத்தில் (கி.பி.1674) பெயரில் இச்செப்புக்காசை தஞ்சையில் வெளியிட்டுள்ளான்.

இராணி மங்கம்மாள் காசு



முன்பக்கம்



பின்பக்கம்

மதுரை நாயக்க அரசி மங்கம்மாள் (கி.பி.1689-1706) ஆட்சியில் வெளியிடப்பட்ட செப்புக்காசு ஒன்று திண்டுக்கல்லில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் கையில் வீணையுடன் சரசுவதி அமர்ந்திருக்கும் காட்சி அழகாக உள்ளது. காசின் பின்பக்கத்தில் 'மங்கமா' என்று கி.பி. பதினேழாம் நூற்றாண்டுத் தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 2.1 கிராம்.

தென்னிந்தியாவில் சரசுவதி உருவம் பொறித்த காசுகள் இதுவரை கிடைக்கவில்லை. இப்பொழுதுதான் முதன் முதலாகத் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளது. மங்கம்மாளுக்குத் தாய் மொழிப்பற்று மிகுதியாக இருந்ததால், தாம் வெளியிட்ட காசுகளில், தம் பெயரைத் தெலுங்கு மொழியிலேயே பொறித்து வெளியிட்டுள்ளார்.

சேதுபதி காசு



முன்பக்கம்



பின்பக்கம்

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் வெளியிட்ட ஒரு செப்புக்காசு திருநெல்வேலியில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் அனுமன் வணங்கும் நிலையிலும் பக்கத்தில் சிறிய செடி ஒன்றும் உள்ளது. காசின் பின்புக்கத்தில் 'செதுபதி' என்று தமிழ் எழுத்தில் உள்ளது. காசின் எடை 900மி.கிராம். தமிழ் நாட்டில் கிடைத்த சேதுபதி காசுகளில் எல்லாம் சிவன், கணபதி, முருகன் போன்ற சைவ சமய கடவுள்களையே கிடைத்தன. ஆனால் தற்சமயம் வைணவக் கடவுளாகிய அனுமன் உருவம் பொறித்த காசு கிடைத்திருப்பது வைணவ மதத்தையும் சேதுபதி மன்னர்கள் புறக்கணிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

குறிப்பு :

இங்கு எழுதப்பட்டுள்ள காசுகள் பற்றிய செய்திக் குறிப்புகள் இதற்குமுன் தினமணி, ஆவணம், வரலாறு ஆகிய இதழ்களில் அவ்வப்போது இக்கட்டுரை ஆசியரால் வெளியிடப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் அவை ஒன்று சேர்த்துத் தரப்பட்டுள்ளன.


ஒளிப்படங்கள்

(எண்கள் - கட்டுரை எண்களைக் குறிப்பன.)



படம் - 1

படம் - 2




3. மண்ணில் மறைந்த நகரங்கள் முட்டமும் பேரூரும்.

படம் - 2



3. மண்ணில் மறைந்த நகரங்கள் முட்டமும் பேரூரும்.





படம் - 4அ


படம் - 4ஆ





படம் - 4இ

படம் - 3



படம் - 5

3. மண்ணில் மறைந்த நகரங்கள் முட்டமும் பேரூரும்.



படம் - 6

படம் - 7


3. மண்ணில் மறைந்த நகரங்கள் முட்டமும் பேரூரும்.




கணபதி - மேல் வெண்மணி.




சமையல் காட்சி.



படம் - 1



படம் - 2




படம் - 3


10. வடஇலங்கைச் சங்க நாணயங்கள்.



படம் - 6




படம் - 5




படம் - 4

10. வடஇலங்கைச் சங்க நாணயங்கள்.




படம் - 7



படம் - 8

10. வடஇலங்கைச் சங்க நாணயங்கள்.



12. எழுத்துப் பொறித்த சுடுமண் ஏடுகள் - பேரூர்.



12. எழுத்துப் பொறித்த சுடுமண் ஏடுகள் - பேரூர்.











முன்புறம் பின்புறம்



12. எழுத்துப் பொறித்த சுடுமண் ஏடுகள் - பேரூர்.

முன்புறம் பின்புறம்

சிந்துவெளி எழுத்தின் வளர்ச்சி
[பிராமிக்கு முந்தைய தமிழ் எழுத்துக்கள்]

எழுத் தொலிப்பு	படவெழுத்து	படத்தின் பெயர் — பெயர்	படத்தின் பெயர் — குறிக்கும் எழுத்து	கோட்டு எழுத்து — சிந்துவெளி அசையெழுத்து / தமிழி தமிழ்(அ) பிராமி	மூலச்சான்று முத்திரை அல்லது வெட்டெழுத்து
அ ஆ		ஆண்	அ ஆ		பெருமுக்கல கல்லெழுத்து அரப்பன்
இ ஈ		ஈ	FT·		ஆலம் பாறை பாறை ஓவிய எழுத்து தமிழ்நாடு அரப்பன்
உ ஊ		உல்லரி (தளிர்)	உ ஊ		அரப்பன் அரப்பன்
எ ஏ ஐ		ஏணி ஏற்றம் (ஆள்+ஈ)	ஏ ஏ ஐ(அகி		அரப்பன் அரப்பன்
ஒ ஓ ஔ		ஒலியல் (தோகை) (ஆள் + உல்லரி)	ஒ ஓ ஔ (அஉ		அரப்பன் அரப்பன் அரப்பன் அரப்பன்

14- முந்துதமிழி எழுத்துச்சான்றுகள்

14. முந்து தமிழி எழுத்துச் சான்றுகள்.




21. திருநெடுங்குளம் கணபதி கோயிலும் சிற்பமும்.




38. அரசூர் தென்மங்கலம் ஐயனார் சிற்பங்கள்






38. பாண்டூர், பிடாகம் ஐயனார் சிற்பங்கள்



34. செத்தவரை தொல்பழங்கால ஓவியம்.



39. சிதம்பரம் சிவகாமி அம்மன்கோயில் ஓவியமும் கல்வெட்டும்.



33. சறுக்குமலை நிருபதுங்கன் கல்வெட்டு.



48. சிதம்பரம் நந்தனார் சிற்பம்.



59. மருதுபாண்டியர் சமாதி.

12. பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சுடுமண் ஏடுகள்

கு.தாமோதரன்,
இயக்குநர்
தொல்பொருளாய்வுத் துறை

தமிழ்நாட்டில் பண்டைய தமிழ் எழுத்துக்கள் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களிலும், பானை ஓடுகளின் மீதும், காசுகளின் மீதும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான பண்டைய தமிழ்க் கல்வெட்டு மாங்குளத்தில் கிடைத்துள்ள நெடுஞ் செழியன் கல்வெட்டாகும். (கி.மு.3-ஆம் நூற்றாண்டு). அரிக்கமேடு, அழகரை, உறையூர், காஞ்சிபுரம், கொற்கை, அழகன்குளம், கொடுமணல், கரூர் ஆகிய இடங்களில் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறித்த பானையோடுகள் கிடைத்துள்ளன. சுடுமண் ஏடுகளின் மீதும், சுடுமண் பொம்மைகள் மீதும், நாக சிற்பத்தின் மீதும்,அம்மியின் மீதும் பண்டைய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டுள்ளன.

பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சுடுமண் ஏடுகள் முதன்முதலில் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் போளுவாம்பட்டி-நாணயவியலார், புலவர், ஐ. இராமசாமி அவர்களால் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூரை அடுத்த பேரூரில் உள்ள திரு. பெ. கருப்புசாமி என்பவர் பண்டைய தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்ட சுடுமண் ஏடுகளை அதிக அளவில் சேகரித்துள்ளார். இவரிடமிருந்து இவ்வரிய தொல்பொருட் களைக் கோவை காப்பாட்சியர் இரா. பூங்குன்றன் அவர்கள் சேகரித்து இத்துறைக்கு அளித்துள்ளார்.

சுடுமண் பொம்மைகள்

கிராமப்புற கலைப்பாணியில் வடிக்கப்பட்டுள்ள இரண்டு சுடுமண் பொம்மைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று பெண் உருவம், மற்றது ஆண் உருவமாகும். பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ள இப்பெண் உருவத்தின் உயரம் 33 செ.மீ. இதில் எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை. வலது கையில் நாகத்தின் கழுத்தைப் பிடித்த நிலையிலும், நாகம் தொங்கும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இடது கை இடுப்பில் வைத்தவாறு வடிக்கப்பட்டுள்ளது. தலைப்பகுதியில் நாகம் காட்டப் பட்டுள்ளது. கழுத்தினை ஒட்டி இரண்டு பக்கங்களில் இரண்டு துவாரங்கள் உள்ளன.


எழுத்து பொறிக்கப்பட்ட ஆண் சுடுமண் பொம்மை



இதன் உயரம் 33 செ.மீ. அகலம் 16 செ.மீ வலது கையில் வேல் ஏந்தியும், இடது கையைத் தொடை மீது வைத்தும் பீடத்தின் மீது நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. தலையில் தலைப்பாகையும், காதில் தடித்த அணியும், கழுத்தில் பட்டையான கழுத்தணியும், மேற்கை முன்கை வளையும், மேற்கை தோளில் கடகம், இடையில் முழங்காலுக்குக் கீழ் வரை ஆடையும், காலில் தண்டையும் அலங்கரிக்கின்றன. இந்த சுடுமண் பொம்மையின் பின்பக்கத்தில் வழவழப்பாகச் செய்யப்பட்டுள்ள பலகை போன்ற பகுதியில் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொறிப்பில் அசோகன் பிராமி எழுத்துக்கள் இடையிடையே காணப்படுகின்றன.

எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நாகச் சிற்பம்

இவ்வுருவம் கருங்கல்லால் செதுக்கப்பட்டுள்ளது. முன்புறம் நாகத்தின் வடிவமும், பின்புறம் பண்டைய தமிழ் எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த முன்பகுதி நீள்வட்ட வடிவில் அமைய அதன் முன்புறம் 5 தலை நாகம் வாலை சுருட்டிக் கொண்டு படம் எடுக்கும் நிலையில் காணப்படுகிறது. நாகத்தின் ஒவ்வொரு தலை மீதும் மலர் வடிவுடைய மகுடம் அலங்கரிக்கிறது. நாகத்தின் உடல்பகுதி மிக இயற்கையாகச் செதில்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் இலையின் இதழ் வடிவின் வேலைப்பாடு காணப்படுகிறது. பின்புறம் பொறிக்கப்பட்டுள்ள பண்டைய தமிழ் எழுத்தின் கீழ், கோட்டு உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

பொம்மையில் உள்ள இந்தப் பொறிப்பு சுடுமண் ஓட்டு ஏடுகளில் உள்ள வாசகத்தையே திரும்பத் திரும்ப மந்திரம் போல் எழுதப் பெற்றுள்ளது. ''எருமிநாடு குழுமூர்காடன்'' என்ற வாசகத்தில் காடன் என்பதற்குப் பதிலாக இறுதிப் பெயர் நாடன் என்றும், நாடகன் என்றும் எழுதப் பெற்றுள்ளது. மேலும் எழுத்துகள் மாறி மாறி பொறிக்கப்பட்டுள்ளன. நாக சிற்பத்தின் பின்புறம் பதினொரு வரிகளில் பொறிப்புகள் உள்ளன. காடன் என்பதற்குப் பதிலாக நாகன் என்று பெயர் உள்ளது. இந்த 5 தலை நாகச் சிற்பம் திரு. கருப்புசாமி அவர்கள் வீட்டில்/ வழிபாட்டில் நீண்ட நாட்கள் இருந்திருக்கிறது. தற்பொழுது இதனை இத்துறை வசம் ஒப்படைத்துள்ளார். ''எருமிநாடுகுமுழுர் காடன்'' என்ற எழுத்துக்கள் உள்ளன.



 இந்த எழுத்துக்கள்  என்று மாறி மாறி வருவதற்கு சான்றாகும்.  இவ்வகை வடிவம் எழுத்துக்களா அல்லது குறியீடுகளா என்ற ஐயப்பாட்டைத் தருகின்றன. '

என்பது ஆகிய எழுத்துக்களால் எழுதப் பெற்றுள்ளன. சில இடங்களில் குமுழுர் என்பது என்றும் எழுதப் பெற்றுள்ளது. குமுமுர் என்பது என்று எழுதப்பட்டுள்ளது. எருமி என்பது என்றும் என்றும் என்றும் எழுதப் பெற்றுள்ளது. இந்த எழுத்துக்கள் பொறித்த சுடுமண் ஏடுகள் பண்டை நாளில் எழுத்துப் பயிற்சிக்காக உருவாக்கம் பெற்றவையா? அல்லது பூடமாக எழுத்துக்களை மாற்றி எழுதும் வழக்கத்திற்குரியவையா? என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த ஏடுகளின் மேல் எழுதப் பெற்றுள்ள எழுத்து வடிவங்களில் சில காலத்தால் முற்பட்டவையாக உள்ளன. சில காலத்தால் பிற்பட்டவையாக உள்ளன. நாடு என்பதில் உள்ள 'டு' என்ற எழுத்து இரண்டு வகையாக எழுதப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் என்ற குறியீடும், சில இடங்களில் என்ற குறியீடும் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதுபோலவே 'க' என்ற எழுத்திற்கு என்ற குறியீடும் என்ற குறியீடும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குமுழுர் என்பதில் உள்ள 'கு' என்ற எழுத்து என்ற குறியீடாலும் எழுதப் பெற்றுள்ளது. காடன் என்ற பெயர் என்றும் என்றும் எழுதப்பெற்றுள்ளது. இந்தப் பெயரில் உள்ள டகரம் பண்டைய தமிழ் எழுத்திலும் அசோகன் பிராமி எழுத்திலும் எழுதப் பெற்றுள்ளது. மகரத்திற்கு அசோகன் பிராமி ' ' என்ற குறியீடும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள வாசகமான 'எருமிநாடுகுமுழுர்காடன்' என்பதன் மூல ஒட்டுப் பொறிப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும். கி.பி. 1-3ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்திற்குள் இந்த வழக்கம் தொடர்ந்திருக்க வேண்டும். இதுவரையில் கிடைத்த ஓடுகளில் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான எழுத்துகள் மட்டுமே கிடைக்கின்றன. பின்னாளைய வடிவத்திலான எழுத்துகள் இவ்வோடுகளில் எழுதப் பெற்றுள்ளதாக கருதப் பெறும் எழுத்துகள் எழுத்துகள்தானா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

சுடுமண் ஏடுகளில் வடிவங்கள் பல வகையில் அமைந்துள்ளன. நீள் சதுர வடிவம், செவ்வக வடிவம், வட்ட வடிவம், அரைவட்ட வடிவம், அரைச் செவ்வக வடிவம், மீன் போன்ற வடிவம் ஆகிய வடிவங்களில், சுடுமண் ஏடுகள் கிடைத்துள்ளன. ஏட்டின் விளிம்பு கருக்கு போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் பண்டைய தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ்ப் பகுதியில் மீன், நத்தை, அட்டை போன்ற நீர் வாழ் உயிரினங்கள் காட்டப்பட்டுள்ளன. மறு பக்கத்தில் பெரிய அளவில் மீன் காட்டப்பட்டுள்ளது. இதன் கீழ்ப்பகுதியில் நத்தை காட்டப்பட்டுள்ளது. 3 பாய்மரங்களுடன் கூடிய படகு காட்டப் பட்டுள்ளது. சுடுமண்ணாலான அம்மி போன்ற அமைப்பில் பண்டைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த

வடிவ வேறுபாடுகளுக்கான காரணம் புரியவில்லை. இது அந்தக் காலத்தில் பயன்படுத்திய எடை கற்களாகவோ அல்லது முத்திரைகளாகவோ இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. தகடுகளுக்குப் பின்புறம் பல குறியீடுகளும் சில எழுத்துகளும் எழுதப் பெற்றுள்ளன. மலைகள், ஆறு, சந்திரன், சூரியன், நாகம், செடிகள், படகு ஆகியவை பல ஓடுகளின் பின்புறம் வரையப்பட்டுள்ளன. சில வரைபடங்கள் நிலவியல் வரை படங்களாகலாம். இந்த வரைபடங்களின் கட்டங்களில் அ,மி,ரு,எ,நா,டு---ஆகிய எழுத்துகள் வரையப் பட்டுள்ளன. இந்தக் கட்ட எழுத்துகள் எதைக் குறிக்கின்றன என்பது புலப்படவில்லை. பல்வேறு வகையான கோட்டு உருவங்கள் பற்றித் தனியே ஆய்வு செய்தால் பண்டைய குறியீடுகள் ஓவிய எழுத்துகள் ஆகியவை பற்றி விளங்கிக் கொள்ள முடியும். அந்தக் குறியீடுகள் என்ன பொருளில் பயன்படுத்தப் பெற்றன என்பதையும் அறிந்து கொள்ள முடியும். பொறிப்புகளின் இறுதியில் சில எழுத்துகள் பிற எழுத்துகளைக் காட்டிலும் பெரியதாகவும், வகைவகையாக வளைந்தும் எழுதப் பெற்றுள்ளன. இந்த எழுத்துகள் குறிப்பிட்ட மனிதனின் கையொப்பமா அல்லது குறிப்பிட்ட குடியின் குறியீடா என்பதையும் தொடர் ஆய்வுகள் மூலம் கண்டறிய வேண்டும்.

இந்த சுடுமண் ஏடுகளின் பின்புறத்திலும், சுடுமண் பொம்மைகளின் பக்கவாட்டிலும் நாகத்தின் உருவம் வரையப்பட்டுள்ளது. கல்லில் ஐந்து தலை நாகத்தின் உருவம் வடிக்கப் பெற்றுள்ளது. ஒரு சுடுமண் ஓட்டில் பின்புறம் தன் உடலை வளைத்து வளைத்து நிற்கும் நிலையில் நாகம் படமெடுத்து ஆடும் காட்சி கோட்டு வடிவில் வரையப் பட்டுள்ளது. அதன் வால் பகுதியில் நாகஅன் என்று பண்டைய தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. அதன் நடுப்பகுதியில் உடலுக்கு மேல் குடிசை போன்று வரையப் பெற்றுள்ளது. இந்தத் தொல்பொருட்கள் கிடைக்கும் பகுதிக்கும் நாகத்திற்கும் இடையில் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும்.

போளுவாம்பட்டி கோட்டைக் காட்டில் உள்ள சிவன்கோயிலை நாகேஸ்வரம் என்று கல்வெட்டுகள் கூறும். இந்தப் பெயர் நாகவழிபாட்டோடு தொடர்புடையதாக இருப்பினும் புத்த, சமண சமயங்களோடு நாகம் தொடர்புடையதாக உள்ளதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். போளுவாம்பட்டிக் கோட்டைக் காட்டில் புத்தர், மைத்ரேயர் (புத்தரின் ஒரு அவதாரம்) ஆகிய சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. அதுமட்டுமன்றி சமணத் தீர்த்தங்கரர் பார்சுவ நாதர் வழிபாட்டுடன் தொடர்புடையதா? என்ற கேள்வி எழுகின்றது. புத்த விகாரக் குடைவரைக் கோயில்களிலும், காஞ்சி தூபியிலும் ஐந்து தலைநாகம், மூன்று தலைநாகம் ஆகியவை வடிக்கப்

பெற்றுள்ளன. தனிச் சிற்பம் ஒன்றில் மூன்று தலை நாகம் ஒன்று ஆந்திரத்தில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. அதில் கி.பி.3-4ஆம் நூற்றாண்டு பிராமி எழுத்துகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இந்த உருவம் எந்த சமயத்தைச் சேர்ந்தது என்று அறிய முடியவில்லை. பேரூரில் கிடைக்கும் சப்தமாதர் தொகுப்புடன் (கி.பி.7-8ஆம் நூற்றாண்டு) ஐந்து தலை நாகராஜன் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. மனித உருவத்தின் பின்புறம் நாகத்தின் உருவம் உள்ளது.

நாக வழிபாடு இறந்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையது என்ற நோக்கிலும் தற்போது கிடைத்த நாக உருவங்களைப் பார்க்க வேண்டும். எகிப்து, கிரேக்கம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் ஈமச் சின்னங்களில் நாகத்தின் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலும் இறந்தவர்கள் பாதாளத்தில் உள்ள நாகலோகத்தில் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அதனால் பேரூரில் கிடைக்கும் நாக உருவங்கள் நீத்தார் வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் கொள்ளலாம். எருமிநாடு குமுழூர்காடன் என்பவன் போரிலோ அல்லது திடீர் நோயாலோ இறந்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில் அவன் ஆட்சித் தலைவனாக விளங்கியிருக்க வேண்டும். சில இடங்களில், ''எருமிநாடு குமுழூர் நாடன்'' என்று எழுதப் பெற்றுள்ளது அவன் நாட்டுத் தலைவன் என்பதை வலியுறுத்துகின்றது. பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி முல்லைப் பகுதி தலைவனை நாடன் என்று குறிப்பிட்டனர் (புறம் : 49) அந்த வகையில் அவன் எல்லாக் குடிமக்களாலும் போற்றப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதலாம். போற்றுதலுக்குரிய தலைவன் இறந்த போது அவன் பெயரையும், உருவத்தையும் எழுதி வைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. அங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப சுடுமண் ஏடுகளாகவும் உருவங்களாகவும், கல் உருவமாகவும், வெண்கலத் தகட்டிலும் எழுதி வழிபாட்டிற்காக வைத்திருக்க வேண்டும் என்று கருதலாம். அய்யனார் கோயிலில் வேண்டுதலுக்காக யானை, குதிரை போன்றவற்றை சுடுமண் கருங்கல்லினால் செய்து வைக்கின்ற பழக்கம் தமிழ்நாட்டில் இன்றும் உள்ளது.

13. தமிழகத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்கள் ஒரு குறிப்பு

பேராசிரியர் பி.ஆர்.சீனிவாசன், சென்னை

தமிழ்நாடு மிகப்பழைமையான பண்பாட்டைப் பெற்று திகழ்ந்த ஒரு நாடு. பண்பாட்டின் மிக முக்கியமான அம்சம் அறிவாற்றல். அறிந்த உண்மைகளை எழுத்து வடிவில் காப்பாற்றுதலும் கி.மு.300வது ஆண்டுக்கு முன்பிருந்தே இந்த நாட்டில் வழக்கில் இருந்து வந்துள்ளது. இதனை நம் தமிழ் நாட்டு பண்டைஇலக்கியமான சங்க இலக்கியத்திலிருந்து நாம் கண் கூடாக அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் தமிழகர்களின் பண்பாட்டைப் பற்றிய பல அரிய பொருள்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் எழுத்துக்களைப் பற்றி கூறும் பகுதி மிகவும் புதிதானது. இதிலிருந்து தமிழ் நாட்டில் அந்த நூல் இயற்றப்பட்ட சுமார் கி.மு.300வது ஆண்டு காலக் கட்டத்தில், எழுத்தறிவு வழக்கிலிருந்தது என்பதையும், தவிர அந்த எழுத்துக்களின் அமைப்பு புது மாதிரியாக இருந்தது என்றும் தெரியவருகிறது. முன்கூறிய சங்க இலக்கியத்தில் தமிழ் நாட்டில் ஆட்சி செலுத்தியவர்களைப் பற்றியும், மற்ற பொருள்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளதே தவிர இந்தியாவின் இதர பகுதிகளில் அக்காலத்தில் நடைபெற்ற ஒரு சில பொருள்களைப் பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளது.

ஆனால் கி.மு. மூன்றாவது நூற்றாண்டில் இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட மௌரிய வம்ச அசோக அரசன் வெட்டுவித்துள்ள அவனது கல்வெட்டுக்களில் தமிழ் நாட்டில் இருந்த சோழர், பாண்டியர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கர்நாடகம், ஆந்திரம் போன்ற பகுதிகளை அசோக அரசன் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருந்ததாக வரலாறு இருந்த போதிலும் தமிழகம் அவன் வசமில்லாத தனி நாடாகவே இருந்து வந்துள்ளது. அசோக அரசனின் கல்வெட்டுக்கள் பிராமி என்ற எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன என்று புலவர்கள் கூறுவர். ஆனால் மேற்கூறிய தொல்காப்பியச் சான்றின்படி, தமிழ் நாட்டில் எழுதப்பட்ட எழுத்துக்கள், ஒரு தனி வகையானதாக இருந்தன எனத் தெரிகிறது. இந்த எழுத்து முறையைப் பழந்தமிழ் எழுத்துகள் எனக் கூறலாம்.

தமிழ் நாட்டில் பழக்கத்தில் இருந்து வந்த பண்டைய எழுத்து முறையிலேயே ஆந்திர நாட்டில் பட்டிப்ரோலு என்ற ஊரில் தோண்டி எடுக்கப்பட்ட பௌத்த கல்வெட்டுக்களும் எழுதப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களை ஜி. பியூலர் என்ற மிகப் பெரிய ஆராய்ச்சியாளர் Epigraphia Indica, Vol. IIல் பதிப்பித்துள்ளார். அவருடைய

கணிப்புப்படி பட்டிப்ரோலு கல்வெட்டுக்களின் காலம் கி.மு. சுமார் 200 ஆகும். அசோக அரசனின் எழுத்துக்களான பிராமி எழுத்துக்களைப் போலல்லாமல், பட்டிப்ரோலு கல்வெட் டெழுத்துக்கள் வேறுபட்டிருகிறபடியால் இவ்வெழுத்துக்களை பியூலர் திராவிடி எழுத்து வகையாகக் கொள்ளலாம் என்று கருத்துக் கூறிச் சென்றுள்ளார். திராவிடி என்றால் திராவிட நாட்டைச் சேர்ந்தது என்று கொள்ளலாம். அதாவது பட்டிப்ரோலு கல்வெட்டு எழுத்துக்கள் தமிழ் நாட்டு வகையைச் சேர்ந்தவை என்ற பொருள் கொள்ள இடமிருக்கிறது. இந்த திராவிடி எழுத்துவகை பிற்காலத்திலும் தொடர்ந்து வழக்கிலிருந்து வந்துள்ளது. இந்தப் பொருளை கி.மு. சுமார் இரண்டாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படும் லலிதவிஸ்த்தரம் என்ற ஒரு பௌத்த நூலின் வாயிலாக அறிய முடிகிறது. இந்த நூலில் புத்தரைப் பற்றிக்கூறும் பொழுது, அவர் பலவகை எழுத்துக்களையும் அறிந்த ஞானி என்று கூறப்படுகிறது. அதில் பிராமி, கரோஷ்ட்டி, போன்ற எழுத்துக்களை மட்டுமல்லாது திராவிடி என்ற எழுத்து வகையையையும் அறிந்திருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நமக்குத் தெரிவது யாதெனில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே, அதாவது கி.மு. சுமார் 200வது ஆண்டுக்கு முன்பிருந்தே திராவிடி அதாவது தமிழ் எழுத்துவகை வழக்கிலிருந்தது என்பதாகும். இந்த எழுத்துவகையைப் பண்டைத் தமிழ் எழுத்தென்று கூறுவதே சாலப் பொருத்தமாகும். சமீப காலமாக இந்த எழுத்துவகையைத் தமிழ் பிராமி என்று கூறுவது சரியல்ல என்று கூறுகிறோம்.

அசோக மன்னன் காலத்திற்கு முன்பிலிருந்தே தமிழ்நாட்டில் தனிப்பட்ட பண்டைத் தமிழ் எழுத்து வழக்கிலிருந்ததாலும், மற்றும் இங்கு மிக உயர்ந்த பண்பாடு, அரசியல் மற்றும் பல அரிய சமுதாய கோட்பாடுகள் பழக்கத்திலிருந்ததாலும், இங்கு அக்காலத்தில் வசித்த தமிழ் மக்கள் அசோக மன்னனால் பிரச்சாரம் செய்யப்பட்ட பௌத்த சமயத்தையோ அல்லது அவன் உபயோகித்த மொழி, எழுத்துக்களையோ ஏற்கவில்லை. அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களோ சமயக் கோட்பாடுகள் அடங்கிய அக்காலத்திய, இலக்கியமோ தமிழ்நாட்டில் இல்லாததே இதற்குச் சான்றாகும்.

அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களையும், அவை எழுதப்பட்ட பிராமி எழுத்தைப் பற்றியும் கி.பி. 1836ம் ஆண்டிலிருந்தே அறியக்கிடைக்கப் பெறினும் தமிழ் நாட்டில் அம்மன்னன் காலத்தையோ அவனுக்கு முற்பட்ட காலத்தையோ சேர்ந்தனவாக கூறக்கூடிய கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப் படாததால் தமிழர்கள் எழுத்தறிவில் தேர்ந்தவர்களில்லை என்றும் சங்க இலக்கியம் கி.பி. முதலாவது நூற்றாண்டுக்குப் பிற்பட்டதென்றும் ஆராய்ச்சியாளர்கள் முன்பு கருதி வந்தனர். இந்தப் பெரும் பண்பாட்டுக் குறையானது

கி.பி. 1910 - 14ஆவது ஆண்டுகளில் நீக்கப்பட்டது. இந்த ஆண்டுகளில் அகில இந்தியக் கல்வெட்டுத் துறையின் தலைமை ஆராய்ச்சியாளரான எச். கிருஷ்ண சாஸ்த்திரி என்பவர் தமிழகத்தில் தான் சுற்றுப் பயணம் செய்த போது, கருங்காலக்குடி, விக்கிரமங்கலம், ஆனைமலை மீனாட்சிபுரம் போன்ற சில ஊர்களின் அருகில் உள்ள மலைப் பகுதிகளில் பல கல்வெட்டுக்களைப் பிரதி எடுத்து, அவற்றை புகைப்படங்களுடன் கூட தென்னிந்தியக் கல்வெட்டுத் துறையின் அந்த ஆண்டு அறிக்கையில் பதிப்பித்தார். திரு. கிருஷ்ண சாஸ்த்திரி அவர்கள் இக்கல்வெட்டுக் களின் எழுத்து அமைதியைக் கவனித்து, அது பிராமி என்று கூறினார். ஆனால் எழுத்துக்கள் தனிப்பட்ட முறையில் அதாவது திராவிடி முறையில் எழுதப் பட்டிருந்ததால் அவற்றைச் சேர்த்துப் படிப்பதில் சிரமமடைந்தார். ஆனாலும் கிருஷ்ண சாஸ்த்திரிகள் அவர்களின் இந்தக் கண்டுபிடிப்பு இந்த இருபதாவது நூற்றாண்டின் ஒரு அரிய கண்டுபிடிப்பாகும். இக்கண்டுபிடிப்பால், தமிழ்நாட்டில் கி.மு. சுமார் மூன்றாவது நூற்றாண்டுக்கு முன்பே திராவிடி அதாவது பண்டைத் தமிழ் எழுத்துவகை வழக்கிலிருந்தது என்ற உண்மை உலகுக்கு அறிவிக்கப்பட்டது. அத்துடன், தமிழர்களின் பண்டையப் பண்பாட்டைப் பற்றிய மேற்கூறிய ஒரு பெரும் குறையும் அகற்றப்பட்டது.

திரு. கிருஷ்ண சாஸ்த்திரியால் இக்கல்வெட்டுக்களைச் சரிவரப் படிக்க இயலாவிட்டாலும், அவர் அலுவலகத்தில் உதவியாளராக இருந்த மிகவும் அரிய புலமை வாய்ந்த K.V. சுப்பிரமணிய அய்யர் பல ஆண்டுகள் இக்கல்வெட்டுக் களை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்தார். இவ்வுண்மைகளை தமது விரிவான ஒரு கட்டுரையின் மூலம் 1924ம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய கீழ்த்திசைக் கருத்தரங்கில் வெளிப்படுத்தினார். இந்த ஆராய்ச்சியாளரும், இந்த பண்டைத் தமிழ் எழுத்துக்களை பிராமி எழுத்துக்கள் என்றே கூறியுள்ளார். ஆனாலும் நாம் மேலே கூறிய பண்டைத் தமிழ் எழுத்துக்களின் வடிவமைப்பு பட்டிப்ரோலு எழுத்துக்களின் வடிவமைப்பை ஒத்து இருந்தது என்றும், தவிர இந்த எழுத்துக்களில் ழ, ற, ன போன்ற தமிழ் மொழிக்கே உரிய ஒலிகளுக்கான எழுத்துக்களும் இருந்தன என்பதையும், அறிந்தபோதும், இந்த எழுத்து திராவிடி அதாவது பண்டைத் தமிழ் எழுத்து என்று கூறவில்லை. எனினும், கே.வி. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் 1924ம் ஆண்டிலேயே இக்கல்வெட்டுக்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன என்று கூறிவந்தார். பிற்காலத்தில் சித்தன்னவாசல், புகழியூர் போன்ற ஊர்களிலும் நாம் கூறும் பண்டைத் தமிழ் எழுத்து வகையில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றை எல்லாம் ஒன்று சேர்த்துச் சமீப காலத்தில் சில ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவற்றில் ஐராவதம்

மகாதேவன் முனைவர் T.V. மஹாலிங்கம் மற்றும் மயிலை சீனி வெங்கிடசாமி ஆகியோரின் நூல்கள் குறிப்பிடத் தக்கவையாகும். இந்த ஆராய்ச்சியாளர்கள் தமிழ் நாட்டின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் தமிழ் பிராமி என்ற எழுத்து வகையில் எழுதப்பட்டிருக்கிறது என்பது சரியல்ல என்றும், இந்த எழுத்து பண்டைத் தமிழ் எழுத்து வகை என்றும் நாம் கூறுகிறோம். இந்தச் சிறிய குறிப்பின் குறிக்கோள்கள் இரண்டாகும். ஒன்று தமிழ்நாட்டில் கி.மு. சுமார் மூன்றாவது நூற்றாண்டுக்கு முன்பே தனித்தமிழ் எழுத்து வகை வழக்கிலிருந்தது என்பது. இரண்டாவது இந்த அரிய கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்து உலகிற்கு தமிழ் நாட்டில் எழுத்தறிவு கி.மு. சுமார் 300வது ஆண்டுக்கு முன்பே வழக்கிலிருந்தது என்ற உண்மையைக் அகில இந்தியக் கல்வெட்டுத் துறை அறிவித்தது, இந்த 20வது நூற்றாண்டின் சாதனை என்பதும் ஆகும்.

14. முந்துதமிழி எழுத்துச்சான்றுகள்

பேராசிரியர் இரா. மதிவாணன், சென்னை.

சிந்துவெளி முத்திரை எழுத்துகளுக்கும் தமிழ் பிராமி எழுத்துக்களுக்கும் இடைப்பட்ட எழுத்துச் சான்றுகள் கிடைத்துள்ளன[1]. உலக மொழிகளில் எழுத்துச் சான்றுகளின் தொன்மையை ஆராய்ச்சி செய்யும் வல்லுநர்கள் இந்திய மொழிகளில் பிராமி எழுத்தின் காலம் கி.மு. 300 எனப் பொதுவாகக் கணித்துள்ளனர். எனினும், ஈழத்தில் கிடைத்த மட்பாண்ட எழுத்துச் சான்று களிலிருந்து தென்னாட்டு பிராமியாகிய தமிழ் எழுத்தின் காலம் கி.மு. 700 வரை கணிக்கலாம் என்கின்றனர். எஸ். ஆர். ராவ் பிராமி எழுத்து கி.மு. 1500 ஆண்டளவில் தோன்றியிருக்கலாம் என்கின்றார். ஆராய்ச்சி அறிஞர் பலரும் பிராமி எழுத்து சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியாய் சிந்துவெளி எழுத்திலிருந்து தோன்றியது எனக் கருதுகின்றனர்.

இவர்கள் கருத்து எதுவாயினும், பிராமிக்கு முன்பே சிந்துவெளி எழுத்து இம்மண்ணில் வழக்கிலிருந்தது என்பதற்கு வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் கிடைத்துள்ள தொல்லெழுத்துச் சான்றுகள் மற்றும் குகை ஓவிய எழுத்துச் சான்றுகள் தக்க எடுத்துக் காட்டாகின்றன. சிந்துவெளி எழுத்து தமிழ்நாட்டில் இருந்தமைக்குச் சான்றாகக் கீழ்வாலைக் குகை ஓவிய எழுத்துக்களை ஆய்வுலகத்திற்குத் தெரிவித்து பி.எல்.சாமி நிறுவிக் காட்டினார்[2]. வடநாட்டு அசோகன் பிராமியைவிடத் தென்னாட்டுத் தமிழ்ப் பிராமியே காலத்தால் முந்தியது என்றும், பிராமி எழுத்து தொடக்கத்தில் தமிழ் எழுத்தாகவே இருந்தது என்றும் அறிஞர்கள் கூறி வருகின்றனர். இந்தியா முழுவதும் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்டங்களை ஆராய்ந்த அறிஞர் பி.பி.லால் தென்னாட்டுப் பானை ஓடுகளில் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது என்றும், வடநாட்டுப் பானை ஓடுகளில் தொல்லெழுத்துச் சான்று கிடைக்க வில்லையென்றும் கூறுகிறார்.

அசோகன் பிராமி கற்றவரால் மட்டும் வடநாட்டில் பயன்படுத்தப்பட்டது என்றும், தென்னாட்டுப் பிராமியாகிய தமிழி பானை ஓடுகளிலும் காணப்படுவதால் எளிய பொது மக்களின் அன்றாடப் புழக்கத்தில் இருந்தது என்றும் பி.பி. லால் கூறுகிறார். இக்கருத்தொன்றே தமிழி (பிராமி) எழுத்து தமிழ்நாட்டில் இருந்தே வடநாட்டில் பரவியிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. சாதவாகன அரசன் சதகர்ணி என்பவன் பிராகிருதம், தமிழ் ஆகிய இருமொழி நாணயம் வெளியிட்டான். இருமொழியும் தமிழி (பிராமி) எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளதால் இந்திய மொழிகள் அனைத்திற்கும்

எழுத்து வடிவம் ஒன்றாகவே அதாவது தமிழியாகவே இருந்தது புலனாகின்றது.

இந்திய மண்ணில் கி.மு. 1700க்கு முற்பட்ட சிந்துவெளி எழுத்துகளும் கி.மு. 700க்கும் பிற்பட்ட தமிழ் எழுத்துகளும் பெருமளவில் கிடைக்கின்றன. இவற்றிற்கு இடைப்பட்ட ஆயிரம் ஆண்டு காலத்தில் எவ்வகை எழுத்து நிலவியது என்பதே நம்முள் உள்ள வினா? வாங்டன், அண்ட்டர் போன்ற அறிஞர்கள் பிராமி எழுத்து வடிவங்களை சிந்துவெளி எழுத்துகளோடு ஒப்பிட்டு நோக்கி பிராமி எழுத்து சிந்துவெளி எழுத்திலிருந்தே தோன்றியது என்றனர். [3]

417 குறியீடுகளைக் கொண்ட சிந்துவெளி அசை எழுத்திலிருந்து உயிரெழுத்தும் மெய்யெழுத்துமாக வகைப்படுத்தி சற்றொப்ப 30 தனி எழுத்துகளாக முதலில் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்தவர்கள் யார்? இந்த எழுத்துச் சீர்திருத்தம் யாரால், எந்த இடத்தில் மேற்கொள்ளப் பட்டது?

செமித்தியம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற தொன் மொழிகளைப் பார்த்து பிராமியைத் தனி எழுத்து வடிவங்களாகச் செய்தார்கள் என்னும் கூற்றும் வலிவு பெறவில்லை. ஏனெனில் மேலை நாட்டினர் ஒட்டுமொத்தமாகத் தனியெழுத்துக்களைப் படைத்தார்களே யல்லாமல், பிராமியைப் போன்று உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகள் என்று தனித்தனியாக வகைப்படுத்தவில்லை. பொதுவாக மொழியை எழுத்து வடிவில் மிகுதியாக ஆள்பவர்கள் வணிகர்கள். அவர்களுக்கு இலக்கணத்தில் கண்ட வண்ணம் உயிரெழுத்து மெய்யெழுத்து, குறில் நெடில் என்றெல்லாம் வகைப்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. இலக்கண முறைப்பட்ட பாகுபாடு பிராமியில் காணப்படுவதால், பிராமி எழுத்துகளை முதன்முதல் வடித்தவர்கள் அம் மொழியில் புலமை நிரம்பிய இலக்கணப் புலவர்களாகவே இருத்தல் வேண்டும்.

இசைத்தமிழில் (யாப்பிலக்கணத்தில்) கூறப்படும் நேரசை, நிரையசை வாய்ப்பாடுகளுக்கு ஏற்ப, சிந்துவெளி அசையெழுத்து அமைந்திருப்பதை நான் என் நூலில் சுட்டிக் காட்டியிருக்கின்றேன். எனவே சிந்துவெளி அசையெழுத்து இசைத்தமிழ் வல்லுநராலும், தமிழி எனும் தமிழ்ப்பிராமி எழுத்து மூன்றாம் தமிழ்ச் சங்கத்து இயற்றமிழ் இலக்கண வல்லுநராலும் வடிவமைக்கப்பட்டதற்கான அகச்சான்றுகள் கிடைத்துள்ளன[4].


சிந்துவெளி அசை எழுத்தில் (வ்கிலீலீஞருடூந குகிற்நு ஹஉ ஹிமடூரிடூஃனீ வ்கிளரிநுசூநூ ஒவ்வொரு அரை மாத்திரை அளவு எழுத்து ஒலிப்புக்கும் ஒரு சிறு கோடு மெய்யெழுத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு மாத்திரை அளவாக 'க' எழுத்துக்கு 2 சிறு கோடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. ''கா'' எனும் நெடிலெழுத்துக்கு 4 சிறுகோடுகள்


சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்துகளுக்கு அவை ஒலிக்கப்படும் மாத்திரையளவைக் குறிப்பது இசைத்தமிழில் மட்டும்தான் உண்டு. உலகின் வேறு எந்த மொழியிலும் எழுத்தொலிப்புக்கான காலக் குறியீடுகள் குறிக்கப்பட்டதில்லை. மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் இசை வளர்த்த தமிழ் அறிஞர்களாலேயே சிந்துவெளி எழுத்து உருவாக்கப் பட்டுள்ளது. அவை மொத்தத்தில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து ஆகியவற்றின் நேரசை, நிரையசைக் குறியீடுகளாக உள்ளன. சிந்துவெளித் தமிழர்கள் தென்னாட்டிலிருந்து சிந்துவெளியில் குடியேறி வாழ்ந்தனர் என்பதும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[5]. சிந்துவெளி நாகரிகம் மறைந்தபின் கி.மு. 1850 அளவில் தென்மதுரையில் மூன்றாம் தமிழ்ச்சங்கம் நிறுவப் பட்டிருக்கலாம் என்பதை இறையனார் களவியலுரையிலிருந்து உய்த்தறிய முடிகிறது. இரண்டாம் கடல்கோளில் இரண்டாம் தமிழ்ச் சங்கத்து நூல்கள் முழுதும் அழிந்துபோனதால் எஞ்சிய மக்கள் சிலரிடை சிந்துவெளி எழுத்துக்கள் மட்டும் ஓரளவிற்கு நினைவிலிருந்ததைத் தொகுத்து உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்களாகத் தொகைப்படுத்தி, குறில், நெடில் என வகைப்படுத்தி, வல்லினம், மெல்லினம், இடையினம் என முறைப்படுத்தி, எழுத்துகள் பிறக்கும் இடத்திற்கேற்ற வடிவம் தந்து தமிழி எனும் பிராமி வடிவத்தை உருவாக்கி உள்ளனர். உயிர் 12ம் மெய் 18ம் ஆக முப்பது எழுத்துகளை முதலெத்து என்றனர். முதலெழுத்து கற்பதையே தமிழ் கற்பதாகக் கருதினர்.

'உயிரும் உடம்புமா முப்பது முதலே' (தொல். எழுத்) எனும் நூற்பாவின்படி முதலெழுத்து என்பதற்கு அடிப்படை எழுத்து என்று பொருள். இதே எழுத்துகளை முதலில் வணிகர்களும் பின்னர் அரசர் முதலானவர்களும் வட நாட்டில் பயன்படுத்தியபோது இந்தியாவில் முதலில் இருந்த எழுத்து என்னும் பொருளில் பிராமி எனப் பெயரிட்டுக் கொண்டனர். பிரம்மம் எனும் சொல் முதலாவது என்றும் பொருள்படும். பிரம்மச்சரியம் - முதலாவது ஆச்சாரம் என்றும், பிரம்மக்குலம் - முதல் குலமான பிராமணச் சாதியென்றும் பொருள்படுவதைக் காண்க.

மூன்றாம் தமிழ்ச் சங்கத்துத் தமிழ்ப்புலவர்களே தமிழி (பிராமி) எழுத்துகளை வடிவமைத்தார்கள் என்பதற்கும் சிந்துவெளியெழுத்தை நினைவில் நிறுத்திக் கொண்டு, அவற்றை மேலும் சுருக்கிப் புதிய உயிர், மெய் எழுத்துகளை வடிவமைத்துள்ளனர் என்பதற்கும் இணைப்பில் தரப்பட்டுள்ள எழுத்து ஒப்பீட்டுப் படப்பட்டியல் சான்றாகின்றது.

மற்றொரு வலுவான சான்றையும் இங்கே குறிப்பிடலாம். எழுத்துகளுக்குப் பிறப்பிடம் நோக்கி வரிவடிவம் தந்திருப்பது தமிழ் இலக்கண வல்லுநராலேயே செய்யத் தக்கதாகும். தமிழிலுள்ள வல்லின

'ற'கரமும் மெல்லின 'ன'கரமும் பிறப்பிடம் நோக்கி தனித்த வரிவடிவம் தரப்பெற்றுள்ளன. 'ற' எழுத்து த-ட ஆகிய 2 எழுத்துக்களும் பிறக்கும் மேல்வாய் அண்ணத்தின் இடங்களுக்கு நடுவில் பிறக்கின்றது. ஆதலால் தமிழி (பிராமி) எழுத்தை உருவாக்கிய தமிழ்ப் புலவர்கள் 'த' எழுத்தின் மேல் 'ட' எழுத்தை எழுதி அந்த ஈரெழுத்து வடிவத்தையே ()
 றகரமாக வடிவமைத்துள்ளனர்.

இதுபோன்றே மெல்லின 'ன'கரம் தந்நகரமும் (ந) டண்ணகரமும் (ண) பிறக்கும் மேல்வாய் அண்ணத்தில் ந - ண ஈரெழுத்துகளும் பிறக்கும் இடங்களுக்கு நடுவில் ஒலிக்கப் படுகின்றது அல்லது பிறக்கின்றது எனக் கண்டறிந்து நகரத்தின் மேல் ணகரத்தை எழுதி () இந்த கூட்டெழுத்தையே  னகரமாக வடிவமைத்தனர். இதை நன்கு கூர்ந்துநோக்குவோர், ஆழ்ந்த இலக்கணப் புலமையுள்ளவர்களே தமிழி (பிராமி) எழுத்துக்களை வடிவமைத்தனர் என்பதை மறுக்க மாட்டார்கள்.

எழுத்து வரி வடிவங்கள் மாறுவது ஏன்?

உலகத் தொன்மொழி எழுத்துச் சான்றுகளை நோக்கினால் அவை படவெழுத்துக் காலத்திலிருந்து தனியெழுத்தாக மாறிய காலம் வரை சில நூற்றாண்டுகளுக்கோ அல்லது பல நூற்றாண்டுகளுக்கோ ஒரு முறை வரிவடிவ மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றன. நிலையான அரசமைப்புக் காலங்களிலும், குறிப்பிட்ட ஒரு பகுதியினர் அல்லது தொழிலினரால் மட்டும் மொழி எழுதப்படும் காலங்களிலும் வரிவடிவ மாற்றங்கள் நிகழ்வதில்லை. சிந்துவெளி முத்திரை எழுத்துகள் வணிகர்களால் மட்டும் பெரிதும் ஆளப்பட்டதால், ஆட்சி மாற்றங் களையும் கடந்து சில ஆயிரம் ஆண்டுகள் வரிவடிவம் மாறாமல் கட்டிக் காக்கப்பட்டது. பிராமி எழுத்து வணிகர்களால் மட்டுமன்றி அரசர்களாலும், கற்றவர்களாலும் ஒரு சேரக் கட்டிக் காக்கப்பட்டதால் சங்க காலம் வரை வரிவடிவம் மாறாமலிருந்தது. அரசியல் மாற்றம், போர், வறுமை, பணி முதலியவற்றால் இடம் பெயர்தல், மத மாற்றங்கள் ஆகிய காரணங்களால் எழுதும் பயிற்சி குன்றி, எழுத்துகளின் சீரான வரிவடிவம் சிதைகிறது. அறிஞர் குழு கூடிப் புதிதாக எழுத்துகளைச் சீரமைக்கும் போதும் வரிவடிவம் மாறுகிறது. தமிழில் வட்டெழுத்து, கிரந்த எழுத்து போன்றவை ஒரு குழுவினரால் மாற்றியமைக்கப்பட்டவை. எனவே முன்னதை வரிவடிவச் சிதைவு என்றும் பின்னதை வரிவடிவ ஆக்கம் என்றும் சொல்லலாம். வரிவடிவ ஆக்கமும்கூட காலப்போக்கில் கல்வியறிவு குன்றுமானால் வரிவடிவச் சிதைவுக்குள்ளாகிறது. வரிவடிவச் சிதைவுகள் மிகுமானால் நிலையான அரசமைப்புக் காலங்களில் வரிவடிவ ஆக்கம் பெறுகிறது.

தமிழி (பிராமி) எழுத்தை வரிவடிவ ஆக்கம் என்றும், அதற்கு

முந்தைய எழுத்தை சிந்துவெளி எழுத்தின் வரிவடிவச் சிதைவு என்றும் குறிப்பிடலாம். சிந்துவெளி எழுத்தின் காலம் கி.மு. 3000 முதல் கி.மு. 1700 வரை என்று கூறப்படுகிறது[6].

முந்து தமிழி - கலப்பு எழுத்துக்காலம்

சிந்துவெளி நாகரிகத்தின் இறுதியாகிய கி.மு. 1700 முதல் தமிழியின் எழுத்துச் சான்றுகள் கிடைக்கும் கி.மு. 700 வரை இடைப்பட்ட 1000 ஆண்டு காலத்தை முந்து தமிழி (Pre Tamil - Brahmi Period) காலம் எனலாம். யாழ்ப்பாணத்துப் பேராசிரியர் இந்திரபாலர் ஆணைக் கோட்டையில் கண்டெடுத்த இருமொழி முத்திரை, அளக்குடி சீதாராமன் அமராவதி ஆற்றங்கரையில் கண்டெடுத்த சேரனின் செப்புக்காசு, பெருமுக்கல் குன்றின்கோயில் வாயிற்படி அருகிலுள்ள கல்லெழுத்து தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் இராசன் அகழ்வாய்வில் வெளிக் கொணர்ந்த கொடுமணல் ஈமத்தாழிக் குறியீடுகள், தமிழிகாலத்திய எண் குறியீடுகள் [7] பேராசிரியர் குருமூர்த்தி கூறியுள்ள பானை ஓட்டெழுத்துகள்[8] ஐராவதம் மகாதேவனின்[9] எடக்கல் பாறை ஓவிய எழுத்து கண்டுபிடிப்பு, அண்மையில் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கோவை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள களிமண் ஏடுகள்[10] ஆகியவற்றில் தமிழி கலப்பெழுத்துச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த கலப்பெழுத்துக் காலத்திய பெருமுக்கல் மற்றும் எடக்கல் கல்லெழுத்துகள் மிகத் தொன்மையானவை. கி.மு. 1700க்குப் பிறகு முழுவதும் சிந்துவெளி எழுத்துகளால் எழுதும் வழக்கம் மறைந்து விட்டது என்பதால் எஸ்.ஆர். ராவ் குறிப்பிடுவது போல கி.மு. 1500 ஆண்டளவில் தமிழி (பிராமி) எழுத்து வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். நகர்புறத்துப் பள்ளிகளில் பயின்றோர் புதிய தமிழி எழுத்துகளையும், நாட்டுப்புறத்துக் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பயின்றோர் இருவகை எழுத்து முறைகளையும் கற்றவராய் இருந்திருக்கலாம். ஏனெனில், பழைய சுவடிகள் எல்லாம் பழைய எழுத்திலேயே இருந்ததால் இருவகை எழுத்துகளையும் நினைவில் கொள்ள வேண்டிய கட்டாயம், குறைந்தளவு, 500 ஆண்டுக்காலம் நீடித்திருக்கலாம். கி.மு. 1000க்குப் பிறகு முற்றும் தமிழி (பிராமி)யில் எழுதும் வழக்கம் வந்திருக்கலாம்.

எழுத்துகளையே எண்களாகப் பழங்காலத்தில் பயன்படுத்தினர். ஆங்கிலத்தில் V- ஐந்தையும், X-பத்தினையும் குறிப்பதைக் காண்க. இன்றைய அரபி எண்கள் எனப்படும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகியவை முற்றிலும் தமிழ் எழுத்துகளான

என்பனவேயாகும். சிந்துவெளி நாகரிக காலத்திய இதே தமிழ் எழுத்துகளில் ஒரு கோடு உள்ளது ஒன்று என்றும் இரு கோடுகள் உள்ளது இரண்டு என்றும் இவ்வாறே பத்து வரையிலும் அந்தந்த எழுத்துகளில்

சேர்க்கப்பட்ட கோடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுத்துகள் எண்வரிசை பெற்றுள்ளன.

தமிழ்ப் புலவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தமிழி (பிராமி) எழுத்துக்களே அராபிய வணிகர்கள் மற்றும் உலக வணிகர்களின் கையெழுத்துத் திரிபால் அரபி எண்கள் என்று தவறாகப் பெயர் பெற்று விட்டன. இனி இவற்றை அரபி எண்கள் என்று சொல்லாமல் பழந்தமிழ் எழுத்துக் குறியீடுகளான தமிழ் வரிசை எண்கள் என அறிய வேண்டும். இவையும் முந்து தமிழ் எழுத்துச் சான்றுகளுள் அடங்கும்.

கருவிநூல்கள்

1. இரா. மதிவாணன் 1995 Indus Script Among Dravidian Speakers pp. 77-86
2. பி.எல்.சாமி 1986 தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்
3. எஸ்.பி.ராய். *Who were the Indus People?*

   Longdon and Hunter both outstanding authorities of earlier days, were of the opinion that the Asokan Brahmi was somehow connected with the Indus seript. This conviation probably arose because of the conjunct signs and the diacriticals present in both. Buhlar and Fleet believed in the tradition that the origin of Brahmi goes back to 3102 B.C. The hypathesis of Asokan Brahmi somehow originating in the Indus-script is apparently the natural hypsthesis.- (*Sunday standard* 19th Aug. 99)
4. இரா. மதிவாணன் 1995 Indus script dravidian
5. இரா. மதிவாணன் "1992 சிந்துவெளி எழுத்தின் திறவு
6. டி. டேனியல் & வில்லியம் பிரைட் 1996 *The world's writing systems.*

   There is little diachronic or regional development in the script until it disappears around 1900 B.C. With the collapse of the urban civilisation that created and used it. At the remote southern site of Daimabad in Maharashtra, the script lingered on until about 1700 B.C. (p.165)
7. இரா. மதிவாணன் 1995 *Indus script Among Dravidian speakers* (p.94)
8. பேராசிரியர் குருமூர்த்தி, Ceramic culture of India
9. ஐராவதம் மகாதேவன் 1998 The earliest inscriptions in Kerala (Plate : II)
10. "ஆவணம்'(பருவ இதழ்) டிசம்பர் 1998.

15. தமிழ் எழுத்தின் தோற்றமும் காலமும்

சு.இராசவேலு, சென்னை.

இந்தியாவில் கிடைத்துள்ள தொன்மை எழுத்து வரிவடிவங்களில் முதன்மையானதாக விளங்கும் எழுத்து வரி வடிவம் ''பிராமி'' எனக் கூறப்படுகின்றது. தமிழ்நாட்டில் கிடைக்கின்ற இவ்வெழுத்து வரிவடிவம் வட இந்தியாவில் கிடைக்கின்ற 'பிராமி' வரிவடிவங்களிலிருந்து மாறுபட்ட தன்மையைக் கொண்டு விளங்கி வருவதால் இவ்விரு வரி வடிவங்களை அறிஞர்கள் முறையே ''அசோகனின் பிராமி'' என்றும் ''தமிழ் பிராமி'' என்றும் வேறுபடுத்திக் கூறுகின்றனர்.

தமிழக எழுத்துக்களைத் தமிழ்-பிராமி என்பதை விட 'தமிழி' என்றும் 'பண்டைத் தமிழ்' எழுத்து என்றும் அழைப்பதே சரியானது என்ற கருத்தும் உள்ளது. இவ்வெழுத்து முறையின் தோற்றம் காலம் குறித்து அறிஞர்கள் இடையே பல்வேறு கருத்துக்கள் எழுந்தன. இறுதியில் இருவகையான கருத்துக்களே இன்று அறிஞர்களிடையே நிலவி வருகின்றன. 1. தமிழ் எழுத்து அசோகன்-பிராமி எழுத்து முறையிலிருந்து தோன்றியது. 2. தமிழ் எழுத்து தமிழ் நாட்டில் தோன்றியது.

பண்டைத் தமிழ் எழுத்து தமிழ்நாட்டில் தோன்றியது





மேற்குறித்த இரண்டு கருதுகோள்களையும் முறையாக ஆய்வு செய்வோமானால் தமிழின் தொன்மையும் பண்டைத் தமிழ் எழுத்துக்களின் காலமும் அவை தமிழ்நாட்டில் தோன்றி பின்னர் மௌரியப் பேரரசன் அசோகனால் வட இந்திய பிராகிருத மொழிக்கேற்ப மாற்றம் செய்யப்பட்ட தன்மையும் நமக்கு நன்கு விளங்கும். அதற்கான விளக்கங்களை இனி காண்போம்.




வர்க்கம் அற்ற தன்மை

பண்டைத் தமிழ் எழுத்து முறையில் அசோகனின் பிராமியில் இருப்பது போன்று வர்க்கம் காணப்படவில்லை. 'க' (𑀓) என்ற மூல (வேர்) எழுத்திலிருந்து க$_1$ க$_2$ க$_3$ (𑀔, 𑀕, 𑀖) ஆகிய் வர்க்கங்கள் பிறந்துள்ளன. அசோகனுடைய பிராமியிலிருந்து தமிழ் எழுத்து தோன்றியிருந்தால் இவ்வர்க்க முறை எழுத்துக்களையும் நமது முன்னோர்கள் பயன்பாட்டிற்கு எடுத்திருக்க வேண்டும். தமிழ் மொழியில் 'க' என்னும் எழுத்து சொல்லிற்கு ஏற்றவாறு 'ஒலி' மாற்றம் பெற்று உச்சரிக்கப் படுகிறதேயன்றி வர்க்க எழுத்து மாற்றம் இன்றுவரை இல்லை. ஒலி மாற்றம் உள்ள மொழிக்கு வர்க்க எழுத்துக்களை மட்டும் விட்டு விட வேண்டிய அவசியமே இருக்காது. எழுத்துக்களே இல்லாத காலகட்டத்தில் அனைத்து எழுத்துகளும் தேவைப்படுமே அன்றி ஓர்

எழுத்து மட்டும் தனித்து பயன்பாட்டிற்கு வந்திருக்க வாய்ப்பில்லை. மாறாக 'க' என்னும் முதல் எழுத்திலிருந்து பிராகிருத மொழிக்கு ஏற்ப வர்க்க எழுத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக 'பட்டிபொருலு' கல்வெட்டினைக் குறிப்பிடலாம். இங்கு வர்க்க எழுத்துகள் தொடக்க நிலை எழுத்துக்கள் போன்ற அமைப்புடன் காணப்படுகின்றன.

மெய், உயிர்மெய் வேறுபாடு அற்றதன்மை



பண்டைத் தமிழ் எழுத்து வரி வடிவத்தில் மெய் எழுத்திற்கும் உயிர் மெய் எழுத்திற்கும் 'அ' ஒலி அமைப்பு வேறுபாடு காட்டப்படவில்லை. எடுத்துக்காட்டாக தமிழில் 'க்' என்ற மெய் எழுத்தும் 'க' என்ற உயிர்மெய் எழுத்தும் ஒரே வடிவம் பெற்றுத் திகழ்ந்தது 'க்' என்பதும் 'க' என்பதும் பண்டைத் தமிழ் எழுத்து வடிவத்தில் என்றே எழுதப்பட்டது அசோகன் பிராமியில் 'க்' என்பது '' என்றும் குறில் 'க' என்பது '' என்றும் எழுதப்பட்டது. வலப்பக்கம் மேலே ஒரு கோடு இட்டால் தமிழில் இவ்வெழுத்து 'கா' என்ற எழுத்தாகும். இதனை விளக்க 'அக்கம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இது தமிழில் '' என்றும் அசோகன் பிராமியில் '' என்றும் எழுதப்பட்டது.

தமிழ் மொழியை அறிந்தவர் மட்டுமே இத்தகைய சொற்களை மொழிக்கு ஏற்ப படிக்க முடியும் இல்லையெனில் இச்சொல்லை ''அககம'' என்றும் படிக்கலாம். இது பொருளைத் தராது. எனவே இவ்வித இடர்பாடுகளைத் தவிர்க்க பின் வந்த அசோகன் பிராமியில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுச் சீர் செய்யப்பட்டது. இத்திருத்தங்கள் பண்டைத் தமிழ் எழுத்துகளிலும் பிற்காலத்தில் புள்ளியிடப்பட்டு வேறுபடுத்திக் காட்டப்பட்டன. இம்மாற்றத்தை 'பட்டிப் பொருலு' கல்வெட்டிலும் நம்மால் காணமுடிகிறது. 'க்' என்பது '' என்றும் 'க' என்ற குறில் '' என்றும் 'கா' என்ற நெடில் '' என்றும் குறிக்கப் பட்டுள்ளது. வலப்பக்க மேல் கோடு சிறிது கீழ் நோக்கிய நிலை நெடிலைக் குறிக்கும்.



அசோகன் பிராமியிலிருந்து பண்டைத் தமிழ் எழுத்து பிறந்திருப்பின் இவ்விடர்ப்பாடுகள் இல்லாமல் இருந்திருக்கலாம். எனவே தமிழில் இருந்து அசோகன்-பிராமி வரிவடிவம் வளர்ச்சி பெற்றது என்பது விளங்கும்.

கூட்டெழுத்து முறை அற்ற தன்மை


பண்டைத் தமிழ் எழுத்துமுறையில் மெய் எழுத்தையும் உயிர்மெய் எழுத்தையும் இனங்காண மொழியே உறுதுணையாக இருந்தது என்பதை மேலே கண்டோம். அசோக மாமன்னன் அசோகன்-பிராமியில் இதனை

வேறுபடுத்திக் காட்ட கூட்டெழுத்து முறையையும் பயன்படுத்தி உள்ளான். இக் கூட்டெழுத்து முறை அசோகன் பிராமியில் பெரிதும் தவிர்க்கப்பட்டுத் தேவையான இடங்களில் மட்டுமே குறைந்த அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. 'அஸ்தி' என்ற சொல் அசோகன்-பிராமியில்  ' என எழுதப்பட்டுள்ளது. இதனைத் தமிழில் எழுத வேண்டுமெனில் "  " எனத் தனித்தனியே எழுதுவர் இதனை 'அஸதி' என்றும் படிக்கலாம். இந்த கூட்டெழுத்து முறையை இன்றளவும் வட இந்திய தேவ நாகரி எழுத்தில் காணலாம். அசோகன் பிராமியிலிருந்து தமிழ் பிறந்தது எனில் இந்த எளிதான முறையை அப்படியே கையாண்டு இருக்கலாமே.

தமிழில் இருந்த இடர்ப்பாடைக் களைந்து அசோகன் காலத்தில் கூட்டெழுத்து உருவாக்கப்பட்டுள்ளது. அசோகனுடைய கல்வெட்டு களில் காணப்படும் கூட்டெழுத்துக்கள் பல தவறாகவே எழுதப் பட்டுள்ளன. முதன் முதலில் இதனைப் புகுத்தியமையால் இத்தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். 'சர்வ' என்ற சொல் "சவ்ர" என்றும் "பிரிய" என்பது "ர்பிய" என்றும் "தர்ம" என்பது 'த்ரம' என்றும் தவறுதலாகப் பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

தமிழ் எழுத்திற்கும் அசோகன்-பிராமி எழுத்திற்கும் பொதுவான ஒரு சொல்லை நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்டால் அவற்றிற்கிடையே உள்ள வேற்றுமை நன்கு விளங்கும். தமிழில் இருந்து அசோகன்-பிராமி வளர்ச்சி யடைந்ததை மிக எளிதில் அறிய இயலும். எடுத்துக்காட்டாக 'தர்மம்' என்ற சொல் தமிழிலும் அசோகன் பிராமியிலும் காணப்படுகிறது. தமிழில் தம்மம் என்பது "" என எழுதப்பட்டுள்ளது. (மாங்குளம் கல்வெட்டு). இது அசோகன்-பிராமியில் " என எழுதப்பட்டுள்ளது.

எழுத்துக்களின் வேற்றுமை

தமிழிற்கும் அசோகன்-பிராமி எழுத்துக்களுக்கும் பொதுவான எழுத்துக்கள் சில வேற்றுமைகளைக் கொண்டுள்ளன. 'ம' என்ற எழுத்து தமிழில் '  ' இலாட வடிவில் நடுக்கோடு பெற்றும் அசோகன் பிராமியில் '  ' என்றும் எழுதப்படும். தமிழ் 'ம' முதலில் தோன்றி அசோகன் பிராமிக்கு செல்லும் பொழுது கையை எடுக்காமல் எழுதும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. 'ர' என்ற எழுத்து தமிழில் ஒரு செங்குத்துக் கோடாகவும் அசோகன் பிராமியில் வளைவுகளுடன் கூடிய கோடு காணப்படும். இவையாவும் எழுத்து வளர்ச்சி நிலையில் ஆய்வு செய்யும்பொழுது செங்குத்து அல்லது நேர் கொடுகள் முதலில் தோன்றியமையும் வளைவுகள் அதன் வளர்ச்சி நிலையையும் காட்டுவதாக அமையும்.



மட்கல ஓடுகள்

தமிழ் நாட்டில் தொன்மை வாய்ந்த பண்டைய நகரங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டதில் மட்கல ஓடுகளில் பெருமளவில் தமிழ் எழுத்துப் பொறித்த பெயர்கள் காணப்படுகின்றன. இவை பாமர மக்களின் பெயர்களாகத் திகழ்கின்றன. வட இந்தியாவில் தமிழ் நாட்டை விட அதிக இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டிருப்பினும் பானை ஓடுகளில் அசோகன்-பிராமி காணப்படவில்லை[1]. தமிழ் நாட்டில் மக்கள் அக்காலத்திய தமிழ் எழுத்து முறையை அறிந்திருந்தமை இதன் மூலம் நன்கு விளங்கும். மேலும் அசோகன் கல்வெட்டுகள் ஓர் அறிவிப்பு பலகை போன்றவை. பௌத்த மதத்தை மக்களிடம் பரப்ப எழுதப்பட்டது. எனவே மொழி வளர்ச்சியினை இவற்றில் காண்பது அரிது.

ஜம்பைக் கல்வெட்டு

அசோகனின் 13வது பாறைக் கல்வெட்டில் தம் ஆட்சிக்கு உட்படாத சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்யபுத்திரர் ஆகியோர் குறித்துக் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் ஜம்பை என்னும் ஊரில் கண்டுபிடித்த அதியமான் கல்வெட்டு சத்யபுத்திர மரபைக் கூறுகிறது. தகடுரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி அசோகனின் சம காலத்தவராக இருந்திருத்தல் வேண்டும். இக்கல்வெட்டின் காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டாகவே நாம் கருத வேண்டும்.

பண்டைத் தமிழ் எழுத்துக்களில் இருந்த குறைபாடுகள் எழுத்து வளர்ச்சியடைந்த நிலையில் மாற்றம் பெறத் தொடங்கின. அசோகனின் பிராமியிலிருந்த கூடடெழுத்து முறை மெய் எழுத்துக்களுக்கு புள்ளியிடும் வழக்கம் யாவும் அசோகன் பிராமியை ஒட்டி தமிழிலும் புகுத்தப்பட்டன. 'மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்' என்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு ஏற்ப இவை காணப்படுகின்றன.

கொடுமணல் அகழாய்வில் கிடைத்த மட்கல ஓட்டில் கூட்டெழுத்து காணப்படுகிறது. இது ஒரு சோதனையாக நாம் எடுத்துக் கொள்ளலாம் 'பண்ணன்' என்ற பெயர்  என எழுதப்பட்டுள்ளது. இதே போன்று பேராசிரியர் கே.வி. இராமன் அவர்கள் கரூரில் கண்டுபிடித்த முத்திரையில் 'நெல் வேட்டைஸ' என்ற சொல்  எனக் கூட்டெழுத்து கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த நிலையில் புள்ளியிடும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதை அரச்சலூர், குன்றக்குடி, சாதவாகனர் வெளியிட்ட இருமொழிக் காசு, பிள்ளையார் பட்டி, புகளூர்,அம்மன் கோயில் பட்டி, நெகனூர் பட்டி ஆகிய ஊர்களில் கிடைத்த கல்வெட்டுக்களில் காணலாம்.

மேற்குறித்த கருத்துக்கள் யாவும் தமிழ் எழுத்து, காலத்தால் அசோகன்-பிராமிக்கு முற்பட்டது என்பதும் அசோகன் பிராமி தமிழ் எழுத்திலிருந்து தோன்றியது என்பதும். தமிழ்நாட்டில் எழுத்துமுறையைக் கற்க வந்த சமணத் துறவிகள் சங்கம் வளர்த்த மதுரையின் சுற்றுப்புற மலைகளில் தங்கி தமிழையும் தமிழ் எழுத்துக் களையும் கற்று வட இந்தியாவிற்குப் 'பட்டிபொருலு' வழியாக எடுத்துச் சென்றுள்ளனர் என்பதும் புலப்படும். தமிழ் நாட்டில் தோன்றிய தமிழ் எழுத்துக்களின் காலம் கி.மு.500 என நாம் கொள்ளலாம். 'பட்டிபொருலு' பௌத்த சமயம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் தழைத்திருந்தது. சமண முனிவர்களின் வருகையைக் குறித்துப் பிற்காலத்தைச் சார்ந்த நாலடியாரும் கூறுகிறது. அசோகன்-பிராமி பிற்காலத்தில் பலமாற்றங்கள் பெற்று பல்வேறு எழுத்து வடிவங்களாக மாறியது. தென்வகை வரிவடிவத்தை பல்லவர்கள் தமிழ் நாட்டில் புகுத்தி வடமொழி எழுத பல்லவ கிரந்தம் என்னும் எழுத்து வகையை உருவாக்கினர். இப்பல்லவகிரந்தமே அசோகனின் பிராமியிலிருந்து பிறந்தது எனத்துணியலாம்.

அடிக்குறிப்பு

1. ஆந்திரப்பகுதியில் வட்டமாறு, அமராவதி ஆகிய இடங்களில் மட்டுமே பானை ஓடுகளில் எழுத்துப் பொறிப்புகள் கிடைத்துள்ளன.

16. கரூர் அமராவதிப் படுகையில் ஒரு வியத்தகு பொன் மோதிரம்

பேராசிரியர் ம. இராசசேகரதங்கமணி, கரூர்

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றிலும் தொல்லியல் வரலாற்றிலும் கரூருக்கு தனித்ததோர் இடமும் புகழும் உண்டு. சங்க காலத்தில் கரூர், சேரரின் கோநகராத் திகழ்ந்த பெருமைக்குரியது. வரலாற்றுச் சிறப்பும் வணிகச் சிறப்பும் ஒருங்கே கொண்டு உலக வணிக வரைபடத்தில் இடம் பெற்றது இம்மூதூர், இக்கோ நகர் பண்டு வஞ்சி, வஞ்சுளாரண்யம், வஞ்சிமாநகர், வஞ்சித்தாய், ஊர் ஆதிபுரம், வீரசோழபுரம், கர்ப்பபுரி, பாஸ்கரபுரம், க்ஷண்மங்கல க்ஷேத்திரம், முடிவழங்கு சோழபுரம் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டது. சேரர் மட்டுமின்றி சங்கச் சோழர், பாண்டியர், பல்லவர், பேராதிக்கச் சோழர், கொங்கு சோழர், அதியமான், கெட்டி முதலிகள், விசய நகரத்தார், மதுரை நாயக்கர் முதலான அரச குடியினரும் கரூர்ப் பகுதியை ஆட்சி புரிந்துள்ளனர். சங்க காலம் தொடங்கி இன்று வரை வணிக நகரமாக விளங்கி வரும் கரூரில் பலவிதமானத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் தங்க அணிகலன்கள் செய்யும் தொழில் மிகவும் புகழ்பெற்றது. கரூருக்கு அருகில் உள்ள ஆறுநாட்டார் மலை தமிழிக் கல்வெட்டில் பொன் வாணிகன் அத்தி[1] என்பான் குறிக்கப் பெறுகிறான். தமிழ் நாட்டரசு தொல்லியல் துறை கரூரில் நடத்திய அகழாய்வில் பொன் காய்ச்சப் பயன்படும் மூசை கிடைத்துள்ளது. கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் நூற்றுக்கு மேற்பட்ட கலையெழில் கொஞ்சும் பொன் மோதிரங்களும், வெள்ளி மோதிரங்களும் சிற்ப மோதிரங்களும், முத்திரைக் காசுகள் தயாரிக்கப் பயன்படும் அச்சுகளும், பொன் வெள்ளிக் காசுகளும் கிடைத்துள்ளன[2]. இவற்றால் பழங்கால முதற் கொண்டே கரூர் பொன் அணிகலன்கள் தயாரிக்கும் கலைத் தொழிலில் தலை சிறந்து விளங்கியமை புலனாகும். கரூரில் கிடைத்த மோதிரங்கள் பற்றியும், கள ஆய்வில் எனக்கு கிடைத்துள்ள 'மித்ரன்' எனப் பெயர் பொறிக்கப்பட்ட பொன் மோதிரம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வணிக மையம் கரூர்

சங்க காலத்திலேயே கரூர் உலக வாணிக வரைபடத்தில் இடம் பெற்றது; கடல் கடந்த நாடுகள் பலவற்றுடன் வணிகம் புரிந்து வந்தது. இதனை தாலமியின் நிலநூலும் உறுதிப் படுத்துகின்றது. கேந்திர முக்கியத்துவம் மிக்க கரூர் பண்டு வணிக வழிகள் பல கூடுமிடத்தில் அமைந்திருந்தது. எடுத்துகாட்டாகத் தேசியப் பெருவழியாக விளங்கிய தட்சிணபதம் கொங்கப் பெருவழி ஆகியவை கரூரில் சந்தித்தன. கரூரைச்

சுற்றியுள்ள பகுதிகளில் கடல் நீல பச்சைக்கல், இளஞ்சிகப்பு நீலக்கல், வைடூரியம், பழுப்பு நிறக்கல், வெள்ளைக்கல், பொன் ஆகிய விலையுயர்ந்த பொருட்கள் கிடைத்தன. இவை உரோம் நாட்டு வணிகர்களால் விரும்பி வாங்கப்பட்டன. இப்பகுதியில் அழகு மணிகள் பல தயாரிக்கப்பட்டன. உரோமானியர், கிரேக்கர், சீனர், பொனீஷியர் - முதலான அயல் நாட்டினரது காசுகளும் சாதவாகனர். குப்தர், கனிஷ்கர் - முதலான இந்தியர் காசுகளும் அதிக அளவில் கரூர் அமராவதிப் படுகையில் கிடைப்பதாலும் கரூரின் வணிக முக்கியத்துவம் அறியப்படுகின்றது.

கரூரில் கிடைத்த மோதிரங்கள்

கரூரில் கலைச் சிறப்பு மிக்க பல பொன், வெள்ளி மோதிரங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 'தித்தன்', 'வெளி ஈ சாம்பன்', 'ஊபாஆன்', 'தாயன் ஓதலன்' (திசன் ஓதலன்) 'சாதன் சாதி வேள்', 'நெல் வேட்டைச' (நெல்வேள் திசன்), 'குறவன்', 'வேடுவன்' 'பேர்அவதான்'[3] முதலான பெயர்கள் பொறிக்கப்பட்ட மோதிரங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும். இவை அனைத்தும் தமிழி எழுத்துக்கள் ஆகும். இவை மட்டுமின்றி ஆண்-பெண் உருவம் பொறிக்கப்பட்ட சங்க கால மோதிரம் ஒன்றும் கிடைத்துள்ளது. இதன் கலைத் திறனே தனி தான். குதிரை, புலி, மீன், அப்போலோ - ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்ட நேர்த்தியான விலை மதிப்பிட இயலாத மோதிரங்களும் இங்கே கிடைத்துள்ளன. புலி மீதமர்ந்த அப்போலோ கணையாழி உரோம் நாட்டுத் தொடர்பை உணர்த்துகின்றது. கரூர் முத்திரை மோதிரங்கள் பற்றிய விரிவான செய்திகளை கு.தாமோதரன் அவர்களது கட்டுரையில் காணலாம்[4].

மித்ரன் பொன் மோதிரம்

1997-ஆம் ஆண்டு இம்மோதிரம் கட்டுரை ஆசிரியரால் கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது. சுண்டு விரலில் அணியக் கூடிய அளவில் சிறிதாக உள்ள இம்மோதிரம் 2.20 கிராம் எடை கொண்டது. மோதிரத்தின் மேல்புரம் முட்டை வடிவில் உள்ளது. 'மிதிரான்' என்று தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. 'மிதிரன்' என்று படிக்க வேண்டும்[5]. பட்டிபுரோலு, மாங்குளம் ஆகிய கல்வெட்டுகள் இம்முறையிலேயே படிக்கப் பட்டுள்ளன. இம் மோதிரத்தின் எழுத்தமைதி இக்கல்வெட்டுகளின் காலத்தியது என்று கொண்டால் இம்மோதிரம் கி.மு. முதலிரண்டு நூற்றாண்டு களைச் சேர்ந்தது எனலாம்.

'மிதிரன்' என்பதில் உள்ள 'மி' 'ன்' ஆகிய எழுத்துக்கள் தமிழ்நாட்டிற்கே உரியவை. 'மிதிரன்' என்பது வட சொல்லான 'மித்ரன்' என்பதின் தமிழாக்கம் என்று கருதலாம். 'மித்ரன்' என்ற வடசொல்லுக்கு

சூரியன் என்றும் நண்பன் என்றும் பொருளுண்டு வடவேந்தர்களின் பெயர்களில் சில அசோகமித்ரன் சங்கமித்ரன்' என மித்ரன் பின்னொட்டுச் சொல்லைக் கொண்டு விளங்குவது இங்கு நோக்கதக்கதாகும். இப்பெயர் இம்மோதிரத்தை அணிந்திருந்தவரின் சொந்தப் பெயராகத் தோன்றுகிறது. இவர் கரூரில் வாழ்ந்த அரசியல் தலைவராகவோ, படைவீரராகவோ இருக்கலாம்.

அடிக்குறிப்புகள்

1. பொன் வாணிகன் நத்தி எனவும் படிக்கலாம்.
2. காண்க: ஆறுமுக சீதாராமன் 'தமிழக தொல்லியல் சான்றுகள் தொகுதி: 1 பக்-7;8;9;11;
3. 'பேர் அவதான்' எனும் வெள்ளி மோதிரம் தொல்பொருள் துறை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்களால் கரூர் கள ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது.
4. கு. தாமோதரன் 'கரூர் முத்திரை மோதிரங்கள்' 16, 17-5-1992இல் கரூர் வரலாற்றுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இவை சங்க காலத்தனவாகும்.
5. திரு. இரா. பூங்குன்றன் அவர்களின் வாசிப்பு

17. கோனேரின்மைகொண்டான் ஒரு மீள்பார்வை

-எ. சுப்பராயலு, தஞ்சாவூர்.

சோழர், பாண்டியர் மற்றும் கொங்கு அரசர் கல்வெட்டுகளில் காணப்படும் கோனேரின்மைகொண்டான் என்ற சொல்லைக் குறித்து ஆராய முற்படுகிறது இக்கட்டுரை[1]. முன்னோடிக் கல்வெட்டாய்வாளர்களான ஊல்சு வெங்கையா மற்றும் கிருஷ்ண சாஸ்திரி ஆகியோர் இச்சொல் குறித்து ஓரளவு விளக்கியுள்ளனர். முதல் ராஜேந்திரனின் திருவாலங்காட்டுப் பட்டயத்தைப் பதிப்பித்த கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் இச்சொல் பற்றி மிகத்துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளார்[2]. அதன் தமிழாக்கம் வருமாறு:

''கோநேரின்மைகொண்டான், கோநோன்மை கொண்டான், கோநேரிம்மைகொண்டான், கோனேரிமேல் கொண்டான், கோநேர்மைகொண்டான், கோநோன் இன்மை கொண்டான் என்று பலவாறாக இச்சொல் தனித்தோ அல்லது பட்டயம் வழங்கும் அரசன் பெயரைத் தொடர்ந்தோ வருகிறது. ஒரு பட்டம் என்ற வகையில் இதன் பொருள் ஊல்சு அவர்களால் விவாதிக்கப்பட்டுள்ளது. ... சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் வரும் ஓர் இணையான தொடரைக்கொண்டு இன்னொரு விளக்கத்தை திரு வெங்கையா கொடுத்துள்ளார். இந்தச் சொல் பெரும்பாலும் அரசனின் ஆணையைக் கொண்ட பகுதியை அடுத்து வரும் துணைப்பகுதியில் வரும். இவ்விரு பகுதிகளும் ஒரே கல்வெட்டின் பகுதிகளாகவோ அல்லது ஒரே சுவரில் அருகருகே பொறிக்கப்பட்ட தொடர்புடைய தனிக்கல்வெட்டு களாகவோ வரும். ஆகவே இது முதலில் பெயர்கொண்டு குறிப்பிடப்பட்ட அரசனை மிகுந்த மரியாதையோடு சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதவேண்டியுள்ளது. இதன் சரியான வடிவம் 'தன்னிகரற்ற அரசன்' என்று பொருள் தரும் கோநேரின்மை கொண்டான் ஆகலாம்''.

ஊல்சும் இதற்கு முன்பு இப்படி ஒரு கருத்துக் கொண்டிருந்தார். இச்சொல்லை கோ - நேர் - இல் - மை - கொண்டான் என்று பகுத்து 'அரசருள் தன்னிகரற்றவன் என்ற பட்டங் கொண்டவன்' என்று பொருள் கொள்ளலாம் எனக் கருதினார் [3] வெங்கையாவின் விளக்கம் வேறு வகையாக இருந்தது.[4] திருமால்புரத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் உள்ள கோநோன்-இன்மை-கொண்டான் என்ற வடிவம் குத்தாலம் கல்வெட்டு ஒன்றில் அவர் கண்ட கோநோ - இன்மை - கொண்டான் என்ற சரியான வடிவத்திலிருந்து சிறிது வேறுபட்டது என்று கருதினார். பிந்திய சொல்

'அரசன் நலமாக உள்ளார்' எனப் பொருள் தரும். இது சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் வரும் 'குஸலி' என்ற சொல்லோடு தொடர்புடையது என்று அவர் கொண்டார். இக்கருத்துக்குறித்து கிருஷ்ண சாஸ்திரி கருத்தளிப்பு எதுவும் கொடுக்கவில்லை; அவருக்கு அது உடன்பாடில்லை என்று கருதவேண்டியுள்ளது.

வெங்கையாவின் கருத்துக்கு எதிராக கீழ்க்காணும் குறிப்புகளைச் சுட்டலாம். குத்தாலம் கல்வெட்டில் 'கோநோ-இன்மை-கொண்டான்' என்று அவர் படித்த அதே சொல்லை 'கோநேர்-இன்மை-கொண்டான்' என ஊல்சு படித்துள்ளார்[5]. கல்வெட்டில் 'நோ','நேர்' ஆகியவற்றுக் கிடையில் உருவ வேறுபாடு ஏதும் இல்லை. மெய்யைக் குறிக்க இடும் புள்ளி பெரும்பாலும் பொறிக்கப்படுவதில்லை. இடத்துக்கு ஏற்பக், கல்வெட்டைப் படிப்பவர் புள்ளியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் வெங்கையா புள்ளியைச் சேர்த்துப் படித்துள்ளார். எனினும் சாலை கிராமத்தில் உள்ள ஒரு முற்பாண்டியர் காலத்து வட்டெழுத்துக் கல்வெட்டில் (910) கோநோ-இன்மை-கொண்டான் என்றுள்ளது[6]. இங்கு 'நோ' என்றே உள்ளது. வட்டெழுத்தைப் பொறுத்த வரை 'நோ', 'நேர்' ஆகியவற்றுக்கிடையில் மயக்கம் இல்லை. வெங்கைய்யாவின் பாடத்தை இது ஓரளவு உறுதி செய்யலாம். ஆயினும் 'கோ நோ யின்மை கொண்டான்' என்பதே சரியான வடிவமாக இருக்கமுடியும். இந்தச் சரியான வடிவம் எக்கல்வெட்டிலும் வரவில்லை. மேலும் 'நலமாக உள்ளார்' என்பதைத் தெரிவிக்க 'நோயின்னை' என்ற எதிர்மறைச் சொல் ஏன் ஆளப்படவேண்டும்?

இச்சொல் சார்ந்த எல்லாச் செய்திகளையும் கீழ்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம். ஏறக்குறைய ஆறாயிரத்தைநூறு கல்வெட்டுகளுள் 144 கல்வெட்டுகளில் இச்சொல் வருகிறது. இந்த எண்ணிகையுள்ளும் பல்வேறு வடிவங்கள் உள்ளன. இச்சொல்லில் வரும் 'ந', 'ன' வேறுபாட்டை (கோநேரி, கோனேரி)தவிர்த்துவிட்டால் ஒவ்வொரு வடிவத்தின் நிகழ்வு எண்ணிக்கைகள் கீழ்வருமாறு உள்ளது:

1)	கோனேரின்மை-கொண்டான்	85
2)	கோனேரில்மை-கொண்டான்	1
3)	கோனேரிமேல்-கொண்டான்	19
4)	கோனேரிமேன்-கொண்டான்	6
5)	கோனேரி(ன்) மேல்-கொண்டான்	7
6)	கோனேரி(ம்)மை-கொண்டான்	12

7) கோனேரி-இம்மை-கொண்டான் 1

8) கோனேர்-இன்மை-கொண்டான் 7

(கோனோ-இன்மை-கொண்டான்?)

9) கோனேர்மை-கொண்டான் 1

10) கொனோன்-இன்மை-கொண்டான் 2

11) கோனோன்மை-கொண்டான் 3

வடிவம் 1, 2-க்குள் பெரும்பாலும் வேறுபாடு இல்லை. வடிவம் 6,7 ஆகியவற்றையும் முதலிரண்டுடன் சேர்க்கலாம். 8-க்கும் 1-க்கும் வெங்கையாவின் வேறுபட்ட பாடம் தவிர வேறு வேறுபாடில்லை. 3,4-க்குள் உள்ள வேறுபாடு சந்தி மட்டுமே. 3, 4, 5 ஆகியவற்றை ஒன்றாகக் கருதலாம். ஆகக் கடைசி ஒரு சிலவற்றைத் தவிர எல்லா வடிவங்களையும் இரண்டு வகைக்குள் அடக்கலாம். 1) கோனேரின்மை-கொண்டான் (106),2) கோனேரிமேல்-கொண்டான் (32). இரண்டாவது வகை மொத்தத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவே;மேலும் அந்த வகை பிற்கால, அதாவது பதின்மூன்றாம் நூற்றாண்டு மற்றும் பிந்திய கல்வெட்டுகளிலேயே வருகின்றன. ஆகவே கோநேரின்மை-கொண்டான் என்ற வடிவமே சரியான மூல வடிவம் என முடிவு செய்யலாம். இருப்பினும் எல்லா வடிவங்களும் ஒரே சொல்லைச் சுட்டுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் ஒரே அரசன் காலத்திலேயே வேறு வேறு வடிவங்கள் காணப்படுகின்றன. காட்டாக, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (1178-1218) ஐந்து வடிவங்கள் (1, 3, 4, 6, 7) விரவி வருகின்றன.

இந்தச் சொல்லின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை இனி பார்க்கலாம்.இச்சொல் வரும் கல்வெட்டுகள் யாவற்றிலும் (ஒன்றிண்டைத்தவிர)[7] அரசனிடமிருந்து கொடையளிக்கப் பெற்றவருக்கு அனுப்பப்பட்ட நேரடி ஆணையைக் குறித்தனவாகும். இவற்றில் ஐம்பது விழுக்காடு மட்டும் அரசனின் பெயர் கொண்டுள்ளன. மேலும் அரசன் பெயர் உள்ள கல்வெட்டுகளில் அரசன் பெயரும் கோனேரிம்மைகொண்டான் என்ற சொல்லும் தொடர்ச்சியாக அல்லது அருகருகே ஒருசில கல்வெட்டுகளில் மட்டுமேவருகின்றன. மாறாக அரசன் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் கோனேரின்மைகொண்டான் வழங்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். இதைக் கிருஷ்ண சாஸ்திரியும் கவனித்துள்ளார் என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்தச் சொல் வழக்காற்றுக்குக் கீழ்வருமாறு பொருள் விளக்கம் செய்யலாம்.

அரச ஆணைகள் கொண்ட கல்வெட்டுகளாகட்டும், செப்புப் பட்டயங்களாகட்டும், யாவுமே அரசனின் மூல ஆணைகள் அல்ல. அவை

அரசனின் வாய்மொழி ஆணைகளை முறையாக விரிவு படுத்தி எழுதப்பட்ட பாடங்களாகும். உள்ளபடியே பெரும்பாலானவற்றில் 'திருமுகப்படி' என்ற சொல் வருகிறது. அரசனின் ஆணைப்படி என்று இதற்குப் பொருள். அரசனின் வாய்மொழியாகக் கொடுக்கப்பட்ட ஆணையைத் திருமந்திர ஓலை எனப்பட்ட அரசனின் அணுக்க எழுத்தர் அல்லது செயலரால் எழுதப்பட்ட பிறகு அது ஓலை அல்லது தீட்டு எனப்பட்டது. இது அதிகாரிகள் முதலிய பல உயர் அலுவலரால் சரிபார்க்கப்பட்ட பிறகு யாவருக்கும் அறிவிக்கவும் கொடைபெறுபவருக்கு உரிய ஆவண நகல் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே ஒரு முழுமையான அரச சாஸனம் அல்லது கல்வெடடு அரசனின் வாய்மொழி ஆணை, அதனை அரச அலுவலர் ஒப்பீடு செய்தமை ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும். ஐம்பது விழுக்காடு கல்வெடடுகளே இப்படி முழுமையானவை. ஆனால் பெரும்பாலானவை வாய்மொழி யாணையைப் பெற்றுள்ளன. இந்த வாய்மொழியாணைப் பகுதிகளின் தொடக்கத்தில் தான் கோனேரின்மைகொண்டான் என்ற சொல் வரும்.

இந்தக் கருதுகோளைச் சோழரின் இரு பெரிய சாஸனங்களான ஆனைமங்கலப் பட்டயம், திருவாலங்காட்டுப் பட்டயம் ஆகியவற்றின் மூலம் விளக்கலாம்[8]. முன்னது கோநேரின்மை-கொண்டான் என்ற சொல்லுடனும் பின்னது கோநேர்-இன்மை-கொண்டான் என்ற சொல்லுடனும் தொடங்குகின்றன. அரசனின் வாய்க்கேழ்விப் பகுதி முற்றிலும் கொடுக்கப்பட்ட பிறகு அரசனின் பெயர் சுட்டப்படுகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் பெரும்பாலானவற்றிலும், சோழரின் கல்வெட்டுகளில் ஒருசிலவற்றிலும் கோனேரின்மை கொண்டான் என்ற தொடர் கல்வெடடின் இடைப்பகுதியில் வருகிறது. ஆனால் இவைகளில் இச்சொல்லுடன் தொடங்கும் பிற்பகுதி மற்ற கல்வெட்டுப் பகுதியிலிருந்து தனித்துக் காணப்படும். உள்ளபடியே பல இடங்களில் இப்பகுதிகள் தனித்தனியாக, ஆனால் ஒரே சுவரில் அருகருகே பொறிக்கப்பட்டுள்ளன. இந்த உண்மையைக் கிருஷ்ண சாஸ்திரியும் குறிப்பிட்டுள்ளார் என்பதை மேலே பார்த்தோம். கோனேரின்மை கொண்டானுடன் தொடங்கும் பகுதி தன்மை வினையுடன் காணப்படும். அதாவது அரசன் வாயிலிருந்து நேரடியாகச் சொல்லப்பட்டது அது என்று சொல்லலாம். இதல்லாத மற்றப் பகுதி வழக்கமாக அரசனின் பெயர் கொண்டுள்ளது. அரச அலுவலர்களின் ஒப்பிட்டுச் செய்தியைக் குறிப்பிடும் இப்பகுதியும் அரசனின் வாய்மொழி ஆணையைச் சுட்டும்.

ஆனால் அது பிறவினை கொண்டு காணப்படும்.

வாய்மொழி ஆணையை ஓலையில் எழுதுகிற அரசுனுடைய அணுக்கச் செயலர் அரசனின் பெயரைக் குறிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு இச்சொல் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் அரசனே தன் பெயரைச் சுட்டுவது போல எழுதுவது குடிமக்களுக்கு விசித்திரமாகக் காணப்படும். ஊல்சும் கிருஷ்ண சாஸ்திரியும் கொண்டது போல் இச்சொல் 'தன்னேரில்லாதவன்' எனப் பொருள்படும். அரசனின் உன்னத ஆற்றலை வெளிப்படுத்தும் இச்சொல் மக்களிடம் பயத்தையும் மரியாதையையும் உண்டாக்கியிருக்கும். அரசன் என்று மட்டும் பொருள் தரும் 'கோ' அல்லது 'கோன்' என்ற சொல் 'கோனேரின்மை கொண்டான்' என்ற சொல்லுக்கு மாற்றாக முடியாது.

இதுவரை கிடைத்துள்ள தரவுகளிலிருந்து, இச்சொல் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அரச பரம்பரை முறையில் பார்த்தால் பாண்டியர் கல்வெடடுகளில் 72 தடவையும், சோழரின் கல்வெட்டுகளில் 58 தடவையும், கொங்கு அரசர் கல்வெட்டுகளில் 14 தடவையும் வந்துள்ளது. சோழர் காலத்தைப் பொறுத்த வரையில் அன்பில் பட்டயத்தில் (960) முதன்முறையாக வருகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் பத்தாம் நூற்றாண்டில் உள்ள ஒன்றிரண்டைத் தவிர மற்றவை 12ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்புமே வருகிறது. சோழர் பகுதியிலும் காலப்போக்கில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. 956-1178 காலப் பகுதியில் ஆண்ட அரசர்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்று அல்லது இரண்டு கல்வெட்டுகளில் மட்டும் மேற்படி சொல் வருகிறது. இரண்டாம் ராஜராஜனுக்கு மூன்று கல்வெட்டுகள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) ஆட்சியில் மிக அதிகப்படியாக 20 கிடைக்கின்றன. இதற்குத் தனித்த காரணம் இருக்க வேண்டும். அதாவது இவ்வரசன் ஆட்சியில் குறுநில அரசுகளின் ஏழுச்சி ஒரு பிரச்சினையாக, அரச அதிகாரத்துக்கு ஒரு முரணாக வெளிப்பட்டது. ஆகவே அரசன் தன் அதிகாரத்தை நிலைநாட்ட மிகுந்த முனைப்புக்காட்ட வேண்டியிருந்தது. அதன் ஒரு வெளிப்பாடே அக்காலத்தில் கோனேரின்மைகொண்டான் கல்வெட்டுகளின் பெருக்கமாகும். பொதுவாகப்பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டு அரசர்கள் தங்கள் குடிகளுக்கு அடிக்கடி தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தித் தங்களை அடையாளம் காட்டவேண்டிய நெருக்கடி இருந்தது என்பதை இச்சொல்லாட்சியிலிருந்து பெறலாம்.

அடிக்குறிப்புகள்

1) தென்னிந்தியக்கல்வெட்டுகள் (தெக) 1 முதல்23 முடிய உள்ள தொகுதிகளில் பாடங்களோடு பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டுகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

2) தெக., 3,ப.426 அகு.

3) தெக., 2 ப. 110.

4) இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கை, 1906-07, ப.71.

5) தெக., 2, ப. 110.

6) எபிக்ராஃபியா இண்டிகா (எஇ), 28,ப.91

7) தெக., 3, எண். 61 (3ஆம் குலோத்துங்கன்; தெக., 17, எண். 144 (பாண்டியர்).

8) தெக., 3ப. 402-05,வரி. 1-131,142; எஇ., 22, ப.243-45,வரி. 1-55, 62.

9) தெக., 5, எண். 663; தெக., 14, எண். 223,234,254,257; தெக., 17, எண். 135; திருவிதாங்கூர் தொல்லியல் வரிசை, 1,ப. 162-63.

18. கல்லறை

க. குழந்தைவேலன், சென்னை.

''சேவலங்கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே''

சேவற் கொடியை உடைய முருகன் காப்பதால்தான் இவ்வுலகம் பாதுகாப்பான இனிய வாழ்நாளை உடையதாய் இருக்கிறது எனக் குறுந்தொகை கடவுள் வாழ்த்துப் பாடல் கூறுகிறது. எனவே உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஏதோ ஒரு வகையில் காக்கப்படல் வேண்டும் என்பது உலகியல் முறை. நாகாக்க, நீரினும் நன்றதன் காப்பு, காக்கப் பொருளா அடக்கத்தை, காவலன் காவான் எனின், நிறை காக்கும் காப்பே தலை, காப்பாற்றும் மன்னவன் இறை; அறிவு அற்றம் காக்கும் என ஒவ்வொரு துறையிலும் காத்தல் இன்றியமையாததாகிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே. இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் (செல்வம்) இன்றியமையாதது: அதனைத் தேடிச் சேர்த்தோரே இவ்வுலகில் வாழத் தகுந்தவராவர். பொருளிலார்க்கு இவ்வுலகில்லை அன்றோ. அதனால் மக்கள் பொருளைத் தேடுவதே வாழ்வின் குறிக்கோளாய் அலைகின்றனர். தேடிச் சேர்ப்பதிலும் அதனைக் காத்து வைத்தல் அரிய செயலாக உள்ளது.

இயற்றலும் ஈட்டாலும் காத்தாலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு — குறள் 385

எனவே ஈட்டுவதைவிட காத்தலிலும் வல்லவனே அரசனாவான். தாழும் கோலும், கோட்டையும் கொத்தளமும் அழிக்க வியலா அரண்களும், காண வியலா கமுக்க அறைகளும் பிறவும் பொருளைக் காப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்டன என்பதை வரலாறு கூறுகிறது.

கோயில் என்பது நாடாளும் மன்னனது அரண்மனையையும், உலகாளும் இறைவன் எழுந்தருளும் திருமனையையும் குறிக்கும். இறைவன் கோயில்களும் அரசமாளிகைகளைப் போன்ற ஆட்சி நிலையங்களாகவே விளங்கின. அரசனது இறைப் பொருளும், திறைப்பொருளும், கொண்டிப் பொருளும் தொகுத்துக் காக்க அமைக்கப்பட்ட பண்டாரங்கள் (கருவூலங்கள்) அரண்மனைகளில் இருந்ததைப் போன்றே கோயில் வருவாய்களையும் கொடைப் பொருள்களையும் காத்து வைக்கக் கோயில்தோறும் பண்டாரங்கள் இருந்ததைக் கல்வெட்டுகளில் பரவலாகக் காணலாம். இத்தகைய பண்டாரங்கள் மிகப் பெரிய அளவில் பேசப்படுவதால் பொதுமக்களுக்கு

அவை இருக்குமிடம் தெரியாதவாறு காப்பாக அமைக்கப்பட்ட அறைகளாக இருந்திருத்தல் வேண்டும்.

காவலை உடைய இவ்வகைக் கோயில் பண்டாரங்களைத் தவிர அரிய செல்வங்களைக் கமுக்கமாகக் காத்து வைக்கும் மறைவான ஏமப் பண்டாரங்களும் இருந்துள்ளன என்பது ஆய்வுகளின் வழிக் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய கமுக்கமான ஏமப் பண்டாரங்கள் கோயிலினுள்ளே நிலத்தைத் தோண்டிச் செங்கற்களாலோ, அல்லது கருங்கற்களாலோ நீள் சதுரவடிவில் அறை அமைத்து மேலே பாவு கல்லால் மூடிச் சாந்திட்டு அதன்மேல் எவரும் அறியாமல் தரை இட்டுக் கட்டப்பட்டிருந்தன. இவ்வறைகள் பெரும்பாலும் கருங்கற்களாலேயே வலிமையாகக் கட்டப்பட்டுள்ளன என்பது ஆய்வுகளின் வழி அறிய வருகிறது. இவற்றுள் இறங்கிச் செல்லப் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலவறைகள் தஞ்சை மாவட்டம் நல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம் பெரும்புதூர் வட்டத்து சிவபுரம், திருச்சி மாவட்டத்து வேம்பத்தூர், கடலூர் மாவட்டத்துத் திருவதிகை, திருமுட்டம்; வேலூர் மாவட்டத்து கழஞ்சூர், நாமக்கல் மாவட்டத்து மணப்பள்ளி; விழுப்புரம் மாவட்டத்து ஆதனூர் முதலான கோயில்களில் கண்டறியப்பட்டுள்ளன.

அரும்பொருள் காப்புக்காகக் கட்டப்பட்ட இக்கமுக்க நிலவறைகளின் இருப்பும், வழியும் கோயில் நிருவாகத்தில் முகாமைச் செயல்பாடுடைய சிலருக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டு மிகக் கமுக்கமாகக் காப்பாற்றப்பட்டன. காலப்போக்கில் அரசியல் சூழல் மாற்றங்களாலும் மகமதியப் படையெடுப்புகளாலும் திறக்கப்படாமலும், அறிந்தார் இறந்தொழிந்தமையாலும் அவற்றின் இருப்பிடம் மறக்கப்பட்டும் போயின. தற்காலத்தில் நேரா நேர்ச்சியாகச் சில இடங்களில் தரை உள் வாங்கியபொழுதும், பல்வேறு தேவைக்காக நிலத்தைத் தோண்டும் பொழுதும் இவ்வறைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றை அறைகளென அறியாப் பொது மக்கள் இவை சுருங்கை (சுரங்க) வழிகள் என்றும், பல காத தொலைவு செல்வதாகவும் பல கதைகள் கட்டிக் கதைத்து வருகின்றனர். இவற்றிற்கு அடிப்படையாகப் பண்டைய மன்னர்கள் நெருக்கடியான காலங்களில் மறைந்து செல்லக் கோட்டையினுள்ளிருந்து காவற் காடுகள் வரை அமைந்திருந்த சுருங்கை வழிகளைப் பற்றிய இலக்கியக் கேள்வியும், வரலாற்றுக் கதையாசிரியர் கல்கி தமது படைப்புகளில் மெய்யே போல கற்பனையால் எழுதிய சுரங்க வழிகளுமே காரணம் ஆகும். ஆனால் அத்தகையதொரு நீண்ட சுரங்கவழி இதுவரை கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நிலத்தைத் தோண்டி அமைக்கப்பட்ட இந்நிலவறைகளைச் சுரங்கம், சுரங்கவழி, புதையல் கிணறு, நிலவறை என்பன போன்ற பல பெயர்களால் அழைத்து வருகின்றனர். ஆனால் நமது இலக்கியங்களும், கல்வெட்டுகளும் இவற்றைக் கல்லறைகள் என்றே குறிப்பிடுகின்றன.

''நெடியவன் மூவகைப் படிவம் பயின்ற
எழுதுநிலை மாடமும் இடுகொடிப் பந்தரும்
கல்லறை உறையுளொடு பல்லிடம்''

(பெருங். 2 : 15 : 10 - 12)

எனவரும் பெருங்கதை அடிகள் மாளிகைகளில் கல்லறைகள் இருந்தன என்பதைத் தெரிவிக்கிறது. இக்கல்லறை நாம் கண்டறிந்த நிலவறை போன்றதொரு அறையாகவே இருத்தல் வேண்டும். இவ்வடிகளுக்கு உரை கூறப் போந்த திரு உ.வே. சாமிநாத ஐயர் கல்லை அறுத்தியற்றிய அறை என்றும் கல்லால் ஆகிய அறையுமாம் என்றும் குறிப்பிடுகின்றார். கல்லால் கட்டப்படுகின்ற வீடும், அறைகளும் கல்வீடு, கல்லறை என வழங்குதல் பொதுவானதே. ஆதலின் இங்குக் கூறப்பட்ட கல்லறை உறையுள் என்பது நிலத்தைக் கல்லி அதாவது தோண்டி அமைக்கப்பட்ட அறை எனக் கொள்ளுதலே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் கானப்புலி வாழும் கல்முழை கூட கல்லறை என வழங்குவதைக் காண்கின்றோம்.

''கல்லறையி னுழுவை சினங்கொண்டு''. (தேவாரம் 1155)

கல் என்பதற்கு தோண்டு என்பதும் ஒரு பொருள் ''மலை கல்லி எலி பிடிக்கிறான்'' என்ற பழமொழியும், ''கிழங்கு கல்லி'' எனவரும் குற்றாலக் குறவஞ்சி அடியும் தோண்டுதல், அகழ்தல் என்ற பொருளில் வருதல் காண்க. ''குளந்தொட்டு வளம் பெருக்கி'' எனவரும் பட்டினப்பாலை (284) அடியில் தொட்டு என்ற சொல் கல்லி என்ற பொருளில் வருதலும் ''சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பு'' என்ற மதுரைக் காஞ்சி அடியில் (294) உள்ள அகழ்ந்த என்ற சொல்லுக்குக் கல்லப்பட்ட என்று நச்சினார்க்கினியர் உரை கூறி இருப்பதும் கல் என்பதற்கு தோண்டு என்பது பொருளாகக் கொள்ளக் கிடக்கிறது.

மேலும் கல்வெட்டுகளில் ஏரி குளம் போன்றவற்றைத் தோண்டி அமைப்பதை கல்லி அமைக்கப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளதையும் இங்கு நோக்குதல் தெளிவைத் தரும். கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் திருமுட்டத்தில் உள்ள திருமுட்டமுடையார் கோயிலில் உள் மண்டபத் தூணில் கி.பி. 959ஆம் ஆண்டில் (கலி 4060) இருங்கோளக் கோனாகிய நாராயணன் புகழுய்ப்பவர் கண்டன் கல்லுவித்த மாதேவிப் பேரேரி என வரும் தொடராலும், கோவை மாவட்டப் பகுதிகளில் வேளாண்மைக்கிடையூராய் உள்ள அருகைத் தோண்டி எடுப்பதை அருகு

கல்லல் என்று வழங்குவதாலும், தஞ்சை மாவட்டத்து திருப்பழனம், நாகை மாவட்டத் திருவாரூர் முதலான பல ஊர்க் கல்வெட்டுகளில் (தெ.இ.க. 5 : 533, 540) நிலத்தைக் கொத்தி அல்லது அகழ்ந்து நிலம் திருத்துதலைக் கல்லி, திருத்தி எனக் கூறப்படுதலும், தஞ்சை மாவட்டக் கடற்கரை ஊர்களில் மணலிட்ட நிலங்களில் அருகும் இல்லிப்பூடும் இராவணன் மோவாயும் மண்டிக் கிடந்ததைக் கல்லி அகற்றித் திருத்தி எனக் கூறப்படுவதும் கல்லுதல் என்பதற்கு தோண்டுதல் என்பது பொருளாக வருதல் காணலாம். எனவே கல்லறை என்பது கல்லி (அகழ்ந்து), அமைக்கப்பட்ட அறை எனப் பொருள் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

இதுகாறும் நாம் கண்டறிந்த கல்லறைகள் எல்லாம் நிலத்தை அகழ்ந்து அமைக்கப்பட்டனவே. இக்கல்லறைகள் நீள அகல உயரத்தில் ஏந்தான படிகளோடு அமைந்திருப்பதோடு உள்ளே மென்மணல் பரப்பி இக்காலத் தணப்பறைகள் (Air Condition) போலக் குளுமையாய் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கல்லறை உறையுள் என்பது இவ்வறை போன்ற அறைகளையே குறிக்கும் என்பதில் தவறில்லை. மேலும் கோயில்களில் அருஞ்செல்வங்களையும் பொன்னார் திருமேனி களையும் காக்க நிலத்தைத் தோண்டி அமைக்கப்பட்ட அறைகள் கல்லறை என்று அழைக்கப்பட்டுள்ளதும் இதனை வலியுறுத்துகிறது.

விசயநகர அரசன் கம்பண உடையார் காலத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்துத் திருக்கழுக்குன்றமுடையார் கோயில் தொண்டகநாயகன் திருக்காவணத்தில் கோயில் ஆளுங்கணத் தாரும், பிற உயர் அலுவலர்களும் ''நிறைவற நிறைந்து குறைவறக் கூடி முன்னாள் பிறமாதி வருசத்து கல்லறை திறந்து குன்றவானப் பெருமாள் திருவாசியிலே நூற்று ஐம்பது பொன் சோருகையில் இதுக்கு மெய்க்காவலான திருக்கழுக்குன்ற பட்டன் முதலியானைக் கேட்ட அளவில் திருவேற்காவுடையான் மருகன் ஆயத்தான் கல்லறை திறந்து பொன் உரித்து மீள அடைத்து சாந்து இடுகைக்கே முதலியான் கண்டு பிடிக்கையில்''... (தெ.இ.க. 5 : 479) எனவரும் கல்வெட்டுச் சொற்றொடர்களால் பொன்னும் பொருளும் இட்டு வைக்கும் நிலவறை கல்லறை என அழைக்கப்பட்டதென்றும், அவை சாந்திட்டு அடைக்கப்பட்ட கமுக்க அறை என்பதும் தெளிவாகிறது.

கோயில் அறைகள் அனைத்தும் கல்லால் கட்டப்பட்டிருக்க இவ்வறை மட்டும் கல்லறை என அடை கொடுத்தழைக்கப் பட்டதால் கல்லால் கட்டப்பட்டது என்ற பொருளில் அன்று என்பது தெளிவு. எனவே மற்றைய அறைகளைப் போலாது இவ்வறை கல்லி - அஃதாவது தோண்டி அமைக்கப்பட்டது என்ற பொருளிலேயே கல்லறை எனப் பெயர் பெற்றது என்பது தெளிவான ஒன்று.

கல்லறை என்ற சொல் இறந்தாரைப் புதைக்கும் ஈமக்குழிகளைக் குறிப்பதாக இன்றைய அகர முதலிகளும், பொது மக்களும் பொருள் கொள்கின்றனர். கிறித்தவ மதம் தழுவிய தமிழர்கள் மட்டுமே ஈமக்குழிகளைக் கல்லறை என்று அழைப்பதின் விளைவாகப் பரவிய புதிய பொருள் இது. அவர்கள் ஈமக்குழியைக் கல்லறை என்று அழைப்பதற்கு காரணம் மேலை நாட்டவர் இங்கு ஆட்சி செய்த பொழுது இயற்கையாகவும் போரிலும் இறந்த அலுவலர்கள் போர் வீரர்கள் மதம் பரப்பிகள் போன்ற கிறித்தவ மதம் சார்ந்தவர்களைப் புதைத்த இடங்களில் கல்லால் மேடை அமைத்து அவர் தம் பெயரையும் பெருமையும் அக்கல்லில் பொறித்துவைத்தமை காரணமாகும். மேலும் கிறித்தவ மதம் பரவும் வரை தமிழ்நாட்டு வழக்குப்படி இறந்தாரைத் தொடு குழியில் இட்ட வழக்கம் இந்து மதம் சார்பானது எனக் கருதித் தமது மதத்தை வெளிப்படுத்த மேலை நாட்டு முறைப்படிக் கல்லிட்டு மூடிப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டதாலும் இருக்கலாம். இவர்களைத் தவிர பிறர் எவரும் கல்லறை என்ற சொல்லை ஈமக்குழிக்குப் பயன்படுத்துவதில்லை.

தொல்பழங்காலத்தில் இறந்தாரை இடுவதற்குப் பல வகை முறைகள் பின்பற்றப்பட்டன. நிலத்தைத் தோண்டி இயற்கையாய்க் கிடைக்கும் கற்களைக் கொண்டு கவர் அமைத்து நடுவில் புதைத்து மூடிக் கல்லும் மண்ணும் குவித்து மேடாக்குதல் ஒருவகை. இதனை ஆங்கிலத்தில் சிஸ்ட் (Cist) என்பர். மற்றொருவகை வெட்டி எடுக்கப்பட்ட பலகைக் கற்களைக் கொண்டு நிலத்தை அகழ்ந்து நாற்புறமும் தொட்டி போல் நிறுத்தி மேலே ஒரு பலகைக் கல்லைக் கொண்டு மூடி அமைப்பது. இதனை சிலேப்சிசிட் (Slab Cist) எனத் தொல்லியலார் கூறுவர். இவையும் கல்லாலும் கல்லியும் அமைக்கப்பட்ட அறைகளே. எனினும் கல்லறை என அழைக்கப்பட்டதற்கான சான்று கிடைக்கவில்லை. இறந்தோர் புதைக்கப்படும் முறைகளைக் கூறும் மணிமேகலைகூட

''சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வையின் அடைப்போர் தாழியில் கவிப்போர்''
''சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து'' (மணி 16 : 25)

எனக் கூறுகின்றதே ஒழிய கல்லறை எனக் கூறவில்லை. ஆனால் அன்றும் இன்றும் சுடுவோரைத் தவிர மற்றையோரை, மண்ணை அகழ்ந்தே புதைக்கின்றனர். இறந்தாரைப் புதைக்கத் தோண்டிய குழி தொடு குழி என்றே அழைக்கப்பட்டதன்றி கல்லறை என்ற பெயரால் ஏட்டிலும் எழுத்திலும் எங்கும் அழைக்கப்பட்டதற்கான சான்றில்லை.

தொடு, தொட்டு, தொட்ட என்ற சொற்கள் தோண்டுதல் என்ற பொருளையே தருகின்றன. தொடுகுழி என்பது தோண்டிய குழி எனப் பொருள்படும். இதனை,

''குளம் தொட்டு வளம் பெருக்கி'' (ப. பாலை : 284)

''கரைபொரு தொடுகடல் குணக்கும்'' (புறம். 6)

''ஆறும் தொட்டவும் ஊறுவன'' (பெருங் 4 : 2 : 57)

எனவரும் இலக்கிய வரிகள் இதனை வலியுறுத்தும். இத்தொடு குழிகள் ஒரு வைப்பிடமாகவோ, இருப்பிடமாகவோ அமைத்துக் கட்டுவதற்காக ஆழ அகலமாகக் கல்லப்பட்டவை யன்று. சற்றே தோண்டி மூடப்பட்டதும், அகழ்ந்து விடப்பட்டதுமாகவே உள்ளன. எனவே இவை அறைகள் எனப் பெயர் பெறாது. கல்லறை என்பது ஒரு வரம்பிற்குள் கல்லி (அகழ்ந்து) ஒரு வடிவிற்குள் கட்டப்பட்ட அறைகளே கல்லறைகளாகும். எனவே கல்லறை என்பது கல்லிக் கட்டப்பட்ட நிலவறைகளையே குறிக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய கட்டுமானங்களில் குறைந்த இடத்தில் நிறைந்த பயனைப் பெறுவதற்காக நிலத்தை அகழ்ந்து வீடுகளும், அறைகளும் கட்டப்படுகின்றன. இவ்வீடுகளை அல்லது அறைகளை அண்டர் கிரவுண்டு (Under Ground) என்ற ஆங்கிலச் சொல்லால் அழைக்கின்றனர். நிலத்தை கல்லி அமைக்கப்படுவதால் இவைகள் கல்லறைகள் என அழைக்கப்படுவதே மிகப் பொருத்தமாகும். நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டது வீடாக இருக்குமாயின் கல்லில் (கல் + இல்) என அழைக்கலாம். கல்லறையின் பயன்பாடும் உருவும் மாறினாலும் பொருள் பொதிந்த தமிழ்ச் சொற்கள் என்றும் நிலைபேறுடையனவே. தமிழின் நிலைபேறு தமிழனின் நிலைபேறாகும்.

19. தமிழகக் கல்வெட்டுகளில் சீதனம்

முனைவர்.சு. இராசகோபால், சென்னை.

மனித வாழ்வில் மகிழ்வான நிகழ்வுகளில் மகிழ்வினை உந்தவும், வெளிப்படுத்தவும் பரிசுகள் தரப்படுகின்றன. அவ்விதம் தரப்படும் பரிசுகள் மகிழ்வான நினைவலைகளை வெளிப்படுத்துவதால் பெரிதும் போற்றப்படுகின்றன. இந்நினைவலைகள் பரிசு பெற்றவர் அதனைப் பரிசுகளாக மட்டுமல்லாது, செல்வத்தைப் பெருக்கித்தரும் பரிசு களாகவும் கிடைப்பருமையான பரிசுகளாகவும் அமையும்போது அவை, அப்பரிசுகளைப் பெற்றோரிடையே ஓர் உரிமை ஆதிக்கத்தையும், அவ்வகையில் கிடைக்காத அல்லது கிடைக்க வேண்டும் என்று கருதுகின்றவர்களிடையே ஒரு நிலை கொள்ளாததவிப்பு அல்லது பொறமையை எற்படுத்துன்றன. இந்நிலையில் மகிழ்வான பரிசுகள் மகிழ்வினைக் கெடுக்கும் பரிசுகளாக மாறிவிடுகின்றன.

மனித வாழ்வில் ஒரு மகிழ்வான கட்டம் திருமணம். இந்நிகழ்வில் பெற்றோரும் நண்பர்களும், உறவினர்களும், மதிப்பிற்குரியோரும் மணமக்களுக்குப் பரிசுகள் தந்து மகிழ்கின்றனர், மகிழ்விக்கின்றனர். பெண்னைணவிட ஆண் அதிக ஆதிக்கத்தன்மை பெற்று விளங்கும் சூழலில் பெண்ணின் நிலை பாதிக்கப்படும் கூறுகள் இருக்கவே செய்கிறது. இந்நிலையில் மணவாழ்வு பெற்று ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்கு இடம் பெயரும் பெண்ணின் எதிர்கால நலன் கருதி அவளுக்கு என்று தனிச்செல்வம் அல்லது தனித்துப் பயன்படும் பொருட்கள் பரிசாகத் தரப்பட வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுவது இயற்கையே. இந்த உந்துதலின் விளைவே ஸ்திரீதனமாகும்.

ஸ்த்ரீதனம் என்ற இச்சமஸ்கிருதச் சொல்லுக்குப் பெண்ணின் செல்வம் என்று பொருள். பண்டைய தர்மசாத்திரங்களை ஆய்வு செய்து நூல் எழுதிய பி.வி.கானே 'ஸ்த்ரீதனம்' என்று ஒரு தனித் தலைப்பில் பெண்ணின் செல்வம் குறித்துத் தகவல்கள் தந்துள்ளார். பெண்களுக்கு ஸ்த்ரிதனம் கிட்டும் வழிகள், அதன்மீதான அவளது ஆளுகை, ஸ்திரீதனத்தின் மீதான வழிவழி உரிமைகள் என்றும் வகைப்படுத்தித் தந்துள்ளார். ஸ்திரீதனம் என்ற சொல்லுக்குப் பெண்ணின் செல்வம் என்று பொருளிருந்த போதிலும் 'ஸ்மிருதி' நூல்களின் வாயிலாக அவளுக்குச் சில நிகழ்வுகளில் கிட்டும் பரிசுகள் மட்டுமே ஸ்திரீதனமாகக் கருதப்பட்டுள்ளன என்றும் அவர் எடுத்துக் காட்டுகின்றார். அவரது விளக்கப்படி ஸ்த்ரீதனம் என்பது ஆறு வகைப்படும் பரிசுகளாகும்[1]. அவை பின்வருமாறு : 1) அத்யாக்னிகா - மணமேடை நெருப்பின் முன்னதாகத்

தரப்படும் பரிசுகள், கொடைகள் 2) அத்யாவாஹணிகா - பெண்ணழைப்பு ஊர்வலத்தின் போது தரப்படும் பரிசுகள். 3) ஆதிவேதணிகா - கணவன் இரண்டாவது மனைவியை மணம் முடிக்கும்போது முதல் மனைவிக்குத் தரும் பரிசு 4) பிரிதிதத்தா - மாமனார், மாமியாருக்குப் பாதபூஜை செய்யும்போது கிடைக்கும் பரிசு. 5) சுல்கா - அணிகள், பாத்திரங்கள், கால்நடைகள், விலங்குகள், அடிமைகள் முதலான பரிசுகள் 6) அன்வாத்ஹேயா - திருமணத்திற்குப் பிறகு பெற்றோர் தரும் எப்பேர்ப்பட்ட பரிசுகளும் நல்கைகளும்.

தமிழகக் கல்வெட்டுகளில் ஸ்த்ரீதனம் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. பல இடங்களில் ஸ்திரீதனம் என்ற சொல் அப்பியே கையாளப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் தமிழ்ப்படுத்தப்பட்டு ''சீதனம்'' என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'அங்கமணி' என்ற சொல்லும் ஸ்த்ரீதனத்திற்கு இணையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'பாரிபோகம்,[2] என்ற சொல்லும் ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. சேக்கிழார் பெருமான் காரைக்கால் அம்மையார் புராணத்தில் 'மகள் கொடை' என்ற சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார்[3].

கி.பி. 9 முதல் கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரையிலான பாடம் வெளியான கல்வெட்டுகளில் உள்ள ஏறத்தாழ 25 கல்வெட்டுகள், ஸ்த்ரீதனம் பற்றிய செய்தி தருகின்றன, இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகின்றன[4]. இவை கிட்டத்தட்ட பரவலாகத் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கிடைத்தவையாகும். பாண்டியர், பல்லவர், சோழர் மற்றும் பிற்காலப் பல்லவர் காலங்களில் இவை வெளியிடப்பட்டுள்ளன. பிராமணர், வெள்ளாளர், வணிகர் ஆகியோர் இவற்றில் தொடர்புடையவர்களாவர்.

தமிழகக் கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயில் தொடர்பானவை. எனவே மேற்சொன்ன கல்வெட்டுகள் ஸ்த்ரிதனம் பற்றி நேரடியாகச் செய்திகளைத் தருபவன அல்ல. கோயிலுக்கான கொடைகள் ஸ்திரீதனச் செல்வம் தொடர்புடையவையாக உள்ள நிகழ்வுகளின் காரணமாக ஸ்த்ரீதனம் குறித்த செய்திகளை அவை மறைமுகமாக நமக்கு அறியத் தருகின்றன.

ஸ்த்ரீதனம் பற்றிய தொன்மையான கல்வெட்டு மானூரில் கிடைத்த பாண்டியர் கல்வெட்டாகும்[5]. இக்கல்வெட்டு அவ்வூரில் அமைந்த பிராமணர் சபை நடவடிக்கை பற்றியது. இச்சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வோரின் தகுதிகளைக் குறிப்பிடும் போது அப்பிராமணர் ஊரின் பங்குகளைப் பெற்றுள்ளோர் மட்டுமே கலந்து கொள்ளத் தகுதியுடையவர் என்றும் அப்பங்குகளை விலை

யாகவோ, ஸ்த்ரீதனமாகவோ யாரும் உரிமை பெற்றிருந்தால் அவ்வுரிமை கால், அரை, முக்கால் என்று பின்னமாக இல்லாது முழுமையாக இருக்க வேண்டும் என்று குறித்துள்ளது. எனவே பிராமண ஊர்களில் வேதபிராமணர்களுக்குத் தரப்பட்ட பங்குகள் அவர்களது வழியினருக்கு நேரடியாகவோ அல்லது விலை பெற்றதின் வழியாகவோ, ஸ்த்ரீதனமாகவோ மாற்றப்படும் முறை இருந்தது என்பது தெளிவாகிறது. பிராமணர் ஊர்களில் பங்கு என்பது ஊர்ப் பொது நிலப் பங்காகும்.

உத்திரமேரூரில் கிடைத்துள்ள கம்பவர்ம பல்லவன் காலத்துக் கல்வெட்டு'அங்கமணி' என்ற சொல்லாட்சியில் ஸ்த்ரீதனம் பற்றிக் குறிக்கும் கல்வெட்டாகும்[6]. ஒரு பிராமணரின் இளைய மனைவி அவளது அங்கமணி செல்வத்தைக் கொண்டு அங்கமணியாக விலைக்குப் பெற்ற நிலம் ஒன்றினை இறைவனின் அமுதுபடிச் செல்வுகளுக்காகக் கொடுத்துள்ளாள். அங்கமணி என்ற சொல்லுக்கு உடல் உறுப்புக்களில் அணியும் அணிகலன்கள் என்று பொருள் சொல்லலாம். இக்கல்வெட்டில் அங்கமணியாக நிலம் குறிக்கப்பட்டுள்ளது. எனவே தொடக்கக் காலத்தில் பெண்களுக்கு அணிகலன்கள் வழங்கப்பட்டு காலப்போக்கில் அணிகலன்களுக்கு ஈடாக நிலங்கள் பெறப்பட்டு அவையும் அங்கமணி என்றே வழக்குப் பெற்றன எனலாம்.

திருப்பாற்கடலில் கிடைத்துள்ள முதலாம் பராந்தக சோழன் காலக் கல்வெட்டும் அங்கமணி என்ற சொல்லினைப் பெற்றுள்ளது[7]. ஒரு பிராமணர் தன் தாயாரின் அங்கமணிச் செல்வத்தின் பெருக்கத்திற்காக (அங்கமணி திரவ்யவிருத்திக்குச் சிலவாக) பெற்ற தோட்ட நிலத்தினை கோயில் இறைவனுக்கு விளக்குக்காகக் கொடை தந்துள்ளார். இக்கல்வெட்டின் மூலம் ஒரு பெண்ணின் அங்கமணி நிலம் அவரது மகனால் பராமரிக்கப்படவும், விருத்தி செய்யவும் பட்டது என்பது தெளிவாகிறது. பெண்ணிற்கு உரிமை தனிப்பட இருந்ததாலேயே அந்நிலம் தனிப்படப் பேசப்பட்டுள்ளது. இக்கொடை கொடுக்கப்பட்டபோது அத்தாய் உயிருடன் இருந்தாரா அல்லது இல்லையா என்பது கல்வெட்டின் மூலம் தெளிவில்லை. எனவே இக்கொடை, தாயின் விருப்பத்தால் செய்யப்பட்டதா அல்லது மகனின் விருப்பத்தால் செய்யப்பட்டதா என்பதும் தெளிவில்லை.

திருச்செந்துறையில் உள்ள பராந்தக சோழனின் மூன்று கல்வெட்டுகள் ஸ்த்ரீதனம் பற்றிய செய்திகளைத் தந்துள்ளன [8]. இரண்டு கல்வெட்டுகளில் ஆண்கள் இருவர் அவர்கள் ஸ்த்ரீதனம் பெற்றதாக இரு குறிப்பிட்ட நிலங்களைக் குறித்துள்ளனர். 'வாச்சியன் சாத்தஞ் சேந்தனேன் - நான் சிரீதநம் பெற்றுள்ள அரைக்காலும் னாநே விலை கொண்டுடைய அரைக்காலும், 'கீழ்பார்க்கெல்லை காச்சுவனக்கன்

பரமேசுவரன் ஸ்த்ரீதனம் பெற்ற நிலத்துக்கும் மேற்கு' ஆகியவை இக்கல்வெட்டுகளில் வரும் சொற்றொடர்களாகும். இவ்வாசகங்கள் ஆண்களே ஸ்த்ரீதனம் பெற்றதாகக் காட்டுகின்றன. எனினும் முதல் வாசகம் விலைக்குப் பெற்ற நிலம், ஸ்த்ரீதனம் பெற்ற நிலம் என்று இருவகையாக ஒருவருடைய நிலத்தைப் பிரித்துக் காட்டுவது இங்கு நோக்கத்தக்கதாகும். திருச்செந்துறையில் உள்ள மூன்றாவது கல்வெட்டு பிராமணர் தன் மனைவி ஸ்ரீதநம் பெற்ற நிலம் என்பதை ''நாராணந் சோமனேன் - என்பிராமணி நீலன் நாகை ஸ்ரீதநம் பெற்ற நிலத்தை'' என்று குறிப்பிடுமாறு கல்வெட்டுள்ளது. எனவே பெண்கள் ஸ்த்ரீதனச் செல்வங்கள் ஆண்களின் மேலாண்மையால் அவர்கள் ஸ்த்ரீதனமாகப் பெற்றனர் என்றே வழக்கில் இருந்தது எனலாம்.

கீழப்பழுவூரில் உள்ள பராந்தகசோழன் கல்வெட்டில் 'நீலகண்ட சோமாசியார் கலந்திலாள்கின்ற நிலத்து செட்டி மாறி ஸ்த்ரீதனம் பெற்றுடையரோம் ஆள்கின்ற நிலத்துக்கு தெற்கு' என்ற சொற்றொடர் உள்ளது[9]. இங்கு 'கலம்' என்பது ஒருவகை ஆவணம். ஒருவரது ஆவணத்தின்கீழ் வரும் நிலம் மற்றொருவர் ஸ்த்ரீதனமாகப் பெற்று ஆளும் நிலம் என்று பொருளாகிறது. எனவே ஆவணம் ஒருவர் பெயரிலும், ஆளுமை கணவரிடத்தும் இருந்தபோதிலும் அந்நிலம் ஒரு பெண்ணினுடையது என்பதால் ஸ்த்ரீதன நிலம் என்று தவறாது அதையும் குறித்துள்ளனர்.

லால்குடியில் உள்ள பரகேசரி கல்வெட்டில் 'மழபாடி ஸ்த்ரீதனம் பெற்றுடையானாய் இவன் பக்கல் குமாரந்தை காரி ஆதித்தனேன் விலை கொண்டுடைய தெக்கங்குடி 4 மாவிற்கு எல்லை' என்று ஒருவர் ஸ்த்ரீதனம் பெற்ற நிலம் மற்றொருவருக்கு விற்கப்பட்ட செய்தி தெரிகின்றது[10].

உத்தம சோழன் காலத்தியத் திருக்கருகாவூரில் ஒரு கல்வெட்டு, ஒரு வேளாண் தான் கல்லால் கட்டிய கோயிலுக்கு ஸ்ரீபலி கொட்டும் உவச்சர்கள் ஒன்பதின்மரைக் கொடை கொடுத்த செய்தியைச் சொல்வது[11]. இந்த 9 உவச்சர்களில் மூவர் அவ்வேளாரது மாமனாருடையவர்கள். நால்வர் அவரது முதல் மகளை மணந்ததால் ஸ்த்ரீதனமாக வந்தவர்கள். ஆக மாமனார் அவரது மக்களாகிய தனது இரு மனைவியர் ஆகியோரது 9 உவச்சர்களைக் கொடைதந்துள்ளார். ஸ்மிருதி நூல்கள் அடிமைகளும் ஸ்த்ரீதனமாகத் தரப்படுவர் (சுல்கா) என்று குறிப்பிட்டதை மேலே கண்டோம். அச்செய்திக்கு இக்கல்வெட்டு நல்ல சான்றாகும்.

திருக்கொளம்பியூரில் உள்ள உத்தமசோழனின் கல்வெட்டு கேசவன் ஸ்ரீகண்டன் என்பவர், தனது தாய் காடன் சிங்கத்தின்

பிரதிநிதியாக அல்லது பாதுகாவலராக (முதுகண்) இருந்து அத்தாய் ஸ்த்ரீதனம் பெற்ற நிலத்தினை உத்தமசோழரின் மனைவியான அரச மாதேவிக்கு விற்றுக் கொடுத்துள்ளார். இந்நிலத்தின் எல்லை சொல்லும்போது 'விற்பான் ஸ்ரீதனம் பெற்ற நிலத்துக்கு கிழக்கு' என்று அவனது மற்றொரு ஸ்த்ரீதன நிலமும் சொல்லப்பட்டுள்ளது. முதுகண்ணாக இருந்து மகன் விற்றபோதிலும் விற்பவளாக அவள் தாயே (பெண்ணே) இருந்தாள் என்பது இக்கல்வெட்டில் தெளிவாகிறது. பண்டைய ஆவண மரபுகளில் பெண்கள் ஆவணம் எழுதித் தர இயலாது. பெண்கள் எழுதித் தரும் ஆவணங்கள் செல்லாதவை என்று, மரபுகளாகப் பின்பற்றப்பட்ட, தர்மசாத்திரங்கள் சொல்கின்றன. எனவே பெண்ணிற்கு எந்த அளவில் சொத்துரிமை இருந்தது என்பதற்கு இக்கல்வெட்டு நல்ல எடுத்துக்காட்டாகும். மேலும் இக்கல்வெட்டில் 'ஸ்த்ரீதனம்' 'ஸ்ரீதனம்' என்ற இரு சொல் வழக்குகளுமே பயன்படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க தாகும். சேரன்மாதேவியில் உள்ள சுந்தரசோழ பாண்டியனின் கல்வெட்டு, ஒரு விளக்கெரிக்க சிவபிராமணரிடம் 36 காசு கொடுக்கப்பட்டு அதன் பொலியூட்டாக தினமும் உழக்கு நெய் வழங்கப்பட்டது குறித்ததாகும்[13]. இக்கல்வெட்டில், 'இத்தேவார்ச்சனைப் பணி விலையும், ஒற்றியும், தர்மதானமும், ஸ்த்ரீதனமும் இப்பணி கொள்வாரே இவ்விளக் கெரிப்பாராகவும்' என்று குறிப்பு உள்ளது. எனவே கோயில் பணி உரிமைகளும் அதன் வருவாய்களும் ஸ்த்ரீதனமாகக் கை மாறின என்பது தெளிவாகிறது. இக்கல்வெட்டுப் போன்றே கடப்பேரியில் உள்ள முதற் குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டுகளும், கோயில் பணி உரிமைகள் (காணி) ஸ்த்ரீதநமாக கொடுக்கலாம் என்பதைச் சொல்கின்றன[14]. திருவெண்காட்டில் உள்ள மூன்றாம் இராசராசசோழனின் கல்வெட்டு தந்தை பெற்ற ஸ்த்ரீதன நிலம் அவர் இறந்த பிறகு (அபாவத்து) பிள்ளைகளுடையதாயிற்று என்பதைக் காட்டுகிறது. தந்தை வழியாக வந்த ஸ்த்ரீதன நிலத்தைக் குறிப்பதோடு மகன் ஸ்த்ரீதனமாகப் பெற்ற நிலமும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. எனவே ஸ்த்ரீதன நிலங்களுக்குத் தனித்துவம் இருந்தது(தனி அடையாளம்) என்பது தெளிவாகிறது[15].

சிதம்பரத்தில் உள்ள கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு 'ஸ்ரீதனம் பெற்றுடைய பிரிதிநீர்நிலம்' ஒன்றைக் குறிப்பிடுகின்றது[16]. இக்கட்டுரைத் தொடக்கத்தில் பார்த்த ஆறு வகையான ஸ்த்ரீதனங்களில் 'பிரிதி தத்தா' என்பதும் ஒன்று. அது மாமனார், மாமியாருக்கு மணப்பெண் பாதபூசை செய்யும்போது நல்கப்படும் கொடையாகும். அவ்வகை ஸ்த்ரீதனமே இந்த சிதம்பரம் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது என்று கருதலாம். செய்யூரில் உள்ள குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டு சற்று சுவையானது[17]. இங்கு கோயில் பள்ளியறையில் உள்ள

நாச்சியாருக்கு செய்யூர் ஊரார் 10 வேலி நிலம் கொடுத்தனர். இந்நிலத்தினை இவர்கள் 'ஸ்த்ரீதனமாகக் குடுத்த நிலம்' என்று குறித்துள்ளனர். பெண் தெய்வத்துக்குக் கொடுத்த நிலம் ஸ்த்ரீதனம் என்று வழங்கப்படுவது மக்களிடையே நிலவிய பழக்கம் தெய்வத்திற்கும் ஒத்துப் போயுள்ளதைக் காட்டுகிறது.

இதுவரை கண்ட கல்வெட்டுச் செய்திகளின் தொகுப்பு பின்வருமாறு: (1) பெண்ணிற்கு பிறந்த இடத்தில் பெற்றோரும், புக்ககத்தில் கணவனும் கணவனின் பெற்றோரும் பரிசுகள் தந்தனர். (2) இவை நிலமாகவும், ஆட்களாகவும், கோயில் காணி உரிமைகளாகவும், வேத பிராமணர் ஊர்களில் உள்ள பொது நிலப் பங்குகளாகவும் இருந்தன. (3) ஆவண மரபுப்படி பெண்கள் விற்க, வாங்க இயலாமையால் அவர்களது கணவர்களும், பிள்ளைகளும் அவற்றைக் கையாண்டனர்.(4)ஒரு இடம் விடாமல் பெண்ணின் செல்வம் என்ற தனித்தகுதியுடன் ஸ்த்ரீதனம் என்ற முன்னொட்டுச் சொல்லின் மூலம் நிலங்களும்,பிறவும் சுட்டப்பட்டுள்ளது எனினும் ஆண்களின் ஆளுகை காரணமாக, பெண் ஸ்த்ரீதனம் பெற்றது, பெருவழக்கில் அவர்களது கணவன்மார் ஸ்த்ரீதனம் பெற்றதாகவே சொல்லும் வழக்காக இருந்தது. (5) பெண்ணிற்குப் பிறகு அவளது கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ ஸ்த்ரீதனம் உரிமையாகியது. (6) சிலவேளைகளில் தாய்மூலம் தந்தைக்குக் கிடைத்த செல்வம் அவருக்கும் பின் மகனுக்கு கிடைத்தது. (7) மாமனார் வாரிசில்லாத நிலையில் அவரது மற்றும் அவரது இருமகள்களான ஒருவரது மனைவியரின் செல்வங்கள் கணவரும்-மருமகனுமாக அமைந்த அவருக்குக் கிடைத்தது.

இச்செய்திகள் ஆண்களுக்குப் பெண்களின் செல்வத்தின் முழு உரிமை உள்ளது போலக் காட்டினாலும் அதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லை இருந்தது என்பதை மங்கைநல்லூரில் உள்ள கல்வெட்டு தெளிவாக்குகின்றது[18]. விக்கிரமசோழன் காலத்திய இக்கல்வெட்டு அகளங்கராயர் என்பவர் அவரது மனைவிக்கு அவளது தந்தை ஸ்த்ரீதனமாகத் தந்த நிலத்தினை செலவளித்ததற்கு ஈடாகப் பணம் கொடுத்த செய்தியைச் சொல்கிறது. இக்கல்வெட்டு மனைவியின் செல்வத்தை அவளது விருப்பமில்லாமல் அல்லது அவளுக்குப் பயன்படாமல் கணவன் ஏதும் செய்யக்கூடாது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மகிழ்வான நேரங்களில் மகிழ்வுந்தலுக்காகத் தந்த பரிசுகள் அவற்றின் பயன்பாடு காரணமாக நாளடைவில் திருமண நாளில் தரப்படவேண்டிய கட்டாய நிதியாக மாறிவிட்டன. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் ஓலைச்சுவடி தந்தை தன் பெண்ணுக்குத் தாலி

செய்து வழங்க இயலாமையால் தன் நிலத்தைத் தாலிக்கூடாகத் தந்ததாகச் சொல்கிறது[19]. அதேபோல பெண் எடுத்துக்கொண்ட புக்ககத்தில் பெண்ணிற்குத் தரும் பரிசுகளும் கட்டாயமானதாகி சமுதாய இன்னல்களை ஏற்படுத்தின. இதனை விரிஞ்சிபுரம், கோவிலூர் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இவற்றில் ‘பொன் கொடுத்து பெண் எடுக்கக் கூடாது’ என்ற சமுதாயத் தடை காட்டப்பட்டுள்ளது[20].

அன்று பெண்ணிற்குத் தரப்படுவதில் துயர் தந்த செல்வம், நாளடைவில் போக்கு மாறிப்போய் இன்று பையனுக்குத் தரும் வரதட்சிணைக்கொடுமையாக உருவெடுத்துள்ளது சிந்திக்கத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. P.V. Kane, *History of Dharmasastra*, Vol III
2. "மற்றும் பெண் பெற்ற பாரிபோகம்...

   மற்றும் எப்பேர்பட்டதும் பாதிபடி....

   சந்ததி உண்டாய் அப்பெண் வாழ்க்கைப்ப...

   குப்பரிதேயமாகிப் பாதி கொள்வதாகவும்..."

   திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை நீலமேகப்பெருமாள் கோயில் திருச்சுற்றில் உள்ள துண்டுக்கல்வெட்டு. (கி.பி. 13ஆம் நூ.ஆ.) நேரில் படிக்கப்பட்டது.
3. "மகட் கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில் தனங்கொடுத்தற்பின்

   நிசர்ப்பரிய பெருஞ் சிறப்பில் நிதிபதிதன் குலமகனும்

   தகைப்பில் பெருங்காதலினாற் தங்கு மனை வளம் பெருக்கி

   மிகப்புரியும் கொள்கையினில் மேம்படு மேவினான்"

   திருத்தொண்டத் தொகை, 24:14
4. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 5 : எண் 757, 984, 1000, 1001; 6:314; 8:30, 602, 604; 617, 707, 708, 710; 13:65; 19:113, 121, 211, 326, 404; இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கை, 1925 :39,
5. தெ.இ.க. தொகுதி 14:
6. மேலது 6: 314 (கிபி 884)
7. மேலது 19 : 121 (கி.பி. 907 - 955)
8. மேலது 8 : 602, 604, 617 (கி.பி. 907 - 955)
9. மேலது 10 : 211 (கி.பி. 915)
10. மேலது 19 : 113 (கி.பி. 10ஆம் நூ. ஆ.)
11. மேலது 19 : 326 (கி.பி. 983)
12. மேலது 19 : 404 (கி.பி. 970 - 85)
13. மேலது 5 : 757 (கி.பி. 1021)
14. மேலது 5 : 1000, 1001 (கி.பி. 1070 - 1126)
15. மேலது 5 : 984 (கி.பி. 1146 - 1171)
16. மேலது 8 : 708 (கி.பி. 1231 - 1243)

17. மேலது 8 : 30 (கி.பி. 1070 - 1126)

18. இ.க. ஆண்டறிக்கை, 1925 : 39

19. 'மறவரில் சொறியத் தேவன் செங்கமலம் (மகள்) தீத்தாயிக்கு - சீதனஞ் சீராட்டுக் குடுக்க வகையில்லாத... தாலிபாசியும் குடாதே படியினாலேயும் - என் மகள் தீத்தாயிக்குத் தாலிக்குயீடு பண்ணி பணம் 10 மட்டும் - இந்த நிலம் ஒற்றியா பத்தியாளக் கடவாராகவும்' தாலிக்கு ஈடு, 'வரலாற்றில் புது வெள்ளம்' தொல்லியல் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம் மதுரை 1991.

20. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை; 1963 : 526.

20. கல்வெட்டு கூறும் மருத்துவச் செய்திகள்

மா. சந்திரமூர்த்தி, சென்னை.

தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகள், பட்டயங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியன மருத்துவத்தைப் பற்றியும், மருத்துவர், மருந்து, மூலிகை, அம்மூலிகைகளுக்கு அளித்த வரி முதலிய அரிய செய்திகளையும் தருகின்றன.

மருத்துவக்குடி

தஞ்சை மாவட்டத்தின் இன்றைய மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய வட்ட ஊர்கள் அடங்கிய ஒரு பகுதி திரைமூர் நாடு என அழைக்கப்பெற்றது. இத்திரைமூர் நாட்டில் திருக்குரங்காடுதுறைக்கு அருகில் மருத்துவக்குடி என்ற பேரூர் அமைந்திருந்தது. அவ்வூர் இன்றும் அதே பெயரில் வழங்கி வருகிறது. அங்குள்ள கோமாறன் சடையனின் கல்வெட்டு அவ்வூரின் பெயரைப்பின்வருமாறு சொல்கிறது.

''கோமாறன் சடையற்கு யாண்டு நான்காமாண்டின்
எதிராமாண்டின் எதிராமாண்டின் திரைமூர்நாட்டு
மருத்துவக்குடி சபையோம்''

ஊரின் பெயர் மருத்துவக்குடி என்பது சிறந்த மருத்துவர்கள் இருந்து மருத்துவம் பார்த்ததாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

பாண்டியநாட்டு மருத்துவக் குலத்தினர்

பாண்டிய நாட்டில் இருந்த வைத்திய குலத்தைப் பற்றியும், அக்குலத்தில் தோன்றிய பெரியார்களைப் பற்றியும், பெண்மணிகளைப் பற்றியும், பாண்டியர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் பராந்தகன் மாறன் சடையன் என்ற பாண்டிய மன்னன் அவையில் மாறன் காரி என்பான் தலைமை அமைச்சராகப் பணியாற்றினான். இவன் பாண்டிய நாட்டைச் சேர்ந்த கரவந்தபுரம் என்ற களக்குடியில் வைத்திய குலத்தில் தோன்றியவன்.

பழந்தமிழகத்தில் வைத்தியத் துறையில் நன்கு பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற பெருந்தகையினர் 'வைத்திய சிகாமணி' என்ற விருது பெற்றனர். அவர்களின் விழுமிய புகழை வியந்த வேந்தன் இத்தகைய விருதுகளைக் கொடுத்து மருத்துவ வித்தகர்களை ஊக்குவித்தான் என அறிகிறோம். சோழர் ஆட்சியில் மருத்துவர்கள் சைவ சிகாமணி, சிவகீர்த்தி, கடகமெடுத்த கூத்தபிரான் என்ற விருதுகளைப் பெற்றது போலப் பாண்டியர் ஆட்சியிலும் பெற்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக ஜடிலவர்மன் பராந்தக பாண்டிய நெடுஞ்சடையனின் வேள்விக் குடிச்

செப்புப்பட்டயங்களில் குறிக்கப் பெறும் 'வைத்திய சிகாமணி' என்ற சிறப்புப் பெயரைச் சுட்டிக்காட்டலாம். இதில் குறிக்கப்படும் 'வைத்தி சிகாமணி' என்ற சிறப்புப் பெயர் கரவந்தபுரத்து வைத்திய குலத்தைச் சார்ந்த மாறன் காரியைத்தான் குறிக்கும் என ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

மாறன் காரியைப் போலவே அவனையடுத்து வந்த அமைச்சன் மாறன் எயினனும், தளபதிகளாக இருந்த சாத்தன் கணபதி, மூர்த்தி எயினன், களக்குடி என்ற ஊரைச் சார்ந்த யானைப் படைத்தலைவனாக இருந்த சங்கன் சிரீதரன் ஆகியோரும் வைத்திய குலத்தினர் என்று அறிகின்றோம். விருதுகளுடன் இவர்களது பெயர்கள் பின்வருமாறு.

முவேந்தமங்கலப் பேரரையன் ஆகிய மாறன்காரி
பாண்டிமங்கல விசைய அரையன் ஆகிய மாறன் எயினன்
பாண்டி அமிர்த மங்கலப் பேரரையன் ஆயின சாத்தன் கணபதி

வீரமங்கலப் பேரரையன் ஆகிய மூர்த்தி எயினன் பாண்டிளங்கோ மங்கலப் பேரரையன் ஆகிய சங்கன் சிரீதரன் பாண்டிமங்கல பேரரையன் என்ற பட்டத்தை ஆய்வு செய்த முனைவர். எ. சுப்பராயலு அவர்கள் மங்கலம், மங்கலியன் என்ற சொல் தமிழில் நாவிதரைக் குறிக்கும், தெலுங்கிலும் மங்கரி என்ற சொல் நாவிதரைக் குறிக்கும் என்று குறிப்பிட்டுத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலாம் இராஜராஜசோழனின் கல்வெட்டு கோலினமை ஊழியம் செய்பவருக்கு 'பஞ்சவன் மங்கலப் பேரரையன்' என்ற பட்டம் உள்ளதை எடுத்துக்காட்டுகிறார். கோலினமை ஊழியம் எதைக் குறிக்கிறது என்று தெரியவில்லை எனினும் அதற்கு முன்னதாகக் குறிக்கப்படும் நபர் அம்பட்டன் ஊழியம் செய்தவர் என்பதையும் அவருக்கு ராஜராஜ பிறயோகதரையன் என்ற பட்டம் உள்ளதையும் குறிப்பிடுகிறார். 'பிறயோகதரையன்' என்ற இப்பட்டத்தில் 'பிரயோக' என்ற சொல்லும் அம்பட்டன் என்ற சொல்லும் மருத்துவத்தைக் குறிக்கின்றன. என்றும் குறிப்பிடுகிறார். எனவே பாண்டியர் கல்வெட்டுகளில் வரும் 'மங்கலப் பேரரையன்' என்ற பட்டம் மருத்துவம் அறிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப்பட்டம் எனலாம்.

அகத்தீஸ்வரத்தில் அந்தணர்களுக்கு மருத்துவ வசதி

கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீச்சுரம் சிவன் கோயில் அருகில் உள்ள பாறையில் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன. இவை கி.பி.14-15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகள் ஆகும். அவற்றில் ஒன்று (கி.பி.1438) வைத்தியர்களுக்கு அரசர்கள் அளித்த கொடைகளைப் பற்றியும், அவர்களுக்கு விடப்பெற்ற நிலங்களைப் பற்றியும் குறிக்கின்றது. மற்றும் புறத்தாய நாட்டுத் தென்காசி வாரண

நன்னாட்டு அகத்தீச்சுரமான உதையமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்கு அரசன் தன் பிறந்த நாளான பரணியில் அகரம் ஏற்படுத்தினான். வேதங்களைப் பயில்வதற்கு நிலங்கள் வழங்கியதோடு அவர்களின் மருத்துவ அபிவிருத்திக்காக நிலங்கள் கொடையாக அளித்தான் என்றும் அறிகிறோம். அக்கல்வெட்டில் 'சல்லியம்' என்ற சொல் மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'சல்லிய விருத்தி குலால விருத்தி காரு விருத்தி கையாளும்பேற்குக் குடியிருப்புக்கும்' என்பது கல்வெட்டுச் சொற்றொடர் ஆகும்.

திருவிசலூர்க் கல்வெட்டு

கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் காலத்துக்கல்வெட்டுகளின் மூலம் அறுவை மருத்துவத்தைப் பற்றி அறிய முடிகிறது. குந்தவை தேவியார் சல்லியக் கிரியை போகமாகத் திருவிசலூரில் நிலத்தானம் அளித்த செய்தியை இராஜேந்திரனின் 4-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் கூறுகின்றன. எனவே இரணசிகிச்சைக்காக விடப்பெற்ற நிலத்தைக்குறித்தலின் இப்பகுதியில் இச்சிகிச்சைக்குரிய மருத்துவர்களும், மருத்துவ மனைகளும் இருந்திருக்க வேண்டும் என அறியமுடிகிறது.

திருவரங்கத்தில் மருத்துவச் சாலை

கி.பி. 13-ம் நூற்றாண்டில் வீர ராமநாதன் என்ற ஹொய்சாள மன்னனின் 3-ஆம் ஆட்சி ஆண்டில் சிங்கதேவ சிங்கண்ண தண்ட நாயக்கன் என்பான் ஸ்ரீரங்கத்தில் ஒரு சாலை ஏற்படுத்தியதைக் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன.

இந்த சாலை அழகிய நாயனார் கோயில் கொண்டுள்ள திருக்கோபுரத்தின் மேற்குப் பகுதியில் திருநடை மாளிகையில் அமைக்கப்பட்டது. சிங்கண்ணதெண்டநாயக்கர் 1100 வராகன் பொன்னைக் கோயில் கருவூலத்தில் செலுத்தி வரிவிலக்கப்பட்ட நிலங்களை இந்தச் சாலைப் பராமரிப்புக்காகக் கொடுத்துள்ளார். இந்நிலத்திலிருந்து நெல் வருவாய் மருத்துவப் பணியாளர்களுக்கும், மருந்திற்கும் ஏற்படும் செலவிற்காக ஒதுக்கப்பட்டது. மேலும் இவரது மதிப்பிற்குரியவராகவும் மருத்துவராகவும் இந்த மருத்துவசாலையை நிர்வகித்து வருபவராகவும் உள்ள கருடவாகனப் பட்டருக்கு தினமும் 5 மரக்கால் நெல் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நாளொன்றுக்கு 100 காசுக்கு மருந்து வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தந்வந்திரிக் கடவுள்

பாற்கடலில் அமிர்தம் கடைந்த போது மருந்துக் கலயத்துடன் வெளிப்பட்ட மருத்துவக் கடவுள் தந்வந்திரி ஆவார். மேற்சொன்ன போசள மன்னர் காலத்திய மருத்துவச் சாலை நெடுநாள் தொடர்ந்து

நடந்து வந்தது. கி.பி.1493-ல் ஒரு தீ விபத்து ஏற்பட்டுச் சிதைந்துவிட்டது. எனவே மீண்டும் அந்த மருத்துவச் சாலை கட்டப்பட்டு அங்கு மேற்சொன்ன தந்வந்திரிக் கடவுள் உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கடவுளுக்கு நாள்தோறும் கசாயம் (குடிநீர் அமுது) படைக்கப்பட்டுத் திருவாராதனை செய்யப்பட்டு மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த தந்வந்திரி கோயில் இன்றும் திருவரங்கத்தில் உள்ளது. கல்வெட்டில் 25-51 முடிய உள்ள வரிகளில் தந்வந்திரி கோயில் எடுத்த செய்தியும் குடிநீர் அமுது(கசாயம்) படைத்த செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளன.

மடங்களில் மருத்துவப்பணிகள்

பழங்காலத்தில் வெளியூர்களுக்குப் பயணம் செய்யும் வழிபோக்கர்கள் நெடுஞ்சாலை வழியே நடந்து செல்வது வழக்கம். போக்குவரத்து, பயண வசதிகள் பண்டை நாளில் அதிகமில்லாத காரணத்தால் நெடுஞ்சாலை வழியே செல்லும் பிரயாணிகள் இளைப்பாறச்சத்திரங்களிலும், மடங்களிலும் தங்கிச் செல்வர். இவர்களின் வசதிக்காக அரசர்கள் சாலைகளின் அருகில் பல மடங்களைக் கட்டுவதும், ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்வதும், வழிபோக்கர்களுககு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு கொடுத்தலும், களைப்பாக வந்தோர்க்கு நீர்மோர் கொடுத்து தாகந்தணித்தலும் தர்மமாக நிகழ்ந்தன. இங்கு மருத்துவ வசதிகளும் தரப்பட்டன.

திருத் தொண்டத் தொகையான்மடம் என்றொருமடம் கோவிந்தப்புத்தூர் திருக்கோயில் திருமடைவிளாகத்தில் இருந்தது. சிதம்பரதவராகிய சுப்ரமணியசிவம் என்பார் 'கண்டாபரணர்' என்பாரின் பெயரர் ஆவர். இச்சுப்பிரமணிய சிவம் சில நிலங்களை விலைக்கு வாங்கித் திருத்தொண்டத் தொகையான் திருமடத்துக்குக் கொடையாளித்தார். இவ்வாறு அளிக்கப்பெற்ற நில வருமானம் இத்திருமடத்துக்கு வரும் வழிப்போக்கர்களுக்கு உப்பும், ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும், ஸ்தானத்தார் நோய்வாய்ப்படின் அவர்கட்கு மருத்துவ உதவி செய்யவும் பயன்படுத்தப்பெற்றது. இக்கல்வெட்டு மூன்றாம் இராசேந்திரனின் 2-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே அக்காலத்தில் மடங்களில் மருத்துவப் பணிகள் நடைபெற்றன என அறிகிறோம்.

மருத்துவர்

மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்டவர்களும், மருத்துவ குலத்தைச் சார்ந்தர்களும் 'மருத்தவர்' என்றும் 'வைத்தியர்' என்றும் அழைக்கப்பெற்றனர். சோழர்கால மருத்துவமனைகளில் இருவகை மருத்துவர்கள் இருந்தனர். ஒருவர் கைநாடி பார்த்துப் பொதுப்பிணி நீக்கும் மருத்துவர். இவர்கள் வைத்தியன், சவர்ணன், மருத்துவன் என

அழைக்கப் பெற்றனர். மற்றொருவர் உடற்கூறுகளை ஆராய்ந்து கட்டி, இரணம் முதலியவற்றை அறுத்துச் சிகிச்சை செய்பவர். இவரைக் கல்வெட்டுகள் 'சல்லியக் கிரியை பண்ணுவான்' எனக் குறிக்கும்.

கல்வெட்டுகள் காட்டும் கரிசராங்கண்ணி

இது ஒரு வகை மருத்துவச் செடியாகும். இதனை 'கரிசாலை' என்றும் 'கரிசராங்கண்ணி' என்றும் 'கண்ணிட்டு' என்றும் மருத்துவ நூல்களும், கல்வெட்டுகளும் குறிக்கின்றன. இம்மூலிகை பலவகை நோய்களைத் தீர்க்கவல்லது. இந்த மருந்துச் செடி கி.பி. 6-7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தொண்டை மண்டலத்தில் பயிரிடப் பெற்றது என அறிகிறோம்.

கரிசராங்கண்ணியைப் பயிரிடுவதற்கு முன் அரசாங்க உரிமை பெற வேண்டும் எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. சித்தவைத்தியர்களும், ஆயுர்வேத வைத்தியர்களும் இம்மூலிகையைப் பண்டு போற்றினர். இந்தச் செடிகளை மருத்துவத்திற்காகக் குறிப்பிட்டுச் சில விவசாயக் குடும்பங்களும் அரசாங்க உரிமைப் பெற்றுப் பயிரிட்டனர். கரிசராங்கண்ணி பயிரிட மக்கள் அரசுக்கு வரி செலுத்தினர். இதனை ஒரு கல்வெட்டு 'கண்ணிட்டுக் காணம்' எனக் குறிக்கிறது. 'கண்ணிட்டு' என்பது 'கரிசராங்கண்ணி' என்ற மருத்துவச் செடியைக் குறிக்கும். இந்த செடி மருத்துவத்திற்கு மிகுதியாக பயன்பட்டதால் இதற்கு அரசு வரி ஏற்பட்டது எனலாம். இத்தகைய மருத்துவச் செடிகளும் இதிலிருந்து தயாரிக்கப்பெற்ற மருந்துகளும் தேவை போக எஞ்சி உள்ளவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்க வேண்டும்.

இந்தச் செடி இன்றும் சித்தவைத்தியங்களில் மிகவும் சிறந்த சஞ்சீவியாகப் பயன்படுகிறது. கரிசராங்கண்ணிக் கஷாயம் மாந்தத்தைப் போக்கும். கடுக்காய்த் தோல் சூரணம், தான்றிக்காய் தூள், நெல்லி முள்ளித்தூள், நீலயிலைச் சூரணம், அயப்பொடி ஆகியவற்றில் வகைக்குப் போதியளவு எடுத்து வெள்ளாட்டின் சிறுநீர் விட்டு அரைத்துக் களிபோல் செய்து இதை நரை கண்ட இடத்தில் தடவினால் கேசம் கருக்கும். நரைத்த முடியைக் கருத்த முடியாக மாற்றும் சக்தி இம்மூலிகைக்கு உண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கரிசிராங்கண்ணியைக் கொதிநீரில் போட்டுக் காய்ச்சி வடிக்கட்டி ஜுரத்திற்குக் கொடுக்கக் குணமேற்படும். இதைக் கொண்டு நீலி பிருங்காதி தைலம், திரிபாதி தைலம் தயாரிப்பர். மற்றும் இருமல் பல்நோய் முதலியன நீக்கும் சிறப்புத் தன்மை வாய்ந்தது. பொதுவாக இது உஷ்ணத்தைத் தணிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

இவ்வாறு தமிழகக்கல்வெட்டுகளில், மருத்துவர்க்கான ஊர், குலம், மருத்துவர், மருத்துவச் சாலைகளுக்கான கொடைகள், மருத்துவத்

தெய்வம், அதற்கான கோயில், மூலிகைகள் பற்றிய செய்திகள் பரவலாகக் கிடைக்கின்றன. மருத்துவச் சாலைகள் அனைத்தும் கோயில், தொடர்பான கல்வெட்டுகளால் அறியப்படுவதால் கோயில், மடம் ஆகியவற்றின் நல்கையாலேயே பணியாற்றின என்றும் அறிகின்றோம். தமிழகத்தில் கல்வெட்டுகளில் ஏறத்தாள அனைத்தும் கோயில் தொடர்புடையவை. கோயில் சாரா மருத்துவப் பணிகளும் நிறைய நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.

21. திருநெடுங்களம் கோயில் கல்வெட்டுகள் ஓர் ஆய்வு

கி.ஸ்ரீதரன், திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளியிலிருந்து தஞ்சை செல்லும் சாலையில் துவாக்குடியிலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவில் திருநெடுக்களம் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில் ஐயடிகள் காடவர்கோன் அருளிச் செய்த சேத்திரத் திருவெண்பாவிலும், ஞான சம்பந்தர் அருளிச் செய்த திருமுறைப் பாடல்களிலும் சிறப்பித்துப் போற்றப்படுகின்றது.

இக்கோயிலில் 30 க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவை இராஜகேசரி, உத்தம சோழன், முதலாம் இராசராசசோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராஜராஜசோழன், திரிபுவன சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவர், வீரராமனாத தேவர், விருப்பண்ண உடையார், வீரராயண உடையார், வீர பிரதாப புஜபலராயர், தேவராயர், கம்பரச தேவ மகாராயர் ஆகிய மன்னர்களின் காலத்தியவை ஆகும்.

இறைவன் பெயர்

இக்கோயிலின் இறைவன் திருநெடுங்களத்து மகாதேவர், நெடுங்களத்து ஆழ்வார், திருநெடுங்களம் உடைய நாயனார், திருநெடுங்களம் உடையார் எனச் சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறார். திருநெடுங்களமுடைய தம்பிரான் என்று விஜய நகர மன்னர் கல்வெட்டுகளில் குறிக்கப்படுவதைக் காணலாம். மேலும் இக்கோயில் தட்சிண கைலாசம் எனவும் நிழலார் சோலை வனம் உடையார் எனவும் அழைக்கப்படுவதையும் காணலாம். இன்று இறைவனுக்குப் பெயர் நித்திய சுந்தரேசுவரசுவாமி என்பதாகும்.

நாட்டுப்பிரிவு:

இவ்வூர் சோழர்காலக் கல்வெட்டுகளில் 'பாண்டிய குலாசனி வளநாட்டு வடகவிர நாட்டு தேவதானம், திருநெடுங்களம்' எனக் குறிக்கப்படுகிறது. மேலும் சில கல்வெட்டுகளில் நாட்டுப் பெயர் கவிர நாடு, வட கவிர நாடு என்றும் சொல்லப்பட்டுள்ளது. பாண்டியர் கல்வெட்டுகளில் 'பாண்டிய குலபதிவளநாடு' என்று வளநாடு பெயர் மாற்றம் அடைகிறது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றில் 'ஜயசிங்க குலகால வளநாட்டு மீசங்களி நாட்டு வடகவி நாட்டு உடையார் திருநெடுங்கள முடையார்'எனக் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

நிலக் கொடைகள்

கோயில் வழிபாட்டிற்கும், பூசைக்கும் , திருப்பணிக்கும் தானமாக நிலங்கள் அளித்த செய்தியைப் பெரும்பான்மையான கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. திருவானைக் காவலைச் சேர்ந்த மோசி ஒற்றியூரன் கூத்தபிரான் என்பவன் இக்கோயிலில் 'லோக சுந்தரர்' என்ற திருமேனியை எழுந்தருளச் செய்து அதற்கு அமுது படைப்பதற்காக நிலம் தானம் அளித்த செய்தி குறிப்பிடப்படுகிறது. நிலம் பயிரிடுவதற்கு ஏற்றவாறு இல்லாதலால் அதனைப் பயிரிடுவதற்கு ஏற்றவாறு செய்து கோயிலுக்கு அளிக்கப்பட்டது. நிலத்திற்கு உரிய வரிகள் எவ்விதம் நிர்ணயிக்கப்பட்டன என்பது கல்வெட்டில் 'இத்தேவர் கிள்ளிவயல் பழநில நீக்கி வெட்டுப்பாழ்விலை' தேவர்க்கு குடுத்தது எனக் குறிப்பிடப்படுகிறது. மேலும் அந்நிலம் ஸ்தாநாபதிகளான திருக்கோயில் உடையார்கள் வசம் அளிக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. உழு குடிகளை மாற்றாது நிலங்கள் கோயில் நிலங்களாகத் தரப்பட்டன. அவை குடிநீங்கா தேவதானம் எனப்பட்டன. 'குடி நீங்கா தேவதானமாக' அளிக்கப்பட்ட நிலம் பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்யப்பட்டதை 'காடுவெட்டிக் கொண்டு உசர்ப்பிலி உசர்க்கவும், குழிப்பிலி குழிக்கவும் பெறுவதாக' என்று கல்வெட்டு குறிக்கிறது. இந்நில விளைச்சலில் கோதுகுலவன் என்று அழைக்கப்பட்ட மரக்காலால் 150 கலம் நெல் கோயிலுக்கு அளிக்கப்பட்டது. இந் நிலம் முதலில் சொன்ன கிள்ளிவயல் என்று அழைக்கப்பட்ட நிலத்திற்கு அருகில் இருந்தது. இந்நிலத்திற்கு அளிக்கப்பட்ட பாசன வசதி பற்றியும் கல்வெட்டு குறிக்கிறது. 'கிள்ளி வயலுக்குப் பாய்ந்த குமிழியாறே இந்நிலத்துக்கு பாயப் பெறுவதாகவும்' என்று திருத்தப்பட்ட நிலத்திற்கு பாசன வசதியும் செய்யப்பட்டது என்ற செய்தியைச் சொல்கிறது. பண்டைக்காலத்தில் காடுகள் எப்படி விளைச்சல் நிலங்களாக்கப்பட்டன என்பதற்கு இக்கல்வெட்டு நல்ல சான்றாகும்.

பிரதிதான பரிவர்த்தனை

இக்கோயிலின் வழிபாட்டிற்காக வேறு பல ஊர்களிலிருந்து நிலங்கள் தானமாகத் 'திருநாமத்துக்காணியாக' அளிக்கப்பட்டன. இதனை 'பிரதிதான பரிவர்த்தனை' எனக் கல்வெட்டு குறிக்கிறது. ஒரு நிலத்திற்குப் பதிலாக மற்றொரு நிலம் கொடுக்கப்பட்டதை இச் சொற்றொடர் குறிப்பதாகக் கருதலாம். ஜடாவர்மன் சுந்தர பாண்டிய தேவர் கல்வெட்டில் திருக்காட்டுப்பள்ளி உடையான் செழிய கங்கன் என்பவன் எட்டு வேலி நிலம் விற்று திருநெடுங்களம் கோயிலுக்கு அளித்தான். அவனுடைய தம்பி பெரிய முதலியான் காங்கயர் ஊரை விட்டுச் சென்று விட்டதால் 450 'அன்றாடு நற்காசுக்கு' நிலம்

விற்கப்பட்டது. இதனை 'நிலவிலை பிரமாண இசைவுத் தீட்டு' எனக் கல்வெட்டு கூறுகிறது.

விசையாலய முத்தரையன்

மூன்றாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டுக்களில் வளம்பக்குடி வளப்பக்குடையான் தில்லை நட்டப் பெருமாளான விசையாலய முத்தரையன் என்பவன் குறிக்கப்படுகிறான். திருநெடுங்களம் கோயிலுக்கு பல தானங்களை அளித்தவர்களில் சிறப்பானவனாக இவனைக் கருதலாம்.

இடர்களைவான்

மூன்றாம் இராசராசன் காலத்தில் திருநெடுங்களம் கோயிலில் திருச்சுற்றில் உலக நாதீசுவரமுடையார் என்று அழைக்கப்பட்ட தனி சன்னதியை விசையாலய முத்தரையனின் மகன் ஆளுடைய பிள்ளையார் அடியான் இடர்களைவான் ஆன அநபாய முத்தரையன் என்பவன் அமைத்து நிலமும் தானமளித் துள்ளான். ஞானசம்பந்தர் அருளிய இத்தலத் திருப்பதிகம் 'இடர்களையும் திருப்பதிகம்' என்று அழைக்கப்படுகிறது. திருப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'இடர்களையாய் நெடுங்களம் மேயவனே' என்று போற்றுகின்றார். அப்பாடலின் வரும் பெயரையே 'இடர்களைவான்' என ஒருவன் கொண்டிருப்பது சிறப்புக்குரியது.

திருநெடுங்களம் 'தியாகவல்லிச் சதுர்வேதி மங்கலம்' என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. நெல் அளக்கும் மரக்கால் 'நித்த மணவாளன்' மரக்கால் எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

பிற குறிப்பிடத்தக்கச் செய்திகள்:

முதலாம் ஆதித்த சோழனது கல்வெட்டு ஒன்றில் பாண்டிய வரகுண மகராஜா கொடுத்த பழங்காசு பற்றிக் குறிப்பிடுவது சிறப்பாகும். மற்றொரு கல்வெட்டு 'ஸ்வஸ்திஸ்ரீ கொபரகேசரி பன்மரான ஸ்ரீ விசயாலய சோழ தேவர் தெவதான இறையிலி இட்டருளின திருமுகத்தின்படி' என்று துவங்குகிறது. கம்பதேவ மகராயர் கல்வெட்டில் கடையக்குடி என்ற ஊரை கம்பரச நல்லூர் என்று பெயர் மாற்றம் செய்தும், கம்பரசன் சந்திக் கட்டளைக்கு திரு நாமத்துக் காணியாக நிலம் விட்ட செய்தியும் கூறப்படுகிறது.

பெரும்பான்மையான கல்வெட்டுகளில் திருநெடுங்களம் கோயிலுக்கு அளிக்கப்பட்ட விளக்குகள், தூபபாத்திரம், அபிடேகம் செய்ய அளிக்கப்பட்ட நிலம், நாள்தோறும் இறைவனுக்கு அமுது பயற்றுப் போனகம் படைக்கப்பட்ட செய்தி, ஸ்ரீபலி எழுந்தருளும் போது

'செப்பு மூக்கு மத்தளிகை என்ற இசைக்கருவி வாசிக்கப்பட்ட செய்தி போன்றவை கூறப்படுகின்றன. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களின் எல்லைகள் துல்லியமாகக் குறிக்கப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் கிராமம் மற்றும் கோயிலின் நிர்வாகம் எவ்வாறு செம்மையுற்று இருந்தது என்பதை அறிய திருநெடுங்களம் கல்வெட்டுகள் பெரிதும் உதவுகின்றன.

உதவிய கல்வெட்டுகள்

1. தெ. க. தொ. 3 : 140
2. தெ. க. தொ. : 13 : 42,182,335
3. தெ. க. தொ. : 19 : 321, 368
4. தெ. க. தொ. : 26 : 715 முதல் 748 வரை
5. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1909 எண் 664-69)

22. உத்தரமேரூர்க் கோவில்கள்

இரா.ப. கருணானந்தன், உதகை

இரண்டாம் நந்திவர்மன் (731-796) காலம் தொடங்கி தெலுங்குச் சோழன் விஜயகண்டகோபாலம் (கிபி 1278) காலம் வரையிலும் 16 அரசர்களின் கல்வெட்டுகள் உத்தரமேரூரில் உள்ளன. பல்லவர் சோழர் கல்வெட்டுகளைத் தவிர்த்து, ராஷ்டிரகூடன் மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டுகளும், பல்லவர்வழியில் வந்துசோழர் ஆட்சிக்கு உட்பட்டு ஆட்சிசெய்த பார்த்தி வேந்திரன் கல்வெட்டுகளும் உள்ளன. உத்தரமேரூரில் மிகுதியான கல் ஆவணங்களை வெளியிட்ட பெருமை பார்த்தி வேந்திரனையே சேர்கிறது. இவனுடைய கல்வெட்டுகள் மட்டும் 29 ஆகும்.

பல்லவர் காலத்துக் கோவில்கள்

பல்லவர் காலத்தில் உத்தரமேரூரில் மொத்தம் 8 கோவில்கள் இருந்துள்ளன. அவற்றுள் 6 கோவில்கள் உத்தரமேரூரில் முதல் கல்வெட்டுகளை வெளியிட்ட இரண்டாம் நந்திவர்மப் பல்லவன் காலத்திற்கு முன்பே இருந்துள்ளன. இரு கோவில்கள் புதிதாகக் கட்டப்பெற்றுள்ளன. புதிதாகக் கட்டிய இரு கோவில்களையும் பெண்களே கட்டியுள்ளனர். ஒன்று வாமநச்சேரி விஷ்ணுகோவில் மற்றொன்று முல்லைவாயில் சிவன் கோவில். வாமநச்சேரியில் விஷ்ணுகோவிலைக் கட்டியவள் அரயந்தை பிராமணி என்பவள் தாழிச்சானி என்னும் பிராமணி தனக்கு அங்கமணியாக (சீதனமாக) வந்த பொருளைக் கொண்டு உத்தரமேரூரைச் சேர்ந்த முல்லைவாயிலில் நிலம் ஒன்றை விலைக்கு வாங்கி சிவன் கோவிலைக் கட்டினாள். மனைவி மேற்கொண்ட கோவில் அமைப்புப் பணியில் கணவனும் பங்கு கொண்டான். கோவிலைக் கட்டிய இருவரும் பிராமணப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இராண்டாம் நந்திவர்மன் காலத்திற்கு முன்பே இருந்த 6 கோவில்களில் 3 சிவன் கோவில்கள். அவை தென்பிடாகை புலியூர் மகாதேவர்கோவில், ஈசான திசையில் பிரம்மேஸ்வர கிரகம், திருப்புலிவலம் மகாதேவர்கோவில் என்பன. ஊருக்கு வடகிழக்கு மூலையில் அமைந்த பிரம்மேஸ்வரர் கோவிலில் பிரம்மாவின் கோவிலும் இருந்திருக்க வேண்டும். இரண்டு திருமால் கோயில்கள் இருந்தன. ஒன்று சுகோவர்த்தனத்து மகாவிஷ்ணுகோவில். இதனை இன்றைய வைகுந்தப் பெருமாள் கோவில் என்று கொள்ளலாம். மற்றொன்று இன்று சுந்தரவரதப் பெருமாள் கோவில் என்று அழைக்கப்பெறும் கோவில். இக்கோவில் ஆகம விதிகளை அடிப்படையாகக் கொண்டு செம்மையாகக்

கட்டப் பெற்றது என அங்குள்ள வடமொழிக் கல்வெட்டு தெரிவிக்கிறது. எஞ்சிய ஒன்று அரையர் தளி என்னும் கோவில். இது யாருடைய கோவில் என்று கல்வெட்டில் விளக்கம் இல்லை. இருப்பினும் பெருமாள் கோவில்களில் அரையர்சேவை செய்தோர் வழிபட்டகோவில் என்று கருதலாம்.

சோழர்காலம்

ஆதித்தன் தொடங்கி பராந்தகன் காலம் வரையிலான முற்சோழர் காலத்தில் உத்தரமேரூரில் கோவில்களைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன. பல்லவர் காலத்திலிருந்த கோயில்களின் பெயர்களின் புதிய சொல்லாட்சி இவற்றில் காணப்படுகிறது. தென்பிடாகையில் புலியூர் மகாதேவர் கோவில் பற்றி பல்லவரில் குறிப்பிருந்தது. ஆனால் சோழர் கல்வெட்டில் தென்பிடாகை புலியூரின் வடபக்கத்தில் துலாபாரத்தளிப் பெருமானடிகள் கோவில் என்ற குறிப்பு வருகிறது. இவை இரண்டும் ஒரே கோவிலா அல்லது வேறுவேறு கோவில்களா என அறியுமாறு இல்லை. இதே கோவில் கீழைத்துலாபாரத்தளிப் பெருமானடிகள் கோவில் எனவும் அழைக்கப்பெறுகிறது. பராந்தகன் கல்வெட்டு இது. எனவே பராந்தகனோ அல்லது வேறு யாரோ இங்கு துலாபாரக் கொடை கொடுத்ததால் இப்பெயர் பெற்றது எனக் கொள்ளலாம்.

பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் குருச்சேத்திரப் பெருமானடிகள் கோவில் என்ற புதுப் பெயர் உள்ளது. குருச்சேத்திரத்துப் பெருமான் கண்ணன் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. பல்லவர் கல்வெட்டு குறிப்பிட்ட கோவர்த்தனத்து மகாவிஷ்ணு கோவிலே குருச்சேத்திரக் கோவில் என்றும் குறிப்பிடப்பெற்றிருக்க வேண்டும்.

புதியகோவில்கள்

முற்சோழர் காலத்தைப் பொருத்தவரை உத்தரமேரூரில் புதிதாக கோவில்கள் தோன்றியுள்ளன. அவை இரண்டு தளிதேவர் கோவில், திருவையோதையப் பெருமானடிகள் கோவில், துலாபாரத்தளிப்பெருமானடிகள் கோவில், தென்பிடாகை தீட்டாத்தூரின் வடக்கில் மகாதேவர் கோவில், தென்பிடாகை தீட்டாத்தில் துர்க்கை கோவில், பிடாரிமார் கோவில், குமண்பாடி ஏரிக்கரையில் ஜேஷ்டை கோவில், குமண்பாடி கீழைத்தளி மகாதேவர் கோவில் என்பன. இவற்றுள் இரண்டு தளிதேவர்கோவில் என்பது குறிப்பிடத்தக்கது. காடகதிஅரையர் என்பவர் சமுகபிரதிஷ்டை யாக ஒரே வளாகத்திற்குள் சிவன் கோவிலையும் திருமால் கோவிலையும் அமைத்தார். கல்வெட்டு கோவிலை இரண்டு தளிதேவர் கோவில் என்கிறது. தற்போது இக்கோவில் இரட்டைத்தளிகை ஈஸ்வரம் கோவில் என்று அழைக்கப்

பெறுகிறது. பண்டை நாளில் உத்தரமேரூர் கற்றவர்கள் நிறைந்த ஊர் என்பதில் ஐயம் இல்லை. இத்தகைய ஊரிலே கருத்து வேறுபாடு கருதாது ஒரே வளாகத்திற்குள் சிவன், மால் கோவில்களை அமைத்திருப்பது பாராட்டத்தக்கது.

முற்சோழர் காலத்தில் உத்தரமேரூரில் சப்தமாதர் கோவில், ஜேஷ்டைகோவில், துர்க்கை கோவில் முதலான அன்னையர் கோவில்களும் புதிதாக அமைக்கப்பெற்றன இவற்றுள் சப்தமாதர் கோவில் பராந்தகசோழன் காலத்தில் கட்டப்பெற்றது. கோவில் தற்போது மாதாரி அம்மன் கோவில் என்று அழைக்கப்பெறுகிறது. கல்வெட்டுகள் இக்கோவிலை சப்தமாதர் கோவில் எனவும் பிடாரிமார் கோவில் எனவும் இருவகையில் அழைத்துள்ளன. பிடாரன் என்பதன் பெண்பால் வடிவம் பிடாரி எனக் கொள்ளலாம்.

உத்தரமேரூர் தென்பிடாகையைச் சேர்ந்த ஊர் தீட்டாத்தூர். இவ்வூர் கல்வெட்டில் தீட்டரத்தில் எனவும் அழைக்கப் பெறுகிறது. தீட்டாத்தூரின் வடக்கில் மகாதேவர் கோவில் ஒன்று உள்ளது. இது அல்லாமல் தென்பிடாகை தீட்டாத்தில் துர்க்கை கோவில் ஒன்றையும் பரகேசரிக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. துர்க்கை கோவில் தனிக்கோவிலா? அல்லது சிவன்கோவில் கோட்டத்துத் துர்க்கையா? என்பதற்குக் கல்வெட்டில் குறிப்பு இல்லை. இருப்பினும் ஏனைய அன்னையார் கோவில்களைப் போன்று இத்துர்க்கை கோவிலும் தனிக்கோவிலே என்று கொள்வதில் தடையேதும் இல்லை. உத்தரமேரூரில் தாய்த்தெய்வ வழிபாடு பத்தாம் நூற்றாண்டிலே தொடங்கி விட்டது. இக்கோவில் நிர்வாகப் பொறுப்பையும் சபையே ஏற்றுக்கொண்டது என்பதைக் கல்வெட்டுகள் பேசுகின்றன. எனவே தாய்த் தெய்வ வழிபாட்டினை கிராமதேவதை வழிபாடு என்று பொருள்கொள்வதில் சற்றே இடர்ப்பாடு உள்ளது.

பார்த்திவேந்திரன் காலம்

பராந்தக சோழனைத் தொடர்ந்து இராட்டிரகூடன் மூன்றாம் கிருஷ்ணன், பார்த்திவேந்திரன் கல்வெட்டுகள் உத்தரமேரூரில் உள்ளன. மூன்றாம் கிருஷ்ணன் கல்வெட்டில் தென்பிடாகை திருவுள்ளியூர் ஈஸ்வரபடாரர்கோவில் என்ற புதியகோவில் குறிப்பிடப்பெறுகிறது. பார்த்திவேந்திரன் காலத்தில் உத்தரமேரூரில் புதிதாக 9 கோவில்கள் வரை அறியப்பெறு கின்றன. அவை விருந்தாவனத்துப் பெருமானடிகள் கோவில், திருவாய்ப்பாடிப் பெருமான் கோவில், திருமாலிருஞ்சோலைப் பெருமான் கோவில், பெரிய மண்டகத்துப் பெருமானடிகள் கோவில், கொங்கரையர் எடுப்பித்த ஸ்ரீவேலிவிஷ்ணுகிரகம் (கொங்கரையர் ஸ்ரீகோவில்), சோமநேரிமகாவிஷ்ணுகோவில், சுப்பிரமணியர் கோவில்,

தெற்கில் அய்யன் மகாசாஸ்தா கோவில், குமண்பாடி கோநேரிநங்கை கோவில் கணபதி என்பன. இவற்றுள் முதல் ஆறு கோவில்களுமே திருமால் கோவில்கள். திருமால் கோவில்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது உத்தரமேரூரில் சைவத்தை விட வைணவம் ஒருபடி அதிகமாகவே இருந்துள்ளது என்றே கருதத்தோன்றுகிறது.

இன்று உத்தரமேரூரில் சிறப்பாக வழிபாட்டில் உள்ள கோவில் சுந்தரவரதப் பெருமாள் கோவில். இக்கோவிலை பார்த்திவேந்திரன் கல்வெட்டுகள் கொங்கரையர் எடுப்பித்த ஸ்ரீவேலி விஷ்ணுகிரகம் என்றும் கொங்கரையர் ஸ்ரீகோவில் எனவும் அழைத்துள்ளன இக்கோவிலைக் கட்டிய கொங்கரையர் யார் என்பது அறியுமாறு இல்லை.

இராசராசன் காலம்

முதல் ராசராசன் காலம் முதல் கொங்கரையர் எடுப்பித்த ஸ்ரீவேலி விஷ்ணு கிரகம் வெள்ளை மூர்த்தி ஆழ்வார் கோவில் எனவும் வெள்ளை மூர்த்தி எம்பெருமான் கோவில் எனவும் அழைக்கும் மரபு தோன்றியது. வெள்ளை மூர்த்திப் பெருமான் என்றால் கண்ணனுடன் பிறந்த பலதேவரைக் குறிக்கும். எனவே உத்தரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோவிலில் பலதேவருக்கும் தனிக் கருவறை இருந்தது எனக் கொள்ளலாம். ராசராசன் கல்வெட்டு ஒன்று புருசோத்தமர் கோவில் ஒன்று பற்றியும் குறிப்பிடுகிறது. ராசராசனின் மற்று மொருகல்வெட்டு ஸ்ரீவேலி விஷ்ணுகிரகம் ஸ்ரீராமனைக் குறிப்பிடும். எனவே சுந்தரவரதப் பெருமாள் கோவிலில் ராமபிரானுக்கும் தனிக்கருவறை ராசராசன் காலத்திலேயே இருந்தது என்பது பெறப்படும்.

ரஇாசேந்திரன் காலம்

ஊர்ப்பெயரை ராசேந்திரசோழச் சதுர்வேதிமங்கலம் என மாற்றிய முதல் ராசேந்திர சோழன் சுந்தரவரதப் பெருமாள் கோவிலின் பெயரிலும் சிறிது மாற்றத்தைச் செய்தான். இதுவரை ஸ்ரீவேலிவிஷ்ணுகிரகம் என்றும், கொங்கரையர் ஸ்ரீகோவில் என்றும் அழைக்கப்பெற்ற கோவிலை ராசேந்திரசோழ விண்ணகரம் என மாற்றினான். இக்கோவிலில் ஸ்ரீகிஷ்ணருக்குத் தனிக் கருவறை இருந்தது என ராசேந்திரனின் கல்வெட்டு தெரிவிக்கிறது. சுந்தரவரதப் பெருமாள் கோவில் கட்டும்போதே அஷ்டாங்கவிமானக் கோவிலாகக் கட்டப்பெற்றது என்பதையும் ராசேந்திரன் கல்வெட்டு உணர்த்துகிறது. கோவிலின் மூன்றாவது தளத்தில் அனந்தசயன நாராயணர் கருவறை இருந்தது என்பது அக்கல்வெட்டு தரும்செயதி. முதல் தளத்தில் மூவர் முன் திருவாய்மொழி பாடப் பெற்றது என மற்றுமொரு ராசேந்திரன் கல்வெட்டு பேசுகிறது. முதல் தளத்தில் மூவர் எனக் கல்வெட்டு பேசுவதால் முதல்தளக் கருவறையில் விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவியருடன்

நின்ற கோலத்தில் இருந்தார் எனக் கொள்ளலாம். இன்றும் முதல் கருவறையில் தேவியர் இருவருடன் பெருமான் நின்றகோலத்தில் காட்சி தருவது குறிப்பிடத்தக்கது.

முதல் ராசேந்திரன் காலத்தில் ஊரின் மையப்பகுதியில் புதிதாக சிவன் கோவில் ஒனறு கட்டப்பெற்றது. இக்கோவில் கைலாய முடைய மகாதேவர்கோவில் என்று அழைக்கப் பெற்றது. அருகிலிருந்த காஞ்சிபுரம் கோவில்களை மனதில் கொண்டே உத்தரமேரூரிலும் இவ்வாறு கோவில்களைக் கட்டினர் எனக் கொள்ளலாம். முதல் ராசேந்திரன் காலத்தில் பிரம்மேஸ்வரம் உடையார் கோவில், திருவோணனூர் மகாதேவர் கோவில் என்ற பெயரில் இரு சிவன் கோவில்கள் அறியப்பெற்றுள்ளன. பிரம்மன் வழிபட்ட சிவன் கோவில் பிரம்மேஸ்வரர் கோவில் எனவும். திருவோணனூர் எனும் பகுதியில் இருந்த கோவில் திருவோணனூர் மகாதேவர் கோவில் எனவும் உணரலாம்.

முதல் குலோத்துங்கன் காலம்

முதல் குலோத்துங்கன் காலத்தில், வாஸ்துபிடாரிமார் கோவில், திருவாண்டாள்கோவில், வடவாயிற்செல்வி கோவில், திருக்குழமப்பாடி உடைய மகாதேவர் கோவில் முதலிய 4 புதிய கோவில்கள் உத்தரமேரூரில் அறியப்பெறுகின்றன. இவற்றுள் திருக்குழமப்பாடி உடைய மகாதேவர் கோவில் தற்போது கொளம்பேசுவரர் கோவில் என்ற பெயரில் விளங்குகிறது. குழமப்பாடி என்னும் ஊர்ப்பகுதியில் அமைக்கப்பெற்ற சிவன் கோவில் இப்பெயர் பெற்றது எனலாம். வடவாயிற் செல்வி கோவில் என்பது காளி கோவில். எனவே பண்டை நாள் ஊர் அமைப்பிறகு ஏற்றவகையில் உத்தரமேரூரின் வடதிசையில் காளிகோவில் அமைந்திருந்தது என்பது சிறப்பான செய்தி. திரு ஆண்டாள் என்பதை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் எனக் கொண்டால் தமிழகத்தில் அறியப்பெறும் பழைய ஆண்டாள் கோவில்களுள் இதுவும் ஒன்று எனக் கொள்ள வேண்டும். வாஸ்துபிடாரிமார் கோவில் என்பது பழைய சப்தமாதர் கோவிலா? அல்லது தனிக் கோவிலா? என அறியுமாறு இல்லை. குடவோலைக் கல்வெட்டு உள்ள வைகுந்தப் பெருமாள் கோவில் முதல் குலோத்துங்கன் காலத்தில் நடுவில் ராஜ நாராயண விண்ணகரம் எனச் சிறிய அளவில் பெயர் மாற்றம் பெற்றது. திரிபுவன வீரதேவன் கல்வெட்டில் இதே கோவில் நடுவிற்கோவில் எனவும் அழைக்கப்பெற்றது. எனவே உத்தரமேரூரில் வைகுந்தப் பெருமாள் கோவில் பண்டை நாளிலும் இன்றும் ஊரமைப்பில் நடுநாயகக் கோவிலாகத் திகழ்ந்தது என்பதில் ஐயம் இல்லை.

சித்திரக்கூடம்

பல்லவர் கல்வெட்டு ஒன்று உத்தரமேரூரில் இருந்த சித்திரக்கூடம் பற்றித் தெரிவிக்கிறது. பல்லவர் காலத்தில் உத்தரமேரூரில் ஆளும் கணம் என்னும் அமைப்பு இருந்தது. இதன் உறுப்பினர்கள் கணப்பெருமக்கள் என அழைக்கப் பெற்றனர். இவர்கள் உத்தரமேரூரில் சித்திரக்கூடம் அமைத்து நாராயணசாமி என்ற பெயரில் இறைவனை எழுந்தருளச் செய்தனர். இவ்விறைவன் திருமுன் திருவிளக்கு எரிக்கவும் பொன் கொடை அளித்தனர். பண்டைநாளில் பெரிய ஊர்களில் கோவில்கள் அமைக்கப்பெறுவதுடன் கடவுளரின் வரலாற்றைச் சித்தரிக்கும். ஓவியக்கூடங்களும் தனியாக அமைக்கப்பெற்றன என்றும் உணரலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. *S.I.I.* Vol. VI
2. *A Topographical list of inscriptions in Tamilnadu & Kerala States.*

23. வீரகேரளன்

முனைவர். மா. செந்தில் செல்வக்குமரன், திருநெல்வேலி.

வீரகேரளன் என்னும் பெயரில் பல மன்னர்கள் தென் பாண்டி நாட்டை ஆண்டு வந்துள்ளனர். 'சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்' என்ற பாண்டிய மன்னனுக்கு (கி.பி. 938 - 957) வீரகேரளன் என்ற பட்டப் பெயர் இருந்திருக்கின்றது[1]. 'பூமடந்தை' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திக்கு உரியவனான வீரபாண்டியனின் மகன் 'வீர கேரள தேவன்' என்ற பெயரைப் பெற்றிருந்தான். வீரபாண்டியனின் பட்டப் பெயரால் மதுரைக்கு மேற்கில் 'சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்ற நகரம் உருவாக்கப்பட்டது. இவ்விடத்தில் இம்மன்னனின் பெயரில் 'வீர கேரள விண்ணகர் ஆழ்வார்' என்ற திருமால் கோயில் எடுக்கப்பட்டுள்ளது[2]. இவன் கேரள அரசிக்குப் பிறந்தவ னாதலால் 'வீர கேரளன்' என்ற பட்டப் பெயரைப் பெற்றிருந்தான் என்பர்[3]. மங்கலபுரம் அரண்மனையில் உள்ள இவனது அரியணை 'வீரகேரளன் அரியணை' என அழைக்கப்பட்டதை கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது[4]. இவனது உத்தர மந்திரி 'வீரகேரள பாண்டியக்கோன்' என்ற பெயரோடு விளங்கினான் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரபாண்டியன் மீது மூன்றாம் குலோத்துங்கன் படையெடுத்த போது கூபக மன்னன் வீரகேரளனிடம் அடைக்கலம் புகுந்தான் என்பது கல்வெட்டுச் செய்தி[5]. பின்னர் இவர்கள் இருவருமே குலோத்துங்கனால் தோற்கடிக்கப்படுகின்றனர். இவர்களுக்குப் பின்னர் வீரகேரளன் என்ற பெயரில் வேணாட்டு மன்னன் ஒருவன் வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளான்[6]. இவன் மாலிக்காபூர் படையெடுப்பு முடிந்து (கி.பி. 1313) இரண்டாண்டுகள் கழித்து தமிழகத்தின் மீது படையெடுத்து தமிழகம் முழுவதும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வருகின்றான். கல்வெட்டுகளில் இம்மன்னன் 'வீரகேரள ரவிவர்மன் குலசேகரன்' என்று குறிப்பிடப்படுகின்றான். காஞ்சிபுரத்தில் இம்மன்னன் பெயரில் 'வீரகேரளன் சந்தி' என்ற வழிபாடு நடைபெறுவதற்காகத் தானம் கொடுத்த செய்தியை ஒரு கல்வெட்டு தருகின்றது[7].

இம்மன்னன் காலத்தில் வெளியிடப்பட்ட வெள்ளிக் காசுகள் சில கிடைத்துள்ளன. இவற்றின் ஒரு பக்கத்தில் நாகரி எழுத்தில் 'வீரகேரளன்' என்றும், மறுபக்கத்தில் 'கண்டராங்குஸ்ய' என்றும் எழுதப்பட்டுள்ளது. வீரகேரளன் காசு தமிழகம் முழுவதும் கிடைத்திருப்பது இம்மன்னனது ஆட்சிப் பரப்பை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இதன் வாயிலாக 'வீரகேரளன்' என்ற பெயரால் பாண்டிய மன்னர்களும், வேணாட்டு

மன்னர்களும் இருந்துள்ளனர் என்று அறிய முடிகின்றது. இங்கு ஆய்வு செய்யப்படுகின்ற வீரகேரளன் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் (கி.பி. 1507) தொடக்கத்தில் வேணாட்டை ஆண்ட மன்னன் ஆவான் - மாலிக்காபூர் படையெடுப்பினால் ஏற்பட்ட சீர்குலைவைச் சரி செய்து தென்பாண்டி நாட்டை மறுபடியும் அதன் பழைய நிலைக்கே கொண்டு வந்த மன்னர்களுள் குறிப்பிடத் தக்கவனாவான். இவனது ஆட்சிக் காலத்தில் இவன் செய்த பொதுப் பணிகளையும், இறைப்பணிகளையும் கல்வெட்டுகள் வாயிலாக எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை அம்பை சாலையில் 'செவ்வல்' என்ற ஊர் உள்ளது. இங்கு கல்வெட்டுகள் பலவற்றைக் கொண்டு விளங்கும் பழமையான சிவன்கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள வேணாட்டு மன்னர்களின் கல்வெட்டுகள் வீரகேரள மன்னனைப் பற்றிச் செய்திகளைத் தருகின்றன. கொல்லமாண்டு 682ஐச் (கி.பி. 1507) சார்ந்த கல்வெட்டு செவல் ஊரினை 'முள்ளி நாட்டு பிரமதேயம் செவ்லான காணவினிய பாண்டியச் சதுர்வேதி மங்கலம்' எனக் குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக இம்மன்னன் வருவதற்கு முன்பே இப்பகுதி செழிப்புடன் இருந்திருக்க வேண்டும் என்றும் பிரமதேயமாக இது விளங்கியது என்றும் பாண்டிய மன்னன் ஒருவன் பெயரில் காணவினியப் பாண்டியச் சதுர்வேதி மங்கலமாக இருந்தது என்றும் அறிய முடிகின்றது.

திருப்பணிகள்

இவ்வாறு செழிப்புடன் விளங்கிய இப்பகுதி 14, 15ஆம் நூற்றாண்டுகளில் முகமதிய ஆட்சியாலும், படையெடுப்பாலும் தன்னியல்பு இழந்து சிதைந்தது என இம்மன்னனின் கல்வெட்டே தெரிவிக்கின்றது.

> 'சேரன் மாதேவி கீழ்ப்பிடாகை செவ்வலான கானவினிய பாண்டியச் சதுர்வேதி மங்கலத்து கீழ்ப்பால் உடையவர் கோயில் துலுக்க வானத்தில் இறந்து காடும் பற்றிக் கிடக்கையில்'[8]

என்ற கல்வெட்டு வரிகளின்படி முகமதியர் வருகையால் ஊர் எடுபட்டுப் போனது என்பது தெரிகிறது. மேலும் இம்மன்னன் கி.பி. 1507ல் இங்குள்ள சிவன் கோயிலில் திருப்பணியைத் தொடங்கி அடி முதல் முடி வரை திருப்பணியும் செய்து இறைவி கோயிலையும் திருப்பணி செய்து இறைவியின் திருமேனியையும் எழுந்தருளச் செய்தான். அத்துடன் மட்டுமின்றி இக்கோயிலில் மாமண்டபமும், சோபான மண்டபமும் கட்டுவித்தான்.

செவல் ஊரிலுள்ள பெருமாள் கோயிலையும் கிருஷ்ணாதி பரியந்தம் திருப்பணி செய்து, திருச்சுற்றுச் சுவரையும் கட்டுவித்தான். அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு 'வீரகேரளப் பெருமாள்' என்று பெயரிட்டுள்ளான். அப்பெருமாள் கோயிலுக்குப் பூசை நடத்துவதற்காக நிலங்கள் வழங்கியுள்ளான். ஸ்ரீபலிபேரம் முதலான உற்சவ லோகங்களையும் செய்து வழங்கியுள்ளான். இப்பணிகள் முடித்த பிறகு இறைவனுக்கு 'ஆதித்த வன்மீசுவர நாயனார்' என்றும் இறைவிக்கு திருநீல சுந்தரி நாச்சியார் என்றும் திருப்பெயர் சூட்டினான். கணபதி முதலான பரிவார ஆலயங்களையும் எழுந்தருளிவித்துள்ளான். படையெடுப்பால் அழிந்து மறுபடியும் தம்மால் சீர் செய்யப்பட்ட ஊருக்கு 'வீர கேரள நல்லூர்' என்று புதுப்பெயர் சூட்டியும் மகிழ்கிறான். கோயிலில் தினசரி வழிபாடும் பிற செயல்களும் இடையூறு ஏற்படாவண்ணம் நடைபெறுவதற்காகப் பழவூர், நடுவிற்கரை, தியாக பஞ்சவன் ஏரி ஆகிய ஊர்களில் நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளான்.

முதல் குடி

மன்னர்கள் புதிதாக ஊரை ஏற்படுத்துகின்ற போது எடுபட்டுப் போன ஊரைப் புதுபித்து அமைக்குமிடத்தும் குடிகளை அமர்த்துதல் மரபு. அவ்வாறே இம்மன்னனும் செவ்வலில் புதிதாகக் குடியிருப்புகளை ஏற்படுத்தி குடிகளையும் அமர்த்தியுள்ளான். முதலாவதாக அமர்த்தப்பட்ட குடியினை 'முதல்குடி' என்றழைக்கும் வழக்கம் இருந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. 'சாந்திக்குட்டி உள்ளிட்டார் முதற்குடியாக' அமர்த்தப்பட்டு அவர்களுக்குத் தானமும் வழங்கப்பட்டுள்ளது. கேரள மார்த்தாண்டன் என்பவன் பண்டாரக் கணக்காக நியமிக்கப்பட்டுள்ளான். அவன் பண்டாரக் கணக்கனாக நியமிக்கப்படுவதற்கு முன்பு 300 பணம் காணிக்கையாகக் கோயிலுக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு படித்தரம் வழங்கவும் தானம் வழங்கப் பட்டுள்ளது. கல்வெட்டில் வருகின்ற பல பெயர்கள் கேரள மரபுப் பெயர்கள் என்பதை அறியமுடிகின்றது. காட்டாக 'சாத்தக்குட்டி', 'கண்டன் கேரளன்', 'கேரளன் மார்த்தாண்டன்' போன்ற பெயர்களைக் கூறலாம்.

ஆணையாளன்

இக்கல்வெட்டினை 'சுந்தரநிலை நல்லூர் உண்ணிப் போற்றி' என்பவன் ஆணையாளனாக வந்து கல்வெட்டு வெட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. மன்னன் இவ்வாணையினை செவ்வலில் எழுந்தருளியிருந்து வழங்கினான் என்பதற்குக் கல்வெட்டுத் தொடக்கம் சான்றாக அமைந்துள்ளது. 'நாயனார் செய்துங்க நாட்டு மூத்த திருவடி இருந்தருளின இடத்தில் பண்டாரத்தில் செவ்வலில்

எழுந்தருளியிருந்தருளித் திருவுள்ளம் பற்றியருளி' என்ற கல்வெட்டு வரி உறுதி செய்கின்றது. கொல்லம் 682ல் (கி.பி. 1506) இடப்பட்ட ஆணையானது கொல்லம் 691ல் (கி.பி 1515) நடைமுறைக்குக் கொண்டு வருமுகமாகச் செவ்வல் சிவன் கோயிலில் கல்வெட்டாக வெட்டி வைக்கப்பட்டது. கொல்லம் 690ஆம் ஆண்டில் (கி.பி. 1515) வீரகேரள நல்லூர், வீரகேரளச் சதுர்வேதி மங்கலமாக மாற்றி யமைக்கப்பட்டதையும், ஆதித்த வன்மீசுவரர் கோயிலுக்குத் தேவதானமாக நிலங்கள் விடப்பட்ட செய்தியினையும் மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

கொல்லம் 682 முதல் 784ஆம் ஆண்டு வரை வேணாட்டு மன்னர்களின் கல்வெட்டுகள் இங்கு கிடைத்துள்ளதால், இக்கால கட்டத்தில் இங்கு வேணாட்டு மன்னர்களின் ஆட்சி நிலவி இருந்தது என அறியமுடிகின்றது. இச்சான்றுகளைத் தவிர இப்பகுதியில் வீர கேரளன் என்ற வேணாட்டு மன்னன் ஆண்டான் என்பதற்குச் சான்றாகத் தென்காசிக்கு அருகிலுள்ள இலத்தூர் மதுநாதேசுவரர் கோயில் செப்புத் திருமேனிகளின் வாயிலாகக் கூறலாம். அச்செப்புத் திருமேனிகள் நடராசர் முதலாக உள்ள பல திருமேனிகளில் வீரகேரளவர்மன் என்று பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வெழுத்தகளைக் கொண்டும் செப்புத் திருமேனிகள் கொண்டு கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தன என்றும் கூறலாம்.

மேலைச் செவல் சிவன்கோயில் கல்வெட்டில் மன்னன் வீரகேரளன் ஸ்ரீபலிபேரம் முதலான திருமேனிகளைச் செய்து வழங்கியதாகக் கூறுகின்றான். கொல்லம் 671ஆம் ஆண்டைச் சார்ந்த வீரகேரளவர்மன் என்ற மன்னனது கல்வெட்டு கொல்லத்திலுள்ள கணபதி நடைக் கோயிலில் காணப்படு கின்றது. நேர்த்திபுரம் கோவிந்தன் கோயிலுக்கு அபிஷேகத்திற் காக நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியினை இக்கல் வெட்டு தெரிவிக்கின்றது.

செவலில் கோயில் எடுப்பித்தவன் தன்னை 'மலை மண்டலத்து குரங்கணிகொல்லத்து, முடியூர், இல்லத்து முட்டச்சைக் கண்டன் கேரளன்' எனக் கூறிக் கொள்கிறான். இவனே ஊருக்கும் பெருமாள் கோயில் இறைவனுக்கும் வீரகேரளம் என்ற பெயரை வழங்கியுள்ளான். எனவே இவனுக்கு வீரகேரளன் என்ற சிறப்புப் பெயர் இருந்திருக்க வேண்டும் என்று அறியமுடிகிறது. மேலும் கல்லிடைக் குறிச்சி பகழிக்கூத்தர் கோயிலில் உள்ள கல்வெட்டு[9] மன்னன் விளாங்குளம் அரண்மனையில் தங்கியிருக்கும் போது அக்கோயிலில் வீரகேரளன் சந்தி என்ற பூஜை நடைபெறுவதற்காக தானம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது. கொல்லம் 722ஆம் ஆண்டு கல்வெட்டு[10] முள்ளிப் பள்ளம் என்ற ஊருக்கு வீரகேரளச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்

இருந்ததைத் தெரிவிக்கின்றது. இச்சான்றுகளெல்லாம் வீரகேரளன் என்ற மன்னனுடைய ஆட்சி தென்பாண்டிநாட்டில் பரவியிருந்ததைத் தெரிவிக்கின்றது. தென்பாண்டி நாட்டை அதன் பண்பாட்டு நிலையிலிருந்து தடம் புரண்டு விடாமல் பாதுகாத்தவர்கள் பாண்டிய, விஜயநகர, வேணாட்டு மன்னர்கள் ஆவர். அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிலுள்ள மன்னர்களில் 16ஆம் நூற்றாண்டு வீரகேரளனும் ஒருவனாவான். இக்கட்டுரையின் வழி அவன் செய்த பல பணிகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் 189.
2. மேலது பக்கம் 16.
3. கே.வி. ராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் 88.
4. பாண்டியர் செப்பேடு பத்து பக்கம் 183 - 185.
5. மேலது.
6. மேலது.
7. என். சேதுராமன், மேலது பக்கம் 188.
8. கட்டுரையாளர் நேரில் கண்டுபடித்த கல்வெட்டு.
9. ARE 1916 - 17 No. 316.
10. ARE 1916 - 17 No. 584.

24. பழவூர்

சொ.சந்திரவாணன், குற்றாலம்.

திருநெல்வேலி நகரிலிருந்து 12 கி.மீ தொலைவில் சேரன்மா தேவிச் சாலையில் உள்ள இவ்வூர் தொல்லியல் தடையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு கிடைக்கின்ற தொல்லியல் தடையங்களையும், கோயில் கல்வெட்டுகளையும் ஆய்வு செய்து இவ்வூரின் பழம் பெருமைகளை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இவ்வூரில் கள ஆய்வு மேற்கொண்ட போது இங்குள்ள சாஸ்தா கோயிலைச் சுற்றி முதுமக்கள் தாழிகளின் விளிம்புகள் தெரியும் வகையில் அமைந்திருத்தலைக் காணமுடிந்தது. மேலும் சிவன் மற்றும் பெருமாள் கோயில்களைச் சுற்றிக் கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் முதுமக்கள் தாழிகளின் வாய்ப்பகுதியின் துண்டுகளும் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இவ்வூரில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியுள்ளது என்பதை உறுதி செய்ய முடிகின்றது. இவ்வூருக்குப் பழவூர் என்ற பெயர் வந்தது, மிக மிகப் பொருத்தமானது என்பதை இச்சான்றுகள் உறுதி செய்கின்றன.

சிவன் கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் இவ்வூர் 'கோடனூரான குலசெகரச் சதுர்வேதிமங்கலத்துக் கீழ்ப்பிடாகை பழவூர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோடனூர் என்பது தற்போது 'கோடக நல்லூர்' என்ற பெயரில் விளங்கி வருகின்றது. கல்வெட்டில் குறிப்பிட்டபடியே இவ்வூரின் கிழக்கில் பழவூர் அமைந்துள்ளது தெரிகிறது. மேலும் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலமான கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் பழவூர் சிறிது புகழ் மங்கி இருந்திருக்கின்றது என்பதையும் மற்றொரு ஊர்ப் பெயரைச் சுட்டி அதற்குக் கிழக்கில் அமைந்துள்ளது என்ற குறிப்பிடப்படுவதால் அறிய முடிகின்றது.

மேலும் பழவூர் என்ற பெயரில் பல ஊர்கள் இருந்து வருகின்றன. மற்றொரு பழவூர் இம்மாவட்டத்தில் இராதாபுரம் வட்டத்தில் உள்ளது. அதனால் கல்வெட்டு, எந்தப் பழவூரைப் பற்றிய செய்தியைத் தருகின்றது என்பதைத் தெளிவாகச் சொல்லும் பொருட்டும் கோடனூரின் கீழ்ப்பிடாகை என்று குறிப்பட்டிருக்கலாம். மற்றொரு வகையில் பார்க்கையில் கோடனூர், மன்னனின் பெயரில் சதுர்வேதி மங்கலமாக மாற்றப்பட்டது என்ற செய்தியைக் கூறுவதற்கும் இக்கல் வெட்டைப் பயன்படுத்தும் வகையில் இவ்வூரின் இருப் பிடத்தைக் குறிப்பிட்டிருக்கலாம்.

சிவன் கோயில்

இவ்வூர்ச் சிவன் கோயில், கல்வெட்டுகளைக் கொண்டு பழமை மாறாது ஒரு சிறந்த தொன்மைச் சின்னமாக விளங்குகின்றது. கருவறையுள் எழுந்தருளியிருக்கும் இறைவன் தற்போது 'தழுவக் கொழுந்தீசர்' என அழைக்கப்படுகின்றார். ஆனால் கல்வெட்டுகளில் இவ்விறைவன் 'தழுவக் குழைந்த ஈசுவரமுடையார்' என்றும், 'பிரம்ம தேவீசுவரமுடையார்' என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை, இடைநாழிகை, அரைமண்டபம், மாமண்டபம், முன்மண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. அடி முதல் கூரை வரை கருங்கற்களால் உருவாக்கப் பட்டு காணப்படுகின்றது. கருவறையும், அரைமண்டபமும் கோயிலுக்கே உரிய கட்டிடக் கலைப் பாணியுடன் அமைக்கப்பட்டுள்ளன. சுவர்ப் பகுதியில் அரைத் தூண்களும், பொய்க் கோட்டங்களும் அழகு செய்கின்றன. கோட்டங்களின் மேல் அழகிய மகர தோரணம் உருவாக்கப்பட்டுள்ளது. கருவறை மகர தோரணங்களில் தெற்கில் தென்முகக் கடவுளும், மேற்கில் நரசிம்மரும், வடக்கில் நான்முகனும் புடைப்புச் சிற்பங்களாகச் சிறிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளனர். அரை மண்டப மகர தோரணங்களில் தெற்கில் விநாயகரும், வடக்கில் துர்க்கையின் உருவமும் காணப்படுகின்றன.

கபோதத்தின் கீழுள்ள உத்திரப் பகுதியில் அழகிய அன்னவரி காணப்படுகின்றது. இவற்றின் இடையிடையே பூத கணங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. கபோதத்தின் மேல் பலகை வரி உருவாக்கப்பட்டுள்ளது. உத்திரங்களை நீட்டி வைத்திருப்பது போன்று, கல்லில் இவ்வமைப்பு அமைக்கப் பட்டு சிலவற்றில் அழகிய மலர் அலங்காரங்களும் இடம் பெற்றுள்ளன. கருவறைக்கு மேல் சுதையாலான எண் பட்டைச் சிகரம் காட்சி தருகின்றது. இதிலுள்ள கிரீவக் கோட்டங்களில் தெற்கில் தென்முகக் கடவுளின் உருவமும், மேற்கில் யோக நரசிம்மரும், வடக்கில் நான்முகனும், கிழக்கில் சுப்பிரமணியரும் கற்றிருமேனிகளாகக் காட்சி தருகின்றனர். திருச்சுற்றின் தெற்கில் சுரதேவர், தென்முகக் கடவுள் தென்மேற்கில் கன்னி மூலை விநாயகர், வடமேற்கில் வள்ளிதெய்வயானையுடன் நின்ற நிலையில் சுப்பிரமணியர், வடக்கில் தெற்கு நோக்கி சண்டிகேசுவரரும், வடகிழக்கில் தெற்கு நோக்கிய நிலையில் சேத்திர பாலரும், கிழக்கில் மேற்கு நோக்கிய நிலையில் சூரிய சந்திரரும் இடம் பெற்றுள்ளனர். முன் மண்டபத்தில் வடக்கில் தெற்கு நோக்கிய நிலையில் அம்மன் சன்னதி அமைந்து உள்ளது. கருவறை, அறை மண்டபத்துடன் கோயில் கட்டிடக் கலைப் பாணிக்குரிய உறுப்புகள் ஏதுமின்றி மிக எளிமையாகக் கருங்கற்களால்

உருவாக்கப்பட்டுள்ளது. கருவறை மேலுள்ள விமானம் சாலை வடிவில சுதையால் அமைந்துள்ளது. முன் மண்டபத்தில் ஒரு நந்தியும், பலிபீடமும்; மாமண்டபத்தில் ஒரு நந்தியும், பலிபீடமும் அமைந்துள்ளன.

கல்வெட்டுச் செய்திகள்

இக்கோயிலில் மொத்தம் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயிலின் அதிட்டானப் பகுதியிலும், தென் மண்டபச் சுவர்ப் பகுதியிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அதிகமாகத் திருப்பணிகள் இங்கு நடைபெறாத காரணத்தால் கல்வெட்டுகள் சுண்ணப்பூச்சுக்கு ஆட்படாமல் சிதைவின்றித் தெளிவாக உள்ளன. இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானது 'பூவின்கிழத்தி மேவ வீற்றிருப்ப' எனத் தொடங்கும் மெய்க் கீர்த்திக்கு உரியவனான முதலாம் சடையவர்மன் குலசேகரனின் கல்வெட்டாகும். (கி.பி. 1190 - 1218) எனவே இக்கோயில் அம்மன்னன் காலத்தில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இக்கோயில் கட்டடக் கலை அமைப்பும், எழுத்தமைதியும் இக்கால கட்டத்தோடு ஒத்து வருவதால் இக்கோயில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டது எனலாம்.

இக்கோயிலிலுள்ள கிரீவக் கோட்டத்துச் சிலைகளும், சண்டிகேசுவரர், சுப்பிரமணியர், சேத்திரபாலர், இரண்டு நந்திகள் ஆகியவையும் இக்காலத்தை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளன. பிற சிலைகள் கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள அம்மன் சிலை மிகவும் பிற்காலத்தியதாகும். கோயிலைச் சுற்றித் திருமதில் உள்ளது. கோபுரம் இல்லை. மேலும் முதலாம் சடைவர்மன், குலசேகரன் ஆட்சிக் காலத்திலேயே இவ்வூரின் அருகிலுள்ள கோடனூர் மன்னனின் பெயரில் குலசேகரச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று கூறலாம்.

சடையவர்மன் குலசேகரனின் 12 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'மேல்வெம்பநாட்டு அகரப்பிரமதேயம் கோடனூரான குலசேகரச் சதுர்வேதிமங்கலத்து குரவர் ஸ்ரீ ரெங்கப்பட்டர்' என்பவன் தன் தந்தையிடத்திலும், தம்பிமார் இடத்திலும் நிலத்தைப் பெற்று அவற்றோடு தம் நிலத்தையும் சேர்த்து இக்கோயிலுக்குக் கொடுத்த செய்தியினையும் தெரிவிக்கின்றது. இதன் மூலமாக கோடனூர்ப் பகுதியில் வைணவர்களுடைய செல்வாக்கு அதிகம் இருந்தது என்பதையும் பழவூர் சிவன் கோயில் எழுப்பிய பின்னர் அச்செல்வாக்கு மெல்லச் சரிந்து வந்ததையும் இக்கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும் அந்நிலத்திற்கு விலையாக 'நல்லாணை அச்சு' என்ற பெயர் கொண்ட நாணயம் இருபத்தொன்றினை விலையாகப்

பெற்றுக் கொண்ட செய்தியினையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இதன் வாயிலாக கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'நல்லாணை அச்சு' என்ற நாணயம் வழக்கில் இருந்தமை பெறப்படும். அத்துடன் 'தமிழ்ப்பல்லவரையன்' என்ற அதிகாரி கோயிலைச் சுற்றித் தேவகன்மிகளுக்கும், சிவப்பிராமணர்களுக்கும் திருமடை வளாகம் ஏற்படுத்த வேண்டுமென்று மன்னனிடம் கேட்டுக் கொள்கிறான். அவனது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மன்னன் அவனது பெயரில் 'தெய்வப் பெருமாள் திருமடை வளாகம்' என்ற குடியிருப்பை ஏற்படுத்தினான். மேற்படி ஆணையில் தென்னவரையன், விசயதரையன், வல்லவதரையன் போன்ற அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளனர். இக்கோயிலில் வடபுறமுள்ள ஒரு கல்வெட்டு வடமொழி மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றது. பதினெண்விசயத்தாரும், பன்மாகேசுவரரும் இக்கோயில் திருமண்டபத்தில் கூட்டம் குறைவரக் கூடியிருந்து எடுத்த முடிவைத் தெரிவிக்கின்றது. இக்கோயில் இறைவனுக்காக இவர்கள் வழங்கிய தானத்தை இது தெரிவிக்கின்றது.

இந்த ஆணையின் முடிவில் நாற்பத்தெண்ணாயிரவன் ஸ்ரீ கரணத்தான் என்பவன் கையொப்பமிட்டுள்ளான். கணக்கனாக விளங்கியவன் இந்த ஆணையில் கையொப்பமிட்டுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. தென்புற மண்டபத்துச் சுவர்க்கல்வெட்டு இடம் மாற்றி மாற்றி வைக்கப்பட்டுள்ளதால் அக்கல்வெட்டிலிருந்து முழுமையான செய்திகளை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் ஓரளவு படித்ததின் மூலமாக இறைவனுக்கு ஆடை வழங்குவதற்காகவும் அமுது படைப்பதற்காகவும் நிலதானம் வழங்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு கூறுகின்றது எனலாம்.

பிறகோயில்கள் :

இவ்வூரிலுள்ள சாஸ்தா கோயிலும், பெருமாள் கோயிலும் கி.பி. 18 நூற்றாண்டிற்குப் பிறகு கட்டப்பட்டவையாக இருக்கலாம். தண் பொருந்தப் பேராற்றின் நீரைத் திருப்பிவிடும் பொருட்டு இவ்வாற்றின் குறுக்கே கல்லணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இஃது 'பழவூர் அணை' என்றே குறிப்பிடப்படுகின்றது. இவ்வணை கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும் எனலாம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே பலமுறை பராமரிப்புப் பணி செய்யப்பட்டிருக்கின்றது. இதனை விளக்கும் கல்வெட்டுகள்

அவ்வணையில் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. இப்படி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து ஆங்கிலேயர் காலம் வரை பல வரலாற்றுத் தடையங்களைக் கொண்டதாக இவ்வூர் விளங்குகிறது.

25. முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் வேளாண்மை

சி.முனிசாமி, கங்கைகொண்டசோழபுரம்.

உழவுத்தொழிலாம் வேளாண் தொழில் தொன்று தொட்டு இன்று வரை உலக அரங்கில் ஓர் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. அத்தகைய சிறப்புடைய 'வேளாண்மையின் நிலை' - முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் எத்துணைத் தன்மைத்தாய் இருந்தது என்பதனை ஈண்டு காண்போம்.

தொன்மை வாய்ந்த சோழர் குடியினர் வளம் நிறைந்த சோழ மண்டலத்தைத் தமக்குரியதாகக் கொண்டு பண்டைக்காலம் முதல் ஆட்சி புரிந்து வந்தமையால் 'வளவர்' என்று வழங்கப் பெற்றனர். இவர்களது நாடு வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியால் வளம்பெற்றுச் சிறப்பெய்தி இருந்தமையின் 'காவிரி நாடு' எனவும், 'பொன்னிநாடு' எனவும், ஆன்றோர்களால் போற்றப்பட்டுள்ளது. 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்தனக்கே யுரிமைபூண்ட 'மாமன்னன் முதலாம் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் 'திருமன்னி வளர இருநில மடைந்தையும்' - என இருநில மடைந்தைக்கு உரிமை படைத்தவனாய்க் காணப்படுகின்றான். அதாவது தனது தந்தையைக் காட்டிலும் மிகுதியான நிலப்பரப்பைத் தன்னடிப்படுத்தி இவன் ஆட்சிபுரிந்துள்ளான் .

பெருநிலப் பரப்பிற்குப் பேரரசனாக விளங்கிய இம்மன்னனின் ஆட்சியில் வேளாண்மையின் பங்கு என்ன என்று நோக்குமிடத்து நிலம், நீர், விளைபொருள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன முக்கிய கூறுகளாக அங்கம் வகிக்கின்றன.

நிலம்

சோழ மன்னர்களது ஆட்சிக்காலத்தில் முறையாக நிலம் அளந்து கணக்கிட்டு வகைப்படுத்தப்பட்டு தரம்பிரிக்கப் பட்டுள்ளது. மா, வேலி, காணி, முந்திரிகை எனும் நீட்டலளவை முறையில் நிலம் அளவீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அளக்கப்பட்ட நிலங்களுக்கு அவற்றின் எல்லைகள் தெரியும்படி அவ்வவ்விடங்களில் கற்கள் நடும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. அக்கற்களைப் புள்ளடிக்கற்கள் என்று வழங்கியுள்ளனர்.

சிவாலயங்களுக்கு விடப்பட்ட நிலங்களுக்குத் திரிசூலம் பொறிக்கப்பட்ட கற்களும் திருமால் கோயில்களுக்கு விடப்பட்ட

நிலங்களுக்குத் திருவாழி பொறிக்கப்பட்ட கற்களும் சைனக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களுக்கு குண்டிகை அல்லது முக்குடை பொறிக்கப்பட்ட கற்களும் எல்லைக் கற்களாக நடுவது சோழர் ஆட்சியில் நிலவிய பழைய வழக்கமாகும்[1].

அவ்வாறு அளக்கப்பட்ட நிலங்கள் சோழர்தம் ஆட்சிக் காலத்தில் அந்நிலங்களை அனுபவித்து வந்தோரின் உரிமைக்கே விடப்பட்டுள்ளன. உரிமையை அடிப்படையாக வைத்து, உழவுத்தொழிலையே அடிப்படையாகக் கொண்டு வழிவழியாக மேற்கொண்டு நிலங்களை அனுபவித்து வந்த குடிகளுக்கே உரிய வெள்ளாண் வகை நிலங்கள் என்றும், தானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் என்றும், சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்தற் பொருட்டு அவற்றைச் செய்து வருவோருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் என்றும் நிலம் மூவகையாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.

வெள்ளான் வகை

வெள்ளான் வகையில் நீர் நிலம், கொல்லை, நத்தம், காடு,ஆகியன அடங்கும். இவற்றுள் நீர்நிலம் என்பது முறையே நஞ்சை, புஞ்சைகளாகும். நத்தம் என்பது மக்கள் வீடு கட்டிக் கொண்டு குடி இருந்து வரும் மேட்டு நிலப்பரப்பாகும். முதல் இருவகை நிலங்களுக்கு மட்டும் வரிவசூல் செய்யப்பட்டுள்ளது. மற்ற இருவகை நிலங்களுக்கும் வரிவசூலிக்கப்பட்வில்லை. அதனால் அவ்விருவகை நிலங்களும் இறையிலி நிலங்கள் எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. வரியிலி நிலங்கள் 'தரமிலி நிலங்கள்' எனக் கருதப்பட்டுள்ளன. அவை ஊர் நத்தம், கம்மாளச்சேரி, வண்ணாரச்சேரி, ஈழச்சேரி, வெள்ளாண் சுடுகாடு, பரச்சேரி, பறைச்சுடுகாடு, ஊர்நிலத்து ஊடறுத்துப்போன வாய்க்கால், ஸ்ரீ கோயில், ஐயன்கோயில், பிடாரிகோயில், திருமுற்றம், தேவர் திருமஞ்சனக் குளம், ஊருணி, கழனிக்குளம், நந்தவனம், களம், கொட்டகாரம், ஓடை, சுடுகாட்டுக்குப் போகும்வழி, ஆறு, ஆற்றுப்படுகை, பெருவழி, மன்றம், கன்று மேய்பாழ், மனை, மனைப்படைப்பை, கடை, கடைத்தெரு, கிடங்கு, காடு, உவர்நிலம் என்பனவாம்.

தானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் :

இவ்வகையில் தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், மடப்புறம், சாலாபோகம், பிரம்மதேயம் என்பன அடங்கும். அடுத்ததாக, சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்தற்பொருட்டு அவற்றைச் செய்து வருவோருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள்ளில் சீவிதம், போகம், விருத்தி, காணி, பற்று, புறம், பட்டி, முற்றூட்டு என்பன அடங்கும். (இவையாவும் இறையிலி நிலங்கள் வகையில் அடங்கும்)

சீவிதம் என்பது சோழரது ஆட்சியில் அரசியல் அதிகாரிகளுக்கு அவர்களது தகுதிக்கு ஏற்றார்போல் அன்னோர் வாழ்நாள் முழுவதும் அனுபவித்துக்கொள்ளும்படி அளிக்கப்பெற்ற நிலமாகும்.

அர்ச்சனா போகம், வைத்தியபோகம், நிருத்த போகம் முதலியன போகம் வகையில் அடங்கும். இவ்வாறே மேற்குறித்த விருத்தி முதலான நிலங்கள் யாவும்அவரவர்தம் தொழிலுக்கு ஏற்ப வழங்கப்பட்ட நிலங்களாகும். மேற்குறித்த பிரம்மதேயம், தேவதானம், வெள்ளாண் வகை ஆகிய மூவகை நிலங்களையும் ஒருவகையிலிருந்து பிறிதொரு வகையாக மாற்றிய நிகழ்ச்சிகள் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்படுகின்றன. சான்றாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிரம்ம தேயமாயிருந்த பழையனூரை வெள்ளாண் வகையாக மாற்றி அதற்குக் குடிகள் கொடுக்க வேண்டிய அரசிறையை வடதிருவாலங்காட்டுச் சிவன் கோவிலுக்கு ஆண்டுதோறும் நிலை இறையாகச் செலுத்தி வருமாறு கங்கைகொண்டசோழன் உத்திரவு செய்துள்ளான் எனும் செய்தி திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தம் நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்கு போய் அங்கேயே தங்கிவிட்டவர்களுடைய நிலங்களை அரசனே பறிமுதல் செய்து, அதே ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடிகளுக்குக் கொடுத்துவிடும் வழக்கமும் அந்நாளில் நிலவியுள்ளது. இதனைத் தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் ஏமப்பேரூர் கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றால் அறியமுடிகிறது[2]. ஆகவே மேற்குறிப்பிடப்பட்ட செய்திகளிலிருந்து நிலம் தொடர்பான விபரங்கள் ஒரு சிறிது புலனாகும். அடுத்ததாக,

நீர் வளமும், நெல்விளைவும்

சோழநாட்டை வளநாடாக்கிய பெருமைக்குரியன ஆறுகளும், ஏரிகளுமே யாகும். இவற்றுள் முதலிடம்பெறுவது ஆறுகளேயாகும். ஆறுகளில் தலையாயது காவிரி. இக்காவிரியாறு தொன்றுதொட்டு இன்றுவரை, தன் நீர்வளத்தால் சோழநாட்டை சோழவளநடாக்கி செழிப்புறச்செய்து வருகிறது. இதன் கிளை ஆறுகளாக பல ஆறுகள் உள்ளன. அவற்றில் சில கீழ்வருமாறு:-

அரிசிலாறு, மண்ணியாறு, கொள்ளிடம், கடுவாய்வெண்ணி, வெட்டாறு, தென்பெண்ணை, குடமுருட்டி, முடிகொண்டானாறு என்பவனவாகும். இதில் இறுதியாகக் கூறப்பட்ட முடிகொண்டான் என்னும் ஆறு இராசேந்திர சோழனால் வெட்டப்பட்டதாகும்.

பேராறுகளிலிருந்து புதிதாகக் கிளை ஆறுகள், தோற்றுவிக்க இயலாத நிலையில் உள்ள பெருநிலப்பரப்புகளில் ஆங்காங்கு ஏரிகள் அமைத்து உழவுத்தொழில் இனிது நடைபெற்று வருமாறு சோழ

மன்னர்கள் செய்துள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட பேரேரிகள் அன்னோர்தம் சிறப்புப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டு வருவதனை இன்றும் நாம் காணலாம். சான்றாக: வீரநாராயணன் ஏரி (வீராணம் ஏரி), மதுராந்தகப்பேரேரி, பொன்னேரி (சோழகங்கம்) சோழ கங்கம் என்பது முதலாம் இராசேந்திரனால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இது அவனது தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்திற்கு மேற்கே சற்று தூரத்தில் உள்ளது. அதனை இன்றும் நாம் காணலாம்.

முற்காலத்தில் அப்பேரேரி தெற்கு வடக்கில் 16 மைல் நீளமுள்ளதாயும், மிக உயரமான கரைகளை உடையதாயும் இருந்துள்ளது. அவ்வேரி நீர்வளத்தினால் திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளை செழிப்படையச் செய்துள்ளது.

மேலும் முதலாம் இராசேந்திரனுக்கு சைவாசாரியாராக இருந்த சர்வ சிவபண்டிதர் என்பவருக்கு ஆச்சாரிய போகமாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலம்நெல் அளிக்குமாறு செய்துள்ளான் என்பதைனை ஒருகல்வெட்டுத் தொடர் மூலமாக நாம் அறிய முடிகிறது[3].

'நெல்லுடையான் நீர் நாடற்கோ - என்ற பழம்பாடற் பகுதியாலும், 'மேதக்க சோழவளநாடு சோறுடைத்து' - என்ற ஔவை பிராட்டியாரது திருவாக்காலும்,சோழர்காலத்திய நீர்வளமும், நெல்விளைவும் இனிதே புலனாகும்.

அடிக்குறிப்புகள்

1 S.I.I. V. No. 496

2. S.I.I. II.No. 20

26. பராந்தகச் சோழன் காலத்தில் திருவீழிமிழலை

ச.பரணன், தஞ்சாவூர்.

ஆதித்த சோழனுக்குப் பின் பரகேசரி என்னும் பட்டம் கொண்டு முதல் பராந்தக சோழன் கி.பி. 907 முதல் 953 வரை 46 ஆண்டுகள் சோழநாட்டினை மிகவும் சிறப்பாக ஆட்சி செலுத்தியுள்ளான். மதுரையை வெற்றி கொண்டதன் அடையாளமாக ''மதுரை கொண்ட கோப்பரகேசரி'' என்றும் இலங்கையை வெற்றி கொண்டதன் மூலம் ''மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி'' என்றும் கல்வெட்டுகளிலும், மேற்படி நாடுகளை வென்ற செய்தியினை கலிங்கத்துப் பரணியிலும் குலோத்துங்க சோழனுலாவிலும், இராசராச சோழனுலாவிலும் அறியலாம்.

முதல் பராந்தகச் சோழன் சிறந்த சிவபக்தன் ஆவான். தில்லையில் பொன் வேய்ந்தமையினை விக்கிரம சோழனுலாவில் ''கோதிலாத்தேறல் குனிக்குந்திருமன்றங் காதலாற் பொன்வேய்ந்த காவலனும்'' என்று ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார். இவன், திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர் கோயில்களை கற்றளி யாக்கினான். சிதம்பரத்திற்கு அருகே வீரநாராயணன் என்ற பெயரில் பெரிய ஏரி ஒன்றினை ஏற்படுத்தினான். குடவோலை முறையில் உறுப்பினர்களைத் தெரிவு செய்து கிராம ஆட்சி முறையினை அமைப்பது குறித்து விளக்கமாக உத்திரமேரூர் கல்வெட்டுல் குறிப்பிடுவதிலிருந்து இவன் காலத்தில் அரசியல் அமைப்பு முறை மிகச் செம்மையாக அமைக்கப்பெற்றள்ளது என்பதை அறிய முடிகிறது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், திருவீழிமிழலைக் கோயிலில் முதல் பராந்தகன் காலத்திய பத்து கல்வெட்டுகள் மூன்றாவது ஆட்சியாண்டு முதல் 38 வது ஆட்சியாண்டு வரை கிடைக்கின்றன. தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, ''திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்'' என்ற பெயரில் இவ்வூர் கல்வெட்டுகளைத் தொகுத்து நூலாக்கி வெளியிட்டுள்ளது. இவ்வூர் கோயிலில் உள்ள முதல் பராந்தகளின் கல்வெட்டுக்களைக் கொண்டு இவன் காலத்தில் இவ்வூர் பெற்ற வளர்ச்சியும் கோயிலின் சிறப்பினையும் ஈண்டு நோக்குவோம்.

ஸ்ரீ பலி

இவ்வூர் கோயிலில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட (பராந்தகன் கால கல்வெட்டு) மன்னன் பெயர் குறிப்பிடாத கல்வெட்டு ஒன்றில் ஸ்ரீ பலியினை வெள்ளித்திருமேனியாக செல்வன்

மூவாயிராப்பட்டன் என்பான் அளித்துள்ளான். மற்றும் பராந்தகனின் 3வது ஆட்சியாண்டைக் குறிப்பிடும் இவ்வூர் கல்வெட்டு ஒன்றில் ஸ்ரீ பலி கொண்டெழுந்தருள ஸ்ரீ பலித்தாலம் 240 கழஞ்சு வெள்ளி நிறையுள்ளதைப் பெயர் குறிப்பிட விரும்பாத தனிச்சேவகர் ஒருவர் தானமாக இவ்வூர் கோயிலுக்கு கொடுத்துள்ளார்.

பிற்காலத்தில் முதலாம் இராசராசனின் 22வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் ஸ்ரீ பலி எழுத்தருளி வீதி உலா முடித்து கோயிலுக்கு திரும்பும் வரை திருப்பதியம் பாடுவதற்குத் தேவையான செலவிற்கு நெல் தானமாக வழங்கப்பட்டுள்ளது. விக்கிரமச் சோழனின் ஆறாவது அட்சியாண்டு இவ்வூர் கல்வெட்டில் நின்றுபோன பிடாரிக்கோயில் உற்சவம் செவ்வாய்ப் பலியும் முன்பு நடந்தது போலே நடக்கச் செய்ததாக குறிப்பிடுகிறது. எனவே, இவ்வூர்க்கோயிலில் ஸ்ரீ பலி முறையாக, தொடர்ச்சியாக காலந்தோறும் நன்முறையில் நடந்துள்ளது என்பதில் இருந்து கோயிலில் உற்சவங்கள் குறைவின்றி நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது.

பிராமணர்களுக்கு உணவு

முதல் பராந்தகனின் ஆறாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் ''வெண்ணாட்டு திருமிழலைத் திருத்தான்தோன்றி மஹாதேவர் கோயிலில் அமரபுஜங்கன் முப்புரியான கண்டருள் கண்டப் பல்லவரையன் சந்தராதித்தவற் நால்வர் பிராமணர் நிசதமும் மத்யானத்து பேரால் இருநாழி அரிசியு மூன்று கறியும் நெய்யும் அட்டுவனவும் பாக்கும் வெற்றிலை'' தினமும் உணவுச்சாலையில் உண்பதற்குக் கொடையாக பொன் 120 கழஞ்சுகள் கொடுத்து அப்பொன் கொண்டு ஆண்டுதோறும் 120 கலம் நெல் பெற்று மேற்படி நான்கு பிராமணர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது செய்தி சொல்லப்படுகிறது. இதே போன்று விக்கிரம சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் இவ்வூரைச் சேர்ந்த வேளான் செந்தாமரைக் கண்ணனான காங்கயராயன் என்பவன் இவ்வூர் மகாசபையாரிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டதற் கிணங்க உள்ளூர் பிராமணர்களுக்கு உணவளிப்பதற்காக பத்துகலம் நெல் பெறுவதற்காக தத்தமங்கலம் என்ற நிலத்தை இறையிலியாக கொடுத்துள்ளான்.

பழுவேட்டரையர் நம்பிகண்டன்

திருவீழிமிழலை மகாசபை பெருங்குடிப்பெருமக்கள் கீழைச்சதுசாலையில் கூடியிருந்து திருமிழலைத் தொண்டன் என்ற அடியாள் மூலம் பதினைந்து ஈழக் காசுகளைப் பெற்றுக்கொண்டு அடிகள் பழுவேட்டரையர் நம்பிகண்டன் என்பவருக்கு நிலம் விற்றுக் கொடுத்துள்ளனர். இவர் மேற்படி நிலத்தில் உமைநங்கை நத்தவனம்,

திருத்தான்தோன்றி பட்டாரகர் நத்தவனம், என்ற நத்தவனங்களை ஏற்படுத்தியுள்ளார். இச் செய்திகளைக் குறிப்பிடும் கல்வெட்டில் மன்னன் பெயர் இடம் பெறவில்லை என்றாலும் எழுத்தமைதி மற்றும் கல்வெட்டுச் செய்திகளில் இருந்து இது முதல் பராந்தகன் காலத்தது என்று கூறலாம்.

முதல் பராந்தகனின் ஐந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் பொன்மணி என்பவர் தானமளித்த செய்தியுள்ளது. இவ்வூரைச் சேர்ந்த பலரும், கோயில் பணியாளர்களும் இவ்வூர் இறைவனுக்கு தானம் கொடுத்துள்ளதைப் பார்க்கும்போது இக்கோயிலின் வளர்ச்சியில் இவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு நன்கு தெரிகிறது.

நந்தா விளக்கு

முதல் பராந்தகனின் பதினைந்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று முட்ட நாடுடையார் தேவியார் தன் தாயார் வீர நாராயணியாரைச் சாத்தி வைத்த நந்தா விளக்கு என்று குறிப்பிடுகின்றது. இந்த நந்தா விளக்கு எரிப்பதற்கு 96 ஆடுகள் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

இதே மன்னனின் 34 வது அட்சியாண்டு கல்வெட்டும் நந்தா விளக்கெரிக்க 90 ஆடுகள் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது.

முதல் பராந்தக சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டு, தொடங்கி 38 வது ஆட்சியாண்டு வரை கல்வெட்டுக்கள் இவ்வூரில் கிடைத்துள்ளன. மேற்படி கல்வெட்டுச் செய்திகளில் இருந்து ஸ்ரீ பலித்தானம் செய்யவும், பிராமணர்களுக்கு உணவளிக்கவும், கோயிலுக்காக நந்தவனங்கள் அமைத்தும், நந்தா விளக்கெரிக்கச் செய்தும் திருப்பணி புரிந்தமை பெறப்படும். கோயிலில் பணிபுரியும் பணியாளர்களே, கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்திகளையும் நோக்குமிடத்து இவ்வூர் கோயில் வளர்ச்சியில் இவ்வூர் மக்கள் கொண்டிருந்த மிகுந்த ஈடுபாட்டினை உணரவும் முடிகிறது.

27. இராமநாதபுரம் மூலைக் கொத்தளம் சேதுபதி செப்பேடுகள்

சொ. கோவிந்தராம், இராமநாதபுரம்

இராமநாதபுரம் மூலைக் கொத்தளத்தைச் சேர்ந்த திரு கருப்பையா அவர்களிடமிருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு இரண்டு செப்பேடுகள் இக்கட்டுரை ஆசிரியரால் அன்பளிப்பாகப் பெறப்பட்டன. இவற்றின் ஓரங்கள் ஒழுங்கற்றுள்ளன. முதல் செப்பேட்டில் முன்பக்கத்தில் 37 வரிகளும் பின்பக்கத்தில் 24 வரிகளும் உள்ளன. இரண்டாவது செப்பேட்டில் முன்பக்கம் 30 வரிகளும் பின்பக்கம் 29 வரிகளும் உள்ளன. முதல் செப்பேட்டில் முன்பக்கம் 21வது வரியை அடுத்துத் தெலுங்கு எழுத்தில் ஒரு வரியும் இரண்டாவது செப்பேட்டில் பின்பக்கம் 17வது வரியை அடுத்து தெலுங்கு எழுத்தில் ஒரு வரியும் பொறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேடுகள் சகம் 1653 மற்றும் 1659-ல் (கி.பி.1731, 1737) வெளியிடப் பெற்றவை. முத்து விஜய ரகுநாத சேதுபதி காத்த தேவரின் பிரதானியாக விளங்கிய இராமலிங்கம் பிள்ளை கொடுத்த கொடை பற்றிக் குறிப்பிடுகின்றன. சேதுபதி மன்னர்களின் செப்பேடுகளை, முனைவர் எஸ்.எம்.கமால், முனைவர் செ. இராசு ஆகியோர் தனித்தனியே தொகுத்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தொகுத்த போது அறியப்படாது பின் அறியப்பட்ட செப்பேடுகள் இவை. இச்செப்பேடுகள் இரண்டிலும் குறிக்கப்படும் இராமலிங்கம்பிள்ளை. சேதுபதி மன்னர்கள் ஆட்சியில் முதலமைச்சராக இருந்தவராவார். நயினார் கோயில் மற்றும் பல இடங்களில் கோயில்கள் கட்டி திருப்பணி செய்தவராவார். இவ்விரண்டு செப்பேடுகளிலும் அவர் கட்டிய கோயில்களும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட கொடைகளும் குறிக்கப் படுகின்றன.

முதல் செப்பேட்டில் முதல் 34 வரிகளில் அரசகுலச் சிறப்பு, அரசர் சிறப்பு, புராணச் செய்திகள் முதலியன சொல்லப்பட்டுள்ளன. அடுத்து முத்து விசயரகுநாதசேதுபதி காத்தத் தேவரின் பிரதானியான இராமலிங்கம் பிள்ளை குறிப்பிடப்பட்டுள்ளார். இவரது குரு ஸ்ரீ கண்டதேவ முதலியாருக்கும், ஸ்ரீ பாதம் சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கும் கொடுத்த கிராமமான சிறு கொம்பூதி மடப்புறம் என்ற நிலத்தின் எல்லைகள் இதனில் சொல்லப்படுகின்றன. இதில் நெடுங்களம், கடைக்கொம்பு, ஏத்ததேவன் தோட்டம், பெரிய கொம்பூதி சட்டித்தலைவன் புஞ்சை, கோடாங்கி சக்கியியப் புஞ்சை, கல்லடி செய், இரங்கல் செய், உடையார் கருங்குளம் போன்ற இடப்பெயர்கள் எல்லை

நிலங்களாகவும் ஊர்களாகவும் சொல்லப்படுகின்றன. இவை அன்றைய சமுதாய நிலையை அறிய மிகவும் பயனுள்ளவையாகும். இந்தச் செப்பேட்டின் இறுதியில் சென்ன வீரப்ப பண்டாரத்தின் மகன் சென்ன வீரப்பன் இதை எழுதியதாக சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாவது செப்பேட்டில் முதல் 23 வரிகளில் அரசகுலச் சிறப்பு, அரசர் சிறப்பு, புராணச் சிறப்பு ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. அடுத்த பகுதியில் முத்து விஜயரகுநாத சேதுபதி காத்தத் தேவரின் பிரதானியாக இராமலிங்கம் பிள்ளையை குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் சேதுராமலிங்க சாமிக்கு சிவன் கோயிலைக் கட்டி சிவலிங்க பிரதிஷ்டை செய்ததாகவும், அதற்கு வேண்டிய வழிபாட்டுச் செலவுகளுக்காக இச்செப்பேட்டை வழங்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. செலவுகளுக்காக பாம்பன், இராமேஸ்வரம் ஆகிய துறைமுகங்களில் வரும் பாறுபடகு மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி பொருட்களுக்கு அரசுக்கு (அரண்மனை) கிடைக்கும் வரிவருவாயில் ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுத்ததாகவும் குறிப்பிடுகிறது. பாம்பன் துறைமுகத்தில் அரண்மனைக்குக் கிடைக்கும் வரியில் பத்துக்கு ஒன்று வீதமும் இராமேஸ்வரம் துறைமுகத்தில் கிடைக்கும் வரியில் பத்திற்கு கால் வீதமும் வரிவருவாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாம்பன் துறைமுகத்தில் ஏற்கனவே மூன்று பங்காக வசூலிக்கப்பட்டு வருகின்ற அள்ளு, தண்ணீர் பந்தலுக்கான வரி, செவ்வாய்க்கிழமை மடம், வெங்கடபதி ஜோஸ்யருக்காக வழங்கப்படும் தொகை ஆகியவற்றை நான்கு பங்காக்கி அதில் ஒரு பகுதியைச் சேதுராமலிங்க சுவாமிக்கு வழிபாட்டுச் செலவிற்காக ஒதுக்கியிருக்கிறார். துறைமுகத்திற்குத் தலைச் சுமையாக வருகின்ற பொருட்களின் மீது ஒரு காசு வீதம் வரியைப் பிரித்து இக்கோயிலில் நடைபெறுகின்ற பெரிய கட்டளை, தேவர் கட்டளை, சுக்கிர வாரக் கட்டளை ஆகிய வழிபாடுகளுக்கு ஒதுக்கி இருக்கிறார்.

இந்தச் செப்பேடு 18ம் நூற்றாண்டில் பாம்பன், இராமேஸ்வரம் ஆகிய கடற்கரை பகுதிகளில் நிகழ்ந்த வணிக நடவடிக்கைகளையும் துறைமுகங்களில் அரசுக்கு இருந்த வருவாயையும் தெளிவாகக் காட்டுகின்றது. இந்தச்செப்பேடு இராமலிங்கம் பிள்ளை சொல்லியபடி பண்டாரம் என்பவர் எழுதியதாகவும் கடைசியில் சொல்லப்பட்டுள்ளது. முதல் செப்பேட்டை எழுதிய சென்ன வீரப்பண்டாரமாகவே இவர் இருக்கலாம்.

இவ்விரு செப்பேடுகளும் சேதுபதி மன்னர்களுடைய ஆட்சியில் அவருடைய முதல் அமைச்சரான-(பிரதானி) இராமலிங்கம் பிள்ளை பெற்றிருந்த அதிகாரத்தையும் தெய்வபக்தியையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இவரே கோயில் கட்டி கொடைகள் கொடுத்த

போதிலும் அரசருடைய நன்மைக்காக (புண்ணியமாக) இக்கொடைகளைக் கொடுத்ததாக குறிப்பிடுவது அரசரிடம் கொண்டிருந்த இவரது இராஜ பக்தியையும் தெளிவாகக் காட்டுகிறது.

28. வரலாறு காட்டும் மிழலைக் கூற்றும்

கரு. இராசேந்திரன், மேலப்பனையூர்.

தமிழகத்துக் கல்வெட்டுகளை ஆராயுமிடத்து சில கல்வெட்டுக்களில் ''மிழலை நாட்டு'' என்ற சொற்றொடரையும் வேறு சிலவற்றில் 'மிழலைக் கூற்றத்து' என்ற சொற்றொடரையும் பார்க்கிறோம். மிழலை நாடு மிழலைக் கூற்றம் என்பவை ஒரே நிலப்பரப்பா? அல்லது இருவேறுபட்ட நிலப்பரப்புகளா என்பதை அறிந்து கொள்வதோடு அவற்றின் அமைவிடத்தைத் தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்த் திருநாடு பழங்காலத்தில் சேர, சோழ, பாண்டியநாடு என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்த போதிலும் அவை தம்முள் உட்பிரிவுகளை உடையதாக விளங்கியதை சங்க காலத்துத் தொகை நூல்களில் குடநாடு, குட்டநாடு, ஒல்லையூர்நாடு என்று கூறப்பட்டுள்ள நாடுகளின் பெயர்களைக் கொண்டு உய்த்துணரலாம். நாட்டை உட்பிரிவுகளை உடையதாக ஆக்கி ஆளும் முறை, வளர்ச்சி பெற்ற பிற்காலச் சோழர்கள் காலத்தில், நிர்வாக வசதியின் பொருட்டும் ஆட்சி மேம்பாடு கருதியும் அவர்களது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியை பல மண்டலங்களாகவும் மண்டலங்களைப் பல வளநாடுகளாகவும், வளநாடுகளைப் பல கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு பிரிக்கப்பட்ட மண்டலங்களும் வளநாடுகளும் அரசனது பெயரைக் கொண்டும்[1] கூற்றங்களும் உள்நாடுகளும் அந்தந்த தலைக் கிராமத்தின் பெயரைக் கொண்டும் அழைக்கப்பட்டன[2].

மிழலைநாடும் அதன் அமைவிடமும்

சோழ நாட்டில் காவிரியாற்றின் வடகரை அருகில் இராசேந்திர சிங்க வளநாடு என்ற பெரிய நிலப்பரப்பு ஒன்று தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் இருந்தது. அது சுமார் இருபது உள்நாடுகளைக் கொண்டதாக விளங்கியதை அங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவ்வளநாட்டின் உள்நாடுகளில் ஒன்றாக மிழலை நாடு இருந்தது மிழலை நாடு[3] சோழகேரளபுரம்[4] சேய் நல்லூர்[5] மிழலை[6] திருவருப்பாடி[7] திருந்து தேவன்குடி[8] முதலிய ஊர்களை உடையதாக விளங்கியதை அப்பகுதிக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. சோழகேரளபுரம் சோழபுரம் என்றும் சேய்நல்லூர் சேய்ஞலூர் என்றும் மருவி வழங்கப்பட்ட பெயர்களை உடைய ஊர்களும், திருவப்பாடி, திருந்து தேவன்குடி முதலிய பெயர்களை உடைய ஊர்களும் இன்றைக்கு கும்பகோணம் வட்டத்தில் காவிரியாற்றுக்கு வடக்கிலும் மண்ணியாற்றுக்குத் தெற்கிலும் அமைந்து உள்ளதை வைத்து மிழலை

நாடு மற்றும் அதன் அமைவிடத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

மிழலைக் கூற்றுமும் அதன் அமைவிடமும்

பாண்டிய நாடானது வடக்கில் வெள்ளாற்றையும் தெற்கில் கன்னியாகுமரியையும் கிழக்கில் கடலையும் மேற்கில் பெருவெளியையும் எல்லையாக உடைய நாடு என்பதை ஒரு பழம் பாடல் தெரிவிக்கிறது. பாண்டிய நாட்டின் உட்பிரிவுகளில் ஒன்றாக மிழலைக் கூற்றம் பண்டுதொட்டு இருந்து வந்தது. 'பாண்டி மண்டலத்து மிழைக் கூற்றத்து ஒக்கூருடையார்' என்ற திருக்களர்க் கல்வெட்டாலும்[9] மிழலைக் கூற்றத்து நடுவில் கூற்றுத் திருப்பெருந்துறை என்ற ஆவுடையார் கோவில் கல்வெட்டாலும்[10] இன்னபிற கல்வெட்டுக்களாலும், மிழலைக் கூற்றம் பாண்டிய நாட்டில் உட்பிரிவுகளில் ஒன்றாக விளங்கி வந்ததை உணரலாம். இன்றைய அறந்தாங்கிக்கு அருகிலுள்ள ஆவுடையார் கோவிலே திருப்பெருந்துறை என்பதும் ஆவுடையார் கோவிலுக்கு அணித்தாக ஒக்கூர், கரூர், பொன்பற்றி போன்ற ஊர்கள் உள்ளன என்பதும் அறியத்தக்கது. வெள்ளாற்றின் கீழ்க்கோடியில் வெள்ளாற்றை ஒட்டியமைந்த சுந்தரபாண்டிய வளநாட்டை வடக்கு எல்லையாகவும், பாம்பாற்று வட கரையிலும் முத்தூற்றுக் கூற்றத்தின் கிழக்கு எல்லையிலுள்ள திருப்புனல் வாசலை தென் எல்லையாகவும் கடலைக் கீழ் எல்லையாகவும் விருதராசப் பயங்கர வளநாடு என்ற பெயர் பெற்ற திருமயம் வட்டத்து கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கானாட்டை மேற்கு எல்லையாகவும் கொண்ட நிலப்பரப்பே மிழலைக் கூற்றமாகும்.

'ஓம்பா ஈகை மா வேள் எவ்வி
புனல் அம் புதனின் மிழலையோடு - கழனிக்
கயல் ஆர் நாரை போர் வில் சேர்க்கும்
பொன் அணி யாணைத் தொல் முதில் வேளிர்
குப்பை நெல்லி முத்தூறு தந்த
கொற்ற நீள் குடை கொடித்தேர்க் செழிய''

என்ற 24வது புறநானூற்றுப் பாட்டில் மிழலைக் கூற்றம் வேள் எவ்விக்கு உரியதாகவும் முத்தூரை அடுத்தும் இருந்ததை அறியலாம். பிறகு முதலாம் இராசேந்திரனின் புதல்வனான வீரராசேந்திரன் காலத்தில் பொன்பற்றியிலிருந்து புத்தமித்திரன் என்பவர் வீரசோழியம் என்ற இலக்கணநூலை எழுதினார். அந்நூலின் பாயிர உரையில்

'ஈண்டுநூல் கண்டான் எழின்மிழலைக் கூற்றத்துப்
பூண்டபுகழ்ப் பொன்பற்றி காவலனே - மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை வீரன்றன்
சொல்லின் படியே தொகுத்து''

என்ற வெண்பாவினால் பொன்பற்றி மிழலைக் கூற்றத்தைச் சேர்ந்த ஊர் என்பது நன்கு விளங்கும். பொன்பற்றி இன்றைக்கு பொன்பேத்தி என்ற பெயரில் ஆவுடையார் கோவிலுக்கு தெற்கில் ஒரு சிறிய ஊராக விளங்குகிறது. மணல்மேற்குடியை குலச் சிறையாருக்கு உரியதாக குறித்திருப்பதும் சேக்கிழார் தம்பெரியபுராணத்தில் மணமேற்குடியை பாண்டிய நாட்டு ஊர் எனக் குறிப்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

வளநாட்டில் மிழலைக் கூற்றம்

மிழலைக் கூற்றம் ராஜராஜப் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியதை ''ராஜ ராஜப்பாண்டிய நாட்டு மிழலைக் கூற்றுத்து[11] என்ற தொடரால் அறிந்து கொள்ளலாம். ராஜ ராஜப் பாண்டிய நாடு என்ற பெயர் அதன் பிறகு ராஜேந்திர சோழ வளநாடு[12] என்ற பெயரையும் கேயவினோத வளநாடு[13] என்ற பெயரையும் பெற்றுத் திகழ்ந்ததைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மிழலைக் கூற்றம் மேல்கூறு, கீழ் கூறு, நடுவிற் கூறு என்று முப்பெரும் பிரிவுகளை உடையதாக விளங்கியது. மிழலைக் கூற்றம் மிழலை அல்லது மிழலூர் என்ற ஊரைத் தலைமை இடமாகக் கொண்டு அமைக்கப்படடிருக்க வேண்டும் என்பதை இதன் பெயர் வழக்கை வைத்தும் மிழலை[14] மிழ்லூர்[15] என்ற சொல் இங்குள்ள கல்வெட்டில் காணப்படுவதைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறு

மேல்கூறு என்ற சொல் மேற்குப் பகுதி என்று பொருள் தருவதாகும். இம்மேல்கூறு தன்னுள் பாம்பாற்று நாடு என்ற ஒரு உட்பிரிவை உடையதாக இருந்தது. ''மிழலைக் கூற்றத்து மேல்கூற்று மீபாம்பாற்று நாட்டு[16] என்றும் மிழலைக் கூற்றத்து மேல் கூற்று வடபாம்பாற்று நாட்டு[17] என்றும் கல்வெட்டுக் காட்டும் தொடர்கள் இப்பாம்பாற்று நாடு மீ பாம்பாற்று நாடு வடபாம்பாற்று நாடு என்ற உட்பிரிவுகளை உடையது என்பதை தெரிவிப்பதாகும். மீ பாம்பாற்றுநாடு என்ற தொடர் மேல் பாம்பாற்று நாடு எனற பொருளில் கையாளபட்டிருக்கக் கூடும். மீ பாம்பாற்று நாட்டில் மாளவர் மாணிக்கம்[18] தாஞ்சியூர்[19] மும்மோர் சிறுவம்பூர்[20] காயங்குடை[21] எனங்களூர்[22] அத்தானி நல்லூர்[23] ஆகிய ஊர்கள் இருந்தன. மாளவர் மாணிக்கம் வாளரமாணிக்கம் என்றும் தாஞ்சியூர் தாஞ்சூர் என்றும் இன்று வழங்கப்படுகிறது. வடபாம்பாற்று நாடு அண்டக்குடி[24] தண்ணிரண்டைக்குடி[25], அருள் மொழித் தேவநல்லூர்[26] கோட்டையூர்[27], வேள்மங்கலம்[28] வைகுந்த நல்லூர்[29] முதலிய ஊர்களைக் கொண்டிருந்தது.

நடுவிற்கூறு

நடுவிற் கூறு என்பது நடுப்பகுதியைக் குறிக்கும். இக்கூற்றத்தின் நடுவில் கூறில் புல்லூர்குடி[30] விளங்காட்டூர்[31] கட்டிகுறிச்சி[32] தச்சன் நென்மேலி[33] பொதுவக் குடை[34] திருப்பெருந்துறை[35], புங்கபிசேரி[36] செம்மாந்தை[37] இரும்பாளி[38] துஞ்சனூர்[39] பிரமிலமங்கலம்[40] மிழலூர்[41] ஒக்கூர்[42] முதலான ஊர்கள் இருந்தன. மேற்கண்ட ஊர்கள் அனைத்தும் திருப்பெருந்துறை என்ற ஆவுடையார் கோவிலைச் சுற்றியுள்ள ஊர்களே.

கீழ்கூறு

கீழ்கூறு எனப்படுவது கிழக்கு பகுதியாகும். கீழ் கூற்றில் வெட்சியூர்[43] விளத்தூர்[44] கொளுவனூர்[45] அரும்பூர்[46] பொன்பற்றி[47] தச்சனூர்[48] வெள்ளூர்[49] மணல் மேற்குடி[50] ஆகிய ஊர்கள் இருந்தன.

பெருநாவலூர்[52] அரும்போருடை[52] மஞ்சக்குடி[53] நுளம்பூர் காரிமங்கலம் என்று மேற்கண்ட ஒவ்வொரு ஊரும் மிழலைக் கூற்றத்து என்ற தொடரோடு பொதுவாகக் கூறப்படுவதால் இவ்வூர்கள் எந்த கூற்றில் இருந்தது என்று கல்வெட்டுகளால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சிறப்புப்பெயருடைய ஊர்கள்

கீழ் கூற்று வெட்சியூர் மும்முடிச் சோழநல்லூர் என்றும் விளத்தூர் ஜெயங்கொண்ட சோழநல்லூர் என்றும் அழைக்கப்பட்டன. [54] அரும்பூர், ஜெயங்கொண்ட சோழ நல்லூர் என்ற பெயரையும் செய்யானம், பராக்கிரம பாண்டிய நல்லூர் என்ற பெயரரையும் பெற்றிருந்தன. [55]நடுவிற் கூற்றிலுள்ள விளங்காட்டூர் விக்கிரம சோழ நல்லூர் எனற பெயரிலும் [56] கட்டிகுறிச்சி இரும்பாளி என்ற ஊர்கள் பராந்தக நல்லூர் என்ற பெயரிலும்[57] விளங்கின. பாம்பாற்று நாட்டு தண்ணீரண்டைக்குடி தரணி விக்கிந்திரன் நல்லூர்[58] என்றும், நுளம்பூர் பந்துவன மகாதேவநல்லூர் [59] என்றும் பல்வேறு சிறப்புப் பெயர் கொண்டவையாக விளங்கி வந்தன. இவைபோக அருண்மொழி தேவநல்லூர் ராஜகேசரிநல்லூர் உத்தமசோழ நல்லூர் முடி கொண்ட சோழப்பேரரி என்ற கிறப்புப் பெயருடைய ஊர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன. அவை எவ்வூருக்கு உரிய பெயர்கள் என்பது கல்வெட்டுக்களால் விளங்கவில்லை.

மிழலைக் கூற்றத்தை சேர்ந்தவர்கள் இடைக்காலத்தில் தெற்கே பாண்டிய நாட்டின் தென்பகுதிக்குக் குடி பெயர்ந்து சென்று அங்கு சோழ, பாண்டிய மன்னர்களின் அரசியல் அதிகாரிகளாக இருந்து கோவில் திருப்பணிகள், கோவிலுக்கு நிலக்கொடைகள் முதலியவைகளைச் செய்தனர் என்பதை விருது நகர மாவட்டம், சேத்தூர், கொல்லங் கொண்டான் அர்ச்சனாபுரம், செங்குன்றபுறம் முதலிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களால் அறியலாம்.

இதுவரை சொல்லப்பட்ட ஊர்கள் அனைத்தும் திருமயம் வட்டம் கீழ்ப்பகுதியிலும் அறந்தாங்கி வட்டத்தின் தென்பகுதியிலும் உள்ள ஊர்களாகும். மேற்கண்ட ஊர்களில், பல ஊர்களின் பெயர்கள் மாறாமல் இன்றைக்கும் அதே பெயரில் இருப்பது இக் கூற்றத்தின் பரப்பளவை தெரிந்து கொள்ள வாய்ப்பாக உள்ளது.

அடிக்குறிப்புகள்

1. எடுத்துக்காட்டாக ஜெயங்கொண்ட சோழமண்டலம், கேரளாந்த வளநாடு
2. எல்லையூர் கூற்றத்து கூடலூர் நாட்டு
3. களப்பிரர் காலத்து தமிழக ஆட்சி மயிலை சீனி வேங்கடசாமி, பக்கம் 67

4 - 8. மேலது பக்கம் 68

9. தெ.தொ.5:432
10. தெ.க.தொ.4: 160
11. மேலது
12. தெ.க.தொ.14:194
13. தெ.க.தொ.14:245
14. தெ.க.தொ.7:742
15. கெ.க.தொ. 5:301,394.
16. புக.தொ. 418,823,824
17. தெ.இ.க.14: 194,239
18. பு.க.தொ.418,823
19. பு.க.தொ. 844
20. தெ.க.கொ,5:432
21. தெ.க.தொ.14:239
22. தெ.க.தொ.372
23. பு.க.தொ.895
24. தெ.க.தொ.14:194
25. தெ.க.தொ.5:301
26. தெ.க.தொ.14:194
27. தெ.க.தொ.14:239
28. தெ.க.தொ.14:229
29. தெ.க.தொ.5:301
30. தெ.க.தொ.5:432
31. தெ.க.தொ.14:145,157

32 - 34. தெ.க.தொ.14:161

35. தெ.க.தொ.5:502
36. தெ.க.தொ.14:144
37. தெ.க.தொ.14:194
38. தெ.க.தொ.17:128
39. தெ.க.தொ.14:301

40. தெ.க.தொ.5:301
41. மேலது
42. தெ.க.தொ.5:432
43. தெ.க.தொ.5:30
44. தெ.க.தொ.5:30
45. தெ.க.தொ.14:229
46. தெ.க.தொ.14:264
47. தெ.க.தொ.14:145,194,372
48. தெ.க.தொ.7
49. தெ.க.தொ.14:245
50. தெ.க.தொ.7:448
51. தெ.க.தொ.5:406
52. தெ.க.தொ.5:437
53. தெ.க.தொ.5:30
54. தெ.க.தொ.5:30
55. தெ.க.தொ.5:301
56. தெ.க.தொ.5:432
57. தெ.க.தொ.17:128
58. தெ.க.தொ.5:301
59. பு.க.தொ.124

29. உத்திர மேரூர்ச் சபை – ஒரு மீள் பார்வை

சு.சுவாமிநாதன், மைசூர்

முதலாம் பராந்தக சோழரது உத்திரமேரூர் குடவோலை பற்றிய கல்வெட்டுக்களை அறியாதார் ஒருவருமில்லை. இம்மன்னரது பன்னிரண்டு (கி.பி. 919) மற்றும் பதினான்காம் ஆட்சியாண்டுகளில் (கி.பி.921) வரையப் பெற்ற இக்கல் வெட்டுக்கள் தமிழக ஊராட்சி முறை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். உத்திர மேருச் சதுர்வேதி மங்கலத்து ஊராட்சியின் பல்வேறு வாரியங்களுக்குப் பணிபுரிய விழையும் உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை முதலியவற்றை விரிவாக இவை கூறுகின்றன. இக்கல்வெட்டில் கூறப்படும் நியதிகள் ஏற்படக் காரணமென்ன? இக்கல்வெட்டின் காலத்திற்கு பிறகு அவை பின்பற்றப்பட்டனவா? என்பதனை இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது.

இக்கிராமம் பல்லவர் காலத்திலிருந்து இருந்து வந்தது. இங்குள்ள கல்வெட்டுகளில் பல்லவ மன்னர் நந்திவர்மரின் கல்வெட்டு மிகத் தொன்மையான கல்வெட்டாகும். பல்லவர் காலத்து கல்வெட்டுக்கள் இன்னும் சில இவ்வூரிலுள்ளன[1]. ஆனால் எந்த பல்லவர் காலக் கல்வெட்டிலும் வாரியம் பற்றிய குறிப்புக்கள் இல்லை. பல்லவர் காலத்தில் உத்திர மேருச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள அவையினரே கிராமத்தை நிருவகித்தனர்[2]. எளிய ஆட்சி முறை, சிறிய மக்கள் தொகை, முதலிய காரணங்களினால் இக்கிராமம் தன்னிச்சையாக இயங்க முடிந்தது. வாரிய அமைப்பு உருவாக வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை. கல்வி, கேள்விகளில் வல்ல அந்தண உறுப்பினர்களே உள்ளாட்சி முறையை செவ்வனே நடத்தினர் என்பது தெரிகிறது.

நாளடைவில் தொண்டை மண்டலத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. மக்கள் தொகைப் பெருக்கம்[3], பற்றாக்குறை, தகுதியற்ற நாணயமற்றவர்கள் உள்ளாட்சி அவையினராக தேர்ந்தெடுக்கப்படுதல் ஆகியவற்றால் பூசலும், குழப்பமும் ஏற்பட்டன. உறுப்பினர்களின் ஊழல்களும், மோசடிகளும் உள்ளாட்சி சீர்குலையக் காரணமாயிற்று[4]. மேலும் முதலாம் பராந்தக சோழர் பல போர்களில் ஈடுபட்டு சோழ அரசை விரிவுபடுத்தினார்[5]. பொருளாதார வளர்ச்சி மக்கள் வாழ்விற்கு இன்றி யமையாதது என உணர்ந்தார்[6]. பல தரிசு நிலங்களை விளைச்சலுக்குக் கொணர்ந்தார். இவரது கல்வெட்டுக்களில் பயின்று வரும் கல்லி, வயக்கி, திருத்தி போன்ற சொற்றொடர்கள் இதனை வலியுறுத்தும்[7]. பல கோயில்கள் கட்டப்பட்டு ஏராளமான நிவந்தங்களும், கொடைகளும் அளிக்கப்பட்டன. இவைகளையெல்லாம் கண்காணிக்கும் பொறுப்பு

ஊரவை களிடம் விடப்பட்டன. எனவே ஊரவைகளில் அங்கம் வகிப்ப வர்கள் கல்வி, கேள்விகளில் வல்லுநராகவும் நாணயமுடையவர் களாகவும் செயலாற்றும் திறனுடையவர் களாகவும், செல்வ முடையவர்களாகவும் இருக்க வேண்டியதின் அவசியம் வலியுறுத்தப் பட்டது. மாபாதகங்கள் புரிந்து அதற்கு பிராயச்சித்தம் செய்தவர்களும், வாரிய உறுப்பினர்களாக இருந்து கணக்குக் காட்டாதவர்களும் தகாதவர்களுடன் தொடர்பு கொண்டவர்களும் இத்தேர்தலில் நிற்க தகுதியற்றவர்கள் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது.

இக்குடவோலைத் தேர்தலுக்குப் பிறகு உள்ளாட்சி முறை செவ்வனே நடைபெற்றதா என்பதை அறிய நேரிடையான ஆதாரங்களில்லை. உத்திரமேரூரிலிருந்து கிடைக்கும் பிற கல்வெட்டுக்களிலிருந்து பெரும்பாலும் அமைதியான ஆட்சியே நடைபெற்றது என ஊகிக்கலாம். ஆனால் மூன்றாம் கன்னரதேவன் காலத்துக் கல்வெட்டு ஒன்று[8] மகாசபையினால் தண்டனைக்குள்ளான துஷ்டர்களிட மிருந்து தண்டனைத் தொகையை வசூல் செய்யும் பொறுப்பு கிராம காரியம் செய்யும் பெருமக்களுடையது என்றும், அவையிலிருந்து கொண்டே அவைக்கெதிராக முரண்பட்டு எதிர் வழக்காடும் உறுப்பினர் களையும், வாரியப் பெருமக்களையும் மத்தியஸ்தர்களையும் தண்டங் கொள்ள வேண்டும் என்றும், அதுவும் கிராம காரியஞ் செய்யும் பெருமக்களே நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறுகிறது. பராந்தகரின் கல்வெட்டு 'துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வ்யவஸ்தை செய்தோம்' என்கிறது. இது உத்திரமேரூர் கல்வெட்டின் முக்கிய குறிக்கோளாகும். ஆனால் ஒரு காலக் கட்டத்தில் பிழை ஏற்பட்டு தீயவர்களும் ஒழுக்கமில்லாதவர்களும் அங்கத்தினர் களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்கள் சபையின் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும், அவையின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நடந்து கொண்டுள்ளனர். இதனால் பல தீர்மானங்கள் நிறைவேற்ற இயலாமல் போனது[9]. இவர்களைத் தண்டங் கொள்ளும் பொறுப்பு கிராம காரியஞ் செய்யும் பெருமக்களுடையது என்று உத்திரமேரூச் சதுர்வேதி மங்கலத்தின் பெருங்குறி சபை பணித்தது.

மூன்றாம் கன்னரதேவரின் படையெடுப்பும், அதனைத் தொடர்ந்து அவரது ஆக்கிரமிப்பும் தொண்டை மண்டலத்தை பாதித்தது[10]. இதனால் ஏற்பட்ட குழப்பத்தை உத்திர மேருச் சதுர்வேதி மங்கலத்தின் வாரியங்களில் பணிபுரிய, பல விரும்பத்தகாத நபர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதுவே பெருங்குறி சபை இத்தகைய தீர்மானம் கொண்டு வர ஏதுவாக இருந்தது எனக் கருத இடமுண்டு.

இன்னொரு கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழரின் காலத்தியது. முன்பு உத்திரமேருச் சதுர்வேதிமங்கலத்து அவையார் பல மன்னர்கள் காலத்தில் பலரிடம் கொடையாகப் பெற்றுக் கொண்டு நிவந்தங்களைச் சரிவர நிறைவேற்ற முடியாமலிருந்ததைக் குறிக்கின்றது. இக்கல்வெட்டு பல்லவ மன்னர் அபராஜிதர் தனது பதினான்காமாட்சியாண்டில் திருப்புலிவனமுடைய நாயநாற்கு நான்கு நொந்தா விளக்குகள் சூரிய கிரகணத்தின் நாளன்று எரிக்க நூறு கழஞ்சுப் பொன் ஈந்துள்ளார். முதலாம் பராந்தக சோழரின் பதிமூன்றாம் ஆட்சியாண்டில் வாமதேவ கிரமவித்தன் என்பார் இதே கோயிலில் இரு நொந்தா விளக்கெரிய தனது நிலத்தைக் கொடையாக கொடுத்துள்ளார். அடுத்த ஆண்டு இவ்வூரின் ஆளுங்கணத்தாரான நந்தி கிரமவித்தபட்ட சோமயாஜியார் ஒரு நொந்தா விளக்கெரிக்க பன்னிரண்டரை கழஞ்சுப் பொன் நல்கியுள்ளார். மூன்றாம் கன்னர தேவர் தொண்டை மண்டலத்தை ஆண்டஞான்று உருத்திரவேழம்பைச் சிறு நங்கைச்சானி என்பவர் ஒரு நொந்தா விளக்கெரிய பன்னிரண்டரை பொன் தந்துள்ளார். இக் கொடைகளெல்லாம் கோயில் சுவர்களில் கல்வெட்டுக்களாக வெட்டப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழனின் முப்பத்தேழாமாட்சி யாண்டில் திருப்புலிவனத்து கோயில் பணியாளர்களான மாகேஸ்வரரும், தானத் தாரும் உத்திரமேருச்சதுர்வேதி மங்கலத்து அவையினரை கல்வெட்டில் கண்டபடியே எட்டு நொந்தா விளக்குகள் எரிக்கக் கோரினர். இதற்கு அவையினர் நித்தமும் விளக்கெரிக்க வசதியில்லை, அதற்குப் பதிலாகச் சித்திரைத் திருநாள், திருகொடித் திருநாள், திருவோணத் திருநாள் முன்பு நடைபெற்றபடியே நடத்துவதாகவும், குறிப்பிட்ட பத்து நாட்களில் மட்டும் எட்டு விளக்குகள் எரிப்பதாகவும் தெரிவித்தனர். மேற் கண்ட மூன்று நாட்களில் அமுது படி, சாத்துப்படி முதலிய தேவைகளுக்கு நிவந்தங்கள் குறைவில்லாமல் அளிப்பதாகவும் உறுதி கூறினர்.

மேற்கண்ட கல்வெட்டில் பல்லவ மன்னன் அபராசிதன் காலத்திலிருந்து அளிக்கப்பட்ட சில கொடைகள் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்று தெரிகிறது. எந்த காலத்தி லிருந்து, ஏன் இவை நிறை வேற்றப்படவில்லை என்பது தெரியவில்லை. இதற்கான கல்வெட்டுக்கள் ஆதாரமிருந்தும் ஏன் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் தான் கோயில் அலுவலகர்கள் அவையின் கவனத்திற்கு கொணர்ந்தனர்?

இக்கால கட்டத்தில் தொண்டை மண்டலத்தின் ஒரு முக்கிய ஊராக உத்திரமேருச்சதுர்வேதி மங்கலம் விளங்கியது. பல கோயில்களும், அதிலுள்ள கல்வெட்டுக்களும் இதனை வலியுறுத்துகின்றன. அவையின் பணிகளும் அதிகரித்தன. நாளடைவில் செலவு, வருவாயை விட அதிகமானது. வசூலிக்கப்பட்ட வரிகள்

பல்வேறு பொதுப்பணிகளை ஆற்றுவதிலேயே செலவழிந்தன. பொதுப்பணிகளான நீர் நிலைகளைச் சுத்தம் செய்து ஆழப்படுத்துதல், குளங்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், பொது நிலங்களைப் பராமரித்தல் ஊழியர்களுக்கு ஊதியம் தருதல் கல்விச்சாலை களைப் பராமரித்தல், தனது ஆளுகையின் கீழ் இருக்கும் கோயில்களைக் கண்காணித்தல் போன்ற பலவற்றுக்குச் செலவிடப்பட்டிருக்கலாம். மேலும் இயற்கையின் சீற்றங்களான மழையின்மை, வெள்ளம், பஞ்சம் இவைகளினால் விளைச்சல் குன்றி தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கலாம். விளைந்த விளைச்சலும் போதுமானதாக இல்லாமல் இருந்திருக்கலாம். எனவே முன்பு நிவந்தத்திற்காக அளிக்கப்பட்ட கொடைகளை வேறு செலவை ஈடுகட்ட செலவிட்டிருப்பர். உத்திரமேரூரிலுள்ள விக்கிரம சோழரின் பதினைந்தாமாட்சியாண்டுக் கல்வெட்டொன்று[12] இவ்வூரவையினர் திருவேகம்பமுடையார் கோயிலிடமிருந்து ஐந்நூறு கழஞ்சுப் பொன்னையும் இருநூற்று முப்பது காசையும் கடனாக வாங்கினர், அதைத் திருப்பித் தருமாறு கோயில் கேட்ட போது, தர இயலாத உத்திரமேரூர் அவையினர் இதற்குப் பதிலாக வெண்ணைக் கூத்த நல்லூர் என்ற கிராமத்தை வரி விலக்களித்து கோயிலுக்கே அளித்தனர்[13].

எனவே முதலாம் பராந்தக சோழர் காலத்தில் இயற்றப்பட்ட உள்ளாட்சி சட்டங்கள் உத்திர மேரூர் அவையினரால் எப்போதுமே கடைப்பிடிக்க இயலவில்லை. நாளடைவில் நடைமுறைப்படுத்துவதில் பலசிக்கல்கள் ஏற்பட்டன. பல்வேறு சூழ்நிலைகளினால் ஏற்பட்ட நெருக்கடிகளே இதற்குக் காரணமாக இருந்தன எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. தெ.க.தொ. 6 : 356. மேலும் காண்க.

   K.V. Subrahmanya Aiyar : *Historical Sketches of Ancient Dekhan* Vol. II (P.212)

2. எந்தப் பல்லவர் கல்வெட்டிலும் வாரியத்தைப்பற்றி விரிவான குறிப்புக்களில்லை. காண்க தெ.க.தொ. 6 : 344, 356, 365.

3. உத்திரமேரூரிலுள்ள மக்கட் தொகையைப் பற்றி அறிய நேரிடையாக எவ்விதத் தகவலுமில்லை. ஆனால் பல்லவர் கால கல்வெட்டுகளைக் காட்டிலும் சோழர் காலக் கல்வெட்டுகள் அதிக அளவில் இருப்பதாலும், சோழர் காலக் கல்வெட்டுகளில் பல மனிதர்களின் பெயர்கள் பயின்று வருவதாலும், இம் முடிவுக்கு வர வேண்டியதுள்ளது.

4. Archaeological survey of India. Annual Report.1904-05 P. 136.

5. S. Swaminathan : *The early Cholas History Art and Culture* (1998). P. 54.

6. பொருளாதார நிலையில் சோழ நாட்டை வலுப்படுத்திய பெருமை பராந்தக சோழரையேச் சாரும். இவரது முன்னோடிகளான விஜயாலயனும், முதலாம் ஆதித்தனும் ஓயாத போர்களிலேயே தங்கள் ஆட்சியைக் கடத்தினர். ஆனால் பராந்தக சோழரோ நாற்பத்தெட்டு ஆண்டுகள் சோழ நாட்டை ஆளும் நல்லூழ்

பெற்றிருந்தார். இவர் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் சோழ நாட்டை வளப்படுத்தியது எனக் கருதலாம்.

7. S. Swaminathan : opcit. p. 166.

8. *தெ.க.தொ. 6 :* 362 *Ep Ind., Vol. XXIV PP. 41-42*

9. பாண்டியமன்னர் மாறஞ்சடையரின் மானூர்க் கல்வெட்டு அவையின் முடிவுக் கெதிராக வழக்காடுபவர்களின் மீது ஐங் காசு தண்டம் விதிக்கப்பட வேண்டும் என்கிறது. *Ep. Ind. Vol XXIV P. 8* மூன்றாம் இராசராசனின் கல்வெட்டொன்று. அவையின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்பவர்களை வைத்துக் கொண்டு கிராமகாரியஞ் செய்ய வேண்டும் என்று காமரசவல்லிச் சருப்பேதி மங்கலத்தின் பெருங்குறி அவை வியவஸ்தை பண்ணின தாகக் கூறுகிறது. ஆண்டறிக்கை 1914. எண்.92.

10. S. Swaminathan op. cit. p.62

11. தெ.க.தொ. 6 : 350.

12. மேலது.

13. பல சோழர் கல்வெட்டுக்களிலிருந்து ஊரவையினர், கோயில்களிடமிருந்து கடன் பெற்று பின்னர் கடனைத் திருப்பித் தர இயலாத நிலமையில் கோயில்களுக்கு நிலங்களை அளித்தும் கோயிலுக்கு உரிமையான நிலங்களின் மேலுள்ள வரிகளை நீக்கியும் கடனை அடைத்ததாகத் தெரிகின்றது. 1925 ஆண்டறிக்கை எண். 101, 1915 எண். 95. முதலாம் பராந்தக சோழரின் பத்தாமாட்சியாண்டில் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்து அவையினர் திருவரங்கம் கோயிலிடமிருந்து நானூறு கழஞ்சுப் பொன்னைக் கடனாகப் பெற்றனர். முதலாம் குலோத்துங்க சோழரின் பத்தாமாட்சியாண்டு வரை அவையினர் ஒழுங்காக வட்டியை மட்டும் கோயிலுக்குச் செலுத்தி வந்தனர். இம்மன்னரது பத்தாமாட்சியாண்டில் மேற்குறிப்பிட்ட அவையினர் இந்நாநூறு கழஞ்சுப் பொன்னுக்குப் பதிலாக ஆறு வேலி நிலத்தை கோயிலுக்கு விற்றுக் கடனை அடைத்தனர். தெ.க.தொ. 24 : 52 மேற் குறிப்பிட்டது போல் நாளடைவில் கிராம அவையின் அலுவல்களும் அதனால் ஏற்பட்ட செலவுகளும் பெருகின. வாங்கியகடனைக் கொடுக்க இயலாத நிலையிலிருந்த அவை தன் நிருவாகத்தின் கீழிருந்த பொது நிலங்களை விற்றும், அல்லது கோயில் நிலங்களின் மீதுள்ள வரிகளை விலக்கியும் ஈடு செய்தனர்.

30. கல்வெட்டுக்கள் சொல்லும் நகரத்தார் அறப்பணிச் செய்திகள்

முனைவர் வள்ளி சொக்கலிங்கம் , காரைக்குடி.

இந்தியாவில் குறிப்பிடத் தக்கதொரு வாணிகச் சமுதாயமாக விளங்கிய நகரத்தார் கி.பி. 18,19ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை மற்றும் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று அரிசி, மிளகு, நவதானியங்கள், துணிமணிகள் முதலியவற்றைக் கொண்டு விற்கும் தொழிலிலும் வட்டிக்கு பணம் கொடுக்கல், வாங்கல் தொழிலிலும், தேயிலை, இரப்பர் தோட்டத் தொழிலிலும் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்து வைத்து அதைக்கோயில் திருப்பணிகளுக்கும் மற்ற அறப்பணிகளுக்கும் செலவிட்டனர். நகரத்தார் திருப்பணி செய்த கோயில்களும், புதிதாகக் கட்டிய கோயில்களும், தோற்றுவித்த பசுமடங்களும் நந்தவனங்களும், அன்னதான மடங்களும், நகர விடுதிகளும், நகரச் சத்திரங்களும், தண்ணீர் பந்தல்களும், சுமைதாங்கிக் கற்களும், சாலைகளும், பாலங்களும், தண்ணீர்த் தொட்டிகளும், மருத்துவச் சாலைகளும் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் பற்பல. நகரத்தாரின் அறப்பணிகளைச் சொல்லுகின்ற கல்வெட்டுக்கள் தமிழகத்திலும், வெளி மாநிலங்களிலும் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு காணலாம்.

கோயில் திருப்பணிகள்

சிவன் கோயில்களைக் கோத்திரம் போன்று அடிப்படையாகக் கொண்டு ஒன்பது கோயில் பிரிவினராக வாழ்பவர்கள் இவர்கள். ஐரோப்பியர் ஆட்சியில் போற்றுவாரின்றிக் கிடந்த, பாடல் பெற்ற தலங்களைத் தேடித்தேடித் திருப்பணி செய்தனர். தாங்கள் வசிக்கும் பகுதிகளில் சிவன் கோயில்கள் இல்லாவிட்டால் புதிதாகச் சிவன் கோயில்களைக் கட்டினர். அறுபடைவீடுகளிலும் முருகன் கோயில்களிலும் திருப்பணிகள் செய்தனர். ஊருணிகள், குளங்கள் வெட்டியபோது, ஊருணிக் கரைகளில் பிள்ளையார் கோயில்களைக் கட்டினர். மலைக் கோயில்களாக இருந்தால் மக்கள் ஏறுவதற்கு வசதியாகப் படிக்கட்டுகள் செதுக்கி அமைத்தனர். தங்கள் பகுதிகளில் உள்ள கிராம தேவதைக் கோயில்களிலும் திருப்பணி செய்துள்ளனர்.

சகாப்தம் 1517-ல் (கி.பி.1595) அதிராப்புலி விசையாலயதேவர் ஆட்சியில் புதுக்கோட்டை மாவட்டம் கோனாப்பட்டு என்ற ஊரில் ''ஏகப்பெருமாள் சேவகப் பெருமாள் புத்திரன் அழகன் செட்டியார்

என்பவர் அழகப் பெருமாள் ஊறணிதன்மம் உண்டாக்கி திருக் கோவிலும் கட்டுவிச்சு கற்பகவிநாயகனும் மண்டபத்திலெயெழுந்தருளப் பண்ணி'' யுள்ளார். இதன் வழிபாட்டுக்கு வெங்களப்ப நாயக்கர் தன்மமாய்க் கோனாப்பட்டு வயலில் நிலமும் கொடுத்துள்ளார் தான் செய்த தர்மம் எனினும் அப்பகுதி ஆட்சியாளரான வெங்களப்ப நாயக்கனின் தர்மம் என்று மரியாதை நிமித்தம் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்[1]. இதே போல சிவகங்கை மாவட்டம் பலவான்குடியில்பிள்ளையார் கோயில் ஊரணிமடம் ஆகியவை சகம் 1789-ல் (கி.பி.1867) உண்டாக்கப்பட்ட செய்தியைக் ''கல்வாசல் நாட்டின் யிளையாத்தக் குடியான குலசேகரபுறத்தில் யெரணியூர் மருதங்கூரான ராசநாராயணபுரத்தில் யெறணியூர் திருவேள்ப்பூருடையான் நெல்லியான் செட்டியார் மகன் குஞ்சாஞ்செட்டியார் ஊறணி பிள்ளையார் கோயில் மடம் தருமம்[2] என்ற கல்வெட்டு வரிகளால் அறிகின்றோம்.

மதுரைச் சொக்கநாதர் கோயிலின் முன்பாக உள்ள கம்பத்தடி மண்டபம் நகரத்தார்களின் சிவபக்திக்கும் கலையார்வத்திற்கும் சிறந்த எடுத்தக்காட்டாகும். பழனித்தலத்தில் மாரியம்மன் கோயிலில் உள்ள முப்பதுகால் மண்டபம் நகரத்தார் திருப்பணியே. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களில் ஒன்றான 'நெற்குப்பை' என்ற ஊரிலிருந்து நேமங்கோயிலைச் சேர்ந்த குப்பாப்பிச்சன் செட்டியார் மகன் குமரப்பன் என்பவர் உப்பு வணிகத்தின் பொருட்டு மதுரை சென்று கிடைத்த இலாபத்தில் பழனிமுருகனுக்கும் ஒரு பங்கு வைத்து வணிகம் செய்து, முதலில் மூன்று பரதேசிகளுக்கு அன்னதானம் செய்தார். நாளடைவில் நகரத்தார்களுக்குப் பழனித்தலத்தின் மீது ஈடுபாடு ஏற்பட்டது. நகரத்தார்கள் ஒவ்வொரு வருடமும் தைப்பூசத்திற்கு காவடி எடுத்து பாதயாத்திரையாகப் பழனி சென்று முருகனை வணங்கினர். பழனியில் ஆவணி மூலவீதியில் அன்னதானமடம் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் தைமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் தொடங்கி 5 நாட்களுக்கு அன்னதானமும் மலைமீது ஆண்டவருக்குக் காவடி செலுத்தி அபிஷேகமும், மாரியம்மன் கோயிலில் தைப்பூச உற்சவம் 10 ஆம் நாள் மண்டகப்படியும் தொன்றுதொட்டு இன்றும் நடத்தி வருகிறார்கள். தைப்பூச உற்சவத்தில் 10 ஆம் நாளன்று மண்டகப்படி நடத்தவும், முருகக்கடவுள் வள்ளி தெய்வயானையுடன் வந்து தங்கவும் மாரியம்மன் கோயில் முன்பாக உள்ள முப்பதுகால் மண்டபத்தை குமரப்பன் நின்று கட்டினார். வடபுபுறம் உள்ள மண்டபத்தில் அருள்மிகு தண்டபாணி சுவாமிவிக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. மண்டபம் கட்டப்பட்ட விவரங்களைக் கொண்ட கல்வெட்டு அங்கு பொறிக்கப்பட்டுள்ளது.

அன்னதான மடங்களும் சத்திரங்களும்

இறைவழிபாட்டின் பொருட்டும் வணிகத்தின் பொருட்டும் வெளியூர்களுக்குச் செல்லும்போது போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் பகலிலும் இரவிலும் தேசாந்திரிகளும், பாதயாத்திரிகர்களும் இளைப்பாறித் தங்கிச் செல்லும் பொருட்டு பல தலங்களிலும், முக்கிய நகரங்களிலும் அன்னதான மடங்களையும் சத்திரங்களையும் ஏற்படுத்தினர். அங்கு அடியார்களுக்கும், துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் சாதி, இன வேறுபாடு கருதாது உணவளித்தனர். காசி முதல் இராமேசுவரம் வரை நகரத்தார்கள் ஏற்படுத்திய மடங்களும், சத்திரங்களும் பல உள்ளன.

சுமார் 1800ஆம் ஆண்டளவில் வியாபாரத்தின் பொருட்டு வடநாடு சென்ற நகரத்தார்கள் கல்கத்தாவிலிருந்து பர்மா முதலிய கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்றனர். கல்கத்தாவில் தங்களுக்கு என்று ஒரு நகரவிடுதி அமைத்து முருகனை வழிபட்டு அன்னதானம் செய்ததை அங்குள்ள கல்வெட்டால் அறிகிறோம். பன்னிரண்டு வரிகளையுடைய இக்கல்வெட்டு பின்வருமாறு. ''நீலமாமிடற்றால வாயினான் பாலதாயினர் ஞாலமாள்வரே. மங்களம். நாட்டுக் கோட்டைத் தனவைசிய நகரத்தார்கள் தொழில் முறை முதன் முதலில் செய்ய முயன்ற துரமுக ஊர்கள் ஐந்து. அதாவது நாகூர், சென்னை, கல்க்கற்றா, காலி, பினாங்குமேயாகும். இவடத்திற்கு நம்பிடபிள்ளைகள் வந்து சத்திவேல் ஸ்தாபித்து தொழில் ஆரம்பித்து நடந்து வருகிறதும் நாளது வரை வருடம் 120 ஆகிறது[5].

வடநாடு சென்ற நகரத்தார்கள் காசி விசுவேசுவரர் பால் மிகுந்த ஈடுபாடு கொண்டு 1863 - இல் அங்கு அன்னதான மடமும், நந்தவனமும், பசுமடமும் அமைத்து விசுவேசுவரர் வழிபாட்டிற்குரிய பொருட்களை இன்றளவும் விடாது கொடுத்து வருகின்றனர். காசிமடத்தின் நுழைவாயிலின் மேலுள்ள கல்வெட்டு வாசகமாவது. ''உருதுறோ ற்காரி இ ஆவணி மீ 10 ஆம் தேதி நாட்டுக் கோட்டை நகரத்தார் அன்னதான மடம் கிறகப்பிறவேசம் கலியுகாதி ஹு 4964 யிங்கிலீஸ் ஹு 1863''[6].

இராமர் பிறந்த தலமான அயோத்தியில் நகரத்தார்கள் சத்திரம் நந்தவனம் முதலியன அமைத்து சத்திரத்தில் இராமர் கோயிலை ஏற்படுத்தினார்கள். அங்குள்ள இராமர், சீதை, இலக்குமணன், பரதன், சத்ருகன், அனுமன், ஆகியோர் செப்புத்திருமேனிகள் மிக வனப்புடைவை. இங்கு நித்திய வழிபாடும் திருவிழாவும் நடைபெற நகரத்தார்கள் ஏற்பாடு செய்தனர். அயோத்தி நகரச் சத்திரத்திலுள்ள தமிழ்க்கல்வெட்டு, அயோத்தியில் நகரத்தார் செய்த பணிகளை எடுத்துரைக்கிறது. ''சிவமயம் கலி இல் 4984 சாலிவாகனம் இல் 1805

சுபானு இல் ஆவணி மீ˚ யஅவ ஆதித்திய வாரம் பாண்டிநாட்டைச் சேர்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டி வைசிய நகரத்தார் அயோத்தியாபுரியில் ஸ்ரீராம பிரான் பிரதிஷ்டையும் அன்னதானச் சத்திர ஸ்தாபனமும் செய்யப்பெற்று நடந்து வருகிறது. சுபம் இங்கிலீஷ் இல் 1883 செப்டம்பர் மீ˚ 2 வ''[7]

கயை பீகாரிலுள்ள இந்துக்களின் புண்ணியத்தலம். பல்குனி ஆற்றங்கரையில் அமைந்த கோயிலில் விஷ்ணுபாதம் இருக்கிறது. இப்பாதத்தில் முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான செயலாகக் கருதுகிறார்கள். நகரத்தார்கள் அங்கு சத்திரமும் நந்தவனமும் உண்டாக்கிச் சத்திரத்தில் நடராசரைப் பிரதிட்டை செய்து வழிபாடுகள் நடத்தினர். அக்கல்வெட்டு பின் வருமாறு.

''உ சிவமயம் ஸ்ரீகெயாவில் சாதாருண சித்திரை வரு 72 மங்களவாரம் சுபதினத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டி வைசிய நகரத்தார்கள் இந்த தருமச் சத்திரமும் பிரதிஸ்ட்டை செய்து ஷதிகதி முதல் விஷ்ஸ பாத பூசை நடராசா பூசையும் - வேதியர் சாதுக்களுக்குப் போஜனமும் நடந்து வருகிறது சுபமஸ்த்து. கலியுகாதி 5022 இங்கில்ஷ் 10-6.1922''[8]

பழனிமுருகனை வழிபட தைமாதந்தோறும் பாதயாத்திரை செல்லும் நகரத்தார்கள் ஒவ்வொரு சித்திரை மாதமும் வைத்தீசுவரன் கோயிலுக்குப் பாதயாத்திரையாகச் சென்று அங்குள்ள முத்தையனையும், தையல் நாயகியையும், வைத்தீசுவரரையும் வழிபட்டனர். அன்னதானச் சத்திர மொன்றை அங்கு கானாடுகாத்தானைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் ஏற்படுத்தியுள்ளார். அச்சத்திரத்தில் காணப்படும் கல்வெட்டு பின்வருமாறு : ''சிவமயம் கரு.தூ.க.மனை ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1803 கலியுகாதி ஞு 4982 யிதன் மேல் செல்லாநின்ற விக்கிரம ஞு காற்திகை மீ˚ 2 வ மதுரை ஜில்லா சிவகெங்கைச் சீமை திருப்பத்தூர் தாலுகா கானாடுகாத்தானில் யிருக்கும் நாட்டுக்கோட்டையாரில் மாத்தூர் கோவில் வீராபாண்டியபுரத்தில் மணலூரு உடையான் கோத்திரத்தில் கறுப்பன் செட்டியார் குமாறன் தூங்கப்ப செட்டியார் அன்னதான சத்திறம் சுபமஸ்து 1880 ஞுடம்.''[9]

நீர்நிலை அறங்கள்

நகரத்தார்கள் வசித்த பாண்டிய நாட்டுப் பகுதியில் வளமான ஆறுகள் இல்லை. மழையும் குறைவு. வானம் பார்த்த பூமியாகிய அப்பகுதிகளில் எப்போதாவது மழை பெய்யும். மழை நீரை வீணாக்காது தேக்கி வைத்து குடிக்கவும் குளிக்கவும் உழவுத் தொழிலுக்கும் பிறதேவைகளுக்கும் பயன்படுத்தும் வகையில் நகரத்தார்கள் பண்டு தொட்டு மன்னர்களும் மற்றவர்களும் செய்தது போல ஊருணிகள். குளங்கள் வெட்டியும், கிணறுகளைத் தோண்டியும் தண்ணீர் கிடைக்க

வழிவகை செய்தனர். அதுமட்டுமல்லாமல் முன்பே தோண்டப்பட்ட ஊருணிகள் குளங்கள் ஆகியவை மண்மேடிட்டுத் தூர்ந்துவிடும்போது தூர்வாரியும், ஆழப்படுத்தியும், குளக்கரையை உயர்த்தியும், படிக்கட்டுக்கள் அமைத்தும் உள்ளனர். 'திருவேட்பூருடையான் ஊருணி'[10] 'அழகப் பெருமாள் ஊருணி'[11] 'பட்டணசாமி ஊறணி'[12] 'சத்தியபுஷ்கரணி ஊறணி'[13] 'பெரியநாயகி அம்மன் கோயில் ஊறணி'[14] 'அமிர்தகுளம்'[15] ஆகியவை கல்வெட்டுக்களால் அறியப்படும் நகரத்தார்களால் அமைக்கப்பட்ட ஊருணிகளுள் சிலவாகும்.

மேலைச்சிவபுரி சிவன் கோயிலின் எதிரிலுள்ள குளத்தின் பெயர் 'அமிர்தகுளம்' என அங்குள்ள கல்வெட்டால் அறிகிறோம். அக்குளத்தின் ஒவ்வொரு படித்துறையையும் ஒவ்வொருவர் அமைத்துக் கொடுத்து ள்ளமையும் கல்வெட்டால் அறிகிறோம். அக்கல்வெட்டுக்களுள் ஒன்று ''குரோதன ஞ தை மீ அரு. சுப சுப்பிரமணியஞ் செட்டியார் தமக்கை வள்ளியம்மை ஆச்சி படித்துறைத் தர்மம்'' ''19-8-1932'' என்கிறது.[16]

பாலங்கள்

ஊருணிகளை வெட்டியதோடு ஊருணிக்கு நீர்வரத்துக்குரிய மடைவாய்களையும், பாலங்களையும். நகரத்தார்கள் கட்டியிருக் கிறார்கள். கொத்தமங்கலத்திலிருந்து வி. லெட்சுமிபுரத்திற்கு செல்லும் வழியில் கொத்தமங்கலம் ஊருணிக்கு அருகிலுள்ள பாலத்திலுள்ள கல்வெட்டு. கொத்தமங்கலம் கண்மாயிலிருந்து, ஊருணிக்குத் தண்ணீர் பாய்வதற்கு பாலம் கட்டி வழிவகை செய்ததைக் குறிக்கிறது. இதைச் செய்தவர் தனியொரு நகரத்தார். 13 வரிகளையுடைய அக்கல் வெட்டாவது,

''உ சிவமயம் கொத்தமங்கலம் கோவில் மு. சின்னாஞ் செட்டியாகிய வடுகநாதன் செட்டியாற். சித்தூரணி கால்வாக்கி பெரிய கண்மாயி கால்வாயிலிருந்து தண்ணீற் வருகிற பாலம். 30. 6.1858''[17]

சாலைகள்

அக்காலத்தில் சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பல கிராமங்கள் வெளியுலகத் தொடர்பின்றி யிருந்தன. கிராமத்து மக்கள் தாங்கள் விளைவித்த பொருட்களை மற்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. மருத்துவம் போன்ற அவசரத் தேவைகளும் அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. மற்றவர்களாலும் போக்குவரத்து வசதிகளற்ற அக்கிராமங்களுக்குச் செல்ல இயலவில்லை. இந்த நிலையில் நகரத்தார்கள் தங்கள் ஊர்களிலும். தாங்கள் திருப்பணி செய்த தலங்களிலும் பல சாலைகளைத் தங்கள் செலவில் அமைத்தனர். அவர்கள் அமைத்த சாலைகள் பல ஆண்டுகள் ஆகியும் இன்றும் நல்ல நிலையில் உள்ளன. பயணிகளுக்கு

வசதியாகக் கைகாட்டிகளையும் அமைத்துள்ளனர். சான்றிற்கு ஒன்றிரண்டு.

திருப்பத்தூரிலிருந்து கண்டவராயம்பட்டிக்குப் போகும் வழியில் கண்டவராயன் பட்டி விலக்கில் இரண்டு பலகைக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இடதுபுறமுள்ள கல்வெட்டு அந்த இடத்திலிருந்து மற்ற ஊர்கள் எவ்வளவு மைல் தொலைவில் இருக்கின்றன என்பதையும். அக்கைகாட்டியை அமைத்தவர் யார் என்பதையும் சுட்டுகின்றது[18]. உ சிவமயம் திருப்பத்தூர் 1M கண்டவறாயன்பட்டி 2 தெக்களூர் 7 நெற்குப்பை 10 பொன்னமராபதி 14 தெ.சி.நா.சொ.தர்மம் 1922 வலதுபுறமுள்ள கல்வெட்டு, கண்டவராயன்பட்டியைச் சேர்ந்த தெ.சி.நா. சொக்கலிங்கம் செட்டியார் திருமயத்திற்குச் செல்லச் சாலை அமைத்ததைக் குறிப்பிடுகிறது.[19]

உ. சிவமயம், திருமயம் கண்டவராயன்பட்டி தெ.சி.நா. சொக்கலிங்கம் செட்டியாரவர்களால் போடப்பட்ட ரோட்டு தர்மம் ஸ்தாபிதம் 1922.

காரைக்குடியிலிருந்து தேவகோட்டை போகும் வழியில் அரியக்குடிவிலக்கில் பலகைக் கல்லிலுள்ள கல்வெட்டு நகரத்தாரின் சாலைப் பணியைக் குறிப்பிடுகிறது.

ஸ்ரீராமஜெயம் கானாடுகாத்தான் க.வெ.சித-சிதம்பரஞ் செட்டியார் அவர்களின் ஞாபகாற்த்தமாக போட்டிருக்கிற ரோடை தேவகோட்டை டிவிசனலாபீஸர் மகாராராஸ்ரீ. ராமச்சந்திரய்யரவர்களால் 18.5.1915 ல் திறக்கலானது.[20]

ஊருணிக் கரைகளையொட்டி சுமைதாங்கிக் கற்கள் காணப்படுகின்றன. தலைச்சுமையுடன் நடந்து செல்வோர் வேறு ஆள் உதவியில்லாமல் இறக்கி வைத்து இளைப்பாறியபின், எளிதாக எடுத்துச்செல்வதற்கு உதவியாக இருக்கும். இச்சுமைதாங்கிக் கற்களில் நகரத்தார்களின் கல்வெட்டுகள் உள்ளன. நெற்குப்பை பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள சுமைதாங்கிக் கல்லில் பொறிக்கப் பட்டுள்ள வரிகள். ''உ நெற்குப்பை துக.மு.மு.துக்கை கருப்பஞ் செட்டியார் வைத்த சுமைதாங்கி ஈசுவர வருஷம் கார்த்திகை மீ ௳ ௰௩ 1937 டிசம்பர்''[21] ஆத்தங்குடியிலிருந்து சொக்கலிங்கம்புதூர் செல்லும் வழியிலுள்ள சுமை தாங்கிக் கல்வெட்டு. ''தாது வருஷம் - சித்துரை மாதம் 21 ஆம் தேதி கு.பழ.சு. அருணாசலம் செட்டியார் உபயம். [22] பள்ளத்தூர் ஊருணிக் கரையிலுள்ள சுமை தாங்கிக் கல்வெட்டாவது :- உ சிவமயம் பள்ளத்தூர் சொ.மு.அ.மெ.மு. சீதை ஆச்சி உபயம் விகுருதி வருஷம் சித்திரை மீ 3 ஆம் தேதி[23].

முடிப்புரை :

கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் பல வணிகக் குழுக்கள் செய்த கொடைகள் பற்றிய கல்வெட்டுகள் தமிழகத்திலும் கடல்கடந்த நாடுகளிலும் பல உள்ளன. அதன் தொடர்ச்சியாக 18,19 நூற்றாண்டுகளிலும் 20 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் செட்டி நாட்டில் இருந்த வணிகர்களான நகரத்தார் தமிழகத்திலும் இந்திய வடமாநிலங்களிலும் கல்வெட்டுகள் விட்டுச் சென்றிருக்கின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள். எண்.861.
2-4 கட்டுரையாசிரியரால் படிக்கப்பட்டது.
5-8. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் நூற்றாண்டு விழாமலர். (பதிப்பாசிரியர் சோம. லெ) 1863-1963
9. கட்டுரையாசிரியரால் படிக்கப்பட்டது.
10. ஒன்பது நகரக் கோயில்கள். வ.தேனப்பன், தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை.1990.
11. புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள். எண்.861
12. 'ஒன்பது நகரக் கோயில்கள்'- வ. தேனப்பன்.
13. கட்டுரையாசிரியரால் படிக்கப்பட்டது.
14. ஆத்தங்குடி கும்பாபிடேக மலர். திரு.சு. இராஜகோபால் கட்டுரை.
15-23. கட்டுரையாசிரியரால் படிக்கப்பட்டவை.

31. கல்வெட்டு – செப்பேடு கூறும் இலக்கியச் செய்திகள்

செ.போசு, மதுரை.

தமிழகத்திலும் - தமிழகத்தை ஒட்டிய பிற இடங்களிலும் உள்ள திருக்கோயில் கல்வெட்டுக்களிலும், நமக்குக் கிடைத்திருக்கும் செப்பேடுகளிலும் இருந்து பல வரலாற்று இலக்கியங்கள் பற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன. அவற்றுள் மறைந்தன போகக் கிடைத்தனவற்றுள் சிலவற்றை மட்டும் இந்தக் கட்டுரையில் காணலாம்.

சிராமலை அந்தாதி : திருச்சிராப்பள்ளிக் குன்றிமீது ''சிராமலை அந்தாதி'' என்ற பெயரில் 104 பாடல்கள் கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளன. இதை வேம்பையர் கோன் நாராயணன் என்பவர் கி.பி. 9 - 10ஆம் நூற்றாண்டில் பாடி இருக்கிறார்.

இராசராசநாடகம் : முதலாம் இராசராசன் மீது - அவன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில்மீது இயற்றப்பட்ட நூல் ''ஸ்ரீ இராசராசேசுவரம்'' என்பதாகும். இது ஒரு நாடகநூல். இதை நடித்த விசயராசேந்திர ஆச்சாரியனுக்கு ஆண்டுதோறும் 120 கலம் நெல் தரப்பட்டது. விக்கிரமாதித்த ஆசாரியன் என்ற நாடகப் பிரியன் பந்தணைநல்லூரில் இராசராச நாடகம் நடத்தியமைக்காக நட்டுவப் பங்கு பெற்றிருந்ததாக அவ்வூர்க் கல்வெட்டு கூறுகிறது. (தெ.கு.க.தொ. 2 : 67)

வீரஅனுக்கவிசயம் : முதலாம் இராசேந்திரன் காலத்தில் 'வீர அனுக்க விசயம்' என்ற நூலைப் பூங்கோயில்ப் புலவர் என்பார் பாடி நிலக் கொடை பெற்றிருக்கிறார்.

குலோத்துங்கசரிதை - பூம்புலியூர் நாடகம் - தமிழ்ப் பாரதம் : முதலாம் குலோத்துங்கன் காலத்தில் 'குலோத்துங்க சரிதை' என்னும் வரலாற்றை நாராயண பட்டர் பாடியுள்ளார். இவன் காலத்தில் திருனிலை விசாகர் என்பவர் 'பாரதத்தைத் தமிழ்ப்படுத்தினார் என்று திருவாலங்காட்டுக் கல்வெட்டு கூறுகிறது. 'பூம்புலியூர் நாடகம்' என்பது திருப்பாதிரிப் புலியூரைப் பற்றியது. அதை எழுதியவனுக்கும் பரிசு தரப்பட்டுள்ளது.

வஞ்சி : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி. 1216) புதுக்கோட்டை திருவரன்குளம் கல்வெட்டு தேவன் திருவரங்குளமுடையார் என்பவர் 'வஞ்சி' என்று நூல் பாடியபோது, ஊரார், 'மறச் சக்கரவர்த்திப் பிள்ளை' என்ற பட்டமும் ஒரு சிற்றூரில்

பாதியளவு கொடையாக வழங்கியும் சிறப்பித்துள்ளனர். (புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண். 278)

பிரபந்தம் : மூன்றாம் இராசராசன் காலத்தில் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலில் காணப்படும் கல்வெட்டில் திருவாழிபரப்பினான் கூத்தன் என்ற புலவர் 'பிரபந்தம்' பாடி வள்ளுவப்பாக்கம் என்ற ஊரை முற்றூட்டாகப் பெற்றார் எனக் கூறுகிறது.

பிள்ளைக் கவி : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்கு உட்பட்ட காங்கேயன் என்ற தலைவன் தன் மீது 'பிள்ளைக்கவி' பாடிய சிறுபெரிச்சியூர் கொடிக் கொண்டான் பெரியன் ஆதிச்சதேவன் என்ற புலவனுக்கு தடாத்தனேரி என்ற ஊரில் நிலங்கள் அளித்ததாகப் பெரிச்சியூர்ச் சிவன்கோயில் கல்வெட்டால் அறியப்படுகிறது.

கப்பற்கோவை : கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஒருவனின் சார்பாளனாக இருந்த கரிய மாணிக்க ஆழ்வான் என்ற தலைவன்மீது 'கப்பற்கோவை' பாடப் பெற்றுள்ளது.

வீரமாலை : கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அச்சுத தேவ மகாராயர் என்பவரின் சார்பாளராக இருந்த வெங்களநாயக்கர் தென்னாட்டை ஆண்டு வந்தார். அவரிடம் தலைமை அதிகாரியாக இருந்த 'தீத்தாரியப்ப பிள்ளை' என்பவர் 'வீரமாலை' என்னும் நூலைப் பாடினார் என்று இராங்கியம் கல்வெட்டு கூறுகிறது.

கலம்பகம் : இதே கி.பி. 16ஆம் நூற்றாண்டில் உத்தண்ட வேலாயுதக்கவி என்பவர் திருவதிகைச் சிவன் மீது 'கலம்பகம்' பாடி மனையும், நிலங்களும் பெற்றார் என்று திருவதிகைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

காரிகை : சமணப் புலவராகிய அமிர்தசாகரர் 'யாப்பருங்கலம்', ''யாப்பருங்கலக் காரிகை'' ஆகிய இரண்டு நூல்களையும் இயற்றினார். இவர் குணசாகரரின் மாணவர் என்பதை, 'நீடூர்ச் சிவன் கோயில் கல்வெட்டு', 'காரிகைக்குளத்தூர் மன்னவன் அமிர்தசாகர முனிவரைக் கொண்டு காரிகை செய்வித்தவனுடைய 'வழித் தோன்றல்' என்று கழுகுமலைக் கல்வெட்டால் அறியப்படுகிறது. (தெ.இக. 5 : 310, 334).

மூவர் உலா : விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் மீது 'உலா' பாடியவர் ஒட்டக்கூத்தர். இவை சோழ மன்னர்களது வரலாறு பற்றிய செய்திகளைத் தொடக்கத்தில் சுருங்கச் சொல்கின்றன. மேலும் இம்மூன்று மன்னர்கள் பற்றியும் சொல்கின்றன.

சின்னமனூர்ச் செப்பேட்டில்,

"தலையாலங் கானத்திற் றன்னொக்கு
மிருவேந்தரைக் கொலை வாளில் தலைதுமித்துக்
குறைத்தலையின் கூத்தொழித்தும்" - என்று

வரும் வரிகள் குறிப்பிடத்தக்கன. இதே சின்னமனூர்ச் செப்பேட்டில் காணப்படும். 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்ற தொடர்களில் பாண்டியர்களின் அருங்செயல்கள் புலப்படும்.

வடார்க்காடு மாவட்டம் போளூருக்கு அருகே உள்ள திருமலையில் அதியமான் நெடுமானஞ்சியைக் குறிப்பிடும் கல்வெட்டொன்று செய்யுள் வடிவத்தில் உள்ளது.

"வஞ்சியர் குலபதி யெழினி வகுந்த வியக்க ரியக்கரோ
மெஞ்சிய வழிவு திருத்தி யெண்ணே யிறைவனை மலைவைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன்முதலிலே நிகன வாகன நூல்
விஞ்சையர் தகைமையர் காவலன் விடுகாதழகிய பெருமாளே"

புறநானூற்றில் வந்துள்ள எழினி, அஞ்சி என்ற அரசர்களின் பெயர்கள் பயின்று வருவதோடு, அன்னோர் வஞ்சியர் குலபதி என்று குறிப்பிடப்பட்டு இருப்பதும் நோக்கத்தக்கது. இதில் கூறப்படும் விடுகாதழகியப் பெருமாள் என்பவன் அதியமான் நெடுமானஞ்சியின் வழித் தோன்றல் என்பதும் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இருந்த குறுநில மன்னன் என்பதும் உணர வேண்டியது.

கடைச் சங்க நாளில் வேள் நங்கை என்ற குறுநில மன்னன் 151ஆம் புறப்பட்டால் அறியப்படுகிறான். இவன் பல்குன்றக் கோட்டத்தில் உள்ள செங்கண்மாலில் இருந்து அரசாண்டவன். இரணிய முட்டத்து பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்ற புலவர் பெருமானால் பாடப்பட்ட 'மலைபடுகடாம்' என்ற நூல் கொண்டு புகழ் கொண்டவன். திருவண்ணாமலையில் உள்ளதும், அகவற்பாவால் ஆனதும் ஆன கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு :-

"நல்லிசைக் கடாம்புனை ஒப்பில் வெற்பில்
வெல்புகழனைத்தும் மேம்படத் தக்கோன்
வான்பரப்புங் குரங்கும் விசையந் தீட்டிய
அடல்புனை நெடும்பல் ஆட்கொண்ட தேவன்".

- இதில் நல்லிசைக் கடாம் புனை வெற்பு' என்ற பகுதி புறநானூற்றில் வந்த நன்னனையும் அவன் மீது பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனாரால் பாடப்பெற்ற மலைபடுகடாம் அவனது வெற்றியினையும் குறிக்கக் காணலாம்.

"மூவண்டறைத் தார்மன்னர் மலைபடைத் தெந்மன்னரை
வென்கண்ட திறத் காளங்கேயன் கண்சிவப்ப - பண்டே

மலைகடாம் பாட்டுண்ட மாலவரை செஞ்சொரி
அலைகடாம் பாட்டுண்டது''.

இப்பாடல் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் சிவன் கோயிலில் உள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும். இதன்மூலம் 'மலைபடுகடாம்' என்ற பத்துப்பாட்டு நூல் 13ஆம் நூற்றாண்டில் அறிந்து போற்றப்பட்டதை அறியலாம்.

பாண்டிநாட்டில், திருப்பத்தூர் அருகில் 'பாரீச்சுரம்' என்ற கோயில் ஒன்று இருந்தது என்று பிரான்மலையில் உள்ள மங்கைபாகரது கோயிலில் காணப்படும் 'சுரபிநாட்டு அறுநூற்றுவனேரிப் பற்றில் பாரீசுவரமும்' என்ற கல்வெட்டு வரியால் அறியலாம். பாரி வழிபட்ட கோயில் 'பாரீசுவரம்' எனலாம். கடையேழு வள்ளல்களில் ஒருவனான பாரி தொடர்பான கோயில் இருந்தது நற் செய்தியாகும். பாரியின் நண்பராகிய கபிலர் பாரி இறந்தபின், அவன் மகளிரை மணம் செய்விக்க எண்ணி, உச்சிக்கோன், இருங்கோவேள் என்போரை வேண்ட - அவர்கள் மறுக்க - பிறகு உயிர்நீத்தார் என்பது புறனானூறு கூறும் செய்தி, இச்செய்தியை - தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்று சிறிது வேறுபாட்டுடன் கூறுகிறது. மிக நீண்ட அகவற்பாவால் அமைந்தது இக்கல்வெட்டு. இப்பாட்டின்மூலம், மலையமானுக்கு ஒரு பெண்ணை மனஞ் செய்துகொடுத்து விட்டுப் பெண்ணை ஆற்றங்கரையில் கபிலர் தீப்பாய்ந்து உயிர் நீத்தார் எனவும் அங்கு ஒரு கல் நடப்பெற்று அஃது 'கபிலக்கல்' என்று அழைக்கப்பட்டது எனவும் அறியப்படுகிறது.

திருச்சி - திருவெள்ளறையில் கட்டளைக் கவித்துறையில் அமைந்த பாடல் கல்வெட்டு ஒன்றுள்ளது. கி.பி. 1216 - 1238 வரை ஆண்ட முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு அது. கடியலூர் உருத்திரங் கண்ணனாரையும், அப்புலவர் பெருமான்பாடிய 'பட்டினப் பாலை' என்ற நூலையும் அக்கல்வெட்டு கூறுவது, குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

'வெறியார் தவளத் தொடைச் செய மாறன் வெருண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய்பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே''

வரலாற்று இலக்கியங்கள் என்ற வரிசையில் நமக்குப் பெருமை சேர்ப்பது 'பதிற்றுப்பத்து' ஆகும். முதலாம் பத்தும் இறுதிப்பத்தும் நீங்கலான எட்டுப் பத்துக்கள் கிடைத்துள்ளன. கரூர் - வேலாயுதம்பாளையம் அருகே உள்ள புகளூர்க் கல்வெட்டில் 'சேர மன்னர் மூவர் ஒருவர் பின் ஒருவராகக் குறிப்பிடப்படுகின்றனர். ஆகவே 'பதிற்றுப்பத்தும்' வரலாற்று இலக்கியமே.

திருப்பாலைப் பந்தல் தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில் அமைந்த ஓர் ஊர். இங்குள்ள சிவபெருமான்மீது எல்லப்ப நாயனார் என்ற புலவரால் 'திருப்பாலைப் பந்தல் உலா' பாடப்பெற்றது என்பது கோவில் கருவறையில் தென் சுவரில் வரையப்பட்ட கல்வெட்டால் புலப்படுகிறது. (இ.க.ஆ. எண். 401 / 1938). இதே புலவர் - எல்லப்ப நயினார் 'திருவாரூர்க் கோவை', 'அருணாசலப் புராணம்', 'திருவருணை அந்தாதி' முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவர் கி.பி. 16அம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 'எலவானாசூர்' என்ற பெயரில் வழங்கும் ஊரே 'இறைசை' என்பதாகும். இவ்வூர் முற்காலத்தில் 'இறையானரையூர்' (இறையானரைசூர்) என்ற பெயருடையதாக இருந்தது என்று அவ்வூர்க் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. இங்குள்ள சிவபெருமானின்மீது பாடப்பெற்றதே இறைசைபுராணம். திருமலை நயினார் சந்திரசேகரர் பாடியது என்று இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை (எண். 485 / 1938) மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் திருத்தளியாண்ட நாயனார் கோயிலில் உள்ள 'ஓங்குகோயில் உறைவார்' என்றும் சிவபெருமான் புரிந்த திருவிளையாடல்களைக் கூறுவது ''ஓங்குகோயிற் புராணம்'' ஆகும். கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவம்பலமுடைய மறைஞான சம்பந்தர் என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டது. (இ.க.ஆ. 180 / 1936).

கல்வெட்டுக்கள் செப்பேடுகள் வழியாக அறியப்படும் இலக்கியங்கள் வரிசையில் பல இலக்கியங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. குடுமியான்மலை, காஞ்சிபுரம், தென்காசி, சிதம்பரம், திருவரங்கம், திருவானைக்காவல் என்று பல்வேறு கோயில் கல்வெட்டுகளில் பல தனித்தனிப் பாடல்கள் கல்வெட்டுகளாக உள்ளன. தமிழ்ப் பாடல்களைப் போலவே வடமொழிச் சுலோகங்களும் கல்வெட்டுகளாகக் கிடைத்துள்ளன. இவையனைத்தும் தமிழக இலக்கிய வரலாற்றுக்கு வளம் சேர்ப்பவை. இவற்றை எல்லாம் அறிஞர்கள் ஆராய்ந்து செய்திகள் வெளிக் கொணரும்போது தமிழகம் மிக்கப் பெருமையடையும் என்பதில் ஐயமில்லை.

32. ஆளும் அமஞ்சியும்

முனைவர் பு. சந்திரசேகரன், இராஜபாளையம்.

கல்வெட்டுக்களில் ஆளும், அமஞ்சியும் என்ற சொற்றொடர்கள் பரவலாக காணப்படுகின்றன. சுப்பராயலு ஆய்வு உட்பட பல ஆய்வுகள் இந்த இரு சொற்களை சிறிய வரிகள் என்று அடையாளம் காட்டுகின்றன[1]. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் இதனை, கட்டாய உழைப்பு (Forced Labour) என்றும் இலவச உழைப்பு என்றும் வகைப்படுத்தி காட்டுகின்றார்[2] பண்டைய தமிழக சமூகத்தில் என்ன பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

செங்கல்பட்டு மாவட்ட கல்வெட்டொன்று[3] செய்யூர் ஊரார்கள் நிலத்தினை கோயிலுக்குவிற்கும் பொழுது அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வரிகளை ஊர்க் கணக்கில் சேர்த்து ஊரார்கள் கொடுப்பார்கள் என்ற செய்தியினைக் குறிப்பிடுகின்றது. அங்ஙனம் குறிப்பிடும் பொழுது ஆளும். அமஞ்சியும் என்ற சொற்களைக் குறிப்பிட்டு அவற்றைச் சில்வரி அதாவது சிறிய வரிகள் என்றடையாள மிட்டு காட்டுகின்றது. சில்வரி, பெருவரி என்பவை குறித்து பொருள் என்ன என்பது இன்றைய ஆய்வுகள் தெளிவு படுத்தவில்லையென்றாலும், நம்முடைய கேள்விகள் பின்வருபவையாகும்.

ஆள், அமஞ்சி என்ற சொற்களின் பொருள் என்ன? ஆள் அமஞ்சி என்பது ஒரே வரியா? தனித் தனியான வரியா? இந்த வரிகள் யாரால் செலுத்தப்பட்டன? யாருக்குச் செலுத்தப்பட்டன?

ஆளமஞ்சி என்ற ஒரே சொற்றொடராக விசயநகர காலத்தில்[4] காணப்பட்டாலும், இரண்டும் தனித் தனியான வரிகள் தாம் என்பதனை வேப்பங்குளம் காஞ்சிபுரம் கல்வெட்டுகள்[5] குறிப்பிடுகின்றன. முதலாம் இராசேந்திரன் காலத்தில் வெளியான கல்வெட்டு, அமைஞ்சி செய்வார்கள் என்று தனியாகவே குறிப்பிடுவதனால், ஆள் என்பது தனி வகையான வரி என்றும், அமைஞ்சி என்பது தனிவகையான வரி என்றும் அறிய முடிகின்றது.

அமைஞ்சி என்பதற்குரிய விளக்கத்தினையும் மேற்கண்ட வேப்பங்குளம் கல்வெட்டிலிருந்தே அறியலாம். இக்கல்வெட்டு, கலிச்சங்காலுக்கு தேவையான அமைஞ்சி செய்து கொள்வார்கள் என்று குறிப்பிடுகின்றது. எனவே அமைஞ்சி என்பது கால்வாய் சுத்தப்படுத்துதல், பழுதுபட்டால் சரியாக அமைத்து தருதல் என்னும் பராமரிப்புப் பணிக்காக அது பெறப்பட்டதாகத் தெரிகின்றது.

அல்லூர் கல்வெட்டில்[6] ஒருவர் கோயிலுக்குச் சொந்தமான திருநாமத்துக்காணி நிலங்களை விலைக்கு வாங்குகின்றார் என்றும், அந்த நிலத்தினை, தன் உறவு முறை மூலம், முதலிட்டு, ஆள்கூலி வைத்து நிலத்தினைத் திருத்துகின்றார் என்றும் ஓர் செய்தி வருகின்றது. இக்கல்வெட்டில் காணப்படும் ஆள் என்ற சொல் நிலத்தைப் பண்படுத்தும் பணியில் ஈடுபட்டவர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. ''ஆள்'' நிலத்தினை திருத்துபவர் என்றும், ''அமைஞ்சி'' வாய்க்காலைச் சீரமைப்பவர் என்றும் பொருள்படும் என்று கருதலாம்.

இனி ஆள், அமைஞ்சி வரிகள் செலுத்தியவர்கள் யார்? என்று காண்போம். தென்னாற்காடு மாவட்டம், பணயவரம் கல்வெட் டொன்று[7] பரவைபுரம் நகரத்தார்கள் தங்கள் நிலங்களைவிற்கும் பொழுது அளிக்கும் வரிவிலக்கில், இந்த நிலம் உழுவார்கள், ஆற்றுக்கால், வெட்டி, முட்டையாள் போன்றசிறு வரிகளைச் செலுத்த வேண்டாம் என்று குறிப்பிடுகிறது. தென் ஆற்காடு, இலவானாசூர்[8] கல்வெட்டு ஒன்று, வரிகளைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, இந்நிலத்தில் உழுகுடிகள் ஏர் பொன்னும், மாமஞ்சாடியும் செய்வார்களென்றும் குறிப்பிடுகின்றது.

மேற்கண்ட இரு கல்வெட்டுக்களிலும், ஆள், அமஞ்சி என்ற தொடர்புடைய சொற்கள் காணப்படாவிட்டாலும் சிறுவரிகள் என்ற தொடரில், ஆள், அமஞ்சியும் அடக்கம் என்பதனால், இந்த வரிகளை, நிலத்தில். உழுபவர்கள் தாம் செலுத்தினர் என்று தெரிகின்றது. இதனினும் தெளிவாக வேப்பங்குளம் கல்வெட்டு[9] இன்னிலம் உழுதார் கலிஞ்சங்காலுக்கு வேண்டும் அமைஞ்சி செய்வார்களாகவும்' என்று குறிப்பிடுவதிலிருந்து அமைஞ்சியினை உழுபவர்கள் செலுத்தியுள்ளனர் எனத் தெரிகின்றது.

ஆள், அமைஞ்சி வரிகள் யாருக்குச் செலுத்தப்பட்டன என்பது அடுத்துள்ள வினாவாகும். ஆள், அமைஞ்சி குறிக்கும் கல்வெட்டுகள் ஊரார்கள் வரி விதி விலக்கு அளிப்பது போல காணப்படுவதால், ஊரார்களே இந்த வரியினை வசூலித்தார்கள் என்பது தெரிகின்றது, எனினும் ஊரார்கள் மட்டும், ஆள், அமஞ்சியின் பங்குதாரர்கள் அல்ல. மற்றும் பலர் இருந்தனர். சிதம்பரம் கல்வெட்டொன்று[10], கோயில் சபையான மூலப்பரு டையார் வரிகளை விதிவிலக்கு அளிக்கும் பொழுது அமஞ்சி வரிக்கு விலக்கு அளித்ததாகக் குறிப்பிடுகின்றது. திருவண்ணாமலைக் கல்வெட்டொன்றில் கோயில் தன்னுடைய நிலங்களைத் தனி நபருக்கு விற்கின்ற பொழுது, ஆள், அமைஞ்சி போன்ற வரிகளைக் கோயில் வசூலிப்பதில்லை என்றும் குறிப்பிடு கின்றது[8]. மேற்கண்ட இருகல்வெட்டுக்கள், ஆள், அமைஞ்சி என்ற வரிகளில் ஊரார் மட்டும் பங்குதாரர் அல்ல, கோயிலும் அதற்குப்

பங்குடையது என்று தெரிவிக்கின்றன. ஆனால் கோயிலுக்கும்மேல், ஆள், அமைஞ்சி வரிகளில் பங்குதாரர்கள் காணப்பட்டார்கள்.

திருவண்ணாமலைக் கல்வெட்டொன்று[12], குறுநில மன்னர், வரிவிதி விலக்கு அளிக்கும்பொழுது ஆள், அமஞ்சி வரியினை விதி விலக்காக அளித்தார் என்று குறிப்பிடுவதிலிருந்து, சிற்றரசர்களும், உழுபவர்களிடமிருந்து ஆள், அமைஞ்சி வரியினை வசூலித்தார்கள் என்று அறிகின்றோம்.

மேலும் மன்னர்களும் இந்த வரிகளின் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்ற உண்மையினைத் திருவண்ணாமலைக் கல் வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம். அங்குள்ள வீர விருப்பண்ண உடையார் மற்றும் சதாசிவ மகாராயர் கல்வெட்டுகள் ஆள் மஞ்சி வரிகளை விலக்களித்ததாகச் சொல்கின்றன.[13]

அங்குள்ள வீர விருப்பண்ண உடையார் மற்றும் சதாசிவ மகாராயர் கல்வெட்டுகள்[14], ஆளமஞ்சி வரியினை அவர்கள் அளித்ததாகக் குறிப்பிடுகின்றன.

எனவே ஆள் அமைஞ்சி என்பது ஊழுகுடிகள் அளிக்கும் வரி என்றும், ஊரார், கோயில், சிற்றரசர், மன்னர் போன்றோர்கள் இந்த வரியின் பங்குதாரர்களாக இருந்தனர் என்றும் மேற் கூறும் கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகின்றோம்.

ஆள், அமைஞ்சி வரிகள் தானியத்தால் செலுத்தப் படுபவையா? அல்லது உடல் உழைப்பினால் செலுத்தப்படுபவையா? என்ற கேள்வி எழுகின்றது. திருவண்ணாமலைக் கல்வெட்டொன்றில்[14] தானம் அளிக்கும் வாணகோவரையர், ஆள் அமைஞ்சி வரிகளுக்கு விதி விலக்கு அளிக்கும் பொழுது, இவற்றில் யாராவது நாழி நெல்லோ, காசோ வசூலித்தால் சிவத் துரோகியாவர் என்று சொல்வதாகக் குறிப்பிடுகின்றது. செய்யூர் கல்வெட்டு[15] ஆளும், அமஞ்சியும்[15] ஊர் கணக்கில் ஏற்றி செலுத்துவோம் என்றும் குறிப்பிடுகின்றது.

மேற்கண்ட இரு கல்வெட்டுக்கள் ஆள், அமைஞ்சி என்ற வரிகள் தானியமாக வசூலிக்கபட்டதாகச் சொல்கின்றன. மேற்சொன்ன வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டும், சதாசிவ மகாராயர் கல்வெட்டும் ஆள், அமஞ்சியினைக் குறிப்பிடும்பொழுது ஊழியமாக கொள்ளும் ஆளமஞ்சியினை விதிவிலக்கு அளிப்பதாக குறிப்பிடுகின்றன. இங்கு ஊழியம் என்ற வார்த்தை முக்கியமானது. இதே கல்வெட்டில் வேறு சில வரிகளைக் குறிப்பிடும் பொழுது கிறையமாக என்று குறிப்பிட்டு ஆள்மஞ்சி வரியினை ஊழியமாகக் கொள்ளுதல் என்ற குறிப்பு காணப்படுவதால், கிறையம் என்பது பண ஊழியம் என்பது உடல் உழைப்பு என்று தெரிகின்றது.

சதாசிவ மகாராயர் கல்வெட்டு வரிகளை எந்தெந்த விதத்தில் வாங்கினார் என்று கூறும் பொழுது பணமாக, காசாக, பண்டமாக, ஏராக, ஆள்மஞ்சியாக வசூலித்தார் என்று கூறுவதிலிருந்து ஆள்மஞ்சிஎன்பது உடல் உழைப்பு என்றும் தெரிகின்றது. எனவே ஆள், அமைஞ்சி என்பவை நிலத்தினை உழும் குடிமக்கள் ஊர்சபைக்கும், கோயிலுக்கும், சிற்றரசருக்கும், மன்னருக்கும் பொருளாகவும் உழைப்பாகவும் செலுத்தும் வரிகள் என்பது தெளிவாகிறது.

அடிக்குறிப்புகள்

1. Subbarayalu.Y. 1982. 'The cola State', *Studies in History*, IV - 2 (New Delhi)
2. Nilakantasastri, K.A., 1984. *The Colas* University of Madras.
3. தெ.க.தொ.8 எண் 30
4. தெ.க.தொ.8 எண் 156,158
5. தெ.க.தொ.8 எண் 1
6. தெ.க.தொ.8 எண் 685
7. தெ.க.தொ.8 எண் 754
8. தெ.க.தொ. 22 பாகம் 1 எண் 143
9. தெ.க.தொ. 8 எண் 1
10. தெ.க.தொ. 8 எண் 43
11. தெ.க.தொ. 8 எண் 83
12. தெ.க.தொ. 8 எண் 127
13. தெ.க.தொ. 8 156
14. தெ.க.தொ. 8 எண் 123
15. தெ.க.தொ. 6 எண் 30

33. சறுக்கு மலைக் கல்வெட்டுகள்

ப. வெங்கடேசன், காவேரிப் பாக்கம்.

வேலூர் மாவட்டம், வேலூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் சறுக்குமலை அமைந்துள்ளது. ' தெற்கு வடக்காக நீண்டுள்ள இம்மலை சுமார் 6 கி.மீ. நீளமுடையது. சரிவாக, வழுக்கும் தன்மையுள்ள பல பாறைகள் இம்மலையில் அமைந்துள்ளதால், இம்மலைக்கு சறுக்கு மலை எனப் பெயர் வந்திருக்கலாம். இம்மலைக்கு அருகில் சின்னப்பாலம் பாக்கம், ரங்காபுரம், நாகநதி கீழ் அரசம்பட்டு முதலிய ஊர்கள் அமைந்துள்ளன. இம்மலைக்குத் தென்பகுதியில் சின்னப்பாலம் பாக்கமும் வட பகுதியில் கீழ் அரசம்பட்டும் உள்ளன.

கீழ் அரசம்பட்டு ஊருக்கு அருகில் அமைந்துள்ள இம்மலைப்பகுதியின் அடிவாரத்தில், ஒரு பெரிய பாறையில் 76 செ.மீ. நீளமும் 30 செ.மீ அகலமும் கொண்ட செவ்வகக் கட்டத்தில், மூன்று வரிகளில் உள்ள கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

1. ஸ்ரீகோவிசைய நந்தீச்சுவர பருமற்கு யாண்டு நாலா
2. வது ஸ்ரீ கலிக்குறி அரசர் செய்வித்த பாழி
3. ஸ்ரீமல்லன் துக்கிலி[1].

பல்லவ மன்னன் நந்தீச்சுவர வர்மனின் நாலாவது ஆட்சியாண்டில் ஸ்ரீ கலிக்குறி அரசர் என்பவர் சமணச் சான்றோர் ஒருவர் தங்குவதற்கு 'பாழி' எனப்படும் படுக்கையை அமைத்துக் கொடுத்த செய்தியை இது குறிப்பிடுகிறது. பல்லவர் காலத்தில் பாழியைக் குறிக்கும் கல்வெட்டு தமிழகத்தில் கிடைத்திருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நந்தீச்சுவர வர்மன் என்ற பெயர்ப் பொறித்த கல்வெட்டுகள் இதற்குமுன் திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ் இராவந்தபாடி என்னும் ஊரிலும் வேலூர் மாவட்டத்தில் கீரைச்சாத்து என்னும் ஊரிலும் கிடைத்துள்ளன. இவ்வூர்களில் அமைந்துள்ள கல்வெட்டு களில் இடம்பெறும் நந்தீச்சுவர வர்மன் என்பவன் 'இரண்டாம் நந்திவர்மன்' என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்[2]. தவிர கீரைச்சாத்து, பஞ்சபாண்டவ மலை முதலிய ஊர்களிலுள்ள இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டு எழுத்துக்களும், சறுக்குமலை யிலுள்ள நந்தீச்சுவர வர்மனின் கல்வெட்டு எழுத்துக்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்துள்ளன. மேலும் 'ஸ்ரீ மல்லன் துக்கிலி' என்ற பெயர் இக்கல்வெட்டில் இடம் பெறுகிறது. 'மல்லன்' என்னும் சிறப்புப் பெயர் இரண்டாம் நந்திவர்மனுக்கு உரியதாகும். ஆகவே இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் நந்தீச்சுவர வர்மன், இரண்டாம்

நந்திவர்மன் ஆவான். இக்கல்வெட்டு அவனது 4-வது ஆட்சியாண்டில் கி.பி. 735ல் வெளியிடப்பட்டுள்ளது எனலாம்.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் 'ஸ்ரீ மல்லன் துக்கிலி' என்னும் பெயர், பாழியைப் பயன்படுத்திய சமணச் சான்றோரையோ அல்லது பாழி அமைந்துள்ள இடத்தையோ குறிப்பதாக இருக்கலாம். இக்கல்வெட்டு அமைந்துள்ள பாறையின் கீழ்ப்பகுதியில் மண்மேடும் முட்புதரும் காணப்படுவதால் பாழி அமைந்துள்ள இடத்தை காண இயலவில்லை.

அக்காலத்தில், இன்றைய வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள் உள்ளடக்கிய பகுதி பல்லவரின் கீழ் சிற்றரசர்களாக விளங்கிய கங்கர்களின் ஆட்சியில் இருந்த செய்தியை கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆகவே இக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் 'ஸ்ரீ கலிக்குறி அரசர்' என்பவர் பல்லவரின் கீழ் அரசாட்சி செய்த கங்க அரசனாக இருக்கலாம்.

குசலாடும் குகை:

சின்னப்பாலம்பாக்கம் ஊருக்கு அருகில், சறுக்குமலையின் தென்பகுதி அமைந்துள்ளது. இம்மலையில் இயற்கையாய் அமைந்த குகை ஒன்று உள்ளது. இக்குகையை இங்குள்ள மக்கள் 'குசலாடும் குகை' என்றழைக்கின்றனர். இக்குசலாடும் குகை, கிழக்கு மேற்காக நீண்டுள்ளது. 40 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டதாக இக்குகை அமைந்துள்ளது. மேற்கில் ஒரு வாயிலும் தெற்கில் ஒரு வாயிலுமாக இதற்கு இரண்டு வாயில்கள் உள்ளன. இதைத் தவிர இக்குகையின் தெற்குப் பக்கத்தில் ஒரு சுனையும், வடக்குப் பக்கத்தில் ஒரு சுனையும் ஆக இரண்டு சுனைகள் உள்ளன. குசலாடும் குகையின் தெற்கு வாயிலுக்கு வெளியே, மேல் பகுதியில் 78 செ.மீ. நீளமும் 66செ.மீ அகலமும் கொண்ட செவ்வகக் கட்டத்தில் கல்வெட்டு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு நிருபதுங்க பல்லவ மன்னனின் 19-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.869) வெட்டப்பட்டதாகும். இக்கல்வெட்டு தமிழும் கிரந்தமும் கலந்த வரிவடிவத்தில் வெட்டப்பட்டுள்ளது.

1. ஒஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நிருபதுங்க
2. ற்கு யாண்டு பத்தொன்பதாவது பெ
3. ரிய பெண்ணாகடத்து சிம்மநந்தி படாரர்
4. க்கு பங்கள நாடுடையார் கொடுக்கர் வீரத்
5. தொழிலர் பேராற் பங்கள நாடுடையார்த்த
6. ளைகள் சிறிய நங்கையார் செய்வித்த ஸ்ரீகோயில்[4].

இக்கல்வெட்டில் பங்கள நாட்டு அரசரின் சிறிய நங்கையார், பெரிய பெண்ணாகடத்தைச் சேர்ந்த சிம்ம நந்தி படாரர் என்னும் சமணச் சான்றோர் பொருட்டு ஸ்ரீ கோயில் அமைத்துக் கொடுத்ததை அறிகின்றோம்.

இக்கல்வெட்டில் பயின்றுவரும் பங்கள நாடு என்பது வேலூர் வட்டம், போளூர் வட்டம், குடியாத்தம் வட்டம் முதலிய பகுதிகளை உள்ளடக்கியதாகும். 'பங்களர்' என்னும் பட்டம் தாங்கியவர் இப்பகுதியில் 9-ஆம் நூற்றாண்டு முதல் அரசாண்டதாக பேராசிரியர் எ. சுப்பராயலு 'தமிழக வரலாற்றில் கங்கர்' என்னும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்[5]. நிருபதுங்க வர்மனின் காலத்தில் சமணம் இப்பகுதியில் இருந்தது என்பதற்கு இக்கல்வெட்டு முதற் சான்று ஆகும். பங்களர்களை 'கங்கர்கள்' என்றே ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பங்கள நாட்டைச் சேர்ந்தவர்கள் பல்லவர், சோழ அரசர்களின் கீழ் சிற்றரசர்களாகவும் படைத்தளபதி களாகவும் திகழ்ந்த செய்தி கல்வெட்டில் அறியக்கிடக்கின்றது.

ஸ்ரீ கோயில்:

இங்குள்ள கல்வெட்டின்படி 'பங்கள நாடுடையார்' என்பவர் நிருபதுங்கவர்மனின் (கி.பி.850-882) ஆட்சியில் பங்கள நாட்டுப் பகுதிக்கு ஒரு சிற்றரசராக இருந்தார் என்பது தேற்றம். இவ்வரசனின் சிறிய நங்கையார் எடுப்பிடுத்த ஸ்ரீ கோயில் இங்குள்ள குசலாடும் குகையின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. இன்றைக்கு இக்கோயில் இருந்ததற்கு அடையாளமாக அடித்தளக் கட்டடம் மட்டுமே எஞ்சியுள்ளது. இக்கட்டடம் 2.80மீ. நீளமும் 1.80மீ. அகலமும் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது. இக்கட்டடத்திற்குப் பயன்படுத்திய செங்கல் ஒவ்வொன்றும் 56 செ.மீ. நீளமும் 14 செ.மீ அகலமும் கொண்டதாக உள்ளன. இக்கட்டடம் செவ்வக அறை யமைப்பைக் கொண்டதாக உள்ளது. இவ்வறையில் சமணத் தீர்த்தங்கரர் சிலை இருந்ததற்கான பீடமோ அல்லது பிரதிஷ்டை செய்த துளை அமைப்போ இன்றைக்குக் காணப்படவில்லை. ஆனால் 1.95மீ நீளமும் 1.20மீ அகலமும் கொண்ட வழவழப்பானத் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தளம் சமண முனிவர்கள் உறையும் பாழிய்ய ஒத்ததாக உள்ளது. அக்காலத்தில் இக்கோயிலுக்குச் சென்று வர, கடினமாக உள்ள இடங்களில் பாறைகளை வெட்டி படிகள் அமைத்துள்ளனர். மொத்தம் 50 படிகள் உள்ளன.

இவ்வூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 'பெண்ணாத்தூர்' என்னும் ஊர் அக்காலத்தில், இக்கல்வெட்டில் குறிக்கப் பெறும் 'பெண்ணாடகம்' என்னும் ஊராக இருந்திருக்கலாம். சறுக்கு மலைக்கு வடக்கில் 10 கி.மீ. தொலைவில் 'பங்களத்தான்' என்னும் ஊர் அமைந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டைக் காலத்தில் சமணர்கள் 'மகாவீரர்' உயிர் நீத்த நாளை விளக்குகள் ஏற்றி 'தீபாவளித்' திருநாளாகக் கொண்டாடினர்[6]. இன்றைக்கும் சமணர்கள் மகாவீரர் உயிர்நீத்த நாளைத் தீபாவளியாகக் கொண்டாடி வருகின்றனர். பல்லவர் காலத்தில் சறுக்கு மலையின் உச்சியில் தீபம் ஏற்றுவதற்காக விளக்குக் கூண்டு ஒன்று அமைத்துள்ளனர். 1 அடி நீளமும் 1/2 அடி அகலமும் கொண்ட செங்கற்களையும் சுதையும் கலந்து இவ்விளக்கு கூண்டு அமைக்கப்பட்டுள்ளது. இம்மலைக்கு அருகிலுள்ள நாகநதி என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கும் கார்த்திகைத் தீப நாளில், இவ்விளக்குக் கூண்டில் விளக்கேற்றி வழிபட்டு வருகின்றனர்.

இதுகாறும் நாம் கண்டவற்றால் பல்லவர் காலத்தில், சறுக்கு மலையில் சமணம் சிறப்புற்றிருந்தது என்பதை அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. ப. வெங்கடேசன், நந்தீச்சுவர வர்மனின் கீழ் அரசம்பட்டு கல்வெட்டு, ஆவணம்-7 சூலை 1998.
2. செங்கம் நடுகற்கள்-1971/51, கி.குமார் இரண்டாம் நந்திவர்மனின் கீரைச் சாத்து கல்வெட்டு ஆவணம்-7, சூலை -1998.
3. செங்கம் நடுகற்கள்: 1971/34, 110, 115. தெ. க. தொ. 12 : 35.
4. ம.காந்தி, ப. வெங்கடேசன், நிருபதுங்க வர்மனின் சின்னப்பாலம் பாக்கம் கல்வெட்டு, ஆவணம்-7.
5. டாக்டர் எ. சுப்பராயலு, தமிழக வரலாற்றில் கங்கர், தொல்லியல் ஆய்வுத் தொகுதி ப-188. தொல்லியல் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை,1985.
6. மயிலை சீனி, வேங்கடசாமி, சமணமும் தமிழும் ப-80.

34. குத்தாலம் ஓங்காரேசுவரர் கோயில்

மே.சீனிவாசன், சென்னை.

நாகபட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம். குத்தாலத்தில் சோழீசுவரர் கோயில், ஓங்காரேசுவரர் கோயில், சொன்னவாறிவார் கோயில் என மூன்று கோயில்கள் உள்ளன. இவற்றைப் பற்றி எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் தனது சோழர் காலக் கோயில் தொகுதிகளில் சுருங்கக் குறிப்பிட்டுள்ளார். இம்மூன்று கோயில்களிலும் கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் ஓங்காரீசுவரர் கோயில் கல்வெட்டுகள் பற்றி இங்கு பார்ப்போம்.

இக்கோயிலில் தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை 11 கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. அவை கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், சண்டிகேசுவரர் கோயில், கோபுரவாயில் ஆகிய இடங்கள் உள்ளன. இக்கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் (கி.பி.1178 - 1218) ''நம்மூர் மேலை ஊர்க்குளத்து வடகரையில் பிள்ளை ஜயதரப்பல்லவரையர் எழுந்தருளிவித்த உடையார் ஓங்காரீசுவரமுடையார்'' என்ற செய்தி உள்ளது. எனவே ஜயதரப்பல்லவரையன் என்பவன் இக்கோயிலைக் கட்டினான் என்பது தெளிவாகிறது. ஜயதரன் என்ற விருதுப்பெயர் முதற்குலோத்துங்க சோழனுக்கு உரியது என்று நீலகண்ட சாஸ்திரி தனது சோழர் வரலாறு நூலில் குறித்துள்ளார். இவ்விருதுப் பெயரைச் சோழர்களின் கீழ்பட்ட சிற்றரசர்கள், முதற்குலோத்துங்கசோழன் காலம் தொடங்கி வைத்துக் கொண்டனர் என்று கருதலாம்.

இக்கோயில் கருவறை சற்று உயர்ந்த உபபீடத்தின் மீது அமைந்துள்ளது. அதிட்டானப் பகுதி, பத்மஜகதி, விருத்த குமுதம், கபோதம் ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது. சுவர்ப் பகுதியின் கீழங்கமாக வேதிகை வரி காணப்படுகிறது. தூண்களில் சிறுநாக பந்தங்களும், சிறிய மலர் போதிகைகளும் உள்ளன. இவை இக்கோயில் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதை அறுதியிடுகின்றன.

இக்கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் பல்லவநாராயண புரமான உலகமாதேவிபுரத்து ஆயக்குடியான குலோத்துங்க சோழன் குற்றாலம், குற்றாலமுடையான் பிரம்ம தேசம், அகரம் ஸ்ரீகுற்றால முடையான் பிரம்ம தேசம் என்ற பெயர்களில் காட்டப்படுகிறது. நாட்டுப்பிரிவு ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவழுந்தூர் நாடு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இறைவன் பெயர் ஓங்காரீசுரமுடையார், ஓங்கார ஈஸ்வர முடைய பரம சுவாமி என்றுள்ளது.

கல்வெட்டுகளின் தொடக்கங்களில் ஹர: என்று சிவபெருமானின் பெயர் விருப்பச் சொல்லாகப் பதிவாகி யுள்ளது. சில கல்வெட்டுகளில் ‘புயல் வாய்த்து மண்வளர என்ற பாட்டெழுதி திரிபுவனச்சக்கர வர்த்திகள்’ என்று தொடக்கத்தில் உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கல்வெட்டுப் பொறிப்பைச் சுருக்குவதற்காக நீண்ட மெய்கீர்த்திகளைப் பொறிக்கும் வழக்கம் குறைந்த போது கல்வெட்டுகளில் ‘மெய்க்கீர்த்திக்கு மேல்’ என்று குறிப்பிட்டு பிற செய்திகளைப் பொறித்தனர். அவ்விதமே இங்கு ‘பாட்டேழுதி’ என்ற மாற்றுச் சொல் குறிக்கப்பட்டிருக்கிறது. மெய்க்கீர்த்தியைப் பாட்டு என்று கருதினர் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

கல்வெட்டுகளில் ஒன்று (ஊ.க.2) இக்கோயிலைக் கட்டிய ஜயதரப் பல்லவரையன் கோயிலை ஒட்டி மடவிளாகமும், நந்தவனமும் அமைத்த செய்தியையும் அதற்காக பிராமணர்களது குடியிருப்பு, நத்தம் ஆகிய பகுதியில் சில இடங்கள் கையகப்படுத்தி பதிலாக (தலைமாறு) வேறொரு நிலம் கொடுத்ததையும் சொல்கிறது. இதே கல்வெட்டில் இவன் கோயிலுக்கும், பிராமணர்களுக்கும் காணியாக நிலங்கள் ஒதுக்கிய செய்தியும், அவற்றின் மீது விதிக்கப்பட்டு விலக்கப்படும் வரிச்சலுகைச் செய்திகளும், அப்படிச் செய்யப்பட்ட ஆட்சியாண்டுகளும் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன. இப்படிக் கொடுக்கப்பட்ட வெள்ளான் ஊர் நிலம், உலகமாதேவிபுரம் (நகரம்) நிலம், குற்றாலத்து நிலம் ஆகியவை முறையே வெள்ளான் வகையிலும், நகரத்து முதலிலும், நாட்டு முதலிலும் குறிக்கப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இக்கால நிலவரி விதிப்பை அறிந்து கொள்ள இது நல்லதொரு கல்வெட்டாகும்.

தொடர்ச்சியில்லாது ஒரு கல்வெட்டில் (ஊ.க.எண்.3) ஜெயதரயபல்லவரையன் திரு நாமத்துக் காணியாகக் கோயிலுக்கு நிலம் கொடுத்த செய்தியுள்ளது. இந்நிலம் அருகில் உள்ள வீங்கு நீர்த்துருத்தி இறைவன் சொன்னவாறிவார் தேவதானம், காவிரி நல்லூர் ஊரவரால் ஆவணம் எழுதி ஓங்காரீஸ்வரர்முடையார் கோயில் ஆதிசண்டீசுரர்க்கு விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல மற்றொரு கல்வெட்டில் (ஊ.க.எண்.4) அனபாய புரத்து ஊரவர்கள் திருநாமத்துக் காணியும், ஊர்க்கீழ் இறையிலியுமாக ஆதிசண்டேசுவரர்க்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது குற்றாலத்தில் ஒரு நிலத்தை ஊர்க்கீழ் இறையிலியாகத் தந்ததை மற்றொரு கல்வெட்டுச் சொல்கிறது. (ஊ.க.7) ஆளுடைய நாயகச் சேரி மகாசபையினர் வரி விலக்குச் செய்து அனுப்பிய நியோகம் (ஆணை) மற்றொரு கல்வெட்டில் பதிவாகியுள்ளது. (ஊ.க.11)

இக்கோயில் கல்வெட்டுகள் அனைத்துமே ஜயதரப் பல்லவரையன் கோயிலைக் கட்டி அதனை யொட்டி குடியிருப்பு, நந்தவனம் அமைத்து கோயிலின் செலவுகளுக்கான வரவுக்காக நிலங்கள் கொடுத்து அவற்றின் வரிவருவாயை நிலங்கள் உள்ள ஊராகும், சபையாரும் ஒழுங்கு செய்த செய்திகளையே விரிவாகச் சொல்கின்றன. அரசன் மூன்றாம் குலோத்துங்கனாக இருந்த போதிலும் இந்த ஜயதரப்பல்லவரையன் வலிவான சிற்றரசனாக இருந்தமையால் இவனே ஆணை ஓலைகளும், திருமுகங்களும் வெளியிட்டுள்ளான். நிலவரி தொடர்பான ஆவணங்களாக இக்கல்வெட்டுகள் இருப்பதால் பல்வேறு நிலவரித்துறை அலுவலர்கள் கையொப்பங்களும் காணப்படு கின்றன. இவற்றில் மூவேந்தவேளார், வில்லவராயர், தொண்டை மான், விழிஞுத்தரையர், கங்கராயர் வயநாட்டரையன், வல்லவரையன் ஆகிய பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

நிலங்களின் எல்லைகள் சொல்லும் போது நீர்ப்பாசனம் குறித்த பல செய்திகளும் தெரிகின்றன. காவிரிக்கரை, காவிரிக்குலை என்று சொல்லப்பட்டுள்ளது. மஞ்சள் வாய்க்கால் ஆறு கல்லியதற்காக (தோண்டியது) கையகப் படுத்தப்பட்ட நிலத்திற்கு மாற்றாக (தலைமாறு) ஒரு நிலம் குறிக்கப் பட்டுள்ளது. இச் செய்தி புதிய வாய்க்கால்கள் வெட்டப்பட்டு பாசன வசதிகள் பெருக்கப்பட்ட நிகழ்வினை எடுத்துக் காட்டுகிறது. வடிகால்கள் அன்று வதி எனப்பட்டன என்று பேராசிரியார் எ. சுப்பராயலு ஒரு ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில் கல்வெட்டுகளில் ஸ்ரீதேவி வதி என்ற வடிகால் ஒன்று குறிக்கப் பட்டுள்ளது. ஒரு வாய்க்கால் கணபதி வாய்க்கால் என்று சொல்வப்பட்டுள்ளது. தலை கணிவாய்க்கால், பனைவாய்க்கால், தில்லையான் வாய்க்கால் என்ற பெயர் களிலும் வாய்க்கால்கள் இருந்துள்ளன. நிலங்கள் பல தரங்களாய்ப் பிரிக்கப்படுவதுண்டு. இவ்வூரில் கொல்லை நில மொன்று எட்டாந்தரமாக இருந்ததும் கல்வெட்டால் தெரியக் கிடைக்கிறது.

குற்றாலம் ஓங்காரீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் எண்ணிக்கையில் மிகக் குறைவு என்றாலும் கூட அரசியல் செய்திகள், ஊர் வரிகள், நிலங்கள், நீர்ப்பாசன அமைப்புகள் போன்ற தகவல்களை நிறையத்தருகின்றன. மேலும் கோயில் ஒன்று புதிதாக எடுக்கப்பட்ட செய்தியைச் சொல்லிக் கோயிலின் காலத்தை நிர்ணயிப்பதால் கலை, கட்டட வரலாற்றிற்கும் இவை உதவுகின்றன.

35. செத்தவரை தொல்பழங்கால ஓவியமும் தீமிதி விழாவும்

ஆர். பூங்குன்றன், கோவை - 12.

தமிழ்நாட்டில் 1970களிலிருந்து தொல்பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பெற்று வருகின்றன. மல்லபாடி (தருமபுரி), செத்தவரை (விழுப்புரம்), சிறுமலை (திண்டுக்கல்), வெள்ளருகம் பாளையம் (கோவை), கொணவக்கோரை, சீகர், தெங்குமரஹடா, வெள்ளரிக் கோம்பை (நீலகிரி) சந்திரபுரம், சென்ராயம்பட்டி (ஆர்க்காடு) ஆகிய ஊர்களில் தொல் பழங்கால ஓவியங்கள் உள்ளமை கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. இவற்றின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும் இவை பெருங்கற் சின்னக் காலத்தவை என்று கருதப் பெறுகின்றன. ஒரு சாரார் இவ்வோவியங்கள் கி.மு. 1000-க்கும் முற்பட்ட காலத்தவையாக இருக்கலாம் என்பர். தொல்பழங்கால ஓவியங்கள் வரலாற்றுக் காலத்திலும், வரையப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் இத்தகைய ஓவியங்களை இன்றும் வரைகின்றனர். மத்தியபிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் இன்றும் வீடுகளிலும், குகைகளிலும் வரையும் ஓவியங்கள் தொல் பழங்கால ஓவியங்களைச் சுட்டி நிற்கின்றன. அண்மையில் கோவை மாவட்டம், கோவனூர் (பெரியநாயக்கன்பாளையம்) அருகில் உள்ள பாலமலையில் இன்றுள்ள குகை ஓவியங்களில் சில சென்ற ஆண்டு இல்லை என்று கூறினார்கள்.

இந்தியா முழுவதும் கிடைக்கின்ற தொல் பழங்கால ஓவியங்கள் பற்றி டி.டி. கோசம்பி வகாங்கர், சங்காலியா போன்ற தொல்பழங்கால ஆய்வாளர்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளனர். இந்த ஓவியங்கள் வறண்ட பாலை (குறிஞ்சி) நிலத்தில் மட்டுமே கிடைக்கின்றன என்று குறிப்பிடுகின்றனர். வளம் மிக்க மருத நிலப்பகுதிகளில் இவை கிடைக்கவில்லை என்பது அவர்கள் கருத்து. தொல் பழங்கால மனிதன் இந்த ஓவியங்களை வரைந்ததற்குக் காரணம் சடங்குப் பின்னனியே ஆகும். வேட்டைக்குச் செல்லும் முன் தான் வாழும் குகையில் அல்லது சடங்கு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட குகைகளில் இந்த ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன எனலாம். சில தொல் பழங்கால ஓவியங்களை இன்றும் வழிபடுகின்றனர். மிக உயர்ந்த மலை முகடுகளில் வரையப் பெற்று ஓவியங்களை வழிபடுவதில் உள்ள தொல்லைகளைக் கருதி அவ்வோவியங் களின் மறு வடிவமாக அடிவாரத்தில் வனத்தில் பழங்குடிகள் கோயில்களை உருவாக்கி வழிபடுகின்றனர். அக்கோயிலில் சுடுமண் பொம்மைகள் (வீரர், மாடு) பெரிய குதிரைகள் (இவையாயும் சுடுமண் பொம்மைகளே) ஆகியவற்றை வைத்து வழிபடுகின்றனர்.

இன்றைய இந்தியப் பழங்குடிகளுக்கும், தொல் பழங்காலப் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பினைக் கண்டு காட்டியவர் டி.டி. கோசாம்பி ஆவார். அவருடைய *Myth and Reality* என்ற நூல் தொல் பழங்காலத்திற்கும் பழங்குடிகளுக்குமிடையிலான நெருங்கிய தொடர்பினைப் பேசும். பழங்குடிப் பண்பாட்டினை, வாழும் தொல் பழங்காலம் என்று அவர் கூறுவார். பழங்குடிகள் மட்டுமின்றி ஊரகத்தில் வாழுகின்ற மக்களுக்கும் தொல்பழங்காலப் பண்பாட்டிற்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் பார்க்கலாம். இன்று வரை நிலை பெற்றுள்ள தொல்பழங்காலப் பண்பாட்டுக் கூறுகளுள் தீமிதி விழாவும் ஒன்று. தமிழ்நாட்டில் பரவலாக எல்லாக் கிராமங்களிலும் தீமிதி விழா நடைபெறுவதைப் பார்க்கலாம். இவ்விழா வேனிற் காலத்தில் நடைபெறுகின்றது. தொண்டை மண்டலத்தில் தீமிதி விழா பாரதப் போர் பற்றிய கதையுடன் தொடர்புடையதாக நிகழ்த்தப் பெறுகின்றது. இருப்பினும் இத்திருவிழாவிற்கு நெருப்புத் திருவிழா என்று பெயர். கொங்கு நாட்டில் கிராமத் திருவிழாக்கள் நோம்பி என்றே அழைக்கப் பெறுகின்றது. அந்த நோன்பிகளில் நடைபெறும் தீமிதி விழாவுக்கு 'குண்டம் இறங்குதல்' என்று பெயர். குண்டம் என்ற சொல் வடமொழியாக இருந்த போதிலும் இன்று வரை வழக்கில் உள்ள சொல் அதுவே. கொங்கு நாட்டில் ஆண் தேவதை கோயில்களிலும், பெண் தேவதை கோயில்களிலும் குண்டத் திருவிழா நடைபெறும்.

தமிழ் நாட்டில் இதுவரை கண்டறியப் பெற்ற தொல்பழங்கால ஓவியங்களில் பதிந்துள்ள தொல் பழங்கால வாழ்க்கை முறை வேட்டையையும், கால்நடை வளர்ப்பினையும் சுட்டுவதாக அமைந்துள்ளன. வெள்ளருகம் பாளையம், சீகூர், தெங்குமரஹட்டா, சிறுமலை, மல்லசமுத்திரம் ஆகிய ஊர்களில் காணப்பெறும் தொல்பழங்கால ஓவியங்கள் வேட்டைத் தொழிலைச் சுட்டுகின்றன. வெள்ளரிக் கோம்பை, செத்தவரை ஆகிய ஊர்களில் உள்ள தொல் பழங்கால ஓவியங்கள் கால்நடை வளர்ப்பினைச் சுட்டுகின்றன. வெள்ளரிக்கோம்பையில் ஓர் எருது வெள்ளை வண்ணத்தில் வரையப் பெற்றுள்ளது. இந்த எருது ஓவியம் தக்கணத்துப் புதிய கற்கால எருது உருவங்களையும், ஓவியங்களையும் நினைவுபடுத்துகின்றன. இந்த எருது ஓவியத்திற்கு அருகில் வீரர்கள் சண்டையிடும் காட்சி வரையப் பெற்றுள்ளது. அதனால் இந்த ஓவியம் நடுகல் மரபின் தொடக்கம் என்று கொள்ளலாம். இது போன்றதோர் ஓவியக் காட்சி தக்கணத்தில் ஒரு பாறையில் செதுக்கப் பெற்றுள்ளது. அது புதிய கற்காலத்தைச் சேர்ந்தது என்று கொள்ளப் பெறுகின்றது.

இந்த ஓவியங்களைக் கண்டுபிடித்தவுடன் பல்வேறு நாளிதழ்களில் செய்தியாக வெளியிடப் பெற்றது. இச்செய்தியின் படி

இவ்வோவியங்கள் 2500 ஆண்டுகளுக்கு முன் வரையப் பெற்றவை. மேலும் இந்த ஓவியங்களில் மான், எருமை, கரடி, புலி, மீன், பூகோள வரை (Geometric) படங்கள் ஆகியவை வரையப் பெற்றுள்ளன. விலங்குகளில் உடலின் உள் உறுப்புகள் கூட வரைந்து காட்டப் பெற்றுள்ளன. இந்த ஓவியங்கள் கால்நடை தொடர்பாகவும் கால்நடைகளை அடித்துத் தின்னும் விலங்குகள் தொடர்பாகவும் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

செத்த வரையில் உள்ள தொல் பழங்கால ஓவியம் குறிப்பிடத் தக்கது. இங்கு கால்நடைகளின் பல்வேறு வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத் தக்க ஓவியம் மான் என்று கருதப் பெறும் ஓவியமாகும். இந்த மான்(?)னிற்குமுன் தீ எரிவது வரையப்பட்டுள்ளது. அருகில் ஒரு உயரமான கொம்பும் கேடயம் போன்ற வடிவமும் வரையப்பெற்றுள்ளன. உண்மையில் இவ்வுருவத்தை வேல், கேடயம் என்று கொள்ளலாம். மானின் உருவம் வெள்ளை வண்ணத்திலும் உருவத்தின் ஓரத்தில் சிவப்புக் கோடும் வரையப்பட்டுள்ளன. பின்னால் நீண்ட வால் தொங்குகின்றன. தமிழ்நாட்டில் இதுவரையில் வடிக்கப்பெற்ற மானின் உருவங்களில் வால்பகுதி சிறியதாக காட்டப் பெற்று இருக்கும். ஆனால் ஓவியத்தில் காட்டப் பெற்றுள்ள மானின் உருவம் எருதாக இருக்க வேண்டும் என்று கொள்ளும் வகையில் வால் நீண்ட வடிவில் வரையப்பட்டுள்ளது.

செத்தவரை ஓவியத்தில் மான் என்று கூறப்பெறுவது எருது என்று தான் கொள்ள முடியும். இந்த விலங்கிற்கு முன் காட்டப் பெற்றிருக்கும் எரி அழல் குறிப்பிடத் தக்கது. புதிய கற்காலத் தக்காணத்தில் செய்யப் பெற்ற தீ மிதி விழாவினை இந்த ஓவியம் குறிப்பதாகக் கொள்ளலாம். தக்கணத்துச் சாம்பல் மேடுகளை அகழாய்வு செய்த ஆல்ச்சின் இந்த மேடுகள் புதிய கற்கால முல்லை நில ஆயர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒரு தடவை செய்யும் தீ மிதிச் சடங்கினால் உருவானவை என்று கூறினார். இந்தக் கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அந்த அகழ்வில் திமில் எருது சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. மேலும் 4000 ஆண்டுகளுக்கு முன் பட்டியில் நின்றிருந்த மாடுகளின் குளம்புப் பதிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி பட்டி போடுவதற்கு நடப்பெற்றிருந்த கொம்புக் குழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தச் செய்திகளைக் கொண்டு ஆல்ச்சின் புதிய கற்கால முல்லை நில ஆயர்கள் தீ மிதிச் சடங்கினைச் செய்தனர் என்று கொண்டார். இந்தச் சான்று களுடன் மட்டுமின்றித் தற்கால மாந்தவியல் கண்டுபிடிப்பு களையும் அவர் கணக்கில் எடுத்துக் கொண்டார். ஆல்ச்சின் இன்று உலகம் முழுதும் நடைபெறும் தீ மிதி விழாவினைப் பற்றி ஜே.ஜி. பிரேசர் அளிக்கும் செய்திகளை முழுமையும் பயன்படுத்தியுள்ளார்.

தீமிதி விழா

இன்று உலகம் முழுவதும் தீமிதி விழா நடைபெறுவதைப் பற்றி ஜே.ஜி. பிரேசர் குறிப்பு எழுதியுள்ளார். ஐரோப்பாவில் போலந்து, செக்கோஸ்லோ◌ேவக்கியா போன்ற நாடுகளில் தீமிதி விழா இன்றும் கொண்டாடப்படுகிறது. ஸ்பெயின், பிரான்சு போன்ற நாடுகளிலும் தீமிதி விழா நடைபெறுவதைப் பார்க்கலாம். இந்தத் தீமிதி விழாவில் மாக்களும், மக்களும் தீயின் மீது நடந்துசெல்வர். ஈரான், ஈராக், துருக்கி போன்ற நாடுகளிலும் தீமிதி விழா நடைபெறுகின்றது. இந்தத் தீமிதி விழாவில் மாக்களும், மக்களும் நடந்து செல்வர். தீயை மூட்டுவதற்குத் தற்காலத் தீக்குச்சியைப் பயன்படுத்துவதில்லை. ஆனால், சக்கி முக்கிக் கல்லைப் பயன்படுத்துவர். இது தொல் பழங்காலத்தில் மனிதன் தீ மூட்டுவதற்குக் கையாண்ட முறைகளை நினைவுபடுத்துகின்றது. மேலும் தீ விழா தொல் பழங்காலத்திலிருந்து வழக்கத்திலிருந்தது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவிலும் பல்வேறு பகுதிகளில் தீமிதி விழா நடைபெறுகின்றன. ஹோலிப் பண்டிகை தீமிதி விழாவின் எச்சமாகும். தீபாவளிப் பண்டிகையும் தீமிதி விழாவின் எச்சமாகும். தமிழ்நாட்டில் பல்வேறு பகுதியில் கொண்டாடப் பெறும் தீமிதி விழா குறிப்பிடத்தக்கது. இலக்கியங்களோ கல்வெட்டுகளோ தீமிதி விழாவைப் பற்றிக் குறிப்பிடவில்லை. தமிழ்நாட்டில் நடைபெறும் தீமிதி விழாவில் பல தொல் பழங்காலக் கூறுகள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் தீமிதி விழாவில் தீ மூட்டுவதற்கு சக்கி முக்கிக் கல்லையே பயன்படுக்குகின்றனர். இந்த விழாவில் ஊர்த் தலைவன் மாடு மட்டும் தீயின் மேல் நடக்கும். பிறகு ஊர் மக்கள் நடப்பர். தருமபுரி மாவட்டத்தில் கொல்லர்கள் என்போர் பொங்கல் பண்டிகையின் போது தீயை மூட்டி அதன் மேல் மாட்டினை நடக்கச் செய்வர். மதுரை மாவட்டத்தில் பல ஊர்களில் தீயை மூட்டி அத்தீயின் மீது மாட்டினை நடக்கச் செய்வர். ஆனால், பிற பகுதி தீமிதி விழாவின் போது மாடு நடப்பது நின்று போய்விட்டது.

தீமிதி விழாவின் மறு வடிவம் தான் கார்த்திகை சொக்கப்பானை, போகிப் பண்டிகை பழைய பண்டங்களைக் கொளுத்துதல் ஆகியவை. தொல் பழங்காலந் தொட்டு மனிதன் தீக்கும் நோயினைப் போக்கும் சக்தி உண்டு என்று நம்பினான். தீய ஆவியையும், பேயையும் மக்களிடமும், மாக்களிடமும் நெருங்காமலிருக்க தீ விழாவினை நடத்தினான், நடத்துகிறான். மக்களுக்கும், கால்நடைகளுக்கும் நோய்வராமலிருக்கவும் தீ விழா நடைபெறுகின்றது. இவ்வாறு தொல் பழங்காலம் முதல் தீ விழா நடைபெற்று வருகின்றது. இந்த விழா புதிய கற்காலத்தில் தொடங்கியது. இன்று வரை தொடர்ந்து நடைபெறுகின்றது.

செத்தவரை ஐயனார் மலை தொல் பழங்கால மாட்டு ஓவியமும் தீமிதி விழாவினை நினைவுறுத்துகின்றது. அந்த ஓவியத்தில் மாடும், மாட்டிற்கு முன் தீயும் காட்டடப்பட்டுள்ளதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். மேலும் நீளமான கொம்பும் கேடயம் போன்ற வடிவமும் வரையப்பட்டுள்ளன. இவற்றை வேல் (ஈட்டி), கேடயம் என்று கொண்டால் இந்த ஓவியம் மாடுபிடி சண்டையையும் நினைவுபடுத்துகின்றது எனலாம். சில நடுகற்களில் தீ காட்டப்பட்டுள்ளதைக் கொண்டு மாடுபிடி சண்டையின் போது தீயின் மீது நடந்து சென்ற பின்பு நிரையைக் கவரச் செல்வர் என்று கருதப் பெறுகின்றது. பொங்கலின் போது கொல்லர்கள் செய்யும் தீ மிதியும் மாடுபிடிச் சண்டையை நினைவுபடுத்துவதாகக் கொள்வர். இந்தச் சான்றுகளைக் கொண்டு செத்தவரை ஓவியங்கள் நிரைகவர்தலைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். எது எப்படி இருந்த போதிலும் செத்தவரை தொல் பழங்கால ஓவியங்கள் இன்று நடைபெறும் தீமிதி விழாவின் தொடக்கம் என்றே கொள்ளலாம்.

தீமிதி விழா புதிய கற்காலத்தில் கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் உருவானது. அது காலந்தோறும் மாற்றம் பெற்று அனைத்து மக்களும் கொண்டாடும் விழாவாக மாறிவிட்டது. புதிய கற்காலத் தீ மிதி விழாவின் எச்சங்கள் சாம்பல் மேடுகள். தக்காணத்திலிருந்த சாம்பல் மேடுகள் அகழ்வு செய்யப் பெற்றுள்ளன. கொங்கு நாட்டிலும் இத்தகைய சாம்பல் மேடுகள் இருக்கின்றன. அவற்றை முறையாக ஆய்வு செய்தால் புதிய கற்காலத் தீமிதி விழாவின் தொடர்ச்சியாகத் தான் இன்று குண்டத் திருவிழா நடைபெறுகின்றது என்பது உறுதிபடும்.

துணை நூல்கள்

1. F.R. Alchin, *Neolittic cattle keepers of South India.*
2. J.G. Frazer, The *Golden Bough.*
3. K. Krishnaswamy, *Fire Festival of India.*
4. D.D. Kosambi, *Myth and Reality.*
5. *The Hindu*, 13:7:82
6. H.D. Sankalia, *Pre historic Art.*

36. தமிழகக் கலை வரலாற்றில் கங்கை

அ.அப்துல்மஜீத், சென்னை.

தாய் குழந்தைக்குப் பாலூட்டி வளர்ப்பது போல நிலத்திற்கு உயிரூட்டி வளப்படுத்துவது நீர். நீரின் இன்றியமையாமை காரணமாகப் பல ஆறுகள் தாயாகவும், தெய்வமாகவும் போற்றப்படுகின்றன. இந்திய ஆறுகளில் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, சிந்து, காவேரி ஆகியவை தாயாகப் போற்றப்படுவதைக் காண்கின்றோம். சிறந்த நாகரீகங்களும், ஆற்றங்கரைகளிலேயே அமைகின்றன. எகிப்திய நாகரீகம் நைல் நதிக்கரையிலும், சிந்து வெளி நாகரீகம் சிந்து நதிக்கரையிலும் அமைந்ததைக் கூறலாம். ஆறு வரண்டபோது செழித்த நாகரீகமும் மறைந்து போனமைக்கு 'யூபிரெடிஸ், டைகிரீஸ் ஆற்றங்கரைகளில் அமைந்த மெசபடோமிய நாகரீகம், சரஸ்வதி ஆற்றங்கரையில் அமைந்த நாகரீகம் ஆகியவற்றைச் சான்றாகச் சுட்டலாம்.

கடல் மட்டத்திலிருந்து 13,800 அடி உயரத்தில் கங்கோத்ரியில் தோன்றி ஹரித்துவாரம், அலஹாபாத், பாட்னா (பாடலிபுத்ரம்) வாரணாசி (காசி) ஆகிய பகுதிகளில் ஓடி வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது, உலக அளவில் பெரிய ஆறுகளில் ஒன்றான கங்கை. ஆரியர் வருகைக்குப் பிறகு கங்கைவெளியில் பல குடியேற்ற ஊர்கள் தோன்றின. பல கோயில்களும் உண்டாயின. கங்கை இன்று போலவே அன்றும் புனித நதியாகத் தெய்வமாகப் போற்றப்பட்டது. வேதங்கள், புராணங்கள் ஸ்மிருதிகள் கங்கையைப் புனிதமாகக் காட்டின. வணிகம் நெடுந்தொலைவுப் பயணங்களை உந்தியபோது கங்கைக் கரைக்குத் தீர்த்தயாத்திரை செல்லும் வழக்கம் உண்டாகியது. கங்கைத்தீர்த்த யாத்திரை போற்றப்பட்டது. கங்கையின் புனிதம் கூடியது. கற்பனையாகப் புராணக்கதைகள் பல தோன்றின. வாழ்வின் இறுதிக் காலத்தில் கங்கைக் கரையில் வாழ்வதும் இறுதிக் கடனைக் கங்கைக் கரையில் செய்வதுமான வழக்கு சுவர்க்கம் தருவதாகக் கருதப்பட்டு மிகுந்தது. திரிஸ்தலிகேது, கங்கவாக்யவாணி ஆகிய கங்கை'யின் சிறப்பையும், சடங்குகள் செய்யும் முறையையும் விவரிக்கும் நூல்களும் தோன்றின[1]. இன்று காசி கங்கைக் கரையில் உள்ள மயானம் அரிச்சந்திரன் பெயரால் வழங்கப்படுகிறது. பல புராணக் கதைகளும் கங்கையுடன் சேர்க்கப்பட்டன என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழக இலக்கியங்களில் அகம், புறம், பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, நற்றிணை, பெரும்பாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமேகலை என்று பலவும் கங்கையாறு பற்றிக் குறிப்புகள் தறகின்றன.

நற்றிணையும் மணிமேகலையும் ''கங்கை அம் பேர் ஆறு'' என்கின்றன. ஏனையவும் 'ஆறு' என்ற அளவில் கங்கையைக் காட்டுகின்றன[2]. பிறகு தோன்றிய பிங்கலம், திவாகரம், சூடாமணி ஆகிய நிகண்டுகள் கங்கையை ஆறு என்று மட்டுமல்லாமல் பெண்ணாகவும் காட்டத் தொடங்குகின்றன. கங்கையின் தனயன் முருகன் என்று பிங்கலமும், கங்கை பெற்றோன் விநாயகர் என்று சூடாமணியும், கங்கைவேணியன் என்று சிவனைச் சூடாமணி நிகண்டும் காட்டுகின்றன[3].

ஆறாக இருந்த கங்கை பெண்ணாக-தெய்வமாக உருவகிக்கப்பட்டதும் ஆகமங்களும் சிற்ப நூல்களும் அவளது உருவ அமைதியை நிர்ணயம் செய்தன. அவள் வெள்ளை நிறமுடையவள், வலதுகரத்தில் கருநெய்தல் மலரும், இடதுகரத்தில் பூர்ண கும்பமும் கொண்டிருப்பவள், முதலையை வாகனமாக உடையவள்; இமயவேந்தனின் மகள், குமரி உருவம் கொண்டவள் என்று வகைப் படுத்தின[4].

கபிலரின் சாபத்தால் சாம்பலான பகீரதனின் முன்னோர்களான சகரரின் அறுபதாயிரம் மக்களை உயிர்ப் பிப்பதற்காகப் பகீரதன் செய்த தவம் காரணமாகக் கங்கை ஆகாயத்திலிருந்து நிலவுலகில் பாய்ந்து பாதாள உலகத்திற்குச் சென்று அவர்களது சாம்பலில் பட்டு அவர்களை உயிர்ப்பித்தாள் என்பது புராணக்கதை. அவளது கட்டுக்கடங்காத வேகத்தைச் சிவபெருமான் தனது சடைமுடியால் தணித்தார் என்பதும் புராணம். ஆகாயத்தில் அவளுக்கு ஆகாசகங்கை, தேவகங்கை, மந்தாகினி என்ற பெயர்கள் உண்டு. நிலத்தில் கங்கை என்று பெயர். பாதாளத்தில் போகவதி என்று பெயர்[5]. பகீரதன் கொண்டு வந்ததால் பகீரதி என்றும் பெயர். சந்துவின் செவிவழி வந்ததனால் 'சானவி' என்றும் பெயர். கம்பராமாயணத்தில் பாலகாண்டம் அகலிகைப் படலத்தில் வரும் கீழ்க்காணும் பாடல் இப்புராணக் கதையைத் தெளிவாகச் சொல்கிறது[6].

சகரர் தம்பொருட்டு அருந்தவம் பெரும்பகல்தள்ளிப்
பகிரதன் கொணர்ந்திடுதலால் பகீரதி ஆகி
மகி தலத்திடைச்சன்னுவின் செவிவழி வரவால்
நிகர் இல் சானவி எனப் பெயர் படைத்தது இத்தீர்த்தம்.

இப்புராணக் கருத்து தமிழகச் சிற்ப வரலாற்றின் தொடக்கத்திலேயே இடம் பெற்று விட்டது. தமிழகக் குடைவரைக் கோயில்களில் தொன்மையான திருச்சிராப்பள்ளி மேல் குடைவரை, புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் குடைவரை ஆகியவற்றில் உள்ள கங்காதரர் சிற்பங்களை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். திருச்சிராப்பள்ளிக் குடைவரைக் கல்வெட்டில் மகேந்திரவர்மன் சிவபெருமானை நதிப்பிரியன் (கங்கைநதிப்பிரியன்) என்று உமையவள் சொல்வது போலக் குத்தலாகத் தனது வடமொழிக் கவிதையில்

சொல்கின்றான். திருச்சிராப்பள்ளி, திருக்கோகர்ணம் ஆகிய இரு சிற்பங்களிலும் கங்கை ஆகாயத்தில் இருப்பதாகக் காட்ட அவரது இடுப்பிற்குக் கீழ்ப்பட்ட பகுதியை மேகத்தினூ டேமறைந்ததாக, வடிவு தராமல் பெண்ணுருவாக கூப்பிய கரங்களுடன் சிறிய அளவில் சிவபெருமானின் விரிந்த சடையின் அருகே காட்டியுள்ளனர். சோழர் கால நடராசர் செப்புத் திருமேனிகளில் அவரது விரிசடையில் கங்கை கால்கள் மறைந்த பெண்ணாகக் கூப்பிய கரங்களுடன் காட்டப்படுவதற்கு மேற்சொன்ன சிற்பங்கள் முன்னோடிகளாகும்.

பகீரதன் தவமிருந்து கங்கையை வருவித்த புராணக் கதையை இராஜசிம்ம பல்லவனின் படைப்பான மாமல்லபுரத்தில் இன்று அர்ச்சுனன் தவம் என்று சொல்லப் படுகிற பாறைச் சிற்பத் தொகுதியில் காணலாம். ஆகாயத்தி லிருந்து நில உலகில் முதலில் காடுகளில் ஓடிப் பிறகு மக்கள் வாழ் ஊர்ப்பகுதியில் சென்று நாகவுலகு பாய்வதாகக் கங்கை இரண்டு பாறைகளின் இடையே இயற்கையாக அமைந்த இடைவெளியில் மிகச் சிறந்த கற்பனை நயத்துடன் காட்டப்பட்டுள்ளாள். சிவபெருமானை நோக்கி எலும்பும் கூடுமாக அகோரத்தவம் செய்யும் பகீரதனும் காட்டப்பட்டுள்ளான். கங்கை தேவருலகி லிருந்து வருவதால் தேவபூதி என்றும் திருமாலின் இடத்திரு வடியில் தோன்றியதால் விஷ்ணுபதி என்றும் பெயர் பெற்றாள்[7]. இப்பாறைச் சிற்பத்தொகுதியின் நடுப்பகுதியில் ஒரு திருமால் கோயிலும் கங்கைக் கரையில் காட்டப்பட்டிருப்பது குறிக்கத்தக்கது. சிற்பத்தொகுதியின் கீழ்ப்பகுதியில் நாக அரசன் அவன்தேவி ஆகியோர் காட்டப்பட்டிருப்பது நாக உலகிற்குச் செல்வதை உணர்த்துகிறது. சிறுபஞ்ச மூலத்தில் ஒரு பாடல் கங்கைக் கரையில் போலித்தவம் செய்கின்ற பூனையைக் குறிப்பிடும்[8]. மாமல்லை பாறைச் சிற்பத்திலும் கங்கைக் கரையில் போலித்தவம் செய்யும் பூனையும் அதனருகில் ஏமாந்த எலிகளும் காட்டப்பட்டடிருப்பது இங்கு கண்டு இன்புறத்தக்கதாகும்.

இதே இராஜசிம்ம பல்லவனின் படைப்பான காஞ்சி கைலாசநாதர் கோயிலில் கங்காதரர் சிற்பம் காட்டப் பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் உள்ளது போலவே இங்கும் ஒரு நாய் உருவம் காட்டப்பட்டுள்ளது. இந்த நாய் உருவிற்கு வானியல் மரபுப்படி ஒரு விளக்கம் அண்மைக்கால ஆய்வாளரால் தரப்பட்டுள்ளது. கங்கை ஆகாயத்தில் பாய்ந்து வருவது இன்றும் வானில் உள்ளதாகச் சொல்லப்படும் பால்வழி (Milky Way) என்றும் அவ்வழியின் அருகேயுள்ள ஒரு நட்சத்திரம் முயல் அல்லது நாய் போன்ற வடிவுள்ளது என்றும் குறிப்பிட்டு அதன் தாக்கமே கங்காதரர் முடியில் கொள்ளும் கங்கையும் அருகில் நாயாக உருவகப்படுத்தப்பட்ட நட்சத்திரமும் என்று அவ்வாய்வாளர் குறிப்பிடுகிறார்[9].

சோழர் காலக் கங்காதரர், சிற்பங்களில் வலதுகர இரு விரல்களில் தன் சடையின் ஒரு முடிக்கற்றையைப் பற்றி கங்கையைக் கொள்வது போலவும் காட்டப்பட்டிருப்பார். கங்கையான ஒரு பெண்ணை சிவபெருமான் கொள்வதால் உமை சினம் கொள்வதாகவும் அச்சினத்தைத் தவிர்ப்பவராக உமையை ஆலிங்கனம் செய்வதும் கன்னம் அல்லது மார்பகத்தில் இன்பம் தருவதுமாக உலகியல் நிகழ்வைத் தெய்வத்திற்குச் சேர்த்து சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாக கங்கைகொண்ட சோழபுரம் மேற்புறக் கோட்டத்தில் உள்ள சிற்பத்தைச் சொல்லலாம்.

19 ஆம் நூற்றாண்டில் ரவிவர்மா தீட்டிய தெய்வ ஓவியங்களில் குறிப்பிடத்தக்கது கங்காதரர் ஓவியமாகும். இதனில் சிவபெருமான் புலித்தோல் உடுத்தி கால்கள் அகட்டி ஒரு மேடையில் தலைமுடி விரித்த கோலமாய் மேல்நோக்கிப் பார்ப்பவராகக் காட்டப்பட்டிருப்பார். அருகில் எருதின் மீது சாய்ந்து நிற்பவளாக உமையும் ஆகாயத்தில் நீர்வீழ்ச்சி போன்ற தோற்றத்தின் நடுவே பெண்ணுருவமாகக் கங்கையும் காட்டப்பட்டிருப்பர். 20ஆம் நூற்றாண்டில் தொடக்கக் கால ஓவியங்கள் மற்றும் மண் பொம்மை, பளிங்குப் பொம்மைகளில் சிவபெருமான் தலைமுடி கொண்டையாக மேல்நோக்கி முடிக்கப்பட்டு அதன் நடுவே பெண் உருவம் ஒன்றும் அதன் வாயிலிருந்து நீரூற்று தெறித்து வருவது போலவும் காட்டப்பட்டிருக்கும்.

பகீரதன் தவம், கங்காதரர், நடராஜர் உருவங்கள் ஆகியவற்றில் காட்டப்பட்ட கங்கை, கோயில் நுழைவாயில் களிலும் கோபுர வாயில்களிலும் தனி உருவமாகக் காட்டப்படும் மரபும் தோன்றியது. கங்கையையும், யமுனையையும் வாயில்களின் இடது வலது புறங்களில் காட்டும் மரபு வட இந்தியாவில் குப்தர்கள் காலத்திலேயே பின்பற்றப்பட்டது. குப்தர்கால மரபுப்படியே இடைக்காலத்தில் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலும் புவனேசுவரத்தில் உள்ள வியோமகேஸ்வரர் கோயிலிலும் காட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் கங்கை மகரத்தின் மீதும் யமுனை ஆமையின் மீதும் காட்டப் பட்டுள்ளனர்.

கோயில் வாயில்களில் கங்கை முதலிய புனித நதித் தெய்வங்கள் அமைவதால் கோயிலிற்கு வரும் பக்தர்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு புனிதமடைகின்றனர் என்ற கருத்து ஏற்பட்டது. பிரம்மவைவர்த புராணம் கங்கையின் சிற்பம் அமைந்த கோயிலின் வாயில் வழியாக நுழைவதின் மூலம் பக்தர்கள் கங்கையில் புனித நீராடிய பேறு பெறுவர் என்று குறிப்பிடுகிறது[10]. எனவே தொடக்கத்தில் நிலை வாயில்களிலும் கங்கையின் உருவம் சிற்பமாக அமைக்கப்பட்டது. நதித் தெய்வங்கள் தம் பரிவாரங்களுடனும், காமத்தில் திளைத்த இளம் தம்பதிகளுடனும் வாயில் நிலைகளில் வட்ட வடிவமான கொடி வேலைப்பாடுகளின் ஊடே

காட்டப்பட்டன. இது வாழ்வு இளமையானது, வேகமானது எனபதை உணர்த்துவதாக அமைந்தது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை வட்டம் சிவாயம் என்ற ஊரில் உள்ள சிவபுரீஸ்வரர் கோயில் கோபுர இடதுபுறக் கதவின் கீழ்ப்பகுதியில் கங்கை மகரத்தின் மீது இடது காலை ஊன்றி நிற்பவளாகக் காட்டப்படுள்ளாள். இடது கரத்தில் வட்ட வடிவமான கொடியைப் பற்றியும் வலது கரத்தை தொடை மீது அமர்த்தியும் உள்ளாள். கொடி வேலைப்பாட்டில் காமத்தில் திளைத்த இளம் தம்பதியினர் காட்டப்பட்டுள்ளனர். இந்த மரச் சிற்பம் கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் பொன்வாசிநாதர் கோயில் வாயிலின் வலது, இடது ஆகிய இரு புறங்களிலும் கங்கை காட்டப்பட்டுள்ளாள். வலது புறம் மகரத்தின் மீது நிற்பவளாக வலது கரத்தில் கீழ்நோக்கிய வாளும் இடது கரத்தில் மலரும் ஏந்தியுள்ளாள். இடது புறமும் கங்கை மகரத்தின் நிற்பவளாகக் காட்டப்பட்டு அவளது தலைக்கு மேலாக கொடி வேலைப்பாடுத் தொடங்கி மேல் நோக்கிச் செல்வதாகவும் காட்டப்பட்டுள்ளது. கொடிக்கருக்குகளில் கிளிகளும் காட்டப் பட்டுள்ளன. இச்சிற்பங்களும் கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. பிற்காலத்தில் கங்கையின் உருவத்திற்குப் பதிலாக அவளது வாகனமான மகரம் மட்டும் அதன் வாயிலிருந்து கொடிக்கருக்குத் தோன்றி மேல் நோக்கிச் செல்வதாகக் காட்டப்படும் மரபு ஏற்பட்டது.

தமிழகக் கல்வெட்டுகள் பலவற்றில் ஒம்படைக் கிளவியாக சொல்லப்படும் சொற்றொடரில் கங்கை சொல்லப் படுவதைக் காண்கின்றோம். கி.பி. 9ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் தொடங்கி ‘கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காதம் செய்தார் செய்த பாவம் படுவார்’ என்ற சொற்றொடரைக் காணலாம். பிறகு ‘கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில் போவார்’, ‘கங்கைக் கரையில் மாதா பிதா குருவைக் கொன்ற தோஷத்தில் போவார்’ என்ற சொற்றொடர் களையும் காண்கிறோம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு சிவபெருமானது செப்புத் திருமேனியின் விவரம் சொல்லும்போது அவரது முடியில் அமைந்த கங்கையை ‘கங்கைப்பட்டாரகி’ என்று குறிப்பிட்டுள்ளது[11]. தஞ்சை மாவட்டத்தில் காவிரிக் கரையில் அமைந்த ஒரு ஊரின் கல்வெட்டு ‘கங்காபட்டாரகியினின்றும் நீர் கொண்டு வருவானுக்குப் பங்கு, என்று இறைவனின் நீராட்டுக்கு ஆற்றிலிருந்து நீர் எடுத்து வருபவனுக்கான ஊதியத்தைக் குறிப்பிட்டுள்ளது. எந்த ஆற்றையும் கங்கையாகப் போற்றும் அளவு கங்கையின் புனிதம் கருதப்பட்டிருக்கிறது எனலாம். இதேபோல் கந்தபுராணப் பாடலும் ‘உவரி மிசை கங்கைகள் வந்தெய்தும்’ என்று எந்த ஆறும் கங்கையாகச் சிறப்பித்துக் கருதப்பட்டதைக் காட்டுகிறது[12].

இவ்விதம் இந்திய நதிகளில் புனிதமான கங்கை தமிழகத்தில் இலக்கியங்களிலும், சிற்பங்களிலும், கல்வெட்டு களிலும் பன்னெடுங்காலமாகத் தாக்கத்தை ஏற்படுத்தி புனித ஆறாக, தெய்வமாக, பாவங்கள் தீர்க்கும் கருவியாக விளங்கியிருப்பது இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடி முதல் வடகோடி வரையில் சமய, வணிக நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அடிக்குறிப்புகள்

1. *Encyclopaedia of Religion and Ethics*, Vol. II. P. 809, Ed. James Hastings in 13 Volumes.
2. 'சீர்மிகு பாடலிக்குழீஇ, கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ' - அகம்.265
'கரைபொகு மலிநீர் நிறைந்து தோற்றியாங்கு' - புறம்.161
'குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற்துகிரும்
கங்கைவாரியும் காவிரிப்பயனும்' - பட்டினப்பாலை : 189-191
பலருவிக் கங்கை
யினந்தெரிபல்லான் கன்றொரு கொண்டு' - பதிற்று 5 ஆம் பத்து, பதிகம்.
'கங்கைவங்கம் போகுவர் சொல்லோ' - நற் 189
'ஓங்கு உயர்வரை இமையத்து உச்சி
வாஅன் தமிழிதரும் வயங்கு வெளி அருவிக்
கங்கை அம்பேர் யாற்றுக் கரை இறந்து குழிதரும்
சிறை அடு கடும்புனல் அன்ன என்
நிறை அடுகாமம் நீந்து மாறே' - நற் 369
'இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்கு சுடர் நெடுங்கோட்டுப்
பொன் கொழித்து இழிதரும் போக்கு இருங்கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்' - பெரும்பா 429-432
சிலம்பு 7:2:2, 9:21, 12:110, 24:120, 160, 28:121, 29:120, 160:1
'கங்கைஅம் பேர்யாற்று அடைகரை இருந்துழி' - மணிமே 10:56
'கங்கைஅம் பேர்யாற்று அடைகரை தங்கி'
(செங்குட்டுவன் கல் எடுத்தல்)- மணிமே 26:84
3. மேற்கோள்கள், தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம்
4. அபிதானசிந்தாமணி
5. மேலது
6. கம்பராமாயணம் பக்கம் 224 சென்னை கம்பன் கழகம் பதிப்பு, 1976 சென்னை. இப்பதிப்பு இப்பாடலை மிகைப்பாடல் என்று பாலகாண்டம் இறுதியில் சேர்த்துள்ளது.
7. *Encyelcpaedia of Religion and Ethics*, Vol. II. P. 809, Ed. James Hastings in 13 Volumes.
8. சிறுபஞ்சமூலம் - 100.
9. முனைவர் வெங்கட்ராமன் கட்டுரை Historia வரலாற்றுப் பேரவை வெளியீடு, மதுரை.
10. பிரம்மவைவர்தபுராணம் II 48 - 52
11. தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி 2 எண் 70
12. கந்தபுராணம். தாரக : 37 தமிழ்ப்பேரகராதி மேற்கோள்.

37. சிந்தாதேவி உருவமைவு

க. இலக்குமிநாராயணன், சென்னை.

வரலாற்று வரைவிற்குத் தேவைப்படும் செய்திகளை சான்றுப் பொருள்களுடன் மீட்டெடுப்பது தொல்லியல். ஏற்கனவே எழுதப்பட்ட வரலாற்றில் விடுபட்டவைகளை முயன்று அறிவது தொல்லியல். இந்த தொல்லியல் பணி, பல வகைகளில், நிலைகளில் நெறிகளில் செய்யப்படுகிறது. அகழ்வாய்வு, கல்வெட்டியல், நாணயவியல், கட்டமைப்பியல் போன்றவை தொல்லியலின் உள்ளுறைப் பகுதிகளாக இயங்குபவை. அவற்றைப் போல உருவமைவியலும் தொல்லியலின் பங்காகவும் பிரிவாகவும் செயல்படுகிறது. கலைப் பொருள்களில் வெளிப்படும் உருவமைவுக் கூறுகள் வரலாற்றுச் சாட்சியங்களாகவும் அதற்கும் மேலாகக்கடந்த கால சமுதாயங்களின் மனவியல் போக்குகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் உணர்த்துவன. உருவமைவியல் வகைமையோடு (Typology) ஒரு தளத்தில் ஒன்றுபட்டாலும் நுட்பமாக அதிலிருந்து வேறுபட்டும் விளங்குகிறது. வகைமைப் பொருள்களை உருவாக்கும் செய்திறனின் வேறுபட்ட நிலைகளைக் களமாகக் கொண்டு அமைவது. மாறாக உருவமைவியல், படைப்போரின் மனவியல், சமூகவியல் போக்குகளை, நம்பிக்கைகளை வெளிப்படையாகவும் குறியீடுகளாகவும் புலப்படும் ஏதுக்களை களமாகக் கொண்டவை. கலைப் பொருள்களின் உருவமையியல் அவை உருவாக்கப்பட்ட காலத்து,

வரலாற்றுப்போக்கு, பழங்கதைகள், செய்நுட்பம், சமயவிதிகள், மரபுகள், தேவை (படைப்பாளியதும்/நுகர்வோரதும்), உள்ளூர்-வெளியூர் வழக்குகளின் கலப்பு, புதுமைக்கும் பொலிவிற்கும் இடையே ஏற்படும் சமன்பாடு போன்றவற்றை வெளிப்படுத்தும். அவ்வாறு வெளிப்படுத்தும் ஏதுக்களைப் புரிந்துகொள்ள வரலாற்றுப் பயிற்சியும் சம்பந்தப்பட்ட காலத்து இலக்கியப் பயிற்சியும் அவசியம். ஓர் இலக்கியத்தில் கூறப்படும் கலைப் பொருள்களைப் பிற தொல்லியல் சான்றுகளுடன் ஒப்பாய்வு செய்து அவற்றின் காலத்து நம்பிக்கைகளை, வாழ்க்கை முறைகளை மீட்டுருவாக்கலாம்.

இளங்கோவடிகளின் காவிய நாயகராகிய கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் வகையில் பௌத்த மதக் கருத்துக்களைப் பரப்பும் முயற்சியாக மணிமேகலை ஆக்கப்பட்டுள்ளது. இதில் கி.பி.3-5 நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த பல்வேறு சமயப்பிரிவுகளும் அவற்றின் தத்துவக் கோட்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன. சைவ, வைணவ,

சமண, பௌத்தப் பிரிவுக் கடவுள்கள் கூறப்பட்டுள்ளன. அக்கடவுள்களில் ஒன்று சிந்தாதேவி. வற்றாது உணவு வழங்கும் அமுத சுரபி என்னும் பாத்திரத்தை மணிமேகலைக்கு முன்னர் ஆபுத்திரன் என்பான் இத்தேவியிடமிருந்து பெற்றதாகக் காப்பியப் போக்கு விளக்கும். சிந்தாதேவியின் திருக்கோயில் தென் மதுரையில் இருந்ததாகவும் அக்கோயிலிலேயே சிந்தாதேவியிடமிருந்து ஆபுத்திரன் அமுதசுரபி பெற்றான் என்றும் கூறும்.

மணிமேகலைக் காப்பியத்தில் சிந்தாதேவியைப் பற்றிக் குறிப்பு பதிகத்திலும், பாத்திர மரபு கூறிய காதையிலும் கூறப்பட்டுள்ளது. பதிகத்தில் சிந்தாதேவி தன் உள்ளங்கையில் வைத்திருந்த பாத்திரத்தை ஆபுத்திரனுக்கு அளித்தது கூறப்பட்டுள்ளது[1]. பாத்திர மரபு கூறிய காதையில் தன் கையில் இருந்த பாத்திரத்தை அளித்ததாக விளக்கப்படுகிறது[2]. இவ்விரு குறிப்புகளிலும் சிந்தாதேவியின் கையில் பாத்திரம் இருந்தது உணர்த்தப்படுகிறது. இதைத் தவிர சிந்தாதேவியின் உருவமைவை விளக்கும் வேறு முக்கியக் குறிப்புகள் கூறப்படவில்லை. மணிமேகலையைப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் சிந்தா தேவியை ''யாவருக்கும் சிந்தையில் தோன்றி சொற்பொருள் உணர்த்தும் சரஸ்வதி தேவி'' என்பார்3. ஆனால் இந்த தேவதையை இந்து சமயம் சார்ந்த கலைவாணி என்பதை விட பௌத்தச் சமயக் கலைச் செல்வி எனக் கொள்வதே சரியாகும்.

மகாயான பௌத்த நூல்களில் ஒன்றான நிஸ்பன்ன யோகவளி, பரமிதை, வசிஸ்தா, பூமி, தாரணி என்று நான்கு பெண் தேவதைக் குழுக்களைக் கூறுகிறது. நற்பண்புகள், ஆன்மீக நெறிகள், ஆன்மீக நிலைகள் மற்றும் விழுமிய சொற்கள் ஆகியவற்றை உருவகப்படுத்திய திருஉருவங்களில் இத்தேவதை கள் போற்றப்படுகின்றன[4]. இத்தேவதைக் குழுக்கள் ஒவ் வொன்றிலும் பன்னிரெண்டு தேவதைகள் உள்ளனர். விழுமியச் சொற்களின் திரட்சிகளைத் தேவதைகளாக - தாரணிகளாக - மகாயான பௌத்தர்கள் வழிபட்டனர். பன்னிரெண்டு தாரணிகளில் எட்டாவது தாரிணியாக சுந்தா என்ற தேவதை விளங்குகிறது[5].

சுந்தா வேறு பெயர்களாலும் அறியப்பட்டாள். சுந்ரா, சந்த என்பன அவளது வேறு பெயர்கள். மஞ்சுஸ்ரீ மூல கல்பாவில் (கி.பி.200) சந்ர என்றும் கூறப்பட்டுள்ளது. பௌத்தவித்தகர் அசங்கர் (கி.பி.மூன்றாம் நூற்றாண்டு) இவளை சுந்த வஜ்ரி என அழைக்கிறார். சாந்தி தேவர் தமது சிக்ஷசமுச்சய என்ற நூலில் (கி.பி.8 நூற்றாண்டு) சுந்தி-தாரணி எனப் போற்றுகிறார். கெட்டி, சுந்தா தேவி 2,4,6,8,12,16,18 என பலகைகளுடன் பல உருவமைவுகளில் இருப்பதாக அறிவிப்பார். சாதனமாலாவில் மூன்று பாடல்கள் சுந்தாதேவியின் உருவமைவை

விவரிக்கின்றன. இம்மூன்று பாடல்களும் சுந்தா தேவியை நான்கு கைகள் கொண்டவளாகச் சித்தரிக்கின்றன. மேல் வலது கரம் அபய முத்திரை பிடித்தும், மேல் இடது கரம் தாமரை மலர் ஏந்தியும் இருக்கும். தாமரை மலரின் மேல் புத்தகம் இருக்கும். மற்ற இரு கைகள் பாத்திரத்தைப் பிடித்திருக்கும். சரத் காலச் சந்திரனைப் போன்ற வெண்ணிறமேனியாளாகிய சுந்தா தேவியின் மகுடத்தில் வஜ்ஜிரசத்துவர் இருக்கும் என்றும் சாதனமாலா பாடல் ஒன்று கூறும்.

பாத்திரத்தைத் தாங்கியிருக்கும் உருவமைவு மணிமேகலையில் சாத்தனார் கூறியுள்ள சிந்தாதேவியை மகாயான பௌத்த மந்தராயனப் பிரிவு சுந்தா தாரிணியே என்பதைத் தெளிவாக இனங்காட்டும். எனினும் சுந்தாவை சாத்தனார் தமது காப்பியத்தில் சிந்தாதேவி என ஏன் அழைக்க வேண்டுமென்பதும் எண்ணிப் பார்ப்பதற்கு ஏற்றதாகும். சுந்தா விழுமியச் சொற்களின் தொகுப்பை உருவகப்படுத்தியுள்ள தாரணி தேவதைகளில் ஒன்று. விழுமியச் சொற்களை- மந்திரங்களை - சிந்தையில் இருத்தி, மன வளம் பெருக்கிச் சித்திகளை அடைந்து உயர்வது என்ற சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றிய தேவதை சுந்தா. எனவே, இவள் அமோக சித்தி என்ற புத்தரின் தியானச் சிந்தனையில் சுந்தா தோன்றியதாக பௌத்த நூல்கள் கூறும். இதன் அடிப்படை யிலேயே சாத்தனாரும் சுந்தாவை சிந்தா தேவி என்றும், செழுங்கலைப்பாவை என்றும் அழைத்தார் என அமைதி கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பதிகம் வரி.59-60
   ''அங்கை பாத்திரம் ஆபுத்திரன் பால்
   சிந்தாதேவி கொடுத்த வண்ணமும்''
2. மேலது 13 பாத்திர மரபு கூறிய காதை வரி.16.
   ''தன் கை பாத்திரம் அவள் கொடுத்தலும்''
3. உ.வே.சாமிநாதய்யர், மணிமேகலை, சென்னை, 1998 பக்கம்6.
4. Meena Talin *Women in Early Buddist Literature Bombay*, 1972
5. மேலது.

38. அண்மையில் அறியப்பட்ட ஐயனார் சிற்பங்கள்

சி.வீரராகவன், விழுப்புரம்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும், தொல்லியல் ஆர்வலர்களும் விழுப்புரம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, கள்ளக் குறிச்சி, திண்டிவனம், செஞ்சி, மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் அண்மைக் காலத்தில் பல புடைப்புச் சிற்பங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். இவை கலை வரலாற்றாய் வாளர்களுக்குப் புதிய தரவுகளாகும். இச்சிற்பங்கள் ஐயனார், சேட்டை, முருகன், கொற்றவை, சண்டேசுவரர் ஆகிய சிறுதெய்வங்களும் கல்வெட்டுகளுடன் கூடிய கோழிக் கற்களுமாகும். இவை பலவும் வழிபாடற்று கோயில்களின் புறத்தே காணப்படுகின்றன. இவற்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளின் எழுத்தமைதி மற்றும் உருவ அமைதியைக் கொண்டு இவை கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 10ஆம் நூற்றாண்டு வரையிலானவை எனலாம்.

இவற்றில் பின்வரும் 14 ஊர்களில் 15 ஐயனார் சிற்பங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வூர்கள் பின் வருமாறு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஆலக்கிராமம் செண்டியம் பாக்கம், கிளியனூர், உளுந்தூர்ப்பேட்டை வட்டம் அரசூர், பாண்டூர் விழுப்புரம் வட்டம், பிடாகம், நெடி, அகரம், செஞ்சிவட்டம், எசாலம்; காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கடமலைப்பற்று, மின்னல் சித்தாமூர், மதுராந்தகம் (நந்தவன மேடு), சூனாம்பேடு; காஞ்சிபுரம் வட்டம், வடக்குக்குப்பம் ஆகிய 14 ஊர்களாகும். ஆலக்கிராமத்தில் 2 ஐயனார் சிற்பங்கள் உள்ளன. ஆக 14 ஊர்களில் 15 ஐயனார் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் தென்மங்கலம் ஐயனார் சிற்பத்தில் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு எழுத்தமையில் 'தேர்க்காலர் சருக்கினார் செய்வித்தது' என்ற கல்வெட்டும் செண்டியம் பாக்கம் சிற்பத்தில் 'கொற்றி' என்ற சொல் தெரியும் கி.பி. 7-8ஆம் நூற்றாண்டு எழுத்தமைதிக் கல்வெட்டும் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். பிற்காலத்தில் கற்கலால் கோயிலெடுத்தபோது சுவர்களில் கல்வெட்டுப் பொறிக்கும் வாய்ப்பிருந்தது. தொடக்ககாலத்தில் கல்லால் ஆன கோயில்கள் குறைவு என்பதால் கல்வெட்டைத் தெய்வ சிற்றபங்களிலேயே பொறித்துள்ளனர். மேலும் வழிபடுவோர் இத்தெய்வங்களின் மிக அருகில் இருந்து வழிபடலாம் என்ற அளவிற்கு ஆகமத்தடைகள் குறைவாக இருந்ததாலும் வழிபடுவோர் பார்க்குமளவில் சிற்பங்களிலேயே கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன எனலாம்.

மேற்சொன்ன 15 ஐயனார் சிற்பங்களில் அரசூர், தென்மங்கலம், பாண்டூர், பிடாகம் ஆகிய ஐயனார் சிற்பங்கள் பற்றி இங்கு காண்போம். அரசூர் ஐயனார் சிற்பத்தின் கலைப்பாணி தமிழகக் கலைப்பாணியாக இல்லை. நல்ல தெளிவான அரியாசனத்தில் திண்டின் மீது சாய்ந்த நிலையில் இவர் காட்டப்பட்டுள்ளார். இடையில் குறுவாள், மார்பில் உபவீதம் இடதுகால் வலது இடையைச் சுற்றிய யோகபட்டம் கழுத்தணிகள், மகர ருத்ராட்ச குண்டலங்கள் கைக்காப்பு, வாகுபந்தம் ஆகியவை மிகத் தெளிவாக வடிக்கப்பட்டுள்ளன. பிற சிற்பங்களில் காணப்படும் ஜடாபாரம், ஜடாமண்டல அமைப்பில் தலைமுடி இங்கு காணப்படாது தூக்கிக் கொண்டையிட்ட அமைப்பில் காணப்படுகிறது. சாய்ந்த நிலையில் பணிக்கம் காலடியில் உள்ளது. இங்கு நாயும் உள்ளது. தோளுக்கு மேலாக நீண்ட தண்டுடைய குடை பிடித்த பணியாளும் சாமரப்பெண்ணும், யானையும் குதிரையும் காணப்படுகின்றன. பெரும்பாலான சிற்பங்களில் குதிரை, நாய் மட்டுமே காணப்படும் நிலையில் இச்சிற்பத்தில் கூடுதலாக யானை காணப்படுகிறது.

தென்மங்கலம் ஐயனார் சிற்பமும் உயர்ந்த ஆசனத்தின் மீதுள்ள திண்டின் மீது சாய்ந்து அமர்ந்த நிலையில் உள்ளது. இதன் கலைப் பாணியும் தமிழகக் கலைப் பாணியிலிருந்து சற்று வேறுபட்டதாகக் காணப்படுகிறது. தலைமுடியின் ஜடாமண்டல அமைப்பு சுருள் சுருளாக அமைந்து வேறுபட்டுள்ளது. காலடியில் சாய்ந்தநிலையில் கலசமும் பணிக்கமும், மலர் ஏந்திய பணிமகளும் காணப்படுகின்றனர். பணிமகளுக்குக் கீழாக குத்திட்டு அமர்ந்த நாய் காட்டப்பட்டுள்ளது. சிற்பம் தெளிவில்லாமல் இருப்பதால் சிற்ப அமைதி முழுதுமாகத் தெரியவில்லை.

பாண்டூரில் அமைந்த ஐயனார் சிற்பம் கோயிலினுள் அமைந்தது. அரசூர் தென்மங்கலம் சிற்பங்கள் போலல்லாது மிக எளிமையாக அமைக்கப்பட்டது ஜடா மண்டலம் அதிக அளவில் விரிந்து வட்ட வடிவமாக உள்ளது குதிரைத் தலையும் குத்திட்டு அமர்ந்த நாயும் வலதுபுறம் காணப்படுகின்றன. பணிமகள் மலருடன் இடதுபுறம் நிற்கின்றாள்.

பிடாகம் ஐயனார் சிற்பமும் மிக எளிய வடிவினதாகும். குதிரைத்தலையும் மிகச்சிறிய அளவில் நாயும் காட்டப்பட்டுள்ளன. ஜடாபாரம் காணப்படுகிறது. பணிமகள் காட்டப்படவில்லை.

இந்த நான்கு ஐயனார் சிற்பங்களும் தமிழக மற்றும பிறகலைப்பாணிகளில் காணப்படும் வேறுபாடுகளுக்கு எடுத்துக்காட்டாகும். சாத்தன் வணிகர்களின் தெய்வம். வணிகம் அரசியல்ரீதியாகவும் வளர்ச்சியடைவதுண்டு. மன்னர்கள் புதிதாக

நாடுகளை வென்று சேர்க்கும் போது வணிகர்களும் அங்கு தொழில் முனைப்புக் கொண்டனர். கி.பி 10ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இராஷ்டிர கூடமன்னன் மூன்றாம் கிருஷ்ணன் இப்பகுதிகளைக் கைப்பற்றிச் சிலகாலம் ஆட்சி செய்தான். அதன் காரணமாகு அரசூர் தென்மங்கலம் ஐயனார்கள் இராஷ்டிர கூடத்திலிருந்து வந்த வணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம். இப்படிச் சிற்பங்களை கலையமைப்பு மற்றும் அரசியல் பின்னணியில் ஒப்பிட்டு நோக்குவதால் கலைவரலாறு தெளிவுபடும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளன.

39. சிதம்பரம் சிவகாமி அம்மன் கோயில் ஓவியங்கள்–மறுபார்வை

ச. கிருஷ்ணமூர்த்தி, சிதம்பரம்

கோயில் என்று சைவர்களால் போற்றப்படும் சிதம்பரம் நடராசர் கோயில் வளாகத்தில் சிவகாமி அம்மன் கோயிலும் அமைந்துள்ளது. விக்கிரம சோழன் காலத்தில் 'அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன்' என்ற நரலோக வீரனால் இக்கோயில் கட்டப்பட்டது[1]. இக்கோயில் முகப்பிலுள்ள சொக்கட்டான் மண்டபம். திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த மாயூரம் வைத்தியலிங்க பண்டாரம் என்பவரால் சக ஆண்டு 1711 இல் கட்டப்பட்ட விவரம் இங்குள்ள கல்வெட்டால் உறுதியாகிறது. இம்மண்டபத்தை யொட்டியுள்ள கோபுரவாயில் 'அந்தப்புர பெருமாள் திருவாசல்'என்று வழங்கப்படுகிறது[2]. இதையடுத்துள்ள மண்டபம் மரத்தினால் அமைக்கப்பெற்றது போன்ற கருங்கல் தூண்களையும் மேற் கூரையையும் உடையதாய்ச் சிற்ப வேலைப்பாடுடன் விளங்குகிறது. மண்டபத்தின் விதானத்தில் கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வண்ண ஓவியங்கள் எழுத்து வரைவுகளுடன் உள்ளன.

இங்குள்ள ஓவியங்களை ஆய்வு செய்த கலைவித்தகர் சிவராமமூர்த்தி ஓவியங்கள் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்தார்[3]. 'ஓவியப்பாவை' என்ற நூலை எழுதிய இரா. நாகசாமி இவ்வோவியங்கள் குறித்துச்சில செய்திகள் கூறிவிட்டு, சொக்கட்டான் மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் வரும் வைத்திய லிங்கத் தம்பிரான் உருவமே, முன்மண்டப ஓவியத்தில் பெரிய வடிவில் கூடிய தம்பிரான் உருவம் என்று கூறியிருக்கிறார்.

விதானத்தில் உள்ள ஏராளமான ஓவியங்கள் புராணக்காட்சிகளையும் கோயில் கோபுரங்களையும் மாணிக்கவாசகர் வரலாற்றையும் தம்பிரான்களைளின் உருவங்களையும் காட்டுகின்றன. சில ஓவியங்களும் எழுதப்பட்ட எழுத்துக்களும் எழுத்துக்கள் சிதைந்தும் மங்கியும் படிக்க முடியாதபடி உள்ளன.

மேலும் ஆதீன கர்த்தர் உருவத்தின் கீழே 'அம்பல வாணர் சதா சேர்வை, என்ற இருவரி எழுத்துகளும் உள்ளன. திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்கள் 'அம்பலவானர்' என்ற பெயரினைக் சூடிக்கொள்வது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். அதாவது பெரிய பட்டத்தில் இருப்பவர் நமசிவாயம் என்றும் சிறிய பட்டத்தில் இருப்பவர் அம்பலவாணர் என்றும் அழைக்கப்படுவார். திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகளில்

அம்பலவாண ஐயர், அம்பலத்தாடி, அம்பலவாணர் போன்ற பெயர்களில் குருமகான்கள் அழைக்கப்பட்டுள்ளனர். மழித்த தலையும் தலையில் உருத்திராட்ச மாலையும், கழுத்திலும் கையிலும் தனித்தனியாக உருத்திராட்ச மாலைகளும் கொண்டிருத்தல் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களின் உருவ அமைப்பாகும். இங்குள்ள அம்பலவாணர் உருவமும் அவ்வாறே உள்ளது.

சிதம்பரம் நடராசர் கோயிலுக்கும் ஆதீனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. வேலூரில் அரசு புரிந்திருக்கும் விருபாக்ஷிராயர் ஆணையினால் நடுநாட்டை ஆண்டு வந்த ஓர் வடுகன் சிதம்பரத்திற்கு வந்து சபா நாயகருக்கு நடக்கும் நிந்திய சிறப்புகளைக் கண்டு பொறாமை கொண்டு சபா நாயகருக்குரிய வருமானங்களைக் கோவிந்தராஜப் பெருமாளுக்கு வழங்க, தில்லை வாழ் அந்தனர் செய்வதறியாது திருவாவடுதுறை ஆதீன ஸ்தாபகர் நமசிவாய தேசிகரிடம் கூற அவர் தமது சீடர் சிவப்பிரகாசரை வேலுருக்கு அனுப்ப அவர் சாதுர்யமாக நடந்து சபாநாயகருக்குரிய வருமானத்தினை மீண்டும் சபாநாயகருக்கே வழங்க, முதன் மந்திரி இலிங்கண பத்தர் மூலம் முயன்று மன்னரிடம் ஆணை பெற்றார் என்று மடத்தின் வரலாறு குறிப்பிடுகிறது[6]. வேலூர் வரலாற்றில் இலிங்கணநாயக்கர், பொம்மு நாயக்கர் ஆகியோரைக் காண முடிகிறது. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த இலிங்கண நாயக்கரே திருவாவடுதுறை ஆதீன குருபரம்பரையில் இலிங்கன பத்தர் எனப்படுகிறார்.

பன்னிரண்டாவது தேசிகர் திருச்சிற்றம்பல தேசிகர் ஆவார். இதனை வடமொழியாக்கியோர் 'திரு சிதம்பர தேசிகர்' என்றே மொழி பெயர்த்தனர்[7]. ஆதீனத்தைச் சார்ந்த ஒவ்வொரு தேசிகரும் சிதம்பரம் போந்து இறைவனை வழிபட்டுள்ளனர். அதுமட்டுமின்றி நடராசர் கோயில் இரண்டாம் திருச்சுற்றாலையில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கெனத் தனி அறை இன்றும் இருந்து வருகிறது[8]. ஆதீனத்தின் கட்டளையும் கோயிலுக்குண்டு. சிதம்பரம் உமாபதி சிவாச்சாரியார் வழிபட்டு வந்த நடராசர் திருமேனியே திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களால் இன்று வரை தினமும் வழிபடப் பெறுவதாக கூறப்படுகிறது[9]. திருச்சிற்றம்பல தேசிகரின் கலம்பகம் என்ற நூலும் இவ்வுண்மையைக் கூறியுள்ளது[10].

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களில் பலருக்கு அம்பலவாணர் என்ற பெயர் இருப்பதால் இங்குள்ள அம்பலவாணர் எந்தத் தேசிகர் என்பது உறுதியாகக் கூறமுடியாது. எனினும் பதிமூன்றாவது பட்டத்தில் இருந்த அம்பலவாணதேசிகர் இங்குள்ள அம்பலவாணர் என ஊகிக்கலாம். இத்தேசிகர் காசியில் கண்ணப்பசாமி கல்வெட்டில் இடம் பெறுகிறார்[11]. திருவெண்ணெய் நல்லூர் கல்வெட்டிலும் இடம்

பெறுகிறார். பல்வேறு கோயில்களுக்குச் சென்று வழிபட்டுள்ள இத்தேசிகர் காலத்தில் வெளியிட்ட ஆறு செப்பேடுகள் மடத்தில் உள்ளன. இவருடைய காலம் 1770-89 என்பதால் சிவகாமி அம்மன் கோயிலில் உள்ள ஓவியங்களும் கி.பி.18ஆம் நூற்றாண்டு எனலாம். அம்பலவாணர் ஓவியத்திற்கருகில் முத்துக்குமார் தம்பிரான், அருணாசலத் தம்பிரான் மற்றும் மூவர் உருவங்களும் உள்ளன. தம்பிரான்கள் தலையில் தலைப்பாகை முகத்தில் மீசை தாடியுடன் உள்ளனர். மேற்கூறியவர்கள் ஆதீனத்தின் தம்பிரான்கள் எனலாம்.

அம்பலவாணர், தில்லை நடராசரையும் சிவகாமியம்மையையும் வழிபடுவது போன்று ஓவியம் காட்டப்பட்டுள்ளது. மேலும் திருவாவடுதுறை கோயிலைப் பசு பூசித்தது, மயூரநாதர் கோயிலை அம்மை மயில் வடிவமெடுத்து வழிபட்டது போன்ற ஓவியங்களும் இங்கு உள்ளன. இவ்விரு கோயில்களும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கோயில்கள் ஆகும். ஆகவே கி.பி.18 ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தின் முயற்சியால் இங்குள்ள ஓவியங்கள் தீட்டப் பெற்றன எனலாம். இங்குள்ள ஓவியங்களும் அவன்றின் கீழ் எழுதப்பட்டுள்ளவையும் முடிந்தவரை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

தாருகாவனத்து முனிவர்களின் செருக்கினை அடக்க வேண்டி, சிவன் பிட்சாடனராகவும் திருமால் மோகினியாகவும் சென்ற உருவங்களும், அக்காலத்தில் திருப்பணி நடைபெற்ற விதமும், மாணிக்க வாசகர் குழந்தைப் பருவத்தில் இருந்த போது தொட்டிலாட்டியது, தாயின் காலில் குழந்தையைப் போட்டு நீராட்டுவது போன்ற காட்சிகளும் இங்கே உள்ளன. அரிமர்த்தனப் பாண்டியனின் மந்திரியாகித் திருப்பெருந்துறையில் மணிவாசகர் உபதேசம் பெற்றது வரை ஓவியங்கள் உள்ளன.

1. நந்தி கேசுரன்.. க்கு சொல்'
2. முநிக்கும் சூதருக்கும் சொன்னது' பெருமாராயர் சரு''..
3. ...ண்ணியத்திலே உள்ள ரிஷியளுக்குச் சொன்னது
4. 'தண்னரம்ம முனி நமஷ்காரம் பண்ணியது. பாஷ்த்த காறம் பண்ணனே'... 'மத்தியந்ததா தில்லை வனத்திலே பூசை பண்ணச் சொன்னது.
5. 'திருமூலத் தானத்திலே மழமுனி பூசை பண்ணினது.
6. 'திருமூலத்தானத்திலே பூசை பண்ணிந... புஷ்ப்பம் பழுதாச்சுது. புலீசர்.'
7. 'மோசுக்கரை மழமுனி நமச்காரம் பண்ணிந வியாக் கிரபாத கொ...'

8. 'மத்தியந்தர் விவாகம் பண்ணச் சொன்னது'

'திரம்பாதருக்கு விவாகம் பண்ணி வைத்தது'

9. 'உபமன்னியர் பாலுக்கு அழுதது'

10. 'திருமூலத் தானத்திலே உபமன்னியர் தெரிசித்தது'

11. 'திருப்பாற் கடல் சாப்பிட்டது'..

12. 'பள்ளி கொண்டு யிருக்குற போது தாருகாவனத்திலே நடனம் தெரிந்தது'

'எழுந்திருந்து பரவசப்பட்டது'

13. 'தில்லை மூவாயிரம் பேருக்கும் சறுவத்தான செனங்களுக்கும் தெரிசனம்''

14. 'சல்லி பகவானும் பட்டம் கட்டுகிறது யிவடம்''

15. 'கள் மண்டகத்துக்கு கல்லேத்துகிறது'

16. 'பண்ணின பின்பு யொண்ணிய வர்ணனுக்கு.. கை

ல்லிய பகவானும் பட்ட...பட்டம் கட்டுகுறது யிவடம்'

17. 'சேவிக்கிறது யிது'

திருவிழாக்காணும் கட்டம் அரசர் போன்ற ஒருவர், நடுவில் உள்ளார். இருபுறமும் ஆடவர், பெண்டிர், யானை மீது பறை வைத்து அடிக்கும் நபர் ஆகிய உருவங்கள் உள்ளன.

18. 'திருமூலத்தானை பதஞ்சலி பூசை பண்ணினது'

19. '...பதஞ்சலி கண்டது' என்ற சொற்றொடர் அடுத்துள்ளது. நாகர், இருவர் காணும் சிற்பமும் உள்ளது.

20. 'பதஞ்சலி பிலத்து வாரத்தில் சென்று வந்தது'

'பதஞ்சலி நாகலோகத்திலேயே...'
காத்தாலே வந்தது

21. 'சேழர் தபசுக்கு போற மெண்ணு சொன்னது'

22. சேழலே வாசுகியை விஷ்ணுவண்டையிலிருக்கச் சொன்னது.

23. 'விஷ்ணு திருப்பாற் கடலிலே ஆ..

மாசிவனுடைய தே-தெரிசிக்க வெண்ணை'

24. 'சிவன் ஓமத்திலே பொறந்ததை யெல்லாம் தெரிகிறது'

25. 'தாருகாவனத்து ரிஷிகள் வழிபடல்'

26. 'தாருகா வனத்து ரிஷிகள் அவிசார ஓமம் பண்ணுகிறார்கள்'

27. 'ரிஷியர் வூடு.

28. 'பெருமாள் மோகிநி வயத்துடன் தாருகானவனத்து ரிஷியண்டைகிக்கி வந்தது'

29. 'தாருகாவனத்து ரிஷி பத்தினியர் வூட்டுக்கு சிவன். பிச்சைக்குப் போன சிவசாமி'

'சிவன் பிக்சாடநவடிவு எடுத்தது'

30. 'விஷ்ணு மோகிநி வடிவு எடுத்து'

31. 'கைலாசத்து ரிஷி வரையிலே சிவனும் விஷ்ணுவுமிருந்து தாருகாவனரி ழியளை தபசு அழிக்க வேணுமென்று யோசனை பண்ணினது'

32. 'சிவனும் பெருமாளும் கைலாசத்து ரிழி வரைக்குப் போறது'

33. 'கைலாசத்தில் சிவன் இருந்தது'

34. பெருமாள் வந்து சிவனைக் கண்டது'

35. 'குதிரைபடை யானைப்படை யாவும்'..

36. 'பதஞ்சலி பூசை பண்ணுகிறது'.

37. 'வாங்க வேணும் குடுத்த வெகுமானமும் எழு.. போடுகிறேன்

38. ..இருந்து சவரம் பண்ணின..

'ருசிநம் பண்ணி குருபூசை பிராமண

நபேருகள் அல்லேரும் புண்ணிய வ..

விந்தங்களிலே சேருவார்கள்.

பாவங்..

39. 'கள் கால பைரவர் குலத்திலே ஆகப்பட்டு கொண்டு...பட்டு அவர்களும் சபாபதி பாதார விந்தங்களிலே சேருவார்கள்'

40. 'பாண்டியராசன் துன்மத.. விட்டுவிடச் சொல்லுகுறது யிவடம்'

41. 'தாவி வீட்டிலே தன.. விட்டு விடுகிறது யிவடம்'

42. 'காலம் கூடிக் கொண்டு யிருந்த விடத்தில்.. பண்ணுபதிக்குச் சொன்னது'

43. 'யெமகெணங்களுக்கு சிவ... தொக்கையிலே சேர்த்தியாய்'

44. 'யானை மேலே சேரமான் பெருமாள் தெரிசனத்துக்குவர்றது' 'சேரமான் பெருமாள் பல்லாக்கு போறது'

45. 'வநத்திலே யிருந்த வேடன் போறவர்ர மனு சாளை அல்லரையும் வழி மறித்து கொண்டு போறது'...

46. ‘திரவிய பொட்டி’

47. ‘சேரமான் பெருமாள் தெரிசனம்’

‘சபாபதி.. ணுறது முது.. அத்தியாயம் ரெண்டு’

48. கேதாரத்திலே சோழ ராச பூசை பண்ணுகிறது.

49. ‘.. ல.. மகாவிஷ்ணு பூசை பண்ணுகிறது’.

50. ‘கோகரணத்திலே மணலாலே அபிஷேகம் செய்தது’.

51. ‘மல்லிகார்ச்சுணத்திலே அம்மன் பூசை பண்ணுகிறது யிவடம்’

52. ‘திருப்பட்டீஸ்வரத்திலே மகா விஷ்ணு பூசை பண்ணுகிறது யிவடம்’

53. ‘காஞ்சிபுரத்திலே அம்மன் பூசை பண்ணுகிறது’.

54. ‘திருவண்ணாமலையிலே தேவி பூசை பண்ணுகிறது’.

55. ‘விறுத்தாசலத்திலே அகஸ்தியர் பூசை பண்ணுகிறது’.

56. ‘கும்பகோணத்திலே விஷ்ணு பூசை பண்ணுகிறது’.

57. ‘திருவீஷிமிஷலையில் மகாவிஷ்ணு கண்ணைப் புடுங்கி அர்ச்சனை பண்ணுகிறது!

58. ‘மாயூரத்திலே தேவி மயில் ரூபமாயி பூசை பண்ணுகிறது’

59. ‘திருவானைக்காவில் யானை பூசை பண்ணுகிறது’.

60. ‘பிரம்மா வழிபடும் சிவலிங்கம்’

61. ‘திருவாவடுதுறையிலே பசு பூசை பண்ணுகிறது யிவடம்’.

62. ‘வேதாசலத்திலே நாலு வேதமும் பூசை பண்ணுகிறது யிவடம்’

63. ‘திருவெண்காடரை காளி பூசை செய்தது.

64. ‘வயித்திய நாதரை நந்திகேஸ்வரர் பூசை செய்தது’.

65. ‘அம்பல வாணர் சதா சேர்வை’

66. ‘முத்துக்குமாரத் தம்பிரான்’

67. ‘சிதம்பர புராணத்து மகத்துவங்கள் யோகத்திலே இருக்கிறது’

68. ‘அருணாசலத் தம்பிரான்’

69. வயி.. குற அம்பலவாண. யின்தானம் கைய்யாரு புள்ளை..

70. ‘முதலாய் - யுள்ள தலத்திலே ஒரு தலை இருப்போம். சிதம்பர தனித்தலே பூமி பரியந்தம் ஒரு வறுட் முற்றும் கோடி முடி கோடி முடியிலே பூரணமாக கண்டனம் பண்ணுவோம்’. ‘கோடி முடியிலே

மூலஸ்தான்னேசுரன் ஒரு கோடி முடியிலே விஷ்ணு முதலாயுள்ள தேவதைகள் செவ்வையாயிருக்கிறது'.

71. 'ராசா சொல்படிக்கு உக்கறாணத்திலே அரிசி அளக்குறது யிடவம் யிதன் தெற்கு பார்க்கவும்'

72. 'ராசா அம்முது தானம் பண்ணு(கிறது)'

73. 'அத்தியானம் நடக்கிறதற்கு தெரவியம் குடுக்கிறது யிவடம்'

74. 'பசுக்களை யிடையன் கிடையுடனே யோட்டி வந்தது யிவிடம்'

75. 'பசுக்கள் தானம் பண்ணுகிறது யிவடம்'

76. '.. ராசாவானவர் ஆடை ஆபரணம் தானம் பண்ணுகிறது யிவடம்'

77. 'ராசா கொடை..ட்டி தானம் பண்ணுகிறது யிவடம்'

யிதன் வடக்குப் பார்க்கவும்.

78. 'தேடி பா...ண்ணுகிறது'

79. 'ராசா பூரிதானம் பண்ணுகிறது யிவடம்'

80. 'ராசா அன்னதானம் பண்ணுகிறது யிவடம்' 'தேவிசகாயம்'

81. 'ராசா மடங்கள் கிறே.. தங்கள் பண்ணுகிறது யிவடம்'

82. 'வேடன் குடை கொடுத்த கொடையை யிளுத்து பிடுச்சுக் கொண்டு சிதம்பரத்திலே வந்து கயிலாசத்தை அடைந்தது யிவடம்'

83. 'வேடன் பிராமணணைச்.. உடமையெல்லாம் பறித்து கொண்டு போறது யிவடன்'

84. விருத்த பிராமணன் களைத்து மாமர நிழலிலேகிகயில காகாவின் வாயிலே யிருந்த ஒரு அண..

85. கையிலாசத்திலே முற்று பேரும் கையிலாசம் சேர்ந்தார்கள் யிவடம். யிதன் கீழ் பத்திலேய ரெண்டு பேர்தெரிசனம்'.

86. 'வேடன் பிராமணனை அடிச்சுப் பறிக்குது யிவடம்' யிதன் கீழ்பத்தி பார்க்கவும்'

87. 'விருத்த பிராமணன் சிதம்பரம் தரிசனத்துக்கு போறது யிவடம்'

88. '..ணியும் குரும் பதஞ்சலி மரை பேதவர் அல்லோ காயா..

89. '.. பாத மன்மத குரு.. டை சொல்லி அதசயப்படுகிறது'

90. 'வியாக்கிற மாபுள்ளை உப மன்னியரை மூலத்தானத்திலே தாயார் பாலுக்கு அமுது துயருற்ற சன்னதியிலே வளக்கந்து சவாமி திருப்பாற்கடல் கொண்டு வந்தது'.

91. 'முன்பிருந்த பரியாறுத்தது. ராசா கண்டு கோபித்துக் கொண்டு .. முதாரியை அழைத்து மாணிக்க வாசகரைப் பணம் வாங்க.. திரைப் பணத்தில் தெருள.. கொண்டு வாசல்'

92. 'தேவேந்திரன் சுவாமியைக் காணுகிறது யிவடம்'

93. 'பொன்னம்பலம்.. திரு.. ராசனுக்கு சொன்ன உடனே அழைத்து வரச் சொன்னது'

94. 'சவரம் பண்ணுகிறது'

95. 'துச்சகன் கையிலே தொரவியப் பெட்டியைக் குத்திக் கொல்ல சேவகன் வாங்கி கொண்டு போறது யிவடம்'

96. 'யெமதர்ம ராசா தம்முடைய கெணங்கள் சிவகெணங்கள்'

97. 'கோவிச்சுக் கொண்டு சித்திர புத்திரரைக் கணக்குப் பார்க்கச் சொன்னது'. 'கணக்கு பாத்து பண்ணினது எல்லாரும் பாவம்'.

கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ள சொற்றொடர்கள் கி.பி. 18ஆம் நூற்றாண்டு தமிழ் மொழி ஆய்வுக்குப் பயன்படும். சொற்றொடர்கள். விளக்கும் ஓவியங்களை விரிவாக நான் குறிப்பிடவில்லை. அவ்வாறே புராணக் காட்சிகளையும் நான் விவரிக்கவில்லை. எதிர் காலத்தில் முழுமையாக ஆய்வு செய்ய முயல்பவருக்கு இக்கட்டுரை உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

மேற்கோள் நூல்கள்

1. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

2. தில்லைத் திருக்கோயில் - டாக்டர். வெள்ளை வாரணம்.

3. இந்திய ஓவியங்கள் - டாக்டர். சிவராமமூர்த்தி

4. ஓவியப்பாவை - டாக்டர் இரா. நாகசாமி, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.

5. குருபரம்பரை வரலாறு - திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

6. காசி கண்ணப்பசாமி மடம் கட்டுரை - மெய்கண்டார் 1/98 இதழ் திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

7. திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம் - சீனிப்புலவரால் இயற்றப்பட்டது. இந்நூலினைத் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டுள்ளது.

8. ஒன்பதாம் திருமுறையில் சேந்தனார் பதிகமும் இடம் பெறும்.

40. தமிழகத்தில் இசுலாமியக் கட்டடக் கலை

முனைவர் ஜெ. ராஜாமுகமது, புதுக்கோட்டை.

தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பிரிவினரான தமிழ் முஸ்லிம்களின் வரலாறு தொன்மையானது. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் முடிவில் அரபு நாட்டு முஸ்லிம் வணிகர்கள் தென்னிந்திய கிழக்குக் கடற்கரையின் பல பகுதிகளில் கரையிறங்கியதிலிருந்து இந்த வரலாறு தொடக்கம் பெறுகிறது.

இக்கால கட்டத்தில் வணிக நிமித்தம் தமிழகத்துத் துறைமுகங் களுக்கு வந்த அரேபியர்கள் முஸ்லிம்களாக வந்தனர். இந்நாட்டுப் பெண்களை மணந்து கொண்டு கடல் கடந்த வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர். இதன் காரணமாக தமிழகக் கரையோர பட்டினங்கள் தோன்றின. கி.பி. 8ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கொளச்சல், காயல்பட்டினம், கீழக்கரை, தேவிப்பட்டினம், தொண்டி, நாகப்பட்டினம், பழவேற்காடு போன்ற துறை முகப்பட்டினங்களில் முஸ்லிம் குடியிருப்புகள் நிறைந்திருந்தன. கடற்கரைப் பட்டினங்களே யன்றி உள்நாட்டு வணிக நகரங்களிலும் முஸ்லீம்களின் குடியிருப்புகள் தோன்றலாயின[1]. ஆட்சியாளர்களின் ஆசியோடும்,ஆதரவோடும் தங்களது தொழுகைக்காக முஸ்லிம் மக்கள் பள்ளிவாசல்களும் கட்டிக் கொண்டனர். அவற்றில் காணப்படும் கல்வெட்டுகள் இவர்களது தொன்மைச் சிறப்பிற்கு சான்று பகர்கின்றன.

தமிழகத்து முஸ்லிம்களைப்பற்றி தற்போது நமக்குக் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட தொல்லியல் பழமைச் சின்னம், ஒருசிறிய பள்ளிவாசல் வடிவில், சோழர்களின் தலைநகராக விளங்கிய திருச்சி - உறையூரில் காணப்படுகிறது. ஹிஜிரி 116ல் (கி.பி.734) அப்துல்லா பின் முகமது அன்வர் என்பவரால் கட்டப்பட்ட இந்த பள்ளிவாசல் 25' x 25' அளவில் ஒரு சிறிய (கோயில்) மண்டபம் போல் காட்சியளிக்கிறது. இங்குள்ள அரபிக்கல்வெட்டு இச்செய்தியைத் தெரிவிக்கிறது. தமிழகத்திலுள்ள காலத்தால் முற்பட்ட பள்ளிவாசலும் இதுவேயாகும். ஆகவே, ஒரு பள்ளிவாசல் கட்டி மக்கள் கூடித் தொழுகின்ற அளவிற்கு இப்பகுதியிலும் இஸ்லாமிய சமயம் பரவி இருந்தது என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும். சோழரும், பாண்டியரும், பல்லவரும் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த இந்நாளில், திருச்சிப் பகுதி, இரண்டாம் நந்திவர்ம பல்லவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. (கி.பி.710-775) கி.பி.712ல் சிந்துப் பகுதியின் மீது முகமது பின் காசிமின் படையெடுப்பு நிகழ்ந்த போதிலும் அதன் தாக்கம் தென்னாட்டில் பரவவேயில்லை. இப்படி முஸ்லிம்களின் அரசியல்

ஆதிக்கம் ஏதும் இல்லாத நாளில் அப்போது ஆட்சி செய்தவர்களின் ஆதரவுடன் இந்த பள்ளிவாசல் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். அமைதி வழியில் இஸ்லாம் பரவியதற்கு கிடைத்த அங்கீகாரமாக இதைக் கருதலாம். மேலும் அப்போது தமிழகத்தில் நிலவிய சமய நல்லிணக்கத்திற்கு இது ஒரு நல்ல சான்றாகும். இந்த பள்ளிவாசல் இன்னும் இதே நிலையில் திருச்சி கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ளது[2].

திருச்சி - உறையூர் பள்ளிவாசலையும் கல்வெட்டுச் செய்தியையும் நோக்கும்போது, ஏனைய பெரிய வணிக நகரங்களிலும் இதுபோன்ற பள்ளிவாசல்கள் இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இவ்வகையில் மதுரை, கோரிப் பாளையம் அலாவுதீன் பள்ளி-தர்க்காவில் உள்ள வீரப்ப நாயக்கர் (கி.பி.1572-1595) கல்வெட்டு நமது கவனத்தைக் கவருகிறது. இந்த கல்வெட்டினை ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. முன்பு கூன்பாண்டியராசா அளித்திருந்த இந்த பள்ளிவாசலுக்கான நிலக்கொடையினை உறுதி செய்துஆணை வழங்கியுள்ளதை இந்த கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டினை ஆய்வு செய்த கல்வெட்டியல் ஆய்வாளர் ஒருவர் கல்வெட்டு குறிப்பிடும் கூன்பாண்டியன் கி.பி.14ம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த ஒரு பாண்டிய மன்னனாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார்[3]. ஆனால் பாண்டியரின் வம்சாவனி வரலாற்றில் கூன்பாண்டியன் எனப் பெயர் பெற்றவன், மாறவர்மன் அரிகேசரி (கி.பி.642-700) ஒருவனே ஆவான்[4]. ஆகவே, கல்வெட்டு குறிப்பிடும் கூன்பாண்டியன் இம்மன்னனாகவே இருக்க வேண்டும். மதுரையின் அரசியல், வணிக கலாச்சார இயல்புகளின் அடிப்படையில் நோக்கும்போது திருச்சியில் இருந்தது போன்று, கி.பி.7ம் நூற்றாண்டின் இறுதியில் இங்கும் ஒரு பள்ளிவாசல் இருந்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. ஆனால் காலத்தால் முற்பட்ட அந்த பள்ளிவாசல் இன்று நமக்கு கிடைக்கவில்லை இருப்பினும் கோரிப்பாளையம் தர்கா வளாகத்திலுள்ள பழமையான இடிபாடுகளை நோக்கும்போது இப்படியொரு பள்ளிவாசல் இருந்து அழிந்து பட்டதற்கான தடயங்கள் தென்படுகின்றன[5]. மேலும் பாண்டிய நாட்டில் தமிழகத்து முஸ்லீம்களை பற்றிய கல்வெட்டுச் சான்றுகளும் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் நிறை கிடைக்கின்றன.

காயல்பட்டினத்திலுள்ள பழமையான சில பள்ளிவாசல்களில் காணப்படும் கல்வெட்டுகளில் பாண்டிய மன்னர்கள் இவற்றிற்கு அளித்த நிலக்கொடைகள் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. கருப்புடையார் பள்ளிக்கு, வீரபாண்டியனும் (கி.பி.946-966), கடற்கரைப் பள்ளிக்கு, சடைய வர்மன் குலசேகரனும் (கி.பி.1190-1224), காட்டு மகதும் பள்ளிக்கு, முதலாம் மாரவர்மன் சுந்தரபாண்டியனும்

(கி.பி.1216-1244), இறையிலி நிலங்கள் அளித்துள்ள செய்தியை இப்பள்ளிவாசல்களிலுள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன[6]. ராமநாதபுரம் திருப்புல்லாணியிலுள்ள பள்ளிவாசலுக்கு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238-1257) கொடையளித்துள்ளான்[7]. எனவே, இந்நாட்டு வைதிக சமயங்கள் எழுச்சி பெற்றிருந்த காலத்தில் இஸ்லாமிய சமயம் இந்து மன்னர்களின் ஆதரவைப் பெற்று வந்திருக்கிறது என்பதும், தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும், தஞ்சாவூர் நாயக்கர்களும், மராட்டிய மன்னர்களும், அவர்களது காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட பள்ளிவாசல்களுக்கும், தர்காக்களுக்கும் பெருமளவில் கொடையளித்துள்ள செய்திகள் அவர்களது கல்வெட்டுகளிலும் செப்பெடுகளிலும் காணப்படுகின்றன[8].

கி.பி.10ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் முஸ்லிம்கள் சோனகர் எனவும் அவர்களது தொழுகையிடமான பள்ளிவாசல் சோனப்பள்ளி என்றும் வழங்கப்பட்டது. இதுகுறித்து தமிழகம் முழுவதும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன[9]. கம்பராமாயணம், குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்களிலும் இப்பெயர் காணப்படுகிறது. இருப்பினும் இன்று இச்சொல் ராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலேயே வழக்கிலிருக்கிறது. தொண்டி, மண்டபம், வேதாளை, கீழக்கரை, தூத்துக்குடி, காயல்பட்டினம், கடலூர் ஆகிய இடங்களில் இவர்களது குடியிருப்புப் பகுதிகள் சோனகத்தெரு என வழங்கப்படுவது இவர்களது தொன்மைச் சிறப்பைநினைவு படுத்திக்கொண்டிருக்கிறது. இலங்கை வாழ் முஸ்லீம்களை அந்நாட்டு அரசு பதிவேடுகள் கோனர்கள் என்றே இன்னும் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கதாகும்[10].

சோனகர் என்ற சொல்லோடு துலுக்கர் என்ற சொல்லும் வழக்கிலிருந்ததை 10-11ம் நூற்றாண்டு கல்வெட்டுகளிலிருந்தும், பிற்கால செப்பேடுகளிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிகிறது. தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் இன்றும் முஸ்லீம்களைத் துலுக்கன் என்றும் அவர்களது பெண்டுகள் துலுக்கச்சி என்றும் அழைக்கும் பெருவழக்கு நடைமுறையில் உள்ளது. அவர்களது தொன்மை தொடருகிறது என்பதற்குச் சான்றாக விளங்குகிறது[11].

தமிழகத்து முஸ்லீம்கள் மரக்காயர், லெப்பை என்றும் அழைக்கப்படுகின்றனர். இப்பெயர்கள் குறித்து காலத்தால் முற்பட்ட தொல்லியல் சான்றுகள் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் கி.பி.16ம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியரின் வணிகப்பதிவேடுகளில் இச்சொற்கள் பெருமளவில்

கையாளப்படுகின்றன. மேலும் கடல்கடந்த நாடுகளுடன் வாணிபம் செய்து வந்த தமிழகத்து முஸ்லீம்கள் சோழியர் என்றும் அழைக்கப்பட்டனர்[12].

தொடக்க காலத்தில் இங்கு எழுப்பப்பட்ட பள்ளிவாசல்கள் அப்போது இங்கு நடைமுறையிலிருந்த திராவிடக் கட்டடக்கலைப் பாணியில் ஒரு கோயில் மண்டபம் போன்று கட்டப்பட்டன. மேற்குச் சுவரின் உள்பகுதியில் (இது தொழுகும் திசை) ஒருமாடம் மட்டும் இருக்கும். இது ஒன்றே பள்ளிவாசலைக் குறிக்கும் அடையாளமாக விளங்கியது. உருவங்கள் அனைத்தும் தவிர்க்கப்பட்டன. கோயில்களைக் கட்டிய அதே கல் தச்சர்கள்தான் இந்த பள்ளிவாசல்களையும் கட்டினர். அப்போதைய முஸ்லீம்களுக்கும் இஸ்லாமியக் கட்டடக் கலையின் கூறுகள் எதுவும் தெரியாது. ஆகவே, உருவங்களைத் தவிர்த்து பள்ளிவாசல்களைக் கட்டிக் கொண்டனர். மிகவும் எளிமையான அமைப்பிலிருந்த இவை கல்லுப்பள்ளிகள் எனப் பெயர் பெற்றன. காலத்தால் முற்பட்ட கட்டுமானக் கோயில்கள் கற்றளி என அழைக்கப்பட்டதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம். இத்தகைய பள்ளிகள் தமிழகம் முழுவதும் இருந்த முஸ்லீம் குடியிருப்புகளில் நிறைய கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவையெல்லாம் அழிந்துபட்டனபோலும், நாம் முன்பு குறிப்பிட்ட திருச்சி- உறையூர் கல்லுப்பள்ளியும், காயல் பட்டினத்திலுள்ள பல பழைய பள்ளி வாசல்களும், வாலிகண்டபுரத்தில் உள்ள பள்ளியும் இவற்றிற்குச் சான்று பகர்க்கின்றன[13].

வில்போல் வளைந்த அமைப்பினைக் கொண்ட (*Arch*) முகப்புத் தோற்றமுடைய நுழைவுவாயிலும், குவிந்த, குமிழ் வடிவமுள்ள கூரையும் (*Dome*) வண்டிக்கூறை போன்ற கூரையும் (*Vaulted roof*) இஸ்லாமியக் கட்டடக் கலையின் தனிச்சிறப்புகளாகும். இத்தகைய கலைப்பாணியைக் கொண்ட கட்டடங்கள் வட இந்தியாவில் கி.பி.12ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டுவிட்டன. கட்டடக்கலையில் ஏற்பட்டட இந்த புரட்சி தமிழகத்திற்கு எட்டவில்லை. கி.பி.14ம் நூற்றாண்டில், சிறிது காலம் மதுரையில் நடைபெற்ற சுல்தான்களின் ஆட்சிக் காலத்திலேயே இஸ்லாமிய கட்டடக் கலையின் கூறுகள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. மதுரை கோரிப்பாளையத்திலுள்ள மதுரை சுல்தான் அலாவுதீன் உத்தௌஜியின் (கி.பி.1338-1339) கல்லறையில் தான் முதன் முதலில் குவிந்த வடிவமுள்ள கூறை (Dome) கட்டப்பட்டது. ஆனால் ஆதிட்டானம், கால், கம்பம் போன்ற பகுதிகள் முழுவதும் திராவிடக் கட்டடக் கலை பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு அறிமுகமான இக்கலைப்பாணி தமிழகத்தின் ஏனை பகுதிகளுக்கு பரவவில்லை[14].

கி.பி.16ம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட பீஜப்பூர் சுல்த்தான்களின் ஆட்சியிலும், பின்னர் தொடர்ந்து வந்த ஆர்க்காடு நவாபுகளின் காலத்திலும் வளைந்த முகப்பு வாயில்களும், குவிந்த கூறைகளும், வெளிப்பகுதி மூலைகளில் உயர்ந்த தூண்களும் (மினார்) கட்டும் பழக்கம் மிகுந்தது. இந்த கட்டு மானங்களிலும் கூட திராவிடக் கட்டடக்கலையின் கூறுபாடுகள் நிறைந்திருந்தன. அதிட்டானம், பலகை, அரைத்தூண்கள், புஷ்ப போதிகையுடன் கூடிய தூண்கள் என முழுவதும் திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட்டு மிக அழகான இஸ்லாமிய பழமைச் சின்னமாக விளக்கி வரும் கீழக்கரை பள்ளிவாசலை இவ்வகையில் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்[15].

இஸ்லாமிய கட்டடக்கலைப்பாணி அக்கால மன்னர்களின் கோட்டைக் கொத்தளங்களிலும், அரண்மனைகளிலும் பொது உபயோகக் கட்டடங்களிலும் தாரளமாகப் பின்பற்றப்பட்டது. மதுரை, திருமலைநாயக்கர் மகால் நல்ல எடுத்துக்காட்டாகும். பிற்காலத்தில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் இத்தகைய இஸ்லாமிய கலைப்பாணிக் கட்டடங்கள் நிறைய தோன்றின. சென்னையிலுள்ள பல்கலைக்கழகக் கட்டடங்கள் உயர்நீதிமன்ற கட்டடங்கள், தமிழகம் முழுவதுமுள்ள ஜமீன்தார்களின் அரண்மனைகள் ஆகியவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

எனவே, காலத்தால் முற்பட்ட முஸ்லீம்களின் கட்டுமானங்கள், கோயில்களைப் போன்று, திராவிடக் கட்டடக் கலைப் பாணியிலேயே கட்டப்பட்டன. கி.பி.14ம் நூற்றாண்டு தொடங்கி இஸ்லாமியக் கட்டடக்கலை இங்கு அறிமுகமானது. இஸ்லாமிய கலைப்பாணியுடன் திராவிடக் கட்டடக் கலை இணைந்து புதிய பாணி கட்டடங்கள் உருவாகி கலாச்சாரங்கள் சமயத்தையும் கடந்து சங்கமித்து நிற்பதற்குச் சான்றாக விளங்கி வருகின்றன. இந்தப் புதிய கலைப்பாணியினை இந்திய திராவிட இஸ்லாமிய கலைப்பாணி *(INDO-DRAVIDIAN-ISLAMIC ARCHITECTURE)* எனக் குறிப்பிடலாம்.

அடிக்குறிப்புகள்

1. ம.மு. உவைஸ், பி.மு.அஜ்மல்கான், இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகு-1, மதுரை 1986 பக்கம் 11; எஸ்.எம். கமால், முஸ்லீம்களும், தமிழகமும், சென்னை, 1990, பக்கம் 15-16
2. J. Raja Mohamed, *Islamic Architecture in Tamilnadu*, Project report submitted to the Nehru Trust for Indian Collections at Victoria and Albert Museum London, 1994-95, P 37 (Here in after J. Raja Mohamed *Islamic Architecture*)
3. வெ. வேதாச்சாலம் "கோரிப்பாளையம் தர்கா கல்வெட்டு", ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டுமலர், கீழக்கரை, 1990 பக்கம் 208-211.
4. கே.வி.ராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை 1977-பக்கம் 211.

5. J.RajaMohamed, *Islamic Architecture*
6. ஆர்.எ. அப்துல்லத்தீபு, காயல்பட்டினம், பாயல்பட்டினம் 1993 பக்கம் 125-135.
7. A.R.E. 402/1903
8. எஸ்.எம். கமால், சேதுபதி மன்னர் செப்பேடுகள் ராமநாதபுரம் 1992; செ. ராசு, மராட்டிய மன்னர் செப்பேடுகள்-50 தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1983; செ.இராசு தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தமிழ் பல்கலைக்கழகம், 1987.
9. அப்துல்லத்தீபு, மேலது, பக்கம்125, 128, 133, 144; இரா.நாகசாமி தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், சென்னை, எஸ்.எம்.கமால், முஸ்லீம்களும், தமிழகமும் பக்கம் 32-33 S.I.I. II-93; J.Raja Mohamed *Maritime Activities* PP-41-44
10. J. Raja Mohamed *Maritime Activities* P 44.
11. தென்னிந்திய கோயில் கல்வெட்டுகள் தொகுதி-1; 556/1904, 442/1906, 169/1910, 367/1912, 414/1913 J.Raja Mohamed, *Maritime Activities* P 45-46
12. J. Raja Mohamed *Maritime Activities* PP 48-505
13. J. Raja Mohamed, *Islamic Architecture*
14. Ibid
15. அ. அப்துல்மஜீது "தமிழகக் கட்டிடக் கலை மரபில் இஸ்லாமியப் பள்ளிவாசல்", ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு கீழக்கரை 1990- பக்கம் 178-179.

41. ஆர்க்காட்டுப் பகுதியில் இசுலாமியர் கலைச் சின்னங்கள்

து.துளசிராமன், ஆர்க்காடு.

இசுலாமியர்கள் இந்தியாவின் மீது மேற்கொண்ட படையெடுப்புகளால் இந்திய பண்பாட்டிலும், மக்கள் வாழ்க்கை முறையிலும் மட்டுமல்லாது, அவர்கள் தொன்று தொட்டுப் பின்பற்றி வந்த கலைத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. குறிப்பாகக் கட்டடக் கலையில் இந்திய இசுலாமியக் கூறுகள் இணைந்த ஒரு புதிய கலைப் பாணியே உருவாகியது.

கட்டடங்களின் வாயில்களிலும், சாளரங்களிலும் தூண்கள் மற்றும் சுவர்களுக்கு இடையிலுள்ள பகுதிகளிலும் அழகான வளைவுகளை அமைப்பதுதான் இசுலாமியரின் முக்கிய கட்டடக் கலைப்பணியாகும். இசுலாமியர்கள் இத்தகைய வளைவு (Arches) அமைப்புகளை இந்தியக் கட்டடக் கலையில் புகுத்தினார்கள். இதனால் வாயில் நிலைக்கல் (Lintal), சுவரின் தாங்கு கல் (Carbel) போன்றவை வளைவுகள் மற்றும் கவிகை மாடங்களாக (Domes) மாற்றம் பெற்றன. பொதுவாக எளிய கட்டப்புடைய திறந்த கூடங்கள், உயரமான தூபிகள், வில்வடிவ நுழைவாயில்கள் போன்றவை இந்திய-இசுலாமிய கட்டிடக் கலையின் முக்கிய கூறுகளாகும்.

கி.பி.18-19ஆம் நூற்றாண்டுகளில் ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த நவாபுகள் ஆர்க்காட்டுப் பகுதியில் இந்திய-இசுலாமிய கலைப்பாணியில் பல கட்டிடங் களை எழுப்பினர். இப்பகுதியின் இசுலாமியப் பாணிக் கட்டிடங்களை[1]. வாழ்விடக் கட்டிடங்கள் (Secular Architecture)[2]. வழிபாட்டிடக் கட்டிடங்கள் (Religious Architecture) என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

வாழ்வியற் கட்டடங்கள்

ஆர்க்காட்டு நவாபுகள் எழுப்பிய அரண்மனைகளும், கோட்டைகளும் வாழ்வியற் கட்டடங்களில் அடங்கும், நவாபுகள் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை நுழைவாயில்கள் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றன. அரண்மனைகள் இரண்டு அல்லது மூன்று தளங்களைக் கொண்டு விளங்குகின்றன, இவற்றின் வாயில்களும் சாளரங்களும் இசுலாமிய வளைவு அமைப்புடன் விளங்குவது சிறப்பானதாகும். இக்கட்டடங்களின் மேற்பகுதியில் அழகிய கவிகை மாடங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மீது கவின்மிகு வண்ணங்கள் தீட்டப்பட்டன. இத்தகைய இசுலாமிய கட்டடப்பாணி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தது.

இந்துக்கள் தாங்கள் எழுப்பிய கட்டடங்களில் இயற்கையோடு இயைந்த வகையில் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றைச் சிற்பங்களாகச் செதுக்கியும், ஓவியங்களாக வரைந்தும் அழகுபடுத்தினார்கள். ஆனால் இசுலாமியர் தம் கட்டடங்களில் இயற்கைக்கு மாறுபட்ட விசித்திரமான அழகிய பூ வேலைப்பாடுகளையும் செடி கொடிகளைப் போன்றும், அலங்காரக் கோடுகளைப் போன்றும் பல வண்ணங்களில் ஓவியங்களைத் தீட்டினர். சாளரங்கள், (சன்னல்கள்), வழவழப்பான சதுர கற்களில் அழகிய குறுக்குத் துளைகள் சதுரத் துளைகள் வடிக்கப்பட்டு பொருத்தப்பட்டன. அறைகளில் பொருட்கள் வைப்பதற்குரிய அலங்கார மாடங்கள் சுதையால் கவினுறச் செய்யப்பட்டன. நவாப் சாதத்துல்லாகான் காலத்தில் ஆர்க்காட்டில் கட்டப்பட்ட கோட்டைப் பகுதிகளும், வேலூருக்கு அடுத்து அப்துல்லா புரத்திலுள்ள அப்துல் மஹாலும், கரிகிரி கோட்டையும், மகி மண்டலம் மலைக் கோட்டையும் நவாபுகளின் வாழ்வியல் கட்டடங்களுக்கு சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

ஆர்க்காட்டுக் கோட்டை : நவாப் சாதத்துல்லாகான் கி.பி.18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆர்க்காட்டில் எழுப்பிய கோட்டைப் பகுதிகள் பழமையானவையாகும். இக்கோட்டைப் பகுதிகளின் பெரும்பகுதி தற்போது அழிந்து விட்டது. தில்லிகேட், அதனையொட்டியுள்ள மதில் சுவர்ப் பகுதிகள், கோட்டைப் பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் மகளிர் உடைகள் மாற்றிக் கொள்வதற்கேற்ற அறைகள் போன்றவையே தற்பொழுது எஞ்சியுள்ளன. பாலாற்றங் கரையில் அமைந்துள்ள தில்லிகேட் என்னும் மிக உயர்ந்த நுழைவாயிலே அக்காலக் கோட்டையின் முக்கிய நுழைவாயிலாகும். கி.பி.1715-இல் நவாப்புகளான முகமதலிக்கும், சந்தா சாகிப்புக்கும் ஆட்சி உரிமைப் போர் மூண்டது. இராபர்ட் கிளைவின் தலைமையில் முகமதலிக்குச் சார்பாகக் களமிறங்கிய ஆங்கிலப்படை சந்தா சாகிப்பைத் தோற்கடித்து முகமதலிக்கு அரசுரிமையைப் பெற்றுத் தந்தது. இந்திய அரசியலில் ஆங்கில ஆட்சிக்கிட்ட முதல் வித்தாக இவ்வெற்றி கருதப்பட்டது. இந்தியத் தலைநகரான தில்லியைக் கைப்பற்றும் முதல் படியாகக் கருதி இராபர்ட் கிளைவ் இந்த நுழைவாயிலுக்கு ''இந்தியா கேட்'' எனப் பெயரிட்டான். இந்த நுழைவாயில் இரு தளங்களைக் கொண்டுள்ளது. கீழ்தள நுழைவாயில் இசுலாமிய வளைவுப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இதன் இருபுறமும் காவலர்கள் தங்குவதற்கான அறைகள் உள்ளன. நுழை வாயிலுக்கு வெளிப்புறம் ஆற்றை ஒட்டியுள்ள பகுதியிலும் சிறுசிறு அறைகள் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. வாயிலின் மேல்தளத்தில் ஓர் அறை உள்ளது. இது எதிரியின் படை அசைவுகளைப் பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறையில் தான் இராபர்ட் கிளைவ் தங்கியிருந்தார் என செவி வழிச் செய்தி கூறுகிறது.

அப்துல்லாபுரம் அரண்மனை : வேலூருக்கு அருகில் அவரது பெயரில் அப்துல்லாபுரம் என்னும் ஊரை உருவாக்கி அங்கே ஓர் அரண்மனையைக் கட்டி அதில் ஓய்வெடுத்தார். வேலூர்- பெங்களூர் நெடுஞ்சாலையில் அப்துல்லாபுரம் அரண்மனை சிதைந்த நிலையில் காணப்படுகிறது. இரண்டு அடுக்குகள் கொண்ட இதன் முகப்புப் பகுதி கிழக்கு நோக்கி உள்ளது. செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டு கட்டப்பட்டுள்ள இதன் முகப்புப் பகுதியிலும், உள்பகுதியலும் சுதையால் மலர் அலங்காரங்கள் செய்யப் பெற்று அவை பல வண்ணங்களில் அழகூட்டப்பெற்றுள்ளன. வாயில்கள் இசுலாமிய கலைப்பாணியான வில்வடிவ வளைவுகளைக் கொண்டுள்ளன. கீழ்ப்புறம் இரு பக்கங்களில் மும்மூன்று நுழைவாயில்களும், நடுவில் ஒரு பெரிய நுழைவாயிலும் உள்ளன. முதல் மாடியின் மேலே உள்ள மொட்டை மாடியில் மழைநீர் வெளியேறுவதற்கு ஏதுவாக கருங்கல்லாலான குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. மாடியின் முக்கிய கூடச் சுவர்களில் சிறுசிறு பெட்டிகள் போன்று அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை மிகவும் அழகாகவும், கண்ணைக் கவரும் வகையிலும் அமைந்துள்ளன. இந்த அரண்மனையின் இடப்புறம் பக்கவாட்டில் குதிரைகள் மற்றும் யானைகள் கட்டுவதற்கான பன்னிரண்டு அறைகள் கொண்ட லாயம் உள்ளது. இந்த லாயத்தின் நுழைவாயில்களும் வில்வடிவ வளைவு அமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளன. இதன் பின்புறம் கருங்கற் படிகளைக் கொண்ட சதுர வடிவக் குளம் ஒன்றுள்ளது.

ஆர்க்காட்டு நவாபுகள் கருநாடகத்தை ஆட்சி செய்தபோது பல பெரும் போர்களில் ஈடுபட வேண்டியதாயிற்று. இதற்காக இவர்கள் கர்நாடகத்தில் 84 இடங்களில் கோட்டைகளை அமைத்து, அவற்றில் நிலை படைகளை வைத்திருந்தார்கள். இக்கோட்டைகளும் நவாபுகள் காலக் கட்டடக் கலையைப் பற்றி அறிந்துக் கொள்ள சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றுள் கரிகிரிக் கோட்டையும் மகிமண்டலம் கோட்டையும் இன்றளவும் பழமை குன்றாமல் ஓரளவு நிலைத்துள்ளன.

கரிகிரிக் கோட்டை: கரிகிரி என்னும் ஊர் வேலூரிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் வள்ளி மலைக்குச் செல்லும் சாலையில் உள்ளது. இங்குள்ள மலைமீது கரிகிருஷ்ண பெருமாள் கோயில் இருப்பதால் இவ்வூர் கரிகிரி என அழைக்கப்படுகிறது. இவ்வூருக்கு தென்கிழக்கில் கோட்டை ஒன்று உள்ளது. இதன் மதில் சுவர் சதுரவடிவில் கட்டப்பட்டுள்ளது. இதன் நான்கு மூலைகளிலும் முனைப்பான முகப்புடைய வட்ட வடிவ மேடைகள் (Bastions) அமைக்கப் பட்டுள்ளன. கோட்டையின் நுழைவாயில் கிழக்குப் பகுதியில் உள்ளது.

இதன் மதில் சுவர் சுமார் 20அடி உயரத்திற்குக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதன் அகலம் 4 அடி ஆகும். இம்மதில் சுவரின் உட்புறம் கருங்கற்களை இணைப்பதற்கு களிமண்ணும் மேற்புறம் சுதையும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. கோட்டையின் கிழக்குப்புறம் காணப்படும் நுழைவாயில் இசுலாமிய கலைப்பாணியில் அரை வட்ட வளைவான மேற்பகுதியைக் கொண்டுள்ளது. இருபத்தைந்து அடி உயரமுள்ள இந்த நுழைவாயில் செங்கல்லும் சுதையும் கொண்டு மலர் அலங்காரங்களுடனும் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. கோட்டைக்குள் ஒரு மசூதியும் ஒரு மக்பாராவும் உள்ளன. கிழக்கு நோக்கியுள்ள மசூதியின் வழிபாட்டு மண்டபம் இரண்டு பெரிய சதுர வடிவத் தூண்களைக் கொண்டுள்ளது. மக்பாரா ஆர்க்காட்டு நவாபுகள் காலத்தில் கரிகிரியின் கில்லேதாராக விளங்கிய ரசீத்கான் என்பவரின் கல்லறையாகும். மசூதியின் முன்பு இரண்டு கல்லறைகள் உள்ளன. இதில் பெரியதாக காணப்படும் கல்லறை இந்த மசூதியில் வாழ்ந்து இறை மார்க்கப் பணியாற்றிய ஞானி ஒருவரின் கல்லறையாகும். இவர் பெயராலேயே இம்மசூதி தற்போது ''பேலம் ஷா அவுலியா மசூதி'' என வழங்கப்படுகிறது. இக்கோட்டையின் மேற்குப் புறத்தில் இரண்டடுக்கு அரண்மனை ஒன்று மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. அரண்மனையின் பிற பகுதிகள் இருந்து அழிந்து போனதற்கான அடிச்சுவடுகள் காணப்படுகின்றன. இக்கோட்டைக்குள் இரண்டு பெரிய ஆழமான கிணறுகளும் உள்ளன. கோட்டையின் மதில் சுவருக்கு வெளியே, வடகிழக்குப் பகுதியில் ஒரு நீச்சல் குளமும், அதனைச் சுற்றிப் பெண்கள் உடை மாற்றிக் கொள்வதற்கான அலங்காரம் செய்யப்பட்ட நான்கு அறைகளும் உள்ளன.

மகிமண்டலம் கோட்டை : மகிமண்டலம் எனப்படும் கிராமம் ஒரு பெரிய மலையின் அடிவாரத்தில் உள்ளது. அடிவாரத்திலிருந்து பார்த்தாலே மலை மீது கட்டப்பட்டிருக்கும் கோட்டையின் மிகப்பெரிய மதில் சுவர்கள் தெளிவாகத் தெரிகின்றன. இக்கோட்டைக்குள் நுழைவதற்கு ஒன்றன்பின் ஒன்றாக வளைவாக செல்லும் மூன்று நுழைவாயில்கள் உள்ளன. இவை கருங்கற்களால் மண்டபம் போன்று கட்டப்பட்டுள்ளன. இதில் காவல் வீரர்கள் தங்குவதற்கு ஏற்றவகையில் அறைகளும், திண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கடந்து உள்ளே சென்றால் ஒரு சிறிய அரண்மனை இருந்ததற்கான அடிச்சுவர்கள் காணப்படுகின்றன. இதனையடுத்து ஓர் அழகிய தாமரைத் தடாகம் காணப்படுகிறது. இதனை கடந்து சென்றால் வரிசையாகக் கட்டடங்கள் இருந்ததற்கான அடிச்சுவர்ப் பகுதிகள் காணப்படுகின்றன. இதற்குத் தென்புறத்தில் இரண்டு தானியக் களஞ்சியங்கள் உள்ளன.

வழிபாட்டுக் கட்டடங்கள்:

இசுலாமியர்களின் வழிபாட்டுக் கட்டடங்களை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவை: 1.மசூதி (அ) பள்ளிவாசல் 2.தர்கா 3.ஈத்கா 4.மக்பாரா(கல்லறைகள்) 5.மதராசா.

மசூதிகள் : ஆர்க்காட்டில் உள்ள முக்கியமான மசூதிகள் : கோட்டையில் நவாப் தாவுத்கானால் கட்டப்பட்ட சிறிய மசூதி, கி.பி.1728ஆம் ஆண்டில் நவாப் சாதத்துல்லாகானால் கட்டப்பட்ட திப்பு அவுலியா மசூதி, கி.பி.18ஆம் நூற்றாண்டில் நவாப் சாதத்துல்லாகானால் கட்டப்பட்ட ஜாமி மசூதி, கி.பி.1755-ல் கட்டப்பட்ட பக்கீர் அகமது மசூதி ஆகியவையாகும். வேலூரில் உள்ள முக்கியமான மசூதிகள் : கி.பி.1842-ல் புனித நகரங்களான மக்கா, மதீனா சென்று வந்த ஒரு புனித பயணியால் கட்டப்பட்ட காதிர்ஷா மசூதி, கி.பி.1735-ல் ஹம்தா என்பரால் கட்டப்பட்ட சந்தாஷா மசூதி, கி.பி.1737-ல் கட்டப்பட்ட ஜாமி மசூதி ஆகியவையாகும்.

தர்காக்கள் : இசுலாமிய இறை ஞானிகள் (ஒலியுல்லாக்கள்) அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் தர்கா எனப்படும். இறந்தவர்களை அடக்கம் செய்த கல்லறைகள் மீது சதுர வடிவில் அறை எழுப்பி அதன் மீது அழகிய கவிகை மாடமும், தூபிகளும் அமைத்தனர். இத்தகைய தர்காக்களில் 'பாத்தியா' ஓதப்படும். ஆர்க்காட்டில் திப்பு அவுலியா தர்கா கி.பி. 1729, ஆசாமத்துல்லாஷா காதிரி தர்கா கி.பி. 1756, பர்ஹன்ஷா தர்கா கி.பி. 1774, கரிமுல்லாஷா காதிரி தர்கா கி.பி. 1842, யாபிர் மக்தம் தர்கா கி.பி. 1806, ஹசரத்அமின் பிரான் சிஸ்தி தர்கா கி.பி. 1736, சையத் உசேன்ஷா தர்கா கி.பி. 1731 ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மக்பாரா : நல்ல செய்கைகள் மூலம் சிறப்புப் பெற்ற பெரியவர்கள், நவாபுகள் போன்ற அரசர்களின் கல்லறைகளுக்கு 'மக்பாரா' என்று பெயர். இறந்தவரின் உடல் மக்பாரா எனப்படும் சுரங்க அறையில் அடக்கம் செய்யப்படும். இந்த உண்மையான கல்லறைக்கு 'கபர்' என்று பெயர். இதன் மீது உயர்ந்த மேடை ஒன்று அமைக்கப்படும். இம்மேடையின் நடுவில் சுரங்க அறையில் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு மேல் 'ஜரிஹா' எனப்படும் கல்லறை போன்ற நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கும். இதன் மீது உயர்ந்த அறை ஒன்றை எழுப்பி அதன் நடுவில் கவிகை மாடமும் நாற்புறமும் தூபிகளும் நிறுவப்பட்டிருக்கும். தமிழகத்தில் சில கல்லறைகள் மீதுதான் கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மற்ற கல்லறைகள் யாவும் கட்டடம் இல்லாமலேயே உள்ளன. இவற்றுள் மிகச் சிறப்பானது ஆர்க்காட்டில் உள்ள நவாப் சாதத் உல்லாக்களின் கல்லறையாகும். கி.பி.1732-ல் இறந்த நவாப் சாதத்துல்லாகானின் கல்லறை ஜாமி மசூதி அருகே கட்டப்பட்டுள்ளது. இக்கல்லறையும், இதன் மீது எழுப்பப்பட்டுள்ள

கட்டிடமும் கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பச்சை நிறக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. எனவே தான் இது ''பச்சைக்கல் மசூதி'' என அழைக்கப்படுகிறது.

மதராசா : இசுலாமிய இறைக்கல்வி போதிக்கும் இடம் மதராசா என அழைக்கப்படும். ஆர்க்காடு நவாபுகள் காலத்தில் இத்தகைய மதராசாக்கள் பல இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. இங்கு பாரசீகம், உருது, அரபி போன்ற மொழிகள் போதிக்கப் பட்டன. வேலூரிலுள்ள பிஜப்பூர் சுல்தான்களின் வழிவந்தோர் ஏற்படுத்திய மதராஸா-இ-லத்திபியா மிகவும் முக்கியமான தாகும். இக்கட்டிடம் சையத்ஷா அப்துல் லத்தீப் காதிரி என்பவரால் கி.பி.18ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டுள்ளது.

42. உடையார் கோயில் கல்வெட்டில் சுதைச் சிற்பம்

கோ. தில்லை கோவிந்தராஜன், தஞ்சாவூர்

தஞ்சையிலிருந்து திருவாரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அம்மாப்பேட்டைக்கு அருகில் உடையார் கோயில் என்ற ஊர் அமைந்துள்ளது அவ்வூரில் கரவந்தீஸ்வரர் கோயில் சோழர் கலைப் பாணியில் அமைந்துள்ளது. இக்கோயிலில் காணும் கல்லெழுத்துகளில் இறைவனின் பெயர் ''நாயனார் திருக்கிளா உடையார் உலகுடைய பெருமாள்'' என்று குறிக்கப்படுகிறது. இக்கல்லெழுத்துகளில் காணும் திருக்கிளா உடையார் கோயில் என்பதுதான் தற்போது உடையார் கோயில் என்று வழங்கப்படுகின்றது.

இவ்வுடையார் கோயில் பகுதியினை களஆய்வு செய்த போது அய்யனார் கோயில் சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வய்யனார் சிற்பம் தேவியருடன் நாய் அருகிலிருக்க சுதை உருவில் அமைந்துள்ளது சிறப்புடையதாகும். மேலும் இக்கோயிலில் உள்ள பூத கணங்கள் இரண்டும் பூம்புகார் சம்பாதியம்மன் கோயில் வாயிலில் காணும் பூத கணங்களுக்கு நிகராக அமைந்திருப்பது காணமுடிகிறது. இச்சுதை சிற்பங்களின் மேல் அழகிய வண்ணங்கள் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றன.

இவ்வூர் மூன்றாம் குலோத்துங்கனின் 18வது ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்தில்[1] நாயனார் திருகிளா உடையார் உலகுடைய பெருமாளுக்கு நன்றாய் பூஜை கொண்டருளுகிற நாயனார் சுதையாலெ பீடமாய் இருந்தமையால் என்றும் ஆண்டுதோறும் ஜீர்ணோத்தாரம் செய்ய வேண்டியதால் மணலூர் வாதுலன் ஆராவமது மாதெவரான விக்கிரம சோழப் பிரம்மாராயரிடம் சைவாசாரியம் செய்யும் சதாசிவ பட்டர் வேண்டுகோளுக்கிணங்க கணித சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ கணிதாதிராயரும் இட்ட நாளில் விக்கிரம சோழ பிரம்மராயரிடமிருந்து ஆயிரங்காசு (1000) கொண்டு நொடியூர் பட்டணத்திலுள்ள கிள்ளியூரிலிருந்து சிலை கொண்டு வந்து சாத்திர தர்மப்படி சிலை அமைக்கையில் ஆசாரியர்கள் நிலை நிறுத்தாதினால் தச்சாசாரியும் நித்த வினோத வளநாட்டு கிழாற் கூற்றத்து.... வரம்பூர் உடையான் தேவனான உதய திவாகர ஆசாரியன்'' அவனுக்கு நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கின்றது. இன்னிலம் புத்தத்தூர் ஆன திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் கொடுக்கப்பட்டதும் குறிக்கப்படுகின்றது.

இக்கல்லெழுத்துகளில் காணும் நொடியூர் பட்டிணம் என்பது தற்பொழுது புதுக்கோட்டைக்கருகிலுள்ளது. அதன் அருகில் கிள்ளியூர் என்பது கிள்ளுக்கோட்டை என்று அழைக்கப்படுகின்றது. இவ்வூரிலிருந்துதான் இச்சிலை கொண்டு வந்ததாக இருக்கலாம். மேலும் மேற்சொன்ன கல்லெழுத்தில் கூறப்படும் திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்பது திருபுவனம் என்று இன்றும் இப்பகுதியில் வழங்கி வருகின்றது. சோழர் காலத்தில் இதுபோன்ற சுதையினால் கோயிலிருந்தன என்பதை நாம் அறிந்து கொள்ள இக்கல்லெழுத்தே சான்றாக விளங்குகின்றது.

சுதை உருவங்களில் காணும் பிற திருவுருவங்கள்

திருவீழிமிழலையில் அமைந்துள்ள இறைவன் ''மாப்பிள்ளை சுவாமி'' எனப்படும் கலியாணசுந்தரர் உமையம்மையத் தழுவிய நிலையில் விடையினருகில் மணவாளராய்க் காட்சி தருகின்றார். இச்சிற்பங்கள் சுதையினால் செய்யப்பட்டவையாக அமைந்துள்ளது.

இதுபோல் தஞ்சைக்கருகில் அமைந்துள்ள கோடியம்மன் என்னும் எல்லைத் தெய்வமும் சுதையினால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுக் காணப்படுகின்றது. சமயபுரம் மாரியம்மன் சுதையால் அமைந்ததே.

சோழர் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரத்து அம்மன் கோயில் வெளிபுற மாடங்களில் அமைந்துள்ள சில கருங்கற் சிலைகளின் மீது சுதை சாந்து பூசி அதன் மேல் வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ள காட்சியினை காண முடிகின்றது.

சீர்காழி தாலுக்கா மகேந்திரப் பள்ளி என்னும் பாடல் பெற்ற ஸ்தலத்திற்கு அருகிலுள்ள வெட்டத்தாங்கரை என்ற பகுதியில் அமைந்துள்ள பொன்னியம்மன் கோயில் உடைந்த நிலையிலுள்ளது. இச்சிற்பம் செங்கற்களாலும், ஓடுகள், மூங்கிற் குச்சிகள் கொண்டு சுதை வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சிற்பத்தில் இடுப்பின் கீழ்பகுதி மட்டுமே தற்பொழுது எஞ்சியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. S.I.I. Vol. VII No. 1041, ARE 408 / 1902
2. திருஞான சம்பந்தர் திருபதிகங்கள் இரண்டாம் திருமுறை பக்கம் 81 பாடல் எண் : 9
3. தமிழகக் கோயிற்கலைகள் : டாக்டர் இரா. நாகசாமி மா. சந்திரமூர்த்தி.

43. தஞ்சை அரண்மனை சுதை உருவங்கள்

இர.ஜெயராமன், தஞ்சாவூர்.

கி.பி.15ம் நூற்றாண்டிற்குப் பின்வந்த தஞ்சை நாயக்கர், மராட்டியர்களின் காலத்தில் அரண்மனைகளில் சுதை உருவங்கள் அதிக அளவில் இடம்பெற்றன. அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் பெரும்பாலும் சுதையால் செய்யப்பட்ட தெய்வ உருவங்களே அதிகம் காணப்படுகின்றன. சுதை உருவங்கள் செய்ய எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களே போதுமானது. செங்கல், மரம், மூங்கில், நார் போன்ற பொருட்களையே பயன்படுத்தினர். தஞ்சாவூரில் நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தில் அரண்மனைப் பகுதிகளில் அதிக அளவில் இடம் பெற்றுள்ள சுதைச் சிற்பங்களைப் பற்றி இங்கே காணலாம்.

நாயக்கர் தர்பார் மண்டபம்

தற்போதுள்ள தஞ்சைக் கலைக்கூடத்தின் உள்ளே திறந்தவெளி முற்றத்தின் மேல் பகுதியில் இப்பகுதி அமைந்துள்ளது. இம்மண்டபம் விசயரகுநாத நாயக்கரால் கட்டப்பட்டது. இது இராமசௌதம் என்றும் இராமன் மாளிகை என்றும் அழைக்கப்பட்டது. கிழக்கு நோக்கி உள்ள இம்மண்டபத்தின் உட்பகுதியில் மேற்குச் சுவரில் சுதையினால் செய்யப்பட்ட் இராமர் பட்டாபிசேகம் உருவம் இடம் பெற்றுள்ளது. இதில் வேலைப்பாடு மிகுந்த சிம்மாசனத்தில் இராமபிரான் அமர்ந்த நிலையிலும், இடதுபக்கம் சீதை அமர்ந்தும் உள்ளனர். தேவியின் அருகில் அனுமன் உருவம் கம்பீரமாக இரு கைகளைக் கூப்பிய நிலையில் வருபவர்களை வரவேற்பது போன்று அமைந்துள்ளது. மண்டபத்தில் தரை சலவைக் கற்களால் அமைக்கப்பட்டிருந்ததால் இந்த பட்டாபிசேக காட்சி உருவம் பிரதிபலித்ததாகக் கூறப்படுகிறது.

வளைவுகளின் மேற்பகுதியில் யானை முகங்கள் நான்கு இடங்களில் காட்டப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து இசைக்கருவி வாசிப்பவர்களும் நடனமாடும் மங்கையர்களும் வரிசையாக உள்ளனர். நடன மங்கையர்கள் பலவிதமான பாவங்களைக் காட்டுவது போன்று உருவங்கள் செய்யப்பட்டுள்ளன. வாழை தென்னை போன்ற மரங்கள் நிறைந்த சோலையும், அதில் குரங்குகள் தாவுவது போன்றும் பறவைகள் பறப்பது போன்றும் சுதை உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

மராட்டா தர்பார் மண்டபம்

இராம சௌதம் என்றழைக்கப்பட்ட நாயக்கர் அரண்மனை தங்களுக்கு ராசியில்லை என்று கருதி மராட்டிய மன்னர் ஏகோஜியின் மகன் சாஹஜி (1684-1711) இராம சௌதாவுக்கு எதிரே சிவ சௌதா

(சிவ மாளிகை) என்னும் பெயரில் மராட்டிய அரண்மனைக் கூடத்தைக் கட்டுவித்தார்.

இம்மண்டபத்தின் முன்பகுதியில் சுதை உருவங்கள் உள்ளன. தூண்களில் நான்குபுறமும் அன்னத்தின்மீது நான்முகனும், கருடனின் மீது திருமாலும், வெள்ளை யானையின்மீது இந்திரனும், காளையின்மீது சிவபெருமானும் தத்தம் தேவியருடன் அமர்ந்த நிலையில் உள்ளனர். மற்ற தூண்களின் மீது கோமாளியின் உருவங்கள், பாம்புடன் கூடிய பாம்பாட்டியின் உருவங்கள், மல்யுத்த வீரன், படை வீரன் மராட்டிய வீரன், ஆங்கிலேயச் சிப்பாய் மற்றும் பணியாளர்களின் உருவங்கள் உள்ளன. மேலும் கணவன் மனைவி ஊடல் காட்சி, வயதான மூதாட்டியை பரிவுடன் நீவும் காட்சி, முனிவர்கள், வயோதிக பிராமணர், பிராமணச் சிறுவன், நாட்டிய மகளிர் ஆகியோர் உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டு அதன்மேல் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. மண்டபத்தின் வடக்குப் பக்க சுவரில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணக் காட்சியும், அதனை திருமால் மற்றும் தேவர்கள் முனிவர்கள் பார்க்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளன. இதன் கீழ்ப்பகுதியில் நான்முகன், தேவர்கள் வணங்கிய நிலை, இராமர் பட்டாபிசேகக் காட்சியும், அருகே அனுமன் மண்டியிட்டு வணங்கும் காட்சியும் உள்ளது. அடுத்து வேடர்கள் புடைசூழ வள்ளி முருகன் திருமணக் காட்சியும் இடம் பெற்றுள்ளது. இவை தவிர திருமாலின் பத்து அவதாரங்களான மீன், ஆமை, பன்றி, நரசிம்மன், வாமனம், பரசுராமர், பலராமர், இராமர், புத்தர், கல்கி அவதாரங்கள் ஒவ்வொரு தூண்களின் மேலும் அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

சர்ஜா மாடி

இது சரபோஜி மன்னரால் கட்டப்பட்ட மிக உயரமான கட்டடப்பகுதி. ஐந்து மாடிகளுடன் கூடிய இக்கட்டடத்தின் தரை தளத்தில் மட்டும் சுதை உருவங்கள் உள்ளன. மற்ற இடங்களில் எங்கும் காணப்படவில்லை. மராட்டியர்கள் இந்த இடத்தை பூஜை மண்டபமாகப் பயன்படுத்தி வந்தனர். தரைத் தளத்தின் மேல் விதானத்தில் அதாவது கூரைப் பகுதி அரைவட்ட வடிவில் மேலே குடையைக் கவிழ்த்தாற் போன்ற 18 அறைகள் உள்ளன. அவற்றில் கிழக்குப் பக்கமும், வடக்குப் பக்கமும், மேற்குப் பக்கமும் ஒன்பது அறைகளில் சுவரின்மீது சுதை உருவங்கள் காணப்படுகின்றன. இவையாவும் மராட்டியர் கலைப்பாணியில் அமைந்துள்ளன.

கிருஷ்ண விலாஸ் குளம்

சதர்மாடிக்குத் தென்புறம் இருந்த பெரிய குளமும் அதனைச் சுற்றியுள்ள கட்டடங்களும் கிருஷ்ண விலாஸம் எனப்படும். தற்போது இக்குளம் முற்றிலும் மூடப்பட்டு விட்டது. குளத்தின் கீழ்ப்புறம் உள்ள

மண்டபம் ஒன்றில் அழகான சுதை வேலைப்பாடுகள் உள்ளன. இடபக்கத்தின் மீது தேவியுடன் சிவபெருமான், இராவணன் கயிலையைப் பெயர்க்கும் காட்சி, ஆலமர்ச் செல்வன், மாணிக்க வாசகருக்குச் சிவபெருமான் உபதேசிக்கும் காட்சி முதலிய சுதை உருவங்கள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

தஞ்சை அரண்மனையிலுள்ள சுதை உருவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புராண, வரலாற்றுக் கதைகளை மையமாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளன. தர்பார் மண்டபத்தில் உள்ள திருமாலின் உருவங்கள் எல்லாம் மன்னன் மக்களை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும். தெய்வங் களுக்கு அஞ்சி ஆட்சி செய்ய வேண்டும் என்பதற்காகத் தான். அதுபோல் சார்ஜா மாடியிலுள்ள ஒவ்வொன்றும் தனிச் சிறப்புடையது. சிவனின் திருமணக் காட்சி, அரச குடும்பத்தவர் வழிபடுதல், ஐந்து முகங்களுடன் கூடிய தேவி, தேவலோகக் காட்சி, நடராசர் காளி நடனம், பஞ்சமுக விஷ்ணு, பஞ்சமுக அனுமான், பஞ்சமுக கருடன், மகிசாசுர மர்த்தினி, கஜலட்சுமி, விசுவரூப ராமர் என்று ஒவ்வொன்றும் தனித்தனித் தொகுதியாக இடம் பெற்றிருப்பது சிறப்புடையதாகும்.

துணை நின்ற நூல்கள்:

1) வரலாற்றில் தஞ்சை. கு.தாமோதரன், இயக்குநர் தொல்பொருள் ஆய்வுத்துறை.

2) கலை வளர்க்கும் தஞ்சை, கு. தாமோதரன் ''

3) தஞ்சாவூர்- கு. பாலசுப்பிரமணியன், சரசுவதி மகால் நூலகம்.

44. செந்தலை இராஜகோபுரம் ஒரு வரலாற்றுப் பார்வை

குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர்.

பொன்னிநதியின் கிளை நதியான குடமுருட்டியாற்றின் தென்கரையில் இயற்கை எழிலோடு திகழும் ஒரு கிராமமே செந்தலை. சோழர்காலக் கல்வெட்டுக்கள் இவ்வூரைச் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் எனக்குறிப்பிடுகின்றன. இவ்வூரின் நடுவமைந்த சிவாலயத்தினைத் ''திருப்பெருந்துறை மகாதேவர் திருக்கோயில்'' என்று கல்வெட்டுகள் குறிப்பதால் சந்திரலேகைக்குத் திருப்பெருந்துறை என்ற பெயர் வழக்கு இருந்ததும் அறியமுடிகிறது.

பல்லவப் பேரரசர்களாலும், முத்தரைய மன்னர்களாலும், சோழப் பேரரசர்களாலும் போற்றப்பெற்ற சந்திரலேகையில் உள்ள திருப்பெருந்துறை மகாதேவர் ஆலயத்தின் கிழக்கு இராஜகோபுரம் கட்டுமான அமைப்பால் எழில்மிக தோற்றத் தோடு விளங்குவதோடு பல வரலாற்றுப் புதிர்களையும் தன்னகத்துக் கொண்டு திகழ்கின்றது. பிரஸ்தரம் வரை கருங்கற் கட்டுமானத்தோடும், அதற்கு மேலாகச் செங்கற் கட்டுமானமாக ஏழு அடுக்குகளோடும் அக்கோபுரம் விளங்குகின்றது. ஏழு அடுக்குகளையும் சுதைச்சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இவை அனைத்தும் சிவபுராணக்கதைகள், சந்திரலேகை சதுர்வேதி மங்கலத்துத் தலபுராணக்கதைகள் ஆகியவற்றை விவரிக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

கோபுரத்தின் அடித்தளமான, உபபீடம், அதிஷ்டானம், பிரஸ்தரம் வரை உள்ள கருங்கற் கட்டுமானங்கள் அனைத்தும் புதிதாக எழுப்பப்படுகின்ற கோபுரம் ஒன்றினுக்காக வடிவமைக்கப்பெற்ற அமைப்பாக இல்லாமல், முன்பே திகழ்ந்த ஒரு கட்டுமானத்தின் கற்களைக் கொண்டு எடுக்கப்பட்டதாகத் திகழ்வதைக் கூர்ந்து நோக்கும் போது அறியமுடிகிறது. கோஷ்டங்களின் தோரணங்கள், கால்கள் போன்ற பல இடங்களில் முக்குடையோடு அமர்ந்த நிலையில் உள்ள சமண தீர்த்தங்கரர்களின் உருவங்கள் உள்ளன. கோபுரத்தின் வட கிழக்குப் பகுதியில் பார்சுவநாதரின் சிற்பம் உள்ளது. கோபுரம் முழுவதையும் ஆராயும்போது சமண ஆலயத்தின் பல்வேறு சிற்பக் கூறுகள் அங்கு மிளிர்வதைக் காணலாம். மிகப்பெரிய அளவிலும், நுட்பமான வேலைப்பாடுகளுடனும் திகழ்ந்த ஒரு சமண ஆலயத்தின் கட்டுமானக் கற்கள் அப்படியே இங்கு இடம்பெற்றுள்ளன என்பது தெளிவாகப் புலப்படும். செந்தலைக் கோபுரத்தின் கட்டுமானம் கி.பி.15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஆனால் அதிஷ்டானத்திலிருந்து

பிரஸ்தரம் வரை உள்ள கட்டுமானச் சிற்ப அமைதி முற்காலச் சோழர்களின் கலைக் கூறுகளைக் காட்டுபவையாக உள்ளது. அவ்வாறாயின் ஒரு சமண ஆலயக் கற்கள் எங்கிருந்து, எப்போது யாரால் இங்க கொண்டு வரப்பட்டுக் கட்டப்பட்டது?

இக்கோபுரத்தில் பத்துக்கும் மேற்பட்ட துண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆனால் அவற்றில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டுமே இந்தியத் தொல்லியல் துறையால் (ஏ.ஆர்.எண்.7 ஆண்டு 1889) படி எடுக்கப்பெற்றுள்ளது. அது இரண்டு பகுதிகளாகவுள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி, குறிக்கப்படும் மன்னனான ''கோப்பரகேசரிவர்மர்'' என்பவற்றை வைத்து நோக்கும் போது இது முதலாம் பராந்தக சோழரின் 10 ஆவது ஆட்சியாண்டான கி.பி. 917 இல் வெட்டுவிக்கப் பெற்ற ஒரு சாசனத்தின் பகுதி என்பது நன்கு அறியமுடிகிறது. இக்கல்வெட்டின் இரண்டு பகுதிகள் தவிர, இதே கோபுரத்தில் காணப்படும் மற்ற கல்வெட்டுக்களும் இதே காலத்தைச் சேர்ந்ததும், இங்கு கூறப்பெற்றுள்ள சமண ஆலயத்தோடு தொடர்புடையவை என்பதும் அவற்றில் கூறப்பெற்றுள்ள செய்திகளால் அறிய முடிகிறது.

...ற்குடி என்ற பெயரில் ஓர் ஊர் வடகவீர நாட்டில் இருந்துள்ளது. அங்குதான் இக்கற்கள் முன்பு இடம் பெற்றிருந்த சமண ஆலயம் இருந்திருக்க வேண்டும். அங்கு ஆரம்பவீரன் என்பவனும், கனகஸேன படாரர் என்ற சமண சமயத்தைச் சார்ந்த ஒருவரும் இருந்து அவ்வூர் வீரசிகாமணிப் பேரேரி என்ற ஏரியைப் பேணுவதற்கு காசும், நெல்லும் அளித்தமை அறியப்படுகிறது.

திருப்பெருந்துறை மகாதேவர் கோயில் இடம் பெற்றிருக்கும் செந்தலை ஆர்காட்டுக் கூற்றத்தைச் சார்ந்த ஓர் ஊர். ஆனால் சமணப்பள்ளியும், வீரசிகாமணிப் பேரேரியும் இருந்தவூர் குடி என்று முடியும் பெயரில் அமைந்த வடகவீரநாட்டு ஊர். வடகவீர நாடு என்பது திருச்சிராப்பள்ளித் வட்டத்தில் உள்ள திருஎரும்பியூர் (திருவரம்பூர்) திருநெடுங் களம் ஆகிய ஊர்கள் அமைந்த ஒரு பகுதியாகும். அங்கிருந்த ஒரு ஊரின் சமணப்பள்ளியின் கட்டுமானக் கற்கள் அப்படியே இங்கு எடுத்துவரப்பெற்று சிவாலயக் கோபுரத்தின் கட்டுமானமாக மாற்றப்பட்டுள்ளது. அச்சமண ஆலயம் பலவந்தமாக இடிக்கப் பட்டு எடுத்துவந்து கோபுரம் கட்டப்பட்டதா? அவ்வாறு எடுத்துவந்து கோபுரத்தைக் கட்டியவர் யாராக இருக்க முடியும்?

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கோபுரங்களை ஆராயும் போது, முன்பு சிவாலயமாகவோ, வைணவ ஆலயமாகவோ, சமணப் பள்ளியாகவோ அல்லது சோழமன்னர்களின் பள்ளிப் படையாகவோ இருந்து, பிற்காலத்தில் (ஏறத்தாழ 15-16 ஆம் நூற்றாண்டுகளில்)

வழிபாடு இன்றி, இடிபாடுற்றுக் கிடந்த கற்களை அப்படியே எடுத்துவந்து, தேவைப்படும் கற்களை இணைத்து புதியகோபுரங்கள் கட்டப்பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

குடவாசல் கோனேசர் கோயில் கோபுரம் அகர ஓகையில் இருந்த சமண ஆலயத்துக் கற்களாலும், கண்டியூர் வீரட்டானத்துக் கோபுரம் இரட்டைக்கோயில் எனும் இடத்தில் இருந்த பராந்தகதேவ ஈச்சரம், வானவன்மாதேவிச்சரம் எனும் பள்ளிப்படை கோயில் சிற்பங்களாலும், கும்பகோணம் சாரங்க பாணி திருக்கோயில் கோபுரம், ஒரு சிவாலயத்துக் கற்களாலும் பிற்காலத்தில் கட்டப்பெற்றவை[1]

செந்தலை பெரிய இராஜகோபுரத்தை அடுத்துக் காணப் பெறும் சிறிய இராஜகோபுர வாயிலில் ஒரு வடமொழிக் கவிதைக்கல்வெட்டு உள்ளது[2]. அதன் தமிழாக்கம்,

> ''காதால் கேள்விப்பட்ட சமயத்தில் ஆயிரத்தைக் கொடுக்கிறார்
> கண்ணில்பட்டால் பத்தாயிரத்தை அளிக்கிறார்,
> நெருங்கிப் பழகினால் அளவற்றதை அளிக்கிறார்
> மகிழ்ச்சி ஏற்பட்டால் எவ்வளவு கொடுப்பார் என்பதைப்பற்றி
> யான் என்ன கூறுவேன் (திப்பராஜனே 1).
>
> தாங்கள், எதிரிகளின் கோபுரவாயிலையும், அந்தப் புரத்தையும்,
> அவர்மனைவியரின் பாதச்சிலம்புகளையும் பொறுப்பதில்லை.
> இதனால் திரிபுராந்தகர் என்ற தங்கள் பட்டமானது
> அர்த்தமுள்ளதாக இருக்கிறது''.
>
> ''ஹே கோபேந்திர திப்பபூபாலரே, தங்களுடைய
> புகழானது எல்லாஉலகளிலும் பரவி தாங்கள்
> மனைவிமார்களின் மார்பிலுள்ள முத்துமாலை யாகவும் பரிணமித்து இருக்கிறது''

என்பதாகும்.

கும்பகோணத்தில் எவ்வாறு சிவாலயத்துக் கட்டுமானக் கற்கள் வைணவ ஆலயத்துக் கோபுரமாக உருப்பெற்றதோ அதுபோன்று செந்தலையில் வடகவீர நாட்டு ஊர் ஒன்றின் சமணப்பள்ளி வழிபாடு இன்றித் தனித்து நின்ற காலை அதனைப் பிரித்து எடுத்து வந்து இங்குக் கோபுரமாக வடிவமைத்தனர் என்பதைத் தெளிவாக அறிகிறோம். அப்பணியினை சாளுவ கோபதிப்பன் என்றழைக்கப்படும் திப்பதேவ மகாராயரே செய்திருக்க வேண்டும் என்பது ஒப்பீட்டு ஆய்வாலும், செந்தலைக்கல்வெட்டின் சான்று கொண்டும் அறியமுடிகிறது. கி.பி.1310 இல் கண்டியூர், செந்தலை ஆகிய பகுதிகள் மாலிக்காபூரின் தாக்குதலுக்கு இரையாகி கோயிற்செல்வங்கள் அழிக்கப்பட்டதை அமிர்குஸ்ருவின் பர்சிய மொழிப்பாடல்கள் வரலாற்று ஆவணங்களாக

நமக்கு எடுத்துக்கூறுகின்றன. இந்நிகழ்ச்சிக்குப்பிறகு ஒரு நூறாண்டு கடந்து கோபாதிப்பனின் கோயிற் திருப்பணிகள் அமைந்தன என்பதும் இங்கு சிந்திக்க வேண்டியவையாகும்.

குறிப்புகள்

1. குடவாயிற் கோட்டம் - வரலாற்றுப்பேரவை - சென்னை, நந்திபுரம் - இன்டாக், கும்பகோணம் - கேம்பிரிஜ் பல்கலைக்கழக வெளியீடு (அச்சில்)
2. செந்தலை - எஸ். ஆர். பாலசுப்ரமணியம் - பக்கம் 23.

45. ஆதித்தன் காலக் கட்டடக்கலை ஓர் ஒப்பீட்டாய்வு

வே.இராமன், திருச்சிராப்பள்ளி.

பல்லவர்களைத் தொடர்ந்து கட்டடக் கலைக்குப் பெருமை சேர்த்தவர்கள் சோழர்கள். சோழமன்னர்களில் முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டமைக்கப்பட்ட கற்றளிகள் பல இருந்த போதிலும் இங்கு ஒருசில விமானங்களின் அமைப்பே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட கோயில்கள் 1. புதுக்கோட்டை மாவட்டம் திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் 2.பெரம்பலூர் மாவட்டம், கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவரர் கோயில் வளாகத்தில் உள்ள 2.வடவாயில் ஸ்ரீ கோயில் 3. தென்வாயில் ஸ்ரீ கோயில் ஆகியவையாகும். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கோயில்கள் ஏறத்தாழ கமகாலத்தவை. இக்கோயில்களின் விமானக் கட்டமைப்பு, ஆதார அங்கங்கள், அங்கங்களில் இடம்பெற்றுள்ள சிற்றுறுப்புகள் மற்றும் அலங்கார அணிகள் அமைப்பில் எவ்வாறு வளர்ச்சியுற்று மாற்றம் பெற்றுள்ளன என்பதனை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில்

திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் விமானம் சதுரவடிவில் கிழக்கு நோக்கிய பார்வையில் இரு அடுக்கு கொண்ட கற்றளி அமைப்பாக அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, முகமண்டபம் மற்றும் பரிவார ஆலயங்களுடன் காணப்படுகிறது. விமானமானது[2] பாதச்சுவர்கட்டு, பாதச்சுவர், கூரை, இரண்டாம் அடுக்குச் சுவர், கூரை, சிகரம், தூபி என்ற ஆதார அங்கங்களைக் கொண்டுள்ளது.

பாதசுவர்க்கட்டு (தாங்குதளம்) பாதபந்த வகையைச் சார்ந்த இக்கோயிலின் பாதச்சுவக்கட்டு[1] எளிமையுடனும், வலிமையுடனும், வனப்புடனும் அமையப்பெற்றதாகும். உபானம், ஐகதி, எண்பட்டைக்குமுதம், கண்டம், பட்டிகை எனும் உறுப்புகளைப் பெற்ற மைந்த இக்கட்டுமானத்தைப் பாதபந்தம் என்பர். கண்டத்தில் கீழும், மேலும், பட்டிகையின் மேலும் கம்பு எனும் சிற்றுறுப்பு இடம் பெற்றுள்ளது. கண்டம் சுவரில் தூணடிகள் (களபாதம்) காட்டப் பட்டுள்ளது. பாதச்சுவர்கட்டு உபான மட்டத்தில் வடக்குநோக்கி கோமுகையை இணைத்துள்ளனர்.

சுவர் : கருவறையின் புறச்சுவர் ஐந்து பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளது[2]. மையப் பகுதியான முகசாலை சற்று முன்வந்ததாய்

அமைந்து தேவகோட்டமும், கோட்டத்தில் சிற்பமும்[3], கோட்டத்தின் மேல் மகரத்தோரணமும் இடம் பெற்றுள்ளன. புறச்சுவரில் இடம்பெறும் நான்முக வடிவிலான தூண், உடல், தொங்குமலை, மாலைக்கட்டு, தாமரைக்கட்டு, கலசம், குடம், பலகை, வீரகண்டம், தரங்கப்போதிகை எனும் உறுப்புகள் தொடக்க சோழர் கலைமுறையுடன் அமைந்துள்ளன. பலகையின் மேல்மட்டமிருந்து கூரையின் உறுப்பான பூதவரி உயரத்திற்கு ஈடாக பலகையின்மேல் சிம்மம் நின்ற நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது. தேவகோட்டத்தின் இருபுறமும் இடம்பெறும் நான்முகத் தூண் கருக்கணியுடன் கூடிய சட்டத்தலையாய் அமைந்துள்ளது. கோட்டத்தினை மூடும்வகையில் அமையும் எழுதகத் தொகுதியின் எழுதகத்தில் (தெற்குப் பக்கம்) அன்னங்கள் வரிசையாகச் சிற்பச் செரிவுடன் காட்டப்பட்டுள்ளன.

கூரை : உத்திரம், கம்பு, பூதவரி, கபோதகம், யாளிவரி ஆகியன கூரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. பூதவரியில் பூதகணங்கள் பல்வேறு நிலைகளில் கலைத்திறன் சிறக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. கபோதகத்தின் நுணியில் வட்டங்கள், கோடிப்பாளை மற்றும் கூடுகள் வனப்புடன் அமைந்துள்ளன. யாளிவரியானது திருப்பங்களில் மகரத் தலையையும், இடையில் யாளிகளை எதிர் எதிராகவும் கொண்டுள்ளது.

மேல்தளம் : ஆதிதளம் முடிவைக்காட்டும் யாளிவரியினின்றும் சற்று உள்ளடங்கியவாறு இரண்டாம்தளச் சுவர் எழுகிறது. இச்சுவர்ப்பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இச்சுவருக்கு முன் இழுப்பாக கர்ணகூடு, அகாரை, முகசாலை, அகாரை, கர்ணகூடு ஆகிய அங்கங்கள் முன்பின் வந்ததாய் இடம்பெற்று நாற்புறமும் எழிலாய்ச் சுற்றிவருகிறது. கர்ணகூட்டையும், முகசாலையையும் அகாரைச்சுவர் இணைக்கிறது. மூன்று அங்கங்களைக் கொண்ட அகாரையில்ப் பஞ்சரம், கர்ணகூடு மற்றும் முகசாலை நான்கு அங்கங்களைப் பெற்றுள்ளது. கர்ணகூடு, அகாரை மற்றும் முகசாலையில் சிற்பங்கள் உள்ளன. கர்ணகூடும், முகசாலையும் சமஉயரளவிலும், அகாரைச்சுவர் உயரளவில் சற்று குறைந்தும் காணப்படுகிறது. முகசாலையின் இருபுறங்களிலும் சிகரம் தாங்கிச் சிற்பங்கள் உள்ளன. இத்தளத்தை மூடும்வகையில் அமையும் கூரைப்பகுதி முகபத்ரம் ஏதுமின்றி நாற்புறமும் சுற்றிவருகிறது.

கூரைப்பகுதி யாளிவரியின் மேல்மட்டத்தில் நந்திகள் தெற்கு மற்றும் வடக்குத் திசைநோக்கி அமர்த்தப்பட்டுள்ளன. சதுர வடிவ சிகரப் பகுதியின் நாற்புறமும் மகாநாசியும், இறுதியில் சதுரவடிவிலான தூபியும், கலைச்செறிவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் சிறப்புக் கட்டடக் கூறுகளைப் பின்வருமாறு தொகுத்துச் சொல்லலாம்.

1. பாதபந்த பாதச்சுவர்க்கட்டுக் கட்டமைப்பில் குமுதம் எண்பட்டை வடிவமைப்பிலும், இறுதியில் பட்டிகையும் இடம் பெற்றுள்ளன.

2. பாதச்சுவர்க்கட்டுக் கண்டச்சுவரில் தூணடிகள் எளிமையாய்க் காட்டப்பட்டுள்ளன.

3. கண்டத்தின் கீழும், மேலும்; பட்டிகையின் மேலும் கம்பு எனும் சிற்றுறுப்பு இடம் பெறுகிறது.

4. உபானம் மட்டத்தில் கோமுகை இடம் பெற்றுள்ளது. உபானம் என்பது கட்டடத்தின் முதல் உறுப்பாகும்

5. கருவறை புறச்சுவர் பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளது.

6. போதிகை தரங்கப் போதிகையாக வனப்புடன் அமைந்துள்ளது.

7. பலகையின் மேல்மட்டத்தில் திருப்பங்களில் சிம்மம் காணப்படுகிறது.

8. தேவகோட்டத்தின் இருபுறங்களிலும் இடம்பெறும் தூணமைப்பில் கருக்கணி சட்டத்தலை அணி செய்வதாய் அமைகிறது.

9. கூரைப்பகுதியின் வலபியில் பூதகணங்கள் பல்வேறு நிலைகளில் கலைச்சிறப்புடன் காட்டப்பட்டுள்ளன.

10. கபோதகத்தில் சிரசகன்ற கூடுகளும், திருப்பங்களில் கொடிப்பாளை எனும் கருக்கணியும் இடம்பெற்றுள்ளன.

11. கர்ணகூடு மற்றும் சாலை நான்கு அங்கங்களையும், அகாரைசுவர் மூன்று அங்கங்களையும் பெற்றமைகிறது. கர்ணகூடு, பஞ்சரம் மற்றும் சாலையில் சிலவற்றுள் சிற்பங்கள் உள்ளன.முகசாலையின் இருபுறங்களிலும் சிகரத்தைத் தாங்குவதாய் சிகரம் தாங்கிச் சிற்பம் இடம் பெற்றுள்ளது. கர்ணகூடு மற்றும் சாலையின் உயரம் சமஅளவில் உள்ளன. அகாரை உயரளவில் குறைந்துள்ளது.

12. கர்ணகூடங்கள், கிரீவம், சிகரம் மற்றும் தூபி சதுரவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வடவாயில் ஸ்ரீகோயில்

மேற்குநோக்கிய பார்வையில் சதுரவடிவினதாய் அமையும் வடவாயில் ஸ்ரீகோயில் விமானம் இருதளம் கொண்ட கற்றளி அமைப்பாகும். இக்கற்றளி திருக்கட்டளை சுந்தரேசுவரர்கோயில் வளாகம் அமைப்பினையொட்டியே அமைகிறது. பிரதிபந்தவகையைச் சார்ந்த இக்கோயிலின் பாதச்சுவர்கட்டு உபானம், பெருபத்மம், வட்டகுமுதம், யாளிவரி எனும் உறுப்புகளைப் பெற்றமைந்துள்ளது[6]. பெருபத்மம் மற்றும் குமுதத்தின் மேலும் கீழும் இடம்பெறும்

சிறுபத்மங்களின் முனைகள் வெட்டப்பட்டு அன்றலர்ந்த தாமரைமலர்போல் அழகுடன் காட்சியளிக்கிறது. யாளிவரியின் திருப்பத்தில் மகரத்தலையும், யாளி வரிசையும், எதிர்எதிராக வடிவமைக்கப்பட்டுள்ளன. மகரத்தலையின் பிளந்தவாய் மற்றும் பிடரியில் வீரனது உருவம் காட்டப்பட்டுள்ளது[7]. யாளிவரி மட்டத்தில் கோமுகை இடம் பெற்றுள்ளது.

இக்கோயில் கட்டமைப்பில் காணும் கருவறைபுறச்சுவர் கூரைப்பகுதி மற்றும் இரண்டாம்தள கட்டமைப்பு திருக்கட்டளை சுந்தசேசுவரர் கோயில் அமைப்புமுறையைப் பின்பற்றி அமைந்துள்ளது. இருப்பினும் முகசாலையில் சிகரம் தாங்கிச் சிற்பம் இங்கு இடம் பெறவில்லை. இரண்டாம் தளத்தை மூடும் வகையில் அமையும் கூரையின் மையப்பகுதி சற்று முன்வந்ததாய் அமைந்துள்ளது. யாளிவரி மேல்மட்டத்தில் நந்திகள் கிழக்கு மற்றும் மேற்குத் திசை நோக்கி அமர்த்தப்பட்டுள்ளன.

வட்டவடிவில் காணும் கழுத்துப்பகுதி எழுதகத் தொகுதியின் வலபியில் அன்னங்கள் சுற்றிவருவதாய் காட்டப்பட்டுள்ளது[9]. வட்டவடிவிலான சிகரப்பகுதியின் நாற்புறமும் மகாநாசியும், மகாநாசியின் மையப்பகுதியில் சிறுகோயிலின் அமைப்பும் வனப்புடன் கட்டமைக்கப் பட்டுள்ளது. இறுதியில் வட்டவடிவில் தூபி பாங்குற அமைகிறது. இக்கோயில் கட்டடக் கூறுகளை பின்வருமாறு தொகுக்கலாம்.

1. பிரதிபந்த சுவர்க்கட்டுக் கட்டமைப்பில் குமுதம் வட்டவடிவிலும், இறுதியில் யாளிவரியும் இடம்பெற்றுள்ளது.
2. மகரத்தலை பிளந்தவாய் மற்றும் பிடரியில் சிற்பம் காட்டப்பட்டுள்ளது.
3. யாளிவரி மேல்மடடத்தில் கோமுகை இடம் பெற்றதுள்ளது.
4. தேவகோட்டத்தின் மேல்வரும் எழுதகத்தொகுதி வலபியில் அன்ன வரிசை இடம்பெறவில்லை.
5. தேவகோட்டங்களில் வடக்கே நான்முகன், கிழக்கே அமர்ந்த நிலையில் முருகன், தெற்கே ஆலமர்செல்வர் காணப்படுகின்றனர்.
6. கபோதகத்தில் சிரசுடன் கூடிய கூடுகளைச் சிற்பச் செறிவுடன் உள்ளன.
7. கர்ணகூடும், சாலையும் சமஅளவு உயரத்திலும், அகாரை தாழ்ந்தும் உள்ளன.
8. இரண்டாம் தளத்தை மூடும்வகையில் அமையும் கூரையின் மையப்பகுதி சற்று முன்வந்ததாய் காட்டப்பட்டுள்ளது.

9. நந்திகள் கிழக்கு மற்றும் மேற்குநோக்கிய பார்வையில் அமர்த்தப்பட்டுள்ளன.

10. வட்டவடிவ கிரீவமும், சிகரமும், தூபியும் வனப்புடன் காட்சியளிக்கின்றன.

11. சிகரத்தில் கொடிப்பாளை கருக்கணி இடம் பெறவில்லை.

12. சிகரம் மகாநாசி மையத்தில் சிறுகோயில் காட்டப்பட்டுள்ளது.

தென்வாயில் ஸ்ரீகோயில்

தென்வாயில் ஸ்ரீகோயில் சதுரவடிவினதாய் மேற்குநோக்கிய பார்வையில் இருதளம் கொண்ட கற்றளி அமைப்பாக அமைந்துள்ளது. வடவாயில் ஸ்ரீகோயில் அருகே அளவில் சற்று உயரமாக அமையப்பெற்ற பிறிதொரு கோயிலே தென்வாயில் ஸ்ரீகோயில் ஆகும். தென்வாயில் ஸ்ரீகோயிலின் கட்டுமானமாக அமையும் பாதச்சுவர்க்கட்டு, புறச்சுவர், கூரைஅமைப்பு முதலியன வடவாயில் ஸ்ரீகோயில் கட்டமைப்பை பின்பற்றியே அமைந்துள்ளது. தேவகோட்டச் சிற்பங்களில் கிழக்கே நின்றநிலையில் முருகனும், தெற்கே நின்றநிலையில் சிவனும் நிறுத்தப்பட்டுள்ளனர். இரண்டாம்தளத்தில் இடம்பெறும் கர்ணகூடு மற்றும் அகாரை வடவாயில் ஸ்ரீகோயில் கட்டமைப்பையொட்டி அமைந்த போதிலும், சாலை ஏழு அங்கங்களைப்[9] பெற்று உயர்ந்து நிற்கிறது. இவ்வமைப்பு திருக்கட்டளை கோயில் மற்றும் வடவாயில் ஸ்ரீகோயில் அமைப்பிலிருந்து மாறுபட்டு நிற்கிறது. அதாவது கர்ணகூடும், அகாரையும் தாழ்ந்து அமைய சாலை உயர்ந்து நிற்கிறது. இதுபோன்ற அமைப்பு முன்கண்ட கோயில்களில் இடம்பெறவில்லை.

இரண்டாம்தளம் பூமிதேச யாளிவரி மேல்மட்டத்தில் வரும் வேதிகை, கிரீவம், சிகரம், தூபி சதுரவடிவில் பாங்குற அமைந்துள்ளது. வேதிகை, கிரீவம், ஆகியன வடவாயில் ஸ்ரீகோயில் உறுப்புகளைப் பின்பற்றி அமைகின்றன. சிகரம் சதுரவடிவில் அமைந்து கொடிப்பாளை நாற்புறம் திருப்பங்களிலும் மேலிருந்து கீழே இறங்கிப்படர்ந்து சிகரத்தின் எழிழைக் கூட்டுவதாய் அமைந்துள்ளது. சிகரமகாநாசியில் மையப்பகுதியில் சிறுகோயில் அமைப்பு வனப்புடன் அமைந்துள்ளது. இறுதியில் இடம்பெறும் தூபி கலைநயத்துடன் இடம்பெற்றுள்ளது.

ஆய்வின் முடிவுகள்

- ஆதித்தன்காலக் கோயில்கள் சதுரவடிவினதாக அமையப் பெற்றுள்ளன. இவை கிழக்கு அல்லது மேற்கு நோக்கிய பார்வையில் அமைகின்றன. கோயில்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும், மாறுபட்ட கட்டமைப்புடனும் அமைந்திருப்பது அக்காலச் சிற்பிகளின் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைத் திறனை வெளிப்படுத்துவதாய்


உள்ளது. துணைத்தளம் (உபபீடம்) எனும் அங்கம் ஆய்வுக்குட்பட்ட கோயில்களின் கட்டமைப்பில் இடம் பெறவில்லை. கட்டடத்தை உயர்த்திக் காட்டவே இவ்வங்கம் பயன்படுவதாய் அறியமுடிகிறது. ஆதித்தன்காலக் கோயில்கள் பரந்தும், உயர்ந்தும் கட்டமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் சீரான அமைப்பு, சீரிய கற்பனைவளம், எளிமையான நுணுக்கமான கலைத்திறன் கட்டடக்கலையோடு சிற்பக்கலையினை இணைத்துள்ள முறை பராந்தகன் காலச் சிற்பிகளின் தொழில் நுட்ப அறிவை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளது. பாதபந்தம், பிரதிபந்தம் எனும் இருவகை கட்டமைப்பும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாதசுவர்க்கட்டு அமைப்பில் உறுப்புமாற்றம் (வர்க்கபேதம்) செய்தமைப்பது குறைவே. பாதசுவர்க்கட்டு அங்கத்தில் தேவைக்கேற்ப ஏதேனும் ஓர் அங்கத்தில் கோமுகையை இடம்பெறச் செய்யலாம் என அறியமுடிகிறது. இருதள விமான அமைப்பில் ஐந்து பத்திபிரிப்புமுறை கையாளப்பட்டுள்ளது. சுவரில் இடம்பெறும் வேதிகை, கட்டுமானத்தில் இடம்பெறுவது குறைவே. தேவகோட்டத்தில் இடம்பெறும் சிற்பம் மாற்றியமைக்கும் முறை கையாளப்பட்டுள்ளது. கூரைப்பகுதியில் இடம்பெறும் கபோதகஅமைப்பும், மேல்தளம் அமைப்பில் அமையும் கர்ணகூடு மற்றும் முகசாலை கட்டமைப்பு யாவும் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சியே எனலாம். கர்ணகூடு, அகாரை மற்றும் முகசாலை முகப்புக் கோட்டங்களில் சிற்பங்கள் இருப்பதை எல்லாக் கோயில்களிலும் காணமுடிகிறது. முகசாலையின் அமைப்பில் பாதமும், கபோதகமும் இணைத்துக் கட்டமைத்துள்ளது கட்டடக்கலையின் வளர்ச்சி எனலாம். விமானம் கிரீவத்தின்கீழ் ஆதிதளத்தின்மேல் நந்தி திசைநோக்கி இடம்பெறச் செய்வது சோழர் கலைமுறை எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. அதிட்டானம் என்பதற்குத் தாங்குதளம், மேடை எனப் பொருள்கொள்வர். விமான அமைப்பிற்கு அதிட்டானம் தாங்குதளமாகப் பயன்படுவதில்லை. இவ்வங்கம் பாதச்சுவர் பகுதியின் ஓர் அலங்காரக் கட்டமைப்பாகவே பயன்பாட்டில் உள்ளது. இதற்கு இக்கோயிலே சான்றாக அமைகிறது. எனவே தாங்குதளம் பகுதி பாதச்சுவர்க்கட்டு எனக் குறிக்கப்படுகிறது.
2. கார்ணகூடு, அகாரை, முகசாலை, அகாரை, கர்ணகூடு.
3. தேவகோட்டம் தெற்கே சந்திரசேகரர், வடக்கே பிரம்மா, மேற்கே விஷ்ணு.
4. வேதிகை, பாதச்சுவர், கபோதகம்.
5. இவை வேதிகை, பாதசுவர், சிகரம், தூபி ஆகும். கர்ணகூடும் முகசாலையும் பல்லவர் கலைமுறையினைப் பின்பற்றி கட்டமைக்கப்பட்டுள்ளது.
6. இவ்வகை உறுப்புகளைப் பெற்ற கட்டுமானத்தை ஸ்ரோணிபந்தம் என்பர்.
7. யாளிவாரியின் மட்டம் என்பது பாதசுவர்க்கட்டு கட்டமைப்பின் இறுதிவரியாகும். இதனைப் பூமிதேசம் எனவும் கூறுவர்.

8. பின்னாளில் சுந்தரசோழன் காலக் கோயிலான பெருமுடி பரமேசுவரர்கோயிலிலும் இடம்பெற்றுள்ளது.

9. வேதிகை, பாதசுவர், கபோதகம், வேதிகை, கிரீவம், சிகரம், தூபி.



வடவாயில் ஸ்ரீகோயில்

46. சங்க காலத் தமிழகத்தில் சிவ வழிபாடு ஒரு வரலாற்று நோக்கு

முனைவர் சி.க. சிற்றம்பலம், திருநெல்வேலி, ஈழம்.

சங்ககாலத் தமிழகத்தில் வரலாற்றுக்குரிய பிரதான சான்றுகளாகச் சங்க நூல்கள் விளங்குகின்றன. எனினும் 'சிவன்' என்ற பெயரோ அன்றி இவ் வழிபாட்டுடன் இணைந்துள்ள சிவலிங்கம் என்ற பெயரோ இவற்றில் இடம் பெறவில்லை. மாறாக, இக்காலத்தில் இந்தியாவில் காணப்பட்ட 'சிவனின்' பண்புகளே இவற்றில் பேசப்படுகின்றன. இவற்றை மையமாக வைத்துத்தான் சங்க காலத்தில் நிலவிய வழிபாட்டு நெறி பற்றிய ஆய்வுகள் அமைந்தன. சிவன் பற்றியஇத்தகைய குறிப்புகள் சங்க நூல்களில் மட்டுமின்றி, இவற்றுக்குரிய கடவுள் வாழ்த்துப் பாடல்களிலும் காணப்படுகின்றன. இக்காலத் தாமிழிக் கல்வெட்டுகளிலும் 'சிவன்' என்ற பெயரைத் தாங்கியோர் பற்றிய குறிப்புகள் இடம் பெறவில்லை. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இந்தியாவின் பிற மாநிலங்களில் வரலாறறுக் கால மையங்களில் மேற்கொள்ளப் பட்ட விரிவான அகழ்வுகள் போன்று இங்கும் மேற்கொள்ளப் படாததால் அகழாய்வின் மூலம் கிடைக்கும் சான்றுகளும் மிக அருகிலே காணப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு சான்றாக அமைவதுதான் அரிக்கமேட்டில் 1945ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது வெளிவந்த, சுடுமண்பாவையாகிய சிவனின் தலையாகும்[1]. இவ்வாறே திருக்காம்புலியூர் அகழ்வின் போதும் பல்லவர் காலத்திற்கு முந்திய தென நம்பப்படும் சுடுமண்ணினாலான நாகலிங்கம் ஒன்றும் கிடைத்துள்ளது[2]. இவற்றை விடத் தமிழக நாணயங்களில் சிவனது உருவம் பொறிக்கப்படாதிருந்தாலும் கூட, சிவவழிபாட்டோடு இணைந்த குறியீடுகளான ஆலயம், திரிசூலம், காளை, நந்திபாதம், சிவலிங்கம் ஆகியனவற்றின் குறியீடுகளும் உள. இத்தகைய தரவுகளைச் சரியாக இனங்கண்டு விளங்கிக் கொள்வதற்கு சமகாலத்தில் இந்தியாவில் காணப்பட்ட சிவவழிபாட்டின் தன்மை பற்றி அறிவது அவசியமாகின்றது. இத்தகைய கண்ணோட்டத்தில் தமிழகத்துடன் மிக நெருக்கமான கலாசார உறவு கொண்டிருந்த ஈழத்தில் நிலவிய இவ்வழிபாடு பற்றிய சான்றுகளும் தமிழகத்தில் இவ்வழிபாட்டின் தொன்மையை விளக்குவதற்கும், அதற்கு மேலும் உறுதி அளிப்பதற்கும் உறுதுணையாக விளங்குகின்றன.

'சிவ' என்ற சொல் ஒரு திராவிடச் சொல் என்பது அறிஞர்கள் கருத்தாகும். சிந்துவெளி நாகரிகத்தில் இதன் தொன்மையைக்

கண்டாலும் கூட, இதிகாச புராண காலத்தில் மும்மூர்த்திகளில் ஒருவனாகச் சிவன் எழுச்சி பெறுவதைக் காண முடிகிறது. பாணினி, பதஞ்சலி போன்றோரின் நூல்களிலும் இவ்வழிபாடு பற்றிய குறிப்புகள் உள. பாணினி தமது நூலில் சிவ வழிபாட்டில் திளைத்தோர் பற்றிக் குறிப்பிடுகிறார்[3]. பதஞ்சலியோ எனில் நாட்டார் தெய்வங்களில் (லௌகீக தேவதாஸ) ஒருவனாகச் சிவனைக் குறிப்பிடுவதோடு சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தோரைச் 'சிவபாவனதாஸ்' எனவும் அழைத்துள்ளார். அத்துடன் தனது மகாபாஷ்யத்தில் சிவன், ஸகந்தன், விசாகன் ஆகியோரது சிலைகள் வழிபடப்பட்டதைக் கூறுவதோடு மௌரிய வம்சத்தினர் தமது திறைசேரியின் வருமானத்தைப் பெருக்குவதற்குச் சிவன், ஸ்கந்தன், விசாகன் ஆகியோரது சிலைகளை விற்பனை செய்ததையும் குறிப்பிடுகிறார்[4]. அர்த்த காஸ்திரத்திலும் சிவனது கோயில் நகரின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும் என்ற குறிப்புக் காணப்படுகிறது[5].

சிவவழிபாட்டினை அனுஷ்டித்தோர் தரித்திருந்த 'சிவ' என்ற சொல் இந்தியாவில் பிற மாநிலங்களிலும் வழக்கிலிருந்த தற்கான ஆதாரங்கள் உள. வட இந்தியாவிலுள்ள ஔதும்பரது நாணயங்களில் மன்னர்கள் சூடியிருந்த பெயர்களாக 'உருத்திரதாஸ (உருத்திரனுடைய அடிமை) 'சிவதாஸ' (சிவனுடைய அடிமை) போன்றன காணப்படுகின்றன[6]. இவ்வாறே 'சிவரக்சித' (சிவனால் பாதுகாக்கப்படுபவன்) என்ற பெயரும் இவர்களின் நாணயங்களிலே உள. தக்கணத்தில் அரசாட்சி செய்த சதாவாகன மன்னர்கள் சிலர் சிவ வழிபாட்டில் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் கல்வெட்டுகள், நாணயங்கள் ஆகியன எடுத்துக் காட்டுவதோடு, மன்னர்களில் சிலரும் சிவ என்ற பகுதியுடன் கூடிய பெயர்களையும் சூடியிருந்தனர். இதற்கு உதாரணங்களாகச் சிவசிறி புளுமாவி (கி.பி.145-152). சிவஸ்கந்த சாதகர்ணி (கி.பி.152-165) ஆகியோர்களது பெயர்களைக் கூறலாம்.

தமிழகத்தோடு பண்டுதொட்டு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஈழத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் சிலரும், மக்களும் சிவவழிபாட்டில் தாம் கொண்டிருந்த ஈடுபாட்டினை வெளிப்படுத்தும் விதத்தில் இப்பெயரைச் சூடியிருந்தமைக்கான சான்றுகளும் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படு கின்றன[7]. இவற்றை விடப் பௌத்த மதம் பரவியபோது அதற்குப் பல குகைகளைத் தானங்களாக அளித்தோரில் பலர் 'சிவ' என்ற நாமத்தைத் தரித்திருந்ததற்கான சான்றுகளும் பிராமிக் கல்வெட்டுகளில் உள. இப்பதம் 72 இடங்களில் இவற்றில் காணப்படுகிறது[8].

மேற்கண்டவாறு பரந்த ஒரு வழக்காற்றுப் பாரம் பரியத்தை உடைய இப்பெயர் தமிழகத்தில் வழக்கற்றிருந்தது புதிராகவே இருக்கிறது.

இதனை மேலும் விளங்கிக் கொள்வதற்குச்சங்க இலக்கியங்களில் சிவன் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றான் எனஅடுத்து நோக்குவோம். அ.ச. ஞானசம்பந்தன் சங்ககால இலக்கியங்களில் சிவன் பற்றிய குறிப்புகளைப்பின்வருமாறு நிலைப்படுத்தியுள்ளார்[9].

'கடவுள் உறைகின்ற இமயம்'
'எருக்கம் பூச்சூடும் கடவுள்'
காரியுண்டிக் கடவுள்'
'நன்றாய்ந்த நீணிமிர் சடை முதுமுதல்வன்'
'ஒங்கு மலைப் பெருவிற்பாம்பு நாண் கொள்இ'
ஒரு கணை கொண்டு மூவெயிலுடற்றிப்
பெரு விறலமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்
பிறை நுதல் விளங்கு மொரு கண்போல'
'நீல மணி மிடற்றொருவன் போல'
'ஆலமர் கடவுள் அன்ன நின் செல்வம்'
'முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே'
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக'

அத்துடன் கடவுள் வாழ்த்துப் பாடல்களிலும் காணப்படும் குறிப்புகளாக முக்கண்ணன், உமையொரு பாகன், மழுகணிச்சி, சூலப்படை உடையவன்,நெருப்புப் போன்ற நிறமுடையான், விடை ஏறுபவன், சடை உடையவன், நீல கண்டம் உடையவன், புலித்தோலாடை அணிபவன், உடுக்கை வாசிப்பவன், கால காலன் ஆகியன காணப்படுகின்றன[10].

எனினும் அகநானூற்றில்(167) காணப்படும் குறிப்பு சிவனது படிமம் கோயிலுள்ளே உள்ள கர்ப்பக்கிரகத்தில் ஓவியமாக வரைந்து வழிபடப்பட்டதையும் எடுத்துக் காட்டுகிறது[11]. ஆனால் அரிக்கமேட்டில் சர். மார்டிமர் வீலரின் ஆய்வுக்கு முன்னர் நடைபெற்ற அகழ்வுகளின் போது சுடுமண்ணினாலான சிவனின் தலைப்பகுதி ஒன்று கிடைத்தமையானது எதிர்கால ஆய்வுகள் இதே போன்ற தடயங்களை வெளிக் காட்டலாம் என்பதற்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது. இச்சுடுமண் பாவையில் சிவன் சடைமுடியுடன் காணப்படுகிறான்[12]. இத்தலை முடியைச் சுற்றி நாகப்பாம்பும், தலை முடியின் முன்பக்கத்தில் பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன. இவ்வாறு சிவனது உருவம் பொறித்த சிலைகள் தமிழகத்தில் அருகிக் காணப்படும் அதே நேரத்தில் சங்க கால நாணயங்களிலும் சிவனின் உருவம் சித்திரிக்கப்படவில்லை. ஆனால் வடஇந்திய நாணயங்களிலும் முத்திரைகளிலும் சிவன்து உருவம் பொறிக்கப் பட்டுள்ளமையைப் பின்வரும் சான்றுகள் மூலம் எடுத்துக் காட்டலாம்.

வட இந்தியாவில் கிடைத்த வெள்ளி முத்திரை நாணயத்தில் சிவன் ஒரு கையில் தண்டுடனும் மறு கையில் கெண்டியுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளமையை பனர்ஜி எடுத்துக் காட்டியுள்ளார்[13]. சில நாணயங்களில் சிவன் ஒன்று தொடங்கம் ஐந்து தலைகளுடனும் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு மழுவுடன் கூடிய திரிசூலம், உடுக்கு ஆகியன இவனது கைகளிலும் காணப்படுகின்றன. இன்னும் சிலவற்றுள் முன் பக்கத்தில் நந்தியும், பின் பக்கத்தில் வேலியிட்ட மரம் (தலவிருட்சம்). அதில் லிங்கம் ஆகியன காணப்படுகின்றன. இன்னும் சில நாணயங்களின் பின்பக்கத்தில் மழுவுடன் கூடிய திரிசூலம், வேலியிட்ட மரம் ஆகியன உள. குஷானிய மன்னர்களின் நாணயங்களிலும் சிவன் நந்தியுடனும், நந்தியின்றியும் சித்திரிக்கப்பட்டுள்ளான். இத்தகைய நாணயங்களை வெளியிட்டவர்களாக வேமகட்பிசஸ், கனிஷ்கர், குவிஸ்கர், வாசுதேவன் ஆகியோர் காணப்படுகின்றனர். வேமகட்பிசசின் தங்க, செப்பு நாணயங்களில் கரோஷ்டி வரிவடிவத்தில் சிவனின் நாமம் மகிஸ்வர (மகேஸ்வர) எனப் பொறிக்கப்பட்டுள்ளது.14 இது மட்டுமன்றித் தமிழகத்தின் வடஎல்லையிற் காணப்பட்ட சாதவாகனரின் நாணயங்களிலும் சிவவணக்கத்தோடு தொடர்புடைய பலசின்னங்களான எருது, திரிசூலம், நந்தி பாதம் ஆகியன காணப்படுகின்றன[15]. அத்துடன் சிவலிங்க வழிபாடும் இவர்கள் காலத்தில் மேம்பட்டிருந்ததைக் குடிமல்லத்திற் கிடைத்த சிவலிங்கம் எடுத்துக் காட்டுகிறது. இதன் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டாகும்.

சிவலிங்க வழிபாடு தமிழகத்திற் காணப்பட்டதற்கான இலக்கிய தொல்லியற் சான்றுகள் உள. சங்க இலக்கியங்கள் குறிக்கும் 'கந்து' 'தறி' ஆகியன சிவலிங்கத்தையே குறித்தன எனக் கருதப்படுகிறது[16]. இவற்றுள் கூறப்படும் 'கருத்தாள் கந்து' என்பது நடுதறியாக அமைக்கப் பெற்று இதன் அடிப்பகுதி பருத்தும் நுனிப்பகுதி சிறுத்தும் இருந்ததையே எடுத்துக்காட்டுகிறது எனவும் கூறப்படுகிறது. சிவலிங்க வழிபாட்டின் ஆரம்பம் பற்றி ஆராய்ந்தோரும் ஆவுடையார் இன்றித் தனித்தறியாகவே இது காணப்பட்டது என்றும் பின்னர்தான் அபிஷேகப்பொருள்கள் தங்குவதற்காக ஆவுடையார் இதன் அங்கமாகியது எனவும் கருதுகின்றனர்[17]. இத்தகைய தறிகள் மரத்தினால் ஆக்கப்பட்டதால் இவை கால வெள்ளோட்டத்தில் அழிந்து விட்டன எனலாம். தொல்காப்பியம் கூறும் 'கந்தழியும்' இக்கந்துவைக் குறித்தது என்றே கருதப்படுகிறது. திருக்காம்புலியூர் அகழ்வின்போது கிடைத்த சுடுமண்ணிலான நாகலிங்கமும் பல்லவர் காலத்திற்கு முந்தியதே ஆகும்.

ஈழத்திலும் லிங்க வழிபாடு காணப்பட்டதற்கான இலக்கிய தொல்லியற் சான்றுகள் உள. அநுராதபுரத்தில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவனாகக் கருதப்படும் பண்டுகாபயன்

காலத்தில் சிவலிங்க வழிபாடு காணப்பட்டதை மகாவம்சத்தில் காணப்படும் 'சிவிகசாலா' என்ற குறிப்பு எடுத்துக்காட்டுகிறது எனக் கருதப்படுகிறது[18]. இவ்வாறே சுடுமண்ணினாலான தறிகளும் ஆய்வுகளின்போது கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது[19].

சங்ககாலத்தில் காணப்பட்ட சிவலிங்கவழிபாட்டிற்கான நாணயச் சான்றுகளும் உள. இதற்கான ஆதாரம் சங்க காலப் பாண்டியரது நாணயங்களில் உள[20]. ஒரு சென்டிமீட்டர் சதுரமுள்ள செப்பு நாணயத்தின் முன்பக்கத்தில் மூன்று அடுக்குகளையுடைய மலை, அதன் மேல் சிவலிங்கம், வேலியிட்ட மரம், தொட்டியில் ஆமை ஆகியன காணப்படுகின்றன. மறுபக்கத்தில் உருவகப்படுத்தப்பட்ட மீன் உளது. இதே பரிமாணமுள்ள மற்றைய நாணயத்திலும் இடது பக்கத்தில் வேலியிட்ட மரம், வலது பக்கத்தில் தொட்டியில் ஆமை, மீன், காளைத்தலை, சிவலிங்கம் ஆகியன காணப்படுகின்றன. இதன் மறுபக்கத்தில் உருவகப்படுத்தப் பட்ட மீன் உளது. சங்க இலத்தியங் களில் இமயத்தில் உறைபவனாகச் சிவன் சித்திரிக்கப்படுவதால் இம்மலை இமயத்தைக் குறிக்கலாம். ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளிலும் சிவனது மலையாகிய 'கைலாசம்' 'கெலச' எனக் கூறப்பட்டுள்ளமை ஈண்டு அவதாணிக்கத்தக்கது[21]. இவ்வாறே இந்நாணயங்களிலுள்ள 'லிங்கம்' அவனது அருவுருவத் திருமேனி யையும், காளை அவனது ஊர்தியையும் சுட்டுகின்றன எனலாம். வேலியிட்ட மரம் கூட ஒரு சமயம் ஆலமரத்தினைக் குறிக்கலாம். 'ஆல்கெழுகடவுளுக்குரிய இம்மரம் ஈழத்திலும் சமகாலத்தில் புனித மரமாகப் பேணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது[22].

சிவனது ஊர்தியாகிய எருது வழிபாடுகூட வடஇந்தியாவைப் போன்று தென்னகத்திலும் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தையுடையது. தென்னிந்தியப் புதிய கற்காலக் குடியிருப்புகளிற் காணப்படும் இதன் உருவங்களும், கற்பாறைகளிற் தீட்டப்பட்ட, பொளியப்பட்ட உருவங்களும் அக்காலத்தில் இது பெற்றிருந்த முக்கியத்துவத்தினை எடுத்தியம்புகின்றன[23]. புதிய கற்காலக் குடியிருப்புகளில் காணப்படும் சாம்பல் மேடுகள் கூட மந்தைகளின் சாணக் குவியல்கள் எரிக்கப்பட்ட இடங்களாகும். இச்சாணக் குவியல்கள் எரிந்த சாம்பல்தான் திருநீறானதும். இந்திருநீறுதான் இன்னும் சைவர்களின் சின்னமாக விளங்குவதும் கருத்திற் கொள்ளத்தக்கது. இதைவிடத் தமிழகத்தின் மிகப் பழைய நாணயங்களாகிய முத்திரை நாணயங்களிலும் எருதின் சின்னம் காணப்படுகிறது. இவ்வாறே சங்ககால நாணயங்களிலும் எருது தனியாகவும், நந்திபாதம், காளைத்தலை ஆகியவற்றின் மூலமும் சித்தரிக்கப்பட்டுள்ளது[24]. இத்தகைய குறியீடுகள் ஈழத்து நாணயங்களிலும் காணப்படுகின்றன[25]. ஈழத்துப் பிராமிக்

கல்வெட்டுகளிலும் நந்தியை நினைவுபடுத்தும் விதத்தில் நதிக, வசப (விருசப) ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன[26]. அத்துடன் 'நதிக' என்ற பதம் காணப்படும் கல்வெட்டொன்றில் நந்திபாதம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய சான்றுகள் இக்காலத்தில் நந்தியைச் சிவனாகக் கருதி மக்கள் வழிபட்டனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. சிவ சின்னங்களில் ஒன்றாகிய திரிசூலம் பெருங்கற்காலந்தொட்டுப் பானை ஓடுகளிலும் குறியீடாக உளது. வட இந்திய நாணயங்களில் காணப்படும் மழுவுடன் கூடிய திரிசூலமும் சங்க கால நாணயங்களில் இடம் பெற்றுள்ளது.

சங்க காலத்தில் கோயில்கள் 'பொதியில்' 'அம்பலம்' என் அழைக்கப்பட்டன. மரங்களின் 'கீழே காணப்பட்ட கோயில்கள் மட்டுமின்றிச் செங்கற்களை உபயோகித்துக் கட்டப்பட்ட கோயில்கள் பற்றியும் அகநானூறு போன்ற நூல்களில் குறிப்புகள் உள[27]. இக்கோயில்கள் பற்றிக் காணப்படும் வர்ணனையை நோக்கும்போது இவைகள் விசாலமாகவும் காணப்பட்டமை தெரிகிறது. செங்கற்களும் இக்காலத்தில் பயன்பாட்டில் காணப்பட்டதைத் தமிழகத்தின் வரலாற்றுக் கால மையங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் எடுத்துக் காட்டினாலும் கூட, இன்றுவரை இவ்வகழ்வுகளில் 'சிவஸ்தலம்' ஒன்று கூட கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குத் திட்டமிட்ட முறையில் விரிவான அகழ்வுகள் மேற்கொள்ளப்படாமையும் ஒரு பிரதான காரணமாக இருக்கலாம். ஆனால் தமிழக்கதின் வடக்கே உள்ள கர்நாடக, ஆந்திர மாநிலங்களில் சிவன் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கான சான்றுகள் உள[28]. சாதவாகன மன்னனாகிய வசிஷ்டி மகாகண்ட சிவன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிடுகிறது. மகேஸ்வரர் கோயிலுள் கிடைத்துள்ள வசிஷ்டி புத்ர சிவ சிறீ புளுமாவி (கி.பி.145-155) காலத்திற்குரிய கல்வெட்டு ஒன்று சிவலிங்கத்தோடு கூடிய ஆலயம் பற்றிக் குறிப்பிடுகிறது. எஸ்.ஆர். ராவினால் ஆய்கொளே பட்டடக்கல் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வுகளின்போது சாதவாகனரது நாணயங்களுடன் செங்கற்களினால் கட்டப்பட்ட கோயில்கள் பற்றிய சான்றுகளும் வெளி வந்துள்ளன. கதம்ப வமிச மன்னனாகிய காகுஸ்தவர் மனின் தல குண்டக் கல்வெட்டு ஸ்தானகுண்டேஸ்வரவிலுள்ள சிவன் சாதகர்னிகளால் வழிபடப்பட்டதைக் கூறுகிறது. இவ்வாறே கதம்ப மன்னனாகிய சாந்திவர்மனின் காலக் கல்வெட்டு சாதகர்னிகளும் ஏனையோரும் பரமேஸ்வரனை வழிபட்டதைக் கூறுகிறது.

தமிழகத்தை அண்டியுள்ள ஈழத்திலும் கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழகத்தைப் போல் சிவனது ஆலயங்களை

அமைக்கும் மரபு நன்கு வேரூன்றியிருந்ததை மகாவம்சம்[29]. போன்ற பாலி நூல்களிலும், யாழ்ப்பான வைபவமாலை[30] போன்ற தமிழ் நூல்களிலும் காணப்படும் குறிப்புகள் உறுதி செய்கின்றன.

மேற்கூறிய சான்றுகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைவதுதான் தமிழகத்திற் கிடைத்த பாண்டியர் பெருவழுதி நாணயங்களாகும். இதைப் பற்றிக் இரா. கிருஷ்ணமூர்த்தி எடுத்துக் காட்டியுள்ளார்[31]. முதலாவது நாணயம் நீள் சதுரமானது. இதன் பரிமானம் 1.8 X 1.7 செ.மீ ஆகும். எடை 8 கிராம் ஆகும். இதன் முன்பக்கத்தில் காணப்படும் இரு மலைக்குன்றுகளில் ஒன்றில் பிறைச்சந்திரன் காணப்படுகின்றது. இவற்றின் நடுவில் கோயில் சித்திரிக்கப்பட்டுள்ளது. கீழ்வரிசையிலுள்ள சின்னங்களில் யானை, மற்றும் வேலியிட்ட மரம் ஆகியன முக்கியமானவையாகும். இவற்றினை விரிவாக நோக்கும்போது மலையும், பிறைச்சந்திரனும் சிவனின் சின்னங்களாகும். இவ்வாறே வேலியிட்ட மரம்கூடத் தல விருட்சமாகும். ஐந்து தூண்களுடன் காணப்படும் ஆலயம் இக்காலச் சிவன் கோயிலமைப்பை உறுதி செய்கிறது எனலாம். இந்நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரது சின்னங்களாக நான்கு தூண்களுடன் கூடிய கோயில், கேணியில் முதலை, நந்தி, காளைத்தலைகள் ஆகியன காணப்படுகின்றன. ஆலயத்தின் அங்கமாக நீர்நிலை விளங்குவதையே இங்கே சித்திரிக்கப்பட்டுள்ள கேணியில் காணப்படும் முதலை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறேதான் பிற சின்னங்களும் ஆலயத்தின் சிவவழிபாட்டுடனான தொடர்பையே விளக்குகின்றன. இத்தகைய பாண்டியர் பெருவழுதி நாணயங்கள் ஈழத்திலுள்ள கந்த ரோடையிலும் கிடைத்துள்ளன. இவற்றுள் சற்று வேறுபாடு காணப்படுகின்றது. இங்கே ஆலயத்தின் முன்னே காணப்படும் மழுவுடனான திரிசூலம் காணப்படுகிறது. இத்தகைய சின்னங்கள் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட ஒளதும்பரது (கி.மு.200-100) நாணயங் களிலும் காணப்படுவதால் இதனை ஒரு சிவஸ்தலமாகவே ஆக்கி விடுகிறது. இத்தகைய கோயிலமைப்பும் வடநாட்டில் காணப்பட்டதை உத்தர பிரதேசத்திலுள்ள சொககௌராவில் கிடைத்துள்ள செப்பேட்டில் காணப்படும் கோயிற் சின்னம் எடுத்துக்காட்டுகிறது[32]. இச்சான்றுகள் தமிழக-ஈழ இலக்கியங்களிற் சாணப்படும் சிவ ஆலயங்கள் பற்றிய செய்திகள் வெறும் கட்டுக்கதை அல்லவென்றும் மாறாக அக்காலத்தில் வழக்கிலிருந்த சிவ ஆலயங்கள் பற்றிய செய்திகளே என்பதை உறுதிப்படுத்தும். அதே நேரத்தில் சிவவழிபாட்டு மரபிலும், கோயிலமைப்பு மரபிலும் தமிழகமும் ஈழமும் கருத்துப் பரிமாற்றமும் கொண்டிருந்தன என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

சங்க கால வழிபாட்டு மரபுகள் பற்றிய சான்றுகள் நமக்குக் கிடைக்காவிட்டாலும் கூட அகநானூற்றில் வரும் பின்வரும் பாடல் [33]

மறுகுவிளக்குறுத்து மாலை தூக்கிப்
பழ விறன் மூதூர்ப் பலருடன் றுவன்றிய
விழவுடணயர் வருகதில்லம்ம

அக்காலத்தில் மெழுகுதல், விளக்கேற்றல், மலர்களைக் கொண்டு வழிபாடு இயற்றுதல் ஆகியன வழக்கிலிருந்ததை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறே பட்டினப்பாலை[34], சிவனது ஆலயத்தில் (கந்துடைப் பொதியில்) மாலை நேரங்களில் மகளிர் நீராடி, ஆலயத்தை மெழுகி, அணையாத விளக்கை ஏற்றி மலர்மாலை சூட்டி வழிபட்டதைக் குறிப்பிடுகிறது. கரங்கூப்புதல், தாழ்ந்து வணங்குதல், வலம் வருதல் ஆகியனவும் இவ்வழிபாட்டில் இயைந்திருந்ததைக் கலித்தொகை போன்ற நூல்களிற் காணப்படும் குறிப்புகளும் எடுத்துக்காட்டுகின்றன.[35]

முடிவுரை

1) மிக நீண்ட பக்தி மரபையும், அதன் வழிவந்த சைவ இலக்கியப் பாரம்பரியத்தையும், சைவ கலைச்சின்னங் களையும் உடைய பண்டைய தமிழகத்தில் நாயன்மார் களின் காலத்திற்கு முன்னருள்ள இப்பாரம்பரியம் பற்றி நாம் அறிந்து கொள்வதற்குரிய தடயங்கள் யாவை என்பதுதான் இன்று நம்மை எதிர்நோக்கும் கேள்வியாகும். இத்தகைய எழுச்சி வெளியிலிருந்து ஏற்பட்ட தாக்கத்தினாலோ அன்றி உள்ளூரில் ஏற்பட்ட சமய வளர்ச்சியின் பரிணாம வளர்ச்சியாலோ ஏற்பட்டது என்பதும் நம்மை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும்.

2) சங்க நூல்களில் காணப்படும் 'முதுமுதல்வன்' 'கடவுள்' போன்ற பதங்களை நோக்கும் போது இத்தகைய வழிபாட்டின் தொன்மை தெரிகிறது என்பது புலனாகிறது. மாயோன், சேயோன் போன்ற கடவுளரின் வழிபாடுகளைப் போல செல்வாக்குடனான வழிபாட்டு நெறியாக இது காணப்படாவிட்டாலும் கூடப் பழைமையான வழிபாட்டு நெறியாக விளங்கியதோடு மட்டுமன்றித் தென்னாசியா முழுவதிலும் பரந்த ஒரு நெறியாகவும் காணப்பட்டது தெரிகிறது.

3) சேயோன் வழிபாட்டில் வட இந்திய சுப்பிரமணியன், கார்த்திகேயன், போன்றோரின் அமிசங்களும், மாயோன் வழிபாட்டில் விஷ்ணுவின் அம்சங்களும் கலந்து சங்கமித்தது போல் வட இந்திய வேதகால, இதிகாச புராணங்களின் அமிசங்கள் பல ஏற்கனவே தமிழகத்தில் காணப்பட்ட சிவ வழிபாட்டில் சங்கமித்திருக்கலாம்.

4) இதனையே வட, தென் இந்தியசிவ வழிபாடுகளின் எச்சங்களாக விளங்கும் இலக்கியங்கள், நாணயங்கள் ஆகியனவும் எடுத்துக் காட்டுகின்றன. சிவ வழிபாட்டுடன் இணைந்த சிவலிங்க வழிபாடு, காளை, திரிசூலம்,திரிசூலத்துடன் கூடிய மழு, ஆலய மரபு ஆகியனவும் இத்தகைய வழிபாட்டில் காணப்பட்ட பொதுத்தன்மைகளை எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன.

5) இத்தகைய பழைய வழிபாட்டுக் கடவுளைப் பெயர்கொண்டு அழைப்பதை இலக்கியம் படைத்தோர் விரும்பாமலும் இருக்கலாம். மாறாக அவனின் பண்புகளை எடுத்துக் கூறுவதுதான் அவனின் சிறப்பை அங்கீகரிக்கும் செயலாக இருக்கும் எனவும் கருதியிருக்கலாம்.

6) இதனாற்போலும் சிலைகளைவடிப்பதற்குப் பதிலாக, அவனின் குறியீடுகளாக திரிசூலம், நந்தி, தறி, கந்து, எருது ஆகியன ஆரம்பத்தில் வழிபடப் பட்டிருக்கலாம். இத்தகைய மரபு ஆரம்பத்தில் பௌத்த கலையிலும் காணப்பட்டது. நாட் செல்லத்தான் புத்தரின் சிலை உருவாகக்பட்டது. இதே போன்ற நிலை சிவ வழிபாட்டிலும் காணப்பட்டிருக்கலாம்.

7) இத்தகைய இரு நிலைகளைத் தமிழகச் சிவ வழிபாட்டிலும் காணலாம். இச்சிலைகளையோ அன்றி ஆலயங்களையோ ஆக்குவதற்குக் கருங்கற்களைப் பயன்படுத்தும் மரபு பல்லவர் காலத்திற்கு முன் காணப்படவில்லை. பெரிய அமங்கலத் தேவை களுக்குப் பயன்படுத்தப்பட்ட இவற்றைக் கொண்டு ஆண்டவனின் சிலைகளையோ அன்றி உறைவிடங்களையோ அமைப்பது பொருத்தமற்றது எனக் கருதியிருக்கலாம்.

8) இதனாற்றான் வழிபாட்டுக்குரிய சிலைகள் ஆரம்பத்தில் சுடுமண்ணினாலும் மரத்தினாலும் ஆக்கப்படக் கால வெள்ளோட்டத்தில் இவை அழிந்து விட்டன. கட்டடங்களைச் செங்கற்களால் கட்டினர். தமிழகத்தில் விரிவான முறையில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும்போது இவை பற்றிய விரிவான தடயங்கள் கிட்டலாம். அண்மையில் முனைவர் இரா. நாகசாமி கரூரில் கிடைத்த நாணயங்களிலும் கி.பி.2ஆம்,3ஆம் நூற்றாண்டிற்குரிய உருவ அமைதி கொண்ட துர்க்கையின் அழகிய சிற்பம் பற்றி எடுத்துக்காட்டியுள்ளதை நோக்கும் போது இத்தகைய வார்ப்புக்கலை தமிழகத்தில் பழமையான பாரம்பரியத்தையுடையது என்பதை எடுத்துக்காட்டுகின்றது[36]. இத்தகைய நிலை சுடுமண்பாவைகளுக்கும் பொருந்தும்.

9) சிவ வழிபாடு பற்றித் தடயங்கள் தமிழகத்தில் அருகில் காணப்படும் சூழலில் தமிழகத்தின் வடக்கிலும், தெற்கிலும் இவ்வழிபாடு பற்றிக் காணப்படும் தடயங்களை ஒப்பு நோக்கியமை தமிழகத்தின் இவ் வழிபாட்டை மேலும் வலுப்படுத்தி ஆராய உதவியுள்ளது.

10) எனினும், இவ்வழிபாடு பற்றிய சான்றுகளைத் திட்டமிட்ட கள ஆய்வுகளும், அகழவாய்வுகளுமே தரும் என்பதையும் இங்கே அழுத்திக் கூற வேண்டியது அவசியமாகின்றது.

அடிக்குறிப்புகள்

1. Wheeler, R.E.M. 1946. Arikamedu, An Indo-Roman trading station on the east coast of India in *Ancient India* No.2 Plate XXXVI
2. Sarma, I.K. *Religion in Art and Historical Archoeology of South India: Contacts and Correlations* (Madras) 1987.p.34
3. Banerjee, J.N. *Puranic and Tanctric Religion* (Calcutta) 1966.P.44
4. Banerjea, J.N. *The Developement of Hindu Iconography* Fourth Edition (New Delhi) 1985 p.85
5. மு.கூ, நூல் 1985,ப.46.
6. Banerjea, J.N. 1966. p.46.
7. Geiger. W. (Tran & Ed.) Mahavamsa (Colombo) 1960.
   Ch. X.V.29; Ch.XI. V.I; Ch.XXX. V.I.
8. Paranavitana, S.(ed) Inscriptions of Ceylon, Vol. I Early Brahmi Inscriptions (Colombo) 1970.
9. ஞானசம்பந்தன, அ.ச. பெரிய புராணம் ஓர் ஆய்வு சென்னை 1987, ப.61-64.
10. மே.கூ.நூல் ப.76
11. மே.கூ. நூல் ப.66
12. Wheeler. R.E.M. மு.கூ.நூல் ப 1946
13. Banerjea. J.N. மு.கூ.நூல் ப 47&49
14. மே. கூ. நூல் ப.48
15. Sarma, I.K. *Coinage of the Satavahana Empire* (Delhi) 1980.
16. ஞானசம்பந்தன். அ.ச. மு.கூ. நூல் ப. 64-65
17. Subramaninam Pillai. G. *Tree Worship and Ophiolatry* (Annamalai) 1948.
18. Geiger. W. மு.கூ. நூல் Ch. X.V. 102.
19. Deraniyagela. P.E.P. The Maradanmaduva Tobbova Culture of Ceyion, in *Spolia Zeylanica.* Vol. 29. Part I, 1960. pp. 92194; Deraniyagala, P.E.P. Some new records of the Tabbova-Maradan-Maduva Culture of Ceylon-*Spolia Zeylanica*, Vol. 21, Part II, 1961, pp. 249-271.
20. Krishnamurthy. R. Sangam Age Tamil Coins Madras 1997, 31-32.
21. Paranavitana. S. மு.கூ. நூல். In. No.1025
22. Geiger W. மு.கூ. நூல் Ch. X.V. 89
23. சிற்றம்பலம். சி.க. பண்டைய தமிழகம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வெளியீடு (திருநெல்வேலி) 1991.ப.52.
24. Krishnamurthy, R. மு.கூ.நூல்
25. Codrington. H.W. *Ceylon Coins and Currency* (Colombo) 1924. pp. 16-24.
26. Paranavitana,S. மு.கூ. நூல் In Nos. 148, 153, 166, 233a, 233b, 322, 328, 457, 498, 578, 667, 744, 781a, 962, 1171, 1180.
27. ஞான சம்பந்தன், அ.ச., மு.கூ. நூல் ப. 65
28. Sarma, I.K. மு.கூ.நூல் 1987, 66-67
29. Geiger.W. மு.கூ. நூல் Ch. X.C. 90.

30. சபாநாதன். குலு. யாழ்ப்பான வைபவமாலை (சன்னாகம்) 1949 கொழும்பு. ப.6.
31. Krishnamurthy. R. மு.கூ.நூல் 34-36
32. மே.கூ.நூல் பக்கம் 35.
33. சிற்றம்பலம் சி.க. ஈழத்து இந்து சமய வரலாறு யாழ்ப்பாணப் பலகலைக்கழக வெளியீடு (கொழும்பு) 1996 ப. 367.
34. ஞானசம்பந்தன். அ.ச.மு.கூ. நூல் ப.64. பட்டினப்பாலை பாடல் 246-249.
35. சிற்றம்பலம். சி.க. மு.கூ. நூல் 1996. ப. 367.
36. Nagaswamy R. Roman Karur, P., 35, Chennai, 1995.

47. பல்லவர் சாசனங்களில் சமணம்

டாக்டர் கோ. விசயவேணுகோபால், பாண்டிச்சேரி

தமிழகத்தின் மிகப் பழமையான எழுத்துச் சான்றுகள் சமணம் சார்ந்தவை. பாண்டியநாட்டின் பல பகுதிகளில் கிடைக்கும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் இதற்குத் தக்க சான்றுகளாகும். இடையில் தென்பகுதிகளில் தொய்வு ஏற்படினும் சமணம் தொடர்ந்து கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை பாண்டிய நாட்டிலும் வடமாவட்டங்களிலும் விளங்கி வந்துள்ளது. பல்லவ மன்னர்களும் சமணத்தை ஆதரித்து நிவந்தங்கள் பல அளித்துள்ளனர். பல்லவ மன்னன் சிம்ம வர்மன் காஞ்சியில் ஆட்சியிலிருந்தபோது அவனது 22ஆவது ஆட்சியாண்டில் பாடலிபுரம் என்றழைக்கப்பட்ட திருப்பாதிரிப் புலியூரில் ''லோகவிபாகம்'' என்ற திகம்பர சமணர்களின் மதநூல் எழுதப்பட்டது. (பல்லவர் செப்பேடுகள் முப்பது, பல்லவர் வரலாற்றுச் சுருக்கம், பக்:viiiதமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை-28 முதற்பதிப்பு 1966); மேலும் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் தாய் அருகக் கடவுளுக்குக் கோயில் ஒன்றும் எழுப்பியுள்ளான். இதன் வழித் தொடக்ககாலப் பல்லவர் காலத்தே சமணத்திற்கு நல்ல ஆதரவு இருந்தமை புலனாகின்றது. இனி இக்கட்டுரையில் பல்லவர் சாசனங்களாகிய செப்பேடுகள், கல் வெட்டுக்கள் வழி நமக்குத் தெரியவரும் சமணம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

1. பள்ளங்கோவில் செப்பேடுகள்

பல்லவர் சாசனங்களில் நமக்குக் கிடைக்கும் பழமையான சாசனம் பள்ளங்கோவில் செப்பேடுகளாகும். இவை தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தாலுகாவைச் சேர்ந்த பள்ளங்கோவில் என்ற ஊரில் கிடைத்தவை. இச்செப்பேட்டு வாசகங்கள் தமிழிலும் சமஸ்கிருத த்திலும் அமைந்துள்ளன. பல்லவக் கிரந்தம் எனும் எழுத்து வகையில் இவை பொறிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் சிம்மவர்மன் எனும் பல்லவ அரசன் தன் ஆறாவது ஆட்சியாண்டில் இச்செப்பேடுகளை வெளியிட்டு ள்ளான். இவற்றின் காலம் கி.பி 546 ஆகும். செப்பேடுகளின் முதற்பகுதி சமஸ்கிருதத்தில் அமைந்துள்ளது. சினேந்திரர், முனீந்திரர், தேவேந்திரர் ஆகிய மூவர் வணக்கத்தோடு இப்பகுதி தொடங்குகிறது. இதன் வழிப் பல்லவர் காலத்தே சமணர் எழுத்துவழக்கிற் பின்பற்றி வந்த வணக்கமரபு நமக்குப் புலனாகின்றது. அரசன் எம்மதத்தைத் சார்ந்தவனாயினும் தான் தானம் வழங்கும் சமணமரபினைப் பின்பற்றிச் செப்பேட்டு வாசகங்களை அமைத்திருப்பது அன்றையச் சமயச் சூழலுக்கு நல்ல எடுத்துக்காட்டு.

பின்னர் அம்புஜநாப (விஷ்ணு) னிடமிருந்து தொடங்கி ஆங்கிரஸ், பிரஹஸ்பதி, ஸம்யா, பாரத்வாஜர், துரோணர் (அஸ்வத்தாமன்) வழிப் பல்லவர் வந்தனர் எனப் பல்லவ அரசமரபினரை விவரிக்கிறது. இம்மரபில் தோன்றியவனே சிம்மவர்மன். இப்பல்லவ மல்லன் ஜினேந்திர வழிபாட்டிற்காக வர்த்தமானீஸ்வர தீர்த்தத்தைச் சேர்ந்த நந்தி சங்க மரபைப் பின்பற்றும் சமண நூற் புலமை மிக்க வஜ்ஜிரநந்தி என்பார்க்கு 'ஸ்ரமணாஸ்ரம்' என்ற கிராமத்தைத் தானமாகக் கொடுத்த செய்தியை எடுத்து விளக்குகிறது. அரசனது ஆணையை நிறைவேற்றி வைத்தவன் நரபயன் என்ற அமைச்சன்; இம்மெய்க் கீர்த்தியைப் பாடியவன் மேதாவி என்ற பெரும்புலவன்.

செப்பேட்டின் தமிழ்ப்பகுதி பல்லவ நாட்டின் நிருவாகத் தன்மையை விளக்கும் வகையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சிம்மவர்மன் தன் ஆறாவது ஆட்சியாண்டில் வெண் குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டாருக்கு விடுத்த திருமுகத்தில் 'அமண் சேர்க்கை' என்ற சிற்றூரைப் பருத்திக்குன்றில் உள்ள வஜ்ஜிரநந்திக் குரவர்க்குப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்த செய்தி தரப்பட்டுள்ளது.

2. காஞ்சிபுரம் துண்டுக் கல்வெட்டு
இரண்டாம் நரசிம்ம வர்மன்

அடுத்து நமக்குக் கிடைக்கும் கல்வெட்டு காஞ்சிபுரத்தி லுள்ள காமாட்சியம்மன் திருக்கோவிலின் பழம்பொருள் வைக்கும் அறைக்கருகில் கிடக்கும் கல்லில் பொறிக்கப் பட்டுள்ளதாகும். கி.பி. 9ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியிலுள்ள இக்கல்வெட்டில் நரசிங்கப் போத்தரையர் என்பவர் குறிக்கப் பெறுகிறார். (இ.க.சூ. 1954 - 55 / 360) கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இப்பெயரில் எந்தப் பல்லவ அரசனும் ஆட்சியிலில்லை. நரசிங்கப் போத்தரையர் என்ற வழக்கு பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்ம வர்மனுக்குண்டு. எனவே இம்மன்னன் தன் காலத்தே வெளியிட்ட கல்வெட்டின் நகலாக இஃது இருக்கலாமெனக் கருதுவர் அறிஞர். எனவே இக்கல்வெட்டு கி.பி.708-709 ஐச் சார்ந்ததாகலாம். இக்கல்வெட்டு லோகமகாதேவி எனும் பல்லவப் பேரரசிக்குப் பிரம்மராக்ஷஸம் எனும் பேய் பிடித்ததையும் இதனைப் போக்க மகிழம்பள்ளி என்ற ஊரிலுள்ள அறிவர் கோயிலைச் சார்ந்த ஆசார்யர் ஒருவர் உதவிசெய்தமையையும் குறிப்பிடுகிறது. இரண்டாம் நரசிம்ம வர்மனின் பட்டத்தரசிகளுள் ஒருத்தியின் பெயர் லோகமாதேவி என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன்வழி அக்காலத்தே சமணக் குரவர் மருத்துவ முறைகளைப் பின்பற்றி மக்களுக்குத் தொண்டு செய்த வரலாறு நமக்கு விளங்குகிறது. இம்மகிழம்பள்ளி யாங்குளதென அறியக் கூடவில்லை.

இரண்டாம் நந்திவர்மன் கல்வெட்டுக்கள்

இரண்டாம் பரமேசுவர வர்மன் கங்க அரசனுடன் நடத்திய போரில் உயிர் நீத்த பிறகு பல்லவ மன்னனாகப் பொறுப்பேற்றவன் இரண்டாம் நந்திவர்மன். இவன் பல்லவ வம்சாவளியின் பிறிதொரு கிளையைச் சேர்ந்தவன். வடார்க்காடு மாவட்டம் வந்தவாசித் தாலுகா கீழ்ச் சாத்த மங்கலம் எனும் ஊரில் சந்திரநாதசுவாமி திருக்கோவில் அருகிலுள்ள 'பெருமாள் பாறை' என மக்களால் வழங்கப் பெறும் பாறையில் ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இம்மன்னனின் 14ஆம் ஆட்சியாண்டில் இது வெளியிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் காலம் கி.பி.745 ஆகும். இக்கல்வெட்டின் 6ஆவது வரியில் வரும் 'அப்பநந்தி' என்பதைப் பவணந்தி என வாசிக்கலாம் எனக் கருதுவர் இதனைப் பதிப்பித்த திரு டி.வி.மகாலிங்கம் அவர்கள். இதன்படி இளையார் பவணந்தி என்பவர் சமணத் தவசியர்க்கு உணவளிப்பதற்கு ஏழு கழஞ்சு பொன் கொடுத்த செய்தி இங்குக் குறிப்பிடப்படுகிறது. இவ்வுணவு சமணப் பள்ளியில் உள்ளவர்க்கு இல்லை எனக் குறிப்பிடப்படுவதால் பிற இடங்களிலிருந்து வரும் தவசியர்க்குப் பிச்சையாக அளிக்கப்பட்டதெனத் தெரிகிறது. இப்வேழு கழஞ்சு பொன்னைக் கொண்டு கழஞ்சுக்கு ஓர் உழக்கு வீதம் அரிசி வழங்கப் பட்டது. இவ்வறத்தை ஊரார் தாம் காப்பதாக உறுதியளித்துள்ளனர். இவ்வறத்தை அழிப்போன் காமக் கோட்டத்தை (அதாவது இயக்கி கோயிலை) அழித்த பாவத்தில் போவான் எனவும் இதற்கு முட்டு (தடை) ஏற்படில் நாளொன்றுக்கு ஒரு காடி நெல் தண்டமாகக் கோயிலுக்கு வழங்கப்படும் எனவும் இப்பொன் (ஏழு கழஞ்சு) தட்டார் கட்கு உரிமையாகாது எனவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கி.பி.745இல் சமணத் துறவியர்க்குச் சாத்தமங்கலத்தில் உணவளிக்கப்பட்ட வரலாறு இக்கல்வெட்டின் வழித்தெளிவாகிறது. இன்றும் சாத்த மங்கலம் தமிழ்ச் சமணர் பெருமளவில் வாழும் ஊராகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

வடார்க்காடு மாவட்டம் வாலாஜா பேட்டைத் தாலுகா ஆற்காட்டிற்கருகிலுள்ள பஞ்ச பாண்டவர் மலை எனப்படும் மலையில் குகையின் மேல்தளத்தில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இரண்டாம் நந்திவர்மனின் ஐம்பதாவது ஆட்சியாண்டில் இது வெளியிடப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.781 ஆகும். பஞ்ச பாண்டவ மலையின் பழையபெயர் திருப்பான்(ண்) மலை என்பதாகும்.

இங்கு குறிப்பிடப் பெறும் இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டில் 'பொன்னியக்கியார் படிமம்' என இயக்கியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே மிகப் பழமையான இயக்கியின் உருவம் கல்வெட்டுச் சான்றோடு கிடைப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இப் பொன்னியக்கி யாரென்பது குறித்து

விளக்குவதற்கு முன் கல்வெட்டு வாசகத்தைக் காண்போம்.

நந்திப் போத்தரஸர்க்கு ஐ(ம்)பதாவது நாக(ண)ந்தி குர(வர்) (இரு)க்க பொன்னிய(க்)கிய(ா)ர் படிமம் கொட்டு வித்தா(ன்) புகழாலை மங்க(ல)த்து மருத்துவர் மகன் நாரணன்.

இக்கல்வெட்டினை முதன்முதலில் பதிப்பித்த திரு வி. வெங்கய்யா அவர்களும், பல்லவர் கல்வெட்டுக்களைப் பதிப்பித்த டி.வி.மகாலிங்கம், தென்னிந்தியாவில் சமணம் பற்றி எழுதிய பி.பி.தேசாய், இரா. நாகசாமி இப்பொன்னியக்கியார் மகாவீரருடைய இயக்கியாகிய சித்தாயிகாவைக் குறிக்கும் என விளக்கியுள்ளனர். கே.வி.இராமன் இதனைச் 'சுவாலாமாலினி' என்ற இயக்கியைக் குறிப்பதாக குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துக்களை மறுத்து வெ. வேதாசலம் தம் ''இயக்கி வழிபாடு'' என்ற நூலில் பொன்னியக்கியார் என்பது கூஷ்மாண்டினி என்றும் அம்பிகா என்றும் குறிப்பிடப் பெறும் தருமதேவியேயாகும் எனத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

கல்வெட்டுக்கருகில் காணப்படும் சிற்பத் தொகுதியில் அம்பிகாவின் அருகில் நிற்கும் உருவம் கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் ஆசார்யர் நாக நந்தியேயாகும் எனத் வெங்கய்யா உள்ளிட்ட பலரும் எழுதியுள்ளனர். வெ.வேதாசலம் இது நாகநந்தியின் உருவமன்று எனவும் அம்பிகாவின் வரலாற்றில் குறிப்பிடப்பெறும் அவளது கணவனின் உருவமேயென்றும் விளக்கியுள்ளார். பாண்டிய நாட்டுக் கழுகுமலையில் காணப்பெறும் உருவமும் (அம்பிகாவின் அருகில்) அவளது கணவனது உருவமே என அவர் மேலும் விளக்கியுள்ளார். கல்வெட்டைப் பதிப்பித்த வெங்கய்யா அடிக்குறிப்பில் கழுகுமலையில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டினை எடுத்துக் காட்டிக் கழுகுமலையிலும் நாகநந்தி ஒரு திருமேனிசெய்வித்துள்ளார் என எடுத்துக் காட்டியுள்ளார். நாகநந்தி செய்வித்த திருமேனி வேறாயினும் திருப்பாண்மலையிலும் கழுகுமலையிலும் நாகநந்தி தொடர்புபடுத்தப்படுவதால் இரு புடைப்புச் சிற்பங்களிலும் அம்பிகாவின் அருகிலிருப்பவர் நாகநந்தியாக இருக்கலாமோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது. திருப்பாண் மலைக் கல்வெட்டில் ''நாகநந்திக் குரவர் இருக்க'' (அதாவது 'அருகிலிருக்க' என்ற பொருளில்) என்று கூறப்பட்டிருப்பது கருத்திற் கொள்ளத் தக்கது. மேலும் வழிபாட்டிற்குரிய இயக்கியின் அருகில் 'கணவன்' உருவத்தை ஏன் அமைக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது. 'கணவன்' வழி-பாட்டிற்குரியவராக மரபில்லை. இது மேலும் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இக்கல்வெட்டின் வழி கி.பி.8ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இயக்கி வழிபாடு சிறப்புற்று விளங்கியுள்ளது என்பதும் சமணத் துறவியர்

பலரும் இவ்வழிபாட்டை (சிற்பம் ஏற்படுத்துவதன் வழி) ஊக்குவித்தனர் என்பதும் இவ்வழிபாடு புடைப்புச் சிற்பங்கள் வழியாக நிலைத்த புகழுடையனவாகவும் வரலாற்றுக் கருவூலங்களாகவும் ஆக்கப் பெற்றன என்பதும் இரண்டாம் நந்திவர்மன் சிறந்த சிவபக்தனாயினும் அவன் காலத்தே சமணமும் தழைத்தோங்கியதென்பதும் நமக்குப் புலனாகின்றன.

முன் குறிப்பிட்ட அதே கீழ்ச் சாத்த மங்கலத்தில் அதே பெருமாள் பாறையில் இரண்டாம் நந்திவர்மனின் 56ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற மற்றொரு கல்வெட்டும் உள்ளது. இதன் காலம் கி.பி.787 ஆகும். கல்வெட்டு வாசகம் வருமாறு.

''ஸ்ரீ நந்திப் பொத்தரைசர்க்கு யாண்டு ஐம்பத்தாறாவது விழுக்கத்து சினறியார் மகளார் பூண்ட மூ(ப்பா)வைத்தக் காசு பதினெழு கழஞ்சுபொன் இப்பள்ளிக்கு கழஞ்சினால் உழக்கரிசி வைகல் ...(க)ற்-ஊட்டுவார் இவ்வறம் பவண (ந்தி)யார் வைத்த பணம் ஊரொரங் காப்போமானெும்''.

கல்வெட்டில் குறிப்பிடப் பெறும் 'சினறியார்' என்ற சொல்லைச் ''சினடியார்'' என வாசிக்க வேண்டுமெனப் பதிப்பாசிரியர் குறிப்பிடுவதால் சின அடியார் அதாவது சமண அடியார் என்ற பொருளைக் குறிப்பது எனக் கொள்ளலாம். எனவே விழுக்கம் எனும் ஊரைச் சேர்ந்த சமண அடியாரின் மகளார் பூண்ட மூப்பா(வை?) என்பவள் சமணப் பள்ளிக்கு ஒவ்வொரு நாளும் உழக்கரிசி கொடுக்கப் பதினேழு கழஞ்சு பொன் கொடுத்த செய்தியும் பவணந்தியார் என்பவர் இவ்வறத்திற்காக வைத்த பணத்தை ஊரார் காப்பதாக உறுதியளித்த செய்தியும் இக்கல்வெட்டால் புலனாகின்றன. விழுக்கம் என்ற ஊர் இன்றும் வந்தவாசிக்கருகில் உள்ள ஊராக விளங்குவதோடு சமணர் வாழும் சிற்றூராகவும் திகழ்கிறது. சமண சமய மகளிரும் அறச் செயல்களில் ஈடுபட்டமை இக்கல்வெட்டு புலப்படுத்தும் மற்றொரு செய்தியாகும்.

தந்திவர்மனின் திருவெள்ளறைக் கல்வெட்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடித் தாலுகாவைச் சேர்ந்த திருவெள்ளறை எனும் ஊரிலுள்ள புண்டரீகாக்ஷப் பெருமாள் கோவிலின் தெற்குப் பகுதியில் காணப்படும் 'நாலுமூலைக் கேணி' என வழங்கப்பெறும் ஸ்வஸ்திக வடிவக் கேணியின் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளது இக்கல்வெட்டு. இது பல்லவ மன்னன் தந்திவர்மனின் 4ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டதாகும். இவன் பல்லவ மன்னன் இர்ண்டாம் நந்திவர்மனின் மகனாவான். இக்கல்வெட்டின் காலம் கி.பி.800 ஆகும். இக்கல்வெட்டில் ஆலம்பாக்க

விசயநல்லுழான் என்பவனின் தம்பி கம்பன் அரையன் என்பவன் ''மாறப்பிடுகு(பெ)ருங்கிணற்'' என்ற பெயரில் திருவெள்ளறை-தென்னூரில் பெருங்கிணறு ஒன்றினைத் தந்திவர்மனின் 4ஆம் ஆட்சியாண்டில் வெட்டு வித்தான் என்ற செய்தியைக் குறிப்பிடுவதோடு தந்திவர்மனின் 4ஆம் ஆட்சியாண்டில் தொடங்கி அவனது ஐந்தாம் ஆட்சியாண்டில் இப்பணியினை முற்றுவித்தான் எனத் தெரிவிக்கிறது. இவ்வூரை(தென்னூரை)ச் சேர்ந்த மூவாயிரத்தெழு நூற்றுவரும் இதைக் காப்பார்கள் எனவும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இதற்கருகில் ஒரு பாடற் கல்வெட்டும் காணப்படுகிறது. நிலையாமைக் கோட்பாட்டை வலியுறுத்தும் போக்கில் இப்பாடல் அமைந்துள்ளது. ஸ்வஸ்திகம் சமண சமயக் குறியீடுகளுள் முக்கியமானது. இவ்வடிவில் அமைக்கப்பட்ட கிணறு சமண சமயத் தொடர்புக்குத் தக்க சான்றாக அமைகிறது. இது சமண சமயச் சார்புடையதன்று எனச் சிலர் குறிப்பிட்டாலும் (வெ.வேதாசலம்) இது சமண சமயச் சார்புடையதென்றே நான் கருதுகின்றேன். இதனை மேலும் உறுதி செய்யும் வகையில் நிலையாமையை வலியுறுத்தும் பாடலொன்றும் அருகிலேயே வெட்டப் பட்டுள்ளது. சமண முனிவர்கள் யாத்த நாலடியார் பாடல்களைப் போன்றே இப்பாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவும் நாலடிகளில் நேரிசை வெண்பாவாக வல்லாமல் ஒரெதுகை நாலடி இன்னிசை வெண்பாவாக அமைந்துள்ளது.

மூன்றாம் நந்திவர்மனின் பெருமாண்டூர்க் கல்வெட்டு

தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் தாலுகாவைச் சேர்ந்த பெருமாண்டூர் எனும் ஊரிலுள்ள ரிஷபநாதர் திருக்கோயில் மேற்குச் சுவரில் இக்கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் 19ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என இம்மன்னன் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறான். இதன் காலம் கி.பி.865 ஆகும். கல்வெட்டு முழுவதும் கிடைக்கவில்லை. பெருமாண்டூர் ஒரு புகழ்மிக்க சமணத் தலமாகும். இங்குச் சமணப் பெரும்பள்ளி ஒன்று இருந்தமையைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. முன்பு இங்கு ''இரவிகுல சுந்தரப் பெரும்பள்ளி'' என்ற பெயருடன் ஒரு சமணப் பற்றி இயங்கி வந்தது. இங்குள்ள சமணத் திருக் கோயிலில் ரிஷபநாதர்க்கும் சந்திரநாதர்க்கும் (தீர்த்தங்கரர்கள்) சந்நிதிகள் உண்டு. இப்பெரும்பள்ளிக்கு நெல் தானமாக அளிக்கப்பட்ட செய்தி மட்டும் முற்றுப்பெறாத இக்கல்வெட்டில் குறிப்பிடப் பெறுகிறது.

கம்பவர்மன் கல்வெட்டு

வடார்க்காடு மாவட்டம் வந்தவாசித் தாலுகாவைச் சேர்ந்த கீழ்ச் சாத்தமங்கலத்தில் முன்பே குறிப்பிடப் பெற்ற பெருமாள் பாறையில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. இதன் காலம் கி.பி.875 ஆகும். காடக அதியரையர் என்பவரின் மனைவி மாதவி என்பவள் சமணத் திருக் கோயிலொன்றினைப் புதுப்பித்ததோடு கோயிலின் முன்பு முகமண்டபம் ஒன்றும் புதிதாகக் கட்டிச் சமண முனிவர் உறைவிடமாயிருந்த பாழியைப் (குகை) புதுப்பித்து யக்க பிடாரி (யக்ஷி பட்டாரி) கோயில் ஒன்றையும் கட்டிச் சமணப் பள்ளிக்கு ஒரு பெரிய மணியையும் நன்கொடையாக அளித்தாள் என்ற செய்திகள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதவி எனும் பெயர் சமண சமய மகளிர் பெயராக விளங்கியமை இதன் வழித் தெளிவாகிறது. சமணத் துறவியான இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரத்தில் இப்பெயர் வழக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. கி.பி.875க்கு முன்னரே இவ்வூரில் சமணத் திருக் கோயில் விளங்கியமையும் அது பழுதான நிலையில் மீண்டும் மாதவி என்பவரால் புதுப்பிக்கப்பட்டமையும் நமக்குத் தெளிவாகின் றன. மேலும் சமணத் துறவியர் தங்கியிருந்த பாழி விளங்கியமை யும் அதுவும் புதுப்பிக்கப்பட்டதென்ற செய்தியும் இக்கல்வெட் டின் வழிப் புலனாகின்றன. ‘பாழி’ என்ற மொழி வழக்கு இக்காலம் வரையிலும் வழக்கிலிருந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கது. யக்கி பிடாரி’ என்ற குறிப்பு யக்ஷிக்கும் கோயில் எழுப்பப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. சிவன் கோவில் களில் அம்மனுக்குத் தனிக் கோயில் என்ற வழக்காறு கி.பி.11ஆம் நூற்றாண்டில்தான் தொடங்குகிறது என்ற செய்தியோடு ஒப்பிடும்போது சமண சமய வரலாற்றில் இயக்கிக்குத் தனிக் கோயில் எடுக்கும் வழக்கம் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முன்பே துவங்கிவிட்டது என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தியாகும். பட்டாரி என்ற வழக்கு (பட்டாரகி என்பதே பட்டாரி, படாரி, பிடாரி என்று வழங்கப்படுகிறது) சைவ, (பார்வதி, துர்க்கை) சமணப் பெண் தெய்வங்கட்குப் பொதுவாக வழங்கப் பட்டமையும் இங்குப் புலனாகிறது. சமணர் அம்பிகா, சக்கரேஸ்வரி, ஜீவாலாமாலினி, சித்தாயிகா, பத்மாவதி முதலான இயக்கியர்களை வழிபடுவர். இவர்களுள் எந்த இயக்கிக்கு இக்கோயில் எடுக்கப்பட்டதெனக் கல்வெட்டில் தெளிவான குறிப்பில்லை. கோயிலுக்கு மணி அளிக்கப்பட்ட செய்தியின் மூலம் பூசை நேரம் முதலானவற்றை அறிவிக்கப் பயன்படுத்தப் பட்டிருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

வேடல் கல்வெட்டு

வடார்க்காடு மாவட்டம் வந்தவாசித் தாலுகாவைத் சேர்ந்த வேடல் என்ற ஊருக்கருகிலுள்ள குன்றில் ஆண்டார் மடம் என்றழைக்கப்பெறும் ஒரு குகைக்குப் பக்கத்திலுள்ள கல்லில் வெட்டப்பட்டுள்ளது

இக்கல்வெட்டு. இக்கல்வெட்டில் அரசன் பெயர் நந்தி எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் காணப்பெறும் எழுத்து முறையைப் போன்றே பஞ்சபாண்டவர் மலை என அழைக்கப்படும் திருப்பாண்மலையிலும் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் 50ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றிலும் காணப்படுகிறது. இந்நந்தி வர்மனை உதயேந்திரம் செப்பேடுகள் 'நந்தின்' எனக் குறிப்பிடுகின்றன. இவ்வழக்கொற்றுமையைக் கொண்டு வேடல் கல்வெட்டில் குறிப்பிடப்படும் 'நந்தி' இரண்டாம் நந்திவர்மனையே குறிக்கிறது எனக் கருத இடமுள்ளது. கல்வெட்டில் 'நந்தி'யின் ஆட்சியாண்டு 14 எனக் குறிப்பிடப்படுவதால் இதன் காலம் கி.பி.745 எனக் கணக்கிடலாம். இக்கல்வெட்டில் விடால், விடார் பள்ளி ஆகியன குறிப்பிடப்படுகின்றன. விடால் தற்போது வேடல் என வழங்கப்படுகிறது. விடார் என்பதும் விடால் என்பதன் மாற்றுவடிவமாகக் கருத இடமுள்ளது. அல்லது விடார் என்ற பிறிதோர் ஊரினைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். எவ்வாறாயினும் எட்டாம் நூற்றாண்டளவில் இப்பகுதிகளில் சமணப் பள்ளிகள் விளங்கியமை இக்கல்வெட்டின் வழிப் புலனாகிறது.

நலஜனம்பாடு கல்வெட்டு

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டம் கனிகிரி தாலுகாவைச் சேர்ந்த நலஜனம்பாடு என்ற கிராமத்திற்கு வடகிழக்கே இருகல் தொலைவில் ஒரு வயலில் கிடக்கும் கல்லில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் பட்டப் பெயர்களாகப் பரமமாஹேஸ்வர, பரமேஸ்வர, பல்லவாதித்ய என்பன சுட்டப்படுகின்றன. இவற்றுள் பல்லவாதித்ய, பரமமாஹேஸ்வர, பரமேஸ்வர என்ற பட்டங்கள் கொண்ட பாதிராஜு என்பவரது மகன் பாதி ராஜு நிலங்கொடுத்த செய்தியும் இவன் பகவத்-அர்ஹத பரம பட்டாரகரின் சீடன் என்பதும் குறிப்பிடப்படுகின்றன. இதன் வழிப் பல்லவரது ஆதிக்கத்தின் கீழிருந்த ஆந்திரப் பகுதிகளிலும் (நெல்லூர் சுற்றுப் பகுதிகள்) சமணம் பரவியிருந்தமையும் பாதிராஜு போன்ற குறுநிலத் தலைவர்களும் சமண சமயத்தை ஆதரித்தமையும் புலனாகின்றன. பகவத் என்ற சொல் இறைவன் என்ற பொருளையும் அர்ஹத என்பது அருகன் என்ற பொருளையும் குறிக்கும்.

சிறுவாக்கம் கல்வெட்டு

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவைத் சேர்ந்த சிறுவாக்கம் எனும் ஊரில் காணப்படும் இடிந்த கோயிலொன்றின் மேட்டில் கிடக்கும் கல்லில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. இதில் அரசர் முதலானவர் பற்றிய குறிப்பெதுவுமில்லை. சிறுவாக்கம் எனும்

ஊரிலுள்ள ஸ்ரீகரணப் பெரும்பள்ளிக்கு நிலமளிக்கப்பட்ட செய்தி மட்டும் காணப்படுகிறது. ஸ்ரீகரணப் பெரும்பள்ளி ஒரு சமணத் துறவியர் பள்ளியையோ சமணத் திருக்கோயிலையோ குறித்ததாகலாம். இதனைப் பெரும்பள்ளி எனக் குறிப்பதால் காஞ்சிபுரம் பகுதியில் சிற்றூர்களிலும் சமணப் பெரும்பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தமை தெளிவாகின்றது.

கீரப்பாக்கம் கல்வெட்டு

செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த கீரப்பாக்கம் எனும் ஊரில் உள்ள குளத்துக்கருகில் வயலில் காணப்படும் கல்லில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. இதன் காலம் சுமார் கி.பி.9ஆம் நூற்றாண்டாகலாம்.யாபனீய சங்கம் குமிழி கணத்தைச் சேர்ந்த மகாவீர குரு என்பவரின் மாணாக்கர் அமரமுதல குரு என்பவர் கீரப்பாக்கத்திற்கு வடக்கே ''தேசவல்லப ஜினாலயம்'' ஒன்றைக் கட்டினார் என்ற செய்தியையும் சமண சங்கத்தைச் சேர்ந்தவர்கட்கு உணவளிக்கவும் இவர்வழி செய்தார் என்ற செய்தியையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. யாபனீய சங்கம், குமிழி கணம் ஆகியன சமண சமய உட்பிரிவுகளைக் குறிப்பனவாகும். ஏற்கனவே நந்தி கணம் பற்றிய குறிப்பினைப் பார்த்தோம். குருமார்களும் தீர்த்தங்கரரது பெயர்களைச் சூடிக் கொள்ளும் மரபு இதன்வழித் தெரியவருகின்றது. சமணத் திருக் கோயில் ஜினாலயம் என வழங்கப்பட்டமையும் ஜினாலயங்கட்குத் 'தேவவல்லப' என்பது போன்ற அடைகளும் இடப்பட்டமையும் இக்கல்வெட்டுப் புலப்படுத்தும் பிற செய்திகளாகும். ''தேச வல்லப'' என்பது வணிகர் குழுவின் பட்டப் பெயராக இருக்க வாய்ப்புள்ளது. இது ஏற்புடையதாயின் வணிகரது ஆதரவுடன் இச்சினாலயம் விளங்கியது எனக் கொள்ளலாம்.

மேலே எடுத்துக்காட்டிய கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் இலக்கிய மரபில் கூறப்படுவது போலச் சமண சமயம் தேவார மூவருக்குப் பின் மறைந்துவிடவில்லை என்பதும் பல்லவ மன்னர், சிற்றரசர் ஆகியோர் ஆதரவுடன் சமணம் பரவலாக வழக்கிலிருந்தது என்பதும் சமண சமயக்குரவர்கள் சமண சமயத்தை விரிவுபடுத்துவதில் பெரும்பங்கு வகித்தனர் என்பதும் இவர்களால் சமண சமயக் கலை மரபுகளும் தோற்றுவிக்கப்பட்டுத் தமிழகக் கலை வரலாற்றின் கிளைகளாகத் திகழ்கின்றன என்பதும் இயக்கி வழிபாடு பல்லவர் காலத்தே பெருவழக்கிலிருந்தது என்பதும் ஆங்காங்கே சமணப் பெரும் பள்ளிகளும் சினாலயங்களும் தோற்றுவிக்கப் பட்டுச் சிறப்புடன் செயல்பட்டன என்பதும் சமண சமய வளர்ச்சியில் மகளிரும் பங்கேற்றனர் என்பதும் நமக்குத் தெரிய வரும் சமண சமயச் செய்திகள் எனலாம்.

48. நந்தனார் – செந்தழல், விந்தை உரு, சொந்த ஊர்

நடன. காசிநாதன், சென்னை.

நந்தனார்

நந்தனார் என்ற பெயர் பெற்ற சிவனடியார், 63 நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். தமிழகத்தைப் பொறுத்தவரை நந்தன் என்ற பெயர் அருகியே காணப்பெற்றாலும், வைணவ சமயத்தில் இப்பெயருக்கு மிகவும் முக்கியத்துவமுண்டு. காரணம், கண்ணபெருமானைப் பெற்றெடுத்த பெற்றோர் வசுதேவர் தேவகியாயிருந்தாலும், நந்தகோபாலன் யசோதை ஆகிய ஆயர்குலப் பெருமான்களே அவரை அரவணைத்து வளர்த்தவர் ஆவர். நந்தன் என்னும் பெயர் புராணகாலத்தில் யார் யாருக்கு இருந்திருக்கிறது என்பதைக் கீழ்வருமாறு அபிதான சிந்தாமணி காட்டியுள்ளது[1].

1. விஷ்ணுமூர்த்தியின் படர்களில் ஒருவன், 2. திருதராட்டிரன் புத்திரன், 3. கண்ணனை வளர்த்தவன் இவன் தேவி யசோதை, 4.பிருதுஷேணன் குமரன், 5. மகாநந்திக்குச் சூத்திரப் பெண்ணிடம் உதித்துப் பிறகு மகாபத்மன் என்கிற பெயரடைந்து க்ஷத்திரியரை நாசஞ் செய்தவன், மகததேசாதிபதி, 6. வசுதேவர்க்கு மந்தரையிடம் உதித்த குமரன், 7. சந்திர குலத்தரசனாகிய தருமகுத்தனுக்குத் தந்தை. மேலும் நந்த புத்திரி என்பதற்குப் பார்வதி என்று தமிழ் அகராதி பொருள் தருகிறது. நந்த அரசர்களைப் பற்றி எழுதும் வரலாற்றறிஞர் ரொமிலா தாபர் இந்திய வரலாற்றில் முதன் முதலில் க்ஷத்திரியர் அல்லாத ஒரு அரசமரபினர் ஆளத் தொடங்கியது நந்தர்கள் முதல்தான் என்று கூறுகிறார். நந்த அரசர்கள் பெருமளவில் படை பலத்தையும் தேவைக்கு மிஞ்சிய பொருட்செல்வத்தையும் பெற்றிருந்தவராவர்[2]. தமிழகத்தில் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள மாங்குளம் என்னும் ஊரையடுத்துள்ள மலையில் பொறிக்கப்பட்டிருக்கும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டில் கணி நந்தாசிரியர் குறிக்கப்படுகிறார். நந்தர் என்னும் சமணத்துறவி சோதிடராகவும் விளங்கியிருந்தமையை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. எனவே மேற்காணும் பல செய்திகளுள் ஒன்றை மனதிற் கொண்டு நந்தனாரின் பெற்றோர் தம் மகவுக்கு இப்பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கலாம்.

திருத்தொண்டர் வரலாறு கூறுபவை சுந்தரரின் 'திருத்தொண்டத் தொகை', நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்', உமாபதி சிவாச்சாரியாரின்

'திருத்தொண்டர் புராண சாரம்' ஆகியவை ஆகும். இவற்றுள் பழமையானதான திருத்தொண்டத்தொகை, ''செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்'' என்ற அளவில் மட்டும் நந்தனாரைப் பற்றித்[3] தெரிவிக்கிறது. நந்தனாரின் இயற்பெயரான நந்தனார் என்ற பெயர்கூடத் தொகையில் இடம்பெறவில்லை காரணப் பெயரான திருநாளைப் போவார் என்று மட்டுமே கூறப்பட்டிருக்கிறது.

''நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தான் அருள் பெற்று நாளைப்

போவான் அவனாம் புறத்திருத் தொண்டன்தன் புன்புலை போய்

மூவாயிரவர் கைகூப்ப முனியா யவன்பதிதான்

மாவார் பொழில் திகழ் ஆதனூர் என்பர் இம்மண்டலத்தே''

என்று திருத்தொண்டர் திருவந்தாதி[4] நந்தனாரைப் பற்றிக் கூறியுள்ளது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் ஒரே ஒரு அடியால் விளக்கிய திருநாளைப் போவாரைக் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி, நந்தனாரின் பதி ஆதனூர் என்றும், புறந்திருத்தொண்டன் தன் புன்புலையைப் போக்கித் தில்லை மூவாயிரவர் கைகூப்பித் தொழுமளவுக்கு முனிவராகியவர் என்று இம்மண்டலத்திலுள்ள மக்கள் கூறுவர் என்று விளக்குகின்றார்.

சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் 63 நாயன்மார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் கூறியுள்ளார். இவர்களுள் மூவரை மட்டுமே அவர் இனம் காட்டிக் குறிப்பிடுகிறார். முதலில் தில்லையிலுள்ள ஆடவல்லானின் அடியவர்களை அந்தணர் என்றும், அதே தில்லையில் இருந்த மற்றொரு அடியவரான திருநீலகண்டரைக் குயவர் என்றும், பிற இடத்தைச் சார்ந்த வேறொரு அடியவரான திருநீலகண்டரைப் பாணர் என்றும் தெரிவிக்கிறார். மற்ற அடியார் யாரையும் இனம் கூறிப்பேசாத சுந்தரர், இம்மூவரை மட்டும் ஏன் அவ்வாறு பேசியுள்ளார்? ஒரே இடத்தில் அதாவது தில்லையில் இருவேறு அடியவர் இருந்திருக்கின்றனர். ஆதலால் அவர்களைப் பிரித்துக் காட்டுவதற்காக அவ்வாறு கூறியிருக்கலாம். மூன்றாமவரை இனம் காட்டிப் பாடியது ஒரே பெயரில் இரு அடியவர் இருந்த காரணத்தால் நிகழ்ந்திருக்க லாம். எனவே மற்ற அடியவர்களைப் பற்றிப் பேசும்போது இனம்கூறிப் பாடவேண்டிய அவசியம் அவருக்கு எழவில்லை போலும். ஆனால் அவர் காலத்திலும் இனப்பாகுபாடு இருந்திருக்கிறது என்பது உண்மை. இறைவனின் திருத்தொண்டர்களாக ஆகிவிட்ட பின் இனம் பிரித்துப் பேசுவது முறையற்றது என்று சுந்தரர் கருதியிருப்பார் போலும். மக்களும் அவ்வாறே உயர்ந்த நோக்கில் இருந்திருப்பர்.

நம்பியாண்டார் நம்பி காலம் சுந்தரர்க்குப்பின் இரு நூறாண்டுகள் கழித்துவிட்ட காலம். சாதிச் சழக்கில் மக்கள் சிக்குகின்ற காலம். ஆதலால்

தான் அவர். திருநாளைப் போவார் 'தம் புன்புலைபோய் முனிவராய்' மாறி மூவராயிரவர் கைகூப்பும் நிலைபெற்றார் எனத் தெரிவிக்கிறார். இவரும் காரணப் பெயராலேயே நந்தனாரைக் குறிப்பிடுகிறார். ஆனாலும் அவரைப் புன்புலையர் என்று தெரிவிக்கிறார். அடுத்த கணமே தில்லை மூவாயிரவர் கைகூப்பித் தொழத்தக்க அளவுக்கு முனிவராக உயர்ந்துவிட்டார் எனப் பாராட்டிப் பேசுகிறார்.

செந்தழல்

திருநாளைப்போவார் எவ்வாறு முனிவரானார் என்பதற்கு மேலும் சுமார் ஒரு நூற்றாண்டு காலம் பின்பு வாழ்ந்த சேக்கிழார் பெருமான் விளக்கம் தருகிறார். திருநாளைப் போவார் என்னும் நந்தனாரை இறைவனே, தீயில் மூழ்கி எழுந்து வாரும், என்று கனவில் தோன்றி அறிவுறுத்தியதாகவும், அவ்வாறே தீயில் மூழ்கி,

''........... எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப்
புண்ணிய மாமுனிவடிவாய்
மெய்திகழ் வெண்ணூல் விளங்க
வேணி முடி கொண்டெழுந்தார்''.[5]

என்று கூறுகிறார்.

நந்தனார் வாழ்ந்த காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார், அவருக்கு முன்பு சுந்தரராலோ, நம்பியாண்டார் நம்பியாலோ கூறப்படாத ஒரு செய்தியான தீயில் மூழ்கியெழுதலைக் கூறுகிறார். அவர் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப சில கற்பனைக் கருத்துகளைச் சேர்த்திருக்கிறார் என்பதாகவே இதனைக் கொள்ளல் வேண்டும். நம்பியாண்டார் நம்பியால்கூடக் கூறப்படாத, திருப்புன்கூரில் நந்தனார் இறைவனை எந்தவிதத் தடங்கலுமின்றி வணங்குவதற்காக நந்தியை இறைவன் விலகச் செய்த செய்தியையும், நந்தனார் திருப்புன்கூரில் குளம் தொட்ட செய்தியையும் தம் புராணத்தில் கூட்டியிருக்கிறார்.

மேற்கூறியவற்றை ஆழ்ந்து கருதிப் பார்க்கையில் நந்தனார் தீயில் மூழ்கியெழுந்தார் என்பது நடந்திருக்க முடியாத ஒன்றாகவே தோன்றுகிறது. மாறாக, தீக்குண்டத்தில் மூழ்குவதற்குப் பதிலாக, வேள்வி வேட்டு, உரிய சமயச் சடங்குகள் செய்து நந்தநாரை அடியவருள் ஒருவராகத் தில்லை மூவாயிரவர் ஏற்றுத் தில்லை மன்றுள் நடமாடும் ஆடல் வல்லானை நேரில் கண்டு, நந்தனார் தம் நெடு நாளைய ஆவலைத் தீர்த்துக் கொள்ள உதவினர் என்பதே நடந்திருக்கக்கூடிய ஒன்றாகப் புலப்படுகிறது.

விந்தை உரு

நந்தனாரின் கதையைச் சித்திரிக்கும் தாராசுரம் இராசராசேச்சுரத்தில் காணப் பெறும் புடைச்சிற்பம், திருநாளைப் போவாரைத் தீச்சுவாலையின் நடுவில் முனிவராய் அமர்ந்திருக்கும் கோலத்தில் காட்டுகிறது. அருகில் பக்கத்திற்கு இருவராகக் கூப்பிய கரங்களுடன் தில்லை மூவாயிரவரில் நால்வர் நிற்பதாக உள்ளது. திருநாளைப் போவார் உருவத்தின் இடப்பக்கத்தில் நிற்கும் இருவரின் நடுவில் யூபத்தம்பம் இருப்பதாகத் தோன்றுகிறது[6]. இச்சிற்பம் திருநாளைப் போவார் தீயில் மூழ்கியெழுந்தார் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது. இச்சிற்பம் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இதற்கு முந்தைய காலமான கி.பி. 10-11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கீழக்கடம்பூர் உருத்ரபதீசுரர் கோயில் தெற்குச் சுவரில் திருநாளைப் போவாரின் சிற்பம் மற்ற சில நாயன்மார்களின் சிற்பங்களோடு செதுக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இச்சிற்பம் இருந்த இடத்தின் கீழ்ப்பகுதியில் 'திருநாளைப் போவார்' என்று கல்வெட்டு காணப்பெறுகிறது[7]. ஆதலால் இங்கிருந்த திருநாளைப் போவார் சாதாரண முறையில் தீயேதும் சூழாத நிலையில் நிற்கும் சிற்பமாகத்தான் இருந்திருத்தல் கூடும்.

நீலநக்கரன்பர், பேயார், நாவுக்கரசுதேவனார், உருத்திர பசுபதி, முருகாண்டார், ஆனாயாண்டார், மானக்கஞ்சாரனார், குங்கிலியார், திருக்கண்ணப்பர் முதலியோர் சிற்பங்களும் இங்கு செதுக்கப்பட்டிருந்தன என்பது இங்கு பெயர் பொறிப்புகளால் அறியமுடிகின்றது. மேற்காணும் அனைத்துச் சிற்பங்களின் தலைக்கு மேலும் செதுக்கப்பட்டிருந்த குடைகளையும் பார்க்க முடிகிறது[8].

சிதம்பரம் நடராசப் பெருமான் கோயில் நிருத்த சபையின் வெளி மண்டபத்தின் தெற்குச் சுவரோரத்திலே பாடிக் கொண்டிருக்கும் நந்தனாரின் திருக்கோலம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அச்சிற்பத்தின் கையில் கடப்பாறையும், தோளில் மண்வெட்டியும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன[9]. இது கி.பி. 18-19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'யின் தாக்கத்தால் ஏற்படுத்தப்பட்டதாகலாம். சிற்பமும் மிகவும் பிற்காலத்தியதாகத் தோன்றுகிறது.

நந்தனாரின் மற்றொரு சிற்பம் தில்லைச் சிற்றம்பலத்தின் எதிரே உள்ள காலகால தேவர் சிற்பத்துக்கு அருகில் உள்ள தெற்குச் சுவரில்

பிக்ஷாடனர் சிற்பத்தின் பக்கத்தில் காணப்பெறுகிறது. இச்சிற்பம் திருநாளைப் போவார் என்னும் நந்தனாரை நாயன்மார்களுள் ஒருவராகக் காட்டுகிறது. அரையில் தரித்துள்ள வெண்துகில் கண்டக்கால் வரை நீண்டுள்ளது. கைகள் எம்பெருமானைத் தொழும் கைகளாகவோ, அல்லது தாளம் கொட்டும் கரங்களாகவோ உள்ளன. காதுகள் தொங்கும் காதுகளாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இச்சிற்பம் பிற்காலச் சோழர் கலைப்பாணியில் வடிக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்பத்தை இதுவரையாரும் அடையாளம் கண்டதாகத் தெரியவில்லை[10].

சொந்த ஊர்

நந்தனாரின் சொந்த ஊரான ஆதனூர் நம்பியாண்டார் நம்பியால்

''..... அவன் பதிதான் மாவார் பொழில் திகழ் ஆதனூர் என்பர் இம்மண்டலத்தே''[11]

என்று பேசப்படுகிறது. நம்பியாண்டார் நம்பி சோழ மண்டலத்திலுள்ள திருநாரையூரைச் சேர்ந்தவர். எனவே சோழமண்டலத்திலுள்ள ஆதனூர் என்று சுருக்கமாக அவர் தெரிவித்துள்ளார். சேக்கிழார் பெருமானோ மேற்கா நாட்டு ஆதனூரின் புறம்பணையின் புலைப்பாடி என்று சற்று விளக்கிக்கூறியுள்ளார்[12]. சோழ மண்டலத்தின் மேற்கா நாட்டைச் சேர்ந்த ஆதனூர் நந்தனாரின் சொந்த ஊர் என்பது மேற்காணும் குறிப்புகளால் உறுதியாகிறது.

இவ்வாதனூர் எங்குளது என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. கொள்ளிடத்தின் வடபாலுள்ள ஆதனூர் என்று ஒரு சாராரும், தென்பாலுள்ள ஆதனூர் என்று பிறிதொரு சாராரும் கருதுவர். ஆனால் சேக்கிழார் இவ்வாதனூர் மேற்கா நாட்டைச் சேர்ந்தது என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார். மேற்காநாடு, விருதராஜ பயங்கர வளநாட்டில் இருந்திருக்கிறது. இவ்வள நாடு கொள்ளிடம் நதியின் வடகரையிலிருந்து கடிலம் நதியின் தென்கரை முடிய வெள்ளாற்றுப் பகுதியை உள்ளடக்கிப் பரவியிருந்திருக்கிறது. இவ்வளநாட்டில் மேற்காநாடு என்பது விருத்தாசலம், கடலூர், பாண்டிச்சேரி வட்டப் பகுதிகளைக் கொண்டு விளங்கியிருக்கிறது[13].

ஆதனூர் அமைவிடத்தைச் சித்திரிக்கும் சேக்கிழார் கொள்ளிடத்திலிருந்து நீர் பாய்ந்து செழுமை பெற்றிருந்ததாகக் குறிப்பிடுகிறார். செழுமையின் காரணமாகக் கரும்பு, தெங்கு, பலா ஆகியவை செழித்து வளர்ந்திருந்தன என்றும் தெரிவிக்கிறார். இவற்றை நோக்கும் போது கொள்ளிடக்கரையை ஒட்டி அமைந்த ஊராகத்தான் அது

இருந்திருக்கவேண்டும். நம்பியாண்டார் நம்பியின் திருநாரையூர்[14], ஓமாம்புலியூர்[15], வீரநாராயண நல்லூர்[16] ஆகிய ஊர்கள்கூட மேற்கா நாட்டில்தான் அமைந்திருந்திருக்கின்றன. ஆதலால் நந்தனார் அவதரித்த ஆதனூர் காட்டுமன்னார்குடியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஓமாம்புலியூரை அடுத்துள்ள ஆதனூராக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மா. இராசமாணிக்கனாரும் கொள்ளிடத்தின் வடகரையில் ஓமாம்புலியூருக்கருகில் உள்ள ஆதனூர்தான் நந்தனாரின் ஊர் என்று தம் பெரிய புராண ஆராய்ச்சி என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்[17] சிலர் கருதுவதுபோன்று கொள்ளிடத்தின் தென்கரையில் அமைந்துள்ள ஆதனூராகக்[18] கொள்வதற்கு வாய்ப்பில்லை. நந்தனாரின் காலம் அப்பர் காலத்துக்கும் சுந்தரர் காலத்துக்கும் இடைப்பட்ட காலம். அதாவது கி.பி. 600 - 840க்கிடைப்பட்டது என்பர் அறிஞர் மா. இராசமாணிக்கனார்[19].

அடிக்குறிப்புகள்

1. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, Asian Education Services, சென்னை, 1988, பக்கம் 924.
2. Romila Thapar, A History of India Vol. One, Penguin Books, 1990, p. 57
3. சோமசுந்தரஞ் செட்டியார், திருத்தொண்டர் புராண உரைநடை, சென்னை, 1975, பக்கம் 18.
4. மேலது பக்கம் 49.
5. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம், திருநாளைப் போவார் நாயனார் புராணம், பதிப்பாசிரியர் T.M. குமரகுருபரன் பிள்ளை. பக்கம் 203.
6. ARE 1919 - 1920, plate VI.
7. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, 1948, பக்கம் 150.
8. இக்கட்டுரையாசிரியரும், காப்பாட்சியர் வேதாசலம், தொல்பொருள் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் 1997ஆம் ஆண்டில் இக்கோயிலுக்குச் சென்று மேலும் ஆய்ந்தபோது கண்டறியப்பட்டன.
9. க. கைலாசபதி, 'அடியும் முடியும்', பக்கம் 266.
10. இக்கட்டுரையாசிரியரால் முதன் முதலில் 1998ல் கண்டறியப்பட்டது.
11. நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி, திருநாளைப் போவார் பற்றிய பாடல்.
12. திருத்தொண்டர் புராணம், திருநாளைப் போவார் நாயனார் புராணம், பாடல் 1 - 6.
13. Y. Subbarayalu, "Political Geography of the Chola Country', 1973, Map. 12, List of Nadus in Chola Mandalam, Serial No. 180.
14. S.I.I. : 12, No. 153
15. A.R.E. 1934 - 35 - 110.
16. Ibid, 406 / 1908
17. மா. இராசமாணிக்கனார், 'பெரிய புராண ஆராய்ச்சி' 1948, பக்கங்கள் 215 - 216.
18. தமிழ்பொழில், தொகுதி 10, பக்கம் 261.
19. பெரிய புராண ஆராய்ச்சி, பக்கம் 100.

49. குகைகளும் குகையிடி கலகமும்

முனைவர் செ. இராசு, தஞ்சாவூர்.

மடங்களின் பெருக்கம்

பல்லவர் காலத்தில் சமயக் கல்வியையும், சமய ஒழுக்கத்தையும் அளிக்கச் சில மடங்கள் தோன்றின. சோழர் காலத்தில் கோயில்களும், விழாக்களும் வளர்ச்சி பெற்றாற்போல மடங்களும் மிகப் பலவாகப் பெருகின. இறைவன் பெயரிலும், அரசர் பெயரிலும், நாயன்மார்கள் பெயரிலும், அடியார் பெயரிலும், பல குழுவினர் பெயரிலும் இம் மடங்கள் சிறந்து விளங்கன[1].

பெரும்பாலும் திருக்கோயில்களைச் சார்ந்த இடத்தில் கோயில்களை அடுத்தே இவை அமைந்திருந்தன. சமுதாயத்தில் மிக்க செல்வாக்கைப் பெற்ற இம் மடங்கள் கோயில் ஆட்சியைக் கவனித்தன. சமயப் பயனிகட்கு வசதிகள் செய்தன. ஒழுக்கத்தையும் சமய அறிவையும் புகட்டின. சாத்திரங்கள் கற்பித்தன. அடியாருக்கு உணவளித்தன.

மடம், திருமடம், சாலை, அறச்சாலை என அழைக்கப்பட்ட இத் தமிழகத்துச் சைவ மடங்களுடன்[2] கோமடம் (காளாமுகர்), காபாலிகர் மடம், வீர சைவமடம், கோளகி மடம், கொல்லாமடம், பிட்சாமடம் போன்ற சைவத்தின் பல பிரிவுகளுக்குரிய மடங்களும் சில இருந்தன[3].

குகைகள்

இம்மடங்களைப் போன்றே கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 'குகைகள்' என்னும் சமய நிறுவனங்கள் தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்தன. கல்வெட்டுக்கள் மூலம் பல குகைகளைக் காணுகிறோம்[4]. இந்தக் குகைகள் பெரும்பாலும் திருமடைவிளாகத்தில் அமைந்திருந்தன. திருமடைவிளாகம் என்பது கோயிலைச் சார்ந்த இடங்களைக் குறிக்கும். குகை என்பதற்கு மலைக்குகை, சமாதி, துறவிகள் வாழுமிடம் என்று பல பொருள்கள் இருப்பினும் இம்மாதிரியான அமைப்பிற்குத் துறவிகள் வாழுமிடம், துறவிகள் வாசம், முனிவர்கள் இருப்பிடம், தவமுனிவர் இருக்கை என்றே பெரும்பாலும் பொருள் கொள்ளப்படுகிறது[5]. மடங்கள் இருந்த அதே சம காலத்திலேயே இவை குகைகள் என்று வேறு பெயர் பெற்றுள்ளன. திருநெல்லிக்காவல் கல்வெட்டில் ஒரே கோயிலைச் சார்ந்து இருந்த இரண்டு நிறுவனங்கள் குலச்சிறைமடம், திருஞானசம்பந்தன் குகை என்று பெயர் பெற்றுள்ளன. ஒரே கல்வெட்டில் 'திருமடை விளாகத்து கீழ்தலையில் கூத்தாடுமாண்டார் இருக்கிற குலச்சிறை மடம்', 'திருமடை விளாகத்து திருஞானசம்பந்தம் குகை', எனக் குறிக்கப்படுகின்றன[6]. திருத்துறைப் பூண்டிக் கல்வெட்டில் 'இம்மடத்து முதலியார் சிவஞானசம்பந்தரும்

ஹிருதய தேவரும் இரண்டு குகையிலும் எழுந்தருளி இருக்கையிலே' எனக் குறிக்கப்படுகிறது[7]. எனவே, மடத்திற்கும் குகைக்கும் வேறுபாடு உண்டு எனத் தெரிகிறது. மடம் என்பது சமய அடியார் அனைவருடனும் தொடர்பு கொண்டதாக இருக்கலாம். பொது அடியார்கள் அணுக முடியாத சந்யாசிகளும், தவம் செய்வோர்களும், கடுமையான விரதங்களைப் பின்பற்றுவோர் மட்டுமே தங்கி வாழும் இடமாகக் குகைகள் இருக்கலாம். அபூர்விகளும் மகேசுவரரும் அங்கு உணவு உண்டதாகத் திருக்குறுக்கைக் கல்வெட்டுக் கூறுகிறது.

குகை சமாதியா?

கும்பகோணம் கல்வெட்டறிஞர் என். சேதுராமன் அவர்கள் குகை என்பதற்கு சமாதிக் கோயிலோடு கூடிய மடம் என்று பொருள் கொண்டு விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்கள்[8]. குகை என்பதற்கு சமாதி என்ற பொருளும் உண்டு, தமிழில் பலபொருள் ஒரு சொல் பல வழக்கில் உள்ளன. அச் சொற்களில் குகை என்பதும் ஒன்று. சமாதி என்ற பொருளோடு குகை என்ற சொல்லுக்கு முனிவர்கள் அல்லது துறவிகள் வாழும் இடம் என்ற பொருளும் உண்டு என்பதைப் பலர் கூறியுள்ளனர்[9].

ஆண்டார் திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் திருத்துறைப்பூண்டிக்கு எழுந்தருளும்போது பூண்டி உடையார்களும் மங்கலங்கிளையார்களும் 'எம்பெருமான் இத்திருப்பதியிலே எழுந்தருளி இருக்கவேணும். நாங்கள் ஒரு குகை எடுத்துத் தருகிறோம்' என்று கூறியுள்ளனர். பின்னர் 'எழுந்தருளி இருக்க' குகையும் எடுத்துள்ளனர். முதலியாரும் குகையில் 'எழுந்தருளியுள்ளார்' முதலியார் தேசாந்திரிகளுக்கு குகையில் அமுதும் படைத்துள்ளார்[10].

திருப்புகலூர்க் குகை அரசர் நன்மைக்காக எடுக்கப்பட்டுள்ளது[11]. பள்ளிப்படைக் கோயில்கள் எல்லாம் அங்கு இறந்து பள்ளிப்படுத்தார் பெயரிலேயே உள்ளன. பள்ளிப்படை ஆதித்தேச்சுரம், பள்ளிப்படை பஞ்சவன்மாதேவி ஈச்சுவரம், பள்ளிப்படை அரிஞ்சிகை ஈச்சுவரம் என்பனவற்றைக் காணுகிறோம்[12]. ஆனால் குகைகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் பெயரிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன.

திருஞானசம்பந்தன் குகையில் இருக்கும் மறைஞான சம்பந்தனும், ஆழித்தேர் வித்தகனும் என்பது திருநெல்லிக்காவல் கல்வெட்டுத் தொடர்[13]. திருவண்ணாமலையில் இருந்த ஒரு அடியவரைப் புகழும் பாடலில் அவர் 'குகைநமச்சிவாயர்' என்றே அழைக்கப்படுகிறார்[14]. இவற்றிலிருந்து குகை என்பது ஒரு சமய நிறுவனமே என்பது தெரிகிறது.

குகை நிர்வாகிகள் பாசுபதர்களா?

பள்ளிப்படைக் கோயில்களை மகாவிரதிகள், மகாவிரதி லகுலீச பண்டிதர் போன்றவர்கள். நிர்வகித்த காரணத்தால் குகைகளையும் சமாதிகள் எனக்கொண்டு பாசுபதர்கள் நிர்வகித்திருக்கலாம் என்று அறிஞர் சேதுராமன் அவர்கள் கூறுகிறார்கள்[15].

ஆனால் குகைகள் அனைத்தும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பெயரால் அமைந்துள்ளன. அங்கு சைவத் திருமுறைகள் வைக்கப்பட்டிருந்தன. பிற இடங்களுக்குச் சென்று அவர்கள் திருமுறைப் பாடல்கள் பாடியுள்ளனர். குகையில் திருப் பாட்டும், திருத்தாண்டகமும் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருப்பாட்டு என்பது தேவாரத்திருமுறைகளைக் குறிக்கும்[16].

கொடை கொடுத்தவர்களாக திட்டைச்சேரி உடையான் தில்லைப் பெருமான், கண்டராதித்ததேவன், உய்யவந்தபிள்ளை ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்[17]. இவர்கள் பெயரிலிருந்து இவர்களுக்கும் பாசுபத சைவத் தொடர்பு உடையவர்கள் அல்லர் எனத் தெரிகிறது.

திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டில் கையெழுத்திட்ட வர்கள் திருத்துறைநாயகன், ஆதித்ததேவன், நம்பியாரூரன், இருங்கரிபட்டன், அஞ்சல் என்றான் துறையபிள்ளை ஆழ்வான், திருமாளிகைப்பிள்ளை, இராப்பிச்சன், தில்லைநாயகப்பிச்சன், கங்கை கொண்ட பிச்சன், திரு ஆலவாய் உடையான், உடையபிள்ளை, மங்கலங்கிழையார், திருத்துறைப்பிச்சன் புலியூரான், திருவீதிப்பிள்ளை, தேவாண்டான் எனக் குறிக்கப்படுகின்றனர்[18]. இவர்களும் பாசுபதத்தோடு தொடர்பு உடையராகத் தெரியவில்லை.

குகையிடி கலகம்

மூன்றாம் குலோத்துங்க சோழனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் திருத்துறைப்பூண்டியில் திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் குகையில், 'குகைஇடி கலகத்திலே சாதனங்கள் சேமந் தப்பின' என்று கூறப்படுகிறது[20]. எச். கிருஷ்ண சாஸ்திரியார் இக் குகையிடி கலகத்தை பிராமணர்கள் பிராமணர் அல்லாதாரோடு செய்த கலகம் என்று கூறுகிறார்[21]. அறிஞர் என். சேதுராமன் அவர்கள் இக்கல்வெட்டில் குகையிடி கலகத்தை பிராமணர்கள் நடத்தியதாக ஒன்றும் குறிக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். அது உண்மையே. மாதேவ பட்டன் மகன் இருங்காரி பட்டன் என்ற பிராமணன் பெயர் ஒப்புகைக் கையெழுத்திட்ட பதினாறு பெயர்களில் ஒன்றாகக் காணப்படுவதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். திருத்துறைப்பூண்டியைத் தவிர வேறு எங்கும் குகையிடி கலகம் நடந்ததாகத் தெரியவில்லை. பிராமணர் செய்த கலகம் என்பதற்கு அக் கல்வெட்டில் ஒரு குறிப்பும் இல்லை.

குகையில் இருந்த திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் குகையிடி கலகத்துக்குப் பின்னரும் இரண்டாண்டு வாழ்ந்துள்ளார். திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் திருத்துறைப்பூண்டியினர் அல்லர். புதியதாக அங்கு வந்து குடியேறியவர். அவர் 'குகையிலிருந்து' சிவலோகத்து எழுந்தருளியபின்னர் (இறந்தபின்) அவ்வூர் 'மடத்தி லிருந்த' சிவஞான சம்பந்தரும் முதலியார் இருதய தேவரும் குகையில் எழுந்தருளுகிறார்கள். இவர்கள் இருவரும் திருத்துறைப் பூண்டி உடையார் திருமடை விளாகத்துக் கும்பிட்டிருக்கும் ஆண்டார்கள் ஆவர்.

வெளியூர்க்காரரான திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் ஆற்றங்கரைக்கு வடக்கில் 70 குழி நிலம் குகைக்காகப் பெற்றார். அந்நிலம் திருத்துறைப்பூண்டி உடையார் சன்னதிக்குத் தெற்காக இருந்தது. அந்நிலம் கோயில் காணியுமாகும். இவையன்றி தேசாந்தரி கட்கு அமுது செய்ய இரண்டு மா நிலமும் இறையிலியாகப் பெற்றார். அதிலிருந்து அடியார்க்கு உணவிட்டார்.

புதியதாக வந்த திருச்சிற்றம்பலம் உடைய முதலியாருடைய குகையின் செல்வாக்கு உள்ளூர் மடத்தினருக்குப் பிடிக்கவில்லை போலும். அதனால் திருத்துறைப் பூண்டி மடத்தார் குகையை எதிர்த்துக் கலகம் செய்திருக்கலாம். திருச்சிற்றம்பலம் உடைய முதலியார் 1202 இல் இறந்தவுடன் மடத்துக்கு உரியவர்கள் குகைகளில் 'எழுந்தருளி' இருந்ததும், அதற்கு 16 பேர் ஒப்புகைக் கையெழுத்திட்டதும் இந்த ஊகத்தை உறுதிப்படுத்துவதுபோல் தோன்றுகிறது.

திருத்துறைப் பூண்டியைத் தவிர இக்குகையிடி கலகம் போன்ற நிகழ்ச்சி சோழ நாட்டிலோ அல்லது பாண்டிய நாட்டிலோ எங்கும் நடைபெற்றதாக இதுவரை ஒரு சான்றும் கிடைக்கவில்லை. பழையமரபைப் பின்பற்றிய மடத்திற்கும் புதியதாகத் தோன்றிய கடுமையான விதிகளையுடைய குகைக்கும் எழுந்த கலகமே குகையிடி கலகம் என்று தோன்றுகிறது. கிருஷ்ண சாஸ்திரியாரும் அவருக்குப் பின் பலரும் கூறியது போல இது பிராமணர்-பிராமணர் அல்லாதார் கலகம் என்பதற்குச் சான்றேதுமில்லை.

குறிப்புக்கள்

1. திருநீலவிடங்கன்மடம், கூத்தாடு நாயனார்மடம், (144/1935,218/1908), அருமொழிதேவன்மடம், வீரபாண்டியன் மடம்(186/1925,357/1916), நமிநந்தியடிகள் மடம், பரஞ்சோதி மடம் (179/1894, 246/1930), திருமாளிகைப்பிச்சைமடம், அன்பர்க்கடியார் மடம் (446/1912, 350/1929), பன்மாகேசுவரர் மடம், நாற்பத் தெண்ணாயிரவர் மடம் (344/1893,150/1925) என்பன.
2. பரசமயகோளரி மடம் (534 / 1918); நம்பி திருமுருகன் திருமடம் (88 / 1928); அறப்பெருஞ்செல்வி சாலை (266 / 1913); சங்கரதேவன் அறச்சாலை (159 / 1925).
3. காண்க : டாக்டர் மு. இராசமாணிக்கனாரின் 'சைவ சமய வளர்ச்சி' பக். 209 - 215.

4. கல்வெட்டு ஆண்டறிக்கைகள் (ARE 1) 471 / 1912. 2) 311 / 1928. 3) 608, 609 / 1902: 4) 10 / 1918. 5) 219 / 1917 233 / 1917. 6) 10 / 1918. 7) 87 / 1928.8) 241 / 1917. 9) 28 / 1914. 10) சைவ சமய வளர்ச்சி பக். 224. 11) வ20. 521 / 1904.

5. பிங்கலநிகண்டு, தமிழ் லெக்சிகன் (ப. 954), கதிரைவேற்பிள்ளை தமிழ்மொழி அகராதி (பக். 464), கே.எம். வேங்கடராமையாவின் கல்வெட்டில் தேவார மூவர் பக். 6, 27, தி.நா. சுப்பிரமணியத்தின் தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுக்கள் (தொகுதி 3, பகுதி 2, ப. 1418).

6. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 17 - 563; 520 / 1904.

7. கல்வெட்டு ஆண்டறிக்கை (ARE) 471 / 1912.

8. *Journal of the Epigraphical Society of India* Vol. XVII 'Crusade Against Guhai (Monastery) Thiru N. Sethuraman, pp. 29 - 37, (1991)

9. அடிக்குறிப்பு 5 பார்க்கவும்.

10. கல்வெட்டு ஆண்டறிக்கை (ARE) 471 / 1912 (இக்கல்வெட்டுப் பாடம் திரு. என். சேதுராமன் அவர்கள் கட்டுரையிலிருந்து பின் இணைப்பில் காட்டப் பட்டுள்ளது).

11. ARE 87 / 1928.

12. SII VIII 529; ARE 1927 `}. 76 & 78; SII III p. 27

13. ARE 521 / 1904; SII XVII 564.

14. பெருந்தொகை 1907, 1944.

15. என். சேதுராமன், முன் சுட்டிய கட்டுரை பக். 30 - 32.

16. தேவாரம் என்னும் திருப்பாட்டு. அண்மையில் தஞ்சை வட்டம் காசவளநாடு கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் 'திருப்பாட்டு ஓதுவார் பாண்டிப் பெருமாள்' என்ற தொடர் காணப்படுகிறது. 'தேவாரம் என்னும் திருப்பாட்டு' என்பது பழைய தொடர்.

17. SII XVII 564.

18. ARE 471 / 1912.

19. மேலது

20. ARE 1913 p. 112.

50. அப்பரும், ஆசீவகரும்

அர. வசந்த கல்யாணி

நம் நாட்டில் வைதீக மதத்தை எதிர்த்து எழுந்த மதங்களுள் குறிப்பிடத்தக்கவை ஜைனம் (சமணம்) பௌத்தம் மற்றும் ஆஜீவகம் (ஆசீவகம்) என்பனவாம். பக்தி இயக்கம் வேரூன்றியிருந்த தேவார காலத்தில் மூன்றாவது மதமான ஆசீவக மதமும் இருந்ததா? அதுபற்றித் தேவாரத் திருப்பதிகங்கள் குறிப்புகள் தருகின்றனவா? அப்பரும், ஞானசம் பந்தரும் அதனைப் பாடினரா? சாடினரா? என்பதை ஆய்வுக்குரிய பொருளாக்கி அதன்வழி அப்பர் சைவத்திற்கு முன் சார்ந்திருந்த மதம் எது என்பதை அறிந்து சமயவரலாற்றுக்குச் சில புதிய செய்திகளைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமணமும் ஆசீவகமும்

சமண சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய மகாவீரர் துறவியாக உண்மை ஞானத்தைத் தேடியலைந்து கொண்டிருந்த நாளில் அவருடன் மக்காலி கோசாலா என்பாரும் உடன் திரிந்து கொண்டிருந்தார். மகாவீரர் அவ்வப்போது கூறிய அறிவுரை களையும் ஏற்றுக் கொண்டார். ஆறாண்டு காலத்திற்குப் பிறகு அவரை விட்டுப் பிரிந்தார். ஆசீவகம் என்ற தனி மதத்தை நிறுவினார். மகாவீரரின் உடன் இருந்த காரணத்தால் அவருடைய மதக் கோட்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். பகவதி சூத்திரத்தின்படி நியதி என்ற தத்துவக் கோட்பாடு தவிர இவ்விரு மதங்களுக்குள் வேறுபாடே காண இயலாது. ஆடையில்லாத நிலை, கடுந்தவம் ஆகியவையும் நின்றுண்ணுதல் கொல்லாமை போன்றவையும் சமணக் கொள்கை போலவே இங்கும் அனுசரிக்கப்படுகின்றன. ஆனால் ஆசீவகர் உணவு பெறுவதிலும், உணவுக் கட்டுப்பாட்டிலும் பௌத்தர்களை விடக் குறைவான கட்டுப்பாடே கொண்டிருந்தனர். அதுபோலத் தவம், துறவு ஆகியவற்றில் சமணர்களைவிடக் குறைவான உறுதிப்பாடே கொண்டிருந்தனர் எனலாம். இன்னும் குறிப்பாகக் கூறினால் மாமிச உணவைச் சாப்பிடவும் சில நேரங்களில் அனுமதி அளிக்கப்பட்டதையும் காண்கிறோம்[1].

இத்தகைய சமயப் பின்னணியை மனதில் கொண்டு தேவாரப் பதிகங்களை ஆய்வு செய்யும் போது புதிய செய்திகள் வெளிப்பட்டன. முன்னர் குறிப்பிட்டது போல் சமண பௌத்த மதங்களை அப்பரும் சம்பந்தரும் மிகக் கடுமையாக எதிர்த்துள்ளதை இப்பதிகங்களால் அறிகிறோம். 'குண்டுந் தேருங் கூறைகளைந்துங் கூப்பிலர் செப்பிலராகி' 'அழிவல் அமண ரொடுதேரா' 'மொழிவல் லனசொல் லியபோது' 'புத்தரொடு பொறியில் சமணும் புறங்கூற' 'நீதியறியாதா ரமண

கையரொடு மண்டைப் போதியவர்' 'பொன்னியல் சீவரத்தா, புளித் தட்டையர், மோட்டமணர், குண்டர்', 'ஆச்சியப் பேய்களோ டமணர், குண்டர்' என்று அவர்கள் சமண, பௌத்தரைக் கண்டிக்கும் பாடல்களை நீண்ட பட்டியலாக்கலாம். இப்பாடல் வரிகள் சமண, பௌத்தமதக் கொள்கைகளையும் அவர்தம் புறத் தோற்றங்களையும் நம் கண்முன் கொண்டு நிறுத்துவதாயுள்ளன. இப்பாடல்களில் இவர்கள் சுட்டும் மதங்களாகத் தேரர், சாக்கியர், குண்டர் சமணர் என்ற நான்கின் வரிசையைக் காண்கிறோம். இந்நான்கனுள் தேரர் என்பார் பௌத்தருள் ஒரு பிரிவினர் என்பது ஆய்வாளர்கள் கூற்றால் விளங்கும். ஆனால் சமணர் என்பவரோடு குண்டர் என்பவரைச் சேர்த்தும் தனித்தும் கூறியுள்ளமை இங்கு கூர்ந்து நோக்கத் தக்கது.

அப்பரும் சமய மாற்றமும்

மருள் நீக்கியார் என்ற பெயருடன் இருந்த அப்பர் தருமசேனர் என்று பெயர்மாற்றங் கொண்டு சமணத் தலைவராக இருந்தார். பின் தன் உடன் பிறந்தாளான திலகவதியாரின் தூண்டுதலாலும், வேண்டுதலாலும் சைவராகித் தொண்டு புரிந்தார் என்பது பெரியபுராணம் வழி நாம் அறியும் வரலாறு. 'குண்டாக்கனாய் உழன்று குவிமுலையார் தம் முன் நாணமின்றி உண்டியுகந்து அரனே நின்றார் உடனாகி உழிதந்ததை அப்பர் பெருமானும் தம் பாடல் வழி உணர்த்திச் செல்கின்றார். மேலும்

> ''அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
> ஆரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்'' என்றும்
>
> குண்டரொடு பிறித்தெனை யாட்கொண்டார்''

என்றும் வரும் தொடர்களால் அப்பர் பிறசமயத்திலிருந்து சைவத்திற்கு வந்தார் என்பது தெள்ளிதிற் புலனாம். இங்கு அப்பரால் கூறப்படும் குண்டர் என்பார் யார்? சமணர் என்று பெரியபுராணத்தை ஆதாரமாகக் கொண்டு அறிஞர்கள் எழுதிவந்துள்ளனர்.

சமணர்கள், குண்டர், அமணர் என இரு பிரிவினராகத் தேவாரத் திருப்பதிகங்களுள் பேசப்பட்டுள்ளார்கள். இவ்விரு பிரிவினருள் நம் மருள்நீக்கியார் குண்டர் என்பவர் குழுவிலேயே சார்ந்தொழுகினார். தேவாரப் பதிகங்களிற் காணப்படும் குண்டர் அமணர் என்ற பெயர் வேறுபாடு இப்பொழுதுள்ள சமண சமயத் தமிழ் நூல்களில் இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே சமணர் குண்டர் என்னும் இருதிறத்தார்க்குந் தனித்தனியேயுரிய ஒழுகலாறுகளின் வேறுபாட்டினை உணர்தற்கு இயலவில்லை[2] என்பர் வெள்ளைவாரணர். ஆடையின்றித் திரிவதாலும், நின்றுண்பதாலும் ஒரே சமயத்தைச் சார்ந்த இரு பிரிவுகளுள் ஒன்றாகக் குண்டர் எனும் சொல்லைக் கொள்கிறார்.

சமண சமயத்தைப் பொறுத்தவரை திகம்பரர், ஸ்வேதாம்பரர் என்ற இருபிரிவுகளே இருந்து வந்துள்ளதை அச்சமயத்தின் 2500 ஆண்டு வரலாறு கூறுகின்றது. குண்டர் சமணர் என்ற பிரிவுகளைக் காண இயலவில்லை. இருப்பினும் சமகாலத்து மதங்களைப் பற்றி அதிலும் குறிப்பாக வைதீக மதத்தை எதிர்க்கும் மதங்களைப் பற்றி (பௌத்தர், தேரர், சமணர், குண்டர்) அப்பரும் சம்பந்தரும் கூறியிருப்பதும் புறக்கணிக்க இயலா ஒன்று.

ஆக இத்தேவாரப் பதிகங்கள் குறிக்கும் குண்டர் யார் என்று எண்ணும் போது நம் கருத்திற்கு வலுச் சேர்த்து முன் நிற்கும் சமயம் வைதீகத்தை எதிர்த்து எழுந்த மூன்றாவது சமயமான ஆசீவகம். சங்க நூல்கள் தொடங்கித் தேவாரப் பதிகங்கள் வரை ஆசீவகர் என்ற சொல் யாண்டும் வழங்கப்படவில்லை. தேவார காலத்திற்குப் பின் வந்த நீலகேசி, மணிமேகலை ஆகிய நூல்கள் தாம் ஆசீவகர் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அதன் பின்னர் சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியாரின் பரபக்கம் சமணரை அடுத்து ஆசீவகரைப் பற்றிப் பேசுகின்றது.

தேவாரம் கூறும் குண்டர்

ஆசீவகர் என்ற சொல் வழக்கு இலக்கியத்தில் காணப்படவில்லை என்றாலும் அவர்களைக் குறிக்க குண்டர் என்ற சொல் வழங்கியிருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு. சமணர் போலன்றி ஆசீவகர் உணவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாமையால் பருத்துக் காணப்பட்டிருக் கலாம். எனவே தேவார இலக்கியங்களில் ஆசீவகர் குண்டர் என்ற சொல்லாலேயே குறிக்கப்பட்டிருக்கலாம். ''கறிவிரவு நெய்ச்சோறு கையிலுண்டு'', ''கையெலாம் நெய்பாயக் கழுத்தேகிட்டக் கால்நிமித்து நின்றுண் கையர்'' என்று தேவாரப் பதிகங்களில் குண்டரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குண்டர் என்பார் ஆசீவகரே என்று கொள்ளலாம். புறத் தோற்றத்தின் விளக்கங்கண்டு இச்சொல் ஆசீவகரைக் குறிக்கிறது என்று கூற வேண்டிய அவசியம் இல்லை.

தேவாரத்தில் குறிக்கப்படும் சில கொள்கைக் கோட்பாடுகளாலும் இதனை அறுதியிடலாம். குண்டர் கொள்கைகள் பல பாடல்களில் கூறப்பட்டாலும் ஒரு பாடலில் காணும் ஒரே ஒரு சொல் குண்டர் என்பார் ஆசீவகர் தான் என்பதை உறுதியாக்குகின்றது. ''பழிவழி யோடிய பாவிப் பறிதலைக் குண்டர் தங்கள் மொழிவழி யோடி முடிவேன் முடியாமைக் காத்துக்கொண்டாய்'' என்று அப்பர் கூறியுள்ள வரிகள் நோக்கத்தக்கது. இங்கு பழிவழி என்பது நியதி எனும் ஊழ் என்பதாகும். அதாவது ஆசீவகரின் அடிப்படைக் கருத்தாகக் கொள்ளத் தக்கதும், சமணர்க்கும் ஆசீவகர்க்கும் உள்ள ஒரே வேறுபாடாகக் கருதத்தக்கதும், பௌத்தமும் ஏற்றுக் கொள்ளாத தத்துவமாக இருப்பதுமான பழிவழியோடியவர்

குண்டர் என்பதால் தேவாரம் குறிக்கும் குண்டர் எனும் சொல் தனியொரு மதமாய் வளர்ந்த ஆசீவக மதத்தைப் பின்பற்றியவர்களையே குறித்துள்ளது என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே.

மேலும் சமணர் போன்றே ஆடையற்ற நிலை, நின்றுண்ணுதல், தலை மயிர் பறித்தல் போன்ற கொள்கைகளை ஆசீவகரும் ஏற்றுக் கொண்டிருந்தபடியால் அப்பர் குண்டரைக் குறிப்பிடும் போதும் ''உடையிலாது உழல்கின்ற குண்டர்'' என்றும் ''குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகை நாணாது'' என்றும் ''ஓதுவித்தாய் முன் அறவுரை காட்டி அமணரோடே காதுவித்தாய்'' என்றும் சொல்லிச் செல்கின்றார். எனவேதான் ஆசீவகரைச் சமணரினின்றும் வேறுபிரித்தறிய இயலாது சமணரின் ஒரு பிரிவினராய் இருக்கலாம் என்று கருத இடந்தந்தது. இந்த மயக்கம் இவ்விரு சமயங்களும் தோன்றிய காலந்தொட்டே இருந்து வந்துள்ளது என்பதற்கும் எடுத்துக்காட்டு கூறலாம். சமணமும் ஆசீவகமும் தழைத்திருந்த காலத்தை ஒட்டி வாழ்ந்த பேரரசன் அசோகன் காலத்திலேயே தடுமாற்றங்களும், குழப்பங்களும் நிகழ்ந்துள்ளதை திவ்யாவதானம் என்ற நூலின்வழி அறிகிறோம். அதாவது நிர்கிரந்தத்தைச் (சமணர்) சார்ந்த ஒருவன் புத்தரின் பிரதிமையை (படத்தை) நாசப்படுத்திவிட்டதை அறிந்த அசோகன் அப்பகுதியிலிருந்த ஆசீவகர்களையெல்லாம் அழித்து விடுகிறான் என்று கூறப்படுகிறது. இதே மன்னனுடைய கல்வெட்டு இவ்விரு திறத்தார்க்கும் உள்ள வேறுபாட்டை மிகத் துல்லியமாகக் கூறும் நிலையில் சமணர் செய்த தவற்றினை ஆசீவகர் செய்ததாகக் கருதி அசோகன் தண்டனை கொடுத்துள்ளான்[3] என்பதை அறியும் போது தேவார காலத்தில் சமணர், அமணர், குண்டர் என்ற சொற்கள் மயக்கம் தருவதில் வியப்பேதுமில்லை. இன்னும் சமணர் என்ற சொல்லும் ஸ்ரமண என்ற வடசொல்லின் திரிபாகி, துறவிகளையெல்லாம் குறிக்கும் பொதுச் சொல்லே. ஜைனர்களைச் சிறப்பாகக் குறித்து, ஜைனர்கள் போல் தோற்றந் தரும் ஆசீவகர்களையும் குறித்து நின்றது.

எனவே சொற்களில் ஏற்படும் குழப்பத்தையும் புறத்தோற்றத்தையும் கொண்டு சமணர், குண்டர் இருவரும் ஒரு சமயஞ் சார்ந்த இரு பிரிவினராய் இருக்கலாம் என்ற கருத்தைச் சற்றே மாற்றிச் சமகால இலக்கிய வரலாற்றையும், சமய வரலாற்றையும் ஒப்பு நோக்கி ஆய்வு செய்தால் இருவரும் இருவேறு சமயக் கொள்கையினராக சமணர், ஆசீவகர் என்பதும், சமகாலத்துச் சமய நிலையை எடுத்துக் கூறும் பாங்கில் அப்பர் தாம் சார்ந்திருந்த சமயம் ஆசீவகம் என்பதை சுட்டிக் காட்டியுள்ளதையும் அறியலாம்.

இதுகாறும் கண்டவற்றால் தேவார காலத்தில் சமண பௌத்த

மதங்களுடன் ஆசீவக மதம் தமிழகத்தில் பரவியிருந்ததையும் ஆசீவகத் துறவிகள், குண்டர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டதையும், பழிவழியோடிய அக்குண்டர் குழுவில் அப்பர் பெருமானார் இருந்ததையும் திருந்தா அமணர் தம் தீ நெறிப்பட்டுத் திகைத்து முத்தி தருந் தாளிணைக்கே சரண் புகுந்ததையும் அறிகின்றோம்.

அடிக்குறிப்புகள்

1. *History and Doctrines of the Ajivikas* A.L. Basham, Motilal Banarsi doss, Page 122. (Reprint - Delhi 1981)
2. பன்னிரு திருமுறை வரலாறு முதற்தொகுதி வித்துவான் க. வெள்ளை வாரணன், விரிவுரையாளர், தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பக்கம் 11.
3. *History and Doctrines of the Ajivikas* P. 138.

51. தமிழகத்தில் கன்னி வழிபாடு

முனைவர். நா.மார்க்சிய காந்தி , சென்னை.

பெண்தெய்வ வழிபாடு உலகமுழுவதும் பரவியிருந்த ஒன்று. தொடக்க கால மக்கள், வாழ்விற்கு வளம் சேர்க்கும் தன்மைத்தாகிய 'தோற்றம்' நடைபெறுவதற்குப் பெண்களே அடிப்படையாய் அமைந்திருப்பதாக உணர்ந்த போது, பெண்ணைத் தெய்வமாக வணங்கினர். மனித குலத் தோற்றத்திற்கான சக்தியைப் பொதிந்து வைத் திருக்கிறாள் பெண் என்ற அடிப்படையில், பயிர்களின் தோற்றத்திற்கான சக்தியைப் பொதிந்து வைத்துள்ள மண்ணினையும், வளத்தினை வார்க்கும் நதியினையும் பெண்ணாகவே உருவகித்து வணங்கினர். பெண்ணை வணங்கிய போது, சக்தியைப் பொதிந்துவைத்துள்ள கன்னிநிலையிலும், பெற்று வளர்க்கும் தாய் நிலை என்ற இரு நிலைகளும் வணக்கத்திற்குரியதாயின. மனித சக்தியின் அடிப்படையில் நாம் நினைத்த ஈடுபட்ட வெற்றியை பெறுதற்கும் அதே சக்தியை வணங்கினர். அன்றைய நிலையில் போர் வெற்றி பெரும் வெற்றியாதலின் போர்த்தெய்வமாகவும் பெண் போற்றப்பட்டாள். எனவே வளத்திற்கும். வெற்றிக்கும் உரியதாகக் கன்னிப் பெண் தெய்வ வணக்கம் அமைந்தது.

தேவியைப் பற்றிய புராணங்களில் கன்னிவணக்கம் சிறப்பிடம் பெறுகின்றது. திரிபுர சுந்தரியாகிய தேவி குமரியாகவே சுட்டப் பெறுகிறான். திரிபுர ரகஸ்யம் யோகினி தந்திரம் ஆகிய நூல்கள் 'கன்னி பூசை' பற்றி விரிவாகச் சொல்லுகின்றன. கன்னியே அனைத்து உலகின் சக்தியின் இருப்பிடம் என்றும், இவ்வுலகின் அசைவின்மைக்கும் அசைவுக்கும் அவளே காரணம் என்றும் அழகின் தோற்றத்திற்கும் அவற்றிலிருந்து பெறும் மகிழ்ச்சிக்கும் அவளே காரணம் என்றும் உரைக்கின்றன. அவளது தனிவிருப்பத்தின்படி, தன்னிடமுள்ள சக்தியால் இவ்வுலகினை அவள் படைக்கிறாள். யாருடைய கட்டுப்பாடும் இல்லாத கன்னியாக உள்ள அவள் இளமையும் ஒளியும் பொருந்திய தோற்றமுடையவளாகத் திகழ்கிறாள் என்கின்றன.

இக்கன்னி பூசை செய்யப்பட வேண்டிய முறைமை பற்றித் தேவிபாகவத புராணம், தேவி புராணம் ஆகியன எடுத்துரைக்கின்றன. நல்ல உடல் நலமுடைய, கருணையும் அழகும் உடைய, எந்தவிதக் குறையுமற்ற நல்ல பண்புடைய கன்னிப் பெண்ணையே கன்னி பூசைக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், உறுப்புக்குறை, நோயுற்ற, மெலிந்த உணர்ச்சிவசப்படும் பெண்கள், திருமணமாகாத மற்றும் விதவைகள் பெற்ற பெண்கள் பூசைக்கு உரியவர் அல்லர் என்றும்

கூறுகின்றன. போர் வெற்றியை வேண்டுவோர் க்ஷத்திரிய குலக்கன்னியையும், பொருள் வேண்டுவோர் வைசிய குலக் கன்னியையும், பொதுவாக நலம் வேண்டுவோர் வைசிய மற்றும் சூத்திர குலக் கன்னியையும் வணங்கலாம் என்பதோடு, இவற்றில் அனைத்துப் பயன்களையும் அந்தணகுலக் கன்னியை வணங்குதல் மூலம் பெறலாம் என்றும் அவை கூறுகின்றன. ஆனால், அந்தணர்கள் வணங்கும் போது அந்தணர் குலக் கன்னியரையே வணங்குதலும், மற்றும் கலை தொழில் வல்லார் தத்தம் குலக் கன்னிப் பெண்களையே வணங்குதல் வேண்டும் என்றும் வரையறுக்கின்றன. 2 வயது முதல் 10 வயதிலான கன்னியர் வணக்கத்திற்கு ஏற்ற பருவம் உடையவர் என்றும், நவராத்திரி நாள்களில் ஒன்பது நாளும், ஒன்பது பெயருடன் கன்னியர் வணங்கப்படுவர் என்றும், தாம்தாம் விரும்பும் பயன்களுக்கு ஏற்ப அவ்வொன்பது பேர் வணக்கமும் அமையும் என்றும் கூறுகின்றன. அழகிய ஆடை, அணிகலன்கள், மலர் மாலைகள், நறுமணப் பொருட்கள் ஆகியவற்றால் அணி செய்து மந்திரங்களால் வழிபடுதல் வேண்டும் என்றெல்லாம் அவை பூசை பற்றிக் கூறுகின்றன. தேவி பாகவதம், இதனைக் 'குமரிபூசை' என்கிறது.

இத்தகைய கன்னிபூசை தமிழகத்திலும் சிறப்பாக நடைபெற்றது என்பதற்கான சான்றுகளை இலக்கியமும் கல்வெட்டுகளும் நமக்குத் தருகின்றன. தமிழகத்தின் தென் கோடியில் அமைந்த குமரித் துறையில் தேவி கன்னியாக வழிபடப்பட்டதைக் கி.பி.முதல் நூற்றாண்டிலேயே பிளினி குறிப்பிடுகிறார். வைத்திய ஆரணயகமும் இச்செய்தியினைக் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகார வேட்டுவரி, இத்தகைய கன்னி பூசையினை மிக விரிவாகக் கூறுகின்றது. கோவலன், கண்ணகி இருவரும் கவுந்தியடிகளுடன் மதுரை செல்லும் வழியில், ஆறுசெல் வருத்தத்து, நோய் தணிய எயினர் குடிப்பிருப்பருகே உள்ள 'ஐயை கோட்டம்' உள்ள பகுதியில் அமர்கின்றனர். ஐயை கோட்டத்து மன்றிலில் சாலினியென்றொரு பெண்ணிற்குத் தெய்வம் ஏற, அவள் மெய்ம்மயிர் நிறுத்துக் கையெடுத்து ஓச்சி கானவர் வியப்ப நடுவூர் மன்றத்தே அடிபெயர்த்து ஆடியதோடு, அவளாடும் மன்று பாழ்பட்டது என்றும், மறக்குடியரான எயினர்தம் தாயம் வழிவளம் குறைக்கப்பட்டது என்றும் கூறி, கலைமீது அமரும் கன்னியாகிய துர்க்கைக்குக் கடன் செய்தாலன்றி, வில்லாற்பெறும் வெற்றியினை அவள் தரமாட்டாள் என்றும், கள்ளோடு சேர்ந்த நல்லுணவு பெறும் வளவாழ்க்கையை விரும்பினால் வழிபாடு செய்தல் வேண்டும் என்றும் கூறுகிறாள்.

உடனே எயினர் தம் தொல் குடியில் இருந்து ஒரு குமரியைத் தேர்ந்தெடுத்து, விழாச் செய்கின்றனர். அக்குமரியை அணி செய்யும் பான்மையை வேட்டுவரி விரிவாகக் கூறுகிறது. சிறிய பொன்னாலான பாம்பு அனைய அணியினை கூந்தலின் நெடுமுடியில் சுற்றினர்;

ஏனத்தின் வளைவெண் கோட்டினை, அத்தலையில் இளம்பிறை (முறை வெண் திங்கள்) போலச் சாத்தினர்; புலியின் வாய் பிளந்து பெற்ற வெண்பற்களைத் தாலியாகக் கட்டி அவளுக்குப் பூட்டினர்; வரியும், புள்ளியுமாய் அமைந்த மானினது உரிவையை அவளுக்கு மேகலைபோல் கட்டினர்; கரிய வில்லொன்றினை அவள் கையிற் கொடுத்தனர்; முறுக்குண்ட கொம்புடைய கலை மானின் (உருவம்) மீதேற்றி அவளை அமரச் செய்தனர். பாவை, கிளி, கானக்கோழி, மயில், பந்து, கழங்கு ஆகிய ஆறினையும் கைகளில் கொடுத்தனர்; பல்வண்ணச் சுண்ணங்களாலும், சந்தனத்தாலும் அழகு செய்தனர். இவ்வாறு அணிசெய்யப் பெற்ற குமரிக்குப் புழுக்கல், நோடை, மடை, பூ, புகை, விரை ஆகியவற்றை ஏந்திய கையராய், பறை, சின்னம், கோடு, குழல், மணி ஆகியவை ஒலிக்கப் பூசை செய்தனர்; மலர்ப்பலி பீடிகையில் கலையின் மீதமர்ந்த, தம் குலத்துக் கன்னியைக் குமரிக் கோலத்தில் வணங்கினர் என்று மிகத் தெளிவாக விவரிக்கிறது சிலம்பு. எனவே வேட்டுவ இன மக்கள், தம் குலக் கன்னியரைத் தேவியாக உருவகித்துக் 'கன்னிபூசை' நடத்தினர் என்றறிகிறோம்.

அண்மையில் படியெடுக்கப்பட்ட சீர்காழி வட்டம் திருவெண்காட்டில் பொறிக்கப்பட்டுள்ள வீரராஜேந்திரனின் கல்வெட்டு ஒன்று[1], அக்கோயிலில் கன்னிபூசை செய்வதற்காக நிவந்தங்கள் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. அம்மன்னனின் மூன்றாவது ஆட்சியாண்டில், திருவெண்காட்டு நங்கை யென்பாளின் மகன் சிவலோக நாதனின் விண்ணப்பத்தால், ஸ்ரீ வீர ராஜேந்திரன் பிறந்த ஆயில்ய நாளில், ஒவ்வொரு மாதமும் ஒருநாள் விழாவில் இக்கன்னி பூசை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நாள்களில், இறைவன் திருவிழா எழுந்தருளால், (உற்சவ மூர்த்தி ஊர்வலம்), தீர்த்தம் பிரசாதித்தல், பெருந்திருவமுது செய்தருளுதல், ஆகியன இறைவனுக்குச் செய்யப்பட்டன. அன்று சிவயோகிகள் பதின்மரும், பிராம்மணர் ஐவரும், உண்ண ஏற்பாடு செய்யப்பட்டது. கன்னி பூசைக் கென உரிய பிராம்மணப் பெண்கள் ஒன்பது பேருக்கும், கணபதி மற்றும் சுப்பிரமணியராகத் திகழும் பிரம்மச்சாரிப் பிராம்மணர் இருவருக்கும் வழங்கத் தேவையான பொருள்களுக்குமாகப் பொன் கழச்சே ஒன்பது மஞ்சாடியும், காசு மூன்றே முக்காலும், திருநீராட்டுப் பொருள்களுக்காக (ஸ்நபநத்ரவ்யங்கள்) காசு ஒன்றரையே ஒருமா முக்காணி அரைக்காணியும் சாத்துவதற்கு பட்டம் ஒன்றும், அதில் அரைவிலையன மூன்றும், கால்விலையன இரண்டும் கலசப் பாவாடைப் புடவை பதினைந்தும், கலச நூல் பலமும், நெய், எண்ணெய், மிளகு, கடுகு, மஞ்சள் பாக்கு ஆகியவற்றுக்கும் நிவந்தங்கள் வழங்கப்பட்டன. மேலும், இவ்வேற்பாட்டுக்குக் காரணமான சிவலோக நாதனுக்கும் அவன் வாக்கத்தாற்கும், இறைவன் திருவோலக்கமாகி இருந்து வழங்கி அருள

காசு இரண்டும், பரிசட்டம் இரண்டும், ஒரு நாளுக்கு இவனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் 36 1/2 காணி முந்திரிகை வீதம், ஆண்டில் 12 நாள்களுக்கும், 438 மூன்று மாக்காணி நிலம் வழங்கப்பட்டது. மேலும் வீணை வாசிப்பான் ஒருவனும், ஸ்தோத்திரம் விண்ணப்பஞ்செய்வான் ஒருவனும், இவ்விழாவுக்கென ஏற்பாடு செய்யப்பட்டனர். எனவே, திருவெண்காடு கோயிலில் மாதந்தோறும் ஆயில்ய நாளில் 'கன்னிபூசை' நிகழ்த்தப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இரண்டாம் இராஜேந்திரனின் திருக்கோகர்ணம் கல்வெட்டு, அக்கோயிலில் இருந்த துர்க்கையார் இராஜேந்திர நங்கையார்க்கு 'விஜ்ஜயி அர்ச்சனை' (வெற்றிப்பூசை) செய்ய அளித்த நிவந்தத்தைக் குறிக்கிறது[2] நெல்லைமாவட்டம் கங்கை கொண்டானின், சுகம் 1477-இல் (கி.பி. 1555) மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'அம்மைபூசை நடக்கிற வகைக்கு உரிய பணம் கொடுத்த குறிப்பின்[3] மூலம் அங்கும் தேவிக்கெனத் தனிப்பூசை நிகழ்ந்துள்ளது என்று ஊகிக்க முடிகிறது.

தொடக்க காலமுதல் பெண்ணை அன்னையாகவும் கன்னியாகவும் வழிபடும் முறைமை இருந்தது. புரணங்கள், மற்றும் இலக்கியங்களின் வழி இவ்வழிபாடு தத்தம் குலகன்னியாரையே, இறைவியாக உருவகித்து வணங்கும் தன்மையுடையதாகத் திகழ்ந்திருக்கின்றது என்றறிகிறோம் குறிப்பிட்ட காலக் கட்டத்தில் இத்தகைய கன்னிபூசை வழிபாடு, பெருங்கோயிலின் உள்ளேயே பிராம்மணக் கன்னியரையே தேவியாக உருவகித்து வணங்கப்படுவ தாகவும் திகழ்ந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1. திருவெண்காட்டுக் கல்வெட்டினை இக்கட்டுரைக்குப் பயன்படுத்த அனுமதி நல்கிய தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநருக்கு நன்றி.
2. இல. தியாகராசன் திருக்கோகர்ணம் கல்வெட்டுகள். ஆவணம் இதழ்.1
3. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 5 எண். 735.

52. பாண்டிய நாட்டில் நடராஜீசுவரம்

முனைவர். வெ. வேதாசலம், மதுரை.

சிவபெருமானை ஆடற்கலையின் நாயகனாக வழிபடும் மரபு தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. நடனமிடும் சிவனை நடேசர், நிருத்தேசுவரர், நாடகேசுவரர் என்றழைக்கும் வழக்கம் வடநாட்டில் உள்ளது[1]. இடைக்காலத் தமிழ்நாட்டில் சோழர், பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்களில் இவர் கூத்தாடும் பெருமானடிகள், கூத்தாடும்தேவர், ஆடவல்லான், அம்பலத்தாடுவார், அம்பலக் கூத்தன் என்று அழைக்கப்பட்டுள்ளார்[2]. நாட்டியத்திற்கு நாயகனாகக் கருதப்பட்ட சிவன் உறையும் திருக்கோயிலை ''நாட்டீசுவரத் தாழ்வார் கோயில்'' என்றும் அழைத்துள்ளனர்[3].

ஆனால் ஆடலுக்கு அரசனாக விளங்கிய அரனுக்கு நடராசர் என்ற பெயர் வழக்கு பதிமூன்றாம் நூற்றாண்டில்தான் ஏற்பட்டிருக்கிறது. இக்காலத்திற்கு முந்தைய பல்லவர், முற்காலப்பாண்டியர், சோழர் கல்வெட்டுக்களிலும் இப்பெயர் வழக்கினைக் காண முடியவில்லை. அக்காலத்து இலக்கியங் களிலும் இப்பெயர் இடம் பெறவில்லை. கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு உமாபதிசிவம் இயற்றிய சேக்கிழார் புராணத்திலும் தொடர்ந்து அருணகிரிநாதர் பாடலிலும் இச்சொல் இடம் பெற்றுள்ளது[4]. பின்னர் விசயநகரர், நாயக்கர் காலங்களில் பெருவழக்கிற்கு வந்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலமான காளையார்கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள திருவேகம்பத்து என்ற ஊரில் அண்மையில் கண்டறியப்பட்ட பிற்காலப்பாண்டியர் கல்வெட்டு ஒன்றில் இச்சொல் முதன்முதலில் இடம் பெற்றுள்ளது[5]. சிவன்கோயில் மூலநாயகருக்கு நடராசர் என்று பெயரிட்டு 'நடராஜீச்சுவரம்' என்று கோயில் எடுப்பித்துள்ளதைத் தெரிவிக்கும் இக்கல்வெட்டுச் சான்று தமிழ்நாட்டு சைவசமயவரலாற்றிக்குக் கிடைத்த புதிய செய்தியாகும். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் காளையார்கோவில் பகுதியில் சைவ மடங்களை நிறுவிச் சிறப்புடன் வாழ்ந்தவர் செல்வத்திருவாரூர் தட்சிண கோளகி மடத்தினைச் சார்ந்த சோமநாததேவர் என்ற சைவத்துறவி ஆவார். இவரே 'நமச்சிவாயநல்லூர்' என்ற பெயரில் பாண்டிய மன்னின் ஆதரவுடன் ஊர் ஒன்றை இப்பகுதியில் தோற்றுவித்தார். அவ்வூரில் 'நடராஜீச்சுவரம்' என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்றை எடுப்பித்து அதில் நடராஜீச்சுவரமுடையாரை எழுந்தருளச்செய்தார்.

அக்கோயிலுக்குத் திருப்படிச்செலவிற்கும் திருப்பணிக்கும் வேண்டி தேவதானமாக வரி நீக்கிய நிலங்களை அளிக்கச் செய்தார்.

மேலும் இச்சோமநாததேவரே இவ்வூரில் 'திருஞான சம்பந்தர் மடம்' என்ற பெயரில் சைவமடம் ஒன்றினைத் தோற்றுவித்தார். அதில் தங்கியிருந்த அவரது சீடர்களுக்கு உணவு உள்ளிட்ட செலவினங்களுக்காக மடப்புறமாக நிலத்தையும் அளிக்க ஏற்பாடு செய்தார்.

இச்செய்திகளைத் தெரிவிக்கும் இக்கல்வெட்டு திருவேகம்பத்து சிவன் கோயில் அர்த்தமண்டபத்தில் உட்புறம் தென்புறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இது பதிமூன்றாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் 'கோனேரின்மை கொண்டான்' என்ற பெயரில் விளங்கும் பிற்காலப் பாண்டிய மன்னனின் அரச ஆணையாக உள்ளது. இதில் குறிப்பிடப் படும் சைவத்துறவியான சோமநாததேவரும் பாண்டிய மன்னனின் இரு அதிகாரிகளும் பதிமூன்றாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் ஆட்சிபுரிந்த வேறு ஊர்களிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக் களிலும் குறிப்பிடப்படுகின்றனர். எனவே இக்கல்வெட்டினை இக்காலத்தில் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னன் ஒருவனது நான்காம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட ஆவணமாகவே கொள்ள வேண்டியுள்ளது. பாண்டிநாட்டில் போசளர்கள் செல்வாக்குடன் திகழ்ந்த காலத்தில் ஆட்சிபுரிந்தவன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238-1255) ஆவான். இவனது சமகாலத்தவனாக முதலாம் சடையவர்மன் விக்கிரமபாண்டியன் (கி.பி.1241-1254) என்பவனும் ஆட்சிபுரிநதிருக்கின்றான்[6]. இவனது நான்காம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் தேவிபட்டினம், மதுரை போன்ற இடங்களில் காணப்படு கின்றன[7]. இக்கல்வெட்டுகளில் மேலே கண்ட திருவேகம்பத்து நடராஜீசுவரத்து கல்வெட்டில் குறிப்பிடப் படும் இரு அதிகாரிகளான மல்லிநாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையான் உய்யநின்றாடுவான் வீரசோழதேவனான வாணாதராசன், அண்ணன் வாணாதராயர் என்பவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். எனவே இவ்வதிகாரிகளைக் குறிப்பிடும் திருவேகம்பத்து கோனேரின்மை கொண்டானின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டையும் சடாவர்மன் விக்கிரமபாண்டியனின் கல்வெட்டாகக் கருத வாய்ப்புள்ளது. இதனால் இக்கல்வெட்டின் காலத்தினை கி.பி.1245 என்று கணித்துக் கூறலாம்.

நடராஜீச்சுவரத்தைத் தோற்றுவித்த சோமநாததேவர் விக்கிரம பாண்டியனின் குலகுருவாக விளங்கியவர் ஆவார். காளையார் கோவிலிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று விக்கிரம பாண்டியன் இவருக்குக் குருதட்சணையாகத் திருவரங்கி வேலங்குளமான சோமனாதநல்லூரைத் தானமாகத் தந்ததைத் தெரிவிக்கிறது[8]. பிற்காலப் பாண்டிய மன்னர்களின் குருவாக விளங்கிய சோமநாததேவர் போன்ற சைவமடத் தலைவர்களே புதுமையான முறையில் 'நடராஜீச்சுவரம்' போன்ற சைவக்கோயில்கள் உருவாகக் காரணமாக இருந்திருக்கின்றனர் எனலாம். 'நமசிவாய என்ற

திருவைந்தெழுத்தினைத் தனக்குரிய திருமேனியாகக் கொண்டு திருவைந்தெழுத்தின் தமிழ்வரிவடிவமாகவே தில்லைக் கூத்தபிரான் திகழ்கின்றான் என்று சைவசமயச் சாத்திரங்கள் கூறும்[9]. இவ்வடிப்படையினைக் கருத்தில் கொண்டே சைவத்துறவியான சோமநாததேவர் 'நமச்சிவாயநல்லூர்' என்ற பெயரில் ஊர் ஒன்றினை புதியதாகத் தோற்றுவித்து அதில் அம்பலக்கூத்தனின் ஆடல்தத்துவம் விளங்கும் வகையில் நடராஜீச்சுவரத்தை எடுப்பித்துள்ளார் எனக் கருதத் தோன்றுகிறது.

சோமநாததேவர் தோற்றுவித்த இந்நமச்சிவாய நல்லூரும் நடராஜீச்சுவரமும் தற்போது எங்கிருக்கிறது என்று அறிய முடியவில்லை. ஆனால் இவ்வூர் காளையார்கோயில் பகுதியைச் சூழ்ந்த சிவகங்கை வட்டத்துப் பகுதியிலேயே இருந்து அழிந்துபட்டிருக்க வேண்டும். இவ்வூர் அழிந்த நிலையில் அங்கிருந்த நடராஜீச்சுவரத்துக் கட்டடக் கற்களும் அரிய நாட்டிய கரணச் சிற்பங்களும் பிற்காலத்தில் திருவேகம்பத்தில் செய்யப்பட்ட திருப்பணியின்போது திருவேகம் பத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்குள்ள தற்போதைய சிவன் கோயிலில் வைத்து கட்டப்பட்டிருக்க வேண்டும். இதேபோன்று கீரனூர் நாட்டிலிருந்த திருஞானசம்பந்தநல்லூர் சுந்தரபாண்டிய ஈசுவரமுடையநாயனார் கோயிலும் அழிந்த நிலையில் அங்கிருந்த கட்டடக்கற்கள் எடுத்துவரப்பட்டு திருவேகம்பத்து சிவன்கோயில் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவேகம்பத்து திருக்கானப் பேர்கூற்றம் என்ற உள்நாட்டுப் பிரிவில் அமைந்த ஊராகும். இங்குள்ள கி.பி.13 - 16ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுகளில் இக்கோயில் திருக்கானப்பேர்கூற்றத்து திருவேகம்பமுடைய நாயனார் கோயில் என்றே குறிப்பிடப்படுகிறது. எனவே திருவேகம்பத்துச் சிவன்கோயிலை நடராஜீச்சுவரமாகக் கொள்ள முடியாது.

இக்கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றின் அடித்தளத்திலுள்ள அழகிய நாட்டிய கரணச் சிற்பங்கள் பாண்டிநாட்டில் காணப்படும் நாட்டிய கரணச் சிற்பத் தொகுதிகளில் பழமையானதாகும். இது போன்ற பிற்காலப் பாண்டியர் காலத்து ஆடற்கலைச் சிற்பங்களைப் பாண்டி நாட்டில் வேறு எங்கும் காண்பது அரிதாகும். நடராஜீச்சுவரத்து கட்டடக் கற்களோடு இக்கரணச் சிற்பங்களையும் எடுத்துவந்து திருவேகம்பத்து சிவன்கோயிலில் வைத்து அதனை விரிவுபடுத்திக் கட்டியிருக்க வேண்டும். அதன் கருவறை அர்த்தமண்டபத்தினைச் சுற்றிவரும்போது உபானப் பகுதியில் மூன்று புறங்களிலும் இன்றும் இச்சிற்பங்கள் விளக்குகின்றன.

நடராசர் வழிபாட்டின் மீதும் தில்லைக்கூத்தனின் ஆடல் தோற்றத்தின் மீதும் பாண்டியர்களுக்கும் பாண்டி நாட்டவர்களுக்கும்

ஆழ்ந்த ஈடுபாடு இருந்துள்ளது என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. இத்தகைய ஆர்வத்தின் விளைவே பாண்டிநாட்டில் அம்பலத்திலாடும் நடராசர் வழிபாடு மிகுவதற்குக் காரணமாக அமைந்தது. தமிழ்நாட்டில் ஆடற்கலையின் சிகரமாக தில்லைக் கோயில் திகழ்ந்து வந்துள்ளது. அதனைக் கண்டு களிப்பதிலும் அதற்குக் கொடைகள் வழங்குவதிலும், திருப்பணிகள் செய்வதிலும் பாண்டிநாட்டு வேந்தர்களும், அதிகாரிகளும், பிறரும் ஆர்வம் காட்டினர் என்பதை அங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த வரகுணபாண்டியன் தில்லையைப் போற்றிக் கொண்டாடியதாக மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் குறிப்பிடுகின்றார்[10]. இவ்வரகுண பாண்டியனின் சோழநாட்டுப் படையெடுப்பும் தில்லை விஜயமும் பாண்டிநாட்டில் நடராசனின் கால்மாறியாடும் வடிவம் உருவாவதற்குக் காரணமாயிற்று. மதுரைக்கு அருகிலுள்ள பொருப்புமேட்டுப்பட்டியில் கிடைத்த கால்மாறியாடும் நிலையிலுள்ள (இடக்காலையூன்றி வலக்காலைத் தூக்கியாடும்) நடராசரின் செப்புத் திருமேனி, கூத்தப்பெருமானின் உருவத்தினை மாறுபட பாண்டி நாட்டிற்குரிய தனித்தன்மையுடன் காட்டும் நோக்கில் வடிக்கப்பட்டதாகும்[11].

வரகுணபாண்டியனுக்குப் பிறகு பதிமூன்றாம் நூற்றாண்டில் தலையெடுத்த பாண்டிய மன்னர்களுக்கு மீண்டும் தில்லைக்கு விஜயம் செய்யும் வாய்ப்புக்கிட்டியது. முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் போன்ற பல மன்னர்கள் தங்கள் வெற்றிகளைப் பெருமிதமாகத் தொகுத்துக் கூறும் மெய்க் கீர்த்திகளில் தில்லைக்குச் சென்று தில்லைக்கூத்தனின் நடனத்தினைக் கண்டுகளித்ததையும் ஒரு பெருவெற்றியாகக் குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளனர்[12]. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி

> ''ஐயப்படாத அருமறை தேரந்தணர்வாழ்
> தெய்வப் புலியூர்த் திருவெல்லையுட் புக்கு
> பொன்னம்பலம் பொலிய ஆடுவார் பூவையுடன்
> மன்னுந் திருமேனி கண்டு மனங்களித்து''

என்று குறிப்பிடுகிறது.

தில்லையில் முடிசூடிக் கொள்ளும் மரபைக் கொண்டவர்கள் சோழ மன்னர்களே ஆவார்கள். இதனை நினைவில் கொண்டு அவர்களது நாட்டைக் கைப்பற்றிய சடையவர்மன் வீரபாண்டியன் போன்ற பாண்டிய மன்னர்கள் தில்லைக்கோயில் வளாகத்தில் முடிசூடிக் கொண்டுள்ளனர் எனலாம்[13]. தில்லையைக் கைப்பற்றுவதற்கும் பாண்டியர்கள் போர்கள் பல நடத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டின் ஆடற்கலையின் மையமாக விளங்கிய தில்லைக்குப் பிற்காலப் பாண்டிய மன்னர்கள் சென்று வந்தபின் பாண்டிநாட்டுச் சைவசமய வரலாற்றில் புதியபோக்குகள் தோன்றின. குறிப்பாக பாண்டிநாட்டில் நடராசப் பெருமானை மூலநாயகராகக் கொண்டு கோயில்கட்டி வழிபடும் மரபு பெருகியது. தில்லையில் உள்ளது போன்று நாட்டியக்கரணச் சிற்பங்களைப் பாண்டியர் கோயில்களில் வடிக்கும் வழக்கமும் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பாண்டியரின் குலக்குருவாக விளங்கிய சோமநாததேவர் போன்ற தட்சிணகோளகி மடத்துத் தலைவர்கள் உறுதுணையாக இருந்தனர் என்பதையே திருவேகம்பத்தில் கண்டறியப்பட்ட நடராஜீச்சுவரத்துக் கல்வெட்டும், ஆடற்கரணச் சிற்பங்களும் உணர்த்துகின்றன.

தமிழ்நாட்டின் சைவ, வைணவ சமயங்களின் மையங்கள் வரலாற்றில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இடம்பெயர்ந்த நாடுவிட்டு நாடு மாறிக்கொண்டே வந்துள்ளன. பல்லவ, சோழப் பேரரசர்களின் எழுச்சிக் காலங்களில் அவர்களது நாடுகளின் நகரங்களில் இம்மையங்கள் இருந்துள்ளன. பிற்காலச்சோழரின் வீழ்ச்சிக்குப் பின்னர் பதிமூன்றாம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் எழுச்சியின் போது மதுரையைச் சூழ்ந்த பாண்டிநாட்டிற்கு இச்சமய மையங்கள் மாறின. இதற்குக் காரணம் பேரரசுகளும்- சமயங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து தம்மை சமூகத்தில் முதன்மைபடுத்திக் கொண்டமையே ஆகும்[14]. இந்த அடிப்படையிலேயே ஆடற்கலையின் மையமாகத் தில்லை திகழ்வது போன்று பாண்டிநாட்டு மதுரையும் அதனைச் சார்ந்த பகுதிகளும் திகழ வேண்டும் என்ற நோக்கில் நடராசர் வழிபாட்டைப் பாண்டியர்கள் வளர்த்தனர். மதுரை (வெள்ளியம்பலம்) திருநெல்வேலி (தாமிரசபை) குற்றாலம் (சித்திர சபை) போன்ற இடங்களில் கூத்தனின் அம்பலங்களை உருவாக்கினர். தமிழ்நாட்டிலுள்ள ஐந்து ஆடற்சபைகளில் மூன்று பாண்டிநாட்டிலேயே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. C. Sivaramamurthi, *Nataraja in Art thought and Literature*, National Museum, New Delhi, 1974, p.3.
2. SII. Vol. XIII p. 160; SII. V No.294; SII.II No.5 *மல்லல் கல்வெட்டு: முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி.*
3. SII. Vol. XIV No.73.
4. "திருநெறிய செந்தமிழோ டொக்கும் என்றுரை தொடர்ந்து செப்பேடு செய்து நடராசர் சந்தியில் ஏற்றினார்கள்" (சேக்கிழார் புராணம். பா.97)

   "அரியயன் அறிந்திடாத அடியினை சிவந்தபாதம் அடியென விளங்கியாடு நடராஜன்" (திருப்புகழ் - சிதம்பரம்)
5. இக்கல்வெட்டு கள ஆய்வின்போது இக்கட்டுரையாசிரியரால் கண்டறியப்பட்டது. இக்கல்வெட்டு தொடர்பாக தமது கருத்தினை அளித்து உறுதுணை புரிந்த அமரர் கும்பகோணம் என்.சேதுராமன் அவர்களுக்கு எனது நன்றி.

6. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம், 1989, பக்.111.

7. SII Vol. VIII No.403; ARE. 188/1944.

8. SII Vol. VIII No.176.

9. அ. க. வெள்ளைவாரணன், ''தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்தும் தமிழ்நெறி விளக்கமும்'' சிதம்பரம் நடராஜர்கோயில் கும்பாபிஷேகமலர், சிதம்பரம், 1987, பக்.226-231.

ஆ. உண்மை விளக்கப்பாடல் (எண்.34) தில்லைக்கூத்தன் திருவடியிலே ''ந'' கரமாகவும் திருவயிற்றிலே ''ம'' கரமாகவும் திருமுகத்திலே ''வ'' கரமாகவும் திருமுடியிலே ''ய'' கரமாகவும் கொண்டருளியாடு கின்றான் என்கிறது.

''ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம்-கூடும்
மகரம் உதரம் வளர்தோல் சிகரம்
பகருமுகம் ''வா'' முடி ''ய''ப் பார்''.

இ. ச. தண்டபாணி தேசிகர், ஆடல்வல்லான், திருவாவடுதுறை ஆதினம், 1967, பக். 94-96.

10. திருக்கோவையார், பா.306, 327.

11. கி.பி.9-10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்செப்புத் திருமேனி தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.

12. ''தில்லையம் பலத்துத் திருநடம் பயிலுந்
தொல்லை இறைவர் துணைகழல் வணங்கிய''

(முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி)

''சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாது சென்றப்
போர்வென் றுணப்பேய் நடங்கன் டதற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா''

(மாறவர்மன் விக்கிரமபாண்டியன் மெய்க்கீர்த்தி)

13. ''புனல்செஞ்சடையோன் பொற்புலியூர் வீற்றிருந்து
காடவன் திறையிட கண்டினி திருந்து
வீராபிசேகமும் விஜயாபிசேகமும்
பண்ணி யருளிய வீரபாண்டிய தேவர்''

(சடையவர்மன் வீரபாண்டியன் மெய்க்கீர்த்தி)

14. வெ. வேதாசலம், 'இலக்கியங்கள் கல்வெட்டுகள் காட்டும் பாண்டியநாட்டுச் சமுதாயமும் பண்பாடும்', மதுரைப் பல்கலைக் கழகம், வெளியிடப் பெறாத ஆய்வேடு, 1993, பக்.432.

53. இந்திரவிழா

முனைவர் ஆ. பத்மாவதி, சென்னை

இந்திரவிழா சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் குறிப்பிடுகின்றன. இந்த இரு காப்பியங்கள் தவிர அதற்கு முன்னரும் பின்னரும் இந்திர விழா கொண்டாடப் பட்டதாக எந்த இலக்கியமும் குறிப்பிடவில்லை. காளிதாசரின் வடமொழி இலக்கியமான இரகு வம்சத்திலும் (4-வது சர்க்கம், 3-வது சுலோகம்) இந்திரவிழா பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. இந்திரனுடைய கொடியை உயர்த்தி மகிழ்வதைப் போல, மன்னன் இரகுவின் முடி சூட்டு விழாவைக் கண்டு நகர மக்கள் மகிழ்ந்தனர் என்று ஒரு சுலோகத்தில் கூறுகிறார் காளிதாசர்[1].

இரகு வம்ச உரையில்,''எந்த அரசன் இந்திரனுக்கு விழா எடுத்து கொடி நாட்டுகிறானோ அந்த அரசனுடைய நாட்டில் சந்தேகமேயில்லாமல் வேண்டிய அளவு மழை பொய்யும்'' எனக் கூறுகிறார் மல்லிநாதர். ஆனால் இதற்கெல்லாம் முன்னரே வடநாட்டு சேடிமன்னன் இந்திரா விழா கொண்டாடியதை மகாபாரதம் கூறுகிறது. சேடி மன்னன் உபச்சரிகா என்ற வசு அரசனாக முடி சூடிய முதலாம் ஆண்டு ஒரு மூங்கிற் கழியில் கொடியைக் கட்டி உயர்த்தி இந்திரனை வழிபட்டானாம். அவன்தலை முறையினரும் தொடர்ந்து இந்திரனுக்கு விழா எடுத்து வழிபட்டனர் என்று கூறப்படுகிறது[2].

சிலம்பின் கடலாடு காதையின் தொடக்கத்திலேயே, ஒருவனைப் பற்றி கூறுகிறார் இளங்கோவடிகள். அதாவது வெள்ளி மால் வரையாகிய இமயமலை அருகிலுள்ள சேடி நாட்டில் காமக் கடவுளுக்கு விழா எடுத்து மகிழும் ஒரு வீரன் தன் காதலியுடன் வந்ததைக் கூறுகிறார். அவன் வந்தது, தென்னாட்டில் உள்ள ஒரு செழுமையான ஊரில் நடக்கும் இந்திரவிழவைக் காணுதற்கு, என்கிறார்[3].

சேடி நாட்டு மன்னன் வசுதான் முதன் முதலில் வெற்றிக் கடவுள் இந்திரனுக்கு விழா கொண்டாடினான் என்று பார்த்தோம். மகாபாரதம் கூறுகிற ஒரு வரலாற்றுச் சம்பவத்தைத் தெரிந்திருந்த தமிழ்நாட்டு இளங்கோவடிகள், பூம்புகாரில் நடந்த இந்திர விழாவைக் காண சேடி நாட்டிலிருந்து ஒரு வீரன் வந்தான். அவன் காமக் கடவுள் இந்திரனுக்கு விழா எடுக்கும் வீரன் என்பது போன்றனதொரு வரலாற்றுச் செய்தியைக் கூறுயிருப்பது பிரமிக்கத் தக்கதாக உள்ளது. சேடிநாட்டு விழாவை மகாபாரதம் விருந்து எனக் குறிப்பிடுவதைப் போலவே இளங்கோவும் சேடிவீரனைக் குறிப்பிடும் போது 'விருந்தாட்டு அயரும் ஒரு விஞ்சை வீரன்' என்பது மேன்மேலும் வியப்படையச் செய்கிறது.

இந்திரவிழா வெற்றி விழாவே

நகரமே புதுப் பொலிவுபெற்று, உற்றார் உறவினரோடும் நகர மாந்தர்களுடனும் விண்ணவர் தலைவன் இந்திரனுக்கு மண்ணுலகத்தலைவன் நடத்தும் நீராட்டு விழாவே இந்திர விழாவாகும். இந்நீராட்டைப் பிற்கால மன்னர்கள் கூறிக்கொண்ட அபிஷேகத்துடன் ஒப்பிடலாம் எனத் தோன்றுகிறது.

கருவூரையும் ஈழத்தையும் பாண்டியனையும், வென்ற சோழன் வீராபிஷேகம் செய்து கொண்டான். சோழ நாட்டை வென்ற பாண்டியன் சோழனின் தலைநகர் ஆயிரத்தினியில் வீராபிஷேகம் செய்து கொண்டான். அவ்வாறு செய்து கொண்டது சோழனின் அபிஷேக மண்டபத்தில் அபிஷேகம் செய்வதற்குத் தனி மண்டபம் இருந்திருக்கிறது. மதகுருக்களுக்கு அபிஷேக தக்ஷணை கொடுக்கப் பட்ட செய்தியும் உள்ளது. பாண்டியன் முடி சூட்டிக் கொண்ட போது, இந்திரன் ஆரம் மார்பில் பொலிய சோழன் தலைநகரில் அபிஷேகம் செய்து கொண்டானாம். ஆக வெற்றி பெற்ற மன்னர்கள், வீராபிஷேகம், விஜயாபிஷேகம் என்ற பெயர்களில் நீராட்டுவிழா நடத்தி முடி சூட்டிக் கொண்டனர். இந்த நாளன்று எடுக்கப்பட்டதுதான் இந்திரவிழா என வசு பற்றிய வரலாற்றுச் செய்தியும் உணர்த்தியிருக்கிறது.

அதனால்தான் காவிரிப்பூம்பட்டினத்தில் சோழன் கரிகாலன் எடுத்த இந்திர விழா எப்படியிருந்தது என்று இளங்கோவடிகள் கூறும் போது,

''விண்பொரு பெரும் புகழ்க் கரிகால் வளவன்
தண்பதால் கொள்ளும் தலைநாட் போல''

(கடலாடு 159-160)

இருந்ததாம். இரகுவம்சத்தில் காளிதாசரும் மன்னன் முடி சூட்டுவிழா, இந்திரவிழா போன்றிருந்ததைக் குறிப்பிடுகிறார். ஆக இந்திரவிழாவும் முடி சூட்டுவிழாவும் ஒரே மாதிரியான விழாக்களே.

இந்திரவிழாவில் ஊர்வலம்

இந்திரனுக்கு நீராட்டு செய்வதற்கு தண்ணறுங்காவிரி தாதுமலிப் பெருந்துறையிலிருந்து புண்ணிய நன்னீர்ப் பொற் குடத்தேந்தி வந்தனர். அவ்வாறு காவிரியிலிருந்து நீர் எடுத்து வர, அலங்கரிக்கப்பட்ட மாளிகைகள் நிறைந்த நெடுவீதிகளில் ஐம்பெருங்குழுவினரும் எண்பேராயத்தினரும், அரசகுமாரர், பரதகுமாரர், குதிரைப்படை வீரர்கள், யானைப்படையினர், தேர்ப்படையினர் ஆகியோர் ஒன்று சேர்ந்து அரசனின் கொற்றம் மேன்மேலும் மேம்படுவதற்கு வாழ்த்திச் செல்வர் அவ்வாறு வாழ்த்திக் கொண்டே தண்ணறுங்காவிரி தாதுமலிப் பெருந்

துறையிலிருந்து புண்ணிய நன்னீர் பொற் குடத்தேந்திவந்தனர்[4].

கி.பி. 5-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனயாத்திரிகர் பாகியான் பாடலிபுத்திரத்தில் மிகப் பெரிய ஊர்வலம் சென்றதைக் குறிப்பிடுகின்றார். சந்திரகுப்தமௌரியர் காலத்தில் மகதத்திற்கு வந்த தூதுவர் மெகஸ்தனீசும் பாடலி புத்திரத்தில் இவ்விழாவைப் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்[5].

மெகஸ்தனீசு இங்கு வந்த சிறிது காலத்திற்கு முன்னர்தான் மகதத்தில் மிகப்பெரிய அரசு மாற்றம் நடைபெற்றது. சந்திரகுப்த மௌரியரின் புகழ்பெற்ற முதல் அமைச்சர் கௌடில்யர், நந்தவம்சத்தைத் தூக்கியெறிந்துவிட்டு மௌரியப் பேரரசை நிறுவினார். இது போன்று மகதத்தில் நடைபெறுவது ஒன்றும் புதிதல்ல என்றாலும் புதிய அரசர்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்கு பழைய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. குறிப்பாக இந்திர விழாவைக் கொண்டாடினர். இந்திரனிலிருந்து தாங்கள் தகுதி பெற்றதாகக் கூறிக் கொண்டனர். ஆகவே மகதத்தின் தலைநகர் பாடலிபுத்திரத்திலும் இந்திரவிழா நடை பெற்று வந்தது என்பதை அறிய முடிகிறது[6].

இந்திரவிழாவும் பௌத்தமும்

சேடிமன்னனும், சந்திரகுப்த மௌரியரும் கொண்டாடிய விழா வைதீகச் சார்புடையதாகவே இருத்தல் வேண்டும். பாஹியான் பாடலிபுத்திரத்தில் பார்த்த விழா பௌத்த விழாவே. காவிரிப்பூம் பட்டினத்தில் நடை பெற்ற விழாவும் பௌத்த சமய விழாவாகவே இருத்தல் வேண்டும். பாடலி புத்திரத்தில் பௌத்த பிட்சுக்கள் ஊர்வலத்தில் சென்றது போலவே, காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த இந்திரவிழா ஊர்வலத்தில் சாரணர்களும் அடங்குவர் என்பதும் அவர்கள் ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றிருந்தனர் என்பதும் அறிந்ததே.

வட இந்தியாவில் மகதப் பேரரசு உருவான போது அங்கு பௌத்தம் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தது. இனக் குழுக்கள் உடைந்து நிலப்பரப்பின் அடிப்படையிலான ஒரு அரசு மகதத்தில் புத்தரின் கொள்ளைப்படி தோன்றியது. எனவே பௌத்தம் அதிக செல்வாக்குப்பெறத் தொடங்கியது. அதுவரையில் ஆரியர்களின் மாபெரும் வெற்றிக் கடவுளாகத் திகழ்ந்த இந்திரனும் பௌத்சத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டான். அதாவது பௌத்தம் செல்வாக்குப் பெற்றபோது செல்வாக்குள்ள பிறமத தெய்வங்களையும் தங்கள் மதத்தில் ஏற்றுக் கொண்டது. அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டு மிக உயர்ந்த இடத்தில் வைத்து வணங்கப்பட்டவன் இந்திரன். மதுராவில் இந்திரனின் உருவம் ஐந்து இடங்களில் உள்ளது[7]. இந்திரன் வெற்றிக்கடவுளாகவும் மழைக் கடவுளாகவும் போற்றப்பட்டவன்.

இந்திரவிழா, பௌத்த விழாவான பின் பௌத்தம் சார்ந்த மன்னர்கள் இந்திரனைச் சிறப்பாகக் கொண்டாடினர். இந்திரன் அசுரர்களுடன் போரிடச் சென்றபோது அமராவதி நகரை முசுகுந்த சோழன் என்பவன் காத்தான் என்பதால் ஐந்து வகை மன்றத்து பூதங்களும் இந்திரனின் ஏவலால் மன்னர்களுக்கு வரும் தீங்கை நீக்க வேண்டி அனுப்பப்பட்டனர் எனச் சிலப்பதிகார உரையில் கூறப்பட்டிருக்கிறது. அமராவதி தலைசிறந்த பௌத்த மையங்களுள் ஒன்று என்பதை அனைவரும் அறிவர்.

மணிமேகலை அனைவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதொரு பௌத்தநூல். அந்நூலிலும் இந்திரவிழாவின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்திரவிழா எடுக்காத அரசனின் நாட்டை கடல் கொள்ளும்படி இந்திரன் தனக்கு கட்டளையிட்டிருப்பதாக மணிமேகலா தெய்வம் கூறுகிறது. மணிமேகலா தெய்வம் பௌத்த ஜாதகக் கதைகளில் கூறப்படும் ஒருகடல் தெய்வம்.

இந்திரவிழா-அறிவு ஜீவிகளின் விழா

இந்திரன் ஒரு வெற்றிவீரன் என்பதால் அரசர்கள் தங்கள் அபிஷேக நாளில் இந்திரனுக்கு அபிஷேகம் செய்து நிரந்தர வெற்றிகளைத் தங்களுக்கு அளிக்குமாறு வேண்டினர். இந்திரன் - ஒரு மழைக்கடவுள் - என்பதால் - அரசர்கள் தங்கள் நாட்டில் வசியும் வளனும் சுரக்க வேண்டியும் விழா எடுத்தனர். இந்திரன் - ஒரு கலைக் கடவுள் - என்பதால் - இந்திரவிழா வன்று கலைகள் முக்கியத்துவம் பெற்றன. நடனக்கலை பற்றியும் இசைக்கலைபற்றியும், நடனமாடும் பெண்ணின் தகுதிபற்றியும் இசைக் கருவிகள் பற்றியும் கூறுகிறது சிலப்பதிகாரம். இந்திரனின் சாபத்தில்தான் நடன அரசி ஊர்வசி, மாதவியாகப் பூமியில் பிறந்தாள் என்கிறது சிலப்பதிகார உரை.

அர்ஜுனனின் வீரத்தைப்பாராட்டி இந்திரனால் இந்திர லோகத்திற்கு அழைத்து வரப்பட்ட அர்ஜுனன் அனைத்து விதமான போர்ப் பயிற்சிகளையும், நடனம், இசை போன்ற கலைகளையும், அரசியல், நிர்வாகம் போன்ற நூல்களையும் கற்றுக் தேர்ந்தான் என்கிறது மகாபாரதம்[8].

வீரத்திலும் நிர்வாகத்திலும் மேம்பட்டுப் பேரரசராக ஆட்சி புரிந்த மன்னர்கள் இந்திரவிழா கொண்டாடும் போது கல்விக்கும் கலைக்கும் சிறப்பளித்தனர். காரணம் கல்விக்கும் கலைக்கும் இந்திரனே அரசன். இந்தரவிழாவன்று அரசனது அவையிலும் பொது விடங்களிலும் அரசவைக் கணிகையரால் நாட்டியம் நிகழ்த்தப் பெற்றது. அம்பலங்களில தரும உபதேசங்கள் நடைபெற்றன. அதுமட்டுமின்றி புதியநூல்கள் இந்திரவிழா வன்று அரங்கேற்றம் செய்யப்பட்டன. இந்திரவிழாவன்று

தான் பரதரின் நாட்டிய சாஸ்திரம் அரங்கேற்றம் செய்யப்பட்டதாக சமஸ்கிருத மரபுச் செய்தி ஒன்றில் காணப்படுகிறது[9].

இந்திரவிழாவன்று நடிப்பதற்கென்றே நாடகங்கள் எழுதப்பட்டன என்றும் கூறப்படுகிறது. அவற்றுள், காளிதாசரின் மாளவிகாக்னி மித்ரம், ஹர்சரின் ரத்னாவளி, பிரிய தர்சிகா, சாதனியின் வசந்திக பரிணயம், ஆகியவை அடங்கும்[10].

இந்திரவிழாவும் வைணவமும்.

ஆரியரல்லாத இனக்குழுத் தலைவன் கிருஷ்ணனுடன், ஆரியக்கடவுள் இந்திரன் போரிட்டு அவனைத் தோற்கடித்ததை ரிக் வேதம் கூறுகிறது. இந்திரன் தனது விருப்ப பானமாகிய த்ரப்ச பாணம் (drapsa - diluted sour milk) காரணமாகக் கிருஷ்ணனைத் தோற்கடித்தான் என்றும், இப்போரில் கிருஷ்ணன் பத்தாயிரம் வீரர்களுடன் அம்சுநதி ஆற்றங்கரையில் இந்திரனுடன் போரிட்டுத் தோற்றான் என்றும் கூறுகிறது. இந்த அம்சுநதி ஆற்றை, யமுனை ஆறென்றும், ஆரியரல்லாத இனத்தலைவனை அசுரன் என்றும் சாயனர் கூறுகிறார்[11].

ஆனால் விஷ்ணு தர்மோத்திர புராணமும் பிருகத் சம்ஹிதையும் தான் இந்திர விழா பற்றிக் கூறும்போது முதன் முதலாகக் கிருஷ்ணனைக் கடவுளாக உயர்த்திக் கூறியிருக்கின்றன[12]. அசுரர்களின் தொல்லைக்குட்பட்ட தேவர்கள் இந்திரனின் தலைமையில் விஷ்ணுவை அணுக, விஷ்ணு தனது கொடியை இந்திரனிடம் கொடுத்தான். அசுரர்களைத் தோற்கடித்து வெற்றி பெறும் மன்னர்கள் இந்திர விழாவைக் கொண்டாடும்படி இந்திரன் அக்கொடியை மன்னர்களுக்குக் கொடுத்தான் என்றும் மேற்கூறிய நூல்கள் கூறுகின்றன. மேலும் இந்திரவிழா கொண்டாடும் அரசர்கள் தாங்கள் எதிரிகளை வென்று பேரரசர் களாக விளங்குவார்கள் என்றும் கூறியிருக்கின்றன[13].

இந்திரனின் மூங்கிற்கொடி இந்நூல்களில் விஷ்ணுவின் கொடியாகவும், விஷ்ணுவிடமிருந்து அக்கொடியைப் பெற்று இந்திரன் வெற்றியடைந்தான் என்றும், வெற்றி பெறும் மன்னர்களுக்குக் கொடுத்து இந்திரவிழா கொண்டாடச் செய்தான் என்றும் முற்றிலும் எதிர்மாறாக மாற்றப்பட்ட கதையாகச் சித்தரிக்கின்றன அந்நூல்கள்.

இந்திரனின் பாரிஜாத மரத்தைக் கிருஷ்ணன் கைப்பற்றிய தாகவும் இந்திர விழாவை நிறுத்தியதாகவும் கிருஷ்ணனைப் பற்றிய கதைகள் கூறுகின்றன[14]. இக்கதை ஆரிய மக்களின் வாசுதேவ கிருஷ்ண வழிபாட்டிற்கும் ஆரிய மக்களின் இந்திர வழிபாட்டிற்கும் இடையே நடந்த போராட்டமாகவே கருதப்படுகிறது.

பௌத்த மதத்தினரால் பௌத்தத்திற்குள் கொண்டு வரப்பட்ட ஆரியக்கடவுள் இந்திரன், பௌத்தம் செல்வாக்குப் பெற்ற போது செல்வாக்குடன் திகழ்ந்தான். பௌத்தத்தை எதிர்த்த சைவமும் வைணமும் வெற்றி பெற்று பௌத்தம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட போதும், செல்வாக்குக் குறைக்கப்பட்டபோதும் இந்திரன் கிருஷ்ணனிடம் தோற்றவனாகவும், இந்திரன் கிருஷ்ணனின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டதாகவும் காட்டப்பட்டிருக்கிறான் என்று கூறலாம்.

கி.பி.404 ஐச் சேர்ந்த மாண்டசோர் கல்வெட்டு ஒன்று கிருஷ்ணன் கோவர்த்தன கிரியை உயர்த்தி இந்திரனை வென்ற கதையைக் கூறி, பின்னர் கிருஷ்ணன் இந்திரவிழாவைத் தொடர்ந்து நடத்த அனுமதி அளித்ததைக் கூறுகிறது. இவ்விழா மழைக் காலத்தில் தொடரும் என்றும் கூறுகிறது அக்கல்வெட்டு[15]. இவ்வாறு கிருஷ்ணனிடம் இந்திரன் தோற்றதாகக் கதைகள் எழுந்தபின்னரும் இந்திர விழா கொண்டாடப்பட்டு வந்ததையே மேற்கூறிய செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

கல்வெட்டில் இந்திரவிழா

முதலாம் ஆதித்த சோழனின் பள்ளிப்படைக் கோயில் காளஹஸ்திக்கு அருகிலுள்ள தொண்டைமானாடு என்ற ஊரிலுள்ளது. இக்கோயிலில் திருவிழாக்கள் நடத்த நாலாயிரக்காடி நெல் தானமளிக்கப்பட்டிருந்தது. இச்சமாதிக் கோயிலில் நடத்தப்பட்ட திருவிழாக்கள் இரண்டு (1) இந்திர விழா (2) மற்றோன்று மன்னனின் பிறந்த நாளாகிய சதயக் திருவிழா[16].

இந்திரவிழா புரட்டாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று தொடங்கி ஏழுநாட்கள் நடத்தப்பட வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது. இந்திர விழாவின் கடைசி நாளன்று சதய நட்சத்திரமாகும். எனவே இந்திரவிழாவும், அதன் கடைசி நாளான தீர்த்தமாடுகின்ற விழாவன்று மன்னனின் பிறந்தநாளான சதையத்திருவிழாவும் இணைந்து நடைபெற்றிருக்கின்றன. இந்த ஏழுநாட்களும் அறுசமயத்த பசியர்கள், பிராமணர்கள், பக்தர்கள், உள்ளிட்ட ஆயிரம் பேர் தினமும் கோயிலில் உணவு உண்டனர். இந்த ஏழுநாட்களும் இறைவனுக்கு நீராடல் பூச்சூடல், உணவு படைத்தல், பின்னர் ஆயிரம் பேருக்கு உணவளித்தல் போன்ற பணிகளும் இந்திரவிழாவிற்கு உரித்தான கூத்து, பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. இந்நாட்களில் சிறப்பாக இரவில் விளக்குகள் எரிக்கப்பட்டன.

இந்திரவிழாவின் கடைசி நாளான ஏழாவது நாள் தீர்த்தத் திருவிழாவாகும். சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா முடிவில் கடலாட்டு விழா கூறப்பட்டுள்ளது இங்கு நினைவு கூறத்தக்கது. ஆதித்தனின்

பள்ளிப்படைக் கோயிலின் கடைசி நாளாகிய தீர்த்தத்தன்று மன்னனின் பிறந்த நட்சத்திரமாகிய சதயமாத்தில், தீர்த்தவிழாவும் பிறந்த நாள் விழாவும் இணைத்து நடத்தப் பெற்றன.

இக்கோயிலுக்கு அருகிலுள்ள தீர்த்தம் திருக்காளத்தி யாகும். இவ்வூர்க்கோயில் (சுவர்ணமுகி) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. எனவே தீர்த்ததினத்தன்று இறைவனைத் தீர்த்த மாட்டுவதற்கு தொண்டை நாட்டிலிருந்து காளஹந்திக்குக் கொண்டுவந்து தீர்த்தத்திருவிழா நடந்தது. அந்நாளன்று தீர்த்தக்கரையிலுள்ள திருக்காளத்தி இறைவனுக்குப் பெருந்திருவமுது படைக்கப்பட்டது. பெரிய அளவில் சோறு சமைத்து இறைவனுக்குப் படைக்கப்பட்டுச் சிறப்பாக வழிபாடு நடத்தப்பட்டது.

இந்திரவிழா; மன்னர்கள் முடி சூட்டிய நாளான்று கொண்டாடப்பட்டதை அறிந்தோம். முதலாம் ஆதித்த சோழனுக்கு ஜனவரி முப்பதாம் தேதிமுதல் அக்டோபர் மூன்றாம் தேதிக்குள் மூடிசூட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்று கூறுகிறார் கல்வெட்டியல் அறிஞர் குடந்தை என். சேதுராமன் அவர்கள். இந்திர விழா புரட்டாசி கேட்டை நாளன்று தொடங்கியதாலும் கேட்டைக்குரிய நன்னாளில் முதலில் ஆதித்தசோழன் முடி சூடியிருக்க வாய்ப்புள்ளது. அறிஞர் என். சேதுராமன் அவர்கள் கூறிய காலகட்டத்திற்குள் புரட்டாசி மாதம் வருகிறது என்பது குறிப்பிடக்தக்கது. புரட்டாசி மாதம் மழைக்கால மாகும். மாண்டசோர் கல்வெட்டிலும் மழைக்காலத்திலேயே இந்திரவிழா கொண்டாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பள்ளிப்படைக் கோயிலில் இந்திர விழா ஏன்?

சங்ககால மன்னன் ஆய் ஆண்டிரன் இறந்தவுடன் இந்திரனுடைய மாளிகையில் ஆய் ஆண்டிரனை வரவேற்று முரசு அறையப் பட்டதாம்[17]. சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழக்குரைத்தபின்னர், நீதிதவறிவிட்டதாக உணர்ந்த பாண்டிய மன்னன் இறந்து விட்டான். இறந்த பாண்டியனைப் பற்றி வாழத்துக்காதையில் கண்ணகியே சேரன்செங்குட்டுவனுக்குக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. அதில்,

'தென்னவன் தீதிலன் தேவர் கோன் தன் கோயில்
நல் விருந்தாயினான் நான் அவன் தன் மகள்'[18]

என்று, இந்திரன் கோயிலில் பாண்டியன் விருந்தினனாகி விட்டதாகக் கூறுகிறாள்.

இரண்டாம் இராஜேந்திர சோழனின் மெய்க் கீர்த்தி ஒன்றில் அவன் தன்னுடைய தமையன் முதலாம் இராஜாதி ராஜனைப் பற்றிக் கூறும் போது அவனுடன் போரிட்ட மன்னர்களையெல்லாம் இந்திர லோகத்துக்கு அனுப்பியதாகக் கூறுகிறான், அதை

..... ராசாதிராசன் முன்
நேராம் அரசரை நெடுவிசும் பேற்றி
அந்தர வானத்து அரம்பையர் எதிர்கொள
இந்திர லோகம் எய்திய பின்பு....[19]

என்று கூறுகிறது அவனது மெய்க்கீர்த்தி.

இரண்டாம் ராஜேந்திரசோழன் காலத்து நடுகல் கல்வெட்டு ஒன்றிலும் பார்த்திவேந்தராதிவர்மன் நடுகல் கல்வெட்டுகள் மூன்றிலும் இறந்த வீரர்கள் தேவலோகத்தில் அரம்பையர் கவரிவீச ஒய்யாரமாக அமர்ந்திருப்பதைக் காண முடிகிறது. பின்னர் விஜயநகர நாயக்கர் கால நடுகற்களில் மூன்று காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும் கல்லின் அடிப்பகுதியில் போரிட்ட வீரனின் உருவம்; நடுப்பகுதியில் அரம்பையர் புடைசூழ மேலுலகிற்கு அழைத்துச் செல்லும் காட்சி; மேல் பகுதியில் இந்திர லோகத்தில் அமர்ந்திருக்கும் காட்சி ஆகியவை காணப்படும்.

இவ்வாறாக வீரமரணம் அடைந்தவர்களும் வீரமன்னர் களும் இறந்தபின் இந்திர லோகத்தில் மிக மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்திருக்கிறது. அதனடிப் படையில் இறந்த மன்னன் முதலாம் ஆதித்தன் பல போர்கள் நடத்தி சோழநாட்டை விரிவுபடுத்திபவன் என்பதால் அவனும் இறந்தபின் இந்திரலோகத்தில் இந்திரனுடன் விருந்தாக வீற்றிருப்பான் என்றே எண்ணப்பட்டிருப்பான். ஆதலால் இறந்த மன்னன் பள்ளிகொண்ட இடமே இந்திரலோகம் கொண்டு தொடர்ந்து அவனது நாட்டில் பசிப்பிணி யின்றி மழை வளம் சுரக்க இந்திரவிழா நடத்தப்பட்டிருக்கிறது. எனில் அது மிகையன்று.

முதலில் இந்திரன் ஒரு வைதீக வெற்றிக் கடவுளாக இருந்த போது தொடங்கப் பெற்றுப் பின்னர் வைதீகத்தை வீழ்த்திப் பௌத்தம் செல்வாக்குப் பெற்ற போது பௌத்த மதத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தொடர்ந்து இந்திரவிழா நடத்தப் பட்டது. பின்னர் சமணத்திலும் இந்திரவிழா கொண்டாடப் பட்டது. வைணவமதத்தினரால் கிருஷ்ணனிடம் இந்திரன் தோற்று விட்டதாகக் கூறப்பட்ட போதிலும் இந்திரவிழா கொண்டாட அனுமதிக்கப்பட்டு, பின்னர் பாசுபத மதத்தலைவரால் நிர்வகிக்கப்பட்டு வந்த பள்ளிப்படைக் கோயிலில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டதையும் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள் :

1. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக் அ42
2. Allen Dalquest - *Magathanese and Indian Religion.* p.135.
3. சிலப்பதிகாரம் - கடலாடு காதை வரிகள் : 5-6
4. சிலப்பதிகாரம் - இந்திர விழவூரெடுத்தகாதை வரிகள் : 157 - 168
5. Allen Dalquest - p.135

6. Ibid. p.136
7. Ibid. p. 134.
8. Mahabharatham
9. Dr. R. Nagaswamy - Poompuhar. p.9-11
10. Ibid
11. Mahabharatham p-91
12. Ibid
13. Ibid.
14. Suvira Jayaswal - *Origin and Development of Vaishnavism* - P.66
15. Ibid.
16. ARE 286/1906 I. XVIII. p.23-24
17. புறநானூறு பாடல் ? No
18. சிலப்பதிகாரம் வாழ்த்துக்காதை பாடல் 10.
19. பூ. சுப்ரமணியம் - மெய்க்கீர்த்திகள். பக். 60
20. வேலூர் அருகே மாதனூர் மலையடிவாரத்தில் இக்கட்டுரையாசிரிய ரால் படி எடுக்கப்பட்ட நடுகற்கள்.

54. முப்பந்தல் ஒரு வழி அம்பலம்

தே.கோபாலன், நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் நாகர் கோவிலுக்கு கிழக்கே 20 கி.மீ. தொலைவில் நாகர்கோவில் - திருநெல்வேலி தேசீய நெடுஞ்சாலையில் முப்பந்தல் இசக்கியம்மன் கோயில் அமைந்துள்ளது. சங்க காலத்தில் பாரியின் மக்களாகிய அங்கவை. சங்கவை ஆகிய இருவருக்கும் அவ்வையார் முயற்சியால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டதாக ஒரு கதை வழங்கப்படுகிறது. சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் சேர்ந்து போரில் பாரியை கொன்று விடுகின்றனர். அங்கவையும், சங்கவையும் அநாதை களாகி விடுகின்றனர். இவ்விருவருக்கும் மூவேந்தர்களின் தலைமையில் அவ்வையாரின் முயற்சியினால் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது என்பது அக்கதை. அக்கதை நடந்த இடம் முப்பந்தல் என்றும் மூவேந்தர்கள் தங்கியிருந்ததால் இவ்விடம் முப்பந்தல் எனப் பெயர் பெற்றது என்றும் இப்போதும் சொல்லப்பட்டு வருகிறது.

சங்க காலக் குறுநில மன்னர்களான பாரி, அதிகன் ஆகியோரின் நாடுகள் சேலம், தருமபுரிமாவட்டங்களில் இனம் காணப்பட்டுள்ளன. சங்கப் பாடல்களில் அவ்வை அதிகம் பாடியிருப்பதும் அதிகனைப் பற்றியதே. ஆயினும், நாஞ்சில் வள்ளுவனைப் பற்றி அவ்வை பாடியிருப்பதனையும், முப்பந்தல், தாழக்குடி குரத்தியறை ஆகிய இடங்களில் அவ்வைக்குக் கோயில் எழுப்பப்பட்டிருப்பதனையும் சுட்டிக் காட்டி குமரிமாவட்ட ஆய்வு அறிஞர்கள் அவ்வைக்கும் இம்மாவட்டதிற்கும் உள்ள தொடர்பினைக் கூறி வருகின்றனர்.

மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் கி.பி.1690இல் மூன்றாம் அரங்க கிருஷ்ணமுத்து வீரப்பநாயக்கன் அம்மை - நோய் கண்டு இறக்கிறான். இவனது மனைவி முத்தம்மாள் அச்சமயம் கர்ப்பவதியாக இருந்ததினால் ஆண் மகவு பெற்றெடுத்தவுடன் தற்கொலை செய்து கொள்கிறாள். இக்குழந்தைக்குச் சொக்கநாத நாயக்கன் எனப் பெயர் சூட்டுகின்றனர். இச்சூழலில் மூன்றாம் அரங்க கிருஷ்ணமுத்து வீரப்பனின் தாயாகிய இராணி மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கின்றார். முகலாய மராட்டிய படையெடுப்பு களால் பலவீனப்பட்டுப் போயிருந்த நாயக்கர் ஆட்சியின் நிலைகண்டு திருவிதாங்கூர் மன்னர் வரி செலுத்தவதை நிறுத்திஇருக்கிறார். இக்காலக் கட்டத்தில் திருவிதாங்கூர் மன்னராக இருந்தவர் இராணி உமையம்மாவின் மகன் இரவிவர்மா (கி.பி.

1684-1718) ஆவார்.

கி.பி. 1697இல் நாயக்கர் படை திருவிதாங்கூர் படையினரைத் தோற்கடித்துக் கல்குளம் கோட்டையினைப் பிடித்து விடுகின்றனர். பொன்மனை, மனக்குடி ஆகிய பகுதிகளும் வடுகர் படையினரால் கைப்பற்றப்படுகிறது. இதன் பின்பு திருவிதாங்கூர் படையினர் மீண்டும் போரிட்டுக் கல்குளம் கோட்டையினை மீட்கின்றனர். இதனைத் தொடர்ந்து கி.பி.1698இல் இராணி மங்கம்மாள் நரசப்பையன் தலைமையில் ஒரு படையினைத் திருவிதாங்கூர் மீது போர் தொடுக்க அனுப்பி வைக்கின்றாள். அந்த வடுகர் படை வெற்றி பெற்று ஏராளமான செல்வங்களையும், நகைகளையும், வாசனை திரவியங்களையும் தனது நாட்டிற்கு எடுத்து செல்லுகின்றனர். திருவிதாங்கூர் மன்னர் அனைத்து வரி பாக்கிகளையும் செலுத்தி விடுகிறார்.

இக்காலத்திற்குப் பின்னர் இரு மன்னர்களாலும் இப்பகுதியில் வரி வசூல் நடந்ததால் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அதனால், நாயக்க மன்னர், திருவிதாங்கூர் மகாராசா மற்றும்42 பிடாகைக்காரர்களுக்கும் இது தொடர்பான முத்தரப்புப் பேச்சுவார்த்தை இங்கு பந்தலிடடு நடைபெற்றதால் முப்பந்தல் எனப் பெயர் பெற்றதாக ஒரு செய்தி வழங்கப்படுவதாக அவ்வையாரம்மன் நோன்பு பற்றி ஆய்வு செய்துள்ள திரு. செந்தீநடராசன் கூறுகின்றார்.

இப்பொழுது இக்கட்டுரைத் தலைப்பான 'முப்பந்தல் வழி அம்பலம்' என்ற சொல்லுக்கு இங்கு பொருள் காண்போம். 'பந்தல்' என்றால் வெளி, சபை சித்திரக்கூடம் எனத் தமிழகராதி பொருளுரைக்கின்றது. கி.பி.18-19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நல்லதங்காள் கதை ஓலைச்சுவடியும், நாஞ்சில்குறவன் வரலாறு பற்றிய தாள் சுவடியும் கல்லினால் எடுப்பிக்கப்பட்ட மண்டபத்தினைக் 'கல்பந்தல்' எனக் குறிப்பிடுகிறது. மேலும் நல்லதங்காள் கதைச் சுவடி' மரத்தினால் அமைக்கப்பட்ட மண்டபத்தினைப் பூப்பந்தல் என்றும் குறிப்பிடுகின்றது. இதே போன்று திருமணப் பந்தல் மற்றும் தண்ணீர்ப்பந்தல் போன்ற இன்றைய வழக்கிலுள்ள சொற்கள் நாம் அறிந்தவையே. பொதுவாகப் பந்தல் என்றால் இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்டது எனப் பொருள் கொள்ளலாம்.

அடுத்து, 'அம்பலம்' என்ற சொல்லுக்கு வருவோம். அம்பலம் என்றால் கோயில், சபை, சத்திரம் என்று பொருள் வழங்கப்படுகிறது. குமரி மாவட்டத்தில் இருவருக்குள் மனக்கசப்பு ஏற்பட்டால்[16], "நான் அம்பலத்தில் கிடந்து செத்தாலும் சாவேனே தவிர உன் வீட்டுப்படி

ஏறமாட்டேன்'' என்பது இம்மாவட்ட நாட்டார் வழக்காறு. இங்கு அம்பலம் என்பது சத்திரம், சாவடி எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஆடவல்லான் நடராசப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடும் சபைகளுள் பொன்னம்பலமும், வெள்ளியம்பலமும் அடங்கும். சிதம்பரத்தில் பொன்னால் வேயப்பட்ட கூரையினைக் கொண்ட மண்டபத்தினைப் பொற்சபை (பொன்னம்பலம்) என்றும், மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் நடராசப்பெருமான் சன்னதிக்கு வெள்ளி அம்பலம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இதே போல் நடராசப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடும் பிற சபைகள் திருநெல்வேலிநெல்லையப்பர் கோவிலுள்ள தாமிர சபை, குற்றாலத்திலுள்ள சித்திரக் சபை மற்றும் திருவாலங்காட்டி லுள்ள இரத்தின சபை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இங்கு அம்பலம் என்ற சொல்லுக்கு சபை என்ற பொருளுடன் 'மண்டபம்' என்ற பொருளையும் உணர்த்துகின்றது.

அம்பலக்காரர் என்பது ஊர் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் ஊர்த் தலைவரைக் குறிக்கும் சொல். எனவே அம்பலம் என்பது ஊர்ப் பொதுமன்றம் எனத் தெளிவாகிறது. இவ்விடம் ஆரம்பத்தில் பொது வெளியாக இருந்திருக்க வேண்டும். மரத்தடி வெளியாக இருந்திருக்கலாம். பின்னர் அப்பகுதியில் அமைக்கப்பட்ட கட்டடத்தைக் குறித்திருக்க வேண்டும். அவ்வம்பலங்கள் வணிகர்கள் மற்றும் வழிப் போக்கர்கள் தங்கி இளைப்பாறும் இடமாகவும் பயன்பட்டிருக்க வேண்டும். இளைப்பாறிவிட்டுச் செல்லும் போது அங்குள்ள இறைவனை வழிபட்டுச் செல்வதற்காக அங்கு அம்மன் அல்லது விளக்கு மாடங்கள் காவல் தெய்வமாக வைத்திருக்கலாம்.

முப்பந்தலில் இசக்கி அம்மன் கோயில் மற்றும் அதன் நேர் கிழக்கே இரு கல் மண்டபங்கள் உள்ளன. இம்மூன்றும் கி.பி.17-18 ஆம் நூற்றாண்டுகளில் நாயக்கர் ஆட்சியின்போது இராணி மங்கம்மாள் காலத்தில் அமைக்கப்பட்ட வழி அம்பலங்களாக இருந்திருக்கலாம். நாகர்கோவிலிலிருந்து முப்பந்தலுக்குச் செல்லும்போது ஆரல்வாய் மொழி அறிஞர் அண்ணா கல்லூரிக்கு முன்பாக ஒரு சாலை வலதுபுறம் பிரிந்து குலுசடி வழியாகச் சென்று முப்பந்தலினைக் கடந்து செல்கிறது. இச்சாலை இன்றும் 'மங்கம்மா சாலை' என்ற பெயரிலேயே வழங்கப்படுகிறது. நாயக்கர் காலத்தில் முப்பந்தல் மூன்று பெரு வழிப்பாதைகளைச் சந்திக்கும் மையமாக இருந்துள்ளது. முப்பந்தல் - மதுரை, வடக்குப் பெருவழிப் பாதையாகவும், முப்பந்தல் - கொற்கை கிழக்குப் பெருவழி பாதையாகவும், முப்பந்தல் - நெடுமங்காடு மேற்குப் பெருவழிப் பாதைகள் சந்திக்கும் இடமாகவும் இருப்பதால் இங்கு மூன்று வழி அம்பலங்களை அமைத்திருக்கலாம். இம்மூன்று கல் மண்டபங்கள்

அல்லது கல் பந்தல்கள் அமைந்ததினாலேயே இப்பகுதிக்கு முப்பந்தல் எனப் பெயர் வழங்கியிருக்கலாம்.

ஒருவழி அம்பலத்தில் அவ்வையாரைப் பிரதிட்டை செய்து அவ்வையாரம்மன் கோயிலாக்கி வழிபடுகின்றனர். அதனருகே பாவை விளக்குச் சிற்பமொன்றும் காணப்படுகிறது. இந்த அவ்வையாரம்மன் சிலை இந்த நூற்றாண்டிற்குள்ளேயே வடிக்கப்பட்ட சிலையாகத் தான் காணப்படுகிறது. நின்ற கோலத்தில் காணப்படும் இச்சிலை பழமையினைச் சுட்டுவதாக இல்லை. எனவே இது பிற்காலத்திலேயே அவ்வையாரம்மன் கோயிலாக மாற்றப்பட்டிருக்கலாம். அவ்வை என்றால் மூதாட்டி, பெரியவர், வணக்கத்திற்குரியவர் என்ற பொருளுகளு முண்டு. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அவ்வையாருக் கும், குமரி மாவட்ட அவ்வையாருக்கும் தொடர்புள்ளதா என்ற ஐயம் எழுகிறது. அதிகனைப் பற்றியோ, அவ்வையாரைப் பற்றியோ இதுவரை கல்வெட்டுச் சான்றுகளேதும் குமரி மாவட்டத்தில் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மண்டபம் 'நாலு கெட்டு' அமைப்பினைக் கொண்டு கற்றூண்களால் தாங்கப்பட்டும், நடுவில் ஒரு சிறிய கருவறையைக் கொண்டும் விளங்குகின்றது. சுற்றிலும் பலகைக் கற்களால் விதானம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபக் கருவறையில் முதலில் மீனாட்சி அம்மன் பிரதிட்டை செய்யப்பட்டிருந்ததாகவும், பின்னர் இச்சிலையினை எடுத்துச் சென்று ஆரல்வாய்மொழியில் பிரதிட்டை செய்து கோயிலெழுப்பி விட்டதாக வழி வழியாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆரல்வாய்மொழி மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் காணப்படும் மீனாட்சி அம்மன் சிலை நாயக்கர் காலக் கலைப்பாணியில் வடிக்கப்பட்டிருப்பது இதனை உறுதிப்படுத்துகிறது. மதுரை நாயக்கர்கள் மீனாட்சி அம்மனிடம் செங்கோலை வைத்து வழிபட்ட பின்னரே ஆட்சிப் பொறுப்பினை ஏற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதற்கு மீனாட்சி அம்மனே ஆட்சி செலுத்துவதுபோல் பொருள் கொள்ளப்பட்டது. இதிலிருந்து தற்போதைய அவ்வையாரம்மன் கோயிலிலேயே முன்பு மீனாட்சி அம்மனைப் பிரதிட்டை செய்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. எனவே இராணி மங்கம்மாள் காலத்தில் தற்போது அவ்வையாரம்மன் கோயிலாக கருதப்படும் வழி அம்பலத்தில் மீனாட்சி அம்மன் பிரதிட்டை செய்யப்பட்டு வணிகர்கள் மற்றும் வழிபோக்கர்கள் தங்கி வழிபட்டிருக்கலாம் என்பது தெளிவாகிறது.

இயக்கி, இயக்கன் ஆகியோர் சமணத் தீர்த்தங்காரர்களின் பணியாட்கள் ஆவர். சமணத்தில் இயக்கியைத் தனித்து வழிபடும் மரபுண்டு. மகா வீரரின் இயக்கி அம்பிகாவுக்குத் தமிழகத்தில் சில

இடங்களில் சிற்பங்களும் உள்ளன. சமணத்தில் பெண் தெய்வங்களையும் பெரியோரையும் அவ்வை என்று மதிப்புடன் குறிப்பிடும் வழக்கு கல்வெட்டுகளால் அறியக் கிடைக்கிறது. இங்கு இசக்கி, அவ்வையாரம்மன் என்று சொல்லப்படுபவை சமணத் தெய்வங்களைக் குறிப்பதாகவும் கருத இடமுண்டு.

தற்போது முப்பந்தல் இசக்கி அம்மன் பக்தர்கள் சேவா சங்கமாக இயங்கிவரும் கல் மண்டபமும் ஒரு நாயக்கர் காலத்து வழி அம்பலம் ஆக உள்ளமையினை அறிய முடிகிறது. கல்தூண்கள் தாங்கி நிற்கும் இம்மண்டபத்தில் விதானப் பகுதி கற்பலகைகளால் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தினுள் கருவறை ஏதும் இல்லை. மதுரைப் பகுதியில் காணப்படும் மங்கம்மா சத்திரங்களைப் போன்றே இதனமைப்பு உள்ளது. கூரையின் மேல்பகுதி செங்கல் மற்றும் சுதை கொண்டு அமைக்கபட்டுள்ளது. இம்மண்டபங்களில் கட்டட அமைப்பும் நாயக்கர் கலைப்பாணியில் உள்ளது.

மேற்கூறிய இரு மண்டபங்களைப் போன்றே இசக்கிஅம்மன் கோவிலும் ஒருவழி அம்பலமாக இருந்திருக்கலாம். பழவூர்ப்பகுதியிலிருந்து இசக்கி அம்மன் இங்கு வந்திருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இசக்கி அம்மன் இங்கு வருவதற்கு முன்பாக இது ஒரு வழி அம்பலமாக இருந்திக்கலாம். இக்கோயில் அமைப்பு கேரள கலைப் பாணியில் காணப்படுகிறது. இக்கோயிலில் விமானம் செங்கல், சுதை மற்றும் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முழுமையான தோற்றம் ஒரு கல் மண்டபமாகத் தோன்றவில்லை. பிற்காலத்தில் மாற்றியிருக்கலாம். இக்கோயில் முழுமையும் வண்ணம் பூசம் பட்டிருப்பது இதன் பழமையினை அறியத் தடையாக உள்ளது. இதுவும் ஒரு வழி அம்பலமாக இருத்திருக்கலாம். இக்கோயிலுக்கருகே பிற்காலத்தில் எடுப்பிக்கப்பட்ட இசக்கி அம்மன் கோயிலொன்று உள்ளது.

ஆய்வுக்குதவிய நூல்கள்

1. Travancore State Manual Vol.IV.
2. நாயக்கர் வரலாறு- அ.கி. பரந்தாமன்
3. SII Vol. XIII
4. அவ்வையாரம்மன் நோன்பு ஆய்வுக்கட்டுரை - செந்தீ.நடராசன், நாகர்கோவில்.

55. நாகப்பட்டினம்–ஊரும் பேரும்

பொ. இராசேந்திரன், மதுரை.

நாகப்பட்டினம் தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையில் (10°45' N-79°50' E) கடுவாய் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. பெரிய லெய்டன் செப்பேடு இவ்வூரை,''உலகத்துக்குத் திலகம் போன்ற நாகப்பட்டினம்'' என்று குறிப்பிடுவதற்கேற்ப ஏறத்தாழ சங்க காலம் தொடங்கி இன்று வரை சிறப்புடன் விளங்கி வருகிறது. இன்றைய தினம் பொதுவாக மக்களால் நாகப்பட்டினம் என்றும், நாகப்பட்டினம் என்றும், நாகைப்பட்டணம் என்றும், நாகை என்றும் அழைக்கப்படும் இவ்வூரின் பெயருக்கான காரணங்கள் குறித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இவ்வூரைத் தாலமி 'நிகமா' என்றும், மார்க்கோபோலோ, இபன்பதூதா பத்தன்/படன் என்றும், இரசீத், மலிபடன் என்றும், குறிப்பிட்டுள்ளனர். பெரிப்புளூஸ் குறிப்பிடும் ''சோபட்மா'' நாகப்பட்டினத்தைக் குறிப்பதாகவும் கருதுவர்[1]. ஐரோப்பியர் அவர்களின் உச்சரிப்பிற்கேற்ப நாகபட்டனத்தை நேகபடன் என்றும் குறிப்பிட்டுள்ளனர். தேவாரத் திருப்பதிகங்கள் இவ்வூரை நாகை என்று குறிப்பிட, சோழர் கல்வெட்டுகள் இவ்வூரின் பெயரை நாகப்பட்டினமென்றும், சோழகுல வல்லி பட்டினமென்றும், நாகப்பட்டினமான சோழகுல வல்லி பட்டினமென்றும் குறிப்பிடுகின்றன.

குறுந்தொகைப் புலவர்களுள் ஒருவரின் பெயர் நன்னாகையார் என்றுள்ளதால், இவர் நாகையைச் சேர்ந்தவர் எனலாம். இவ்வடிவப்படையில் சங்க காலத்திலிருந்தே இவ்வூருக்கு 'நாகை' என்ற பெயர் வழங்கி வருகிறதெனலாம். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழர்களின் தனிச் சிறப்பான துறைமுகப்பட்டினமாக விளங்கி வந்தது. அதன் பின்னர் காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகச் செல்வாக்குக் குறைந்து நாகையின் துறைமுகச் செல்வாக்குப் படிப்படியாக உயர ஆரம்பித்தது. பிற்காலச் சோழராட்சியில், பல்லவர்களின் துறைமுகமான மகாபலிபுரம் சோழர்களின் கைக்கு வர, நாகப்பட்டினமே சோழர்களின் தலைமைத் துறைமுகப் பட்டினமாக வளர்ந்தது. இதனால், சங்க காலம் முதல் தேவார காலம் வரையில் 'நாகை' என்றே பெரும்பாலும் குறிக்கப்பட்டு வந்த இந்த ஊர் பிற்காலச் சோழர் காலந்தொடங்கிப் 'பட்டினம்' என்ற பின்னொட்டுச் சொல்லோடு நாகப்பட்டினம் என்றே அழைக்கப்படலாயிற்று. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நாகப்பட்டினம் மிகச் சிறந்த பன்னாட்டுத் துறைமுகமாக வளர்ந்ததைத் தொடர்ந்தும், சோழர்களின் தனிக்கவனம் இத்துறைமுகப்பட்டினத்தின்

மீது மேலும் கவிந்ததைத் தொடர்ந்தும் இவ்வூருக்குச் சோழப்பெருவேந்தன் முதலாம் குலோத்துங்க சோழனுடைய மனைவியான சோழ குலவல்லியின் பெயரால் சோழகுல வல்லி பட்டினம் என்ற பெயரேற்பட்டதெனலாம். நாகபட்டினம் பன்னாட்டுத் துறைமுகமாக வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நாகப்பட்டினத்தை உள்ளடக்கிய நாகைப் பகுதிக்குப் 'பட்டினக் கூற்றம்' என்றுபெயரேற்பட்டதும் ஈண்டு கவனத்திற்குரியது.

நாகப்பட்டினம் என்ற ஊர்ப் பெயரை,

நாக + பட்டினம்
நாகர்+பட்டினம்
நாகம்+பட்டினம்
நாகை+பட்டினம்
நாய்கர்+பட்டினம்
நாவாய்+பட்டினம் என்று பலவாகப் பிரிக்கலாம்.

நாகப்பட்டினம் என்ற ஊர்ப்பெயரில் 'நாக' என்ற பகுதியைச் சிறப்புக் கூறாகவும், 'பட்டினம்' என்ற விகுதியைப் பொதுக் கூறாகவும் கொள்ளலாம்.

'நாக' என்ற சொல்லுக்கு ஆகாயம், சுவர்க்கம், மேகம், ஒலி, பாம்பு, யானை, குரங்கு, கருங்குரங்கு, காரீயம், துத்த நாகம், கந்தகம், மலை, நாவல்மரம், புன்னை, சுர புன்னை, மேற்கு, வடமேற்கு என்று பல பொருள்கள் உண்டு.

நாகியர் என்ற சொல் தேவ மாதர் என்றும், நாகினி என்ற சொல் வஞ்சிக்கொடி, வெற்றிவை என்றும், நாகு என்ற சொல் இளமை என்றும், நாகுதா என்ற சொல் மீகாமன் என்றும் 'நாகுலி' என்ற சொல் அரத்தை, பேராத்தை, கீரிப்பூண்டு என்றும் பொருள்படும்.

தமிழ்நாட்டில் 'நாகர்' என்ற ஓர் இன மக்கள் வாழ்ந்துவந்த பகுதிகளுக்குரிய பெயர்களில் 'நாக' என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளதென்பர். நாகப்பட்டினம், நாகர்கோவில் போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகவும் கூறுவர். நாகபட்டினம் பண்டு நாகர் என்ற பிரிவினரால் ஆளப்பட்டு வந்ததென்று கூறுவாரும் உளர். குதிரை மலையை ஆண்ட பிட்டன் கொற்றன் நாகமரபினன் என்று கருதுவர்[2].

நாகராசனாகிய ஆதிசேடனால் பூசிக்கப்பட்டதால், இவ்வூருக்கு நாகை என்று பெயரேற்பட்டதாகவும் ஒரு கருத்துண்டு. ஆதிசேடனின் மகள் சூரியகுல அரசனாகிய காலிசுகனைக் கண்டு காதலித்து அவனை ஆதிசேடனின் அனுமதியுடன் மணந்ததாகவும், மகளுக்கு மணம் முடித்தவுடன் ஆதிசேடன் பூவுலகம் வந்து ஒரு நகரை உருவாக்கி அங்கு நாகர்களைக் குடியேற்றி அந்நகரில் ஓரிடத்தில் லிங்கத்திருவைப்

பிரதிட்டை செய்து, அவ்விடத்திற்கு நாகபட்டினம் என்று பெயரிட்டழைத்ததாகவும் மற்றொரு கருத்துண்டு. ஆதிசேடன் பிரதிட்டை செய்து வழிப்பட்ட கோயில் இன்று நாகநாதர் கோயில் என்ற பெயருடன் விளங்கி வருவதாகவும் கூறுவர்.

தமிழகத்தில் கிழக்குக் கரையில் நாகநாட்டார் குமரிமுதல் வங்கம் வரை பல நகரங்களில் வந்து தங்கியிருந்தமையால் அவை நாகர்கோயில், நாகபட்டினம், நாகூர், நாகபுரி எனப் பெயர் பெற்றன என்ற கருத்தும் உண்டு. சாவகமும், தேவருலகமும் கூட நாகநாடு என அழைக்கப்படுகின்றன[3]. சாவக நாட்டுத் தலைநகர் நாகபுரம் எனப்படுகிறது. ஏழ்கொங்கணத்தில் ஒன்றாகிய ஐவநாடும் (இன்றைய குடகு நாட்டின் ஒரு பகுதிக்கும்) நாகநாடு என்ற பெயர் உள்ளதும் மேலும் அங்குள்ள சோமவாரப்பேட்டை என்ற ஊருக்கு நாகரூர் என்ற பெயரிருப்பதும் ஈண்டு கவனத்திற்குரியது[5]. கிழக்கிந்தியத் தீவுக் கூட்டங்களை நாக நாடுகள் என்றழைக்கின்ற மரபும் உண்டு[6].

இலங்கையில் அநுராதாபுரத்திற்கு வடக்கே தமிழ்மக்கள் வாழந்துவரும் வட இலங்கை கி.மு.ஆறாம் நூற்றாண்டிலிருந்து பாளி இலக்கியங்களிலும்[7] கல்வெட்டுக்களிலும்[8] நாகதீபம் எனவும் தாலமியின் குறிப்பில் நாக தீயோய் எனவும்[9] மணிமேகலை (காதை[8]) சிலப்பதிகாரம் (மங்கல வாழ்த்துப்பாடல் வரி 21-29) ஆகிய தமிழ் நூல்களில் "நாகநாடு" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.6ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும், இப்பகுதி நாகதீபம் என்ற பெயரோடு உத்தரதேசம், தமிழர் தேசம், ஈழம், யாபா பட்டுண முதலிய பெயர்களையும் பெற்றிருந்தன. நாகமரபைச் சேர்ந்த மகோதாரா என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் நாகதீபப் பகுதியில் நாகர்கள் மிகுதியும் வாழ்ந்ததாக மகாவம்சத்தில் குறிப்புள்ளது.

இவ்வாறு பல்வேறு பகுதிகளுக்கு நாகநாடு என்ற பெயரிருந்திருக்கிறதென்றாலும், இவற்றுள் இலங்கைக்கும், சோழர்களுக்கு மிடையில்தான் அக்காலத்திலிருந்தே மிகவும் நெருங்கிய தொடர்பிருந்து வந்துள்ளதெனலாம்.

சோழ மன்னன் கிள்ளி வளவனுக்கும் நாக கன்னிகை என்ற பீலிவளைக்கும் உள்ள தொடர்பு குறித்துப் பெரும்பாணாற்றுப்படை, மணிமேகலை, கலிங்கத்துப்பரணி, விக்கிரமசோழன் உலா போன்றவற்றில் குறிப்பு காணப்படுகிறது. கிள்ளி வளவன் என்ற சோழ மன்னன் கடல்கடந்து சென்று நாகர் உலகை அடைந்து, அங்கு பீலி வளை என்ற நாக கன்னிகையுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ள தொண்டை மலர்களைத் தொடுத்து மாலையாக்கி அம்மாலையை அவளுக் கணிவித்து அவளைக் காந்தர்வ மணம் செய்து கொள்கிறான். பின்னர் அவன் மட்டும் நாடு திரும்பி விடுகிறான். பீலிவளைக்கு ஓர் ஆண் மகவு

பிறக்கிறது. அவன் வளர்ந்ததும் கடல்கடந்து வந்து தொண்டைமாலை சூடிச் சென்று தந்தையைச் சந்திக்கிறான். அவன் கரையேறிய இடமே நாகபட்டினம் எனப்பட்டது. கிள்ளி வளவனும் மனம் மகிழ்து தன் நாட்டை இரு கூறுகளாக்கி வட பகுதிக்கு அவனை அரசனாக்குகிறான். அவனே தொண்டைமான் இளந்திரையன் என்பர் சிலர்[10]. அக்காலத்தில் நாகநாடு என்று பெயர் பெற்றிருந்த, இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணதேசம், அக்காலத்தில் வளைவாணன் என்னும் நாகுல மன்னனால் ஆளப்பட்டு வந்தது. அந்த வளைவாணனின் மகளே இப் பீலிவளை என்பர். பீலிவளை மணிபல்லவத் துறையிலிருந்து புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து கடற்கரைச் சோலையிலே தங்கியிருந்த போது, சோழ மன்னன் வடிவேற்கிள்ளி அவளுடன் உறவு கொள்ள, சில காலங்கழித்து அவள் தன்னுடைய ஊருக்குத் திரும்பிச் சென்று பீலிவளை ஆண்மகவை ஈன்றதாகவும் கதை உண்டு[12]. சோழனுக்கும், பீலிவளைக்கும் பிறந்த மகன் சோழ நாட்டுக்கு வருகையில் தவறிவிட்டதாகவும், அதனால் மனமுடைந்து போன கிள்ளிவளவன் இந்திர விழா எடுக்காமல் போக, அதனால்தான் பூம்புகாரைக் கடல் கொண்டதென்றும் ஒரு கதை சொல்லப்படுகிறது. பீலிவளை, கிள்ளிவளவன் கதையிலிருந்து, பீலிவளை நாகநாட்டினின்று புகார் வந்து மீளவும், மணிமேகலை ஈழத்திற்கும், சாவகத்திற்கும் சென்று மீளவும் பாதுகாப்பான மரக்கலப் போக்குவரத்து இருந்ததையும், இலங்கையின் வடபகுதியை ஆண்ட நாக மரபினருக்கும், சோழ அரச குடும்பத்திற்குமிடையே மண உறவு இருந்ததையும் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த அடிப்படையில் இலங்கையின் வடபகுதியில் இருந்த நாகமரபினர் பலர் சோழக் கடற்கரைப் பகுதியில் வந்து குடியமர்ந்திருக்கவும் வாய்ப்புள்ளது. அவர்கள் வந்து குடியமர்ந்த பகுதிக்கு நாகை என்று பெயரேற்பட்டதெனக் கொள்வதற்கும் வாய்ப்பில்லாமலில்லை'. நாகர்களுக்குரிய நாகநாட்டின் தலைநகராக முன்னொரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் இருந்ததென்றும், இக் காவிரிப்பூம் பட்டினத்துக் கருகிலேயே நாகப்பட்டினமும் இருப்பதால் இப்பகுதி நாகர் குடியமர்வதைத் தொடர்ந்து இப்பெயர் பெற்றதெனக் கூறவுமிடமுள்ளது[13].

நாகநாடுகள் என்று குறிப்பிட்டுப் பேசப்படும் பகுதிகளில் பெரும்பாலானவை இவ்வூருக்குக் கிழக்கிலும், தென் கிழக்கிலுமே அமைந்துள்ளன. எனவே அப்பகுதியிலிருந்து இவ்வூரை அடைந்திருக்க வேண்டும். இந்த வகையில், அவ்வாறு வந்தவர்களுக்கு வடமேற்கு/ மேற்குத் (நாகத்) திசையில் அமைந்திருந்த ஊர் என்ற பொருளில் அவர்களால் இவ்வூருக்கு நாகபட்டினம் (வடமேற்கு/ மேற்குத் (நாகத்) திசையில் அமைந்த பட்டினம் என்ற பொருளில்) என்ற பெயரேற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு.

'கன்னியம் புன்னைசூழ் அந்தண் நாகை' என்று திருநாவுக்கரசர் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுப் பாடியிருப்பதிலிருந்து நாகப்பட்டினம் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் புன்னை மரங்கள் சூழ்ந்த பகுதியாக இருந்ததென்பது தெளிவாகிறது. ''நாகமா நகர்சூழ் சோலை நாகவன் கிளையினராக'' என்று திருநாகைக் காரோணப் புராணத்திலும் நாகப்பட்டினத்தில் புன்னை மரம் பேசப்படுகிறது. நாகபட்டினம் என்ற ஊர்ப் பெயரில் காணப்படும் 'நாகம்' என்ற சொல்லுக்குப் 'புன்னை மரம்' என்ற ஒரு பொருளும் இருப்பதால் நாகபட்டினம் என்ற பெயருக்குப் புன்னை மரங்கள் சூழ்ந்த பட்டினம் என்று பொருள் கொள்வதும் பிழையாகாது. நாகப்பட்டினத்திலிருக்கும் திருக்கோயில்களுள் சிறப்பானதாக விளங்கிவரும் நீலாயதாட்சியம்மன் கோயிலின் தலவிருட்சமாகப் புன்னாக மரம் விளங்கி வருவதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. நாகமா மலர்ச்சோலை நளிர்சினை மிசை வண்டலம்பும் பாகனூர் கூற்றமென்னும் பாண்டி நாட்டுப் பகுதியை ஒட்டி நாகமலை அமைந்திருப்பதும், தமிழ் நாட்டில் நாக மரங்கள் பரவலாக இருந்ததையும், அதனடிப்படையில் 'நாக' என்ற சிறப்புப் பெயருடன் இடப்பெயர்கள் அமைந்திருந்ததையுமே நமக்குப் புலப்படுத்துகின்றன எனலாம்.

''நெய்தல் நிலத்து மேவும் ஊர் பட்டினம் என ஆசிரிய நிகண்டு குறிப்பிடுகிறது. சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு போன்றவையும், ''பட்டினம்'' என்ற சொல் நெய்தல் நிலத்தூரைக் குறிக்கும் என்றே சுட்டிக்காட்டுகின்றன[14]. பல்வேறு இடங்களிலிருந்தும் படகு மற்றும் வேறு வழிகளிலும் வருகின்ற வணிகப் பொருட்களைப் பரிமாறிக் கொள்கின்ற துறை முகப்பட்டினங்களையே அர்த்த சாத்திரம் 'பட்டினம்' என்கிறது. இவை பெரும்பாலும் கடற்கரையிலும் ஆற்றங்கரையிலும் அமைந்திருந்தன.

துறைமுகங்களைக் கரைதுறை எனவும், துறைமுக ஊர்களைப் பட்டினங்களெனவும் அழைப்பர். நாகப்பட்டினம், ஜெயங்கொண்ட சோழ பட்டினம், வீரசோழன் பட்டினம், அதிவீர ராமன் பட்டினம், சாளுவ நாயக்கன் பட்டினம், பாசிப்பட்டினம், சுந்தர பாண்டியன் பட்டினம், கண்கொள்ளான் பட்டினம், தொண்டிப்பட்டினம், மரைக்காயர் பட்டினம், இராமேசுவரப் பட்டினம், பெரிய பட்டினம், சீவல்லப் பட்டினம், காயற் பட்டினம், சோணாடு கொண்டான் பட்டினம், குலசேகரன் பட்டினம் எனப் பல ஊர்ப் பெயர்களில் பட்டினம் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்[16].

'கலங்கள் சேர் கடல் நாகை' 'வங்கமலி கடனாகை' 'கலங்கொள் கடனாகை', 'கலங்கற் கடற்புடை சூழ்ந்த ணாகை'', ''வரையார்வனபோல் வளரும் வங்கங்கள் கரையார் கடல் நாகை'' என்றெல்லாம் தேவாரப்

பதிகங்களில் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் நாகப்பட்டினத்தைப் பாடியுள்ளனர். மிதவைகளுள் புணை, பரிசல், தோணி, ஓடம் என்பன சிறிய கலங்கள் என்றும், திமில், படகு, அம்பி என்பன முன்னவற்றிலும் சிறிதளவு பெரியன என்றும், வங்கம், கப்பல், நாவாய், கலம் என்பன அயல்நாட்டுக்குச் சென்று மீளும் கப்பல்கள் என்றும் கருதுவர்[17]. கி.பி.ஏழாம் நூற்றாண்டினரான நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும், நாக பட்டினத்தில் கலங்களும், வங்கங்களும் இருந்ததாகப் பாடியிருப்பதால், கி.பி.ஏழாம் நூற்றாண்டளவிலேயே நாக பட்டினம் 'அயல் நாட்டுக்கு சென்று மீளும் கலங்கள் நிறைந்த துறை முகப்பட்டினமாக வளர்ந்து விட்டதென்பது தெளிவாகிறது. பூம்புகார் அழிவுக்குப் பின்னர் நாகபட்டினமே சோழ மண்டல கடற்கரையில் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியதும் இங்கு கவனத்திற்குரியது.

நாவாய்கள் நிறைந்த ஊர் என்ற பொருளில் நாவாய் பட்டனம் என்ற பெயரேற்பட்டு அது நாகபட்டினம் என்று மருவியது என்றால் அது மிகவும் வலிந்து பொருள் கொள்வதாக அமையும். கடல் வாணிபம் செய்தவர் மாநாய்கர் எனவும், உள்நாட்டில் வாணிகம் செய்தவர் சாத்துவர் எனவும் வழங்கப்பட்டனர்[18]. இந்த அடிப்படையில் கடல் வாணிபம் செய்த (மா) நாய்கர் வாழ்ந்த பட்டினம் என்ற பொருளில் நாய்கர் பட்டனம் என்ற பெரேற்பட்டுக் காலப்போக்கில் நாய்கர் என்பது நாகை என மருவி இவ்வூர்ப் பெயர் நாகைப்பட்டினம்/ நாகபட்டினம் ஆயிற்றென்பதும் வலிந்து பொருள் சொல்வதாகவே அமையும்.

நாகபட்டினமும், அதனருகில் உள்ள நாகூரும் முற்காலத்தில் ஒரு நகரின் இரு கூறுகளாகவே கருதப் பட்டன. (ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழக ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956, ப.34) இவ்விரண்டு ஊர்களுக்கும் 'நாக' என்ற சிறப்புக் கூறு பொதுவாக உள்ளது. நாகூரின் பெயரில் 'ஊர்' என்ற பொதுக்கூறும், நாகப்பட்டினம் என்ற ஊர்ப்பெயரில் 'பட்டினம்' என்ற பொதுக்கூறும் உள்ளன. இரண்டு ஊர்களுக்கும் 'நாகம்' என்ற பொதுவான சிறப்புக் கூறுள்ளதால் இரண்டு ஊர்களுக்குமுள்ள சிறப்புப் பெயர்க் காரணம் ஒன்றாகவே இருக்கலாம். இந்த அடிப்படையில் நாகூர், நாகப்பட்டினம் பெயர்களில் உள்ள சிறப்புக் கூற்றுக்கு 1.புன்னை மரங்கள் (நாகமரங்கள்) இருந்த பகுதி 2.நாகர்கள் வாழ்ந்த பகுதி.3.நாக நாட்டினர் வந்து தங்கியிருந்த பகுதி/ நாக நாட்டின் ஒரு பகுதி4.நாகவழிபாட்டினடிப்படையில் (நாகநாதர் கோயில்) பெயர் பெற்ற பகுதி 5. இலங்கை போன்ற, தென்கிழக்கு நாடுகளிலிலிருந்து கடல்வழி சோழ நாட்டிற்கு (தமிழகத்திற்கு வந்தோருக்கு) நாக திசையில் (வடமேற்கு திசையில்) அமைந்திருந்த துறைமுகம் எனப் பல பொருள்கள் கூறலாம். இருப்பினும் திருவாரூர், திருவாலங்காடு, திருப்பனையூர் எனப் பல ஊர்ப் பெயர்கள் அவ்வப்

பகுதிகளிலிருந்த மரங்களின் அடிப்படையில் பெயர்பெற்றிருப்பது போல, நாகப்பட்டினமும், நாகமரங்கள் இருந்த பகுதியிலமைந்த ஊர் என்ற வகையில் நாகபட்டினம் என்று பெயர்பெற்றுள்ளது என்று சொல்வதே மிகவும் பொருத்தமான காரணமாகத் தோன்றுகிறது. தஞ்சாவூர், உறையூர் போன்ற ஊர்ப் பெயர்கள் கடைகுறைந்து, தஞ்சை, உறைந்தை என ஐகாரத்தில் முடிந்து வழங்குவது போல நாகப்பட்டினம் என்ற ஊர்ப் பெயரும் கடை குறைந்து, ஐகாரம் பெற்று'நாகை' (பெருந்தேவனார் இலக்கண உரை) என இன்றும் பலரால் வழங்கப்பட்டு வருகிறது.

அடிக்குறிப்பு

1. M.Arokiasami, *The classical age of the Tamils*, University of Madras,1972,p.78
2. S.கண்ணகி, சிலப்பதிகாரம் காட்டும் நாடும் நகரமும், ஜி. பதிப்பகம், மதுரை,1992,ப.203
3. ஞா. தேவநேயன், பழந்தமிழாட்சி கழகப்பதிப்பு 1972, ப.131 சு. குமாரசாமி ஆச்சாரி, சேரர் மரபு, செந்தமிழ்ச்செல்வி,29, பக். 238-23.
4. *Tamil Lexicon*, Vol IV, p.2197.
5. S.கண்ணகி, மேற்படி நூல், பக்.901-202.
6. ஞா. தேவநேயன், மேற்படி நூல்.ப.134
7. மகாவஞ்ச அத்1, செய் 44-70.
8. *EZ*. Vol IV, No.29,p.237
9. J.R. Sinnathambi, *Ceylon in ptolemy's Geography*, Colombo, 1968,pp.52-55
10. ஸ்ரீயக்ஞுவல்யதாசன், 'கயிலைநாதன் காயாரோகணரான தலங்கள்; தத்தப்பிரசாதம், Vol.14,புத்தக எண்.5, ஏப்ரல் 1998.
11. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத்தமிழர் வாணிகம், (சங்க காலம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 199, பக்.113-114.
12. மேற்படி நூல், பக்113-114.
13. K.K.Pillay, *South India and Srilanka*, University of Madras, 1975,p.21.
14. வீ. சொக்கலிங்கம் (பதிப்), ஆசிரிய நிகண்டு, சரசுவதி மகால், தஞ்சாவூர், 1975, பக்.439.
15. Knneth R. Hall, *Trade and State craft in the age of Colas*, Abhinav publications, New Delhi,1980, p.142.
16. புலவர். செ.இராசு, ''பெரிய பட்டினம்'' கல்வெட்டு, காலாண்டிதழ், மே-1993, பக்.24.
17. லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், சங்க காலத் தமிழர் வாழ்வு, வெள்ளையன் பதிப்புக் கழகம், கண்டனூர், 1958, ப.88
18. கா.மீனாட்சி சுந்தரம்,'சமுதாயம்', தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம். வாழ்வியல்- தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை,1983, ப.69.

56. புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊர்கள் – பெயராய்வு

கோ. முத்துசாமி, பூம்புகார்

காவிரியாறு கடலில் சென்று புகும் இடத்தில் அமைந்த ஊர் என்பதால் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் உண்டாயிற்று இப்பெயர் கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வழங்கப்பட்டு உள்ளது. சம்பாநதி, காகந்தி, மூதூர், சோழப்பட்டணம், கோலப்பட்டணம், மண்ணகத்து வான்பதி முதலிய பெயர்களும் இதற்குண்டு. இந்நகரில் காவல் தெய்வமான சம்பாபதி அம்மன் பெயரால் 'சம்பாபதி நகர்' என முன்பு பெயர் வழங்கி பின் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் உண்டாயிற்று.

சங்க காலப் புலவர்களாகிய, காவிரிப்பூம்பட்டினத்துக் காரி கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆகியோரின் பெயர்கள் இவ்வூரின் பெயர் காவிரிப்பூம் பட்டினம் என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

புகார் என்ற பெயர் விளங்கியமையையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

புகார் என்ற சொல்லுக்கு ஆற்றின் முகம் என்று பெயர். புகு+ஆறு=புகாரு=புகார் என்றாயிற்று. காவிரியின் செழிப்பால் வளமாக வாழ்ந்த மக்கள் வேறு நாடு சென்று புகார் என்ற கருத்தும் உண்டு.

இன்றையப் பூம்புகார் கீழையூர் எனும் வருவாய் கிராமத்தின் ஒரு சிற்றூராக இருந்து வருகிறது. தெற்கிலும் வடக்கிலும் பல ஊர்கள் இன்றும் வழக்காற்றில் மருவி வழங்கினாலும். தமது பழைய பெயர்களுடனேயே நின்று நிலவுகின்றன.

தருமகுளம் : இவ்விடம் தற்போது புகாரின் கடைத் தெருவாக, இரண்டு கல் தொலைவில் உள்ளது. முற்காலத்தில் அறநெறியை விரும்பி கற்பிக்கும் தருமவான்கள் இங்கு வாழ்ந்து வந்ததால் இப்பகுதிக்கு தருமகுளம் என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இப்பகுதியில்,'புத்த முனிவன் சங்க தருமன்' முதலானோரும் வணிகர்களும், மறையோரும், உழவர்களும் தருமம் போதிக்கும் நெறியோடு முற்காலத்தில் வாழ்ந்தால் இவ்விடத்திற்கு, 'தருமகுளம்' என்று பெயர் ஏற்பட்டது. மேலும் மணிமேகலையில் குறிப்பிடப்படும், 'தருமதவனம்' என்பதும் இப்பகுதியே ஆகும்.

வெள்ளையனிருப்பு : தருமகுளத்திற்கு வடக்கிலும் பல்லவனீச்சரத்திற்கு வடகிழக்கிலும், இப்பகுதி அமைந்துள்ளது. பொதுவாக இருப்பு என்றால் தங்குமிடத்தை குறிக்கும். வணிகக் குழுக்கள், கலைவேலைப்பாடுடையவர்கள் தனித்தனி குடியிருப்புகளாகத் தங்கிய பகுதியேயாகும்.

நிறம் நோக்கி வெளிநாட்டவர், 'வெளிர் சிவப்பாக இருக்கும் தன்மை' பற்றிப் பொதுவாக அதிலும் குறிப்பாக யவனர்கள் அதிகம் தங்கியிருந்த குடியிருப்பே 'வெள்ளையனிருப்பு' என்று அழைக்கப்பட்டது என அறியலாம். மேலும் சிலர் வெள்ளையனிருப்பு' என்று அழைக்கப்பட்டது. பல தேவர் கோயில் கொண்டு இருந்த இடம் வெள்ளையனிருப்பு எனச் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

சித்தங்காத்திருப்பு : வெள்ளையனிருப்பு அருகாமையில் உள்ள ஒரு சிற்றூருக்கு சித்தங்காத்திருப்பு என்று பெயர். இங்குள்ள ஒரு கோயிலில் அருகக் கடவுள் உருவம் கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி முந்நாளில் பல தொழில்களையும், கற்றுணர்ந்த கலைஞர்கள் வாழ்ந்த இடமாகும், அதிலும் குறிப்பாக ஓவியக் கலையில் சிறந்த குழுவினர் குடியிருப்பாக வாழ்ந்து வந்துள்ள தன்மை பற்றி, சித்திரக்காரனிருப்பு என்று பெயர் ஏற்பட்டது என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

பலவகைப்பட்ட கலை வல்லுநர்களில் 'சித்திரக்காரர்கள்' சுடுமண் பொம்மைகள் செய்வோர். கதை மற்றும் மரப்பாவை செய்வோர் இங்கு இருந்திருக்க வேண்டும்.

பல்லவனீச்சரம் : புகாருக்கு மேற்கே, தருமருளக்கை அடுத்து ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். புகார் நகரில் நடுவில் இவ்வூரும் பல்லவனீச்சரம் என்ற சிவபெருமான் கோயிலும் அமைந்துள்ளது. கி.பி. 6-9ஆம் நூற்றாண்டு வரை பூம்புகார் பல்லவ மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. அக்காலத்தில் இங்கு பல்லவ வேந்தர்களால் நிறுவப்பட்டதே பல்லவனீச்சரம். பல்லவமன்னன், 'மூன்றாம் நந்திவர்மன்' காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் செழிக்தோங்கி யிருந்ததை, 'நந்திக்கலம்பகம்' மூலம் நாம் அறியலாம். பல்லவ மன்னன் இராஜசிம்மன் ஆண்ட காலத்தில் பௌத்தமும், சைவமும் இப்பகுதியில் சிறந்து விளங்கியது எனலாம்.

திருச்சாய்காடு : தற்போது மக்கள் இவ்வூரைச் சாயாவனம் என்று கூறுகின்றனர். சாய் என்றால் கோரை அல்லது தருப்பை எனும் நீண்ட புல் வகையைக் குறிக்கும். இவை முற்காலத்தில் இப்பகுதியில் காடுபோல் அடந்து வளர்ந்திருந்ததால் அத்தன்மை பற்றி சாய்க்காடு என்று அழைத்தனர்.

இவ்வூரில் உள்ள கோயில் தேவாரப் பாடல் பெற்றதாகும். இக்கோயிலில் பதினொரு கல்வெட்டுகள் உள்ளன. அவை இவ்வூரை 'இராசாதிராச வளநாட்டு, நாங்கூர் நாட்டு, காவிரிப்பூம்பட்டினத்து திருச்சாய்காடு' என்று ஊரின் பெயரையும், இறைவனை, 'திருச்சாய்காடுடையார்' எனவும் குறிப்பிடுகின்றன.

சம்பாபதிகோயில் : சாய்காட்டிற்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது சம்பாபதி அம்மன் கோயிலாகும். இக்கோயில் பூம்புகாரில் காவல் தெய்வமாக இருந்து வந்துள்ளது. புகாரின் பழைய பெயர்களுள் ஒன்றாக 'சம்பை மாநகர்' என்பதும் உள்ளதால் இதன் பெருமையை நாம் உணரலாம். இது மணிமேகலையால் வணங்கப்பட்ட தெய்வமாகும். இன்றும் பொலிவிழந்த நிலையில் சுதைச் சிற்பங்களுடன் அக்கோயில் வழிவாட்டில் இருந்து வருகிறது.

கிழார்வெளி : சாய் காட்டிற்கு வடக்கே அமைந்துள்ளது கிழார்வெளி என்றும் காவிரிக்கரைப் பகுதியாகும். கிழார் என்றால் 'வண்டல்மண் வீழ்படிவு' என்று பொருள்படுகிறது. 'கழார்வெளி' என்பது சங்க காலத்திற்கு முன்பிருந்தே மிகச் செழிப்புடைய வண்டல் மண் படிந்த பூமி என்று தெரிய வருகிறது. இங்கு பண்டைய படகுத்துறை இருந்தமை அண்மையில் நிகழ்ந்த அகழாய்வில் வெளிப்பட்டுள்ளது.

மேலையூர் : இவ்வூர் சாயாவனத்தின் மேற்கே அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் காவிரிபட்டினமாகிய மூதூரின் நடுவில் இவ்வூர் அமைந்திருந்தது எனலாம். சாய்க்காட்டில் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் இவ்விடம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அழிவுற்றது எனலாம். எஞ்சிய பேரூரின் கிழக்குப் பகுதியைக் கீழையூர் என்றும், மேற்குப் பகுதியை மேலையூர் என்றும் அழைத்தனர்.

கழாஅர் முன்துறை : இப்போது மக்களால் இப்பகுதி, 'செட்ரஸ்' என்றும். கழதகாரன்துறை என்றும் அழைக்கப்படுகிறது. கிழார்வெளி எனும் பகுதிக்கும் மேற்கே இரண்டு கல் தொலைவில் முன்பாக உள்ள காவிரியின் நீராடு துறையாகும். இதனை, அகப்பாடல் (376) 'மலிபுனல் பொருத மருதோங்குடப்பை ஒலிக்கதிர் கழனிக் கழாஅர் முன்துறை' எனக் குறிப்பிடுகிறது.

கழார் என்றால் நீரடியில் படிந்த செழுமையான வண்டல் மண் என்று பொருள். காவிரியின் கடைசி நீர்தேக்கம் உள்ள மதகு இன்றும் இங்கு உள்ளது. முன்னாளில் இத்துறையில் நீர்தேங்கி பிறகு வடக்காகச் சென்று காவிரி கடலில் கலந்தது. எனவே கழார் முன்துறை என்பது வண்டல் படிந்த செழுமையான நிலத்தின் கரையில் அமைந்துள்ள காவிரியின் நீராடுதுறை என்பது தெளிவாகிறது.

கிடாரம்கொண்டான் : சோழப் பேரரசர்கள் கடல் கடந்து கடாரம் வரை சென்று வென்று மீண்டு வந்துள்ளனர். அவ்வெற்றியின் நினைவாக அமைக்கப்பட்டதே,'கடாரம் கொண்டான்' எனும் இவ்வூர். கடாரம் கொண்டான் எனும் பட்டப்பெயர் முதலாம் இராசேந்திர சோழனுக்கு உண்டு. எனவே வெற்றியின் நினைவாக ஏற்பட்டதே இவ்வூர்.

மேலப்பெரும்பள்ளம் : பெரும்பள்ளம் என்பது ஊரின் பெயர். பெரிய ஊரக இருப்பதால் கிழக்கே உள்ளதை கீழப் பெரும்பள்ளமென்றும், மேற்கே உள்ளதை மேலப்பெரும் பள்ளம் என்றும் வழங்கி வருகின்றனர். இவ்வூரினை அப்பர் 'திருவலம்' என்று பாடியுள்ளார்.

காவிரி வடக்கிலிருந்து தெற்காக வந்து பிறகு கிழக்காகத் திரும்பி கடலில் சென்று கலக்கிறது. எனவே புதுக் காவிரியில் வலதுபுரம் அமைந்த ஊர், 'திருவலம்புரம்' என்று சமயக் குரவர்களால் அழைக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலில் காணப்படும் விக்கிரசோழனின் கல்வெட்டும், இறைவனை 'திரவலம்புரமுடையார்' என்றே குறிப்பிடுகிறது.

கீழப்பெரும்பள்ளம் : இவ்வூர் மேலப்பெரும்பள்ளத்தில் கிழக்கில் அமைந்துள்ளது. கிழக்கே அமைந்த பள்ளமான காவிரியின் கரைப்பகுதிக்குக் கீழப் பெரும்பள்ளம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

மருதம்பள்ளம் : திருவலம்புரத்திற்கு அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. கரிகால் வளவன் புதுப்புனலாட்டு விழாவைக் கழார் முன் துறையில் நிகழ்த்திய போது அவன் மகள் ஆதிமந்தியை மணந்த சேர அரசகுமாரன் ஆட்டணத்தியை காவிரிவெள்ளம் இழுத்துச் சென்று கடலில் தள்ளியபோது மருதி என்னும் தீரநங்கை, இளவரிசியின் துயர்துடைக்கக் காவிரியில் குதித்து இளவரசனைக் காப்பாற்றி ஆதிமந்தியிடம் ஒப்படைத்த இடம் இதுவாகும், என்றும் எனவே அக்காலத்திலிருந்து இவ்விடத்திற்கு மருதிப்பள்ளம் என்று வழங்கப்பட்டு பிற்காலத்தில் மருதம்பள்ளம் என மருவி வழங்கிவருவதாக சில ஆய்வாளர் கூறியுள்ளனர்.

வாணகிரி : இவ்வூர் கீழப்பெரும்பள்ளத்திற்கு கிழக்கே கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. தற்போதைய காவிரியின் வடகரையில் உள்ளது. காவிரி தெற்காக வருவதற்கு முன்னர் இப்பகுதி பூம்புகார் நகரின் முக்கியப் பகுதியாக விளங்கியிருக்க வேண்டும். இங்கு கைலாயத்தை ஒக்கும் சிகரங்களோடு கூடிய மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. எனவே இவ்வூரை மண்ணகத்து வான்பதி என்று அழைத்தனர்.

இலையமுதுகூடம் : முற்காலத்தில் இலக்கியத்தில், ''இலவந்திகை'' என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு சத்திரம்

அமைத்து புலவர்களுக்கும், பக்தர்களுக்கும் உணவளிக்கும் பணியைத் 'திருமங்கை யாழ்வார்'' செய்திருந்தார். சத்திரத்திலுள்ளோர் உணவருந்த வருவோரை உபசரித்து இலையில் அமுது படைத்து மகிழ்வுடன் அனுப்பி வைத்த காரணத்தால், இளையமடம் என்ற கருத்தில் வழங்கப்பட்டுவந்தது என்பதும் தெளிவாகிறது.

நாங்கூர் : நாங்கூர் என்ற ஊர் பூம்புகாரில் இருந்து வடமேற்கே அமைந்துள்ள வைணவத் தலம். இங்கு ஏழு பெருமாள் கோயில்கள் உள்ளன. இவைகளைகத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். சங்க காலத்தில் பூம்புகாரின் ஒரு பகுதியாக விளங்கியது.

மங்கைமடம் : இவ்வூருக்கு கிழக்கில் உள்ள திருக்குரையலூர் தான் திருமங்கையாழ்வார் அவதாரத் தலமாகும். அவர் இவ்வூரில் ஒரு மடம் அமைத்து அதில் பக்தர்கட்கு உணவளித்து வந்த காரணத்தால் இதற்கு மங்கைமடம் என்று பெயர் வந்ததாகச் சிலர் குறிப்பிட்டுள்ளனர். அது தவறாகப்படுகிறது. ஏனெனில் ஆழ்வார் உணவளித்த இடம் இலையமுதுகூடம் என்று இன்றும் வழங்கப்பட்டு வருவதை நாம் உணரலாம்.

திருவெண்காடு : இவ்வூர் இறைவன் சுவேதாரண்யேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். சுவேதம் ஆரண்யம் என்பது வடமொழிச் சொல். அதுவே தமிழில் வெண்மை+காடு= வெண்காடு என்றும், திரு அடைமொழிச் சேர்த்து, ''திருவெண்காடு'' எனவும் கூறப்படுகிறது. இக்கோயிலில் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவை ஊரை, திருவெண்காடு என்றும், இறைவனைத் திருவெண்காடு உடையபெருமான். வெண்காடுடைய மகாதேவர் என்றும் குறிப்பிடு கின்றன. சிலர் இவ்வூரை வெம்காடு, எனும் சுடுகாடு முன்னாளில் இருந்த ஊர் என்றும் அதுவே நாளடைவில் வெண்காடு என ஆயிற்று எனவும் கூறுவர். அவ்வாறு சுடுகாடாக இருந்து மாறிய இடம் கடற்கரை அருகில் இருப்பதால், அக்கூற்று இங்கு பொருந்தாமை உணரலாம். முற்காலத்தில், ''அடர்ந்த ஆலமரங்கள் காடாக'' இங்கு விளங்கின என்பதும் அதைத்தான் வடமொழியில் சுவேதவனம் என்றும் இறைவனைச் சுவேதாரண்யேசுவரர் என்றும் அதுவே தமிழில் திருவெண்காடு என்று ஆகியது எனவும் அறியலாம்.

மணிக்கிராமம் : இவ்வூர் திருவெண்காட்டிற்கு தெற்கே உள்ளது. நவமணிகள் இங்கு விற்கப்பட்டன. எனவே இவ்வூருக்கு மணிக்கிராமம் என்று பெயர் உண்டாயிற்று என்று கூறிவருகின்றனர். இங்கு மணிகள் விற்க்கப்பட்டதால் மணிக்கிராமம் என் ஊருக்கு பெயர் ஏற்பட்டது என்பது தவறு. புகார் நகரில் பிறந்த வணிகர்கள் ''மணிக்கிராமத்தார்'' எனும் பெயரில் ஒரு குழுவினராய்ச் சேர்ந்து கடல்கடந்து கீழ்திசை நாடுகளான கடாரம், காவகம், சீனம், தாய்லாந்து போன்ற நாடுகளுடன் கடல்

வாணிகம் செய்து வந்தனர்.இவ்வணிகக் குழுவினர் வாழ்ந்த பகுதிக்கே மணிக்கிராமம் என்ற பெயர் வழங்கியதெனலாம்.

நெய்தவாசல் : இவ்வூர் மணிக்கிராமத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. நெய்தல் நிலத்திற்கு வாசல் போல் அமைந்ததால் இவ்வூருக்கு, ''நெய்தவாசல்'' என்ற பெயர் வழங்குகிறது. இதுவும் ஒரு தொன்மையான ஊர் காமவேள் கோட்டத்தை தன்பாற் கொண்டு நெய்தலங்கானல் எனும் சோலையை உள்ளிட்ட மருவூர் பாக்கமாகிய கிழக்குப் பகுதி, கிள்ளிவளவன் காலத்தில் கடல் கோளால் அழிந்தபோது எஞ்சிய பகுதியே, நெய்தவாசல் எனும் பெயரில் சிற்றூராகத் திகழ்கிறது. முற்காலத்தில் இவ்வூர் அருகிலேயே காவிரி சென்று கடலுள் கலந்தது. எனவே, நெய்தவாசலை 'காவிரி சங்கமத்துறை சோலை' என்றும் அழைத்து வந்துள்ளனர்.

மாந்தங்காடு : இப்பகுதியில் தொல்லியல் துறை அகழ்வாய்வு செய்த போது, நிறைய முதுக்கட் தாழிகள் கிடைத்துள்ளன. மாய்ந்தோர் + காடு என்பது மாந்தர் + காடு என்றாகி தற்போது மாந்தங்காடு என வழங்கிவருகிறது. இதுவே, 'சுடுகாட்டுக் கோட்டம்' ஆக இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

வீரமேட்டிருப்பு : நெய்கவாசலுக்கு கிழக்கே உள்ள ஒரு பகுதிக்கு வீரமேட்டிருப்பு என்று பெயர் வழங்குகிறது. புகார் நகரம் ஏற்றுமதி இறக்குமதியில் சிறந்து விளங்கியதால் பொருட்களும், தானியமும் இங்கு குவித்து வைக்கப்பட்டிருந்தன. இதனை காவல்புரிய சோழர்களின் உள்நாட்டு படை வீரர்களும் மற்றும் யவன வீரர்களும் குழுக்களாக இருந்து செயல்பட்டு வந்துள்ளனர். இவர்கள் இரவிலும் கண் விழித்து காவல் செய்துள்ளனர். உள்நாட்டு படைவீரர்கள் தங்கியிருந்த பகுதி, 'வீர மேட்டிருப்பு' எனப்பட்டது.

கடைக்காடு : பழைய காவிரிக்கு இவ்வூர் நிலம் கடைமடைப் பகுதியாக விளங்கியதால் இவ்வூர்,'கடைக்காடு' என்று பெயர் பெற்றது.

பெருந்தோட்டம் : இவ்வூர் கடைக்காட்டிற்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் அமைந்து உள்ளது. தோட்டம் என்பது மலர்கள் பயிரிடப்படும் பகுதியாகும். பெரும் என்பது பெரிய இடம் ஆகும். எனவே மிகப்பெரிய நந்தவனம் ஆக முன்னாளில் இருந்த ஊர் ''பெருந்தோட்டம்' எனப்படுகிறது. காவிரி வடகரையில் மலரிட்ட பகுதி பெருந்தோட்டம் என்றும், தென்பகுதியில் மலர் பயிரிட்ட இடம் தலைச்சங்காடு என்றும் இவை இரண்டும் புகார் நகரில் அமைந்து மணமும் அழகும் அளித்தன என்றும் அறிய முடிகிறது.

கோணயாம்பட்டினம் : பெருந்தோட்டத்திற்கு வடகிழக்கில் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. கோனேரிராயன் என்னும் சிற்றரசன்

பெயரிலோ அல்லது கோனேரின்மை கொண்டான் எனும் சோழ அரசன் பட்டப் பெயருடனோ பட்டினம் சேர்ந்து கோனேரிராயன் பட்டினம் அல்லது கோனேரின்மைக்கொண்டான் பட்டினம் என்று முன்னாளில் வழங்கப்பட்ட ஊரே இன்று மருவி மக்களால், 'கோணயாம்பட்டினம்' என்று வழங்குகிறது.

துணை நூல்கள்

1. காவிரிப்பூம்பட்டினம் - 1959, ஆசிரியர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் மாதவி மன்ற வெளியீடு, மேலப்பெரும்பள்ளம்.
2. பூம்புகார் - ஆசிரியர் அறுவர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை - வெளியீடு - 1975
3. பூம்புகாரில் வரலாற்று எச்சங்கள், ஆசிரியர் புலவர் நா. தியாகராசன், மாதவி மன்ற வெளியீடு - 1973.
4. திரு. நாகப்பச்செட்டியார் வயது 75, பூம்புகார், நேரிடை பேட்டி செய்திகள்.

57. முகமது வகுசு கப்பல்

எஸ். இராமச்சந்திரன், கொற்கை

சற்றொப்ப முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நியூசிலாந்தில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட வெண்கல மணியொன்று கண்டறியப்பட்டது. அத்தமிழ் எழுத்துகள் ''முகமது வகுசு கப்பல்'' என்ற சொற்றொடர் வடிவில் எழுதப்பட்டிருந்தமையும் தொல்லியல் கல்வெட்டியல் அறிஞர்களால் வெளிப்படுத்தப்பட்டது[1]. இம்மணியுடன் ''தரா'' எனப்படும் உலோகக் கலவையால் செய்யப்பெற்ற தாழ் ஒன்றும் கண்டறியப்பட்டது. இவ் உலோகக் கலவை, 19 ஆம் நூற்றாண்டில் ''முன்ட்ஸ்'' என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப் பட்ட புதிய உலோகக் கலவை என்ற தவறான அனுமானத்தின் விளைவாக இம்மணி, கி.பி. 19 ஆம் நூற்றாண்டைய கப்பல் ஒன்றில் இடம் பெற்றிருந்த மணியாக இருக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டது[2]. ஆனால் இக்கப்பல் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த ஒரு வணிகக் கப்பலாக இருக்கக்கூடும் என்பது வேறு சில வரலாற்றுக் குறிப்புகளால் தெரிய வருகிறது[3]. இம்மணியைக் கண்டறிந்தவர்கள், நியூசிலாந்தின் பூர்வகுடிகளான ''மாவ்ரி'' பழங்குடிளாவர். ஆயினும் மாவ்ரிகளுக்கு இம்மணியின் வரலாற்றுப் பின்னணியுடன் தொடர்பு இருந்தாகத் தெரியவில்லை. கி.பி. 1642 ஆம் ஆண்டில் ''ஏபெல் டாஸ்மென்'' என்ற ஐரோப்பியர், நியூசிலாந்துத் தீவினைக் கண்டு பிடித்த பின்னர், ஐரோப்பிய வணிகக் கும்பினியினர் இத்தீவில் குடியேறத் தொடங்கினர். 17-18 ஆம் நூற்றாண்டுகளில் அபின் வியாபாரச் சந்தையாக இத்தகைய குடியேற்ற நாடுகளை மாற்றி, பூர்வகுடி மக்களிடமிருந்து கப்பலில் துடுப்புத் தள்ளுதல் போன்ற கடினமான உடலுழைப்பைப் பரிசாகப் பெற்றனர். அந்நாடுகளின் இயற்கை வளங்களையும் மலிவான 'விலைக்கு' வாங்கிச் சென்றனர். இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, ''முகமது வகுசு கப்பல்'', வாணிக நோக்கத்துடன் நியூசிலாந்துக்கு வந்திருக்கலாம் என்றும், அப்போது கப்பல் பழுது பட்டுப் போனதன் விளைவாகவோ, ஐரோப்பியக் கிழக்கிந்தியக் கும்பினிகளுக்கிடையே ஏற்பட்ட பூசல்களின் விளைவாகவோ சிதைந்து கைவிடப்பட்டிருக்கலாம் என்றும் நாம் ஊகிப்பது தவறாகாது.

முகமது வகுசு கப்பல் பற்றிய நேரடியான சான்று, கி.பி. 1758 ஆம் ஆண்டைச் சேர்ந்த சென்னை ஆவணக்காப்பக ராணுவத் தகவல் தொடர்பில் உள்ளது[4]. மலேஷியாவின் மேற்குக்கரையில் உள்ள ''கெட்டா'' எனப்படும் கடாரத்துறை முகத்தின் இளவரசர், நக்காதிஷ் மரைக்காயர் என்பவரது தலைமையில், ''முகமது பக்ஷ'' என்ற கப்பலில்

சரக்குகளை அனுப்புவதாகவும், சென்னையிலுள்ள லிங்கிச் செட்டிக்குச் சென்று சேர வேண்டியவை என்றும் கிழக்கிந்தியக் கும்பினி அதிகாரிக்குக்கடிதம் எழுதியுள்ளார். இதனைக் கடிதம் என்பதை விட, மேற்குறித்த கப்பலுக்குரிய ''பாஸ்போர்ட்'' எனலாம்.

இக்கப்பல் ஒரு வணிகக் கப்பலாக இருப்பினும் கிழக்கிந்தியக் கும்பினிகளின் - குறிப்பாக ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் - வணிக நலன்களும் அரசியல் ஆதிக்கமும் ஒன்றுக் கொன்று உறுதுணையாகப் பிணைந்தவை யாதலால் இக்கப்பலும் அரசியல் தலைவர் ஒருவர்க்குரிய கப்பலாகவே இருக்க வேண்டும் என நாம் ஊகிக்கலாம். குறிப்பாக, கடாரத்து இளவரசருடன் நெருங்கிய உறவுடைய தமிழக இஸ்லாமியர் ஒருவரின் கப்பலாக இது இருக்கலாம். கி.பி. 1746 - 1750 அளவில் ஹைதராபாத் நிஜாம் நாசர் ஜங்கின் கீழ் தமிழகத்தில் சர்தாராக இருந்த ''முகமது அமிரால் பக்ஷி'' என்பவர் பற்றிய ஒரு குறிப்பு புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் தம்பி மகன் திருவேங்கடம் பிள்ளையின் விண்ணப்பத்தில் காணப்படுகிறது[5]. இவர், ஆர்க்காட்டு நவாப் முகமது அலிக்கு உதவியாகவும், பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கும்பினிக்கு எதிராகவும் போர்களில் பங்கேற்றவராவரர். ''அமிரால்'' என்பது, கடற்படைத்தலைவன் எனப் பொருள்படும் ''அட்மிரல்'' என்ற சொல்லின் திரிபாகும். முகமது அமிரால் பக்ஷி என்ற சர்தாருக்குரிய கப்பலாக முகமது வகுசு கப்பல் இருக்கக்கூடும். இக்கால கட்டத்தில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியினர், தென்னிந்தியாவை, குறிப்பாகத் தமிழகத்தை நேரடியாக நிர்வகிக்கத் தொடங்கி விடவில்லையென்பதையும், ஆர்க்காட்டு நவாப் போன்ற உள்நாட்டு மன்னர்கள், பெருந்தனக்காரர்கள், வணிகர்கள் ஆகியோரின் உதவியுடன் தான் தமது அரசியல் ஆதிக்கத்தைச் சிறுகச் சிறுக நிலைநாட்டி வந்தனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழகக் கடற்கரைப் பட்டினங்களில் இஸ்லாமியர் ஆதிக்கம் : மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகள் :

அல்லாவைத்தொழும் கலிபா வழியினரான அஞ்சு வண்ணத்தார், நாகப்பட்டினம் துறை முகத்தில் துணி, சந்தனம், பொன், குதிரைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்தனர் என்பதைப் பல்சந்தமாலைப் பாடல் தெளிவுபடுத்துவது உண்மையே[6]. ஆயினும், மரக்கல நாயகர் என்ற பட்டத்தை இஸ்லாமியர் மட்டுமே சூடியிருந்தனர் எனக் கூறுவதற்கில்லை. இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் 15ஆம் நூற்றாண்டுவரை புத்தசமயஞ்சார்ந்த வணிகர்கள் கடல் வாணிகத்தில் ஆதிக்கம் செலுத்திவந்தனர். இலங்கையில் வணிகக் குழுக்களின் தலைவர்களாக அரசர்கள் இருந்துள்ளனர்[7]. தமிழகத்திலும் இத்தகைய ஒரு நிலைமையே சிறு பிரதேச வேறுபாடுகளுடன்

நிலவியிருக்க வேண்டும். சிலப்பதிகாரம், பாண்டிய மன்னனுக்குத் தொண்டியோர் பல திறைப் பொருள்களை வழங்கினர் எனக் குறிப்பிடுகிறது. இதற்கு உரையெழுதிய அடியார்க்க நல்லார், ''வாறோசு சூடன்'' அகில் போன்ற இறக்குமதிப் பொருள்களைச் சோழ அரச குலத்தோர் பாண்டியனுக்குத் திறைப் பொருளாக வழங்கினர் எனக் குறிப்பிடுகிறார்[8]. தொண்டிப் பகுதியையொட்டிப் பௌத்த சமயம் கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டு வரை மக்களிடையே செல்வாக்குடன் திகழ்ந்துள்ளது[9]. எனவே கி.பி.16 ஆம் நூற்றாண்டளவில் தான் பெருமளவில் தமிழகக் கடற்கரைப் பட்டினங்களில் இஸ்லாமிய சமய ஆதிக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இக்காலகட்டத்தில் தான் பௌத்த சமயத்தைப் பின் பற்றிய மரக்கல நாயகர்களும், மாவேத்துகள் எனப்பட்ட மாந்தையர்களும் (கப்பல் கட்டும் தச்சர்கள்)[10] இஸ்லாமியராக மாறியிருக்க வேண்டும். இதற்குச் சான்றாக, தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் பகுதியில் வழங்கி வரும் ஒரு பழமொழியைக் குறிப்பிடலாம். ''மக்கத்துத் துலுக்கரும் மாந்தைக் கண்மாளரும் பக்கத்துப் பக்கத்தில் இருப்பார்கள்'' என்பதே அப்பழமொழி. இராமநாதபுரம் மாவட்டம் சுந்தர பாண்டியன் பட்டினத்தில், மாந்தையர் மரபினர்களாக இருந்து இஸ்லாமியராக மாறியவர்கள் ஓடாவி முஸ்லீம் என அழைக்கப்படுகின்றனர்[11]. ஓட ஆழ்வி'' என்ற சொல்லின் திரிபாக இச்சொல்லைக் கருதமுடிகிறது.

கேரள மாநிலத்தில் கோழிக்கோடு சாமூதிரி மன்னர்களின் கடற்படைத் தலைவர்களாகக் கி.பி. 15-16 அம் நூற்றாண்டில் (பொன்னாணிப் பகுதியினரான) குஞ்சாலி மரக்காயர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகின்றனர்[12]. சற்றொப்ப இதற்குச் சமகாலத்தில் தான் தென் கிழக்காசிய நாடுகளில், அதுவரை பௌத்த சமயத்தைப் பின்பற்றி வந்த மன்னர் பரம்பரையினர் பலர் இஸ்லாம் மதத்தைத் தழுவுகின்றனர். இது திடுமென நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியன்று. கி.பி.1285 இல் செங்கிஸ்தான் வழியில் வந்த குப்ளேகான், கடாரம் முதலிய நாடுகளை வென்று கப்பம் வசூலிக்கத் தொடங்கினான். குப்ளேகான் இஸ்லாமியன் அல்லனாயினும், கௌதம புத்தரின் புனிதப்பல்லை ஆதம் நபியின் புனிதப்பல்லெனக் கருதி வழிபட்டவன் என மார்க்கோ போலோ தெரிவிக்கிறார்[13]. இத்தகைய பல தொடர் நிகழ்ச்சிகளின் விளைவாக, பௌத்தசமயத்தைப் பின் பற்றியவர்கள் சிறுகச் சிறுக இஸ்லாம் சமயத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்டுக் காலப்போக்கில் இணைந்து விட்டனர் எனத் தெரிகிறது.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாகப்பட்டினத் திலிருந்த சூளாமணிவர்மவிகாரம் முதலிய பௌத்த சமயச் சின்னங்கள் கைவிடப்பட்டுச் சிதைந்து போயிருக்க வேண்டும். 17ஆம் நூற்றாண்டில்

''முல்லா'' என்பவரின் ஆதிக்கத்தில் நாகப்பட்டினம் இருந்துள்ளது என வெங்கோஜியின் படேவியா வெள்ளிப்பட்டயத்தால் அறிந்து கொள்ள முடிகிறது[14]. இம் ''முல்லா'' வின் ஊமை. மகள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நாகநாத சுவாமி அருளால் பேச்சு வரப் பெற்றாள் என்று கதையொன்று வழங்குகிறது. இத்தகைய கதைகளுக்குப் பின்னணியில் பெரியதொரு வரலாற்றைத்தேட முனைவது பொருத்தமற்றதாயினும், ''முல்லா'' விற்குக் கி.பி. 17 ஆம் நூற்றாண்டைய தமிழ்ச் சமூக-அரசியல் வரலாற்றில் ஓர் இடம் உண்டு என்பதை நாம் உணர்வது தேவை. இச்சிறிய ஆய்வுக் கட்டுரை அதற்குத் துணைபுரியும் என நம்புகிறேன்.

இந்த ஆய்வின், முடிவான கருத்து ஏதும் சொல்லப்படவில்லையாயினும், தமிழகக் கடற்கரைப் பட்டினங்களின் சமூக மற்றும் அரசியல் வரலாறு, தென்கிழக்காசிய நாடுகளின் வரலாற்றுடன் மிக நெருங்கிய உறவும், இணையான போக்கும் உடையது என்ற உண்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளது எனக் கருதுகிறேன். கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் மலேஷியா நாட்டு ''கெட்டா'' (கடார)த் துறைமுக இளவரசரின் கடிதத்தில் குறிப்பிடப்படும் கப்பல், தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட மரக்கல நாயகர்களின் கப்பலாக இருப்பது, நாம் வரலாற்று ஆய்விலும் நிரப்ப வேண்டிய இடைவெளிகள் நிரம்ப இருப்பதை உணர்த்துகிறது. சங்ககாலத்திலிருந்து அண்மைக் காலம் வரை அகர் (அகில்), கர்ப்பூரம், நறைக்காய் (ஜாதிக்காய்), போன்ற நறுமணப் பொருள்களையும், கப்பல் கட்டுதல் முதலான பலவகைக் கட்டுமானங்களுக்குத் தேவையான உயர்வகைமரங்களையும் இறக்குமதி செய்து வந்தவர்கள் இம்மரக்கல நாயகர்களே என்பதையும் இவ் ஆய்வு, வரலாற்று ஆர்வலர்களின் கவனத்திற்குக் கொணர்கிறது.

அடிக்குறிப்புகள்

1. *Sounth Indian Studies*. Vol.I. Editer R.Nagaswamy- SAHER, Chennai.
2. செம்பும் நாகமும் கலந்த இத்தகைய கலப்பு உலோகங்கள் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலக் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படுகின்றன.
3. இக்கப்பல் 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என இக்கட்டுரையாசிரியரால் "Ships of Tarangambadi" என்ற கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (p.60, *Journal of Marine Archaeology* - Vol.2, 1991 - Editor : S.R. Rao, Goa)
4. *Military Correspondence year* : 1758 p. 119, Editor: Baliga, Madras Archives.
5. ''மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை விண்ணப்பம்'' பதிப்பு : ஓர்சே.மா. கோபாலகிருட்டினன், பிரான்சு. (ப.78, ஆவணம் - இதழ் 10 - சூலை 1999, தொல்லியல் கழகம், தஞ்சை).
6. பிற்காலச் சோழர் வரலாறு - தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974 பக்.583

7. பிற்காலச் சோழர் வரலாறு - தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974 பக்.583

7. South India and Sri Lanka -K.K. Pillai Madras University, 1975.p.30.

8. சிலப்பதிகாரம் மூலமும் அடியார்க்கு நல்லார் உரையும் உ.வே.சா.பதிப்பு-1978.

''வங்காட்டத்துத் தொண்டியோர்'' என்பதற்கான உரை

9. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியிலிருந்த ''பனஞ்சாயல் பள்ளித்தம்மம்'' இந்து சமயக் கோயிலுக்கு மாற்றி வழங்கப்படுகிறது. இது பௌத்தப்பள்ளிக்குரிய தாகும்.(''சுந்தர பாண்டியன் பட்டினம் செப்பேடு'' - சேதுபதிமன்னர் செப்பேடுகள் ப.164 -புலவர். செ.இராசு.)

10. ''மாவேத்துகள்'' என்ற சொல்லாட்சி, கி.பி. 1087 ஆம் ஆண்டுக்குரிய சுமத்ரா நாட்டு பாரோஸ நகரக் கல்வெட்டில் இடம் பெறுகிறுது. ''ஆவணம்'' இதழ் 4, ஜனவரி 1994) இச்சொல் ''மகாவித்'' என்ற சொல்லின் திரிபாகத் தோன்றுகிறது. கண்மாளர் சமூகத்தவரை ''வித்யர்'' என்றும், ''அறிவர்'' என்றும் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. கப்பல்கட்டும் தச்சர்கள் மகாவித் என்றும், மாவிந்தையர் என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஐவர்ராசாக்கள் கதை, உடையார் கதை போன்ற நாட்டுப்புறக்கதைகளில் கப்பல்கட்டும் தச்சர்கள் ''மாந்தையர்'' எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

11. கள ஆய்வில் அறியப்பட்ட செய்தி. சுந்தரபாண்டியன் பட்டினத்திலுள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிற்பம் ஒன்று உள்ளது. அடிக்குறிப்பு 9 பார்க்க.

12. ""Keral Inscriptions with special referece to an Epigaph from Baliapatam" by M.Ilas Quddusi, in *Journal of the Epigraphical Society of India* - Vol. XXV. year : 1999, Mysore.

13. *Travels of Marco Polo Book* III Chapter I p. 273 book printed in united states of America.

14. வெங்கோஜி மன்னரின் கி.பி.1676 அம் ஆண்டைய வெள்ளிப்பட்டையம், ''தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்'' (புலவர் செ. இராசு, தமிழ்ப்பல்கலைக்கழகம்) நூலில் வெளியிடப்பட்டுள்ளது.

58. அணிகலன்களில் முத்து

சீ. வசந்தி, சென்னை

நவ மணிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கும் முத்து, தமிழ்நாட்டில் ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் அதிகம் கிடைத்துள்ளது. தமிழக முத்து ''தென் கடல் பவ்வத்து முத்து'' என்று வழங்கப்பட்டது. இராமாயண காவியத்தில் சீதையைத் தேடிச் சென்ற அனுமனிடம், சுக்ரீவன், தென்னாட்டில், பாண்டியனின் தலைநகரான கபாடபுரம், முத்துக்களாலும், மாணிக்கங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் எனக் கூறுகின்றான். அர்த்தசாஸ்திரத்தில், ''தாம்ரபர்ணிகம்'' என்ற முத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இது தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் கொற்கை முத்தாக இருக்கலாம்.

பண்டைய கிரேக்க, ரோமானியர்கள் தென்னாட்டு முத்துக்களின் மீது விருப்பம் கொண்டிருந்தனர். அந்நாட்டு அரசிகளும், உயர்குடிப் பெண்களும் முத்து, மணி அணிகலன்களால் தங்களை அலங்கரிந்துக் கொண்டனர். ஜெருசலம் நகரம், முத்துக்கள் பதித்த கதவுகளைக் கொண்டிருந்ததாக பைபிள் குறிப்பிடுகின்றது. ரோமானியர்களின் தேவதையான வீனஸ், முத்து ஆடையும், காதணிகளும் அணிந்திருந்ததாகவும், அவற்றை ஜூலியஸ்சீசர் அத்தேவதைக்கு வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. இம்முத்துக்கள் தமிழகத்திலிருந்து ரோம் நாட்டிருக்குச் சென்றிருக்கலாம்.

சங்க இலக்கியங்களில் முத்துக்களைப் பற்றிப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. கொற்கை முத்து மிகவும் புகழ்பெற்றது. ''முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை'' (நற்றிணை: 23: 6)எனவும் ''கொற்கையம் பெருந்துறை முத்து'' (அகம் 27-9)எனவும் சங்கப் பாடல்களில் கொற்கை முத்து குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில் கடலிருந்து முத்து எடுக்கும் போது சங்கு ஊதுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, முத்து எடுக்கும் போது மகிழ்ச்சியான சங்கொலித்து வெளிபடுத்தினார்கள் எனத் தெரிகின்றது. மேலும், மீனவர்கள், மீன்பிடிக்கும்போது மீனுடன், முத்துச் சிப்பியும் கிடைத்தால் அதனைக் கள்ளுக்கு விற்றனர் என அகப்பாடல் குறிப்பிடுகின்றது. கொற்கை முத்துக்கள் குதிரைகளின் கால் குளம்புகளில் தட்டுப்பட்டன என்பதை,

''இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்

கவர் நடைப்புரவிக் கால் வருந்தழக்கும் நற்றேர் வழுதி கொற்கை முன்னுரை'' அகம்: 130:9-11 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறு பாணாற்றுப்படையில், உப்பு வணிகர்களின் சிறுவர்களும், அவர்கள்

வளர்த்த குரங்குகளும், கிளிஞ்சல்களினுள் முத்துக்களை இட்டு கிண்கிணி ஆட்டி மகிழ்ந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் பண்டைத் தமிழகத்தில் முத்துக்கள் அதிக அளவில் கிடைத்த செய்தி அறியப்படுகின்றது. தமிழக அரசியரும் முத்து இட்ட கால் சிலம்பை அணிந்திருந்தனர். சிலப்பதிகாரத்தில் பாண்டிய அரசி கோப்பெருந்தேவியின் கால் சிலம்பு முத்துக்கள் என்பதை வழக்குரை காதையின் மூலம் அறிய முடிகின்றது.

கொற்கை முத்துக்களுடன், பாண்டிய நாட்டின் ஒரு பகுதியான 'பரளியா நாடு' என்ற பாண்டியர்களுக்குச் சொந்தமான இடத்திலும் எடுக்கப்பட்ட முத்துக்களை அர்கரு (Argaru) என்ற ஊருக்குக் கொண்டு சென்று அங்கிருந்து ரோமிற்கு ஏற்றுமதி செய்தனர் எனத் தெரிகின்றது. அர்கரு என்ற இடமே தற்போதைய அழகன்குளமாக இருக்கலாம். என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் இங்கு நடைபெற்ற அகழாய்வில் ரோமானியப் பானை ஓடுகளும், ரோமானியக் காசுகளும், கிரேக்க நாட்டுப் பெண் உருவமும், ஆப்பிரிக்கநாட்டுப் பானை ஒட்டில் காணப்படும் பெண் உருவங்களும் இதனை மெய்ப்பிக்கின்றன. எனவே பாண்டிய நாட்டு முத்துக்கள் இங்கிருந்து ரோமிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கருதலாம்.

கல்வெட்டுக்களிலும் முத்துக்கள் பற்றிப் பலகுறிப்புகள் காணப்படுகின்றன. முத்து வட்டம், அனுவட்டம், ஒப்பு முத்து, குறு முத்து ஆகிய முத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள முதலாம் இராஜராஜன் கல்வெட்டில், இறைவனுக்கு வழங்கப்பட்ட பல முத்து அணிகலன்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மீனாட்சியின் முத்துக் கவசமும், முத்து மணிமகுடமும், முத்துப் பதித்த விதானமும் மதுரையில் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூரில், இறைவனுக்கு 'குலசேகரன்' என வழங்கப்பட்ட முத்து மகுடமும் உள்ளதாக கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது.

தமிழகத்தில், அழகன்குளத்தில் அகழாய்வில் முத்து கிடைத்துள்ளது. சேந்தமங்கலத்தில் அகழாய்வில் முத்துகிடைத்துள்ளது. இவ்வாறு நவமணிகளில் முத்து சிறப்பிடம் பெற்றுள்ளதை, சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் அகழாய்வுகளின் மூலம் மெய்ப்பிக்கப்படுகின்றன.

பார்வை நூல்கள்

1. அர்த்த சாஸ்த்திரம்
2. அழகன்குளம் அகழாய்வு அறிக்கை
3. சேந்தமங்கலம் அகழாய்வு அறிக்கை
4. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்கள்.

59. வழக்கு மன்றம் கண்ட வரலாற்றுச் சின்னம்

மீ.மனோகரன், சிவகங்கை

தென்னிந்தியாவின் தெர்மோப்பைலே

பண்டைக் கிரேக்கத்தில் எப்பியால்ட்டெஸ் என்ற துரோகி எதிரிகளுக்கு மாற்று வழியைக் காட்டிக் கொடுத்தது போல, அந்நிய ஆங்கிலேயரை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியர்களின் காளையார்கோயில் கோட்டைக்கு காட்டினூடே அமைந்த இரகசியப்பாதையை அவர்களிடம் சில ஆண்டுகள் பணியாற்றிய கலீல் என்பவன் காட்டிக் கொடுத்தான் என்ற ஒத்த வரலாறு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. ''காளையார்கோயிலில் நிகழ்ந்த எழுச்சியின் வரலாறு வீரசாகச் வரலாற்றில் முக்கிய இடம் பெறத்தக்கதாகும்''

காளையார்கோயிலில் அந்நியரை எதிர்த்து விடுதலைப் போரில் உயிர்நீத்த மருதுபாண்டிய மன்னர்கள் இருவரின் கல்லறைகள் உள்ளன. அக்கல்லறை - வரலாற்றுச் சின்னத்தில் அரசாங்க கல்வெட்டு ஏதும் வைக்கப்படவில்லை. கல்வெட்டு வைக்காததற்குக் காரணம்ஆய்வுக்குரியது. இருவரும் திருப்பத்தூரில் தூக்கிலிடப் பட்டு இங்கு நல்லடக்கம் செய்தபோது அந்நியர் காலூன்றி விட்டதால் கல்லறைகள் தகர்க்கப்படாமல் தப்பித்து நீடித்ததே பெரும் பேறு என்று கருதவேண்டும். அதன்பின் சிவகங்கை ஆட்சி சமீன்தார்கள் வசம் சென்றது. மருதுபாணிடியர்களிடம் இருந்த ஆட்சியைத் தான் முதல் சமீன்தாராக நியமனம் பெற்றவருக்கு ஆங்கிலேயர் வழங்கினர். எனவே சமீன்தார்கள் அந்தக் கல்லறைகள் பேரில் தியாகம் போற்றிடும் கல்வெட்டு ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்ப்பதும் சாத்தியமல்ல.

1965இல் பெரியமருது பாண்டியரின் கல்லறையின் மேல்மட்டும் ஒரு சிறுகோயில் போன்ற கட்டுமானம் எழுப்பியுள்ளார் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார். அங்கு சுவரில் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் ''மருதுபாண்டியன் சமாதி; தோற்றம் 1748 மறைவு 27.10.1801'' என்று எழுதியுள்ளது தவிர வேறு வரலாற்றுச் செய்தி ஏதுமில்லை.

அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியை பமேலா ஜி. பிரைஸ் தமிழகம் வந்து கள ஆய்வு மேற்கொண்டு சிவகங்கை - இராமநாதபுரம் சமஸ்தானங்களைப் பற்றி இரண்டு நூல்களை எழுதியுள்ளார். முதலாவது நூலில், மருதுபாண்டியர்களை, ''நாட்டைக் காத்த திறமையான இராணுவத்தலைவர்கள்'' (Superb Military Leaders) என்று போற்றியுள்ளார்.

''மருதுபாண்டியர்கள் இராணுவ வலிமையால் சிவகங்கையின் நடைமுறை மன்னர்களாக விளங்கியதற்கிணங்க, சத்திரங்களைக் கட்டினர், ஆலயங்களை உருவாக்கினர்... 1785 அளவில், சின்னமருதுவும், பெரிய மருதுவும் நாடெங்கணும் உள்ள மக்களின் ஆதரவினைப் பெற்ற வெற்றியாளர்களாய் விளங்கினர். வீரசாகசச் செயல்களும் பெருந்தன்மைப் போக்கும் குடிகளைப் புரக்கும் முறைகளும் இரு மருதரசர்களுக்கும் அழியாப் புகழை ஈட்டித் தந்தன'' என்று அவர்கள் மக்கள் மனதில் ஈடிணையற்ற இடம் பெற்ற மன்னர்களாக விளங்கியதைத் தற்போது நார்வே நாட்டின் ஆஸ்லோ பல்கலைக்கழகத்தில் வரலாற்று இணைப் பேராசிரியராய் விளங்கும் அதே பமேலா ஜி. பிரைஸ் தனது இரண்டாவது நூலில் விவரித்துள்ளார்.

பத்து ஆண்டுகள் ஆய்வுக்குப்பின் 1994ல் இக்கட்டுரையாசிரியர் மருதுபாண்டியர் வரலாற்றினை 756 பக்கங்கள் கொண்ட விரிவான நூலாக ''மருது பாண்டிய மன்னர்கள்'' எனும் தலைப்பில் வெளியிட்டார். இப்புதிய வெளியீட்டில் மருதுபாண்டியர் கல்லறைகளின் அமைவிடம் காளையார்கோயில் தான் என்று எழுத்து மூல ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மற்றவர்கள் தொடத் தயங்கியதை இக்கட்டுரையாசிரியர் அந்நூலில் துலக்கியதன் விளைவு நூலாசிரியரை மானநட்ட வழக்கில் மாட்டவைத்தது. அவ்வழக்கை நூலாசிரியர் எதிர்கொண்டது ஒரு சமகால வரலாறாகும்.

தீர்ப்புரையில் மாண்பமை நீதிபதி தெரிவித்துள்ள கருத்துரைகள் நூலாசிரியரின் நிலைப்பாட்டிற்கு அரண் செய்வதாக அமைந்துள்ளன. நீதிமன்றத் தீர்ப்புரை மருதுபாண்டியர் கல்லறைகள் குறித்து மறு ஆய்வுக்கு வழிவகை செய்துவிட்டது. இந்தப் பின்னணியில் ''மருதுபாண்டிய மன்னர்கள்'' நூலில் இக்கட்டுரையாசிரியர் ஏற்கெனவே துலக்கியுள்ள மூன்று ஆதாரங்களுடன் தீர்ப்பில் காரணமாய் கிடைத்த புதிய இரண்டு சான்றாதாரங்களையும் உட்படுத்தி கல்லறைகள் குறித்த ஒரு மறு ஆய்வு, இக்கட்டுரை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

கல்லறைகள் அமைந்திருப்பது காளையார்கோயிலில் தான் என்பதற்கு பின்வரும் ஆதாரங்கள் மறு ஆய்வில் இடம் பெறுகின்றன. 1. சிவகங்கைச் சரித்திர அம்மானை. 2. சிவகங்கைச் சரித்திரக் கும்மி 3. இராமநாதபுரம் மாவட்ட கெசட்டியர் 4. சிவகங்கை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ. எண். 246/96 வழக்கில் எற்பட்ட தீர்ப்புரை. 5. தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளரின் அறிவிப்பு வெளியான தினமலர் (3.9.97) நாளிதழ்.

முதலிரண்டு ஆதாரங்கள்

காளி(ளை) வனத்தீசர் கமலத் திருவடியில்
மருதவனைப் பொய்யை வாகான மேல்கரையில்
துருசாய்ச் சிவாலய்த்தின் தூண்டா மணிவிளக்கு
எதிரே யிருவருக்கும் எண்ணுந் துலங்கிடவே
சதிராய்த் துதித்துத் தாம்வீற் றிருக்கலுற்றார்
எண்ணுஞ் சிவன்பாதம் எப்போது மற்புதமாய்
வண்ண மருதிருவர் மகாதபசு தாம்புரிந்தார்
காளியுட னாடிக் கருணைபுரி காளீசர்
வேளினுடைப் பாதம் வெள்ளைமரு தேந்திரதுரை
வள்ள லிளையோன் மன்ன ரிருவருந்தான்.[4]

மேற்கண்ட பாடல் வரிகளின் மூலம் சிவகங்கைச் சரித்திர அம்மானை தான் முதன் முதலாக வெள்ளை (பெரிய) மருதுபாண்டியர் மற்றும் இளையோன் (சின்ன) மருதுபாண்டியர் இருவரும் காளையார்கோயில் உள்ள, தற்போது மருதுபாண்டியரின் அன்னை பொன்னாத்தாள் நினைவாக ஆத்தா ஊருணி என வழங்கும், மருதவனப் பொய்கையின் மேல் கரையில் காளீசர் ஆலய விளக்கைத் தரிசிக்கும் வண்ணம் பெருந்தவம் புரிந்து வருவதாக உரைத்து, மருதிருவரின் சமாதி காளையார் கோயிலில் என்பதைத் துலக்கிய முதல் எழுத்து மூல ஆதாரமாக விளங்குகிறது. ''மருதுபாண்டிய மன்னர்கள்'' - நூலில் அம்மானை வரிகள் ஆதாரமாக காட்டப்பட்டிருப்பதை மாண்பமை நீதிபதியும், தம் தீர்ப்புரையில் எடுத்தாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

''மருதவனப் பொய்கையில் வளர்கரைதனில் மேல்புரத்தில் துருசாய்க் காளீசர் தூண்டா மணிவிளக்குத் தூப மெதிர யெதிரே துரை யிருவருக்கும் எப்போதுந் தெரிசினை தெரிசிக்கவே சதிராய்த் துதித்து இருவர்தான் அங்கே கொலுவாய் வீற்றிருந்தார்''.

என்று சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானை குறிப்பிட்ட அதே இடத்தையே இருவரின் நல்லடக்க இடமாக ஒத்துரைக்கிறது.

மேலே குறிப்பிட்ட அம்மானையும் கும்மியும் இலக்கிய வகையைச் சேர்ந்தவை என்றாலும் கற்பனைப் பாத்திரங்கள் இடம்பெறாத நூல்களாகும். சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுபாண்டிய மன்னர்களின் வரலாற்றினைப் பாவடிவில் தருகின்ற நூல்களாகும்.

அம்மானையை மாறைநாடு முருகு என்ற முருகேசன் 1840 இல் எழுதினார். மருதிபாண்டியர்களின் சமகாலத்தவரான அம்மானை ஆசிரியர் இளமைக்காலத்தில் தாம் கண்டறிந்தவற்றை முதுமையில் நினைவு கூர்ந்து பாடலாகப் பதிவு செய்துள்ளார். அம்மானையைத் தழுவி

பாஞ்சை நகர் முத்துச்சாமி, 1882ல் கும்மியை எழுதி முடித்தார். சுவடிகள் வடிவிலிருந்த இவ்விரு நூல்களையும் நம் மாநில அரசு 1954 இல் அச்சில் பதிப்பித்து சென்னை - கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம் மூலம் வெளியிட்டது. இவற்றை ஆதாரமாகக் கொள்ளலாம். என்பதற்கு ஆதரவாக சில வரலாற்றாசிர்களைத் துணைக்கழைப்பது பொருத்தமாயிருக்கும்.

டாக்டர் கே. இராஜையன் தான் எழுதிய ''தென்னாட்டு எதிர்ப்பெழுச்சி'' எனும் நூலிலும் டாக்டர் எஸ் கதிர்வேல் தான் எழுதிய ''மறவர் வரலாறு'' எனும் நூலிலும் மேற்சொன்ன அம்மானையையும் கும்மியையும் முதல்நிலை ஆதாரமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பமேலா ஜி.பிரைஸ் சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் எனும் நூலை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்[9].

மூன்றாவது ஆதாரம்

ஆங்கிலேயர் ஆட்சியில் அந்நியரான அவர்களின் வெள்ளை அதிகாரிகள் நம் நாட்டை ஆள்வதற்கு வசதியாக வட்டாரங்களை, அவற்றின் மக்களைப் பற்றிய அறிவைப்பெற அரசியல் வரலாறு, புள்ளி விவரங்கள் அடங்கிய 'கெசட்டியர்' எனும் தொகுப்பு நூல்களை மாவட்ட வாரியாக தயாரித்து வெளியிட்டனர்.

இவ்வாறு உருவான மாவட்ட கெசட்டியர்கள் விடுதலைக்குப்பின்னர் சீரமைக்கப்பட்டு, திருத்தப்பட்ட மறுபதிப்புக்கள் மாவட்டம், மாவட்டமாக வெளியிடப்பட்டு வந்துள்ளன. சிவகங்கை மாவட்டத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கான கெசட்டியர் 1976ல் டாக்டர் ஏ.இராமசாமியால் மறுபதிப்பு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் வெளியிடப் பெற்றுள்ளது. ''காளையார்கோயிலில் மருதுபாண்டியரின் கல்லறை கோயிலுக்கு கிழக்கே கோயிலின் பழைய வாயிலை நோக்கியவாறு காணப்படுகிறது என்று அந்த மாவட்ட கெசட்டியரில் குறிப்பிடப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ வெளியீடான இது சிறந்த சான்றாக நீதிமன்றத்தாலும் மதிக்கப்பெற்றது.

நான்காவது ஆதாரம் :

''மருதுபாண்டியர்கள் நல்லடக்க இடம் எது என்று இதுவரை அறுதியிட்டு யாராலும்ட நிறுவிக்காட்டப்படவில்லை. முதன்முதலாக இந்தப் பிரதிவாதி (நூலாசிரியர்) தான் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கின்றார்'' என்று குறிப்பிட்ட மாண்பமை நீதிபதி அவர்கள் மேலும் மருதுபாண்டியர் சமாதி குறித்த நூலாசிரியரின் கருத்து ஏற்கத் தக்கது என்பதை

''மருதுபாண்டியர்கள் சமாதி காளையார்கோவிலில் உள்ள காளீஸ்வரர் ஆலயத்திற்கு முன்புறம்தான் என்ற முடிவிற்கு வரவேண்டியிருப்பதாக பக்கம் 672ல் பிரதிவாதி (நூலாசிரியர்) கூறியிருக்கின்றார்... இதற்கு மாறாக திருப்பத்தூரில்தான் மருதுபாண்டியர்கள் புதைக்கப்பட்டார்கள் என்ற ஆதாரம் அதிகமாகக் கிடைத்தால் பிரதிவாதி (நூலாசிரியர்) தனது கருத்தை மாற்றிக் கொள்ளவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே பிரதிவாதி எழுதிய புத்தகத்தில் மருதுபாண்டியர்கள் புதைக்கப்பட்ட இடம் பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கருத்து என்பது, ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் என்றும் அது பிரதிவாதியினுடைய (நூலாசிரியருடைய) கற்பனை என்றோ அல்லது ஆதாரமற்ற ஒரு கூற்று என்றோ என்னால் கூற முடியவில்லை'' என்று தம் தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

இராணி வேலுநாச்சியார் உறவு போன்ற வேறு பிரச்சனைகளில் நூலாசிரியரின் ஆய்வுத்திறன் தெளிவாக உள்ளது. அவ்வாறிருக்க மருதிருவர் கல்லறை காளையார் கோயிலில் தான் என்று நூலாசிரியர் எழுதியிருப்பது மருதுபாண்டியரின் புகழுக்குக் களங்கம் கற்பிக்கும் என்று கூறப்படுவதை மாண்பமை நீதிபதி மறுத்துரைக்கிறார்.

காளையார்கோயிலில் ஏனிந்தக் கல்லறைகள்

காளையார்கோயில் மருதுபாண்டியர்களுக்கு விருப்ப மான நகரம். அந்நகரை தங்கள் உயிரினும் மேலாக அவர்கள் மதித்தனர். அந்நகரைத் தங்கள் அரசின் இரண்டாவது தலைநகரமாகக் கொண்டிருந்தனர்.

1795 இல் காளையார்கோயிலுக்கு வந்த கர்ணல் வெல்ஷ் மருதுபாண்டியர் அங்கு கோபுரம் கட்டியிருப்பதைத் தன் நூலில் இணைத்துள்ள வரைபடத்தில் குறித்துள்ளார்.

காளையார்கோயிலில் அவர்கள் எழுப்பிய ஆலயத்தைத் தகர்க்கும் திட்டத்தை அவர்களைப் பிடிக்கும் தந்திர வியூகமாக கர்னல் அக்னியூ வகுத்திருந்தான். அதை அறிந்த அவர்கள் தலைமறைவு வாழ்க்கையின் போது சிவகங்கைச் சீமையை விட்டு அகலாமல் அதன் எல்லைக் குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தனர். பிடிபட்டனர். இறுதியில் தூக்கிலிடப் பட்டனர்.

எந்த நகரின் ஆலயம் காத்திட தம் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போரின் உயிர்த் தியாகியர் ஆனார்களோ அந்த நகரில் அவர்களின் கல்லறைகள் அமைவதுதான் அவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடன், அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் அருந்தொண்டு என்று எஞ்சியிருந்த விடுதலைப் போராளிகள் எண்ணியிருக்க வேண்டும். அதன் விளைவாக திருப்பத்தூரிலிருந்து தியாகதீரர்களின் உடல்களைக் காளையார்

கோயிலுக்குக் கொண்டு சென்றனர். பின்னர் அங்கேயே அடக்கம் செய்தனர் என்பதையே சிவகங்கைச் சரித்திர அம்மானை முதன் முதல் பதிவு செய்து, முன்னோடி ஆதாரமாய் விளங்குகிறது.

துணை நூல்கள்

1. Lt. Col. W.J. Wilson "*A History of the Madras Army*" Vol. III Page - 50 Foot note.1
2. S. Thiruvenkatachari "*The Setupatis of Ramnad*" - Page 70.
3. Pamela G. Price "*Resources and Rule in Zamindari South India* (1802 - 1903) Sivagangai and Ramnad As Kingdom under the Raj" - Page 64.
4. சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்.
5. சிவகங்கை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ. எண். 246/96 வழக்கின் தீர்ப்புரை.
6. Dr. Rajayyan "*South Indian Rebellion*" - Page 298.
7. Dr. S. Kadhiravel "*A History of the Maravas*" Page - 226.
8. Dr. Pamela G. Price "*Kingship and Political Practice in Colonial India*" Page 86 Footnote 25.
9. Dr. A. Ramaswami (Ed) "*Ramanathapuram District Gazetteer*" PP. 890-891.
10. Major H.M.Vibart "*The Military History of the Madras Engineers and Pionerrs*" Vol.I Page 352 Foot Note.
11. "The New Pagoda built by Murdoo" - Col. J. Welsh "*Military Reminiscences*" Vol.I Plant facing Page -122.

கட்டுரையாளர்கள்

1. திரு. **அ.அப்துல்மஜீத்**
தொல்லியல்
துணைக்கண்காணிப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

2. திரு. **ஆறுமுக சீதாராமன்**
12. ராஜராஜன் நகர்
மானோஜிப்பட்டி தெற்கு
தஞ்சாவூர் - 613 004.

3. முனைவர். **சு. இராசகோபால்**
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

4. திரு. **ம. இராசசேகரதங்கமணி**
வரலாற்றுத் துறை பேராசிரியர் (ஓய்வு)
கரூர்.

5. திரு. **சு. இராசவேலு**
கல்வெட்டாய்வாளர்
மத்திய தொல்லியல்
அளவீட்டுத்துறை,
கோட்டை,
சென்னை - 600 009.

6. முனைவர். **செ. இராசு**
பேராசிரியர் (ஓய்வு)
கொங்கு ஆய்வு மையம்
என்.ஜி.ஒ. காலனி, ஈரோடு.

7. திரு. **கரு. இராசேந்திரன்**
ஆசிரியர். (ஓய்வு)
மேலப்பனையூர் (அஞ்)
புதுக்கோட்டை மாவட்டம்.

8. திரு. **பொ. இராசேந்திரன்**
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
திருமலை மன்னர் அரண்மனை
மதுரை - 625 001.

9. திரு. **ஐ. இராமசாமி**
இக்கரை போளுவாம்பட்டி
கோவை - 641 109.

10. திரு. **எஸ். இராமச்சந்திரன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
கொற்கை - 628 802.

11. திரு. **வெ. இராமமூர்த்தி**
அகழாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை 600 113.

12. திரு. **வே. இராமன்**
ஸ்தபதி
தொல்பொருள் அய்வுத்துறை
திருச்சி.

13. முனைவர். **ஜெ. இராஜாமுகமது**
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
புதுக்கோட்டை

14. திரு. **க. இலக்குமி நாராயணன்**
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை - 600 008.

15. திரு. **இரா. ப. கருணானந்தன்**
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
உதகை.

16. திரு. **மா. கலைவாணன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
தருமபுரி.

17. திரு. **நடன காசிநாதன்**
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை
(ஓய்வு)
136, ஐந்தாம் குறுக்குத் தெரு,
மல்லேசுவரிநகர்
சென்னை - 600 073.

18. திரு. **ச. கிருஷ்ணமூர்த்தி**
தொல்லியல் அலுவலர்
சிதம்பரம்.

19. திரு. **க. குழந்தைவேலன்**
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

20. முனைவர். **கொடுமுடிசண்முகன்**
கண்காணிப்புப் பொறியாளர்
(ஓய்வு)
பொதுப் பணித்துறை
சென்னை.

21. திரு. **தே. கோபாலன்**
தொல்லியல் அலுவலர்
நாகர்கோயில்.

22. திரு. **சொ. கோவிந்தராம்**
காப்பாட்சியர்
இராமலிங்க விலாசம் அரண்மனை
இராமநாதபுரம்

23. முனைவர். **பு.சி.சந்திரசேகரன்**
வரலாற்றுத்துறை
இராஜுக்கள் கல்லூரி
இராசபாளையம்

24. திரு. **மா. சந்திரமூர்த்தி**
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

25. திரு. **சொ. சந்திரவாணன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
குற்றாலம் - 627 802.

26. முனைவர். **சி.க. சிற்றம்பலம்**
வரலாற்றுத்துறைப் போராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

27. திரு. **பி. ஆர். சீனிவாசன்**
முதன்மைக்கல்வெட்டாய்வாளர்
(ஓய்வு)
சென்னை.

28. திரு. **மே. சீனிவாசன்**
இளநிலைக்கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

29. திரு. **தி. சுப்பிரமணியன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
தஞ்சாவூர்

30. முனைவர். **எ. சுப்பராயலு**
கல்வெட்டியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 007.

31. முனைவர். **சு. சுவாமிநாதன்**
கல்வெட்டாய்வாளர்
தொல்லியல் அளவீட்டியல்துறை
மைசூர்

32. முனைவர். **மா. செந்தில் செல்வக் குமரன்**
தொல்லியல் அலுவலர்
பாளையங் கோட்டை
திருநெல்வேலி - 2.

33. திரு. **ச. செல்வராசு**
தொல்லியல் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
தருமபுரி

34. திரு. **கு. தாமோதரன்**
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

35. திரு. **கோ. திருமூர்த்தி**
உதவி தொல்லியல் அலுவலர்
இந்தியத் தொல்லியல்
அளவீட்டுத்துறை
சென்னை - 600 009.

36. திரு. **கோ. தில்லை கோவிந்தராசன்**
ஆசிரியர்
தஞ்சாவூர்.

37. திரு. **து. துளசிராமன்**
காப்பாட்சியர்
அகழ்வைப்பகம்
தொல்பொருள் ஆய்வுத்துறை
ஆர்க்காடு

38. முனைவர். **ஆ. பத்மாவதி**
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

39. திரு. **ச. பரணன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் அய்வுத்தறை
தஞ்சாவூர்

40. குடவாயில் திரு. **பால சுப்பிரமணியன்**
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

41. முனைவர். **அ. பாஸ்கரபால்பாண்டியன்,**
தமிழ்த்துறை,
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர் - 628 215.

42. திரு. **ப.புஸ்பரட்ணம்**
தொல்லியல்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.

43. திரு. **ஆர். பூங்குன்றன்**
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
கோவை - 641 012.

44. திரு. **செ. போசு**
காப்பாட்சியர்
திருமலை நாயக்கர் மகால்
மதுரை - 625 001.

45. முனைவர். **இரா. மதிவாணன்**
இயக்குநர் (ஒய்வு)
செந்தமிழ் சொற்பிறப்பு
அகர முதலித் திட்டம்
சென்னை.

46. திரு. **மீ. மனோகரன்**
32, தெப்பக் குளம்
கிழக்குத் தெரு,
சிவகங்கை - 630 561.

47. முனைவர். **நா. மார்க்சீய காந்தி**
உத்விக் கல்வெட்டுக்
கண்காணிப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 600 113.

48. திரு. **கோ. முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர்
கச்சேரி சாலை
மயிலாடுதுறை 609 001.

49. திரு. **சி. முனிசாமி**
காப்பாட்சியர்
வரலாற்று அகழ்வைப்பகம்
கங்கை கொண்ட சோழபுரம் - 612 905.

50. திருமதி. **அர. வசந்த கல்யாணி**
கல்வெட்டாய்வாளர்
தொ. பொ. ஆ. துறை
சென்னை - 600 113.

51. முனைவர். **வள்ளி சொக்கலிங்கம்**
முதுநிலை விரிவுரையாளர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி - 623 001.

52. முனைவர். **கோ. விசயவேணுகோபால்**
கல்வெட்டியல் துறை
பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம்
பாண்டிச்சேரி

53. திரு. **சி. வீரராகவன்**
ஜெ. ஜி. மெட்ரிகுலேசன் பள்ளி
விழுப்புரம்.

54. திரு. **ப. வெங்கடேசன்**
ஆசிரியர்
காவேரிப்பாக்கம்.

55. முனைவர். **வெ. வேதாசலம்**
கல்வெட்டாய்வாளர்
திருமலை நாயக்கர் மகால்
மதுரை - 625 001.

56. திரு. **இர. ஜெயராமன்**
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்
தொ. பொ. ஆ. துறை
தஞ்சாவூர்.

57. திரு. **கி. ஸ்ரீதரன்**
பதிவு அலுவலர்,
தொ. பொ. ஆ. துறை
திருச்சி.

